கலைஞரின்
கடிதங்கள்



12

29.08.1982 - முதல்
02.09.1983 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 12

29.08.1982 - 02.09.1983

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-113
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

AVAILABLE @ :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

கி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-113
அனைவரும் அறிவோம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் “கோகிலாம்பாள் கடிதங்கள்”, இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய “அன்னைக்கு’, “தம்பிக்கு”, “நண்பர்க்கு’, “தங்கைக்கு” ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் “தம்பிக்கு” கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய “உடன்பிறப்புக்கு” கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1044. நம் வியர்வைத் துளிகள் வீணாவதில்லை!	29-08-1982	23
1045. எம்.ஜி.ஆர். கட்சி ஏட்டுக்கு எனது நன்றி!	31-08-1982	28
1046. இன்னும் யார் யார் பெயர்கள் வரவில்லை?	14-09-1982	33
1047. தி.மு.க. எனும் திருவிளக்கு!	15-09-1982	36
1048. கீதம் இசைத்துக் கிளம்பிட வேண்டாமோ?	16-09-1982	38
1049. ஒரு சொட்டுத் தேன்!	17-09-1982	41
1050. ஈரோட்டுப்புயல் ஏன் தீண்டப் போகிறது?	17-09-1982	43
1051. சூரியப்பூ மலர்கிறது!	21-09-1982	44
1052. உன் கணிப்பேதான் என் கணிப்பும்!	18-10-1982	47
1053. சந்துமுனைச் சிந்துபாடிகள்!	19-10-1982	50
1054. வாலையாவது வழுக்காமல் பிடிக்குமா?	21-10-1982	54
1055. கடலைக் குடிப்பவன் கதை!	24-10-1982	58
1056. குட்டி கோயபல்ஸ்!	26-10-1982	61

1057. பூவரசு மரத்துக் கிளிகள்!	30-10-1982	66
1058. பெரிய மனம் - தோழமை உள்ளம் தேவை!	31-10-1982	71
1059. தட்டிக் கழிப்பதால் - சுட்டிக் காட்டுகிறோம்!	01-11-1982	76
1060. மதிக்கப்பட வேண்டிய மனித உரிமை!	03-11-1982	79
1061. கருடா சுகமா? எனும் காலத்தில்!	05-11-1982	83
1062. பப்பாளிப் பிள்ளையாரும் - பகுத்தறிவும்!	09-11-1982	87
1063. கொடுத்துப் பறிக்கும் கொற்றவன்!	11-11-1982	90
1064. அர்த்தமில்லா இந்து மணம்!	13-11-1982	95
1065. மாமியார் கதையின் மறுவடிவம்!	19-11-1982	99
1066. கண்ணீரால் ஒரு மலர் வளையம்!	21-11-1982	103
1067. ஒதுங்குவது யார்? ஒதுக்குவது யார்?	23-11-1982	105
1068. இதுதான் காலத்தின் கோலம்!	26-11-1982	109
1069. அரிச்சந்திர மகாராஜன்!	01-12-1982	112
1070. எரிமலையின் மீதமர்ந்து மகுடி ஊதுவதா?	03-12-1982	116
1071. இன்றுதான் அவர் பிறந்தநாள்!	05-12-1982	118
1072. பொறுத்துக் கொண்டிருக்க முடியாது!	07-12-1982	121
1073. அதுதான் அவரது இயல்பு!	08-12-1982	124
1074. அவருக்குப் புரிந்திடும் மொழியில்!	17-12-1982	128
1075. சபலப்பட்டோரின் சலசலப்பு!	18-12-1982	131

1076. அருமருந்தே! அன்பழக உடன்பிறப்பே!	19-12-1982	137
1077. இருமினால் இலக்கியம்! தும்மினால் சரித்திரம்!	22-12-1982	139
1078. மலர் வளையம் மட்டும் போதுமா?	23-12-1982	142
1079. நந்தவன ரோஜாக்கள்!	30-12-1982	146
1080. உதயசூரியன் வென்றிட உழைத்திடுக!	03-01-1983	149
1081. நீலவான்போல்! நீலக்கடல் போல்!	08-01-1983	150
1082. நினைவு மலர் தூவுகின்றோம்!	03-02-1983	152
1083. எதிர்பார்த்திருக்கிறேன் உன்னை!	14-02-1983	154
1084. அமைச்சரின் ஆசை நிறைவேறாது!	16-02-1983	156
1085. பறித்து வராத பாரிஜாதம்!	19-02-1983	158
1086. உன்நெஞ்சில் நானிருப்பது உண்மையானால்!	20-02-1983	162
1087. விழிகள் வினாக்குறிகளாக மாறினால்!	21-02-1983	165
1088. நடப்பது கவர்னர் ஆட்சியாம் நம்புங்கள்!	22-02-1983	169
1089. விழித்துக் கொண்டிருக்கும் புலியும், வெங்கட்ராமனும்!	23-02-1983	173
1090. களைப்பும் சோர்வும் அகன்றிடக் காண்கிறேன் உன்னை!	24-02-1983	178
1091. பலகளம் அமைய முதற்களம் தஞ்சையில்!	25-02-1983	182

1092. காமராஜரின் தொண்டர்கள் எச்சரிக்கிறார்கள்!	26-02-1983	185
1093. திருச்செந்தூர் ஒரு திருப்புமுனைதான்!	05-03-1983	189
1094. எங்கெங்கும் எழுக கண்டனக் குரல்!	10-03-1983	198
1095. இதோ சென்னையில்! ஞாயிறு இருபதில்!	17-03-1983	204
1096. உண்மை புரிகிறதா இப்போது?!	19-03- 1983	208
1097. மாமனிதன் மார்க்ஸ்!	20-03-1983	211
1098. ஒரு பாட்டாளி - படுகொலை!	22-03-1983	214
1099. காடாகிறது நாடு; கவனம்! கவனம்!!	24-03-1983	216
1100. சாராய சாம்ராஜ்யாதிபதிகள்!	26-03-1983	220
1101. நீதி படும்பாடு!	27-03-1983	225
1102. ஏப்ரல் இருபது! எதிர்கால வெற்றித்திருநாள்!	01-04-1983	230
1103. முதல்வரின் தங்கப்பதக்கப் பரிசுபெற!	02-04-1983	233
1104. யார் கட்டுரை? என்ன உண்மை?	03-04-1983	238
1105. மத்திய அரசும் - மண்டல் கமிஷனும்!	04-04-1983	244
1106. மருத்துவரை மாற்றுவதா? மருத்துவமனையை இடிப்பதா?!	07-04-1983	247
1107. சாபமிடுவோர் கவனத்திற்கு!	10-04-1983	252
1108. கழகச் சொற்பொழிவாளர்களுக்கு!	13-04-1983	258
1109. கிருஷ்ணா! கிருஷ்ணா!	30-04-1983	261
1110. வேண்டாம் வீண் மிரட்டல்!	05-05-1983	269
1111. கழகம், களத்தில் இறங்கும்!	08-05-1983	273

1112. விளக்கம் தருவாரா?	11-05-1983	277
1113. அனைத்துக் கட்சியினர் அணி!	14-05-1983	281
1114. என் அழைப்பு - ஏற்றிடுக!	19-05-1983	286
1115. நாளை - நமது பேரணி!	25-06-1983	289
1116. புதுவை மக்கள் சிந்தனைக்கு!	26-06-1983	292
1117. கிரீடமும், போர் வாளும்!	27-06-1983	295
1118. நாடறிந்தது - நடக்கப் போவது!	03-07-1983	299
1119. சிவதாணுவும் - சிந்தனையும்!	13-07-1983	302
1120. முறைதானா? எண்ணிப்பார்!	14-07-1983	305
1121. இன்னுமா கொடுமை? இனியுமா சகிப்பது?	15-07-1983	308
1122. வாலா? குதிரையா?	16-07-1983	311
1123. இதோ நமது இளைய தலைமுறை!	17-07-1983	314
1124. பரதேசியும், பழனியும்!	18-07-1983	318
1125. அவரால், அது முடியாத காரியம்!	19-07-1983	321
1126. ஆகஸ்டு அறப்போர், விளக்கம் பெற!	20-07-1983	326
1127. அடுத்த தென்மாநில முதல்வர்கள் மாநாடு எப்போது?	21-07-1983	328
1128. உணவுப் பஞ்சம் உறுமுகிறது!	22-07-1983	332
1129. நடந்து முடிந்த தேர்தல் - ஒரு விளக்கம்!	24-07-1983	334
1130. அவர்களுக்கும் தாய்கள் உண்டு!	26-07-1983	338
1131. தென்திசையைப் பார்க்கிறேன்!	27-07-1983	342

1132. உதவாதினி ஒரு தாமதம்! உடனே எழுக தமிழா!	28-07-1983	346
1133. முகவையில் முடிவெடுப்போம்!	29-07-1983	349
1134. அறப்போர் தொடங்கட்டும்!	03-08-1983	352
1135. ஒருமித்த குரலில் முழங்குவோம்!	07-08-1983	356
1136. மூன்றாவது கட்டம், என்ன? எப்போது?	09-08-1983	360
1137. இனம் காக்க எழுந்திடுவோம்!	10-08-1983	364
1138. ஐ.நா. சபைக்கு முறையீடு!	11-08-1983	370
1139. கண்ணீரால் ஒரு அறிக்கை!	12-08-1983	375
1140. ஆகாயத்தை நோக்கி ஒரு வேட்டு!	18-08-1983	378
1141. தமிழ் ஈழம்! தவிர்க்க முடியாதது!	20-08-1983	382
1142. மூலவருக்கே வெளிச்சம்!	27-08-1983	387
1143. ஏன் இந்த வேறுபாடு?!	28-08-1983	391
1144. அமைப்புகளுக்கு ஓர் அறிவிப்பு!	01-09-1983	394
1145. பட்ஜெட் விவகாரம்! பதில் தேவை!	02-09-1983	397

1044. நம் வியர்வைத் துளிகள் வீணாவதில்லை!

உடன்பிறப்பே,

சென்னையில் கூடிய தலைமைச் செயற்குழு உறுப்பினர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளையும், தீர்மானங்களையும் படித்திருப்பாய். அரசியல் நாகரிகம் காத்திடும் ஏடுகள், பத்திரிகைப் பண்பாடு போற்றி நமது கழகத்தின் செயற்குழு பற்றிய செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு இதழ்களில் நமது செயற்குழு பற்றிய விபரங்கள் சுருக்கமாக வெளியிடப்பட்டிருந்த போதிலும், விஷமத்தன வேலைகள் காட்டப்படாமல் அவை வெளியிடப்பட்டிருக்கின்றன. ஒரு சில ஏடுகள், கழகம் என்றாலே கடும் நஞ்சைக் கொட்டிடும் இயல்புடையவை என்பதால், வழக்கம்போல் வக்கனைக் கதைகளை அளந்து வைத்திருக்கின்றன. வஞ்சகத்தை, சூதுதனை, பொறாமைகளைத் தூள்தூளாக்கும் அரிமாக்களாம் கழக உடன்பிறப்புகளையும், அல்லது மற்ற கட்சிகளில் உள்ள நன்றியுணர்வு மிக்க நல்லிதயம் படைத்த நண்பர்களையும், இத்தகைய சிலந்திவலைச் செய்திகள், குழப்பத்தில் ஆழ்த்திவிடமாட்டா என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

அடே! என்னைப் பற்றி உனக்குத் தெரியுமா? நான் படே ஆளாக்கும்! மலத்தைக் கொப்பளித்து உன் மீது காரித் துப்புவேன்! - என்று சீறும் பித்தர்களையொத்த அந்தப் பத்திரிகைப் பிறவிகள் மீது, அனுதாபங்கொள்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.

நமது அருமை உடன்பிறப்பு கம்பம் நடராசன் - அந்தக் கட்டிளங்காளை திடீரென நம்மை விட்டு மறைய நேரிட்டது! அவர் மறைந்து, நாம் அழுத கண்ணீர் உலர்வதற்குள்ளாகவே நாற்பது நாட்களிலேயே இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டது. தமிழ்நாடு அரசாங்கம், ஊராட்சி

மன்றம், ஒன்றியம், நகராட்சி மன்றங்களின் தேர்தல்கள் குறித்து காட்டாத அவசரத்தையும், ஆர்வத்தையும் பெரியகுளம் இடைத்தேர்தலில் காட்டி, நாற்பது நாட்களுக்குள் தேர்தல் அறிவிப்பையும் செய்திட வைத்து தலைமைத் தேர்தல் அதிகாரி, மாநில அரசின் யோசனைப்படியே வேட்பு மனு தாக்கல் செய்யும் நாட்களையும், வாக்களிக்கும் நாளையும் அறிவித்து விட்டார்!

கம்பம் நடராசன் மறைந்த பத்து நாட்களுக்குப் பிறகு, என்னைச் சந்தித்த பத்திரிகை நிருபர்கள் - பெரியகுளம் தொகுதியில் போட்டியிடுவீர்களா? என்ற கேட்டபோது, அவரையிழந்த துயரத்திலிருந்தே இன்னும் நாங்கள் மீளவில்லை - அதனால் இடைத்தேர்தல் நினைவே இன்னும் எங்களுக்கு எழவில்லை என்று வேதனையுடன் விடையளித்தேன் திருச்சியில்!

தொடர்ந்து என்னுடன் நட்புமுறையில் உரையாடிக் கொண்டிருந்த திருச்சி நிருபர்களிடம், பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதி 1980-இல் தி.மு.க. வெற்றிபெற்ற இடம்தானே! என்றும் கருத்தறிவித்தேன். அதை வைத்துக்கொண்டு ஒரு சில ஆங்கில, தமிழ் தினசரிகளில் பெரியகுளம் இடைத்தேர்தல் வந்தால் தி.மு.க.தான் போட்டியிடும் என்று கருணாநிதி சூசகமாக அறிவித்தார் என்று செய்திகள் வெளியிட்டன. இதெல்லாம் ஜூலைத் திங்கள் - முதல் இரண்டு வாரங்களில் நடைபெற்றவை!

அதற்குப்பின் செப்டம்பர் திங்களில் தேர்தல் வரலாம் என்று பல ஏடுகள் யூகம் செய்து செய்திகளைத் தந்தன! செப்டம்பரில் தேர்தலை நடத்த வேண்டுமென்றுதான் மாநில அரசு, மத்திய தேர்தல் அதிகாரிக்குக் கருத்தறிவித்திருப்பதாகவும் ஏடுகளில் செய்திகள் தொடர்ந்தன.

முதலில் நம்பத்தான் முடியவில்லை. ஆகஸ்டு மாதத்தில் சட்டமன்றத்தைக் கூட்டச்சொல்லி சில கட்சிகளின் தலைவர்கள் வற்புறுத்தி அறிக்கைகள் விட்டுங்கூட, அப்படிக் கூட்டப்படுவதற்கான முன்னறிவிப்புகள் எதுவுமில்லாததால் செப்டம்பரில் சட்டசபையைக் கூட்டுவார்கள் என்றும் - அதனால் மழைக்காலத்திற்குப் பிறகு டிசம்பர் திங்களில் பெரியகுளம்

இடைத்தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்படுமென்றும் எண்ணினோம்!

ஆனால் இப்போது, செப்டம்பரில் பெரியகுளம் இடைத்தேர்தல் பணிகளும் நடைபெற வேண்டும் - செப்டம்பர் ஆறாம் தேதி முதல் சட்டமன்றப் பேரவை, மேலவைப் பணிகளிலும் ஈடுபடவேண்டும் - என்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற அண்ணாவின் உறுதி உரையை ஏற்று, இந்த இரண்டு பணிகளிலும் ஈடுபடவும் - என்றும் போல் பெரியார், அண்ணா பிறந்தநாள் விழாக்களைச் சீரோடும் நடத்திடவும் கழகம் முன்வந்துள்ளது என்பதைச் சென்னையில் கூடிய செயற்குழு, தெளிவுபடுத்தி யிருக்கிறது.

இதற்கிடையே செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக் கெல்லாம், நமது பொதுச்செயலாளர் அவர்கள் செயற்குழுவுக்கானத் தேதியை அறிவிப்பார் என்றும், அதில் செய்தியாளர்களுடைய சந்தேகங்களுக்கெல்லாம் விடை கிடைக்குமென்றும் தெரிவித்து வந்திருக்கிறேன்.

ஆகஸ்டு 15-ஆம் நாள் பொதுச்செயலாளர் அவர்கள், தலைமைச் செயற்குழு ஆகஸ்டு 27-இல் கூடுமென்றும், அந்தக் கூட்டத்தில் கழக வேட்பாளர் தேர்வும், பெரியகுளம் தொகுதி தேர்தல் பணி குறித்தவைகளும், தேர்தலுக்கான நிதி திரட்டுவதும் பற்றிய பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் அறிவித்து, அந்தச் செய்தியும் எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளன. இந்த அறிவிப்பிலேயே பெரியகுளம் தொகுதியில் கழகம் நிற்பதற்கான இயல்பான நிலை, சென்ற தேர்தலில் வெற்றி பெற்ற இடம் என்பதினாலேயே உறுதியாகிறது என்பதும் - அதற்குரிய வேட்பாளர் தேர்வு - தேர்தல் பணி வகுத்தல் - தேர்தல் நிதி திரட்டுதல் - போன்ற தொடர்புடைய காரியங்களைப் பற்றிக் கலந்து பேசத்தான் செயற்குழுக் கூட்டமென்பதும் - அனைவருக்கும் மிக எளிதாகவே புரிந்திருக்கும்! அதையொட்டித்தான் கழகம் போட்டியிடும் என்பதை மிக அடக்கத்துடன் நானும் கடந்த இருபதாம் தேதிவாக்கில் நிருபர்களிடம் கூறினேன்.

ஆனால் சில ஏடுகள், கருணாநிதி திடீர் அறிவிப்பு! காங்கிரசை எதிர்த்துப் போட்டி! கம்யூனிஸ்டு வேட்பாளரை எதிர்த்துப் போட்டி! என்றெல்லாம் கொட்டையெழுத்துச் செய்திகளை வெளியிட்டுத் தங்கள் மன அரிப்பைத் தீர்த்துக்கொண்டன!

உடன்பிறப்பே, யாரை எதிர்க்கிறோம் என்பதல்ல பிரச்சினை - நாம் முதலில் வெற்றி பெற்ற இடம் - அந்த இடத்தில் நாம் வேட்பாளரை நிறுத்துகிறோம் என்கிறோம், அவ்வளவுதான்!

கம்பம் நடராசன், ஆம் - எனது அன்புத் தம்பி! அந்தத் தம்பிக்குத் தம்பியாம் கம்பம் இராமகிருஷ்ணனை பெரியகுளம் தொகுதி வாக்காளப் பெருமக்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம்!

இந்தத் தேர்தலுக்கும், இனி வர இருக்கும் தேர்தல்களுக்கும் தலைமைக் கழக சார்பில் ஏற்கப்பட வேண்டிய பிரச்சாரம் போன்ற செலவினங்களுக்கு நிதி தேவையென்பதை நான் சொல்லியா என் உடன்பிறப்பே, நீ தெரிந்துகொள்ள வேண்டும்?

எந்தெந்த அமைப்புகள் எவ்வளவு தொகைக்குக் குறையாமல் தலைமைக் கழக முகவரிக்குத் தேர்தல் நிதி அனுப்ப வைக்க வேண்டுமென்பதையும், கழக உடன்பிறப்புகளும், ஆதரவாளர்களும் நிதியினைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி உதவிட வேண்டுமென்பதையும் - நீ, செயற்குழு தீர்மானத்தில் விரிவாகப் படித்திருப்பாய்!

பெரியகுளத்தில் நடைபெறப் போவது, திருவிழா அல்ல! தேர்தல்! அதனால் தமிழக முழுவதுமிருந்து கூட்டம் கூட்டமாக வந்து குவிய வேண்டுமென்பதில்லை! அப்படி வந்து போவதற்கான வழிச் செலவுகள், மற்ற செலவுகளைக் கணக்கிட்டு - வராமலேயே ஊரில் இருந்து கொண்டு, அந்தத் தொகையைத் தலைமைக் கழகத்திற்குத் தேர்தல் நிதியாக அனுப்பிட வேண்டுகிறேன்.

1977-இல் சிறையில் இருந்து கொண்டே வேண்டுகோள் விடுத்தேன். தமிழக அரசு திரட்டும் புயல் வெள்ள நிவாரண நிதிக்கு இயன்றதை அனுப்புக என்று! நான்கு லட்ச ரூபாய்க்கு மேல் என் உடன்பிறப்புகள் அனுப்பி வைத்ததை நாடு அறியும்!

இப்போது இடைத்தேர்தல், எப்படி மிச்சப்படுத்துவாயோ - எந்தச் செலவைக் குறைத்துக் கொள்வாயோ - எனக்குத் தெரியாது! இம்மடல் கண்டவுடனே நீ அனுப்பும் மணியார்டர்கள் கழகத் தலைமை நிலையத்தில் குவியத் தொடங்கட்டும்!

வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் உடன்பிறப்பே, விரைந்து செயல்படுக! நம் வியர்வைத் துளிகள் வீணாவதில்லை! கண்ணீர்த் துளிகளாலும், செந்நீர்த் துளிகளாலும் கட்டப்பட்ட கோட்டைதான் திராவிட முன்னேற்றக் கழகம்!

இந்தக் கழகத்தின் வெற்றி தமிழ்ச் சமுதாயப் பாதுகாவல் அரணுக்குக் கிடைத்திடும் வெற்றி! அதையெண்ணிச் செயலாற்றிடுக!

அன்புள்ள,

மு. க.

(29-08-1982)

1045. எம்.ஜி.ஆர். கட்சி ஏட்டுக்கு எனது நன்றி!

உடன்பிறப்பே,

வேண்டுமென்றே திட்டமிட்டுப் பரப்பப்படும் அவதூறுகள் அற்பஆயுள் கொண்டவை! வதந்திகளுக்கு வாழ்நாள் குறைவு! பொய்கள் ஈசற் பூச்சிகளைப்போல எண்ணிக்கையற்றுப் பறந்தாலும் அந்தப் பூச்சிகளின் சிறகுகளைப்போல சில நொடிகளில் உதிர்ந்துவிடும்! நடுங்கா நாக்குடன் ஆதாரமற்ற களங்கச் சேற்றைப் பிறர் மீது வாரியிறைப்போர், தங்களின் மனச்சாட்சியின் உதடுகள் உண்மைகளை உச்சரிக்கும்போது படுக்கையில் உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருப்பர்! வேதாளம் சேரும், வெள்ளெருக்குப் பூக்கும், பாதாளமூலி படரும், சேடன் குடி புகும் - என்றெல்லாம் கூட பழங்காலப் புலவர் சபித்திருக்கிறார் மன்றத்தில் பொய்யுரைகளைப் புனைந்துரைப்பவர்களின் மனைகள் என்ன ஆகுமென்று! உண்மை உரைப்போன், அதில் உறுதியாக இருப்பான்! எப்போது கேட்டாலும் அதையே தெளிவாகச் சொல்வான்! அவர் சொன்னார் - இவர் சொன்னார், அதனால் நான் சொன்னேன் என்று நழுவி ஓட மாட்டான்! பொய்யுரைப்பவன், தான் சொன்ன ஒரு பொய்யை நிலைநாட்ட ஒன்பது பொய் சொல்வான்! தொடக்கத்தில் சொன்ன பொய், துண்டு துண்டாய்ச் சிதறிப் போய், பிறகு அவனையறியாமலே உண்மையை உளறி விடுவான்! அதாவது பொய்யனின் உளறல் ஒரு உண்மையைப் பிரசவித்து விடும்!

என்ன தத்துவமா? என்று கேட்கத் தோன்றுகிறதா? உடன்பிறப்பே, உலக நடப்பினைத்தான் உரைக்கின்றேனே தவிர - நான் தத்துவப் போதகாசிரியன் அல்லன்!

நீயும் மற்ற நமது உடன்பிறப்புகளும் கழகத்திற்குத் தேவையான செலவினங்களை உணர்ந்து சளைக்காமல் நிதியினை

வழங்கி வருகிறீர்கள்! தருக எனக் கேட்டபொழுதெல்லாம் தட்டாமல் வழங்கி வருகின்றீர்கள்!

கழக அலுவலகச் செலவுகள் - அலுவலகத்தில் பணியாற்றுவோர்க்கான ஊதியங்கள் - கடிதப் போக்குவரத்து - பிரச்சாரப் பணிகள் - தேர்தல் செலவினங்கள் - பாதிக்கப்பட்ட கழகக் குடும்பங்களுக்கு உதவி புரிதல் - வழக்குச் செலவுகள், இன்னோரன்ன இன்றியமையாத தேவைகளுக்கெல்லாம் உன்னிடம்தான் கையை நீட்டுகிறேன். நீயும் இயன்ற நிதியினை அட்டியின்றித் தருகிறாய்!

நினைத்துப் பார்க்கிறேன்! கழக அரசு கலைக்கப்பட்டு நெருக்கடி நிலையை எதிர்த்தமைக்காகப் பல்வேறு சோதனைகளையும், வேதனைகளையும் பரிசாகப்பெற்று பலரும் மிசாக் கொடுமையை அனுபவித்துக்கொண்டிருந்த நேரத்தில், கழகத்திற்குத் தேவைப்பட்ட பல்வேறு வழக்கு நிதிகளைத் தருவதற்கு, குமரி மாவட்டத்திலேயிருந்துகூட தனிப் பேருந்துகளில் நமது கழக உடன்பிறப்புகள் சென்னை நோக்கி வந்து, என்னை இல்லத்திலோ அல்லது கழக அலுவலகத்திலோ சந்தித்து, நிதியும் வழங்கிப் புகைப்படங்களும் எடுத்துக் கொண்டு சென்றனர். எந்த மாவட்டமும் சோடை போகவில்லையென்பதற்கு அடையாளமாக அத்தனை மாவட்டங்களிலுமிருந்தும் ஒவ்வொரு நாளும் தனிப் பேருந்துகளில் கழக உடன்பிறப்புகள் குடும்பம் குடும்பமாகக் குழந்தைச் செல்வங்களுடன் வந்து குழுமினர்! கண் கலங்கினர்! ஆறுதல் கூறினர்! நாங்களிருக்கப் பயமேன் என்றனர்! நிதித்தொகை அளித்தனர்! தனிப் பேருந்துகள் புறப்பட்ட இடத்திலே தடுக்கப்பட்டபோது பலர் திருப்பதி செல்வதாகவும், திருத்தணி செல்வதாகவும் கூறிவிட்டு - காவல்துறை ஒற்றர்களை ஏமாற்றிட மொட்டையும் அடித்துக் கொண்டு என் இல்லம் வந்து எனைக்கண்டு கழக நிதியளித்துத் திரும்பிய நிகழ்ச்சிகளும் உண்டு! பழைய முரசொலி இதழ்களைப் புரட்டிப் பார்க்கிறேன்! அந்த உடன் பிறப்புகள் அந்த நிலையிலும், என்னிடமும் கழகத்திடமும் கொண்டிருந்த பாச உணர்வு என்னை உலுக்குகிறது!

அந்தப் பற்றும், பாசமும் சற்றும் வற்றிடாத நிலையிலேதான், இப்போதும் எங்களூருக்கு வா! உன் எடைக்கு எடை ரூபாய் நாணயங்களைக் கழக வளர்ச்சி நிதியாகத் தருகிறோம்! என

அழைத்துத் தருகிறார்கள். இப்படிக் கட்சி நிதியளித்த எடைக்கு எடை நிகழ்ச்சிகள் முப்பதைத் தாண்டி ஐம்பதை நெருங்கிக் கொண்டிருக்கின்றன! எனக்குத்தான் நேரமில்லை, தேதி கொடுக்க! தென்னாற்காடு மாவட்டத்திலே மட்டும் ஐந்தாறு இடங்களில் தராசைக் கட்டித் தயாராக வைத்துக் கொண்டுக் காத்திருக்கிறார்கள். என்னை எடை போட்டுக் கழக நிதி தருவதற்காக!

திருச்சியிலே குளித்தலைத் தொகுதியில் நடத்திய விழாவில் கழக நிதிக்கென தங்கப் பதக்க மாலை அணிவித்தனர்! மதுரையில் நடந்த பொன்னாரம் அணிவித்த விழாவிலும், அந்தப் பொன்னாரம் கழக நிதிக்கே சேர்க்கப்பட்டது! சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில் ஓராண்டு முயற்சி எடுத்து என் எடைக்கு, மூன்று மடங்கு வெள்ளிக் கட்டிகளை அளித்ததும் கழக நிதிக்குத்தான்! வரும் செப்டம்பர் முதல்நாள் கோவையில் கழக நிதிதான் கணிசமான அளவுக்கு வழங்க இருக்கிறார்கள்!

உடன்பிறப்பே, இப்படி எடைக்கு எடை ரூபாய் - தங்க மாலைகள் - வெள்ளிக் கட்டிகள் இவற்றை உன் போன்ற உடன்பிறப்புகள் குருவி, தானியங்களைப் பொறுக்குவதுபோல் சேர்த்துக் கழகத்திற்குத் தருவதை, நமது தமிழ்நாட்டு முதலமைச்சரும், அவரது சக அமைச்சர்களும், அவர்களின் கட்சி ஏட்டினரும் எப்படி விமர்சனம் செய்தார்கள் என்பதை நீ அறிவாய்!

கறுப்புப் பணம் வெள்ளிக் கட்டியாகிறது! ஒளிந்திருந்த தங்கம் மாலையாக வருகின்றன! கள்ளப் பணம், எடைக்கு எடை நாணயங்களாக உருவெடுக்கின்றன!

இந்தக் கடைந்தெடுத்த பொய்யை நேற்று வரை சொல்லியும், எழுதியும் வந்தவர்கள் - இன்று அவர்களையறியாமலே ஒரு உண்மையைச் சொல்லி விட்டார்கள்!

கழகச் செயல்வீரர்களுக்கும், கழகத் தலைமைக்குமிடையே ஒரு மனக்கசப்பை வளர்த்து விடுவதற்காக சூதுத் திட்டம் வகுத்து, அவர்களது அதிகாரப்பூர்வமான கட்சிப் பத்திரிகையில் முதல் பக்கத்தில் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்! அந்தச் செய்தியை அப்படியே தருகிறேன், படித்துப்பார்!

‘‘பெரியகுளம் இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு தேர்தல் நிதி வசூலிப்பதற்குத் தி.மு.க.வினர் முகம் சுளித்துச் சலிப்பு

தெரிவித்துள்ளனர். பெரியகுளம் தேர்தலுக்கு நிதி சேர்க்க கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார். இதனைஒட்டி மதுரை மாவட்ட தி.மு.க. பெரும்புள்ளிகள் வசூல் தண்டலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த முயற்சிக்கு, தி.மு.க. தொண்டர்கள் இடையே கசப்பு கலந்த எதிர்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. எடைக்கு எடை நிதி, வெள்ளிக்கு நிதி, தங்கக் காசு மாலை அணிவிக்க நிதி, மாநாட்டுக்கு நிதி, திருச்செந்தூர் நிதி என்று வசூலித்து வசூலித்து ஓய்ந்து இருக்கிறோம். இந்த நிலையில் மீண்டும் வசூலா? எப்படிச் செய்வது? எங்கே கேட்பது? யாரிடம் வசூலிப்பது என்று தி.மு.க. தொண்டர்கள், மாவட்ட தி.மு.க. பெரும்புள்ளிகளிடம் சலிப்புடன் கூறினார்களாம். தொண்டர்களின் இந்த முகச்சுளிப்பு அந்த வட்டாரத்தில் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.''

படித்தாயா? 29-8-82 தேதியிட்ட அண்ணா என்ற எம்.ஜி.ஆர். கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடு வெளியிட்டுள்ள செய்தியை!

ஃ பெரியகுளம் தேர்தல் நிதி சேர்க்கக் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஃ மதுரை மாவட்ட தி.மு.க. பெரும்புள்ளிகள் வசூல் தண்டலில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஃ எடைக்கு எடை நிதி, வெள்ளிக்கு நிதி, தங்கக் காசு மாலை அணிவிக்க நிதி, மாநாட்டு நிதி, திருச்செந்தூர் நிதியென்று வசூலித்து வசூலித்து ஓய்ந்து இருக்கிறோம். இந்த நிலையில் மீண்டும் வசூலா? எனத் தி.மு.க. தொண்டர்கள் சலிப்புடன் கூறுகிறார்கள்.

உடன்பிறப்பே! கழகச் செயல்வீரர்கள் சலித்துக் கொள்கிறார்கள் என்று செய்தி வெளியிட்டு கலகமூட்டிடக் கருதுகிறது எம்.ஜி.ஆர். அவர்களின் ஏடு!

ஆனால் அதற்கிடையே, நமது கழகத்திற்கென தரப்பட்ட நிதிகள் அனைத்தும் அவ்வப்போது மாவட்டக் கழக முன்னணியினராலும், கழகத் தொண்டர்களாலும் வசூலிக்கப்பட்டவைதான் என்பதை எம்.ஜி.ஆர். ஏடு, தெளிவாகச் சொல்லி - தன்னையுமறியாமல் உண்மையை உலகிற்குச் சுட்டிக்காட்டியிருக்கிறது!

கருப்பு - வெள்ளையானது
ஒளிந்திருந்த பணம்
வெள்ளிக் கட்டியானது!
தங்கமாலையானது!

என்றெல்லாம் திட்டமிட்டு அவதூறு பரப்பியவர்கள், அவர்களாகவே இப்போது உண்மையை அறிவித்தமைக்கு நன்றி கூறத்தானே வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(31-08-1982)

1046. இன்னும் யார் யார் பெயர்கள் வரவில்லை?

உடன்பிறப்பே,

உன்னிடம் உரிமையுடன் கேட்டு
நீ தருகிற நிதியைப் பெற்றுத்தான்
கழகப்படகை கடும்புயல்களைத் தாண்டி
ஓட்டி வந்திருக்கின்றோம்!

எப்போது நிதி கேட்டாலும்
இல்லையென்று சொல்லாத வள்ளல்பாரியாய்
இல்லாதபோதும்,
இருக்கவே இருக்கிறது என் தலையெனக்
கொடுக்க முன்வந்த
கொங்குக்குல குமணனாய்
அன்புக் கண்மணியே நீ
அன்றும் இன்றும் விளங்குகிறாய்!

முன்னமே தெரிந்ததுதான்
நிதியெனப் பெயரிட்டார்போதும்
முத்துவேலரும் அஞ்சுகமும்என
மூதறிஞர்முன்னால் பேரறிஞர் உரைத்துப்
பதினொரு லட்சத்தைப் பெற்றுக் கொண்டாரே!
ஓடியாடி நான் உன்னை நாடியபோது - நீ
தேடிவந்து தந்த நிதியை!
நினைவிருக்கிறதா?
நெஞ்சில் பசுமை குலையா அந்த நிகழ்ச்சி!

கழகக் கருவூலம் கருவுற்றிருக்கவில்லை -

என்செய்வது! தேவையில்லாத இடத்தில் குடும்பக் கட்டுப்பாடு!

சிலரது கருவூலங்கள் - ஊடல் கூடலால் அல்ல,
ஊழலால் திளைத்து மகிழ்ந்து

உப்பிக் கொண்டே போகின்றன! அவை
மழலைகள் அல்ல - மகோதரக் கட்டிகள் என்று
மத்தியப் புலனாய்வு மருத்துவர்கள் உரைக்கின்றனர்.

அளவுடன் பெற்று வளமுடன் வாழ்ந்திடும்
அரிய நோக்குச் செயல்பட
அன்றுமுதல் இன்றுவரை
கறைபடாத கருவூலமாய்க் கழகம் திகழ்கிறது!

உன்கையில் கிடைத்த ஐந்தும்பத்தும்
உடனடியாகக் கழகத் தேர்தல் நிதியெனமாறி
உன்னை என்முன் நிறுத்துகின்றன.
உளமார வாழ்த்துகின்றேன் உன்பெயரைப்
பார்த்தவுடன்!

இன்னும் யார் யார் பெயர்கள்
மின்னிடவில்லை முரசொலியில் என்பதையும்
எண்ணிடத்தவறேன் - என்னை நீ அறிவாய்!

நாளைக்கொரு சொல்
வாளைப்போல வீச்சு கொண்டு சுழன்றால் -
நன்றாயிருக்காதல்லவா உனக்கு!

இவர் என்ன தந்தார்? என்று
இன்மொழியில் கேட்டால் கூட -
இடியொலியாய்த் தாக்குமன்றோ! அதனாலே
இன்றைக்கே உடன்பிறப்பே!
சாக்குப்போக்குச் சொல்லாமல்
சாதிக் முகவரிக்கு
சடுதியிலே அனுப்பிவைப்பாய் கழகநிதி!

பெரியகுளம் நீந்த வேண்டும் - நின்
அரிய உழைப்புடனே -
அளித்திடுக கழகநிதி! இந்தக்

கருணாநிதி கேட்டுக் கழகமாமணியே, நீ

கைமூடி இருந்ததுண்டோ? உம்!
கண்மூடித் திறப்பதற்குள்
குவித்திடுக
குன்றம்போல்!

அன்புள்ள,

மு. க.

(14-09-1982)

1047. தி.மு.க. எனும் திருவிளக்கு!

உடன்பிறப்பே,

பெரியகுளம் இடைத்தேர்தல்
பிரச்சாரம் சூடு பிடிக்கிறது!
மின்னல் வேகத்தில் கண்டனங்கள் –
மறுப்புகள்! அறிக்கைகள்!
இப்படியெல்லாம் பத்திரிகைச் செய்திகள்!
இத்தியாதி! இத்தியாதி!

ஆளுங்கட்சியினர் கோடி கோடியாய்க் குவித்தவர்கள்
அங்கிங்கெனாதபடி கொடி கொடியாய்
ஆள் உயரப் பேனர்களாய்
மின்விளக்குச் சின்னங் களாய்
அகன்ற வீதிப் பந்தல் களாய்
ஆகாயம் அளாவும் வளைவுகளாய்
ஆடம்பரம்! அலங்காரம்!

அம்மவோ! சொல்லித் தொலையாது!
அத்துணைப் பணம் ஆறாய் ஓடுது –

அதுகண்டு திகைக்காதே
அன்பு உடன்பிறப்பே –
தீபாவளியன்று திருநாள் என்று
எதிர்வீட்டுப் பிள்ளை எத்தனையோ விதமாய்
வானவெடிகள், வண்ண மத்தாப்பு
கொளுத்தி மகிழ்ந்து குதிக்கும்போது
ஏழைப்பிள்ளை ஏங்கிப் பார்ப்பது போல
எதற்காக நீ கலங்க வேண்டும்?

தி.மு.க. எனும் திருவிளக்கை
கையில் ஏந்திய கழகக் கண்மணி!

அணையா விளக்கிது –
அண்ணன் தந்த ஜோதி இது!

இதன் நிரந்தர ஒளியின் முன்னே
கம்பி மத்தாப்பு நின்றிடுமா? – இனிய
தம்பி நீ இதை சிந்தித்துப் பார்!

தேனியில் கூடித் தேர்தல் பணிக்கென
தேனீபோல் உழைத்திட வருக என்றேன் –

எத்தனை பேர் வந்தீர் என்று
எண்ணிக்கொண்டு தானிருக்கிறேன் நான்!

காலத்தே கடமையாற்றல்
ஞாலத்தில் வெற்றி குவிக்கும்!

பகுதி நேரப் பணிக்கென வருதல்,
மிகுதி நேரம் சுற்றுலா செல்லல் –
வந்தேன் என்று ஆஜர் காட்டுதல்
வருவேன் என்று ஆசை காட்டுதல்
வசதியில்லையெனக் குற்றம் சாட்டுதல்
வழிச்செலவு எனக் கையை நீட்டுதல்
தவிர்த்திடுக என்று தயவாய்க் கேட்டேன்
தயார் என்று நீயும் உரைத்தாய்!

உன்னை நம்பி – உன்
உழைப்பையே நம்பி
வெற்றி குவித்திட வருக என்று
நெற்றி வியர்வினைத் துடைத்தவாறு
உடன்பிறப்பு கூறுகின்றேன்!

ஓயாது உறங்காது உழைப்பு தந்தால்
சாயாது நம் கொடியென்று – இந்த
ஜகத்திற்குச் சொல்லி வைப்போம்.

அன்புள்ள,

மு. க.

(15-09-1982)

1048. கீதம் இசைத்துக் கிளம்பிட வேண்டாமோ?

உடன்பிறப்பே,

இருபது ஆண்டுகளுக்கு முன்பு –

இப்போது நினைத்தாலும்
நேற்று நடந்த நிகழ்ச்சியென
நிழலாடுகிறது நெஞ்சில்!

திருவண்ணாமலையில் ஒரு இடைத்தேர்தல் –
கழகம் போட்டியிடக்
களம் அமைத்தது –

காமராஜரின் செல்வாக்கு
கடலினும் மாணப்பெரிது அப்போது!
அவர் புகழ், கொடி கட்டிப் பறந்த காலம் –
அரசின் முதல்வரும் கூட!

சர்வ வல்லமை படைத்தவர்களைத் தேர்தலில்
சந்தித்த நாமோ – சாதாரண சாமான்யர்கள்!

காசில்லை கையில் –
மாசில்லை மனதில்!

திருவண்ணாமலையில்
தினந்தோறும் நாம் பாடிய
தேர்தல் பல்லவி இதுதான்!

திக்கெட்டுமிருந்து
தி.மு.க.வினர் குவிந்தனர்!

திருவிழாக் காண அல்ல –
தேர்தலை நடத்திட!

துண்டில் முடிந்து வந்த காசினைக் கொண்டு
உண்டியருந்தினர் –
உறங்குவதற்கு இடம் வேண்டும்!
உறங்கினால்தானே அது வேண்டும்?

கோணலூர் என ஒரு கிராமம்
குளிர்தரு மரங்கள் ஒன்றிரண்டு –
அங்கு கண்டேன்
அதிசயமொன்று!

தேர்தல் பணியில் ஆர்வங்கொண்ட
திறன்மிகு வீரர்கள்
தஞ்சைத் தோழர்கள்
கஞ்சிக் கலயம் – அதைக்
காய்ச்சிட அடுப்புடன்
மரத்தின் அடியில்
காட்சி தந்தனர் –
கட்டித் தழுவினேன் – அந்தக்
கருமமே கண்ணான
கண்மணிகள் பற்றி
அண்ணன் கேட்டார் –
அகமிக மகிழ்ந்தார்!

இப்படிப் பல ஊர்

திருவண்ணாமலையில்
எப்படிச் சொல்வேன் – அவர்கள்
இயங்கிய திறனை!

வேளாண்மைத் துறை அமைச்சர்
பின்னாளில்! – அந்தக் கோவிந்தசாமி
முன்னாளில் கழக அணிச் செயலாளர்!

வேட்டவலம் எனும் ஊரில்
வெறுந் திண்ணைகளில் படுத்துறங்கி
வேலையிலே சோர்வின்றி – தேர்தல்
வெற்றியினைத் தேடித் தந்தார்!

திருவண்ணாமலைத் தேர்தலை இன்று
திரும்பிப் பார்க்கச் சொல்வதெல்லாம்
வென்றவர் எங்கே?
என்று நான் கேட்பதற்கல்ல!

வெற்றி அறுவடை தந்தோர்
பற்றற்ற துறவிகள் போல்
பந்தயக் குதிரைகளாய்
பணி புரிந்த காரணத்தால் தான்
அன்று திரு - அண்ணாமலை கிடைத்தது!

இன்று அண்ணாவின் மலையாம் தி.மு.க.வை
அசைக்க யாராலும் முடியாதென்று - கீதம்
இசைத்து நீ, கிளம்பிட வேண்டாமோ?

அன்புள்ள,

மு. க.

(16-09-1982)

1049. ஒரு சொட்டுத் தேன்!

உடன்பிறப்பே,

பசி நோக்கார் கண் துஞ்சார்
கருமமே கண்ணாயினர்
பழைய பாடல் - இது
பதிந்திருக்கும் உன் மனதில்!

புதிய திருப்பம் காண்பதற்கும்
புனிதர் வேடம் கலைப்பதற்கும்
பொல்லாச் செயல்கள் வீழ்வதற்கும்
போர்க் கோலம் பூண்டுள்ளோம்!

அதில் ஒரு கட்டமே இந்தத் தேர்தல்!
அள்ளிப் பொழிகிறார் பணத்தோட்டா
துள்ளியாடுது தோரணமாய்
கண்ணைப் பறிக்குது வண்ண விளக்கு!

கருப்புப் பணத்தால் குளத்தையே மூடுவர்!
கண்மணி நீயோ கவலைப்படாமல்
கழகக் கொடியைக் கையினில் ஏந்து!
உதயசூரியனை உடையினில்
பொறித்திடு!வீதிக்குவீதி சென்றிடுக!
வீட்டுக்குவீடு வாக்குத் திரட்டிடுக!

ஒருவருக்கொருவர்
உங்களுக்குள்ளே
ஒருதுளி கசப்பும் வேண்டாம் - அந்தச்
சிறுதுளி பெருவெள்ளம் ஆகிடுமன்றோ!

ஏன் காத்து இருக்கின்றாய்?
எவர் வருவார் என எதிர்பார்த்து இருக்கின்றாய்?

வந்தாலும் ஒரு சொட்டுத் தேன்தானே தருவார் - அது

வரவில்லையென நினைத்து வளைத்திடுக உடலை வில்லாய்!

வகை வகையாய் குடம் குடமாய்த் தேனும் பாலும்
தொகை தொகையாய்க் கொள்ளை கொண்டோர் கூடாரத்தில்
கண்ணாலே கெஞ்சுகின்றாய் அன்பே! - இங்கேது அந்தக் குடம்?

அண்ணாவின் தம்பியென்ற மகுடம்தான் உண்டு!

புண்ணான தமிழகத்தின் துயரம் போக்கி
மண்ணாளும் மமதையாளர் கொடுமை நீக்கி
புதியநிலை உருவாக்கப் புயலே! எழுக!
புலிப் போத்தாய்ச் செயல்பட உடனே எழுக!

இடையில் இருக்கும் நாட்கள் குறைவு -
படைக்கலம் போலே பாய்ந்திடு கண்ணே!
கடையில் விற்கும் பண்டமோ வெற்றி? தளரா
நடையுடன் விரைந்திடு தொகுதியைச் சுற்றி!

அயர்வை உதிர்த்திடு! ஆற்றலைக் காட்டிடு!
வியர்வை துடைத்திட நேரமும் இன்றி
ஆல்போல் தழைக்க கழகத்தின் உயிரே! நீ
வேல்போல் பறந்து வெற்றி பறித்திடு!

அன்புள்ள,

மு. க.

(17-09-1982)

1050. ஈரோட்டுப்புயல் ஏன் தீண்டப் போகிறது?

மானினம், தேன்சிட்டு,
மயில், குயில், மாடப்புறா
கொஞ்சி மகிழும் குளிர்மலர்ச் சோலை!
அதுவே! தமிழ் இனம்! தமிழ் இனம்!

மலைப் பாம்பொன்று உருண்டு திரண்டு
மடுவென வாயைத்திறந்து நெளிந்தது-
அதுவே தகா இனம்! தகா இனம்
சோலையில் குலவும் சுந்தர உயிர்கள்
சூறப்பாம்பின்
ஆலைவயிற்றில் அடைபடுவதோ - என்
காலைக்கதிர் விழியும்
மாலைச் செவ்வான் நிறமும்
பாலைப்போல் தாடியும் கொண்டார்
தடியுடன் பாய்ந்தார் - அவரே பெரியார்
வைதீக அரவம் - அவரை
வாலால் அடித்தது
வைக்கம் வீரராய் அதனை வீழ்த்திக் காட்டினார்!!
சாதிவெறி-மதவெறி- சனாதனவெறி-
ஆதியில் இல்லா அத்தனை வெறிகளும்
அகன்றிடுக சோலை விடுத்து என்று
அதிர்ந்தது முரசம்: அதுவே பெரியாரின் பேச்சால்!
அக்கிரகாரத்திலும் அதிசய மனிதர்கள்
உருவாகிட வேண்டும்
அனைவரும் வடராக்களாக மாறி
அகல்யாக்களின் கதைகளுக்கு
அக்னித் திருவிழா நடத்திட வேண்டும்!
திணித்த விஷத்தைக் கடித்த பாம்பே
இழுத்திடல் வேண்டும்!
இதனைச் செய்தால் அவர்களை
ஈரோட்டுப் புயல் ஏன் தீண்டப் போகிறது?

(17-09-1982)

1051. சூரியப்பூ மலர்கிறது!

உடன்பிறப்பே,
வெற்றியின் முகடு தெரிகிறது,
வேகமாய் நடந்திடுக!
வேழம் துதிக்கையில்
மாலையுடன் உன்னைத் தேடுகிறது!
அதனைச் சூடிட நீயும்
சுறுசுறுப்புக் காட்டிடுக!

பணப்பந்தல் போடுகின்றார் – ஆனால்
மணப்பந்தல் சுயம்வரத்தில்
வெற்றித் தமயந்தியின்
வேல்விழிகள் உன்னைத்தான் தேடுகின்றன!

அன்பே! நீ விரைந்து நடப்பதில்தான்
அந்தத் தமயந்தியின் வாழ்வே இருக்கிறது –
காத்திருக்கிறது!
அந்தத் தமயந்தியின் வாழ்வே இருக்கிறது –
ஆமாம்! தமிழினத்தின் எதிர்காலமே காத்திருக்கிறது!
அதற்குத்தான் உதயசூரியப்பூ பூத்திருக்கிறது!

வீட்டுக்கு வீடு சென்றாயா?
வீணர் ஆதிக்கம் அகல
வாக்குகளைக் கேட்டாயா?
வீதிக்கு வீதி லாரிகளில் வருகின்றார் வன்முறையார்!
பீதிக்கு மக்களை ஆட்படுத்தி
வெற்றிக்கனி தட்டிப் பறிக்கத்
தீட்டுகின்றார் திட்டம்!

கலங்காதே கண்மணி நீ – தேர்தல்
களங்கண்டு சோர்ந்ததுண்டா உன் வரலாற்றில்?

அறப்போரில் அடலேறு நீ - இதனை
மறுப்பாரில்லை! படை நடத்து
அண்ணா வழியில்!

தம்பியுடையான் படைக்கஞ்சான் என்றும்
இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்றும் -
உன்னை

நம்பித்தானே அண்ணா சொன்னார்!
தும்பியெனப் பறந்து சென்று திரட்டிடுக வாக்குகளை!

பளபளக்கும் வாகனங்கள்
படாடோப விளம்பரங்கள்!
பல்கேரியா பால்டிகா கப்பல்களின் பேரங்கள்!
பலகோடிச் சாராயத் தொழிற்சாலை ஊழல்கள்!
பறிக்குது கண்ணைப் பட்டுக் கொடிகளாய்

மறைக்குது விண்ணை படேபடே பேனர்களாய்!
பசிப்பது மறந்து
பணியாற்ற உன்னை
அழைப்பது அண்ணன்
அன்பே! விரைந்திடு முன்னே!

ஆத்திரத்தில் ஏதேதோ பேசுகின்றார் ஆளவந்தார் -
நடராசனின்

கோத்திரம் குலமெல்லாம் பற்றி நாக்கூசாமல் பழிக்கின்றார்!

பாத்திரத்தில் இருப்பதுதான் பரிமாற வரும் - முதலமைச்சர்

பண்புக்கு உரியதுதான் சொல்லாய் வரும்!

பாரதி தாசன் சொன்னார் அன்று!

சிங்கத்தை நரியடிக்கும் திறமில்லையென்றாலும்

பொங்குற்றே சிங்கம் இறந்ததென்றால் நரி மனம் பூரிக்காதா?

எங்குற்றான் நடராசன் என்று ஏங்குங்கால்

இங்குற்ற எம்.ஜி.ஆர். இழிமொழிகள் பேசுகின்றார் -

புறப்படுக புலிப் போத்தே!

பொய் சொல்லிப் பிழைப்போர்
உருப்பட மாட்டார் என்றே
ஒலித் திடுது வெற்றி முரசம்!

உடன்பிறப்பே,

வெற்றியின் முகடு தெரிகிறது!

வேகமாய் நடந்திடுக!

அன்பே! உனக்காகத்

தமிழகத்தின் எதிர்காலமே காத்திருக்கிறது!

அதற்குத்தான் உதயசூரியப்பூ பூத்திருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

(21-09-1982)

1052. உன் கணிப்பேதான் என் கணிப்பும்!

உடன்பிறப்பே,

நீண்ட நாட்கள் ஆகின்றன, நீயும் நானும் கடித வாயிலாகச் சந்தித்து! இனி அடிக்கடி உனக்கு எழுதுவேன்!

ஒவ்வொரு முறையும் இப்படித்தான்

சொல்வாய்!

என்று நீ முணுமுணுப்பது என் காதில் விழாமல் இல்லை. அந்த முணுமுணுப்பு, உனக்கு என் மீதுள்ள அன்பின் அடையாளமே தவிர - கோபக் குறியல்ல, என்பதும் எனக்குத் தெரியும்.

பெரியகுளம் தேர்தல் களத்தில் ஒன்றாக இருந்து ஓய்வின்றி, உறக்கமின்றி, பணியாற்றிய பிறகு உன்னைக்கண்டு ஆறுதல் சொல்ல வேண்டுமென்றுதான் ஓடோடி வந்தேன்.

அதற்கு அவசியமே இல்லாமற் செய்துவிட்டாய்! நீ கவலைப்பட்டுக் கொண்டிருந்தால்தானே நான் உன்னைத் தேற்றுவதற்கு? நீதான், யார் தோற்றது? நாமா தோற்றோம்? இல்லவே இல்லை! என்று எழுச்சி முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறாயே!

சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டு இரண்டரை லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளோம் - உழைப்பை மட்டுமே செலவிட்டு ஒரு லட்சத்து எண்பதாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளைக் கழகம் பெற்றிருக்கிறதே - இப்படியொரு திகைப்பு, பெருமூச்சு, வியப்பு - வென்றவர்களின் கூடாரத்தில்!

அரசின் ரத கஜ துரக பதாதிகள் அணிவகுப்பைச் சமாளித்து - அவர்களுக்கென ஆட்பட்டுள்ள பத்திரிகை பலத்தைத் தாக்குப்

பிடித்து - அனைத்து சக்திகளையும் ஒரே தொகுதியில் குவித்து மோதியபோதும்கூட, எதிர்த்து நின்று போர் சோர்வடையாமல் கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறோமென்றால், எதிர்காலத்தில் பொதுத் தேர்தலில் களங்கள் பலவாகப் பரவலாக அமைகிறபோது, இன்று வென்றுள்ளவர்கள் அன்று என்ன பாடுபடுவார்கள் என்று நீ யூகித்தறிந்துள்ள காரணத்தினால்தான் உற்சாகம் கரைபுரள்கிறது உனக்கு!

முக்குலத்தோரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததே எம்.ஜி.ஆர். அரசுதான்!

இப்படியொரு ஒரு பக்க விளம்பரமல்லவா செய்யப்பட்டது தேர்தல் நேரத்தில்! முக்குலத்து மக்களின் வாக்குகளைப் பெற இதுபோல் ஒரு முயற்சி! என்செய்வது! அவர்கள் இன்னமும் ஏமாறுகிறார்களே!

முக்குலத்தோர், வன்னியர், யாதவர் போன்ற பெரிய சமுதாயங்கள் பிற்படுத்தப் பட்டோர் சமுதாயப் பட்டியலில் எத்தனையோ ஆண்டுக் காலமாக இருக்கின்றன! ஆனால், எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வரான பிறகுதான் முக்குலத்தோரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததாக ஒரு பக்க விளம்பரம்! எல்லாத் தினசரிகளிலும் - தேர்தல் நேரத்தில்!

இப்படிப் பொய்கள் ஒன்றா இரண்டா? புதிய புதிய வாக்குறுதிகளுக்குத்தான் பஞ்சமா?

குற்றபரம்பரைச் சட்டத்திலிருந்து முக்குலத்து மக்களை விடுவிப்பேன் என்று 1977-ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் முழங்கியவர்தானே எம்.ஜி.ஆர்.!

ஆனால் அந்தச் சட்டம், 1952-இல் ராஜாஜி காலத்திலேயே ரத்து செய்யப்பட்டு விட்டது என்பதைப் புரிந்து கொள்ளாத மக்கள்தானே எம்.ஜி.ஆர். அவர்களின் பேச்சை நம்பி வாக்களித்து வெற்றிமாலை சூட்டினார்கள்!

இத்தகைய புனைந்துரைகளில் அனைவரும் ஏமாந்து மூழ்கிவிடாமல் ஒரு பெரும்பகுதி மக்களை நல்வழிக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையின் அடையாளமாகத்தான்

ஒரு லட்சத்து எண்பதாயிரம் வாக்குகள் பெற்றுள்ளோம் என்று உனது எழுச்சி நிறைந்த வரவேற்பின் மூலம் எனக்கு விளக்கியிருக்கிறாய்.

நானும் நீ கொண்டுள்ள அந்த உணர்வில் சங்கமமாகிறேன்.

அடுத்து வரும் வெற்றிகளுக்கான ஆரம்பம்தான் பெரியகுளம்.

உன் கணிப்பேதான் எனது கணிப்பும்!

அன்புள்ள,

மு. க.

(18-10-1982)

1053. சந்துமுனைச் சிந்துபாடிகள்!

உடன்பிறப்பே,

உன்னைப்போல் ஒரு உடன்பிறப்பு - ஆம், ஒரு தம்பி - ஓடோடி வந்தான்! பார்த்தாயா, பார்த்தாயா இதனைப் படித்துப் பார்த்தாயா? என்று பதறினான். ஏன் பதறுகிறாய்! கொஞ்சம் பொறுமையாக இரு! நான் இப்போது படித்துக் கொண்டிருப்பது 1957-இல் அண்ணா திராவிட நாடு இதழில் எழுதிய கடிதம்! இதைப் படித்து முடித்துவிட்டு வருகிறேன் என்றேன். தம்பி, அமைதி அடையவில்லை! ஆத்திரம் பொங்கிடப் பேசினான்!

அண்ணாவின் கடிதங்கள் திராவிட நாட்டில் வெளிவந்த போது கர்ப்பத்தில் கூட இல்லாதவைகளும் - ஒருவேளை பூமிக்குப் பாரமாகப் பிறந்து உலவினாலும் அண்ணா என்ற பெயருக்குள்ள மகத்துவத்தை உணராதவைகளும் - ஓகோ! அண்ணாத்துரையா? அவர் கிடக்கிறார்! நீங்கள் வாருங்கள் நாம் ஒகனேக்கல் போகலாம் - ஒய்யாரம் காணலாம் - உல்லாசம் தேடலாம் - டர்ட்டி பாலிடிக்ஸ் நமக்கு எதற்கு என்று இழுத்துப் போர்த்தி, எடுத்து அணைத்து, பஞ்சணையில் கிடத்திப் பலரது பணப் பேழைகளைத் தனது பாதங்களில் குவித்துக் கொண்டதுகளும் - இன்று ஏதோ, தாங்கள்தான் அண்ணாவின் வாரிசு என்பதுபோலப் பதவியொன்று கிடைத்து விட்டதால் அண்ணாவின் பெயரைச் சொல்லி உன்னை இகழ்வதை, என்னால் எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்? யாரால்தான் பொறுத்துக்கொள்ள முடியும்?

அக்கினியாஸ்திரங்களை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்தான் தம்பி! நான் அவன் முதுகில் லேசாக தட்டிக் கொடுத்தபடி, ஏன் இவ்வளவு பதட்டப்படுகிறாய்? ஆட்சியிலிருப்போர் - ஆளுங்கட்சியில் இருப்போர் எதிர்க்கட்சியென்றால் ஏதாவது பேசியிருப்பர்! நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக என்னோடு பழகியவர்கள்தான் அவர்கள்! அண்ணா வீட்டு மாடியில் அவரைச்

சூழ்ந்து அமர்ந்து விடிய விடிய அரசியல் பேசியவர்கள்தான் நாங்கள்! அவர் விடியற்காலையில் தூங்கிய பிறகு - தலைக்கு ஒரு தலையணை கூட இல்லாமல் வெறுந்தரையில் அண்ணாவைச் சுற்றிலும் உடனுறங்கியவர்கள்தான் நாங்கள் - அவருடன் அமர்ந்து ஒரு வேளையா - இரு வேளையா - பல வேளைகளில் உணவருந்தியவர்கள்தான் நாங்கள்! என் செய்வது - இந்த இனத்திற்குற்ற சாபக்கேடு - அவர்களில் சிலர் பிரிந்து நிற்கிறார்கள்! அவர்கள் என்னதான் என்னைத் தாக்கினாலும், இழித்துரைத்தாலும், பழித்தாலும் நான் அவர்களுடன் கழித்த அந்த இனிய நாட்களை எண்ணிக்கொண்டு அவைகளைத் தாங்கிக்கொள்கிறேன். சில நேரங்களில் பதிலும் சொல்ல வேண்டியவனாகிறேன் - அப்போதும், பழகிய அந்தப் பழைய நாட்களை மறக்காமல்! எனக்கூறி, அந்தத் தம்பியின் கோபம் தணிக்கப் பார்த்தேன். தம்பியோ மேலும் வெகுண்டான்!

நான் யாரைச் சொல்லுகிறேன்? நீங்கள்
யாரைச் சொல்லுகிறீர்கள்?

குமுறினான்! கொந்தளித்தான்! மீண்டும் தம்பியைப் பொறுமையாக இருக்குமாறு கேட்டுக்கொண்டு விளக்கம் கூறினேன்.

தம்பி! நான் யார் யாரை மனத்தில் வைத்துக்கொண்டு - அன்று அண்ணாவுடன் பழகிய அந்தக் காலத்தையும், நிகழ்ச்சிகளையும் நினைவுக்குக் கொண்டு வந்தேனோ - அவர்கள் ஏதாவது சொல்லியிருந்தால்தான் நான் மனம் புண்படலாம்! வேதனைப்படலாம்! அதில் அர்த்தமும் இருக்க முடியும்! நீ யாரையோ விலாசம் தெரியாதவர்களைப் பற்றியும், அவர்கள் வீசிடும் விஷச் சொற்களைப் பற்றியும் என்னிடம் கூறி, உன்னோடு சேர்ந்து என்னையும் வியாகூலமடைய வேண்டுமென்று விரும்புகிறாயே! இது சரியா? அண்ணா சொன்னதைப் போல பாய்ந்து வரும் புலியை எதிர்ப்பவன், பன்றியொன்று மேலே உராய வந்தால் ஒதுங்கித்தான் போவான் - அப்படித்தான் போக வேண்டும்! அதற்காக, அவன் பன்றிக்குப் பயந்த கோழை என்றா பொருள்?

உடன்பிறப்பே! இந்த என் விளக்கத்தைக் கேட்ட பிறகு, சீறிக்கொண்டு வந்த தம்பி, சிந்திக்கத் தொடங்கினான். அதனால்,

அவன் பேச்சு மாறிற்று! ஆம், நான் விரும்பியவாறு அவன் பேச்சு மாறிற்று!

சரி! சரி! 1957-இல் அண்ணா எழுதிய கடிதம் என்றாயே! திராவிட நாடு இதழில் என்ன எழுதியிருக்கிறார்! எதைப்பற்றி எழுதியிருக்கிறார்?

தம்பியின் கேள்விக்குப் பதிலாக அந்தத் திராவிட நாடு இதழையே அவன் கையில் கொடுத்தேன். தம்பி, உரக்கப் படிக்கிறான். நீயும் கேளேன்! கெடுமதியாளர்களின் பேச்சால் நீயும், நானும், நெருப்புமிழும் கண்ணோடு நியாயம் கேட்க வந்த தம்பியும் கொண்டிடும் கோபம் தணிவதற்கேற்ற அண்ணாவின் பல ஓவியங்களில் ஓர் ஓவியம் இது! தம்பி, படிக்கிறான் அண்ணாவின் கடிதத்தை! என் கண்கள் பனிக்கின்றன!

கல்லணையின் காட்சி கண்டு களித்திடலாம். ஆட்சியில் இருப்பதால் ஏற்படும் பெருமை குறித்து மகிழலாம் என அமைச்சர் உள்ளூற எண்ணியிருந்தாலும் கூட, அமைச்சர் அதையும் அனுபவிக்கத் தம்பி கருணாநிதி விடவில்லை! கல்லணையில் கனம் அமைச்சர்! கல்லணையில் கருணாநிதி! கருணாநிதி கல்லணையும் செல்வார், மலரணைக்கும் செல்வார். எதற்கு? ஏதாவது கதை எழுதுவார்! வேறு எதற்கு? என்று பேசிடுவோர் உண்டு. நீ அறிவாய்! அவர்களே கூட, இதேது! பயல்கள் உண்மையிலேயே தொண்டாற்றுகிறார்கள் என்பது உலகுக்குத் தெரிந்துவிடும் போலிருக்கிறதே என்று கவலையுடன் பேசிக் கொள்வர்! கை பிசைந்து நிற்பர்! நங்கவரம் வயலோரங்களில் (குளித்தலைத் தொகுதி) இரும்புத் தொப்பி அணிந்த போலீசார்! உழவர் வாழ் பகுதிகளில் உருட்டல் மிரட்டல் ஏராளம்! இந்த நிலைமையை எடுத்துக்காட்டி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் பணியிலே கருணாநிதி ஈடுபட்டது, எனக்குப் பூரிப்பும் பெருமையும் தருவதாக இருக்கிறது; உனக்கும் உவகை, கொஞ்சமாகவா இருக்கும்!

அண்ணாவின் கடிதத்தில் சில பகுதிகள்தான் இவை! அன்பும், பாசமும் பொழிந்திட தம்பி எனக்குறித்து எழுதியும் பேசியும் என்னைப் போன்றவர்களை இலட்சியப் பயணத்தில் ஊக்கப்படுத்திப் பேருவகைகொண்ட அந்தப் பேரறிஞரின்

பெயரைப் பயன்படுத்தி அவரால் வளர்க்கப்பட்ட என்னைப் போன்றவர்களையோ, (அவர்கள் எங்கிருந்தாலும்) அவரால் உருவாக்கப்பட்ட இந்தக் கழகத்தையோ ஏச்சுப் பேச்சுக்களால் அழித்திட எவரால் முடியும்? தம்பியின் கோபம் - தம்பிக்கு நானளித்த விளக்கம் - அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி - அனைத்தையும் இணைத்துப் பார்த்திடும்போது, உடன்பிறப்பே! அண்ணா அடிக்கடி கூறுவாரே அதுபோல, சந்துமுனைச் சிந்துபாடிகளைப் பற்றிக் கவலைப்படக்கூடாது என்பது புரிகிறதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(19-10-1982)

1054. வாலையாவது வழுக்காமல் பிடிக்குமா?

உடன்பிறப்பே,

மேட்டூர் நிரம்பித் ததும்புகிறது என்ற செய்திகள் வந்தபொழுது, எல்லாம் எங்கள் புனிதர் ஆட்சி நடப்பதால்தான்! என்றுப் புகழ்ந்து பாசுரம் பாடியவர்கள் - இன்றைக்கு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மேட்டூர் அணை, பனிரெண்டு அடி தண்ணீர் கூட இல்லாமல் மூடப்பட்டு விட்டது என்ற செய்தி கண்டு இதுவும் எமது புனிதர் ஆட்சி மகிமைதான் எனக் கூறிடுவரோ, என்னவோ எனக்குத் தெரியாது! பெரியகுளம் நகரில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தைத் தொடங்கி வைக்க முதல்வர் எம்.ஜி.ஆர். வந்தபோது மழை பெய்தது. மறுநாள் நின்று விட்டது. ஆனால், பெரியகுளம் தேர்தல் பிரச்சாரத்திலேயே மிக முக்கியமான அங்கம் வகித்தது அந்த மழைதான்.

பொன்மனச் செம்மலின் கால் இந்தப் பூமியில் பட்டதும் வானமாதேவி மழைத் துளிகளை மலர்களாக்கி எப்படி வருஷித்தாள் பார்த்தீர்களா? கருணாநிதியும்தான் வந்தார்! அப்போது மழை வந்ததா? வராது! அதற்கென ஒரு தெய்வாம்சம் வேண்டும்! அந்த அம்சம் பெற்றவர் மூகாம்பிகையின் அருளை முழுமையாகப் பெற்ற எங்கள் முதல்வரேதான்!

இப்படி நடைபெற்றது ஆளுங்கட்சியின் தேர்தல் கச்சேரி! ஆனால் அந்தத் தெய்வாம்சம் பூண்டவரின் செங்கோல் நடைபெறும் ஆட்சிக்காலத்திலேதான், மேட்டூர் அணை புதிய வரலாறு படைத்து பனிரெண்டு அடிக்கும் கீழே போய் விட்டிருக்கிறது! புனிதரின் (?) புகழ்பாட எடுத்துக் கொண்ட நேரத்தையும் - அதனைக் கேட்டு ரசிக்கப் புனிதர் (?) செலவிட்ட நேரத்தையும் முறையாகப் பயன்படுத்தி, முறையாக அணுக வேண்டியவர்களை அணுகி, இன்றுபோல் அன்றைக்கே சென்று இந்தியப் பிரதமரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கி அவசர அவசியத்தை உணர்த்தியிருந்தால் - கர்நாடக முதல்வரைச் சந்தித்துத் தோழமை உணர்வுடன் பேசி, ஒப்பந்தம் பற்றிய விவகாரங்களைப் பிறகு விவாதித்துக் கொள்வோம், இப்போது

சோழ மண்டிலத்தில் காய்ந்திடும் கழனிகளைக் காத்திட முனைவீர்! எனக் கேட்டிருந்தால் நிலைமை இவ்வளவு விபரீதமாகப் போயிருக்குமா?

இந்த வழிவகைகளை விடுத்து அரசு, வல்லடி வம்புகளில் அல்லவா ஈடுபட்டது!

தஞ்சைத் தரணியில் எல்லாக் கட்சிகளும் கூடி, அக்டோபர் 15-இல் முழு அடைப்பு நடத்துவதின் மூலம் மத்திய, மாநில அரசுகளின் கவனத்தைக் கவர்ந்து காவிரித் தண்ணீர் பெற்றிட முடிவெடுத்தால் - நண்பர் எம்.ஜி.ஆர். என்ன செய்திருக்க வேண்டும்?

பாருங்கள்! பாருங்கள்! கட்சி வேறுபாடின்றி இந்திரா காங்கிரஸ் உட்பட அனைவரும் தஞ்சைத் தரணியில் ஏற்பட்டுள்ள சிக்கலை ஒருமுகமாகத் தெரிவிக்கிறார்கள். இதனைப் பார்த்தாவது குறுவையையும், சம்பாவையும் பாதுகாத்திடக் காவிரி நீரைத் தந்து உதவிடுங்கள்! 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைக்கும் இதற்கும் முடிச்சுப் போடாமல் தமிழக விவசாயத்திற்குத் துணைபுரியுங்கள்!

- என்று மத்திய அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் தெரிவிப்பதில் அல்லவா தீவிரம் காட்டியிருக்க வேண்டும்?

அதை விடுத்து, ஆகா! நீங்கள் எல்லாம் ஒரு மாவட்டத்தில் அர்த்தால் நடத்துகிறீர்களா? இதோ பாருங்கள், நான் தமிழ்நாடு முழுதும் அர்த்தால் நடத்துகிறேன் என்றல்லவா ஆளுங்கட்சி திடீர் அறிக்கை விடுத்து அரசியல் நடத்த முற்பட்டது! அர்த்தால் வெற்றிகரமான நடந்தது என்று அரசின் தலைமைச் செயலாளர் அல்லவா புளகாங்கிதம் அடைகிறார்! அர்த்தால் அமைதியாக நடந்தது என்று கூட சொல்லவில்லை - வெற்றிகரமாக நடந்தது என்று குதூகலிக்கிறார்!

அனைத்துக் கட்சிகளின் பொறுப்பு, ஆளுங்கட்சிக்கு இடித்துரைப்பது! அதைப் பயன்படுத்திக் கொண்டு ஆவன செய்ய முற்பட வேண்டியது ஆளும் கட்சியின் பொறுப்பு! அதையொட்டித்தான் அனைத்துக்கட்சிகளும் அடக்க ஒடுக்கமாக நிலை விளக்கம் தரும் வண்ணம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் முழுஅடைப்பு என முடிவு எடுத்தன! அதைப் பயன்படுத்திக் கொள்ள அரசுக்கு விவேகம் தேவையே தவிர, வீம்புக்கு ஒரு அர்த்தால் நடத்துகிற வீரமா தேவை!

சரி, அர்த்தாலைத்தான் நடத்தினார்கள் - அதிலும் முழுமை உண்டா? அரசு அலுவலகங்கள் உண்டு! பேருந்துகள் ஓடும்! எல்லாமே இருக்கும்! கடைகள் மட்டுமே மூடப்படும்! அர்த்தாலே அர்த்தம் என்றாகி விட்டது! அதாவது பாதி என்ற பொருளில்!

அந்த அர்த்தாலுக்கு அமைச்சர்கள் கலந்து கொண்ட விளக்கக் கூட்டங்கள் வேறு! அதில் சில அமைச்சர்களுக்கு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் என்றால் என்னவென்றே தெரியாது! அண்டை மாநிலமான கர்நாடகத்தை அந்த அமைச்சர்களில் சிலர் அணுகியமுறை இருக்கிறதே! அபாரம்! அற்புதம்!

சட்டத்துறைக்கும் அமைச்சராக இருக்கும் நண்பர் பொன்னையன் அவர்கள், காவேரிப் பிரச்சினையில் இந்திராவை எதிர்த்துப் பெரிய புரட்சியே வெடிக்கும் என்று சேலத்தில் சங்கநாதமே செய்தார்! ஆனால் பிரதமரைச் சந்திக்க டெல்லி சென்ற எம்.ஜி.ஆர். அவர்கள், புரட்சி வெடிகள் எதையும் வெடிக்கவில்லை. அதற்கு மாறாக நிருபர்கள் அவரைப் பார்த்து, உங்கள் கோரிக்கையை பிரதமர் ஏற்றுக் கொண்டாரா? எனக்கேட்டபோது - உடனே அவர், கோரிக்கை என்பது கடுமையான பதமாக்கும் எனக் கருதிக்கொண்டு, நான் கோரிக்கை வைக்கவில்லை. வேண்டுகோள்தான் விடுத்திருக்கிறேன் என விடையளித்திருக்கிறார்! இந்த அழகில் புரட்சி! கிரட்சி! என்று பொன்னையனைப் போன்றவர்கள் பேசுவானேன்?

இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் கர்நாடக முதல்வர் குண்டுராவ் அவர்கள், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அறிவுரை கூறியிருக்கிறார் உங்கள் அமைச்சர்களின் வாய்களைக் கொஞ்சம் மூடி வையுங்கள் என்று!

அமைச்சர்கள் வாய் மூடுகிறார்களோ இல்லையோ - அந்தோ! மேட்டூர் அணையின் வாய் மூடப்பட்டு விட்டதே! அதுவல்லவா இப்போது முக்கியப் பிரச்சினை!

காவிரி குறித்து தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகக் கர்நாடக முதல்வர் நண்பர் குண்டுராவ் அவர்கள் கூறியிருப்பது - பிரச்சினையைத் திசை திருப்புவதாக இருக்கிறது!

இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தனியொரு கட்சியின் பிரச்சினையல்ல! 1924-ஆம்

ஆண்டு ஒப்பந்த ஷரத்துக்கள் 1974க்குப் பிறகும் எப்படிச் செயல்படுத்தப்பட வேண்டுமென்பதில், அன்றைக்குத் தி.மு.க. ஆட்சி எடுத்த நிலைதான் இன்று வரையில் அ.தி.மு.க. ஆட்சி எடுத்துள்ள நிலையுமாகும்!

அதைப் புரிந்து கொள்ளாமல் - அல்லது புரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லாமல் - அல்லது புரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவல் இல்லாமல் - தி.மு.க. மீது சேற்றை வாரி வீசும் சில அமைச்சர்கள் தமிழகத்திலே உண்டு!

அவர்களுக்கு விளக்கம் அளிக்கும்போது தமிழ் நாட்டின் எதிர்கால மொத்த நலனை நான் மறந்து விடமாட்டேன்!

கடந்த காலத்தில் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு எச்சரிக்கையுடன் கழக அரசு நடந்து கொண்டது என்பதைப் பொறுமையுடன் ஆராய்வது இன்றைய அரசில் உள்ளவர்களின் பெரும் கடமையாகும்!

பழியை யார் மீது போட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்ற போக்கு சரியானதல்ல!

காழ்ப்பு உணர்வை வெளிப்படுத்துவதில் கரிசனம் காட்டி, காரியத்தைக் கெடுத்து விடக்கூடாது!

கடந்த காலங்களில் காவிரி சம்பந்தமாகக் கழக அரசு, யார் யாருடன் கலந்து பேசியது - யார் யாரை அணுகி ஆலோசனை கேட்டு அறிவுரைகளைப் பெற்றது - அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் எப்படி நடைபெற்றது - இதுபோன்ற பலவற்றை இன்றுள்ள அரசு, தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவையனைத்தும் ஒப்பந்தம் பற்றிய விவாதம் வரும்போது தேவைப்படுபவை!

ஆனால், இன்றைய அவசரத் தேவை தஞ்சை, திருச்சி வட்டாரங்களின் வயல்கள் காயாமல் - பயிர்கள் வாடாமல் - பாதுகாக்கும் செயல் அல்லவா?

தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கும் இந்தத் துரைத்தனம், அந்த வாலையாவது வழுக்காமல் பிடிக்குமா? இதுதான் இன்றுள்ள கேள்வி!

அன்புள்ள,

மு. க. (21-10-1982)

1055. கடலைக் குடிப்பவன் கதை!

உடன்பிறப்பே,

ஒரு பொதுக்கூட்டத்தின் மத்தியில் நின்று அவன் தோள் தட்டி ஆர்ப்பரித்தான். மீசையை முறுக்கியவாறு எகிறிக் குதித்தான். நான் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்! நடக்குமா? இவனால் நடத்த முடியுமா? என்றுதான் கேட்பீர்கள்! ஏ, அப்பா! இவ்வளவு பெரிய கடலை இவனால் எப்படிக் குடிக்க முடியும் என்று அதிசயப்படுவீர்கள்? குடித்துக் காட்டுகிறேன் பாருங்கள்! வயிறு இடந் தருமா? என்று கேட்பீர்கள்! தருகிறதா இல்லையா என்பதைத் பொறுத்திருந்து பாருங்கள்! கடல் நீர் ஒரே உப்பாகக் கரிக்குமே! அதை ஒரு சொட்டு வாயில் ஊற்ற முடியுமா? அப்படியிருக்கும் போது கடலையே எப்படி குடிப்பது? இப்படியெல்லாம் யோசிப்பீர்கள்! எல்லா பிரச்சினைகளையும் என்னிடம் விட்டு விடுங்கள்! அரபிக் கடல், வங்கக் கடல், இந்து மகா சமுத்திரம், அட்லாண்டிக் கடல், இன்னும் எத்தனை கடல்கள் உண்டோ அத்தனையையும் ஒரே மொடக்கில் குடித்துத் தீர்க்கிறேனா, இல்லையா என்பதைப் பார்க்கத்தானே போகிறீர்கள்! - முதலில் இங்கே கூடியிருக்கும் மகாஜனங்களாகிய நீங்கள், இதோ என் எதிரில் வைக்கப்பட்டிருக்கும் உண்டியலில் ஆளுக்கு ஒரு பத்து ரூபாய் கரன்சி நோட்டை காணிக்கையாகச் செலுத்துங்கள்! உண்டியல் நிரம்பியதும் நான் உங்கள் எதிரிலேயே இந்தக் கடலைக் குடித்துக் காட்டுவேன்! இது உறுதி! உண்மை! சத்தியம்!

அவனது அறைகூவல் கேட்டவுடன் அவனைச் சூழ்ந்து நின்றோர் பத்து ரூபாய்க் கரன்சிகளை உண்டியலில் திணிக்கத் தொடங்கினர். நான் முந்தி - நீ முந்தி! என்று போட்டி போட்டுக் கொண்டு காணிக்கை செலுத்தப்பட்டது. அவன் இறுதியான உண்டியலை எல்லோரது முன்னிலையிலும் கொட்டி எண்ணினான். அடடா! என்ன நேர்மை? எவ்வளவு வெளிப்படையாகப் பொதுமக்கள் முன்னிலையிலேயே உண்டியலை எண்ணுகிறான் என வியந்து போற்றினர். மொத்தம் ஐயாயிரத்து நானூறு ரூபாய்

என்று அறிவித்து, அதனைப் பெட்டி ஒன்றில் வைத்து அந்தப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான். என்ன செய்யப் போகிறான்? எப்படிக் கடலைக் குடிக்கப் போகிறான்? என்று அனைவரும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். கையில் பிடித்த பெட்டியுடன் அருகில் இருந்த கோயில் மதிற்சுவரின் மீது ஒரே தாவாகத் தாவினான். குழுமியிருந்ததோர் கை தட்டினர்! கடலைக் குடிக்கப் போகிறான் என்று கண்கொட்டாமல் அவனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். திடீரென்று அவன் அந்தக் கூட்டத்தைப் பார்த்து, எல்லாருக்கும் டாட்டா! வரட்டுமா? என்றான். அதிர்ச்சியடைந்த கூட்டத்தினர், ஏய்! ஏய்! என்ன ஏமாற்றப் பார்க்கிறாய்! கடலைக் குடிப்பதாக சொன்னாயே, முதலில் அதைச் செய்! என முழங்கினர்!

ஓ! அதுவா? இதோ நான் தயார்! ஏழு கடல்களை ஒரே மூச்சில் குடிப்பேன்! உடனே யாராவது ஒருவர் அந்தக் கடல்களையெல்லாம் ஒரு கூஜாவில் அடைத்து என்னிடம் கொண்டு வாருங்கள்! குடிக்கிறேனா, இல்லையா - பாருங்கள்!

- என்று முண்டாவைத் தட்டிக்காட்டினான்!

கடல்களைக் கூஜாவில் அடைப்பதா? அது எப்படி முடியும்?

மக்கள் ஆத்திரத்துடன் கேட்டனர்! அவனும் ஆத்திரத்துடன் பதில் அளித்தான்!

நான்தான் சொன்னேன் என்று நீங்கள் நம்பலாமா? இவ்வளவு பெரிய கடலைக் குடித்தால் வயிறுதான் தாங்குமா? அதுவும் இந்த உப்பு நீரை ஒரு சொட்டு விழுங்கத்தான் முடியுமா?

அதை முதலில் நாங்கள் கேட்டபோது, அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள்! கடலைக் குடிப்பது என் பொறுப்பு! என்று வீராவேசமாகப் பேசினாயே!

இவ்வாறு கேட்டுக் கொண்டே கூட்டம், அவன் நிற்கும் மதிற்சுவரை நோக்கிச் சென்றது!

நீங்கள் ஏமாந்தால் நான் என்ன செய்வது?

- என்று பதில் சொல்லி விட்டு, அவன் மதில் சுவரின் அடுத்த பக்கத்தில் குதித்து யார் கண்ணிலும் படாமல் எங்கேயோ ஒளிந்தோடி மறைந்து விட்டான்.

உடன்பிறப்பே, இந்தக் கதை இப்போது நினைவுக்கு வந்தமைக்கு ஒரு காரணம் உண்டு!

எங்களுக்கு வாக்களித்தால் விவசாயிகள் கடன் பாக்கி ஐநூறு கோடி ரூபாயையும் - ரத்து செய்வோம்! மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், ரிசர்வ் வங்கி ஒப்புக்கொள்ள மறுத்தாலும் - மாநில அரசாங்கமே தனது பொறுப்பில் விவசாயக் கடன்களை ரத்து செய்யும்.

இப்படி வாக்குறுதி வழங்கி வாக்குகளைப் பெற்ற எம்.ஜி.ஆரின் அரசு, இன்றைக்கு நடைபெறுகிறது. அரசின் கூட்டுறவுத்துறை அமைச்சர் இப்போது ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார். அது எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

தேசிய விவசாய மறுநிதி உதவிக் கழகத்திற்குரிய கடன்களைத் திருப்பிச் செலுத்தாவிட்டால், தமிழ்நாடு கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு புதிதாக நிதி வசதிகள் மறுக்கப்படுமென ரிசர்வ் வங்கி எச்சரித்து உள்ளது. எனவே, விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசு மேற்கொண்டு சலுகைகள் வழங்க இயலாது. இதை விவசாயிகள் மனத்திற்கொண்டு அதிகாரிகளுடன் ஒத்துழைத்துத் தங்கள் கடன் பாக்கிகளைத் தீர்த்து விடவேண்டும்.

இதுதான் அமைச்சரின் அறிவிப்பு! கடலைக் குடிக்க முடியுமா - வயிறு தாங்குமா? என்று கேட்ட போது, அது என் பொறுப்பு! நீ உண்டியலை நிரப்பு! என்று சூள் உரைத்தவனைப் போல - எல்லாக் கடனையும் தீர்ப்பது எங்கள் பொறுப்பு! நீ வாக்குச் சீட்டை நிரப்பு! என்றார்கள் இன்றைக்கு ஆண்டு கொண்டிருப்பவர்கள், அன்றைக்குத் தேர்தல் நேரத்தில்!

கடலைக் குடிப்பதாகச் சொன்னவன், கூஜாவில் அடைத்துக் கொண்டு வா! குடிக்கிறேன் எனக் கூறித் தப்பி ஓடினான், கதையில்!

கடலைக் குடித்துத் தீர்ப்பதாகச் சொன்னவனுக்கும் - கடனையெல்லாம் தீர்ப்பதாகச் சொன்னவர்களுக்கும் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா? இல்லை அல்லவா?

அன்புள்ள,

மு. க.

(24-10-1982)

1056. குட்டி கோயபல்ஸ்!

உடன்பிறப்பே,

இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்ற போது, இட்லரின் தளபதிகளில் ஒருவனான கோயபல்ஸ் என்பான், எதிரிப் படைகளில் இன்றைக்கு ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள், நேற்றைக்கு ஒன்றரை லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள் என்று நாள்தோறும் போர்க்கள அறிக்கையைத் தந்து கொண்டேயிருப்பான். இட்லர், முசோலினியின் படைகளின் தாக்குதலால் அமெரிக்க நாட்டுப்படைகளும், ரஷ்யநாட்டு படைகளும், பிரிட்டிஷ் பிரஞ்சுப் படைகளும் பெரும் சரிவுக்கு உள்ளாயின என்பதை உலகிற்குச் சொல்லி, உலகத்தை அதிசயத்தில் ஆழ்த்தி, பொய்ச் செய்திகளைப் பரப்பியே வெற்றிகளைப் பெற வேண்டும் என்று திட்டமிட்டுப் புளுகிய தீராதி தீரன் அந்தக் கோயபல்ஸ்! ஒவ்வொரு நாளும் அவன் கணக்குப்படி போரில் கொல்லப்பட்டதாக அறிவித்த எண்ணிக்கையைக் கூட்டிப் பார்த்தால் அமெரிக்கப் படையிலோ, ரஷ்யப் படையிலோ, பிரிட்டிஷ் பிரஞ்சுப் படையிலோ ஒரு வீரர்கூட உயிரோடு இருக்க முடியாது! படைகளில் என்ன? ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் மக்கள் தொகையே கூடப் பூண்டற்றுப் போயிருக்கும்! அமெரிக்காவையும், பிரிட்டனையும் அதிர்ச்சியுறச் செய்து, ரஷ்யாவில் மாஸ்கோ வரையிலே பிரவேசித்து விட்ட நாஜிகளின் ஆரம்ப கட்ட வெற்றிகளையெல்லாம் தூள்தூளாக்கி, நேச நாடுகள் இறுதி வெற்றியினை ஈட்டியபோதுதான், கோயபல்ஸ்சின் பொய் அறிக்கைகளின் போலித்தனங்கள் தோலுரிக்கப்பட்டன. போரில் கொல்லப்பட்டதாக அவன் ஒவ்வொரு நாளும் அறிவித்த வீரர்களின் கணக்கு வெறும் வாய்ச்சவடால் என்று தெளிவாயிற்று! கறுப்பு நிறமாக வாந்தி எடுத்தான் என்பதை காக்கை நிறமாக வாந்தி எடுத்தான் எனக்கூறி, கடைசியாக அந்தச் செய்தியைக் காக்கை காக்கைகளாக வாந்தி எடுத்தான் என்று பூதாகரமாகப் புளுகி வைக்கிற புரட்டர்கள் நாட்டில் உண்டல்லவா?

அதைப்போலத்தான் நேசநாட்டுப் படை வீரர்கள் இருநூறு பேர் களத்தில் மாண்டிருந்தால், அத்துடன் ஒரு சுழியைச் சேர்த்து இரண்டாயிரம் பேர் என்றும், மறுநாள் இன்னொரு சுழியைச் சேர்த்து இருபதாயிரம் பேர் என்றும், அடுத்தநாள் மற்றுமொரு சுழியைச் சேர்த்து இரண்டு லட்சம் பேர் மாண்டனர் என்றும் தனது பொய் வாய் திறந்து புளுகியே தீர்த்து இறுதியில் அவனே யுத்த நெருப்பில் கருகியே போனான்!

அந்தக் கோயபல்ஸ்ஸைத் தோற்கடித்துக் காட்டுகிறேன் பார்! என்று இதோ முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., திடீரென்று ஒரு ஸ்டண்ட் படக் காட்சியை நடத்தியிருக்கிறார்.

ஏறத்தாழ இரண்டரை லட்சம் பேர் உறுப்பினர்களாயுள்ள சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து இரண்டாயிரம் பேர் விலகி வந்து சென்னை கலைவாணர் அரங்கத்தில், எம்.ஜி.ஆரின் கட்சியில் சேர்ந்துவிட்டார்களாம்! அதற்கு ஒரு விழாவாம்! அதில் முதலமைச்சர் கலந்து கொண்டு அந்த இரண்டாயிரம் பேருக்கும் மாலை அணிவித்துக் கை குலுக்கினாராம்! முதல்வரின் சொற்பொழிவு வேறு! அதிலும் வழக்கம்போல் பொய்கள் - புளுகு மூட்டைகள்!

தமிழகத்தில் தண்ணீர் இல்லாமல் தவிக்கும் பிரச்சினை - குமுறிக் கொண்டிருக்கும் அரசு அலுவலர் பிரச்சினை - கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர் பிரச்சினை - எந்த நேரத்தில் வெடிக்குமோ என்ற நிலையில் இருக்கும் தொழிலாளர் கிளர்ச்சிப் பிரச்சினை - அத்தனை பிரச்சினைகளுக்கும் எம்.ஜி.ஆர். தனது கலைவாணர் அரங்கத்துச் சொற்பொழிவின் மூலம் தீர்வு கண்டுவிட்டார். திசை திருப்பும் கலையின் மூலமே தமிழ்நாட்டு மக்களை நீண்ட நாளைக்கு ஏமாற்றி வாழ்ந்து விடலாம் என அவர் எண்ணியிருப்பது அவரது கலைவாணர் அரங்குப் பேச்சின் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது!

உடன்பிறப்பே, இரண்டாயிரம் பேர் சேர்ந்தார்களாம் - அவரது கட்சிப் பத்திரிகையே செய்தி வெளியிட்டிருக்கிறது. படித்துப் பார்!

இந்த இணைப்புவிழா, கலைவாணர் அரங்கில் நடந்தது. காலை 11.30 மணிக்கு விழா மேடைக்கு வந்த புரட்சித் தலைவர், 12.35 மணி வரையில் கழகத்தில் இணைந்த தோழர்களுக்கு மாலை அணிவித்துக் கைகுலுக்கி வாழ்த்தினார்.

இது எம்.ஜி.ஆரின் கட்சிப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி! சென்னை மாலைமுரசு எப்படி செய்தி வெளியிட்டிருக்கிறது பார்!

கட்சி மாறும் தொண்டர்கள் எம்.ஜி.ஆருக்கு மாலை அணிவித்தனர். பின்பு அவர் முன்னிலையில் அ.தி.மு.க. உறுப்பினர் பாரத்தில் கையெழுத்திட்டனர். இது முடிய ஏறத்தாழ ஒரு மணி நேரம் ஆனது.

இந்த இரண்டு செய்திகளின்படி இணைப்பு நிகழ்ச்சிக்கு ஒரு மணி நேரம் பிடித்திருக்கிறது.

ஒவ்வொருவரும் பாரத்தில் கையெழுத்திட - தலைவருக்கு மாலை அணிவிக்க - அல்லது தலைவர், அவர்களுக்கு மாலை அணிவிக்க - செலவான நேரம் ஒரு மணிதான்!

சேர்ந்ததாகச் சொல்லப்படுகிற உறுப்பினர் கணக்கோ, இரண்டாயிரம் பேர்!

கலைவாணர் அரங்கில் மொத்தமுள்ள இருக்கைகள் ஆயிரத்து சொச்சம்தான்! அதில் இரண்டாயிரம் பேர் நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள் என வைத்துக் கொள்ளலாம்! அவர்களைத் தவிர சென்னை மாவட்டத்தின் எம்.ஜி.ஆர். கட்சித் தொண்டர்கள், எம்.ஜி.ஆர். ரசிகமன்ற உறுப்பினர்கள் வேறு அந்த அரங்கில்தான் இருந்திருக்க வேண்டும்! அரங்கின் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த ஆளில் இருந்து கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த ஆட்கள் வரையில் ஒவ்வொருவர் பெயரும் அழைக்கப்பட்டு, அவர்கள் எழுந்து வந்து எம்.ஜி.ஆருக்கு மாலை அணிவித்து, அவர்களுக்கு எம்.ஜி.ஆர். மாலை அணிவித்து, கை குலுக்கி, அவர் எதிரிலேயே உறுப்பினர் பாரத்திலும் கையெழுத்திட, குறைந்தபட்சம் ஒவ்வொருவருக்கும் சராசரி அரைக்கால் நிமிஷம் என்று வைத்துப் பார்த்தாலும் இரண்டாயிரம் பேருக்கு இருநூற்றி ஐம்பது நிமிஷங்கள் (அதாவது நான்கு மணி நேரத்திற்கு மேல்) ஆகியிருக்க வேண்டும்!

மாலை அணிவிப்பது - கை குலுக்குவது - குழந்தைக்குப் பெயரிடுவது - உறுப்பினர் தாளில் கையெழுத்திடுவது - இத்தனையும் நடைபெற அரைக்கால் நிமிஷம் போதாது என்றாலும்கூட, அந்தக் கணக்கின்படியே நாலு மணி நேரம் ஆக

வேண்டிய நிகழ்ச்சி ஒரு மணி நேரத்தில் நடந்ததாகச் சொல்லி இரண்டாயிரம் பேர் இணைந்ததாகக் கூறுவது, எம்.ஜி.ஆருக்கு குட்டி கோயபல்ஸ் என்ற விருது வழங்க மட்டுமே பயன்படும்!

அ.தி.மு.க. கட்சிக்கு சென்னை மாவட்டச் செயலாளர் ஒருவர் இருக்கிறார். அந்தக் கட்சிக்குப் பொதுச் செயலாளர் ஒருவர் இருக்கிறார். அவர்கள் இருவரும் கலந்து கொள்ளாமலே இப்படி ஒரு பெரிய (?) மகத்தான (?) மாபெரும் (?) நிகழ்ச்சியை, திடீர்ப் பிள்ளையார் முளைத்ததுபோல திடீர் நிகழ்ச்சியாக நடத்திய திடீர் மர்மம் என்ன?

தி.மு.க. என்ற முத்திரை குத்தப்பட்டு, நூறு அல்லது இருநூறு எத்தர்கள் தயாரிக்கப்பட்டு - அந்த எத்தர்களும் எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்தே தயாரிக்கப்பட்டு - இரண்டாயிரம் என்ற ஒரு நாடகத்தைக் கலைவாணர் அரங்கில் எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்திக் காட்டியதோடு - அவர், தி.மு.க.வில் இருந்து ஏன் தூக்கியெறியப்பட்டார் என்ற ஒரு காரணத்தையும் கற்பனையலங்காரம் செய்து காட்டியிருக்கிறார்!

எந்தவொரு கட்சியையும் காட்டிக் கொடுக்க - கட்டுப்பாடு மீறி நடந்து கொள்கிறவர்கள் எவ்வளவு பெரிய கொம்பர்களாக இருந்தாலும் அவர்கள் தூக்கி எறியப்படுவார்கள் என்ற கருத்தை, அன்றைக்கு (1972-இல்) மேடைதோறும் முழங்கிய நாவலர் போன்றவர்கள் இன்றைக்கு எம்.ஜி.ஆரிடம் இருக்கலாம்!

ஆனால் அந்த நாவலர் அவர்கள், எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கையெடுத்து அவர் கைப்படவே எழுதி வெளியிட்ட அறிக்கைகள் இன்னமும் உயிரோடுதான் இருக்கின்றன!

ஆருயிர் உடன்பிறப்பே, அந்தக் கடந்த கால நிகழ்ச்சிகளையெல்லாம் நான் உனக்கு மீண்டும் நினைவூட்டத் தேவையில்லை!

கழகத் தொண்டர்களுக்கும் எனக்கும் இடையிலே கலகமூட்டும் மிகக் கீழ்த்தரமான நிலைமைக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் இறங்கி, கழக உடன்பிறப்பே! உன்னை நான் அகம்பாவமும், கர்வமும் கொண்டவன் என்று தர்மபுரிக் கூட்டத்தில் கூறியதாக ஒரு இழிதகை உரையைக் கலைவாணர் அரங்கில் ஆற்றியிருக்கிறார்! நான் அப்படிப் பேசியதாக நிரூபிக்கத் தயாரா?

டேப் ரிகார்டரைப் போட்டுக் கேட்கலாமா? என அவரைக் கேட்டால், முன்பு திருநெல்வேலியில் பேசிவிட்டு இல்லை என்று மண்டியிட்டாரே அதைப்போலவும் - சட்டசபையில் அன்பரசு எம்.பி. பற்றிப் பேசிவிட்டு, டேப்பையும் காட்டிவிட்டு - அதைப் போட்டுக் காட்டுங்கள் எனக் கேட்டதும், பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடினாரே! அதைப்போலவும் - இப்போதும் அவர் ஓடுவார்!

இந்தக் குட்டிக் கோயபல்ஸ்ஸிடம் வேறென்ன எதிர்பார்க்க முடியும்?

அன்புள்ள,

மு. க.

(26-10-1982)

1057. பூவரசு மரத்துக் கிளிகள்!

உடன்பிறப்பே,

ஆளுங்கட்சியின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிப்பது.

ஆளுங்கட்சி, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததை அம்பலப்படுத்துவது.

ஆளுங்கட்சியினரால் ஏற்படும் அல்லலை, அவதியை எடுத்துக்காட்டுவது.

ஆளுங்கட்சியின் சட்டதிட்டங்களும், நிர்வாக முறைகளும் ஏழைகளை எவ்விதத்தில் கெடுக்கிறது என்பதை எடுத்துரைப்பது.

ஆளுங்கட்சி, என்னென்ன விதமான இதமளிக்கும் சட்டம் செய்திருக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டுவது.

உரிமையையும், உடமையையும் பறி கொடுக்கும் போக்கில் ஆளும் கட்சி நடந்து கொள்ளும்போது கண்டிப்பது, எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துவது.

இவை போன்றவைதாம், எதிர்க்கட்சிகளுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள் என்று நான் படித்த - அதிக அளவு படிக்கவில்லை, ஆனால் படித்த வரையில், கவனத்துடன் படித்திருக்கிறேன் - அரசியல் விளக்க ஏடுகளில் காணப்படுகின்றன.

இப்படி அடக்கத்துடன் அண்ணா அவர்கள், 1956-இல் ''அறைகூவல் விடுக்கிறார் அமைச்சர்'' என்ற தலைப்பில் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ள எதிர்க்கட்சிக்குரிய பணிகளில் ஆளுங்கட்சியைக் கண்டிப்பது பாபமன்றோ - கிளர்ச்சிகள் நடத்துவது அதர்மத்தின்பாற்பட்ட வயிற்றெரிச்சல் செயல் என்றோ கூறிடவில்லை!

கண்டிப்பதும் - எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துவதும் எதிர்க்கட்சிக்குரிய கடமையென்றே அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். ஆம்! அழியாத எழுத்தோவியமாகத் தீட்டியிருக்கிறார்.

அண்ணா பெயரால் கட்சியை மட்டும் வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சிகளையும் - அல்லது ஆட்சியைக் கண்டித்தோ, எதிர்த்தோ கிளர்ச்சி நடத்துகிறவர்களையும், பாய்ந்து விழுந்து மோதி - பற்கள் கொண்டு கடித்து - பயங்கர நகங்கொண்டு கீறி - அழித்து ஒழித்துவிடலாமென்று இன்றைய ஆட்சியாளர்கள் கருதுவது எத்துணை முரண்பட்ட போக்கு என்பதை அவர்களே உணர்ந்து பார்ப்பது நல்லது.

கிளர்ச்சிகளில் வன்முறையாளர்கள் நுழைவதும், சட்டம் ஒழுங்கு அமைதிக்கு குந்தகம் ஏற்படக்கூடியச் சூழல் உருவாகிடுவதும், காவல் துறையினர் அதன் மீது நடவடிக்கை மேற்கொள்வதும் - உத்தமர் காந்தியடிகளே ஆட்சிப் பொறுப்பின் தலைவராக இருந்தால்கூட தவிர்க்க முடியாதவைகள்தான் என்பது கடந்த கால - நிகழ் கால அனுபவங்கள்தான்!

ஆனால், மாநிலத்தில் தோன்றும் எந்தவொரு பிரச்சினையையும் அணுக வேண்டிய முறைப்படி அணுகாமல், நான் என்ன செய்வேன்? எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்துகின்றன. அதனால் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. அளித்த வாக்குறுதிகளை அமல்படுத்த முடியவில்லை என்று எதிர்க்கட்சிகளை - அதிலும் குறிப்பாக நமது கழகத்தைச் சாடுவதிலேயே தனது பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறார், தமிழக முதல்வர்!

நாம் கண்டித்துக் கேட்பதும், கிளர்ச்சி நடத்துவதும், திட்டங்கள் என்ன ஆயின? தேர்தல் வாக்குறுதிகள் ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதற்குத்தானே! அதையே மறந்துவிட்டு - அல்லது மறைத்து விட்டல்லவா வீண்பழிபோடும் வேலையிலே தீவிரம் காட்டுகிறார் முதல்வர்?

எதிர்க்கட்சிகளின் போராட்டம் இருக்கட்டும் - ஆட்சிச் சக்கரத்தைச் சுழல விட்டுக் கொண்டிருக்கும் அரசு அலுவலர்களின் கோரிக்கை என்னவென்று உரியவர்களைக் கூப்பிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தியதுண்டா?

தஞ்சையில் கருவூலத்துறை ஊழியர்கள் சிலர் மீது எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கையைத் திரும்பப் பெற வேண்டுமென்று அறப் போராட்டம் ஆரம்பமாகி - 1981-இல் நடந்த பேச்சுவார்த்தையின் தொடர்பாக மீண்டும் பத்து நாட்களில் அழைத்துப் பேசுவதாக அளிக்கப்பட்ட உறுதி காற்றில் பறந்து போனதைச் சுட்டிக்காட்டி - தங்களது கோரிக்கைகளை முன்வைத்து அறப்போராட்டத்தைத் தொடர்ந்து சிறைக்கோட்டத்தை நிரப்பினார்கள் அரசு அலுவலர்கள்!

அவர்தம் கோரிக்கைகளில் ஏற்றுக் கொள்ளக்கூடியது - ஏற்றுக்கொள்ள இயலாதது - எவை, எவையென்று அழைத்துப் பேசித் தீர்வு கண்டிருக்கலாம்! ஆனால், திரு. சிவ.இளங்கோ என்றாலே ஒரு அலர்ஜியை வளர்த்துக்கொண்டு, அவரது தலைமையில் இயங்கும் சங்கத்தை விட்டேனா பார்! என்று ஆர்ப்பரிப்பது எம்.ஜி.ஆருக்கு வாடிக்கையாகி விட்டது.

அப்படிப்பட்ட ஒரு மனப்போக்கின் காரணமாகத்தான், போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று சிவ. இளங்கோ அவர்கள் காலையிலே அறிவித்து விட்ட பிறகும் - அந்தச் செய்தியைத் தெரிந்து கொண்டோ, தெரிந்து கொள்ளாமலோ - அன்று மாலையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் முதலமைச்சர் வரிந்து கட்டிக் கொண்டு என்.ஜி.ஓ. நண்பர்களை வம்புக்கு இழுத்திருக்கிறார்.

அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற இயலாமல் நிதியாதாரம் இடிக்கிறது! நிலைமைகள் தடுக்கின்றன! இப்படி இந்தக் கருத்தையும் முதலமைச்சர் கூறுவதற்கு உரிமை படைத்தவர்! அது சரியா தவறா என்பது கூட வேறு பிரச்சினை!

ஆனால் முதல்வர், அத்தகைய அணுகுமுறையை விட்டுவிட்டு - வா! ஒரு கை பார்க்கலாம்! நான் பதவியை ராஜினாமா செய்து விட்டு உன்னோடு மோதத் தயார்! என்று அறைகூவல் விட்டிருப்பது, வேடிக்கையானது மட்டுமல்ல - வேதனையானதுங்கூட!

காலையிலே அறிவிக்கிறார்கள், போராட்டத்தை நிறுத்தி வைப்பதாக! இவர் மாலையிலே மார்தட்டுகிறார், நிறுத்தாதே! நில் பார்க்கலாம் என்னோடு களத்தில்! என்று முழங்கிக்கொண்டு!

தேவைதானா? ஒரு முதலமைச்சர், தனது ஆட்சியில் உள்ள ஊழியர்களைப் பார்த்து - உருத்திர தாண்டவமாடுவது முறைதானா? முதல்வரும் எதிர்ப் போராட்டம் நடத்துவாராம்! மக்களையும் திரட்டி அரசு ஊழியர்களை எதிர்ப்பாராம்! அதற்காகப் பதவியை விட்டும் விலகுவாராம் -

அப்படியே கற்பனை செய்து பார்க்கலாம்! இவர் பதவி விலகுகிறார் - அல்லது சினிமாவில் நடிப்பதற்காக வேறொரு நண்பரை முதல்வராக்கி விட்டு தான் மட்டும் பதவி விலகப் போவதாக 1980-ஆம் ஆண்டு கூறினாரே - அதைப் போலச் செய்கிறார் - ஏதோ ஒரு கட்சி அல்லது அவர் கட்சி ஆட்சியே நடைபெறுகிறது என வைத்துக் கொள்வோம் - என்.ஜி.ஓ. போராட்டம் தொடருகிறது - பதவி விலகிய எம்.ஜி.ஆரும் அவர்களை எதிர்த்துப் படை திரட்டிப் போராட்டம் நடத்துகிறார்! எம்.ஜி.ஆர். கூற்றுப்படி மக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் மோதல்! தகராறு! அமளி! மக்கள் படைக்கு எம்.ஜி.ஆர். தலைவர்! அப்போதிருக்கும் ஆட்சியாளர்கள் என்ன செய்வார்கள்? அமளி நடந்தால் அதில் ஈடுபட்ட இருசாராரில் ஒருசாராரை விட்டுவிட்டு, என்.ஜி.ஓ.வினரை மட்டும் கைது செய்து சிறையில் அடைப்பார்களா? அல்லது அனைவருக்கும் சமமாகச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவார்களா?

இவற்றையெல்லாம் யோசிக்காமல் - எது எதற்குச் சவால் விடுவது என்று புரியாமல் - ஒரு பொறுப்புள்ள பதவியில் இருப்பவர், பொறுப்பற்றுப் பேசுவது முறைதானா என்பதை அவரே ஒரு தடவைக்குப் பல தடவை கேட்டுக்கொள்வது சிலாக்கியமான காரியமாகும்!

ஆட்சி பீடத்திலிருப்போர், தங்களுக்கிருக்கும் அதிகாரத்தை விஷப்பல் என எண்ணிக்கொண்டு, எல்லோரையும் தீண்டித் தீர்த்துக் கட்டி விடலாமெனச் சீறிடக்கூடாது!

தஞ்சைக்கு அருகே கரந்தை எனுமிடத்தில் பூவரசு மரம் ஒன்றில் கிளிகளின் கூடொன்றில் ஒரு நாகம் நுழைந்ததாம்! கிளிகள் நாகத்தை எதிர்த்தனவாம்! நாகம், படமெடுத்துச் சீறி பயமுறுத்திப் பார்த்ததாம்! பலிக்கவில்லையாம்! பச்சைக் கிளிகள் பல இடங்களில் நாகத்தைக் காயப்படுத்தி விட்டனவாம்! இறுதியில் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்ற நிலையில் பூவரசு மரத்தை விட்டு நாகம் இறங்கி ஓடிவிட்டதாம்!

கிளிகள்தானே என்ற அலட்சியம், நாகத்திற்கு! அதனால் பூவரசு மரத்தில் ஏறியது!

இங்கு தமிழரசு மரத்தில் ஏறிக் கொண்டவர், பல லட்சம் அரசு ஊழியர்களைக் கேவலம் கிளிகள் தானே எனக் கருதி எதிர் முரசம் கொட்டுகிறார்!

தஞ்சையில் பூவரசு!

இது தமிழரசு - அவ்வளவுதான் வித்தியாசம்!

அன்புள்ள,

மு. க.

(30-10-1982)

1058. பெரிய மனம் - தோழமை உள்ளம் தேவை!

உடன்பிறப்பே,

நமது கழக அமைப்புக்களுக்கான பொதுத் தேர்தல் - கிளைகள் முதல் தலைமைக் கழகம் வரையில் நடைபெறுவதற்கான நாட்கள் குறிக்கப்பட்டு, பொதுச் செயலாளர் அவர்களால் அறிவிக்கப்பெற்று - அமைப்புச் செயலாளர் அவர்களால் விபரங்கள் வெளியிடப்பட்டவுடன் - கடந்த ஆகஸ்டு திங்கள் 8-8-82, 10-8-82 ஆகிய இரு நாட்களிலும் உனக்கு இரு கடிதங்கள் எழுதியிருந்தேன். அதன் பிறகு சென்னை மாவட்டத்தில் வட்டக் கழக அமைப்புகளின் தேர்தல்களும், மற்ற மாவட்டங்களில் கிளைக் கழக அமைப்புகளின் தேர்தல்களும் நடைபெற்று முடிந்துள்ளன. அடுத்துப் பேரூர்க் கழகத் தேர்தல்களும், சென்னையில் பகுதிக் கழகத் தேர்தல்களும் நடத்திடத் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கடுத்து ஒன்றியக் கழகம், மாவட்டக் கழகம், பொதுக்குழு, தலைமைச் செயற்குழு, தலைமைக் கழகம் இவற்றுக்கான தேர்தல்கள் முறைப்படி நாட்கள் குறிக்கப்பட்டு எல்லாமே ஓரிரண்டு திங்களுக்குள் நிறைவுற இருக்கிறது.

ஆகஸ்டு திங்களில் நான் எழுதிய இரண்டு கடிதங்களில் குறிப்பிட்டுள்ளவற்றில் முக்கியமான சில பகுதிகளை மீண்டும் உன் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். அமைப்புகளின் தேர்தல் வேலை மும்முரத்தில் படிக்காமல் இருந்துவிடாதே!

கழக அமைப்புகளின் தேர்தல் குறித்தும், கழகத்தினரிடையே வளர வேண்டிய தோழமை குறித்தும், சிற்சில இடங்களில் தோழமை உணர்வில் முறிவு ஏற்படுமாயின், அதனை மேலும் பெரிதாக்கி ஆதாயம் தேட முனையாமல், இருசாராரையும் அரவணைத்து ஒன்றுபடுத்துகிற பெரும் உள்ளத்தைக் கழகத்தில் உண்மையான ஆர்வங் கொண்டோர் பெற வேண்டும்

என்பது குறித்தும் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில், தம்பிக்கு எழுதிய மடலில் கூறியிருந்த அறிவுரைகளை நான் அந்தக் கடிதங்களில் சுட்டிக் காட்டியிருந்தேன். இதோ அண்ணா எழுதுகிறார் பார்!

தம்பி! தேர்தல் என்னும் முறையே இன்றி, ஒரு இயக்கத்தின் தலைவர் பார்த்து வைத்ததுதான் சட்டம் என்றில்லாமல், நாமோ சிற்றூர் கிளைக் கழகம் வரையிலே தேர்தல் முறை வைத்திருக்கிறோம். தேர்தல் என்றால், போட்டி - கட்சி சேர்த்தல் என்பதுதான் உடனடிப் பொருள்! எனவே தேர்தலின் காரணமாக, சிறுசிறு சச்சரவுகள் எழத்தான் செய்யும். இந்தச் சச்சரவும் தேர்தல் முறைகேடுகளும் நம்முடைய கழகத்திலே மிக மிகக் குறைந்த அளவிலேதானிருக்கின்றன. வேறு அமைப்புகளுடன் ஒப்பிடும்போது - இங்கு மிகவும் குறைவுதான் என்பதால் நமக்குள்ளாகத் தேர்தல் தகராறு எழுவது சரிதான் என்று வாதாடுவதாகப் பொருள் அல்ல! ஏனெனில், நமது கழகத்தில் காணக்கிடைக்கும் மாண்பினை மாற்றார் போற்ற மாட்டார்கள். ஆனால் ஒரு சிறு தகராறு தெரிந்தாலும் போதும்! சுட்டிக் காட்டிச் சிரிப்பார்கள். தேர்தல் காரணமாகச் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டாலும், தாங்கிக் கொள்ளும் பெரிய மனமும், மீண்டும் ஒன்றுபட்டுப் பணியாற்றும் தோழமை உள்ளமும் வேண்டும். கழகத்திற்குள் தவறான எண்ணம், மனச்சங்கடம் ஆகியவற்றின் காரணமாக எழும் சிக்கலைத் தீர்க்கும் திறம் இல்லாமற் போய் விட்டால் பிறகு, எங்ஙனம் பொதுமக்களை அணுகி, அவர்களின் சந்தேகங்களைப் போக்கி, அவர்களை இயக்கத்தில் கொண்டு வந்து சேர்ப்பது?

உடன்பிறப்பே, 'பெரிய மனம் - தோழமை உள்ளம்' அந்த இரண்டு சொற்களையும் எவ்வளவு உணர்ச்சியோடும், உருக்கத்தோடும் அண்ணா கையாண்டிருக்கிறார்! கண்டனையா?

சிறு மனத்தாங்கல் ஏற்பட்டாலும், தாங்கிக் கொள்ளும் பெரிய உள்ளம் தேவை என்கிறார். கழக அமைப்புத் தேர்தல் விளைவாக ஏற்படும் மனத்தாங்கலை மறந்து, மீண்டும் ஒன்றுபட்டுப் பணியாற்றும் தோழமை உள்ளம் வேண்டுமென்கிறார். இந்த இரண்டு சொற்றொடர்களையும் படித்துச் சுவைத்தால் மட்டும்

போதாது - செயல் வடிவில் காட்டி அண்ணாவின் ஆசையை நிறைவேற்றுகிறவர்கள்தான் - தாங்களும் வளர்ந்து, கழகத்தையும் வளர்க்கிற ஆற்றலைப் பெற முடியும்!

மனத்தில் மூண்ட தாங்கல் - தாக்குதலாக மாறி - தோழமை உள்ளத்திற்குப் பதிலாகத் தோண்டப்பட்ட பள்ளமாக ஆகி விடுமேயானால் - அத்தகைய இதயம் படைத்தோர் கழகத்தின் கரத்திற்கான படைக்கலனாக இல்லாமல், கழக வளர்ச்சியின் தடைக்கல்லாகவே இருந்திடுவர் - இதனைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திடத்தான் அண்ணன் அன்றைக்கே தீட்டியுள்ளார் திராவிட நாடு இதழில் கடிதம்!

அந்தக் கருத்தினை மையமாக வைத்து ஆகஸ்டு திங்களில் நான் எழுதிய கடிதத்தின் பிறிதொரு பகுதியையும் உனக்குத் திரும்பவும் இந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அது இதோ!

தங்களது உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்துக் கொண்டவர்களும் - புதிதாக உறுப்பினர்களாகச் சேர்ந்திருப்பவர்களுமான இருபது லட்சத்திற்கு மேற்பட்ட கழக உறுப்பினர்கள், இந்த அடிப்படை அமைப்புகளின் தேர்தல்களில் கலந்து கொள்கிறார்கள் என்பதையும் - இந்த இருபது லட்சம் பேர் என்ற எண்ணிக்கை, கழக அமைப்புகளுக்காக நடைபெற்ற கடந்த ஆறு பொதுத்தேர்தலில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை விட அதிகம் என்பதையும் அறிந்திடும்போது அகம் மிக மகிழ்கிறேன்.

அமைப்புகளின் நிர்வாகப் பொறுப்புகளுக்காக வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வோர் - ஏதோ தங்களுக்கும் ஒரு பதவியிருக்கட்டும் என்பதற்காகவோ - தங்களது கடிதமெழுதும் தாள் முகப்பில் அந்தப் பொறுப்பின் பெயரைப் பொறித்துக் கொள்வதற்காகவோ - தேர்தல்களில் போட்டியிட முனையாமல், இனமானம் காத்து, மொழியுரிமை போற்றி, சமத்துவ, சமதர்மச் சமுதாயம் உருவாக்கிடக் களத்தில் நிற்கும் சிப்பாய்களுக்கான ஒரு பாசறையில் எந்தவிதச் சோதனைகளுக்கும் அஞ்சிடாமல் - எதேச்சதிகார ஆட்சியினரின் அடக்குமுறையால் மனம் குலைந்திடாமல் - ஆதிக்கச் சக்திகளின் எல்லா வகையான

எதிர்ப்புகளுக்கும் ஈடுகொடுக்கக்கூடிய எஃகு உள்ளம் படைத்த போர்வீரர்களாகவும் - தளகர்த்தர்களாகவும் பணியாற்றுவோம் என்ற உறுதியினைப் பெற்றிருப்பவர்களாக இருந்திடல் வேண்டும்!

நமது உயிரனைய தலைவர் அண்ணா அவர்களின் தலைமையில், பதினெட்டு ஆண்டுக் காலம் களங்கள் பல கண்ட இயக்கம் நமது கழகப் பேரியக்கம்!

இந்தி எதிர்ப்புப் போர் - விலைவாசி உயர்வுக் கண்டனப் போராட்டம் - அரசியல் சட்டப் பிரிவைக் கொளுத்தும் கிளர்ச்சி - நேருவுக்குக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் - மத்திய அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி - தேவிகுளம் பீர்மேடு பறிபோன போது மாநில அரசை எதிர்த்துப் போராட்டம் - ராஜாஜியின் குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம் - கல்லக்குடிப் போராட்டம் - நங்கவரம் விவசாயிகள் போராட்டம் - தஞ்சை எஸ்.எம்.டி. பஸ் தொழிலாளர் போராட்டம் - குடியரசு நாளில் கறுப்புக் கொடி கட்டித் துக்கநாள் என அறிவித்து இந்தித் திணிப்பை எதிர்த்த போராட்டம் - இவையும் இன்னும் பலவுமான போராட்டங்களை அண்ணா தலைமையில் இருந்த கழகம் நடத்தியபோது சிறை புகுந்தோர் - தியாகங்கள் புரிந்தோர் - அடக்குமுறைகளை ஏற்றோர் - இடையில் ஒன்பது ஆண்டுக்காலம் நடைபெற்ற கழக ஆட்சியை இளைப்பாறுதற்குரிய நிழல் என்று கருதியவர்களே தவிர - அந்த நிழல் அகன்றால், நிழல் தந்த மரத்தையே வெட்டி எறிவேன் என்ற வீணர்கள் அல்ல! ஒரு சிலர் வெட்ட முயன்றனர்! கைதான் வலியெடுத்ததே தவிர - அவர்கள் கருதியது நிறைவேறவில்லை! நிழலுக்காகச் சத்திரம் சாவடியைத் தேடிப் போய் விட்டனர்!

நிழலில்லாவிடினும், நமது நீண்ட பெரும் இலட்சியப் பயணம் நடைபெற்றே ஆகவேண்டுமென்று - பெரியாரும் அண்ணாவும் போதித்த இனமானக் கொள்கையாளர்களாகவே மிகப்பெரும் பகுதியினர், கழகப் படை வரிசையில் அணிவகுத்துக் கொண்டிருக்கின்றனர். திறமையும், தியாகமும், உண்மையும், உழைப்பும் மதிக்கப்படும் பாடிவீடு திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை மாற்று முகாம்களில் இருக்கும் அரசியல் தெளிவு படைத்தவர்கள் பல நேரங்களில் பாராட்டுவது என் காதில் விழத்தான் செய்கிறது!

ஆருயிர் உடன்பிறப்பே, அன்று அண்ணன் எழுதியதையும், இரண்டு திங்களுக்கு முன்னர் நான் எழுதியதையும் - திரும்பத் திரும்ப நினைவூட்டுவதற்குக் காரணம், கழகத்தின் கட்டுக்கோப்பான அமைப்புகளின் தேர்தலில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து - உழைப்பினை மதித்து, ஒற்றுமையைப் போற்றிடும் பெரும் உள்ளத்தை நீ பெற்றிருக்கிறாய் என்பதை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகத்தான்!

அன்புள்ள,

மு. க.

(31-10-1982)

1059. தட்டிக் கழிப்பதால் - சுட்டிக் காட்டுகிறோம்!

உடன்பிறப்பே,

உரிய நேரத்தில் பேச்சுவார்த்தையும், சரியான அணுகுமுறையும் இல்லாத காரணத்தால் நெய்வேலிச் சுரங்கத் தொழிலாளர்கள், ஆளுங்கட்சியுட்பட அனைத்துக் கட்சிகளின் சார்புடையவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். நெய்வேலிச் சுரங்கம், மத்திய அரசு நிர்வாகத்திற்குட்பட்டது எனினும், மாநில மின்சாரத் தேவையை ஓரளவு நிறைவு செய்யக்கூடியது என்பதை மனத்திற்கொண்டு மாநில அரசும் தீவிரமான ஆர்வம் காட்டிச் செயல்பட்டிருக்க வேண்டும். அதுவும் முறையாக நடைபெறாத நிலையில், நிர்வாகம், தொழிலாளர்களை மிரட்டியே பணிய வைத்து விடலாமென்று எதிர்பார்ப்பதும், தொழிற் சங்கங்களின் வலிவினைக் குறைத்து விடலாமென்று நம்புவதும் தவறான கணிப்பாகவே முடியும்.

தமிழகத்தில் நெய்வேலிப் பிரச்சினை மட்டுமல்ல, ஆலைத் தொழிலாளர் பிரச்சினை வேறு அலைமோதிக் கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பஸ் தொழிலாளர்களும், போர்க் கொடி உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். மின்வாரியத் தொழிலாளர்களும், தங்களது அதிருப்தியை அறப்போராட்ட வாயிலாக உணர்த்துவோமென அறிவித்துள்ளனர்.

பஸ் தொழிலாளர்களுக்கும், மின் வாரியத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கமே முன்வந்து வலுவில் போனஸ் தொகையும், அ்ந்தன்னியில் சன்மானத் தொகையும் வழங்கியுள்ளது போலவும், அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்வதற்கு மாறாக, அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் போன்ற அறவழி நடவடிக்கைகளில் ஈடுபட முனைவதைப் போலவும் ஒரு தோற்றத்தை உருவாக்கி, பொதுமக்களின்

முன்னால் அந்தத் தொழிலாளர்கள் மீது ஒரு வெறுப்பினை ஏற்படுத்திட அரசு கருதுவது, முற்றிலும் தொழிலாளர் உரிமைக்கு விரோதமான போக்காகும்!

பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும், மின் வாரியத் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்க அமைப்புகள் உள்ளன. அந்த அமைப்புகளின் சார்பில் பிரதிநிதிகள், அமைச்சர்கள் அல்லது அதிகாரிகளுடன் போனஸ் குறித்தும், சன்மானத் தொகை குறித்தும் கோரிக்கைகளை வைத்துப் பேச்சு நடத்தியிருக்கின்றனர். பேச்சு வார்த்தையில் இரு தரப்பினரும் வாதங்களை எடுத்து வைத்து நியாயமாக முடிந்ததைத் தருவதற்கு இசைந்து, அந்தப் பேச்சுவார்த்தையில், ஒரு உடன்பாடு கண்டு அறிவிப்பதை விட்டுவிட்டு - தொழிற்சங்க அமைப்புகளை அலட்சியப்படுத்தும் வகையில், அல்லது வலிவிழக்கச் செய்ய வேண்டுமென்ற நினைவுடன், திடுமென அரசாங்கமே இவ்வளவுதான் போனஸ், இவ்வளவுதான் சன்மானத் தொகையென்று செய்திகளைத் தருவது தொழிலாளர்களிடையே எரிச்சலூட்டும் செயலாகும்!

தொழிலாளர்களின் போனஸ் தொகை குறித்து மின் வாரியம் செய்துள்ள அறிவிப்பு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாகக் கூறி, ஒன்பது தொழிற்சங்கங்களைக் கொண்ட கூட்டுக்குழு, தனது முதற்கட்டப் போராட்டத் திட்டத்தை அறிவித்துள்ளது.

பஸ் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ள போனசும் ஏமாற்றம் தருகிறது என்றும் - தொழிற் சங்கங்களுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண்பதற்குப் பதிலாக அவர்களாகவே இஷ்டத்திற்கு அறிவித்திருப்பது தொழிற்சங்கங்களைச் சிறுமைப்படுத்த அரசு முயலுகிறது என்பதற்குச் சான்றாகும் என்றும் அறிவித்துள்ள பஸ் தொழிலாளர்களின் கூட்டு நடவடிக்கைக் குழு, முதற் கட்டப் போராட்ட முறைகளையும் பிரகடனப்படுத்தியுள்ளது.

நெய்வேலித் தொழிலாளர் பிரச்சினையில் மாநில அரசுக்கும் முக்கியப் பொறுப்பு உண்டு என்பதை மறந்தும்,

பஸ் போக்குவரத்துத் தொழிலாளர், மின்வாரியத் தொழிலாளர் பிரச்சினைகளில் தொழிற்சங்கக் கூட்டுக் குழுக்களைப் புறக்கணித்தும்,

தொழிலாளர்களிடையே மனக்கொதிப்பு மூண்டிடக் காரணமாக நிற்கின்ற இந்த அரசின் போக்கு -

அடுத்த கட்டமாக ஆலை அதிபர்களும், தொழிலாளர்களை அலட்சியப்படுத்திடத் தூண்டுகோலாக அமைந்து விடுமோ என்ற அச்சத்தைத்தான் விளைவிக்கிறது.

அரசு ஊழியரானாலும், ஆலைத் தொழிலாளியானாலும், அரசுச் சார்புடைய நிறுவனங்களின் ஊழியர்களானாலும் - அவர்களுக்கென அரண்களாக அமைந்துள்ள - உரிய முறையான அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி ஆவன செய்திடுவதைத் தனிப்பட்ட கௌரவப் பிரச்சினையாக இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டு - அந்த முயற்சிகளைத் தட்டிக் கழிப்பது, இது ஒரு தொழிலாளர் விரோத அரசு என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

அன்புள்ள,

மு. க.

(01-11-1982)

1060. மதிக்கப்பட வேண்டிய மனித உரிமை!

உடன்பிறப்பே,

கோயில் வழிபாட்டில் நம்பிக்கையற்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், கோயில்களில் அர்ச்சகர்களாக தகுதி பெற்ற அனைத்துச் சாதியினரும் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை எழுப்புவதில் என்ன நியாயம் இருக்க முடியும்? என்று அடிக்கடி அறநிலையத் துறை அமைச்சர் ஒரு கேள்வியைக் கேட்பதும் - அதனை உடனே ஏடுகள் வெளியிட்டு அறநிலையத்துறை அமைச்சரின் ஆற்றலைப் பாராட்டுவதும் வாடிக்கையாகி விட்டிருக்கிறது.

அண்மையில் திருப்பத்தூரில் நிருபர்களிடம் பேசுகையில் இதே கேள்வியைக் கேட்டுள்ள அமைச்சர், இன்னொரு புதிய விளக்கத்தையும் தந்துள்ளார். அர்ச்சகர்களில் தொண்ணூறு சதவிகிதத்தினருக்கு மேல் மிகக் கடுமையான வறுமையில் உழன்று கொண்டிருப்பவர்கள். இந்த நிலையில் அந்த அர்ச்சகர் பதவியை விரும்பி யார் வருவார்கள்? என்பதுதான் அந்தப் புதிய விளக்கம்.

அடிக்கடி எழுப்பும் அவரது முதல் கேள்வியைச் சற்று ஆராய்வோம்!

அந்தக் கேள்விக்கு அவ்வப்போது விடையளிக்கப் பட்டிருக்கிறது என்றாலும்கூட - அமைச்சர் அதனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

சென்னை அண்ணா மேம்பாலத்தருகே பெரியார் சிலையைத் திறந்து வைக்க திரு.ஜெகஜீவன்ராம் அவர்கள் வந்திருந்தபோது, அந்த விழாவில் முதல்வர் எம்.ஜி.ஆரிடம், அன்னை மணியம்மையார் அவர்கள், பெரியாரின் அந்த விருப்பத்தை நிறைவேற்ற வழி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பதில் அளித்த முதல்வர் அவர்கள், கோயிலே வேண்டாமென்ற பெரியார், அங்கே

அர்ச்சகராக யார் இருப்பது என்பது பற்றிக் கூறியிருப்பாரா? என்று ஒரு அதிர்ச்சியான கேள்வியைக் கேட்டார்.

பெரியார், கோயில்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் உரிமை வேண்டுமென்பதற்காக ஒரு பெரிய போராட்டமே நடத்தப் போவதாக அறிவித்து - அது குறித்துத் தமிழக முழுவதும் முழங்கிக் கொண்டிருந்ததையும், அவரது கருத்திற்கு ஏற்பக் கழக அரசு சட்டம் நிறைவேற்றியதையும் - உச்சநீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக அந்தச் சட்டம் முடக்கப்பட்டதையும், அதன் பிறகுகூடப் பெரியார் அவர்கள், அர்ச்சகராகும் உரிமை அனைத்து சாதியினர்க்கும் வேண்டும் என்று உரிமைக்குரலைத் தொடர்ந்து எழுப்பியதையும் - என்ன காரணத்தாலோ முதலமைச்சர் தனது நினைவிற்கொள்ளாமல், மணியம்மையார் வைத்த கோரிக்கையை பெரியார் சிலை திறப்பு விழா மேடையிலேயே கேலிக்குரியதாகச் செய்து விட்டார்.

பெரியாரின் அந்த உரிமைக் கிளர்ச்சியை அன்னை மணியம்மையார் மறைவுக்குப் பிறகும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி அவர்கள், தொடர்ந்து நடத்தியதன் விளைவாகவும் - நமது கழகமும் இணைந்து குரல் கொடுத்ததன் விளைவாகவும் - நீதிபதி மகராசன் குழுவினைத் தமிழக அரசு அமைத்து - அந்தக் குழுவும், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகிடக்கூடிய நிலை உருவாகச் சில யோசனைகளைத் தெரிவித்துள்ளது.

ஆண்டவன் சந்நிதானத்தில் பூசை செய்யத் தகுதியுடை யோரெனத் தேர்வு பெறுவோர் எந்தக் குலத்தினராயினும் அவர்கள் சமமே! என்ற சமத்துவச் சூழலை, ஆண்டவன் வழிபாட்டிலும், ஆலய வழிபாட்டிலும் அக்கறை கொண்ட ஆத்திகப் பெரியவர்கள் எவருமே உருவாக்கிட முன்வராத நேரத்தில் - சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியாரும், அவரைப் பின்பற்றுவோரும்தான் நிலைநாட்டிட முன் வந்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது!

பண்டித நேரு அவர்கள், தன்னையொரு நாத்திகர் என்றுதான் கூறிக் கொண்டார். அவர் எழுதி வைத்த உயிலை அவர் மறைந்த பிறகு படித்துப் பார்த்த இந்த நாடு, அவரது பகுத்தறிவுச் செழுமையை எண்ணி வியந்தது. அதற்காக ஒரு நாத்திகர் பிரதமராக

இருப்பதால் நாட்டில் உள்ள ஆலயங்களையெல்லாம் அகற்றிவிட வேண்டுமென்று அவர் ஏன் சட்டம் கொண்டு வரவில்லையென்று கேட்டால், அது அறிவுடைமையாகாது அல்லவா? நேருவைப் போன்றவர்களும், இன்னும் பல பகுத்தறிவுவாதிகளும், ஆலய வழிபாட்டில் நம்பிக்கையற்றவர்களும் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தபோதுதான் அரிஜனங்களுக்காக ஆலயப் பிரவேசம் என்ற கிளர்ச்சி நாடெங்கும் நடத்தப்பட்டது! எனவே பெரியாரும், அவர் கண்ட சுயமரியாதை இயக்கமும் கோயில் குறித்துக் கொண்டுள்ள கொள்கை வேறாக இருக்கலாம். அந்தக் கோயில்கள் இருக்குமட்டும் அங்கே மனித உரிமைகள் காக்கப்பட வேண்டுமென்ற உணர்வினைக் குறை கூறுவதும், கேலி புரிவதும் - பெரியாருக்கு நினைவுத் தூண்களை எழுப்பும் ஒரு அரசுக்கும், அதன் அமைச்சர்களுக்கும் அழகல்ல!

தமிழில் அர்ச்சனை வேண்டும் என்றால்கூட, அமைச்சர்கள் இதே கேள்வியைத்தான் எழுப்பி, கோயில் தேவையில்லாதவர்களுக்கு எந்தமொழியில் அர்ச்சனை இருந்தால் என்ன? என்று கேட்கிறார்கள்.

மேலவையின் துணைத் தலைவர் நண்பர் புலமைப்பித்தன், தன்னை ஒரு நாத்திகர் என்றும், தீவிர சுயமரியாதைக்காரர் என்றும், பெரியாரின் தொண்டர் என்றும் கூறிக் கொள்பவர். அவர் தமிழ் அர்ச்சனை வேண்டாமென்கிற கடவுள்கள் நாட்டை விட்டே வெளியேறட்டும் என்று பேசுகிறார். அதே கருத்தைத்தான் அர்ச்சகர் விவகாரத்திலும் கொண்டிருக்கிறார். அவரது வேகமான பேச்சுக்கள், விடுதலை இதழிலே பலமுறை வெளி வந்துள்ளன! அவர் ஆளுங்கட்சியின் உறுப்பினர்தான்! ஆலய வழிபாடு தேவையில்லை என்கிற புலமைப்பித்தனுக்கு, ஆலயத்தில் யார் அர்ச்சனை செய்தால் என்ன? என்று அவரைப் பார்த்து அமைச்சர் வினா எழுப்பிவிட்டுப் பிறகு மற்றவர்கள் பக்கம் திரும்பினால் பொருத்தமாக இருக்கும்! அமைச்சரைப் பாராட்டக்கூடச் செய்யலாம்!

நிறைவேற வேண்டும் என எண்ணுகிற குறிக்கோளுக்கும் - அதனை அடைகிற வரையில் இடைக்காலத்தில் எழுப்பப்படுகிற உரிமைக்குரலுக்கும் - உள்ள பொருளை, ஆழமாகச் சிந்தித்தால் உணர்ந்து கொள்ள முடியும்!

அர்ச்சகர் உத்தியோகத்தில் இருப்போர், வறுமையில் வாடுகிறார்கள் என்று அமைச்சரே ஒப்புதல் அளித்துள்ளதன் மூலம் - அவர்களை வறுமையில் இருந்து விடுபடச் செய்து, வளமான வாழ்வு அளித்திட, அரசாங்கம், அறநிலையத்துறையின் வாயிலாக உடனடி முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பது - யாரும் வலியுறுத்தாமலே தெளிவாகிவிட்ட நிலையாகும்!

அர்ச்சகர் வாழ்வை உயர்த்துவது - அர்ச்சகர் பணியில் அனைவர்க்கும் சமத்துவம் வழங்குவது - ஆலய வழிபாடு தேவையா? என்ற கொள்கைக்கு முரண்பாடல்ல! அந்த வழிபாடுகள் இருக்கும் வரையில், மதிக்கப்பட வேண்டிய மனித உரிமைகள்!

அன்புள்ள,

மு. க.

(03-11-1982)

1061. கருடா சுகமா? எனும் காலத்தில்!

உடன்பிறப்பே,

வேலியே பயிரை மேய்வதா? இப்படியொரு பழமொழி! பாலுக்குப் பூனையைக் காவல் வைத்திடும் காலத்தில், வேலிகள், பயிர்களை மேய்வதைப் பற்றிக் கவலைப்பட முடியாதல்லவா?

சட்டம் ஒழுங்கு அமைதியைக் காத்திடும் பொறுப்பை நிறைவேற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, தார்குண்டே போன்ற சட்டமேதைகளை நடுத் தெருவில் நிறுத்தி அடித்திருக்கிறார்கள் போலீசார்! இது, சட்டம் ஒழுங்கைக் காத்திடும் அழகு! நெருக்கடி காலத்திலேகூட தனக்கு இந்த நிலை வரவில்லையென்கிறார் தார்க்குண்டே!

நெருக்கடி காலத்திலே சென்னைச் சிறையில் மிசா கைதிகளாக அடைக்கப்பட்ட அரசியல்வாதிகள் - சித்ரவதை செய்யப்பட்டனர். விசாரணை நடத்திய நீதிபதி இஸ்மாயில் அவர்கள், எந்த அதிகாரியைக் குற்றம் சாட்டியிருந்தாரோ, அந்த அதிகாரிக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது இந்த ஆட்சியிலே என்பது, தார்க்குண்டே அவர்களுக்கு எட்டாத தகவலாக இருக்கக்கூடும்.

எதிர்க்கட்சியினரை அல்லது இந்த அரசுக்கு எதிரான கருத்துக் கொண்டிருப்பவர்களை போலீசார், தாக்குவது - மரியாதைக் குறைவாக நடத்துவது - அலட்சியப்படுத்துவது - அவர்கள் தரும் புகார்களைக் குப்பைத் தொட்டியில் போடுவது! இப்படியும் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆளுங்கட்சியினர் என்னதான் அராஜகம் நடத்தினாலும் - எல்லை கடந்து சட்டத்தை மீறி அமளியில் ஈடுபட்டாலும் அவர்களிடம் மண்டியிட்டு, பல் இளித்து, அடங்கி ஒடுங்கி பணிந்து, தங்களது காக்கி உடையைக் காப்பாற்றிக் கொண்டால் போதுமென்கிற அளவுக்குச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றால் நீதிமன்றம் பிறப்பிக்கும் வாரண்டுகள் கூட அவர்களை நெருங்கப் பயப்படுகின்றன!

பரமசிவன் கழுத்தில் இருந்த பாம்பு, மகா விஷ்ணுவின் வாகனமான கருடனைப் பார்த்து, என்ன கருடா சுகமா? என்று கேட்டதாக ஒரு வேடிக்கைக் கதை உண்டல்லவா? அதைப்போல வாரண்ட் மூலம் தேடப்படுகிற ஆளுங்கட்சியினர், வாரண்டை எடுத்துக் கொண்டு வரும் அதிகாரிகளைப் பார்த்து என்ன கருடா சுகமா? என்று கேட்கிறார்கள்! ஆம், பாம்புகள் கேலி செய்கின்றன! கருடன்கள் கிலி கொள்ளுகின்றன!

கிணத்துக்கடவு போலீஸ் லாக்அப்பில் பூட்டப்பட்டிருந்த தனது உறவினர்களை ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. சென்று பலாத்காரமாக மீட்டுக் கொண்டு வந்தார்! அதிகாரிகள் தடுத்தும் கேட்கவில்லை! அவரைச் சட்டம் நெருங்க முடியவில்லை!

திருவொற்றியூருக்கருகே நடைபெற்ற இரு கொலை வழக்கில், வாரண்டுக்குத் தப்பிய ஆளுங்கட்சியினர், அமைச்சர்களுடன் சேர்ந்து அதே ஊரில் ஒரு திருமண விழாவில் வாழ்த்துரை வழங்கினர். வாரண்ட், அவர்களைத் தொட முடியாமல் நீண்டநாள் தவித்தது.

ஈரோடு நகரில் ஒரு கலவர வழக்கில், நீதிமன்றத்துக்கு வராமலே ஏமாற்றிய ஒரு ஆளுங்கட்சிப் பிரமுகர் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. போலீசார், அவரைத் தேட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஊரிலேயே இருந்தார். இருந்தாலும் அவரை நெருங்க அஞ்சினர். யாருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருந்ததோ அவர் திருமணத்திற்கு முதலமைச்சரே சென்று தலைமையேற்று நடத்திக் கொடுத்தார். வாரண்டுடன் போலீசார் அந்த வாழை மரம் கட்டிய பந்தலையே வட்டமிட்டனர். என்ன செய்ய முடியும்? கருடா சௌக்கியமா? என்று கேட்கிற காலத்தில்!

இதோ மற்றொரு செய்தி - ஆண்டிமடம் தொகுதி ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.யை ஒரு வழக்கு சம்பந்தமாக வாரண்ட் அனுப்பிக் கைது செய்து வருமாறு ஜெயங்கொண்டம் நீதிமன்றம் உத்தரவிட்டு ஓராண்டுக்கு மேலாகியும், போலீசாரால் அந்த உத்தரவை நிறைவேற்ற முடியவில்லை - எப்படி நிறைவேற்ற முடியும்? கருடா சௌக்கியமா? எனக் கேட்கும் காலமாயிற்றே!

இதோ இன்றைக்கு பத்திரிகையில் வந்துள்ள செய்தி -

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் ஒயக்காடு கிராமத்தைச் சேர்ந்த தங்கபாண்டியன் என்பவர், அம்பாசமுத்திரம் நகரத்து ஆளுங்கட்சியின் செயலாளர்! அவர் மீதுள்ள வழக்குத் தொடர்பாக ஒரு வாரண்டு! அதனைக் காட்டி அவரைப் போலீஸ் நிலையத்திற்கு அழைத்தார் அம்பாசமுத்திரம் சப்இன்ஸ்பெக்டர்! அழைக்கலாமா? ஆளுங்கட்சிக்காரர் மீது வாரண்டு என்றால் - ஈரோடு, ஜெயங்கொண்டம் போலீஸ் மாதிரி நடந்து கொள்ளத் தெரிய வேண்டாமா? ஆளுங்கட்சிச் செயலாளர் கடுமையாகத் திட்டிப் போலீஸ் அதிகாரியை அனுப்பி விட்டார்! அவர் போனாலும் விடுவாரா! ஆளுங்கட்சிச் செயலாளர்? போலீஸ் நிலையத்திற்கு அவரே சென்று அங்குள்ளவர்களிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டாராம்! வேறு வழியில்லாமல் அவரைக் கைது செய்து லாக்அப்பில் வைத்து விட்டனர். இதைக் கேள்விப்பட்டதும் அந்தச் செயலாளரின் சகோதரியும், சகோதரியின் கணவரும் கோவில்பட்டியில் குற்றப்பிரிவு சப்இன்ஸ்பெக்டராக பணியாற்றுகிறவருமான சுப்பையா பாண்டியனும் ஒரு பெருங்கோஷ்டியுடன் அம்பாசமுத்திரம் போலீஸ் நிலையத்திற்குப் படையெடுத்து கைது செய்யப்பட்ட தங்கள் உறவினரை - ஆளுங்கட்சிச் செயலாளரை விடுவிக்குமாறு வற்புறுத்தியதோடு, அந்தக் கும்பலே போலீசாரை எதிர்த்துத் தாக்கவும் தொடங்கியிருக்கிறது. போலீசாரை மீறி, ஆளுங்கட்சிச் செயலாளரை மீட்டுக் கொண்டு போக வன்முறையில் இறங்கியபோது - செய்தி கேள்விப்பட்டு ஓடி வந்த அம்பாசமுத்திரம் இன்ஸ்பெக்டர், கோவில்பட்டி சப்இன்ஸ்பெக்டர் சுப்பையா பாண்டியனைக் கைது செய்துள்ளார். அந்த சுப்பையா பாண்டியனை, போலீஸ் சூப்பிரண்டன்ட் ஸஸ்பெண்ட் செய்துள்ளாராம்!

உடன்பிறப்பே, சென்னை தினமணியில் வந்துள்ள செய்தியிது! எப்படியிருக்கிறது பார்த்தாயா? ஆளுங்கட்சிக்காரர்களை வாரண்டுடன் அதிகாரிகள் அணுக முடியவில்லை - அம்பாசமுத்திரம் சப்இன்ஸ்பெக்டர் கொஞ்சம் துணிச்சல்காரர் போலும் - அதோடு நியாயமாகச் செயல்பட எண்ணியிருக்கிறார். ஆனால் கோவில்பட்டி சப்இன்ஸ்பெக்டர் அதை எதிர்த்துக் கோஷ்டியுடன் அல்லவா படை திரட்டி வந்திருக்கிறார்! அந்த சப்இன்ஸ்பெக்டரைக் கைது

செய்த இன்ஸ்பெக்டரும் - சஸ்பெண்ட் செய்த சூப்பிரண்டன்டும் பாராட்டப்பட வேண்டியவர்கள்! பாவம், அவர்களுக்கு இந்த ஆட்சியில் என்ன பரிசு கிடைக்குமோ தெரியாது! ஆனாலும் கருடா சௌக்கியமா? என்று கேட்கிற இந்தக் காலத்தில், அவர்கள் இந்த அளவு தங்களது கடமையைச் செய்தது ஆச்சரியந்தான்!

வாரண்டை ஆளுங்கட்சிக்காரர்களின் பாதங்களில் வைத்து வணங்கித் தொழும் காவல்துறை அதிகாரிகள் மத்தியில் - கடமையாற்றக்கூடிய சிலரும் இருக்கிறார்களே என்பது சற்று ஆறுதல் தரக்கூடிய செய்திதானே!

அன்புள்ள,

மு. க.

(05-11-1982)

1062. பப்பாளிப் பிள்ளையாரும் - பகுத்தறிவும்!

உடன்பிறப்பே,

சேலத்தில் பப்பாளிப் பிள்ளையார் என்று தலைப்பிட்டு, ஒரு செய்தி - தமிழகத்தில் வெளிவரும் மிகப்பெரிய பத்திரிகைகளில் எல்லாம் நவம்பர் இரண்டாம் நாளன்று காணப்பட்டது.

பப்பாளி மரத்தில் இருந்த ஒரு பழம், விநாயகர் முகத்தைப் போல் தோற்றமளித்ததையடுத்து, ஞாயிற்றுக்கிழமையன்று அந்தப் பழம் மரத்திலிருந்து பறிக்கப்பட்டது. இந்த மரம் ஒரு தனியார் தோட்டத்துக்குச் சொந்தமானது. பறிக்கப்பட்ட அந்தப் பப்பாளிப் பிள்ளையாருக்கு, இடைவெளியில்லாமல் தொடர்ந்து பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

இதுதான் அந்தச் செய்தி! விண்வெளி ஆராய்ச்சிகளில் வெளிநாடுகள் போட்டி போட்டுக் கொண்டுள்ள காலம் - சந்திர மண்டலத்தில் மனிதன், காலடியெடுத்து வைத்து விட்டது மாத்திரமல்ல! செவ்வாய் மண்டலம் செல்வது குறித்தும் சிந்தனை செய்து கொண்டிருக்கிறான் விஞ்ஞானி! ஆர்யபட்டா, ரோகிணி, ஆப்பிள் என்ற வரிசையில் விண்கலங்களைப் பறக்கவிடும் முயற்சியிலே இந்தியா கூட ஓரளவு விஞ்ஞானத்துறை வெற்றியினைப் பெற்றிருக்கிறது - இத்தனைக்குமிடையில் மூடநம்பிக்கைகள், தங்கள் முழு வலிவையும் இழந்துவிடாமல் மூச்சுத் திணறிக் கொண்டாவது வாழப் பார்க்கின்றன என்பதையும் அறவே மறுத்து விடுவதற்கில்லை.

அந்தச் செயலுக்குக் சிகரம் வைப்பதைப்போல் அடிக்கடி இதைப்போன்ற பப்பாளிப் பிள்ளையார் செய்திகளைப் பத்திரிகைகளே பரப்பிவிட்டு, பாமரரை மேலும் பாமரராக ஆக்குகின்ற பணியினைச் செய்யும்போதுதான் வேதனை மிகுந்திடுகின்றது.

இத்தகைய செய்திகள், எத்தனை எத்தனையோ! பரங்கிப்பூ, பாம்பைப் போல் படமெடுத்துப் பூத்திருக்கும் - ஆதிசேடன் அவதாரமென்று பக்தர்கள் திரண்டு பூஜித்து மகிழ்வார்கள். செய்தி

வரும்! பின்னர் அந்தப் பூ வாடி உதிரும் - செய்தியும் உதிர்ந்து போய் உருக்குலைந்து விடும்!

இப்போது பப்பாளிப் பழத்தில் பிள்ளையார் முகத்தைக் கண்டார்களாம்! இடைவிடாது பூஜை செய்கிறார்களாம்! பூமியைத் தவிர, வேறு எந்தக் கிரகத்திலாவது மனிதன் வசிக்கிறானா? என்று அறிவாயுதம் ஏந்தி ஆராய்ந்து கொண்டிருக்கிறான் விஞ்ஞான மேதை! இங்கே, பப்பாளிப் பழத்தில் பகவான் இருப்பதை வெகு பாடுபட்டுக் கண்டுபிடித்து, பூஜை நைவேந்தியங்களில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்ற அவலத்தைச் சந்திக்கிறோம். பழம், முதிரும்! குழையும்! நாட்கள் ஓடிட அழுகிடும்! நாற்றம் நாசியைத் துளைத்திடும்! பிறகு அந்தப் பப்பாளிப் பிள்ளையார், இருந்த இடம் தெரியாமல் போய்விடுவார் - இடையிலே அவரைக் காண அழைப்பு! இதுவே இங்கு நீண்ட காலமாக நடைபெற்று வரும் பிழைப்பு!

வரிசை வரிசையாக மகான்கள், மகரிஷிகள் அவதரித்த நாடு - முனிபுங்கவர்கள் தோன்றிய புண்ணியபூமி - இன்னமும் துறவிக்கோல சாமியார்கள், தூய்மை பேசிடும் ஆச்சாரியார்கள், மகந்துகள், ஜீயர்கள், மடாதிபதிகள், காமகோடிகள், சிருங்கேரிகள் என்று உலவிக் கொண்டிருக்கும் தேசம் - எனினும் இங்கேதான் சாக்கடைப் புழுக்களாய் நெளியும் வறுமைச் சக்கரவர்த்திகள், இடுப்பொடிய உழைத்தாலும், இன்பம் என்பது தங்களுக்கு என்றைக்குமே எட்டாத நட்சத்திரமெனக் கருதி எலும்புருவங்களாக அசைந்தாடிக் கொண்டிருக்கின்றனர்!

ஆலயங்கள் ஆயிரக்கணக்கில்! அங்கே ஆண்டவனின் விக்கிரங்கள் லட்சக்கணக்கில்! ஆறு கால பூஜை - அர்த்தஜாமக் கட்டளைகள்!

அத்தனையிலும் திருப்தி அடையாமல், பப்பாளிப் பிள்ளையாரையும் தேடிப் போகிற பாமரத்தனம்! பக்தி என்ற பெயரால் பகுத்தறிவை மாய்த்திடும் கொடுமையை என்னவென்று சொல்வது?

அய்யனே என்கிறான்! அருள்பாலிக்கிறார், தன்னை ஆண்டவன் அவதாரம் என்பவர்! அருள்பாலிக்கும் கையில் இருந்து மாயமாக விபூதி கொட்டுவதாகக் காட்டுகிறார்! பக்தன் பயபக்தியுடன் வாங்கி நெற்றியில் பூசிக்கொண்டு பாதங்களில் விழுந்து வணங்குகிறான்! அதே வித்தையை இன்னும் அபூர்வமாக

ஒரு மாஜிக் நிபுணன் செய்து காட்டுவதையும் காணுகிற பக்தன், என்ன காரணத்தாலோ அந்த விபூதி மனிதரின் காலில் விழுந்து கன்னத்தில் பேட்டுக் கொள்கிறான்!

எத்துணை வல்லமை தமக்கு இருப்பதாகக் கூறிக் கொண்டாலும் - சிவத்தின் அருளால், சக்தியின் கருணையால், எல்லாம் தன்னால் சாதிக்க இயலும் என்று கூறிக் கொண்டாலும், அப்படியொரு தோற்றம் காட்டுபவர்களை - அவர்களுக்கென ஒரு ஆபத்து வரும்போது, அந்த அற்புதச் சித்துக்கள் அவர்களைக் காப்பாற்றுவதில்லை!

இதோ கல்கத்தாவுக்குச் சென்றார். சிருங்கேரி ஆச்சாரிய சுவாமிகள்! பக்திச் சொற்பெருக்கு நிகழ்த்த போடப்பட்ட பந்தல் தீப்பிடித்து எரிந்தது! சிருங்கேரியார் சிரித்தார் - தீ அணைந்தது என்றோ அல்லது கண்ணை உருட்டி விழித்தார் - கனல் தணிந்தது என்றோ செய்தி வரவில்லை! தீயணைக்கும் படையினர் வந்தனர் - தீயை அணைத்தனர் - சிருங்கேரி மடாதிபதி தப்பினார் என்ற நல்ல செய்தி கிடைத்த வரையிலே மகிழ்ச்சிதான்! ஆனால் அந்த நல்ல செய்தியைத் தந்திட, தீயணைக்கும் படையினரல்லவா வர வேண்டியிருக்கிறது! தெய்வங்கள் சில தீயணைக்கும் படையினர் வடிவத்தில் வந்து காப்பாற்றின என்று கூடக் கதை கூறுவர். நம்புவதற்கு நாட்டில் ஏராளமாகவும், தாராளமாகவும் பாமரர்கள் இருப்பதால்!

என் செய்வது - பப்பாளிப் பழத்தை விநாயகர் என விழுந்து கும்பிடும் அறியாமை காய்த்துக் குலுங்குகிற சமுதாயமாகவன்றோ இருக்கிறது!

என்றுதான் திருந்துமோ? எனப் பெருமூச்சுடன் கிளம்பிடும் இந்த வினாவுக்கு விடையளித்திடப் பகுத்தறிவுமிக்க இளைஞர் பட்டாளம் பெருகிடல் வேண்டும்!

பகுத்தறிவற்ற ஒரு சமுதாயத்தை வேறு வகையில் வளப்படுத்துவது என்பது - பட்ட மரத்தைத் துளிர்க்கச் செய்யும் முயற்சி போன்றதேயாகும்!

அன்புள்ள,

மு. க.

(09-11-1982)

1063. கொடுத்துப் பறிக்கும் கொற்றவன்!

உடன்பிறப்பே,

ஒரு மன்னனைக் காணலாம் வா! மணம் பல கலந்து மந்தமாருதம் தவழ்ந்திடும் அம்சதூளிகா மஞ்சத்தில் அல்ல! மக்களின் குறை கேட்டு அவற்றைப் போக்கிட ஆணை வழங்கிடும் கொலு மண்டபத்தில்தான் அந்த மன்னனைக் காண உன்னை அழைத்திடுகின்றேன்! தகதகவென ஒளிவீசும் தங்கச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான் பார்! அதில் அமர்ந்துதான் அவன் தர்பார் நடத்துவது வழக்கம்! இருபுறமும் ராஜப் பிரதானியர் வீற்றிருக்கின்றனர் - கொலுமண்டபத்தில் ஒரு பெருங்கூட்டம்! அணிகலன்கள் பூண்டவர்கள் அல்ல - அழுக்கையே தங்கள் ஆடைகளின் ஜரிகைப் பூக்களாகக் கொண்டு அவற்றை உடுத்தியிருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர்! அவர்களது முறையீடு என்ன? ஆண்டு முழுவதும் கடமை தவறாது உழைக்கிறோம்! கடல்அனையது எமது உழைப்பு! கடுகனையது அதற்கு தரப்படும் சன்மானம்! அதனை உயர்த்தித் தருமாறு கோருகிறோம் கொற்றவனே! எனக் கூறுகின்றனர்! அரசன் என்ன பதில் சொல்கிறான் கேள்! அடடா, என்ன கனிவு அந்தப் பதிலில்!

அமைச்சரே! இந்தப் பாட்டாளிகள் ஒவ்வொருவருக்கும் - நமது அரசின் பரிசாக நூறு பவுன்களைக் கொடுத்தனுப்புக!

கூக்குரலிட்டுக் குறை கூறிட வந்த கூட்டம் குதூகலத்தில் ஆழ்ந்தது! வாழ்க மன்னன்! எனும் வாழ்த்தொலி வானைப் பிளந்தது. அரசனின் ஆணையை அமைச்சர் நிறைவேற்றினார் அக்கணமே! ஆளுக்கு நூறு பவுன் பரிசு பெற்றவர்கள் அரசனைத் தொழுது ஏத்தி விடை பெற்றுப் புறப்பட்டனர். அவர்கள்

மண்டபத்தை விட்டுச் சென்றவுடன் வேந்தன், அமைச்சரை நோக்கி - அடுத்த நடவடிக்கை தொடரட்டும் என்கிறான். அப்படியே அரசே! என்றுரைத்து விட்டு அமைச்சர், இத்துடன் இன்றைய அவை முடிவுறுகிறது என்கிறார்.

அவை முடிவு பெறுவதா - அடுத்த நடவடிக்கை? உடன்பிறப்பே! கேட்கத் தோன்றும் உனக்கு!

அடுத்த நடவடிக்கை என்ன என்பதை நீ பார்க்கத்தானே போகிறாய்?

இருள் சூழ்ந்த பாதையொன்று! பரிசு பெற்றுப் பரவசமுடன் அந்தக் கூட்டம் போய்க் கொண்டிருக்கிறது! பாதையின் இருபுறமும் பாறைகள்! அடர்ந்த புதர்கள்! அந்தப் பாறைகளில் இருந்தும், புதர்களில் இருந்தும் பயங்கர உடை அணிந்து, பட்டாக்கத்திகளைச் சுழற்றிய வண்ணம் முகமூடியணிந்த கொள்ளைக்காரர்கள் அந்தக் கூட்டத்தை வளைக்கின்றனர்! குய்யோமுறையோ என்று அவலக்குரல்! ரத்தக் களறி! பரிசு பெற்ற பவுன்களைக் கொள்ளைக் கூட்டத்திடம் பறி கொடுத்துவிட்டு, உயிர் தப்பியது போதுமென அந்த உழைக்கும் வர்க்கம் ஓட்டமெடுக்கிறது - வெற்றி பெற்ற வெறியில் கொள்ளைக்கூட்டம் விண்வெளி வெடித்திடச் சிரிக்கிறது -

உடன்பிறப்பே, இன்னுமிருக்கிறது தொடர் நடவடிக்கை! மன்னனின் கருவூல அறைக்குள்ளே சிறிது எட்டிப் பார்!

மன்னன், மந்திரியார் முதுகில் தட்டிக் கொடுத்து சபாஷ் என்கிறான். அவர்கள் எதிரே கொள்ளைக் கூட்டத் தலைவன், வழிப்பறி செய்த பவுன் நாணயங்களைக் கொட்டிக் கொண்டிருக்கிறான்!

இப்போது கதை புரிகிறதா? கொடுப்பதுபோல் கொடுத்துவிட்டு கொடுத்ததை வழியில் கொள்ளையடித்துக் கொள்வது - ஊரார் மத்தியில் அந்தக் கோலேந்தியின் உதாரகுணம், புகழப்படும்! ஆனால் கொடுத்த பொருள் கொள்ளையர் மூலம் திரும்பக் கருவூலத்திற்கே கொண்டு வரப்படும் - இப்படியொரு மன்னன் - மிகவும் கெட்டிக்காரத் தனமாக ஆட்சி புரிகிற காட்சியை உனக்கு உணர்த்தியதன் பொருள் புரிகிறதா?

புரியாவிட்டால் இந்தக் கதையை மறந்துவிடாமல் மனத்தில் நிறுத்திக்கொண்டு, இதோ இந்தச் செய்தியைக் கவனமாகப் படி!

ஒன்றரை லட்சம் ஆலைத் தொழிலாளருக்கு போனஸ் பட்டுவாடா! தொழிலாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப போனசை வழங்குமாறு அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது.

பஞ்சாலைத் தொழிலாளர்கள், போனஸ் பற்றி வைத்த கோரிக்கையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து, அந்தத் தொழிலாளர்கள் மனம் மகிழத்தக்க முடிவை அறிவித்து விட்டது அரசு என்பது போலத் தோன்றுகிறது அல்லவா?

ஆமாம் உடன்பிறப்பே! அந்த மன்னன் பவுன்களையே பரிசாக வழங்கினான் அல்லவா, அதுபோல!

ஆனால், தொடர் நடவடிக்கை என்ன தெரியுமா? அதே அரசனின் பாணியில்தான்!

போனசைக் கொடுத்து விட்டு, அப்படிக் கொடுத்தது கூடுதலான தொகை யென்பதற்காக முதலாளிகள், தொழில் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தலாம்! அந்த நீதிமன்றம், அதிகத் தொகை கூடுதலாகப் போனஸ் தரப்பட்டிருக்கிறது என்று தீர்ப்பு அளித்தால் - அந்தக் கூடுதல் தொகை தொழிலாளிகளிடமிருந்து திரும்ப வசூலிக்கப்படும்.

இதுதான் அரசாங்கம் செய்து வைத்துள்ள ஏற்பாடு! இந்த மத்தியஸ்தம், தொழிற்சங்கப் பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை!

காரணம் புரிகிறதல்லவா - பவுன்களைப் பரிசாக வழங்கிவிட்டு, அவற்றைப் பாதையிலே கொள்ளையடிக்கவும் ஏற்பாடு செய்த கொற்றவனின் செயல், கண்முன் தெரிகிறதல்லவா?

அரசின் இந்தத் தீர்ப்பை, தென்னிந்திய ஆலை முதலாளிகள் சங்கத்தின் தலைவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தொழில் நீதிமன்றம் - இந்தப் பிரச்சினையில் நியாயம் வழங்கும் என நம்புவதாகவும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தொழிலாளர்களுக்கு அதிருப்தியும் - தொழில் அதிபர்களுக்கு மனநிறைவும் அளிக்கத்தக்க ஒரு ஆணையைத் தமிழக அரசு

- தனது முடிவாகத் தெரிவித்திருக்கிற இந்தச் செய்தியைப் படிக்கும்போது, கொடுத்துப் பறிக்கும் கோலேந்தியின் கதை எவ்வளவு பொருத்தமான உவமையாகிறது பார்த்தாயா?

போனசை உயர்த்திக் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசே தாக்கீது அனுப்பியிருக்கிறதாம்! இப்படி ஒரு வாதம் செய்கிறதாம், தமிழக அரசு!

ஆனால், அதே மத்திய அரசுதான், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் ஊழியர்களுக்கு 27 சதவிகித போனஸ் அறிவித்திருக்கிறது. அதே மத்திய அரசுதான், ஏர் இந்தியா ஊழியர்களுக்கு 8.33 சதவிகிதம் என்பதற்கு மாறாக, 12.25 சதவிகிதம் போனஸ் அளித்திருக்கிறது. இந்தத் தகவலையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாமா, வாதம் என்று வந்துவிட்ட பிறகு?

கழக ஆட்சியில் 1974-ஆம் ஆண்டு போனஸ் பேச்சு வார்த்தையை ஆலை அதிபர்கள், தொழிலாளர் பிரதிநிதிகளுக் கிடையே அரசின் சார்பில் நடத்தினோம். அதிபர்கள் என்ன வாதிட்டார்கள் தெரியுமா?

1973-இல் கொடுத்ததைவிட அதிக போனஸ் கொடுப்பது என்றால், மத்திய அரசின் சட்டப்படி கட்டாயச் சேமிப்பு திட்டத்தில்தான் கட்ட முடியும் - தொழிலாளியிடம் பணம் தர முடியாது. கேரளாவில் கூட ஓணம் பண்டிகையின் போது கூடுதல் போனசை கட்டாயச் சேமிப்பில்தான் கட்டியுள்ளார்கள். அப்படித்தான் நாங்களும் கட்டாயச் சேமிப்பில் கட்ட முடியும்.

இப்படி வாதம் செய்தனர் முதலாளிகள்! பிடிவாதமும் காட்டினர்!

ஆனால், கழக அரசு அறிவித்த முடிவு, தொழிலாளர்களை மகிழச் செய்தது. 1973-ஆம் ஆண்டு தரப்பட்ட போனஸ் தொகையைவிட பத்து சதவிகிதம் கூடுதல் போனஸ் 1974-ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்குத் தர வேண்டுமென்று கழக அரசு அறிவித்தது. அதன் காரணமாக கோவை ஆலைகள் அனைத்திலும், 21.33 சதவிகிதம் முதல் 35 சதவிகிதம் வரையில் போனஸ் கிடைத்தது.

ஆனால் இப்பொழுது நிலைமை என்ன? எம்.ஜி.ஆர். அரசு அறிவித்துள்ள முடிவு என்ன?

தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ள கதையில் வரும் மன்னனின் செயலுக்கும், இந்த அரசு அறிவித்துள்ள முடிவுக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா?

இப்படியொரு கொடுத்துப் பறிக்கும் செயலுக்குக் கொற்றம், துணை போகலாமா?

தொழிலாளி வர்க்கம் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது - தற்போதைக்குச் சிந்தித்தாலே போதுமானது!

அன்புள்ள,

மு. க.

(11-11-1982)

1064. அர்த்தமில்லா இந்து மணம்!

உடன்பிறப்பே,

பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும், அவர்களின் வழிநின்று சுயமரியாதை இயக்கம் வளர்த்திடுவோரும் ஆற்றிய பணிகளின் காரணமாக - நூற்றுக்கு எண்பது திருமணங்கள் புரோகிதமற்ற திருமணங்களாக தமிழ்நாட்டில் நடைபெறுகிற அளவுக்கு மறுமலர்ச்சி உருவாகியிருப்பதைச் சனாதனிகள் சகித்துக் கொள்ள முடியாமல் தீ மிதித்தவர்களைப்போலக் குதிக்கிறார்கள் என்பதற்கு மற்றொரு சான்றாக, ஒரு வார இதழின் ஆசிரியர், அர்த்தமுள்ள இந்து மணம் என்ற இணைப்பு நூல் ஒன்றினை வெளியிட்டிருக்கிறார்.

அந்த நூல் குறித்து சில கருத்துகளைக் கூறும் போது, தவிர்க்க முடியாத சூழ்நிலையில் விரசங்கள் தென்படலாம்! அந்த நூலில் காணப்படும் விரசங்களைப் பற்றி விமர்சிக்கும்போது, வேறு வழியில்லாத காரணத்தால் அந்த நூலில் உள்ளவற்றையே கோடிட்டுக் காட்ட வேண்டியிருக்கிறது.

பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமண முறை, அண்ணா அவர்களது ஆட்சியில் சட்ட வடிவம் பெற்றுத் திகழ்வதை அறிவியக்கவாதிகள் அனைவரும் பாராட்டுகின்றனர். ஆனால், பெரியார் பெயரையும் - அண்ணா பெயரையும் மட்டும் பயன்படுத்தி ஆதாயம் பெற முனைவோர்க்குத் துணையாக இருந்துகொண்டே, அண்ணாவின் சந்திரமோகன் நாடகத்தில் வரும் காகபட்டர் கதாபாத்திரங்களைப் போலச் சிலர், தமது சமுதாய ஆதிக்கத்தை நிலைநிறுத்திட மூடநம்பிக்கைச் சகதியில் மக்களை தள்ளிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதற்கு எடுத்துக்காட்டுத்தான் அர்த்தமுள்ள இந்து மணம் என்ற அந்த இணைப்பு இதழ்!

கோவலன், கண்ணகி திருமணம், தற்கால பாஷையில் சொல்லப் போனால் அய்யர் வைத்து நடந்த கல்யாணம்தானே!

இப்படி நண்பர், அந்த நூலில் தனது வாதத்தைத் தொடங்குகிறார். அவர் கொண்ட பொருளின்படியே பார்த்தால், சிலப்பதிகார காலத்திலேயே இத்தகைய புரோகித முறைகள் தமிழ்நாட்டில் புகுந்துவிட்டன என்பது புலனாகிறது! ஆனால், அப்படி நடைபெற்ற திருமணத்தின் விளைவுகள் என்ன? தெய்வீக முறைப்படி - புரோகிதர் மந்திரம் ஓதிட நடைபெற்ற அந்த திருமணத்தின் தம்பதிகளை சாத்திர சம்பிரதாயங்களோ, சடங்குகளோ காப்பாற்றிட முடிந்ததா? கோவலன், கண்ணகி பிரிவு - கோவலன் கொலையுண்டு சாவது - பாண்டியன் தலைநகர் தீக்காடாகியது - இப்படித்தானே சோகம், தொடர்கிறது அவர்களது - வாழ்வில்!

கண்ணகி, கோவலன் என்ன? சீதைக்கும், இராமனுக்கும் கூடப் புரோகிதத் திருமணம்தான்! ஆனால் விளைவு என்ன? பட்டாபிஷேகத்திற்கு வசிட்டர் பார்த்த நாளே பலன் அளிக்காமல் பதினான்கு ஆண்டுகள் வனவாசம்! சீதைக்கு அசோகவனத்துச் சிறை! மீண்டுவந்த பின்பும் அவளைத் தீக்குளிக்குமாறு சோதனை! அதன் பிறகாவது சுகம் உண்டா? கர்ப்பவதியாக இருந்த சீதையை - யார் பேச்சையோ கேட்டு இராமன் மறுபடியும் காட்டுக்குத் துரத்துகிறான்! அரண்மனையின் பட்டமகிஷி, ஆரண்யத்து ஆஸ்ரமத்தில் லவ - குசன் என்ற குழந்தைகளைப் பிரசவிக்கிறாள் - அந்தக் குழந்தைகளோடு போரிட வேண்டிய நிலைமை, தந்தை இராமனுக்கு! நடந்தது என்னவோ - புரோகிதத் திருமணம்தான்!

ஐவரை மணந்த அழியாத பத்தினி (?) பாஞ்சாலிக்குக் கூடப் புரோகித முறைப்படித்தான் திருமணம் நடந்தது - அந்தக் குடும்பத்தில் சுகம் உண்டா? அந்தப் பாஞ்சாலி ஆறாவதாகக் கர்ணனையும் காதலித்ததாகச் சொல்லவில்லையா? அந்த உண்மையைச் சொன்ன பிறகுதானே, மரத்திலிருந்து கீழே விழுந்த மாங்கனி, மீண்டும் மரக்கிளையில் போய் ஒட்டிக் கொண்டது! மாமுனியின் கோபமும் தீர்ந்தது!

கணவனைப்போல வந்து தன்னைக் கட்டித் தழுவி இன்பம் தருபவன் இந்திரன் என்று தெரிந்த பிறகும் இணங்கியிருந்தாளே அகலிகை! அந்த அகலிகையைக் கல்லாகச் சபித்தாரே அவளை மணந்த மகரிஷியார்! அவர்கள் திருமணமும் புரோகித முறைப்படி நடைபெற்றதுதானே!

காதலியைக் கானகத்தே காரிருளில் கைவிட்டு ஓடினானே நளன் - அந்த நளனுக்கும், தமயந்திக்கும் நடைபெற்றது புரோகிதத் திருமணம்தானே!

திருமணத்திற்கான பொருத்தங்கள் பார்க்கப்பட்டு திருமணத் தேதியும் குறிக்கப்படுமாம்! திருமண நாளன்று காலையில் மணமகனைப் பரிசோதிப்பார்களாம்! ஒரு சவரத் தொழிலாளியை விட்டு மணமகனுக்கு சர்வாங்க சவரம் செய்யச் சொல்வார்களாம். அதாவது உடல் முழுதும் ரோமம் இல்லாமல் திருத்திவிடச் சொல்வார்களாம். இந்தச் செயலின் மூலம் மணமகனின் உடல் அமைப்பு, உறுப்புகளின் ஆரோக்யம் இவற்றைப் பிறர் அறியாவண்ணம் அந்த சவரத் தொழிலாளி பார்த்து அறிந்து அதனைப் பெண் வீட்டாருக்குச் சொல்வாராம்! அதேபோல மணமகன் வீட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணி, மணமகளுக்குக் கூறைப்புடவை கட்டுவதாகச் சொல்லி, அவளை முழு உடலையும் பார்த்து சோதித்து, உண்மையை மணமகன் வீட்டுக்குச் சொல்வாளாம்! அந்த மணமகள் ஏற்கெனவே எப்போதாவது கர்ப்பமுற்றிருந்தால் கூட கண்டுபிடித்து விடலாமாம். இது அர்த்தமுள்ள இந்து மணத்தின் ஒரு முக்கிய பகுதியாம்! நண்பர் எழுதியுள்ளார்!

பொருத்தம் பார்த்து, ஆரூடம் பார்த்து, நாள் பார்த்து, நாழிகை பார்த்து, இரு வீட்டாரும் செலவுகளைச் செய்து, அழைப்பிதழ் பெற்று விருந்தினரெல்லாம் பந்துமித்திர சமேதராய் வந்த பிறகு - திருமண நாளன்று இப்படி சர்வாங்க சவர சோதனையும் - கூறைப்புடவை சோதனையும் செய்து - அதில் குறையிருந்து கண்டுபிடித்து விட்டால் - அர்த்தமுள்ள இந்து மணத்தின்படி எவ்வளவு வீண் செலவை இரு வீட்டாரும் ஏற்க வேண்டியிருக்கிறது என்பதை மறந்து விடலாமா?

பெண்ணே! சோமன் முதலில் உன்னை அடைந்தான். பிறகு கந்தர்வன் அடைந்தான். மூன்றாவதாக அக்கினி உன்னை ஏற்றுக்கொண்டான். நான்காவதாக மனித ஜாதியில் பிறந்த இந்தக் கணவன் உன்னை அடைகிறான்.

என்ற மந்திரப்பொருளை ஒத்துக் கொண்டு எழுதியுள்ள ஆசிரிய நண்பர், அதற்கு வேறு தத்துவம் வழங்குகிறார்.

ஒரு பெண்ணின் சரீரத்தில் ரோமம் உண்டாகும்போது சோமன் என்ற தேவன் அவளைப் பாதுகாக்கிறானாம்! ஸ்தனம் உண்டாகும்போது அக்கினி அவளைப் பாதுகாக்கிறானாம்! ருதுவாகும்போது கந்தர்வன் அவளைப் பாதுகாக்கிறானாம்! இப்படி விரிவடைகிறது அவரது தத்துவ விளக்கம்!

தத்துவம் எப்படியோ இருக்கட்டும்! இதனை ஒரு மணமேடையில் மந்திரமாகச் சொல்வது விரசம் என்று கூடத் தெரிய வேண்டாமா?

சோமனும், அக்கினியும், கந்தர்வனும் பெண்ணின் பருவத்திற்கு ஏற்றாற்போல் அவளை அடைந்து பாதுகாப்பது போல, ஆண்களின் பருவ வளர்ச்சிக்கு ஏற்றாற்போல அவர்களை அடைந்து பாதுகாக்கும் அந்தப் பெண் தேவதைகள் யார்? அதையும் அர்த்தமுள்ள இந்து மண ஆசிரியர் விளக்க வேண்டாமா?

பாவம்! அந்த மணமகளை ஒவ்வொரு பருவத்திலும் நெருங்கிப் பாதுகாக்க அர்த்தமுள்ள இந்து மணத்தில் பெண் தெய்வங்களை நியமித்திருக்கக்கூடாதா?

ரோமம் முளைத்திடும்போதும், ருதுவாகிடும் போதும், மார்புகள் அரும்பிடும் போதும் ஆண் தெய்வங்கள்தானா அவர்களை நெருங்கிப் பாதுகாக்க வேண்டும்?

உடன்பிறப்பே, அய்யாவும், அண்ணாவும் பகுத்தறிவு அடிப்படையிலும், தமிழ் உணர்வின் அடிப்படையிலும் அறிமுகப்படுத்தியுள்ள சுயமரியாதைத் திருமண முறையைக் கேலி செய்ய வந்து, அர்த்தமுள்ள இந்து மணத்தின் அனார்த்தத்தை அள்ளிக் கொட்டிய நண்பருக்கு நன்றிகூறி இந்தக் கடிதத்தை இப்போது நிறைவு செய்கிறேன். தேவைப்படின் பிறகு தொடருகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(13-11-1982)

1065. மாமியார் கதையின் மறுவடிவம்!

உடன்பிறப்பே,

ஒரு இல்லத்து வாயிற்புரம்! இளைத்த உருவத்தினன் களைப்புற்ற நிலையிலும் இயன்றவரையில் சக்தியைச் செலவழித்துக் கத்திக் கொண்டிருக்கிறான்! கந்தலாடை! அதிலும் பல இடங்களில் கிழிசல்கள்! கையில் ஒரு துருப்பிடித்த தகரக்குவளை! எண்ணெய் காணாத பரட்டைத் தலை! சவரக்கத்தி பட்டுப் பல மாதங்கள் ஓடிவிட்டன என்பதைச் சொல்லாமற் சொல்லும் முகம்! கையிலே ஒரு ஊன்றுகோல்; மூங்கில் கம்பு! இடையிடையே இருமல்! கத்தலுக்கிடையே இருமுகிறானா? அல்லது இருமலுக்கிடையே கத்துகிறானா? அதைக் கண்டறிய முடியாத நிலை! பசியாறி இரண்டு நாட்கள் இருக்கும் என்பதை விளக்கும் பஞ்சடைந்த கண்கள்!

அம்மா, தாயே! பசி கண்ணை இருட்டுது மகராசி! பழைய சோறு இருந்தா கொஞ்சம் போடுங்க தாயே!

வாயிற்கதவைத் திறந்துகொண்டு ஒரு பெண் வருகிறாள். இளம் வயதினள். வாயிற்படியண்டை வாடி நிற்கும் ஏழையைக் கண்டு மனம் உருகுகிறாள்! கண்கலங்குகிறாள்!

அம்மா! பசி உயிர் போகுதம்மா! ஏதாவது வயத்துக்குக் கொடும்மா! நீராகாரம் இருந்தாலும் போதும் அம்மா!

ஏதாவது அவனுக்குப் போட வேண்டும் - பாவம்! பசியால் துவளுகிறான் என்று இளகிவிட்ட அந்தப் பாவை, கொஞ்சம் இருங்கய்யா, வருகிறேன் என்று கூறிவிட்டு அவசரமாக உள்ளே ஓடுகிறாள். அடுக்களையில் பழைய சோறும், சுண்டைக் குழம்பும் இருக்கிற ஞாபகம் அவளுக்கு! அதனால் அதை அவனுக்குக் கொடுத்துப் பசி போக்கலாம் என்ற கனிவு! இருந்தாலும், மாமியார் உத்தரவு இல்லாமல் எதையும் எடுத்து யாருக்கும் கொடுக்கக்கூடாதே! அதனால் மாமியாரைப் பார்க்கிறாள்! மாமியார் அடுக்களையோரம் ஒரு தாழ்வாரத்துப் பக்கம் கயிற்றுக் கட்டிலில் மல்லாந்து படுத்துக் குறட்டை விட்டுக் கொண்டிருக்கிறாள்! மாமி!

மாமி! என்று குரல் கொடுக்கிறாள். குறட்டைச் சப்தம் நிற்கிறது. என்னடியிது, தூக்கத்தில் துளைத்தெடுக்கிறே? மாமியார் எரிந்து விழுந்தாள்! காலை மணி பத்து அப்போது! பழைய சோற்றில் கட்டித் தயிரை ஊற்றி ஒரு வெட்டு வெட்டியதால் மாமியாரை ஆட்டிப் படைக்கும் அசதி அது! அந்த அசதியில் ஆனந்தமான உறக்கம்! மல்லாந்த நிலையில் குறட்டை! அப்போது போய், மருமகள் தொந்தரவு செய்யலாமா? அதனால்தான் மாமியாருக்குக் கோபம் வெடித்தது! சீற்றத்துடன் கத்தினாள். என்ன எழவு ஆபத்து? என்று! ஒன்றுமில்லை மாமி! பாவம், ஒரு ஏழைப் பிச்சைக்காரன் வாசலில் வந்து... என்று சொன்ன மருமகளை மடக்கி, பிச்சைக்காரனில் ஏழை, பணக்காரன் என்னடி? என்று கோபத்திலும் கிண்டல் செய்கிறாள்! இல்லை மாமி! ரொம்பப் பசியால் துடிக்கிறான்! கொஞ்சம் பழைய சோறாவது கேக்கிறான்! மருமகள் பரிவுடன் பதில் கூறினாள். பிறகென்ன? பாயாசம் வடையோட பத்து வகைக் கறியும் சோறுமா கேட்பான்! போடி போ! வேலையத்தவளே! என்று கூறிவிட்டுக் கொட்டாவி விட்டாள் மாமியார், மறுபடியும் தூக்கத்திற்குமுன் அறிவிப்பாக! இல்லை மாமி! பாவம் - பரிதாபமா இருக்கு! கொஞ்சம் பழைய சோறு போடலாம் மாமி அவனுக்கு! மருமகள் அவனுக்காக மிகுந்த இரக்கப்பட்டு வாதாடினாள். இப்ப பேசாம வாயை மூடிக்கிட்டுப் போறியா இல்லியா? ஒரு சோறும் போடக்கூடாது போ! போய்த் தொலை! என் தூக்கத்தைக் கெடுக்காதே! என்று கத்திக்கொண்டே மாமியார், புரண்டு படுத்துக் கொண்டாள்! நல்லவேளை அவள் புரண்ட வேகத்தில் கயிற்றுக்கட்டில் நொறுங்கிவிடவில்லை!

மருமகள், வேதனை படர்ந்த முகத்துடன் வாசலுக்கு வந்தாள்! பிச்சைக்காரன் அவளை ஆவலுடன் பார்த்துக் கொண்டு நின்றான்! அவள் கைகளில் ஏதாவது எடுத்து வருகிறாளா என்று அவனது பஞ்சடைந்த கண்கள் நோக்கின! கண்ணாடி வளையல்கள் அணிந்த அவள் கைகள் அவனுக்காக ஏந்தி வந்தது எதுவுமில்லை!

அய்யா! உமது பசியைத் தீர்க்க நான் தருவதற்கு எதுவுமில்லை! போகலாம்!

என்று சொல்லிவிட்டு அந்த மருமகள் விடுவிடென்று கொல்லைப் பக்கம் போய்விட்டாள்! பிச்சைக்காரன் ஏமாற்றத்துடன், அட கடவுளே! என்று முணுமுணுத்துக் கொண்டு அந்த வீட்டுவாசலை விட்டு அகன்று, அசைந்து அசைந்து தள்ளாடித் தடியூன்றி நடந்து கொண்டிருந்தான்.

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலகம்
சென்னை-18
அறிவாலயம்

கயிற்றுக் கட்டில் மாமியார் தூக்கத்தை உதறி விட்டு வாரிச் சுருட்டி எழுந்தாள்! வாசற்பக்கம் வந்தாள்! தெருவில் போய்க் கொண்டிருந்த பிச்சைக்காரனைக் கைதட்டிக் கூப்பிட்டாள்!

ஓய்! சாமியாரே! இங்கே வா!

பிச்சைக்காரன் திரும்பிப் பார்த்தான். புதிய உற்சாகம் - தெம்பு - அவனுக்கு!

அம்மணீ! இதோ வந்துட்டேன்! மகராசி நல்லாயிருக்கணும்!

என்று தகரக் குவளையை நீட்டிக்கொண்டே மீண்டும் அந்த வீட்டுவாசலுக்கு வந்து சேர்ந்தான்!

என் மருமகள் சொன்னாள் என்று போய் விட்டாயா?

அது அறியாப் பொண்ணுபோல இருக்கு தாயே! உன்னைப் போலப் பெரிய மனது எல்லாருக்கும் வருமா தாயே!

நீ அவளைப் போயி பிச்சை கேட்டதே தப்பு!

அதுவும் இந்த வீட்டு மனுஷிதானேன்னு நினைச்சுக் கேட்டுட்டேன்.

ஞாபகம் வச்சுக்க! இனிமே இந்த வீட்டுப் பக்கம் வந்தால் என்னைக் கூப்பிட்டுப் பிச்சை கேக்கணும்!

என் மகராசியம்மா, அப்படியே கேக்கிறேன்!

பிச்சை போடுறதும் போடாததும் என்னைப் பொறுத்தது - என் மருமகளுக்குச் சம்பந்தம் இல்லை!

சரி தாயே! ரொம்பச் சரி!

இல்லேன்னு சொல்றதுக்கு அவளுக்கு என்ன அதிகாரம்?

கரெக்ட் தாயே நீங்க சொல்றது! கண்ணை இருட்டுது! காதை அடைக்குது பசி! காலுகூட நிக்க முடியலே தாயே! போடுறதைச் சீக்கிரம் போடு, தாயே!

ஞாபகம் வச்சுக்க! இனிமே பிச்சைக்கு வந்தீன்னா என்னைத்தான் கூப்பிட்டுக் கேக்கணும்! ஒண்ணுமில்லை போன்னு நான்தான் சொல்லுவேன். வேற யாரும் சொல்லக்கூடாது! இப்ப நான் சொல்றேன், ஒண்ணுமில்லை போ!

மாமியார் மளமளவென்று உள்ளே சென்று கதவைப் படார் என்று சாத்திக் கொண்டாள். பிச்சைக்காரன், மயங்கி விழுந்தான் தெருவில்!

உடன்பிறப்பே, பழைய கதைக்குப் புதுவடிவம் கொடுத்திருக்கிறேன்! ஆனால் இந்தக் கதைக்கு நமது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு, மறுவடிவமே கொடுத்திருக்கிறது!

நேரிடையாக முதலமைச்சர் அவர்களிடமோ, அவரது செயலாளர், நேர்முக உதவியாளர்களிடமோ கொடுக்கப்படும் விண்ணப்பங்கள், கோரிக்கைகள், இதைப் போன்றே மற்ற அமைச்சர்களிடமோ, அவர்களது நேர்முக உதவியாளர்களிடமோ நேரில் கொடுக்கப்படும் விண்ணப்பங்களும், பதிவு அஞ்சலில் அனுப்பப்படும் கடிதங்களும், சாதாரண அஞ்சலில் அனுப்பப்படும் கடிதங்களும் மாத்திரமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இதைத் தவிர்த்து வேறு மூன்றாமவர் மூலமாகத் தொடர்பு கொண்டு கொடுக்கப்படும் கோரிக்கைகள், விண்ணப்பங்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என்பது பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படிப் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் இந்த அரசு எல்லாப் பத்திரிகைகளிலும் ஒரு விளம்பரம் கொடுத்துள்ளது!

கவர்னர் என்ற ஒரு பதவி இருக்கிற வரையில் - அந்தப் பொறுப்பில் இருப்பவரிடம் பொதுமக்கள், எதிர்க்கட்சியினர், மற்றும் பாதிக்கப்பட்டோர் முறையீடுகளை, விண்ணப்பங்களை அளிக்கத்தான் செய்வார்கள்! இந்த விளம்பரத்தின்படி கவர்னரும் மூன்றாமவர் ஆகி விடுகிறார்!

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்போர் இவர்கள் எல்லாம் மூன்றாமவர் பட்டியலிலே சேர்க்கப்பட்டு, அவர்கள் மூலமாகத் தொடர்பு கொண்டு கொடுக்கப்படும் கோரிக்கைகளும், விண்ணப்பங்களும் அரசாங்கத்தில் கவனிக்கப்படமாட்டா - என்பது - மாமியார் கதையின் மறுவடிவம் அல்லாமல் வேறென்ன?

அன்புள்ள,

மு. க.

(19-11-1982)

1066. கண்ணீரால் ஒரு மலர் வளையம்!

உடன்பிறப்பே,

அரசியல் கருத்து வேறுபாடுகள் ஆயிரம் இருந்தாலும் அதனைக் காழ்ப்பு உணர்ச்சியாக ஆக்கிக் கொண்டு வன்முறையெனும் தகாதமுறை கொண்டு தீர்த்துக் கொள்ளும் போக்கினை நமது கழகம் என்றைக்குமே ஏற்றுக் கொண்டதில்லை. அமைதியான ஜனநாயக முறையில் அவரவர் கருத்துகளுக்கு ஆக்கம் தேடிட முற்படுவதே சாலச் சிறந்ததும், சான்றோர் ஏற்றுக் கொண்டதுமான கொள்கையாகும். ஜனநாயக நாட்டில் பல கட்சிகள், பல கருத்துகள், அந்தந்தக் கட்சிகளுக்கெனத் தனித்தனிக் கோட்பாடுகள், திட்டங்கள், குறிக்கோள்கள் - அதன் காரணமாகக் கட்சிகளுக்கிடையே வேறுபாடுகள், மாறுபாடுகள்! ஏன்? முரண்பாடுகள் கூட உண்டு! அதற்கிடையே தமது கொள்கை, குறிக்கோள்களுக்கு வெற்றி தேடிட அமைதி வழி, அறவழி நாடிட வேண்டுமேயல்லாமல், அராஜக வழியின் பக்கம் விழியினைச் செலுத்திட நினைத்தலும் ஆகாது! கூடாது!

ஆனால் எப்படியோ ஒரு பகையுணர்வின் காரணமாக - பழி தீர்க்கத் திட்டமிட்டும், உணர்ச்சி வெறிக்கு அணை போட முடியாமலும் - ஒரு கட்சியினைச் சார்ந்தோர், இன்னொரு கட்சியினைச் சார்ந்தோரைக் கொலை மூலம் வெற்றி கண்டுவிடவே துடிக்கிறார்கள். பகைவர்க்கும் அருளக்கூடிய பண்பு வாய்ந்த காந்தியடிகளின் உயிரையே போக்கிடக் காரணமாக இருந்தது அத்தகைய வெறிதானே!

அந்த வெறி இன்னமும் தணிந்தபாடில்லையே - கருத்து மாறுபாடுகள், அவ்வப்பொழுது வன்முறைகளைக் கொலு வைத்து, அரசியலில் அமைதி வழிக்களம் காண விரும்புவோரின் இதயத்தைப் பிழிந்தெடுத்துக் கொண்டுதானே இருக்கின்றன! இதிலே நான் கட்சியுணர்வுக்கு அப்பாற்பட்டே கூற விரும்புகிறேன். அரசியல் கொலைகள், தொடர்கதையாவதை நிறுத்திட அனைவருமே முனைந்திட வேண்டும். இந்தக் கட்சியினர்

இதுவரை எத்தனை பேர் கொலையுண்டனர் - அந்தக் கட்சியினர் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற ஆய்வுக் கணக்குகள் பயன் தரமாட்டா! எந்தக் கட்சியில் உள்ளோரும், எந்தக் கட்சியில் உள்ள எவரையும் வன்முறை கொண்டு வீழ்த்திடும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும் என்பதே என் இதய ஆழத்திலிருந்து கிளம்பும் குரல்!

இதோ, திருவொற்றியூர் கழக உடன்பிறப்பு மாசிலாமணியின் இளவல் - மணியென்னும் பெயர் படைத்த கழகத்தின் கண்மணி! அந்தக் கொள்கை ராஜாவை மணந்து வாழவந்த ராணி - இருவரும் ஈன்றெடுத்த மழலைகள் மாறன், லதா, பிரேமா, பங்கயம், இந்தக் குடும்பம் குமுறியழக் கொலையுண்டு மடிந்துவிட்டான்! கொன்றவர்கள் யார்? எந்தக் கட்சி? அவற்றைக்கூட நான் மறந்துவிட்டுக் கேட்கிறேன்! எந்தக் கட்சியானாலும் சரி - இப்படியொரு இரக்கமற்ற கொடுஞ்செயல் நடைபெறலாமா?

மறைந்துவிட்ட மணி, கழகத்தின் காளை! கழகம் ஆணையிடும்பொழுதெல்லாம் கையில் ஏந்துவான் அறப்போர் வாளை! அடக்குமுறை எதிர்த்து அவன் சிறை சென்ற போதெல்லாம் என் கரங்கள் தட்டிக் கொடுத்ததுண்டு அவன் தோளை! அந்த மாமணியைக் கொலை வெறியர், சாவின் வாயில் தள்ளிவிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து ஓரிருவர் கைதாகியுள்ளனர். சில காலமாக வளைந்து செயல்படும் சட்டம், நிமிர்ந்து நடை போட்டால் இந்த வெறிச்செயல்களை வேரோடு களைய முடியாவிட்டாலும் அன்றாட நிகழ்ச்சிகளாக ஆகாமலாவது தடுத்திட இயலும்!

தனது அண்ணன் மாசிலாமணியையும், அன்பு பொழிந்த இல்லத்தரசியையும், ஆசைக்கிள்ளைகளாம் பிள்ளைகளையும், வாடித் துடிக்கும் குடும்பத்தையும் துடிக்கவிட்டு, என் போன்றோர் நெஞ்சையும் கலங்க வைத்துக் கொடுஞ்சாவின் குழியில் தள்ளப்பட்ட அந்தக் கொள்கைச் சிங்கத்திற்கு என் கண்ணீர்த் துளிகளையே மலர்களாக்கி - மலர் வளையம் வைக்கின்றேன்! இனியேனும் இந்தக் கொடுமைகள் அரசியலில் எந்தத் தரப்பிலும் தலைதூக்கக் கூடாது என்ற எனது உணர்வுகளை எடுத்துச் சொல்லி!

அன்புள்ள,

மு. க.

(21-11-1982)

1067. ஒதுங்குவது யார்? ஒதுக்குவது யார்?

உடன்பிறப்பே,

நீதிபதியாக இருந்தவர் ஒருவர்! இப்போது நீதிபதியாக இல்லாவிட்டாலும் ஒரு விசாரணைக் கமிஷனுக்கு நீதிபதியாக நியமிக்கப்படுகிறார்! சட்டப் பேரவையில் முதலமைச்சர் மீதும், மற்ற சில அமைச்சர்கள் மீதும் சாட்டப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக, முதலமைச்சரே தன்னையும், தனது அமைச்சர்களையும் பற்றிய புகார்களை விசாரிக்க அந்த மாஜி நீதிபதியை நியமித்துக் கொள்கிறார்! இந்த முதலமைச்சர் 1977க்கு முன்பு எதிர்தரப்பில் இருந்தபோது இந்த மாநில அமைச்சர்களின் மீது கூறப்படும் ஊழல் புகார்களை வேறு மாநில நீதிபதியைக் கொண்டு விசாரிக்க வேண்டும் - அல்லது சுப்ரீம்கோர்ட் நீதிபதியொருவரைக் கொண்டு விசாரிக்க வேண்டும் என்று மேடைக்கு மேடை முழங்கினார். ஆனால் அவரது ஆட்சியில், ஆதாரங்களுடன் சட்டப் பேரவையில் எடுத்துக் கூறப்பட்ட கப்பல் பேர ஊழலுக்குச் சுப்ரீம்கோர்ட் நீதிபதியை நியமிப்பதாகப் பேரவையிலேயே அறிவித்துவிட்டு, பிறகு அந்த அறைகூவலில் இருந்து சாமர்த்தியமாக நழுவிக்கொண்டார். அப்போது உரத்த குரல் எழுப்பி உச்சநீதிமன்ற நீதிபதி - வேறு மாநில நீதிபதி - என்றெல்லாம் கடுமையாகக் கூறியவர், ஒரு நீதிபதியை - அதுவும் ஓய்வு பெற்ற நீதிபதியை - அந்த நீதிபதி ஏற்கெனவே சங்கணாங்குளம் சம்பவங்கள் பற்றிய நீதிவிசாரணையை நடத்திக் கொண்டிருக்கும் போதே நியமித்துக் கொண்டார். இதுகுறித்து கடந்த ஆண்டு நவம்பர் முதல் வாரத்தில் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு, பின்வருமாறு எழுதியது;-

ரே கமிஷன், இந்தச் சாராய ஊழலையும் விசாரிக்கும் விதத்தில் விஸ்தரிக்கப்படும் என்கிற யூகம் பரவலாக அடிபட ஆரம்பித்துவிட்ட காரணத்தினால்தான், எம்.ஜி.ஆர். தனக்குத் தானே ஒரு விசாரணைக் கமிஷனை (ராமமூர்த்தி கமிஷன்) அமைத்துக் கொண்டிருக்கிறார்.

எக்ஸ்பிரஸ் ஏடு எழுதிய கருத்தைத்தான் விஷயம் புரிந்தோர் அனைவருமே கொண்டிருந்தனர் - இப்போதும் கொண்டுள்ளனர்!

ராமமூர்த்தி கமிஷன் நியமிக்கப்பட்டவுடன், நமது கழகம் அறிவித்த கருத்தையும் இப்போது நினைவுக்குக் கொண்டு வருவது பயனுள்ளதாக இருக்கும்.

சாராயக் கலவைத் தொழிற்சாலை, சாராயத்தைப் புட்டியில் அடைக்கும் தொழிற்சாலை அவற்றின் மாவட்ட மொத்த வியாபார உரிமம், ஐ.எம்.எப்.எஸ். மொத்த வியாபாரம் முதலிய விவகாரங்களையும் சேர்த்து விசாரிக்க வேண்டுமென தி.மு.க., இந்திரா காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரிடம் மகஜர் கொடுத்துள்ளனர். இவற்றை நீதிபதி ரேயைக் கொண்டோ அல்லது தனியாகவோ விசாரணை நடத்த வேண்டுமென்று மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இதுபற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகின்ற நேரத்தில், அந்த விசாரணையில் இருந்து தப்பித்து விடலாமென நம்பிக்கொண்டு அவசர அவசரமாக ஒரு ஓய்வுபெற்ற நீதிபதியைக் கொண்டு எம்.ஜி.ஆர். இந்த விசாரணைக் கமிஷனை நியமித்துக் கொண்டுள்ளார்.

இந்த உண்மையைக் கழகம் எடுத்துச் சொன்னபோது முழுமையாகத் தெளிவு பெற முடியாத சிலரும்கூட, இப்போது முற்றிலும் தெளிவு பெறுகிற அளவுக்கு, ராமமூர்த்தி விசாரணைக் கமிஷனின் நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

ராமமூர்த்தி கமிஷனுக்குத் தரப்பட்டுள்ள (Terms of Reference) விசாரிக்கப்பட வேண்டிய விஷயங்கள் என்ற பட்டியலில் சட்டசபையில் கூறப்பட்ட புகார்களைப் பற்றியும் விசாரணை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டமன்றப் பேரவை, மேலவையில் புகார் கூறிய தி.மு.க.வினர் சார்பாக விசாரணைக் கமிஷன் முன் வழக்கறிஞர்கள் வாதாடக்கூடாது என்று அரசுத் தரப்பு வலியுறுத்தித் தனது வழக்கறிஞர்கள் வாயிலாக வாதிடுகிறது! ஏன் இப்படியொரு நிலையை அரசு எடுக்கிறது? கறைபடாத கரங்கள் என்றால் விரித்துக் காட்ட வேண்டுமே தவிர, கைகளை மூடிக்கொண்டே நாங்கள் மாசுமருவற்றவர் என்று மார் தட்டுவதில் என்ன வீரம் இருக்கிறது?

ஒரு கட்சி, அதிகாரத்தில் இருந்து போனதும், புதிதாக வருகிற ஆட்சி விசாரணைக் கமிஷன் போடுகிறது. புதிய ஆட்சி மீது பழைய ஆட்சியாளர்கள் மீண்டும் ஊழல் புகார் சொல்லத் தொடங்குகிறார்கள். சென்னையில் இருந்து ஆரம்பித்தால் செங்கற்பட்டு, திண்டிவனம், விழுப்புரம் என்று ஊர்விடாமல் மேடை போட்டு, ஊழலைப் பற்றிப் பேசிக் கொண்டே போகிறார்கள். பொதுமக்களிடம் அதற்கு முக்கியத்துவம் ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். கல்யாண வீட்டிலும் ஊழலைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் அதற்கு ஒரு கமிஷனைப் போட்டால், அந்தக் கமிஷனுக்கும், தங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதுபோல ஒதுங்கிக் கொள்கிறார்கள். வெளியே ஊழல் ஊழல் என்பதுபோல, சட்டசபைக்குள்ளும் கூச்சல் போடுகிறார்கள்.

உடன்பிறப்பே, விசாரணைக் கமிஷன்களைப் பற்றியும் ஊழல்புகார்களைப் பற்றியும் இப்படிக் கூறியிருப்பது அமைச்சர்களோ அல்லது அரசியல்வாதிகளில் யாருமோ அல்ல! சாராய ஊழல் புகார் குறித்து விசாரணை நடத்த எம்.ஜி.ஆர். அரசினால் நியமிக்கப்பட்டுள்ள மாஜி நீதிபதி ராமமூர்த்தி அவர்கள், கடந்த 20-ஆம் தேதியன்று விசாரணைக் கமிஷன் நடைபெற்றபோது செய்த விமர்சனம்தான் இது!

புகார்களைக் கொடுத்து விட்டுத் தனக்குச் சம்பந்த மில்லையென்றும், யாரோ சேலம் கண்ணன் சொன்னதை நான் சொல்கிறேன் என்றும், நேரடியாக நான் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது என்றும், நண்பர் எம்.ஜி.ஆர்.தான் 1976-இல் சர்க்காரியா கமிஷனுக்கு அறிவித்துவிட்டு ஒதுங்கிக் கொண்டவர்!

ஆனால் இப்போது நிலைமை அதுவல்ல! சாராய ஊழல் - சாராயத் தொழிற்சாலை பினாமிகள் - இவைகளைப் பற்றிச் சட்டமன்ற அவைகளில் பேசப்பட்டதை வைத்துத்தான் கமிஷன் விசாரணை! பேசியவர்கள் ஒதுங்கிக் கொள்ள முயற்சிக்கவில்லை! விசாரணையில் கலந்து கொண்டு உண்மையை வெளிக்கொணர உதவுவதற்காகத்தான் கலந்துகொள்ள உரிமை உண்டு என்பதை வலியுறுத்தி அவர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் வாதாடுகிறார்கள்! நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள் என்று தனது வழக்கறிஞர்கள் மூலம் வாதாடுவது அரசாங்கம்தான்! ஒதுங்குபவர் யார்? ஒதுக்குபவர் யார் என்பது இதிலிருந்து நீதிபதிக்கே தெரியும்.

ஊழலைப் பற்றி ஊர்தோறும் பேசுகிறார்களேயென்று நீதிபதி ராமமூர்த்தி அவர்கள் உருக்கமுடன் கூறியிருக்கிறார்! உள்ளத்தில் உள்ளதைக் கொட்டியிருக்கிறார்!

ஊழல்! ஊழல்! என்று சட்டசபையில் பேசுவது கூட, மாஜி நீதிபதி அவர்களுக்குக் கூச்சலாகத் (Shouting) தெரிகிறது!

இப்படியொரு விமர்சனத்தைச் செய்பவர்தான் இந்த விசாரணைக் கமிஷனை நீதிபதியாக இருந்து நடத்துகிறார்!

இதற்குமேல் இப்போது நான் எதுவும் எழுதிட விரும்பவில்லை!

அன்புள்ள,

மு. க.

(23-11-1982)

1068. இதுதான் காலத்தின் கோலம்!

உடன்பிறப்பே,

ஒருநாள் முதலமைச்சர் திடீரென்று தலைமைச் செயலாளரை அழைத்தார்! அய்யா, தலைமைச் செயலரே! நான் டெல்லிக்கு ஆசிய விளையாட்டுகளைக் கண்டுகளிக்கச் செல்கிறேன்! அவசரமாக ஒரு அரசாங்க விளம்பரம் எல்லாப் பத்திரிகையிலும் வெளி வர வேண்டும் என்றார்! எதைப் பற்றிய விளம்பரம்? எனக் கேட்டார் தலைமைச் செயலர்! தலைமைச் செயலரே! இதோ, சொல்கிறேன், கேளும்! முதலமைச்சரிடம் நெருக்கமாக இருப்பதாகக் கூறிக்கொண்டு இடைத்தரகர்களும், மற்றும் சிலரும் பொதுமக்களை ஏமாற்றுகிறார்கள். அதனால் பொதுமக்கள் அனுப்பும் விண்ணப்பங்களை, அமைச்சர்களிடமோ அல்லது அவர்களது நேர்முக உதவியாளர்களிடமோ அல்லது மக்கள் பிரதிநிதிகள் மூலமோ முறையாக அனுப்பினால்தான் அவைகளைப் பரிசீலிக்க முடியும், என்று திட்டவட்டமாக அந்த விளம்பரம் தெளிவாக அமைய வேண்டும் என்று விளக்கினார் முதலமைச்சர்.

தலைமைச் செயலர் அவர்கள், தனது தேசியம் வளர்த்த தமிழில் ஒரு விளம்பரத்தை எல்லா ஏடுகளுக்கும் எழுதியனுப்பினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் நாள்தோறும் பல விண்ணப்பங்கள், கோரிக்கைகள் வருகின்றன.

நேரிடையாக முதலமைச்சர் அவர்களிடமோ, அவரது செயலாளர், நேர்முக உதவியாளர்களிடமோ கொடுக்கப்படும் விண்ணப்பங்கள், கோரிக்கைகள் இதைப் போன்றே மற்ற அமைச்சர்களிடமோ, அவர்களது நேர்முக உதவியாளர்களிடமோ நேரில் கொடுக்கப்படும் விண்ணப்பங்களும், பதிவு அஞ்சலில் அனுப்பப்படும் கடிதங்களும், சாதாரண அஞ்சலில் அனுப்பப்படும் கடிதங்களும் மாத்திரமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இதைத் தவிர்த்து வேறு மூன்றாமவர் மூலமாகத் தொடர்பு கொண்டு கொடுக்கப்படும் கோரிக்கைகள், விண்ணப்பங்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பது பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட விளம்பரம் தலைமைச் செயலரின் பெயரில் ஏடுகளில் வெளிவந்தது. அமைச்சர்கள், அவர்களது செயலாளர்கள், அவர்களது நேர்முக உதவியாளர்கள் தவிர்த்து மற்றவர்களையெல்லாம் மூன்றாமவர் பட்டியலில் சேர்த்து விளம்பரம் தந்திருப்பது பிரதமர், கவர்னர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் பிரதிநிதிகளையெல்லாம் அவமரியாதை செய்வதைப்போல் உள்ளதே என்பதை உணர்த்தி எதிர்க்கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் பலர் அறிக்கைகள் விடுத்தனர். முரசொலியிலும் கடிதம், கருத்துச் சித்திரம் ஆகியவற்றின் வாயிலாக அந்த விபரீத விளம்பரத்தின் தவறு, சுட்டிக் காட்டப்பட்டது.

எதற்கும் பளார்! பளார்! என்று உடனடியாகப் பத்திரிகைகளில் விளக்கமளிக்கக் கூடிய தலைமைச் செயலர் திரவியம் அவர்கள், எதிர்க்கட்சிகளின் கண்டனம் குறித்து வாய் திறக்கவேயில்லை!

17-ஆம் தேதி வெளிவந்த அந்த விபரீத விளம்பரத்திற்கு, நேற்று 24-ஆம் தேதியன்று முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் விளக்கம் தந்துள்ளார். என்ன விளக்கம் தெரியுமா?

தமிழ்நாட்டில் கவர்னர், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பொதுமக்களிடமிருந்து மனுக்களைப்பெற தமிழக அரசு தடைவிதித்து உத்தர விட்டிருப்பதாகக் கூறப்படுவது சுத்த முட்டாள்தனம்! முதலமைச்சரிடம் நெருக்கமாக இருப்பதாகக் கூறிக் கொண்டு, இடைத் தரகர்களும் மற்றும் சிலரும் பொதுமக்களை ஏமாற்றுவதைத் தடுப்பதே அரசின் விருப்பமாகும்.

இந்த விளக்கம் இன்று சென்னை தினத்தந்தியில், எம்.ஜி.ஆர். பேட்டி என்ற பெயரில், அவர் நிருபர்களிடம் கூறியதாக வெளியிடப்பட்டுள்ளது.

17-ஆம் தேதி, 18-ஆம் தேதி ஏடுகளில் வெளியிட்ட அரசு விளம்பரத்திலேயே, இந்தக் காரணத்தைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி,

முதல் அமைச்சரிடம் நெருக்கமாக இருப்பவர்கள் எனக் கூறிக் கொண்டு இடைத்தரகர்களும் மற்றும் சிலரும் பொதுமக்களை ஏமாற்றுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதால் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்வதுடன், பொதுமக்கள் மனுக்களை அமைச்சர்களிடம் நேரிடையாகவோ அல்லது அமைச்சர்களின் செயலாளர்கள் உதவியாளர்களின் மூலமாகவோ, மக்களின் பிரதிநிதிகளின் மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

என்ற முறையில் வாசகத்தை அமைத்திருக்கலாம் அல்லவா?

வெளியிடப்பட்ட விளம்பர வாசகம் தவறானது என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சுட்டிக்காட்டியது சுத்த முட்டாள்தனம் என்கிறார் முதலமைச்சர்!

இப்படித்தான் விளம்பர வாசகம் இருக்க வேண்டுமென்று அங்கீகாரம் செய்தார் முதலமைச்சர், என்பார் தலைமைச் செயலர்!

நானே அங்கீகாரம் செய்தாலும் உமக்கு புத்திசாலித்தனம் வேண்டாமா? என்று அவரைத் திருப்பிக் கேட்பார் முதலமைச்சர்!

என் செய்வது உடன்பிறப்பே! கோமாளிக்கூத்து நடப்பதைக் கோடிட்டுக் காட்டிக் கண்டித்தால், எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு முட்டாள் பட்டம் சூட்டுகிறார் முதல்வர்! இதற்குப் பெயர்தான் காலத்தின்கோலம்!

அன்புள்ள,

மு. க.

(26-11-1982)

1069. அரிச்சந்திர மகாராஜன்!

உடன்பிறப்பே,

ஈரோடு, நவ. 29 - முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன், ஞாயிறு இரவு இங்கு ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, தமது செலவுப் பொறுப்புகளைச் சமாளிக்க, சென்னையில் சத்யா ஸ்டுடியோ நிலத்தின் ஒரு பகுதியை விற்கப் போவதாகத் தெரிவித்தார்.

இந்தச் செய்தி, சென்னை தினமணி இதழில் மூன்றாம் பக்கத்தின் மேல்முனையில் நவ. 30-ஆம் தேதியன்று வெளியாகியிருக்கிறது.

இந்தச் செய்தியைப் படித்ததும் எனக்குச் சில கடந்தகால நிகழ்ச்சிகள் நெஞ்சில் நிழலாடின.

வருமான வரி பாக்கியைக் கட்டுவதற்காக பதின்மூன்று லட்ச ரூபாய் அ.இ.அ.தி.மு.க. கட்சியில் இருந்து கடன் வாங்கியிருக்கிறேன் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பகிரங்கமாக அறிவித்தார். அந்த அறிவிப்பு எல்லா ஏடுகளிலும் வெளி வந்தது.

ஆனால் அவரது கூற்றை மறுத்து, அவரது கட்சியின் பொருளாளராக இருந்த முன்னாள் அமைச்சர் சௌந்தரபாண்டியன் அவர்கள், எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து கடன் வாங்கியது மூன்றே லட்சம்தான் என்றும், பதின்மூன்று லட்சம் அல்ல! என்றும் தெரிவித்தார். அதற்கு எம்.ஜி.ஆர். எந்த விளக்கமும் அளிக்கவில்லை! அளிக்கவேயில்லை!

கட்சியிலிருந்து கடன் வாங்கியது மூன்று லட்சம்தான் என்றால், மீதி பத்து லட்ச ரூபாய் வருமான வரி பாக்கியை எம்.ஜி.ஆர். அவர்கள் எந்தச் சொந்த நிதி ஆதாரத்திலிருந்து கட்டினார்.

என்று விஷயமறிந்த வட்டாரங்களில் இருந்து வினாக்கள் எழுந்தன! அதற்கும் எம்.ஜி.ஆர். விடையோ, விளக்கமோ அளிக்கவில்லை!

அதற்குப் பிறகு மீண்டும் ஒருமுறை விதிக்கப்பட்ட வருமான வரி பாக்கி சுமார் மூன்று லட்ச ரூபாய்க்காக, தனது வீட்டை விற்றுவிட்டேன் - அதுவும் இன்று காலையில்தான் என்று ஊட்டியிலே ஒரு பொதுக்கூட்டத்திலே பேசினார்.

ஆனால் அந்த வீடு, அவரது வளர்ப்பு மகன் அப்பு என்ற ரவீந்திரன் பெயரால் உள்ள ஆற்காடு முதலி தெரு வீடு என்பதும் - அதாவது எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்கு சொந்தமான வீடு என்பதும் - அந்த வீட்டை வளர்ப்பு மகன் விற்கவும், அதை எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் அவர்கள் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளவும் - வீடு விற்கப்பட்ட பணம் வளர்ப்பு மகன் மூலமாக வருமான வரி பாக்கிக்காகக் கட்டப்பட்டது என்பதும் ஆதாரங்களுடன் வெளி வந்ததும் - எம்.ஜி.ஆர். அவர்கள், ஊட்டியிலே பேசியதைச் சற்று மாற்றிக் கொண்டு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை விற்று வருமான வரி கட்டினேன் என்று சென்னைக்கு வந்ததும் கூறினார்! அதாவது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீட்டை வாங்கிக் கொண்டது எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார்! எப்படியோ அப்போது வருமான வரி கட்டப்பட்டு விட்டது! அந்த வீட்டைத்தான் தனது சொந்த வீடல்ல என்று கூறி, மாதந்தோறும் அரசாங்க வாடகையாக ஆயிரத்து எண்ணூறு ரூபாய், 1977முதல் பெற்று வருகிறார்.

இப்போது உள்ள கணக்குப்படி, பாராளுமன்றத்தில் மத்திய அமைச்சர் அறிவித்துள்ளவாறு எம்.ஜி.ஆருக்கு இருக்கும் வருமான வரி பாக்கித் தொகை ஒன்பது லட்ச ரூபாயாகும்!

இன்று வந்துள்ள தினமணிச் செய்திப்படி, சென்னையில் சத்யா ஸ்டுடியோ நிலத்தில் ஒரு பகுதியை விற்கப் போகிறேன் என்று ஈரோடு நகரில் எம்.ஜி.ஆர். பேசியிருப்பது, இந்த வருமான வரி பாக்கியை முன்னிட்டுத்தான் இருக்குமென எண்ணிடத் தோன்றுகிறது.

உடன்பிறப்பே, இன்று வெளியாகியுள்ள எம்.ஜி.ஆரின் ஈரோட்டுப் பேச்சை நெஞ்சில் நிறுத்திக் கொண்டு, 1979-ஆம் ஆண்டு மார்ச் 22-ஆம் நாள் சட்டப் பேரவை நிகழ்ச்சி குறித்த நடவடிக்கைப் புத்தகத்தைக் கொஞ்சம் கையிலே எடு! தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் 1979 மார்ச் 22 - தொகுதி 27 - எண் 4 என்ற அந்தப் புத்தகத்தில் 541-ஆம் பக்கத்தைச் சற்றுப் புரட்டிப் பார்!

திரு. கே. கந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் ஒரு கிளாரிபிகேஷன் கேட்கிறார், எனது உரையில் குறுக்கிட்டு! என்ன கிளாரிபிகேஷன்? இதோ படி!

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு இந்நாள் முதலமைச்சர் (எம்.ஜி.ஆர்.) அவர்களுக்கு, சத்யா ஸ்டுடியோவுக்கு இடம் கொடுக்க ஒரே நாளில் மூன்று அமைச்சர்களிடம் கையெழுத்து வாங்கி உத்தரவு பிறப்பித்ததாகச் சொன்னார்கள். அது சலுகை அல்லவா என்ற விவரத்தையும் சொல்ல வேண்டும்.

உடனே முதல்வர் எம்.ஜி.ஆர். எழுந்து குறுக்கிட்டு விளக்கம் அளிக்கிறார். இதோ அந்த விளக்கம்:-

நான் மனநிறைவோடு சொல்கிறேன். எப்படிக் கையெழுத்திடப்பட்டது, எப்படிக் கொடுக்கப்பட்டது என்பது கூட அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில்தான் என்பது தெரியும். ஆகவே, என்னை இதில் உட்படுத்தமாட்டார் என்று நான் கருதுகிறேன். எப்படிக் கேட்கப் பட்டது, எப்படிக் கொடுக்கப்பட்டது என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அந்த ஸ்டுடியோவுக்கு நான் சொந்தக்காரனில்லை என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். இப்போது எனக்கு அதில் சொந்தமில்லை. என்னுடைய பங்குகளையெல்லாம் நான் கொடுத்து விட்டேன்.

உடன்பிறப்பே, சட்டசபை நடவடிக்கைப் புத்தகத்தில் பதிவாகியுள்ள முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் விளக்கம் இது! சத்யா ஸ்டுடியோ தனக்குச் சொந்தமில்லையென்றும், தனது பங்குகளையெல்லாம் கொடுத்து விட்டேன் என்றும் சட்டப்பேரவையிலேயே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

அரசாங்க நிலத்தை சத்யா ஸ்டுடியோவுக்கு நீண்ட காலத்திற்குக் குறைந்த தொகைக் குத்தகைக்கு கொடுத்தது குறித்து எழுப்பப்பட்ட புகார்கள் பற்றிப் பேரவையில் கழக ஆட்சிக்காலத்திலும், பிறகும் விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன! எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சரான பிறகு, அந்தப் பிரச்சினை 1979 மார்ச் 22-ஆம் நாள் மீண்டும் சட்டப்பேரவையில் எழுப்பப்பட்டபோதுதான் முதல்வர் எம்.ஜி.ஆர். குறுக்கிட்டு, சத்யா ஸ்டுடியோ தனக்குச் சொந்தமில்லையென்று

கூறியிருக்கிறார். தனக்கிருந்த பங்குகளையெல்லாம் கொடுத்து விட்டதாகவும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால் 1979-இல் அப்படிக் கூறிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், கடந்த ஞாயிறன்று ஈரோடு நிகழ்ச்சியில்,

எனது செலவுப் பொறுப்புகளைச் சமாளிக்க, சென்னையில் சத்யா ஸ்டுடியோ நிலத்தின் ஒரு பகுதியை விற்கப் போகிறேன் என்று அறிவித்தது எப்படி? இவருக்குச் சொந்தமில்லாத ஸ்டுடியோவின் நிலத்தை - எந்தத் தொடர்பும் இல்லாமல் விலக்கிக் கொண்ட ஒரு ஸ்டுடியோவின் நிலத்தை இவர் எப்படி விற்று, சொந்தச் செலவுகளைச் செய்துகொள்ள முடியும்?

இந்தச் சந்தேகங்கள் எழுவது எல்லோருக்கும் இயற்கைதானே!

அவரேதான் இதற்கும் விளக்கம் அளிக்க வேண்டும்! அளிப்பாரா? அரிச்சந்திர மகாராஜன்!

அன்புள்ள,

மு. க.

(01-12-1982)

1070. எரிமலையின் மீதமர்ந்து மகுடி ஊதுவதா?

உடன்பிறப்பே,

இலங்கையில் எதேச்சதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது! இஃதென்ன ஆச்சரியம் எனக் கேட்கத் தோன்றும் - ஜெயவர்த்தனே, தன்னை அப்படியொரு நிலைக்கு ஆக்கிக் கொள்ளத்தானே அரசியல் சட்டங்களையே கொட்டிக் கவிழ்த்து, ஏறத்தாழ ஒரு முடிமன்னரைப் போல உலா வந்து கொண்டிருக்கிறார் என்று உலகமே கூறும்போது, எதேச்சதிகாரம் என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் சில காலமாகப் பழகிப் போய்விட்ட வார்த்தைதான்!

தமிழ் ஈழம் கேட்கும் தீவிரவாத இளைஞர்கள், தூக்கு மேடையை நோக்கி வரிசைப்படுத்தி நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதற்கிடையே சிறையிலே அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள்! இன்னமும் இழைக்கப்படும் கொடுமைகள் - அம்மவோ! எழுதவே கைநடுங்கும்! சொல்லவே நா நடுங்கும்! நினைக்கவே நெஞ்சு நடுங்குகிறதே!

இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கத்தின் வீரத்தந்தை செல்வநாயகம் அவர்களால் தொடங்கப்பட்ட ஏடு சுதந்திரன்! செல்வா நிறுவிய அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பட்டு வந்தது! இப்போதும் செல்வா அவர்களின் தீரமைந்தன் வழக்கறிஞர் சந்திரகாசன் அவர்களே அந்த அறக்கட்டளையின் தலைவர். சுதந்திரன் இதழ், தமிழ்ஈழ விடுதலைப் போரின் முரசமாக இருத்தல் கண்டு, அதன் ஆசிரியர் கோவை மகேசன் அவர்களைப் பலமுறை இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்று விசாரணை என்ற பெயரால் மிரட்டியுள்ளனர். இறுதியாக, சுதந்திரன் இதழே வெளிவரக்கூடாது என்று ஜெயவர்த்தனே அரசு தடை விதித்தது. அலுவலகத்திற்கு அரசாங்கம் சீல் வைத்துப் பூட்டியது. சுதந்திரன் நிர்வாகம் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளது. இடையிலே மூச்சுவிட்டுக்கொள்ள, சுதந்திரனை வெளியிடலாமென அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

அடக்குமுறைக் கொடுமையால் ஒரு இயக்கத்தை அழித்துவிடலாமெனக் கனவு கண்ட எதேச்சதிகாரிகளின் பரிதாப முடிவுகளை வரலாறு உணர்த்திக் கொண்டுதானிருக்கிறது. அதனைப் படித்தும் படிக்காதவரைப்போல, இலங்கையின் அதிபர் ஆணவத்தின் உச்சாணிக் கொம்பில் ஏறி நின்று ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார். அவரால் ஏவி விடப்பட்ட இராணுவத்தினர், விடுதலை வீரர்களுக்கு உதவியதாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விரிவுரையாளர் நித்யானந்தனையும், அவரது துணைவியார் நிர்மலாவையும் கைது செய்து காவலில் வைத்துள்ளது மட்டுமல்ல, விடுதலை இயக்கத்தினருக்கு அபயம் அளித்தார்கள் என்று குற்றம்சாட்டப்பட்டு, கத்தோலிக்கக் குருமார்களையும் கைது செய்து இராணுவச் சிறையில் அடைத்துள்ளனர். சிங்கராயர், சின்னராஜா, பால்நட்சத்திரம், ஜீவா மற்றும் சில கத்தோலிக்கப் பாதிரியார்கள் காவலில் வைக்கப்பட்டுள்ள செயலைக் கண்டித்து திரு. அமிர்தலிங்கம் அவர்களும், இலங்கையில் உள்ள மதத் தலைவர்களான சோமசுந்தர பரமாச்சாரியார், சுப்பிரமணிய சாஸ்திரி, மௌலவி முகமது மீரான் முகையதீன், பாட்சா மொகிதின்பிச்சை, பிராங்க் மார்கஸ் பர்னாண்டோ ஆகியோரும் அறிக்கைகள் விடுத்துள்ளனர்.

ஜெயவர்த்தனே ஆட்சியின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டித்து, இலங்கைத் தமிழர் வீறுகொண்டெழுந்துள்ளனர். ஏடுகளில் செய்திகள் இருட்டடிப்புக்கு ஆளாகின்றன! அல்லது தடுக்கப்படுகின்றன!

பத்திரிகைகள் உண்மை பேச மறுத்தால் மதில்சுவர்கள் உண்மை பேசும்!

- என்ற வாசகங்கள் சுவர்களில் எழுதப்பட்டு, நாள்தோறும் நடைபெறும் அடக்குமுறை தர்பார் குறித்துச் செய்தி தரும் ஏடுகளாக மதிற்சுவர்களையே பயன்படுத்திக் கொள்கிறார்கள் ஈழத்தமிழ் தீவிர இளைஞர்கள்!

இப்படி எரிமலையின் மீது அமர்ந்து மகுடி ஊதுகிற கோமாளித்தனத்தை ஜெயவர்த்தனே எத்தனை நாளைக்கு நடத்திக் கொண்டிருக்கப் போகிறாரோ?

அன்புள்ள,

மு. க.

(03-12-1982)

1071. இன்றுதான் அவர் பிறந்தநாள்!

உடன்பிறப்பே,

ஆசிய விளையாட்டுப் போட்டியில், தமிழ்நாடு தனக்கென ஒரு பெருமையை நிலைநாட்டுகிற வண்ணம், வெற்றி எதனையும் பெற்று இந்தியாவுக்குச் சிறப்பு மிகுந்திட ஆர்வம் காட்டிடவில்லையென்று, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு கவலை தெரிவித்து முதல்பக்கத்துக் கட்டுரையொன்றை எழுதியுள்ளது. ஒரு வார காலத்திற்கு மேல் டெல்லியில் தங்கி ஆசிய விளையாட்டுகளைக் காணுகிற வெளிவேடத்தைத் தவிர, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விளையாட்டு சம்பந்தமாக அளித்த பல உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமல் தூங்குகின்றன என்றும் எக்ஸ்பிரஸ் ஏடு ஏக்கம் தெரிவித்துள்ளது.

1979-ஆம் ஆண்டு டேவிஸ்-கப் டென்னிஸ் போட்டியின் போது, எம்.ஜி.ஆர். சென்னையில் ஒரு பெரிய விளையாட்டு ஸ்டேடியம் கட்டப்போவதாக உறுதிமொழி அளித்திருந்தார். அந்த உறுதிமொழியையொட்டி நடைபெற்ற ஒரேயொரு தொடர் நடவடிக்கை என்னவென்றால், அந்த விளையாட்டு ஸ்டேடியம், பிரசிடென்சி கிளப்புக்குப் பின்புறமாகக் கட்டப்படும் என்ற மற்றொரு அறிவிப்புத்தான்! அதைத் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை. அதைப் போலவே, நேரு ஸ்டேடியத்தை இரவிலும் விளையாடத்தகுந்த அளவுக்கு ஒளிவிளக்குகள் அமைக்கப்படும் என்ற உறுதிமொழியும் தரப்பட்டது. மாநகராட்சி விளையாட்டு அரங்குகள் கூட இப்போது சத்துணவுத் திட்டத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் உள்ளன.

என வருந்தியெழுதியுள்ள இந்தியன் எக்ஸ்பிரஸ், முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் உறுதிமொழிகள் காற்றோடு கலந்து விடுகிற செய்தியினையும் சுட்டிக் காட்டியுள்ளது.

ஒன்றா? இரண்டா? இப்படிப்பட்ட உறுதி மொழிகள்!

தாயின் மீது ஆணையாகக் கள்ளுக்கடை, சாராயக் கடைகளைத் திறக்க மாட்டேன் என்று உறுதிமொழி அளித்தவர்தானே!

சினிமாவில் நடிக்கச் சட்டம் இடம் தராவிட்டால், முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அந்தப் பதவியில் என் கட்சி நண்பர் ஒருவரை உட்கார வைத்துவிட்டு, சினிமாவில் நடிப்பேன் என்று 1980-இல் அவர் அறிவித்து, அந்த அறிவிப்பு எட்டு கலம் செய்தியாகக் கொட்டை எழுத்துகளில் ஏடுகளில் வெளி வரவில்லையா?

இப்படி எத்தனை எத்தனையோ அறிவிப்புகள்! உறுதிமொழிகள்! நாளேடுகளில் முதல்பக்கச் செய்திகள்! விளையாட்டை ஊக்குவிக்கும் உறுதிமொழிகள் நிறைவேற வில்லையென்று எக்ஸ்பிரஸ் விசாரம் கொள்கிறதே! இதைப்போல எம்.ஜி.ஆரின் எத்தனை உறுதிமொழிகள் விளையாட்டாகவே போயிருக்கின்றன!

இதோ ஒரு உறுதிமொழி! முதலமைச்சர் அறிவித்தது!

1982 செப்டம்பர் ஒன்பதாம் தேதி சட்டப்பேரவை நிகழ்ச்சியின் ஒரு பகுதி, படித்துப் பார்!

ஷேக்அப்துல்லா சிறை வைக்கப்பட்டிருந்த இடங்கள், தமிழகத்தில் உதகமண்டலம், கொடைக்கானலில் கோகினூர் மாளிகை! நான் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன், மறைந்துவிட்ட அந்த மாவீரனின் நினைவாகக் கொடைக்கானலில் இருக்கிற கோகினூர் மாளிகையை கோகினூர் ஷேக்அப்துல்லா மாளிகை என மாற்றிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். கோகினூரும் இருக்கட்டும். ஷேக்அப்துல்லா பெயரும் இருக்கட்டும். ஏனென்றால் அவரே ஒரு கோகினூர் வைரம்தான்! எனவே, கொடைக்கானலில் அவர் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு ஷேக்அப்துல்லா அவர்களின் பெயரைச் சூட்டவேண்டும் என்று தமிழக அரசை, குறிப்பாக முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டு - வாழ்க காஷ்மீர் சிங்கம் ஷேக்அப்துல்லாவின் புகழ்! என்று கூறி அமைகிறேன்.

இந்த வேண்டுகோள், ஷேக்அப்துல்லா மறைவு குறித்து சட்டப் பேரவையில் இரங்கல் தீர்மானம் கொண்டு வந்தபோது நான் விடுத்ததாகும்!

இறுதியாகப் பேசிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்த உறுதிமொழி என்ன தெரியுமா? அது, இதோ :-

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடைக்கானல் கோகினூர் மாளிகைக்கு ஷேக்அப்துல்லாவின் பெயரையும் இணைத்து கோகினூர் ஷேக்அப்துல்லா மாளிகை என்று பெயரிட வேண்டுமென்ற எண்ணத்தை வெளியிட்டார்கள். அது, அத்தனை தமிழ் மக்களினுடைய எண்ணத்தின் எதிரொலி என்பதை ஏற்றுக் கொள்வதோடு - நாங்கள் அதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறோம் என்கிற வகையில், அவர் மறைந்து விட்டாலும்கூட அவர் நினைவு மக்களுக்கு எப்போதும் மனதில் பதியத் தக்க வகையில், வருகிற டிசம்பர் மாதம் அவருடைய பிறந்தநாள் அன்று அந்தப் பெயர் அங்கே சூட்டப்படும் என்றும், அந்த நிகழ்ச்சிக்கு இங்கேயிருக்கிற அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கலந்துகொண்டு, அதற்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படியொரு உறுதிமொழி சட்டப்பேரவையில், முதலமைச்சரே அளித்தார்! எத்தனையோ உறுதிமொழிகளைப் போல சட்டப் பேரவையின் மின்விசிறிகளின் காற்றில் இந்த உறுதிமொழியும் கலந்து விட்டது!

டிசம்பர் திங்கள் ஷேக்அப்துல்லா பிறந்த தேதி என்ன தெரியுமா?

1905-ஆம் ஆண்டு டிசம்பர் ஐந்தாம் தேதி, ஷேக்அப்துல்லா காஷ்மீரில் உள்ள சவுரா என்ற இடத்தில் பிறந்தார்!

உடன்பிறப்பே, நீ இந்தக் கடிதத்தை டிசம்பர் 5-ஆம் தேதிதான் (இன்று) படிக்கிறாய்!

அகக்கண்ணால் கொடைக்கானலை நோக்கிடு! கோகினூர் மாளிகை வாசலில் விழா! முதல்வரும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் குழுமியிருக்கிறார்கள்! கோகினூர் ஷேக்அப்துல்லா நினைவு மாளிகை என்ற பெயர்ப் பலகை திறக்கப்படுகிறது!

கண்ணை மூடிக்கொண்டே அந்தக் காட்சியை ரசித்திடுக! திறந்தால் காட்சி மறைந்துவிடும்! காரணம், கற்பனைதானே!

அன்புள்ள,

மு. க.

(05-12-1982)

1072. பொறுத்துக் கொண்டிருக்க முடியாது!

உடன்பிறப்பே,

நீதிக்கட்சி காலத்திலே சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் சிலவற்றில் மதிய உணவுத் திட்டம் இருந்தது. ஆனால் அந்தத் திட்டம், சென்னை மாநகரில் சில பள்ளிகளுடன் நின்றுவிட்டதே தவிர, மாநில முழுவதுமுள்ள கிராமப் பள்ளிக்கூடங்களுக்குப் பரவிடவில்லை. முதலமைச்சர் பொறுப்பினைப் பெருந்தலைவர் காமராஜர் ஏற்றிருந்தபோது, கல்வித்துறை இயக்குநராக திரு. என்.டி.எஸ். அவர்களின் ஒத்துழைப்புடன் மாநிலம் தழுவிய திட்டமாக மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆரம்பப் பள்ளிகள் இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாதென்று முனைப்புடன் செயல்பட்ட காமராஜர் அவர்கள், அந்தப் பள்ளிகளில் மதிய உணவு திட்டத்தையும் நடைமுறைப்படுத்தினார். சுமார் இருபது லட்சம் குழந்தைகள் மதிய உணவு சாப்பிடக்கூடிய அந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற்று வந்து, இப்போது இந்த ஆட்சியிலே நூறு கோடி ரூபாய் திட்டமாக விரிவாக்கம் செய்யப்பட்டு, சுமார் அறுபது லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு என்ற பெயரால் மதிய உணவு வழங்கப்படுகிறது. விடுமுறை நாட்களிலும் இப்போது பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு உண்டு! அந்தக் குழந்தைகளுக்கு இப்போது எல்லா நாட்களுமே விடுமுறை நாட்கள்தான்! ஏனெனில் எந்த நாளிலும் அவர்களுக்குப் பள்ளிகளில் படிப்பு சொல்லிக் கொடுப்பதில்லை!

காமராஜர் காலத்திலேயே இந்தத் திட்டம் இருந்தது என்று காங்கிரஸ் தலைவர்கள் சிலர் கூறி விட்டதைப் பத்திரிகையில் படித்த முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்குக் கோபம் வந்துவிட்டது. 1920-இல் நீதிக்கட்சி காலத்தில் தியாகராயர் காலத்திலேயே கொண்டு வரப்பட்ட திட்டம் என்று கூறிய அவர் அத்துடன் நிறுத்தாமல், 1932-ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியல் நடைபெற்றபோது பள்ளி மாணவர்களுக்குத் தியாகராயர் கதராடைகள் வாங்கித்

தந்தார் என்றும் சொற்பொழிவாற்றி, அந்தப் பொழிவு அவரது கட்சிப் பத்திரிகையிலேகூட வெளியிடப்பட்டுவிட்டது. 1925-ஆம் ஆண்டு இயற்கை எய்திவிட்ட தியாகராயர் அவர்கள் 1932-ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியலின்போது எப்படிக் கதராடை வழங்கியிருக்க முடியும் என்ற கேள்வி எழுவது நியாயந்தானே! சென்னை கார்ப்பரேஷன் வாசலில் உள்ள தியாகராயர் சிலையில் அவர் மறைந்த ஆண்டு 1925 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை 1935 என்பதை அந்தச் சிலையில் 1925 என்று தவறாக செதுக்கி விட்டார்கள் என்று கூறி எம்.ஜி.ஆர். அந்தச் சிலையிலே தேதியை மாற்றம் செய்யவேண்டும்! அல்லது கள்ளுக்கடை மறியல் 1922-இல்தான் நடைபெற்றது, அதில் தியாகராயர் மாணவர்களுக்குக் கதராடையை வழங்கி விட்டு 1925-இல் மரணமடைந்தார் என்று சரித்திரத்தையாவது மாற்றி எழுதி, அந்த நூலை பாடநூல் வெளியீட்டுக் கழகத்தின் மூலம் உடனடியாக அச்சியற்றி விநியோகிக்க வேண்டும்.

இரண்டு நாளில் கோப்புகளைக் காட்டப் போகிறேன் என்று முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். தியாகராயர்தான் மதிய உணவுத் திட்டத்தின் வழிகாட்டி என்று நிரூபிக்கிற கோப்புகளை அவர் காட்டுவதுடன், 1932-இல் கள்ளுக்கடை மறியல் நடந்தபோது தியாகராயர் கதராடைகளை வழங்கினார் என்று எம்.ஜி.ஆர். பேசியுள்ளதற்கு ஆதாரமான கோப்புகளையும் காட்டுவார் என்று அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

கள்ளுக்கடை மறியலில் தியாகராயர் பெயரை எம்.ஜி.ஆர். இழுக்கப் போய் இதுதான் சமயமென்று சில கட்சித் தலைவர்களும், குறிப்பாகக் காங்கிரஸ் தலைவர்கள் சிலரும் திராவிடர் இயக்கத்தையே கேலி பேசத் தொடங்கியிருப்பது கண்டிக்கத் தக்கதாகும்!

விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளவில்லை என்ற ஒரே காரணத்திற்காக, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குப் பாடுபட்ட நீதிக்கட்சியையோ, திராவிடர் இயக்கத்தையோ குறை கூறுபவர்கள், அந்த இயக்கத்தின் வாயிலாக மறைமுகமாகவோ அல்லது நேரிடையாகவோ சமுதாயத்தில் முன்னேறியிருப்பவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது! நன்றியுடன் நினைத்துப் பார்க்க வேண்டும்!

மாளிகையிலிருந்த இயக்கத்தை மண்குடிசைகளுக்கு அழைத்து வந்து, அதன் தலைவராகப் பெரியாரைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு செய்து, வெள்ளையர் கொடுத்த பட்டங்களையெல்லாம் வீசியெறியுமாறு தீர்மானம் நிறைவேற்றிய அண்ணா அவர்களும், அந்த அண்ணா, தனது தலைவராக ஏற்றுக்கொண்ட பெரியார் அவர்களும், பெரியாரால் பாராட்டப்பட்ட வெள்ளுடை வேந்தர் தியாகராயர் அவர்களும் இப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் ஏதோ பேசிவிட்டார் என்பதற்காக சில கட்சிக்காரர்களால் பிரச்சினைக்குரியவர்களாக்கப் படுவது வருந்தத்தக்கது.

தமிழகத்தில் காங்கிரஸ் எனும் விடுதலை இயக்கத்தைத் தொடக்க காலத்தில் வளர்த்தவர் வைக்கம் வீரர் பெரியார் என்பதையே மறந்துவிட்டு, திராவிடர் இயக்கத்தின் நாட்டுப்பற்றினைக் கேலிபுரிவது உண்மைக்குத் திரை போடும் காரியமாகும்!

எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நினைவூட்ட வேண்டியவனாக இருக்கிறேன். ஏதோ சத்துணவு திட்டம் நடைபெறுகிறது - பல குறைபாடுகள்! ஊழல்கள்! அவற்றை ஒழுங்குபடுத்த முயற்சிகளை மேற்கொள்ளாமல் சத்துணவையே ஒரு மையப் பிரச்சினையாக்கி, சரித்திர நாயகர்களைக் களங்கப்படுத்தவும், சரித்திரக் குறிப்புகளை மாற்றிக் கூறவுமான நிலைமைக்கு சிக்கல்களைத் தோற்றுவிக்காமல் இருங்கள்!

உடன்பிறப்பே, இதனை எம்.ஜி.ஆர். கேட்பாரோ இல்லையோ எனக்குத் தெரியாது - அவருடைய பேச்சுக்களை வைத்துக்கொண்டு திராவிடர் இயக்கத்திற்கு யாரும் களங்கம் கற்பிக்க முன்வருவார்களேயானால், அதனை நாம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது!

அன்புள்ள,

மு. க.

(07-12-1982)

1073. அதுதான் அவரது இயல்பு!

உடன்பிறப்பே,

வரும் டிசம்பர் 19-ஆம் நாள் நமது கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் பிறந்த நாள். இந்த ஆண்டு பிறந்தநாள் தனிச்சிறப்புடைய நாளாகும். அவருக்கு அறுபது வயது நிறைவுற்று மணி விழா கொண்டாடும் நாளாகும். அதற்கெனத் தலைமைக் கழகத்தின் சார்பில் மணிவிழாக்குழு ஒன்று அமைக்கப்பெற்று அக்குழுவின் தலைவராக நானும், செயலாளர்களாக சாதிக், நாஞ்சிலார் ஆகியோரும் பொறுப்பேற்றுக்கொண்டு, விழாக் குழுவினர் ஒத்துழைப்புடனும், சென்னை மாவட்டக் கழகத்துச் செயல்வீரர்களின் உறுதுணையுடனும், இளைஞர் அணியினர், இலக்கிய அணியினர், மகளிர் அணியினர் வழங்கிடும் ஆர்வப்பெருக்குடனும் விழா சிறப்புறுவதற்கான ஏற்பாடுகளைக் கவனித்து வருகிறோம். கழகத்தின் எந்தவொரு நிகழ்ச்சியானாலும், அந்த நிகழ்ச்சி எழிலும், ஏற்றமும் குலுங்கிட நடைபெற வேண்டுமென்பதில் நான் மிகுந்த அக்கறை காட்டுவேன் என்பதும், அதைப்போலவே இந்த நிகழ்ச்சியிலும் அக்கறை காட்டுகிறேன் என்பதும் நீ அறியாததல்ல!

பேராசிரியருக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துரை நல்கிடப் பெரியவர் பக்தவத்சலனார் அவர்கள், இசைவு தந்துள்ளார்கள். மணிவிழா மலரை வெளியிட முத்தமிழ்க்காவலர் அண்ணன் விசுவநாதம் அவர்கள், ஒப்புதல் அளித்துள்ளார்கள். பேரறிஞர் அண்ணாவின் பேரன்புக்குரியவரான பேராசிரியர் என்.ஜி. ரங்கா அவர்களும், மற்றும் தமிழ் அறிஞர்கள், அரசியல் விற்பன்னர்கள், இலக்கிய வித்தகர்கள் விழாவில் கலந்து கொண்டு மணிவிழா வாழ்த்துரையும், பாராட்டுரையும் வழங்க இருக்கிறார்கள். குழுவின் சார்பாகப் பேராசிரியருக்கு டீசல் அம்பாசிடர் கார் ஒன்று மணிவிழாப் பரிசாக அளிக்கப்பட இருக்கிறது.

காலையிலே கருத்தரங்கம்! நமது கழகத்தின் போர்முரசங்கள் ஒலிக்கின்றன!

மாலையிலே கவிஞரேறு முடியரசனார் தலைமையிலே கவியரங்கம்! தமிழ், தென்றலாக - புயலாக - தியாக - தீபச்சுடராக - எப்படியெல்லாம் உருவெடுக்கும் என்பதைக் காட்டிடும் கவியரங்கில் கவிஞர் பெருமக்களின் கற்பனையூற்று!

இப்படியொருவிழா பெரியார் திடலில், சென்னையில்! மாநாட்டுப் பந்தல்போலவும் இருக்க வேண்டும், மணப்பந்தல் போலவும் இருக்கவேண்டும் அந்த விழாப் பந்தல் என்று சென்னை மாவட்ட உடன்பிறப்புகளிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

மணிவிழாவைப் பேராசிரியருக்கு டிசம்பர் 19-ஆம் நாள் எதற்காக நடத்த வேண்டும் என்று யாரும் கேட்கமாட்டார்கள்! ஏனென்றால், பேராசிரியர் பிறந்தநாள் டிசம்பர் 19-ஆம் நாள் அன்றுதான் வருகிறது!

பிறந்தநாளிலேயே பேராசிரியரின் மணிவிழாவைக் கொண்டாட வேண்டுமென்று ஏற்பாடுகளை மேற்கொண்டது நமது குடும்ப பாச உணர்வுக்கு அடையாளம்!

அந்த உணர்வுக்கு ஏற்ப விழா நடைபெறத்தான் போகிறது! நீயும் வந்து உனது பாசத்தைப் பொழியத்தான் போகிறாய்!

அதற்கிடையே ஒன்றை உனக்கும், உன் வாயிலாக நாட்டுக்கும் தெரிவிக்க வேண்டிய நிலையை, எனக்குத் தமிழக முதல்வர் எனது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்!

திடீரென்று அவரது ஏட்டில் ஒரு விளம்பரம்! டிசம்பர் 19-ஆம் நாள் சென்னையில் எம்.ஜி.ஆர். கலந்துகொள்ளும் கூட்டம்! அதுவும் என்ன கூட்டம்? அவரது கட்சியில் மறைந்து விட்ட தொண்டர்களின் குடும்பத்துக்கும், மொழிப் போர் வீரர்களுக்கும் நிதியளிப்புக் கூட்டம்! நிதியளிப்பதை யாரும் தடுக்க மாட்டார்கள்! வரவேற்கவே செய்வார்கள்!

ஆனால் மொழிப்போர் தியாகிகளின் நாள் ஜனவரி திங்கள் 25-ஆம் நாள்! ஆனாலும் அந்த தியாகிகள் குடும்பத்துக்கும், தனது கட்சித் தொண்டர்கள் குடும்பத்துக்கும் நிதியளிக்கும் கூட்டத்தை டிசம்பர் 19-ஆம் நாள் என்று திடீர் என்று அறிவித்துள்ளார்!

தமிழகத்தில் தீர்க்கப்பட வேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் குவியல் குவியலாகக் கிடக்கும்போது, அவைகளைப் பற்றி நண்பர் எம்.ஜி.ஆருக்குக் கவலையில்லை! கழகம் என்ன செய்கிறது! அதற்கு ஏட்டிக்குப் போட்டியாக என்ன செய்யலாம்! என்பதிலேயே தனது கவனம் முழுவதையும் செலுத்துகிறார் என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு தேவையே இல்லை!

நான் நீதிகேட்டு நெடிய பயணம் செல்வதாக அறிவித்தபோது, அவரும் பயணம் செய்வதாக உடனடியாக அறிவிப்புக் கொடுத்தார். பெரியகுளம் தேர்தல் முடிந்து நான் நன்றியறிவிப்புக் கூட்டத்துக்குச் செல்கிறேன் என அறிவித்தால், அவரும் உடனே தேதிகளை அறிவிக்கிறார்! விளம்பரங்கள் செய்யப்படுகின்றன! அறிவித்தபடி செல்கிறாரோ இல்லையோ, அப்படியொரு எரிச்சல் அவருக்கு உடன்பிறந்த நோயாகிவிட்டது!

உடன்பிறப்பே, 1970-ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட நமது கழகக் கண்மணிகள், உடன்பிறப்புகள், இவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கும், வசதியற்று வறுமைநிலையில் ஆழ்ந்த கழகக் குடும்பங்களுக்கும், தீக்குளித்தோர் குடும்பங்களுக்கும், ஆறுதல் நிதியாக இந்தப் பனிரெண்டு ஆண்டுகளில் வழங்கியுள்ளது மாத்திரம் பத்து லட்ச ரூபாய்க்கு மேற்பட்டதாகும்! விபரமான கணக்கே பெயர்வாரியாக இருக்கிறது.

மிசாக் கைதிகளாக இருந்த கழகத்தினர் குடும்பங்களில் வசதியற்ற குடும்பங்களுக்கு மாதந்தோறும் உதவி வழங்கிய வகையில் மட்டும் இரண்டு லட்ச ரூபாய்க்குமேல் தலைமைக் கழகம் அளித்துள்ளது.

என்னவோ, எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் திடீரென்று டிசம்பர் 19-ஆம் நாள் அன்றுதான் தொண்டர்கள் குடும்பங்களுக்கு நிதி வழங்கும் அவசர அவசியம் ஏற்பட்டு விட்டதுபோல - வேண்டுமென்றே, திட்டமிட்டு, நமது பேராசிரியர் மணிவிழா நடைபெறும் நாளில் ஒரு போட்டி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறார் என்றால், அது அவரது இரத்தத்தோடு கலந்த இயல்பு என்றுதான் நல்லறிவாளர்கள் கருதுவார்கள்!

நாம் முன்கூட்டியே அறிவித்துள்ள மணிவிழா நிகழ்ச்சிக்குப் போட்டி நிகழ்ச்சியாக ஒரு கூட்டம் நடத்துகிற குறுகிய எண்ணம் ஏற்படுகிறதே தவிர, டிசம்பர் 5-ஆம் நாள் ஷேக்அப்துல்லாவின் பிறந்த நாளன்று அவர் சிறையிலிருந்த கொடைக்கானல் மாளிகைக்கு கோகினூர் ஷேக்அப்துல்லா நினைவு மாளிகை எனப் பெயர் சூட்டும் விழா நடைபெறும் என்று சட்டப்பேரவையில் செய்த அறிவிப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற நினைவு எம்.ஜி.ஆருக்கு ஏற்படவில்லை!

இதுதான் அவரது இயல்பு! இதை நாடு புரிந்து கொண்டுதானிருக்கிறது! அதற்கு, மேலும் ஒரு சான்றுதான் சென்னையில் அவர் 19-ஆம் தேதி நடத்தப்போகும் நிதியளிப்புப் போட்டிக் கூட்டம்!

உடன்பிறப்பே, நீ அதனை அலட்சியப்படுத்தி விட்டு நமது அன்புக்குரிய பேராசிரியரின் மணிவிழா, சீரோடு நடைபெற சிங்க நடை போட்டு வா! சிரித்த முகத்துடன் வா! சிறுமதியாளர்களின் செயல்கண்டு நாடு தெளிவு பெறட்டும்! வா, உடன்பிறப்பே வா!

அன்புள்ள,

மு. க.

(08-12-1982)

1074. அவருக்குப் புரிந்திடும் மொழியில்!

உடன்பிறப்பே,

இன்று காலையில் உனக்கு இந்தக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கும்போது, சென்னையில் மகளிர் அணியினர் திருமதி சற்குணம் தலைமையிலும், திருமதி அனுசூயா பிர்மானந்தன் முன்னிலையிலும் ஆயிரக்கணக்கானோர் கோட்டை நோக்கி ஊர்வலம் செல்வதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தாங்க முடியாத அளவுக்கு சென்னை மாநகரில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு, எத்தனையோ முறை எத்தனையோ வகைகளில் எடுத்துச் சொல்லியும்கூட இந்த அரசு, தனது செவிகளைக் கெட்டியாக மூடி வைத்துக் கொண்டு மக்கள் பிரச்சினைகளைத் தவிர, மற்ற பிரச்சினைகளில் அக்கறை செலுத்துவதைக் கண்டிக்கும்முகத்தான் சென்னை நகரத்துப் பெண்கள், காலிப் பானைகளைத் தூக்கிக் கொண்டு இன்று காலை பத்து மணிக்கு ஊர்வலம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

மக்கள் பிரச்சினைகளைத் தவிர, மற்ற பிரச்சினைகளைக் கவனிக்கத்தான் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நேரம் போதவில்லையென்பதைச் சுட்டிக் காட்டி ஒரு வாரத்திற்கு முன்பு முரசொலியில் கடிதம் எழுதினேன். பின்னர் 13-12-82 சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் விரிவாக விளக்கிப் பேசினேன்.

பெரியாரின் மாணவராக - தொண்டராக - பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக - இந்தத் தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவராக - தமிழ்மானம் காத்திடும் காவலராக - நாவலருக்கு அன்றும், இன்றும்கூட நண்பராக - ஒருகாலத்தில் இன்றைய முதல்வர் எம்.ஜி.ஆரின் அன்புக்கும் உரியவராக - என்றென்றும் நம் நெஞ்சம் நிறைந்தவராக - நம்மிடம்

இல்லாது பிற அணிகளில் இருந்தாலும், அத்தகைய நீண்டநாள் இயக்கத்தவர்களின் பாசத்திற்கு உரியவராக - எத்தனை சோதனை வந்தாலும் நம் கழகம்கட்டிக் காக்கும் உறுதிபடைத்த அடலேறாக விளங்குகின்ற நமது நெஞ்சம் நிறைந்த பேராசிரியர் அவர்களுக்கு, அறுபது வயது டிசம்பர் 19-ஆம் நாள் நிறைவுற்று அறுபத்திஒன்றில் அடியெடுத்து வைக்கிறார் என்ற மகிழ்ச்சியைக் கொண்டாட மணிவிழா எடுக்கிறோம். ஆனால் நாடாளும் முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கோ, அவரது கட்சியில் இறந்து போனவர்கள், மொழிப் போரில் மடிந்தவர்கள் ஆகியோர் குடும்பங்களுக்கு நிதி வழங்க வேறுநாள் கிடைக்கவில்லை. நாம் மணிவிழா கொண்டாடும் அதேநாளில்தான் சென்னையில் அவரும் அந்த நிதியளிப்பு விழாவை ஏற்பாடு செய்து பெரிய அளவில் விளம்பரங்களைச் செய்து வருகிறார். இது முறையல்ல, நாகரிகமாகாது என்று எடுத்துக் காட்டியும் அவர் கேட்பதாக இல்லை! அவர் கட்சியில் உள்ளவர்களேகூட இந்த அரசியல் அநாகரிகத்தை நினைத்துப் பார்த்திடுவர்; ஆனால் சொல்லிடத் துணிவற்றோர் பாபம்!

இப்படித்தான் போட்டி அரசியல் நடத்துவேன்! மக்கள் பிரச்சினை தவிர மற்ற பிரச்சினைகளைத்தான் கவனிப்பேன்! என்று எம்.ஜி.ஆர். முடிவெடுத்து அதிலே மூர்க்கத்தனமான பிடிவாதம் காட்டிச் செயல்படும்போது - நமக்கும் வேறுவழியில்லாமல் அவரைச் சந்திக்க அவரது போர்முறையைத்தான் பின்பற்ற வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அவர் மற்ற பிரச்சினைகளுக்காக நம்மோடு மோதிட முனைந்திடும்போது, நாம் மக்கள் பிரச்சினைகளுக்காக அவரது அரசோடு மோதிட வேண்டிய அவசியத்தைப் புறக்கணித்து விட முடியாதல்லவா?

அதன் முடிந்த முடிவுதான் இன்று சென்னையில் மகளிர் அணியினர் நடத்திடும் காலிப்பானை பேரணி! பானை இங்கே! தண்ணீர் எங்கே? என்ற முழக்கம்! கைது செய்யப்பட்டால் அதையும் ஏற்கும் உறுதி!

என் செய்வது! அவருக்குப் புரிந்த பாஷையிலேதான் பேச வேண்டியிருக்கிறது!

உடன்பிறப்பே! 19-ஆம் தேதி பேராசிரியர் மணிவிழாவுக்குப் பிறகு, மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்த மறுத்திடும் இந்த மமதையாளர்களின் அரசுக்கு எந்த மொழி தெளிவாகப் புரியும் என்பதைத் தீர யோசித்து அதற்கேற்ப நமது அறப்போர் முறைகளை வகுத்திடுவோம்!

ஞாயிறன்று சென்னையில் நமது உடன்பிறப்பின் மணிவிழாவில், உடன்பிறப்பே! உன்னைச் சந்திக்கிறேன்.

குறிப்பு :- (உடன்பிறப்பே! இன்று நடைபெற்ற மகளிர் பேரணியில் திருமதி சற்குணம் தலைமையில் ஐயாயிரம் தாய்மார்கள் கலந்து கொண்டனர். அவர்களில் கோட்டைமுன் தடையை மீறிச்செல்ல முயன்றதாக இருநூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்குமேல் கைது செய்து ஏற்றிச்செல்ல போலீசாரிடம் லாரிகள் போதவில்லையாம்!)

அன்புள்ள,

மு. க.

(17-12-1982)

1075. சபலப்பட்டோரின் சலசலப்பு!

உடன்பிறப்பே,

தி.மு.கழகத்தில் தொண்டர்களே இல்லை. கருணாநிதி, அன்பழகன் போன்ற நாலைந்து தலைவர்களே மிச்சமிருக்கிறார்கள். ஊருக்கு இரண்டு தொண்டர்கள் கூடக் கிடையாது. மாவட்டத்திற்குப் பத்து பேர் கூடத் தி.மு.கழகத்தில் இல்லை. தி.மு.கழகம் காய்ந்து போன குளம்! வறண்டு போன நிலம்! என்றெல்லாம் இத்தனை நாளும் வக்கணை பேசிக் கொண்டும், எழுதிக்கொண்டுமிருந்த எம்.ஜி.ஆரும், அவரது எடுபிடிகளும் இப்போது திடீரெனச் சில நாட்களாக தி.மு.கழகத்தில் இருந்து ஆயிரக்கணக்கான தொண்டர்கள் எம்.ஜி.ஆர். கட்சியில் சேர்ந்தார்கள் என்றும், இன்னும் ஆயிரக்கணக்கானோர் சேருவார்கள் என்றும் நாள்தோறும் அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் கூற்றுப்படியே, ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கழகத்தில் இருந்தார்கள் என்பதையாவது இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறார்களே! அதுவரையில் நன்றி!

ஆனால் உண்மையில் நடப்பதென்ன? எம்.ஜி.ஆர். கட்சி அண்ணாவின் பெயரால் இருந்தாலும் - அது, இப்போது இதய தெய்வம் அண்ணா என்பதை அந்தக் கட்சியில் உள்ள சில அரசியல்வாதிகளைக் கவருவதற்காக மட்டும் பயன்படுத்திக் கொண்டு, நடமாடும் தெய்வம் சங்கராச்சாரியாரின் ஆசிதனை அடிக்கடி பெற்றுக்கொண்டு வருபவர்கள் எம்.ஜி.ஆரும், அவரது அமைச்சர்களும் என்பதை விண்ணும் மண்ணும்முட்ட விளம்பரம் செய்து கொண்டு, நடிகர் கட்சியை மெல்ல மெல்ல நடிகையின் கட்சியாக மாற்றிடும் போக்கைக் காணச் சகிக்காமல், பொறுத்துக் கொண்டு பதவிச் சுகம் அனுபவிப்போர் அனுபவிக்கட்டும்! நம்மால் படமுடியாது இந்த அவமானமெனப் பல ஊர்களில் இருந்தும், அந்தக் கட்சி (எம்.ஜி.ஆர். கட்சி)யிலிருந்து

அணிஅணியாகத் தொண்டர்கள் வந்து நமது கழகத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியார் பெயரைச் சொல்லி அவரது கொள்கையில் நாட்டமுடையவர்களை ஏமாற்றுகிற எம்.ஜி.ஆரையும் - அண்ணா பெயரைச் சொல்லி அவரது குறிக்கோளில் ஈடுபாடுடையவர்களை ஏமாற்றுகிற எம்.ஜி.ஆரையும் - அவரது பல்வேறு வேடங்களையும் புரிந்து கொண்டவர்கள், நன்றாக அடையாளம் கண்டுபிடித்து விட்ட காரணத்தால் விரக்தியுற்று அவரிடமிருந்து விலகியவண்ணமிருக்கின்றனர். அந்த வேதனை தாங்க முடியாமல் எம்.ஜி.ஆர். அவர்கள், இப்போது இப்படியொரு புதுவிதமான அரசியல் ஸ்டண்டை ஆரம்பித்துள்ளார்.

சென்னைக் கலைவாணர் அரங்கில் இரண்டாயிரம் தி.மு.க. தொண்டர்கள் விலகி வந்து அவரிடம் சேர்ந்ததாக ஒருநாள் திடீரென்று அறிவித்தார். அந்த அறிவிப்பில் நூற்றுக்கு நூறு பொய்யேதான் கலப்படம் என்பதை அக்குவேறு ஆணிவேறாக ஆக்கிக் காட்டிய பிறகு, சில நாட்கள் வாயை மூடிக் கொண்டு இருந்தார்.

இப்போது மீண்டும், திராவிட முன்னேற்றக் கழகப் பாசறையில் ஒரு திகைப்பை ஏற்படுத்தலாம் என்ற கற்பனைக் கனவோடு, ஆயிரம் கழகத்தினர் சேர்ந்தனர் - இன்னும் மதுரையில், கோவையில் ஆயிரமாயிரம் சேருவார்கள் என்று விளம்பர வெளிச்சம் போட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆளும்கட்சியாயிற்றே! அங்கே போனால் ஏதாவது கிடைக்குமே என்று அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிருவர் நம்மிடமிருந்து சென்றுள்ளனர் - இன்னும் கூட ஓரிருவர் நிச்சயதாம்பூலம் முடித்துக்கொண்டு, அவர் வீட்டில் கை நனைத்துவிட்டு ராகு காலம், எமகண்டம் நட்சத்திரம், ராசி முதலியவற்றைப் பார்த்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சிலரின் பின்னால் ஆயிரம் பேர் லட்சம் பேர் வந்து சேர்ந்தார்கள் என்று விளம்பரம் செய்ய எம்.ஜி.ஆர். சில பத்திரிகைகளைத் தயார்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு செய்தி படித்துச் சிரித்தேன்! சென்னையிலிருந்து ஒரு தலைவர் தி.மு.க.விலிருந்து விலகி, எம்.ஜி.ஆரிடம் சேர்ந்துவிட்டாராம்! நல்லவேளை அவர் அந்தப் பத்திரிகையள

விலாவது ஒருநாள் தலைவராகி விட்டார் என்பதிலே மகிழ்ச்சிதான்! அந்தத் தலைவர் (?) ஏன் விலகினாராம், தெரியுமா? அவர் சென்னை மாவட்டக் கழகத் தேர்தலில் போட்டியிட்டாராம் செயற்குழுவுக்கு! அதில் தோற்று விட்டாராம் - அதற்கு நான் காரணமாம்! சென்னை மாவட்டக் கழகத் தேர்தலில் மொத்த வாக்காளர்கள் இருநூற்றி முப்பத்து ஐந்து பேர்! இந்த (விலகிய) தலைவரை (?) செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு முன்மொழிந்தவர் ஒருவர்! வழிமொழிந்தவர் ஒருவர்! தேர்தல் நடந்தபோது அந்த இருவர் வாக்காவது அவருக்கு, மன்னிக்கவும்! அந்தத் தலைவருக்கு கிடைத்ததா? இல்லை! இல்லவே இல்லை! ஒரே ஒரு வாக்கு மட்டும் பெற்றார் அந்தத் தலைவர்! அவர் எந்த அணியின் சார்பில் நின்றாரோ அந்த அணியிலே உள்ளவர்களே, அந்தத் தலைவருக்கு வாக்கு வழங்கவில்லை! ஆனால் அவருக்குக் கோபம், அந்த அணியை உருவாக்கியவர்கள் மீது வரவில்லை! என் மீது வருகிறது! இல்லை உடன்பிறப்பே! எம்.ஜி.ஆர். அவர்களால் வரவழைக்கப்படுகிறது!

கட்சி அமைப்புக்களுக்குத் தேர்தல் நடைபெறுவதும், ஒரு சிலர் பொறுப்புகளுக்கு வரமுடியாமல் ஆகி விடுவதும், ஜனநாயக இயக்கமான நமது கழகத்தில் அப்படிப் பொறுப்புகளுக்கு வரமுடியாமற் போனவர்களின் ஆற்றலையும், பணியினையும் எப்படியோ ஒருவிதத்தில் பயன்படுத்திக் கொள்வதும் தொடர்ந்து இருந்து வருகிற முறையே ஆகும்.

சென்னையைப் பொறுத்தமட்டில் சொல்ல வேண்டுமானால் - அந்த உடன்பிறப்புகள் இதைச் சொல்வதற்காக வருந்தமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் கூறுகிறேன். கடந்தமுறை மாவட்டச் செயலாளர் தேர்தலில், செயலாளர் பொறுப்புக்குப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப் படாதவர்தான் இன்று அண்ணா நகர் பகுதியின் செயலாளர் சோ.மா. இராமச்சந்திரன்! இந்த முறை மாவட்ட அவைத் தலைவர் பொறுப்புக்கு வந்துள்ள செல்வராசன் எம்.எல்.ஏ. கடந்தமுறை இதே பொறுப்புக்குப் போட்டியிட்டு தோற்றுப் போனவர்தான்! டி.ஆர். பாலுவும் சென்ற முறை தோற்றவர்தான்! இந்த முறைகூடச் சில பொறுப்புகளுக்குச் சென்னை மாவட்டத்தில் போட்டியிட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை! அதற்காக உண்மையான இலட்சியப்பிடிப்புள்ள கழக உடன்பிறப்புகள் யாரும் கழகத்திற்குத் துரோகம் விளைத்திட எண்ணிப் பார்க்கவுமில்லை!

அவர்கள் எல்லாம் என் நெஞ்சில் நீங்காத இடத்தைப் பெற்றிருப்பவர்கள்!

அமைப்புத் தேர்தல்களில் அணிகள் தோன்றுவது இயற்கை! தேர்தல் முடிந்த பிறகு அந்த அணிகள் மறைந்தால்தான் கசப்பு உணர்வு எனும் பிணியும் மறையும்! அணிகள் தோன்றிடாமலே ஆங்காங்கு கழகப் பணிக்கான பொறுப்புகள் பகிர்ந்து கொள்ளப் படுமேயானால், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான்! ஆனால், ஒரு ஜனநாயக இயக்கத்தில் அது கஷ்டமான காரியம்தான்! இருந்தாலும் அணி, பிணியாவதை என்னால் ஏற்றிட இயலாது! யாருமே ஏற்றிடார், கழகத்தில் உண்மையான பற்று இருப்பின்!

பொதுக்குழு உறுப்பினர்கள் வாக்களிக்கும் கட்டம் வரும் சில குழுக்களுக்கான தேர்தல்களில் கூட, இதற்கு முன்பு பலமுறை கழகத்தின் மூத்த முன்னணித் தளபதிகள் சிலர் தோற்றிட நேரிட்ட வரலாறு, நமது கழக ஜனநாயக அமைப்பில் உண்டு! அதற்காக அவர்கள், கழகத்திற்குத் துரோகம் செய்ய முனைந்து சினந்து கிளம்பியதில்லை!

கட்சித் தேர்தலே நடத்தாமல், ஓரிரு இடங்களில் நடத்தியதையும் மூடிமுடக்கிப் போட்டுவிட்டு நியமனத் திருவிழா நடத்திக் கொண்டிருக்கும் ஜனநாயகக் காவலர் எம்.ஜி.ஆர். அவர்கள், நமது கழகத்திற்கு ஜனநாயகப் பாடம் கற்பிக்க முனைவது, மயிலுக்கு ஆடற்கலை பயிற்றுவிக்க, மந்தி நட்டுவனாராக வருகிறேன் என்று கூறுவதுபோலத்தான் இருக்கிறது!

கழகம் கருணாநிதியின் குடும்பக் கட்சியாம்! எம்.ஜி.ஆர். இப்படியொரு பிரச்சாரத்தைத் தூண்டி விடுகிறார்! ஆமாம்! என் குடும்பமே கழகம்தான்! பெரிய கழகக் குடும்பத்தில் என் குடும்பமும் ஒன்றுதான்! என் உயிரனைய உடன்பிறப்புகள் நூற்றுக்கணக்கில் சிறையில் மிசாக் கைதிகளாக அடைபட்டு அடித்து நொறுக்கப்பட்டபோது, என் மகன் ஸ்டாலினும் அடித்து வீழ்த்தப்பட்டான் சிறையில் என்றபோதுதான் எனக்கு மனஆறுதலே ஏற்பட்டது! நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் எனது மருமகன் மாறனும் சிறைப்பட்டான் மிசாவில் என்றபோதுதான் எனக்கு நிம்மதியே இருந்தது! இப்போதும் என் தம்பி சிட்டிபாபுவின் டைரிகள் முதல் பாகத்தையும், இரண்டாம் பாகத்தையும் அடிக்கடி படித்துப் பார்த்து ரத்தக்

கண்ணீர் வடிக்கிறேன்! அதிலே அந்தத் தம்பி சிறையில் நடந்த கொடுமைகளையும், சிறையிலேயே கழகத்தினர் சிலர் கழகத்திற்கு விளைத்த துரோகங்களையும் கண்ணீர் பெருகவன்றோ எழுதியுள்ளார்! சிட்டிபாபு, பாலகிருஷ்ணன் போன்ற அத்தகைய தியாகத் தங்கங்கள் சிறைப்பட்டிருந்த அந்த ஓராண்டு மிசாக் கொடுமையில், என் குடும்பங்கள் சிறையிலும், வெளியேயும் எப்படி அலைக்கழிக்கப்பட்டது என்பதை எண்ணிப் பெருமை கொண்டவன்தான் நான்!

இலங்கைத் தமிழர் போராட்டத்தில் நான் சிறைப்பட்டபோது, பதினாறு உடன்பிறப்புகள் தீக்குளித்து அவர்களில் ஏழு பேர் உயிர்துறந்தபோதும், பல உடன்பிறப்புகள் அடக்குமுறைத் தழும்புகளை ஏற்றுக் கொண்ட போதும் வேதனையில் ஆழ்ந்திருந்த நான், மதுரையில் என் மகன் அழகிரியும் போலீஸ் லாக்அப்பில் இரவு முழுதும் அடிக்கப்பட்டான் என்ற செய்தி கேட்டு செந்தேன் பருகியது போன்றல்லவா உணர்வு பெற்றேன்!

பால் கமிஷன் அறிக்கை வெளியானபோது, எனது இளைய மருமகன் செல்வத்தை விமான நிலையத்தில் போலீசார் அடித்துத் தாக்கிக் காரில் தூக்கிப்போட்டுக் கொண்டு போய்க் கைது செய்து வழக்குப் போட்டுள்ளது கண்டு பெருமை கொண்டேனே தவிர, அழுது புலம்பவில்லையே நான்!

எனவே, என் குடும்பத்தில் யாருக்கும் முடிசூட்ட அல்ல, அவர்கள் முள்ளிலும், கல்லிலும் நடந்திடும் பயணத்தை என்னோடு தொடர்ந்திட வேண்டுமென்றே விரும்புகிறவன் நான்!

அண்ணாவின் பெயரால் ஊரை ஏமாற்றி, தனது பிரியத்துக்குரியவரின் பின்னால் அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பேரணியாகப் பின் தொடரச் செய்யும் கேடுகெட்ட அரசியல் இலக்கணத்தை உருவாக்கும் எம்.ஜி.ஆர். அவர்கள், என் பிள்ளைகள் கட்சியில் இருப்பது கூடாது என்கிறார்!

என் பிள்ளைகள் கட்சியிலும் இருப்பார்கள்! சிறையிலும் இருப்பார்கள்! அடக்குமுறைகளையும் தாங்குவார்கள்! கட்சிக்கு எனது பிள்ளைகளால் எள்முனை அளவு தீங்கு நேரிடுமென்று நான் உணர்ந்தாலும், எனக்குக் கட்சிதான் கண்ணுக்குத் தெரியுமே தவிர, பிள்ளைகள் தெரியமாட்டார்கள்! அவர்களைத் தூக்கி எறிந்துவிட்டுக் கட்சியைக் காப்பாற்றுவேன்!

இதனைத் தெரிந்தும் தெரியாதவரைப் போல எம்.ஜி.ஆர். மக்களை ஏமாற்ற முனைவாரேயானால் - நேற்று நான் எழுதியதைப்போல அவருக்குப் புரிந்தமொழியிலேதான் பேச வேண்டும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்!

உடன்பிறப்பே! உயிரினும் மேலாகக் கழகத்தை நேசித்து, எந்தக் கலக்கம் வரினும், என் மீதே கூடத் தெரிந்தோ, தெரியாமலோ கோபம் வரினும், அதற்கெனக் காழ்ப்பு உணர்ச்சி கொள்ளாமல் - சபலங்களுக்கு ஆட்படாமல், அண்ணா வழியில் அயராது உழைக்கும் உடன்பிறப்பே! அடலேறே! எம்.ஜி.ஆர். காட்டும் சலசலப்புக்கு அஞ்சிடாமல் - சபலப்பட்டோர் ஒரு சிலரின் செயல்கண்டு அயர்ந்திடாமல் ஆற்றிடுவோம் நமது பணியினை!

அன்புள்ள,

மு. க.

(18-12-1982)

1076. அருமருந்தே! அன்பழக உடன்பிறப்பே!

உடன்பிறப்பே,

உனக்கு மணிவிழா!
நமது குடும்பத்தின் திருவிழா – உன்
நாக்குத் தமிழ் மணத்தால்
கழக நந்தவனம் சிறக்கும் – உன்
வாக்குத் திறத்தாலே
வஞ்சினப் பகையனைத்தும் பறக்கும் – உன்
ஆக்கப்பணியணி கழகத்தைக்காத்து – நெடுந்
தூக்கத் தமிழரை எழுப்பும்!
நீயோர் ஒளிமணி;
ஓயாமல் ஒலிக்கின்ற தமிழ்மணி!

பள்ளந்தான் தமிழர் வாழ்வில்
விழலாமோ என்று,
உள்ளந்தான் கொதித் தெழுந்தாய் – புது
வெள்ளந்தான் உந்தன் பேச்சு!
வீரம் செய்கின்ற இனத்தின் மூச்சு!
வெற்றி விளைக்கின்ற வாளின் வீச்சு!
அகமென்றும் புறமென்றும் அடுக்கிடும்
அருந்தமிழ் இலக்கியங்கள் தேன் வடித்திடும்!
புலவர் கூட்டமோ,
அதனை உன்பால் பருகத் துடித்திடும்!

யாரோ சிறியர் நரியர்
சூதோ வாதோ செய்திடத் துணிவரேல்

பேராசிரியக் கூர்வேல் பிளக்கும்!
தீராப் பிணியும் தீர்ந்து தமிழ் இனம் பிழைக்கும்!

பெரியாரின் பிள்ளைகள் நாம்
பேரறிஞர் தம்பிகள் நாம் - என்றும்
பிரியாத இருவண்ணக் கொடியே நாம், இந்தப்
பெருங்குடும்பம் பெருமகிழ்வுக் கடலில் துள்ள
அருமருந்தே! அன்பழக உடன்பிறப்பே!
அறுபது நிறை மணிவிழா போல் - இன்னும்
அடுக்கடுக்காய் பலவிழா காண நீ

பல்லாண்டு வாழியவே!

மு. கருணாநிதி

(19-12-1982)

1077. இருமினால் இலக்கியம்! தும்மினால் சரித்திரம்!

உடன்பிறப்பே,

நமது முதலமைச்சர், நல்ல நகைச்சுவைத் துணுக்குகளை அடிக்கடி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்! மின்சாரம் முறையான விநியோகமின்றி விவசாயிகள் வயிற்றிலும் வாயிலும், அடித்துக் கொண்டு வதங்குகிற வேதனை ஒருபுறமிருந்தாலும் - குடிதண்ணீர்ப் பஞ்சத்தால் மக்கள் வாடுகிற துயரம் இன்னொரு புறமிருந்தாலும் - அன்றாடம் பயன்படுத்துகிற பண்டங்களின் விலைகள் விஷம்போல ஏறி ஏழை எளியோர் ஏங்கித் தவிக்கிற நிலைமை மற்றொருபுறம் தாக்கினாலும் - துப்புரவுப் பணிகள் கூட நிறைவேறாத நிர்வாகத் தயக்கத்தால் நோய்நொடிகள் வேறொருபுறம் மக்களை வாட்டினாலும் - இத்தனை சோகம்சூழ் நிலைமையிலும் - டிராஜிடி நாடகத்துக்கு இடையிடையே காமெடி காட்சிகள் வருவதுபோல, வேதனையிலும் மக்களை விலாநோகச் சிரிக்க வைக்கும் நகைச்சுவை வெடிகளை, வெடித்துக் கொண்டேயிருக்கிறார்.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு, மேல்சபையில் ஒருநாள் சென்னை நகரில் வெள்ளம் வந்த பழையகால வரலாற்றைச் சொன்னார். 1914-ஆம் ஆண்டு, எம்டன் குண்டு சென்னையில் விழுந்தபோது, சென்னை நகரில் மழைபொழிந்து தெருவெல்லாம் வெள்ளம் பெருகியது. அப்போது ஏழெட்டு வயது சிறுவனாக இருந்த நான், அந்த வெள்ளத்தைப் பார்த்தேன். இப்படி முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், மேல்சபையில் பேசியதும் சபையில் இருந்த தலைவர் உட்பட அனைவரும் வியப்படைந்தனர்! காரணம் என்ன? எம்.ஜி.ஆர். அவர்கள், சட்டசபைக்கும், மேல்சபைக்கும் அதிகாரபூர்வமாகத் தந்துள்ள அவரது வாழ்க்கைக் குறிப்பு ஏட்டில், எம்.ஜி.ஆர். பிறந்த வருடம் 1917 என்று திட்டவட்டமாகத்

தெரிவிக்கிறார்! எனவே, எம்.ஜி.ஆரின் வாசகப்படி, 1917-இல் பிறந்த ஒருவர் 1914-இல் ஏழெட்டு வயதுச் சிறுவனாக வந்து சென்னை நகர வெள்ளத்தை எப்படிப் பார்த்திருக்க முடியும்? அந்த அதிசயத்தை நினைத்து எல்லோரும் சிரித்து விட்டனர்.

இப்போது இன்னொரு நகைச்சுவைத் துணுக்கு!

என்னுடைய பதினைந்தாவது வயதில் காங்கிரசில் ஈடுபட்டேன். அப்போது காங்கிரஸ் தலைவர் தேர்தல் நடந்தது. நேதாஜியும், பட்டாபி சீத்தாராமய்யாவும் போட்டியிட்டனர். நான் கடவுளாக மதித்த காந்தி, பட்டாபி சீத்தாராமய்யாவை ஆதரித்துக் கருத்துச் சொன்னதால், அரசியலில் இருந்து ஒதுங்கினேன்.

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். குறிப்பிடுகிறபடி அந்தக் காங்கிரஸ் தலைவர் தேர்தல் 1939-ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கிறது. பட்டாபியும், சுபாஷும் மோதிக்கொண்டார்கள். நண்பர் எம்.ஜி.ஆர். சட்டசபை, மேல்சபைக்கு அதிகாரபூர்வமாகக் கொடுத்துள்ள குறிப்பின்படி அவர் பிறந்த ஆண்டு 1917 - அந்த அடிப்படையில் 1939-இல் பட்டாபி - நேதாஜி தேர்தல் நடந்தபோது தனக்கு பதினைந்து அல்லது பதினாறு வயதுதான் என்றும், அப்போது காங்கிரஸ் கட்சியில் ஈடுபட்டு, காந்தியடிகளின் போக்கு பிடிக்காமல் விலகிவிட்டேன் என்றும் மதுரையில் கடந்த 18-12-82 அன்று நடைபெற்ற வ.உ.சி. சிலை திறப்புவிழாவில் பேசியிருக்கிறார்.

இவர் தன்னுடைய வயது குறித்து எந்தக் குழப்பத்தை வேண்டுமானாலும் உருவாக்கட்டும்! அதற்காக வரலாற்று நாயகர்களையும், அவர்கள் வாழ்ந்த காலங்களையும், சாதனைகளாற்றியக் காலங்களையும் தலைகீழாக மாற்ற வேண்டுமா? என்று அவரது கட்சியிலே உள்ள தெளிவு படைத்தவர்களேகூட, தங்கள் தலையில் அடித்துக் கொள்ளும் காட்சியைக் காணுகிறபோது நகைச்சுவையாக இருக்கிறதல்லவா?

1925-ஆம் ஆண்டு மறைந்துவிட்ட சர். தியாகராயர், 1932-ஆம் ஆண்டு நடைபெற்ற கள்ளுக்கடை மறியலின்போது கதராடை வழங்கினார் என்று ஒரு நகைச்சுவைக் குண்டைத் தூக்கிப்போட்டார்!

1963-இல் காலமாகிவிட்ட கம்யூனிஸ்டு தலைவர் ஜீவானந்தம் அவர்கள் 1964-இல் (எம்.ஜி.ஆராகிய) இவர்

எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்தபோது நேரிலே வந்து பார்த்து வருத்தம் தெரிவித்ததாக, ஈரோட்டு நிகழ்ச்சியிலே சில நாட்களுக்குமுன்பு ஒரு விகடத் துணுக்கை வெளியிட்டார்.

இவ்வாறு எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுவது - எத்தனையோ பிரச்சினைகளால் ஏற்படும் மனவேதனையைச் சிறிது நேரம் மாற்றுகிற நகைச்சுவை மருந்தாக இருந்தாலும்கூட -

வரலாற்றையே தலைகீழாகப் புரட்டுகிற விஷமச் செயலாகவன்றோ இருக்கிறது என்றும் எண்ணிடத்தான் வேண்டியிருக்கிறது!

என்ன செய்வது உடன்பிறப்பே! அவர் கையில் ஆட்சியிருக்கிறது! அதன் மூலம் எந்த அளவு ஆதாயம் கிடைத்தாலும் போதுமென்று அவர் வீட்டின் முன்னால் தவம் கிடப்பவர்களுக்கு, அவர் இருமினால் அது இலக்கியமாகவும் - அவர் தும்மினால் அது சரித்திரமாகவும் தோன்றுகிறது! அதனால்தான் பாவம் அவர்கள்! அழவும் முடியாமல், சிரிக்கவும் முடியாமல் தவியாய்த் தவிக்கிறார்கள்.

அன்புள்ள,

மு. க.

(22-12-1982)

1078. மலர் வளையம் மட்டும் போதுமா?

உடன்பிறப்பே,

எந்தவொரு மகிழ்ச்சியும் இருபத்து நான்கு மணி நேரம் தொடர்ந்து இருந்ததில்லை என் வாழ்க்கையில் என்று எத்தனையோ முறை எடுத்துக்காட்டுகளோடு உன்னிடம் தெரிவித்திருக்கிறேன். நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் மணிவிழாவினைக் கொண்டாடியதால் ஏற்பட்ட உற்சாகம் - பூரிப்பு - வெற்றிக் களிப்பு - இவற்றுக்கிடையே புரசைப் பகுதியின் கழகக் காளை இராஜேந்திரனைத் திட்டமிட்டுக் குத்திவிட்டனர் தீயோர் சிலர் என்ற செய்தி, நான் புதுவைக்குப் புறப்படும்போது கிடைத்தது. ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கூறிவிட்டு, சென்னை மாவட்டச் செயலாளர் பாலுவும், மற்றவர்களும் மருத்துவமனைக்கு ஓடினார்கள். எப்படியும் அந்தச் செயல்வீரன் பிழைத்துக் கொள்வான் - தொடர்ந்து கழகப் பணியாற்றுவான் - என்ற நம்பிக்கையுடன் புதுவை பாரதி விழாவில் கலந்து கொண்டேன். புதுவை மாநிலம் - அளவில், வருமானத்தில், மக்கட் தொகையில் அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது எத்தனையோ மடங்கு சிறியது! எனினும், பாரதியாரின் வாழ்வில் பத்தாண்டு காலம் புகலிடமாக இருந்த மாநிலம் என்ற புகழ் மணக்கும் மாநிலம்! அதனால்தான் அந்த உணர்வுடன் இளந்தளிர்களாம் மாணவ, மாணவியர் இருபதாயிரத்திற்கு மேற்பட்டோர், பாரதி நூற்றாண்டு விழாவினையொட்டி அணிவகுப்பு நடத்தினர்! பாரதி போல் - வ.உ.சிதம்பரனார் போல் - வ.வே.சு. அய்யர் போல் - அரவிந்தர் போல் - வேடமிட்டு பவனி வந்த அந்த மாணவர்களைக் கண்டு பேருவகை கொண்டேன்! மாண்புமிகு அமைச்சர் கதிர்வேல் வரவேற்க, மாண்புமிகு முதல்வர் டி.ஆர். தலைமையிலே பாரதியார் சிலையினையும் திறந்து வைத்துக் களிப்பு கொண்டேன்! பின்னர் கடற்கரையோரத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழா

கண்ணுக்கெட்டிய தொலைவு வரையில் மக்கள் தலைகள்தான் எனுமளவுக்கு பெருங்கூட்டம்! புதுவை முதல்வர், புதுவை அமைச்சர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர், நண்பர் எம்.ஏ. சண்முகம் ஆகியோர் பங்கு கொண்ட அந்தப் பாரதி விழாவிலே கங்குகரையற்ற எழுச்சி கண்டேன்.

உடன்பிறப்பே, அந்த மகிழ்ச்சியும் நீடிக்கவில்லை! விழா முடிவுற்றதுமே சென்னைச் செய்தி என்னைத் தாக்கிற்று! புரசைத் தம்பி இராஜேந்திரன் மாண்டு விட்டான்! ஆம், அந்தக் கொலை வெறியர்களின் திட்டம் நிறைவேறி விட்டது.

பேராசிரியர் மணிவிழா நாளிலேயே நமது மகிழ்ச்சிக்கு ஊறு விளைவிக்க எதிர்முகாமிலே, எத்தனையோ காரியங்கள் நடத்திப் பார்த்தனர்! தோற்றனர் அந்த முயற்சியில்!

எப்படியோ இழிதகையோர், நமது இராஜேந்திரனின் குருதியைக் குடித்துத் தங்களின் தோல்வியை நிமிர்த்துக் கொண்டு விட்டதாக நினைத்துத் திரிகின்றனர்!

தன்னைக் கொல்ல முயற்சி நடக்கிறது என்பதையும் - யார் யார் திட்டம் தீட்டியுள்ளனர் என்பதையும் - முன்கூட்டியே இராஜேந்திரன் காவல்துறைக்கு அறிவித்திருந்தும் கூட, அவனுக்கு எந்தப் பாதுகாப்பும் தரவில்லை அந்தத் துறை!

அந்தத் துறைக்கு இப்போதுள்ள வேலையெல்லாம் மக்களையோ, சட்டத்தையோ பாதுகாப்பது அல்லவே! பாவம்! அவர்கள் யார் யாருக்கு, காரின் கதவு திறக்க வேண்டியிருக்கிறது! யார் யாருக்கு, நாற்காலி தூக்கிப்போட வேண்டியிருக்கிறது! யார் யாரிடம், இல்லாததும், பொல்லாததுமான கலகங்களை விளைவித்துக் கழகத்தில் பிளவினை உண்டு பண்ண முடியுமா எனப் பார்க்க வேண்டியிருக்கிறது! கழக அமைப்புகளின் தேர்தல்களில் எப்படியெல்லாம் காவல்துறை, தனது கை வரிசையைக் காட்ட வேண்டியிருக்கிறது! அவர்களுக்கு இராஜேந்திரன் உயிர்தானா முக்கியம்?

போலீஸ், தமக்குத் துணை நிற்கும் என்ற நம்பிக்கையோடு - துணை நிற்காவிட்டால் அந்தத் துறையினையே சுட்டெரித்திடுவோம் என்ற சூளுரையோடு - காரியத்தை முடித்து விட்டனர்! கழகக் காளையைச் சாவின் வாயில் திணித்து விட்டனர்!

நீதி கிடைக்குமா? அல்லது திருச்செந்தூர் - மதுராந்தகம் - புட்லூர் - போன்ற பாணிதானா என்பது தெரியவில்லை! காவல்துறை, நீதி கிடைக்கத் தனது கடமையைச் சரிவர ஆற்றாவிடினும் - காலம் அந்தக் கடமையை நிறைவேற்றும் என்றே நம்புகிறேன்!

நினைத்ததை முடித்தவர்கள் யார் யார் என்பதைத் தம்பி இராஜேந்திரன், தனது மரணவாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறான். அவர்கள் அருகே நெருங்க முடியாமல் காவல்துறையினர் பின்வாங்கி விட்டனர்! வாழ்க காவல் துறையின் கடமை உணர்வு! வீரம்! விவேகம்! சாகசம்! எல்லாமே வாழ்க!

மரணமூச்சு விட்டுக் கொண்டிருந்த போது, மணி என்ற நண்பனிடம், அந்தக் கழக மாமணி சொன்னதாக ஏடுகளில் கண்டேன்!

நான் இனி பிழைக்க மாட்டேன்! நான் செத்தால் கலைஞர் கையால் ஒரு மாலை வைக்கச் சொல்!

இப்படிச் சொல்லி உயிர்விட்ட என் செல்ல உடன்பிறப்பே! தியாக தீபமே! அன்புத் தம்பியே! என் கையால் உன் பாதங்களுக்கு மலர்வளையம் வைக்கிறேன்! என் கண்ணீரால் உன் கால்களைக் கழுவுகிறேன் என்று கதறுகின்றேன் நான்!

மாலை சூட்டி, மலர் வளையம் வைத்து, அவன் பொன்னுடலை மண்ணுடன் உறவாட விட்டு வந்துவிட்டால் போதுமா?

அதோ அழுது புலம்பும் அந்த இளமங்கை அன்புத் தங்கை லில்லிக்கும், அந்தத் தாயின் அருகே தவித்துக் கிடக்கும் தளிர்களுக்கும் இனி யார் ஆதரவு?

வழக்கம்போல் இத்தகைய வன்முறைக்கு உள்ளான குடும்பங்களை நடுவீதியில் நிறுத்தாமல், நம்மால் இயன்ற உதவியினைச் செய்தே வருகிறோம்! கழகத்திற்கு உழைத்தோர் குடும்பங்களை நாம் கைவிட்டதில்லை! கடந்த வாரம்கூட எழுதியிருந்தேன் கடிதத்தில். 1970-ஆம் ஆண்டு முதல் இதுவரையில், கழகக் குடும்பங்களுக்கு ஆதரவு நிதியாக மட்டும் ஏறத்தாழ பத்து லட்ச ரூபாய் நிதியாகத் திரட்டி அளித்திருக்கிறோம்.

இதோ இப்போதுகூட செங்கை மாவட்டத்தில் மாதவரம் வேதா குடும்பத்திற்கான ஆதரவு நிதியினை மாவட்டச் செயலாளர்

ஆறுமுகம் திரட்டிக் கொண்டிருக்கிறார். விரைவில் வழங்கப்பட இருக்கிறது.

அதேபோல் சென்னை மாவட்டக் கழகத்தின் எல்லா அமைப்புகளுக்குமுள்ள புதிய நிர்வாகிகளுக்கும் செயல்வீரர்களுக்கும் பொறுப்புமிக்க பணியொன்று காத்திருக்கிறது.

இந்தத் திங்கள் முப்பதாம் நாள் சென்னையில் ஒரு பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்கிறேன். அந்த நிகழ்ச்சி, கொலையுண்ட இராஜேந்திரன் குடும்பத்திற்கு நிதியளிக்கும் நிகழ்ச்சியாக மாற்றி ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்! இயன்ற அளவு பெருந்தொகையொன்றினை நிதியாக வழங்கிட வேண்டும்.

அதற்குச் சென்னையில் உள்ளோர் மட்டுமல்ல, இதயம் படைத்தோர் எங்கிருப்போராயினும், உடனடியாக ஆதரவு நிதியினை தலைமைக் கழகத்திற்கு, நமது பொருளாளர் முகவரிக்கு அனுப்பி வைத்திடுமாறு கொலையுண்ட கொள்கைச் சிங்கம் இராஜேந்திரன் பெயரால் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தேதி இருபத்திரண்டு! கடிதம் இருபத்து மூன்றாம் தேதி கிடைக்கும்! இடையில் ஏழு நாட்கள்தான்! ஐந்து ரூபாய்க்கு குறையாமல் அதற்கு மேல் முடிந்த அளவு இராஜேந்திரன் குடும்ப நிதி எனக் குறிப்பிட்டு, உடனே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிடக் கோருகிறேன்!

கண்ணீர் வழிய வழிய நான் விடுத்திடும் இந்த வேண்டுகோளை, என் உடன்பிறப்பே! நீ அலட்சியப்படுத்திட மாட்டாய் என்ற திடசித்தம் எனக்கு உண்டு!

அன்புள்ள,

மு. க.

(23-12-1982)

1079. நந்தவன ரோஜாக்கள்!

உடன்பிறப்பே,

நமது அண்ணனை நம்மிடமிருந்து எந்தக் கொடிய நோய் பிரித்ததோ, அதே நோய் அந்தத் தம்பியையும் பற்றிக் கொண்டு விட்டது. சேலத்தைச் சேர்ந்தவர் அந்த உடன்பிறப்பு. பெயர் இராசமாணிக்கம். சேலம் நகரில் முப்பத்திரெண்டாவது வட்டக் கழகச் செயலாளர். சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நலம் பெறவில்லை. நலிவு, நாளுக்கு நாள் வளர்ந்தது. மருத்துவர்கள் யோசனைப்படி சேலத்திற்கு - வீட்டிற்கே அழைத்துக் கொண்டு போய்விட்டனர்.

சேலம் நகரில் மாவட்டக் கழகச் சார்பில், தலைமைக் கழகத்திற்குப் பிரச்சார வேன் ஒன்றினைப் பேராசிரியர் வாயிலாக என்னிடம் வழங்கும் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது இராசமாணிக்கத்தைச் சந்தித்து, உடல்நிலை பற்றி விசாரித்தறிய அவர் இல்லத்திற்குச் சென்றிருந்தோம்.

இல்லத்து வாயிற்புறத்தில் அமைந்துள்ள தூண்களே கறுப்புச் சிவப்பு வண்ணத்தோடு காட்சியளித்தன! உள்ளே படுத்திருக்கும் கழகத் தூணைத் தரிசிக்க ஆவலோடும் - அதேசமயம் ஆழ்ந்த வேதனையோடும் நுழைந்தோம்! ஒரு அறையில் சிறிய கட்டில்! அந்தக் கட்டிலில்தான் நமது கழகக்காளை! வாளை உறையிலிட்டதுபோல் சால்வையொன்றால் போர்த்தப்பட்டு வளைந்து படுத்திருந்த அந்த உடன்பிறப்பைக் கண்டதும் எங்கள் கண்கள் தடாகங்களாயின! எத்தனையோ மேடைகளில் சேலம் கூட்டத்தில் அந்த உடன்பிறப்பு என் முன்னிலையில் உரையாற்றக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்! பலமுறை சிறை சென்று, ஆடாமல் அசையாமல், அடக்குமுறைகளுக்குப் பணியாமல் அடலேறு என அந்த உடன்பிறப்புத் தனது தியாக நெஞ்சத்தை எனக்கு உணர்த்தியபோது பூரித்துப் போயிருக்கிறேன்!

அந்தப் புலிப்போத்து! இதோ கட்டிலில் புளியமிளார்போல உடல் மெலிந்து!

சந்தனமேனியின் வண்ணம் குலையவில்லை, ஆனால் சல்லிவேர் போல் எலும்புக்கூடாய்!

ஒலிபெருக்கியின்முன் நின்று கருத்துரை மட்டுமல்ல! ஓயாமல் உழைத்துக் கழகக் கோட்டைக்கு வலிவேற்றிய அயராத் தொண்டன், அயர்ந்து கிடக்கும் நிலை - எங்களை எத்தகைய அதிர்ச்சிக்கு ஆளாக்கியிருக்கும்!

அருகில் அமர்ந்திருந்தோம், மௌன விக்கிரகங்களாய் - ஊமை மனிதர்களாய்!

எங்கள் நெஞ்சம் கதறுவது அந்த உடன்பிறப்பின் காதில் விழக்கூடாதல்லவா?

எனினும், அணையுடைத்துக் கிளம்பியது பாச வெள்ளம்!

அந்த உடன்பிறப்பின் இருவிழிகளிலும் கண்ணீர்கொட்டிக் காதோரம் வழிந்தது!

அதைத் துடைத்திடத்தான் முடிந்தது, எங்களால்! நிறுத்திட இயலவில்லை!

சிறிது நேரத்திற்குப்பின் அந்த உடன்பிறப்பு, தலையை மெதுவாக அசைத்துத் தன்னருகே நின்ற மனைவியின் காதில் மெல்லிய குரலில் ஏதோ சொன்னது எங்கள் செவிகளை எட்டவில்லை!

அறையைவிட்டு வெளியே சென்ற அந்தச் சகோதரி, சில நிமிடங்கள் கழித்து உள்ளே வந்தார். தன் கணவனின் மெலிந்த கரங்களுக்குள் எதையோ திணித்தார்.

பின்னர் இராசமாணிக்கத்தின் கண்கள் என்னை நோக்கின! அருகே அழைத்தன! தலையைக் குனிந்து என்ன? என்று கேட்டேன் தழுதழுத்த குரலில்!

தன் கையிலிருந்த இருபத்திஐந்து ரூபாயை என் கையில் வைத்து புரசை இராஜேந்திரன் குடும்ப நிதிக்காக என்று அந்த உடன்பிறப்பு சொல்லி முடிப்பதற்குள் எவ்வளவு மூச்சுத் திணறல்!

அய்யகோ! அந்த உணர்வு எங்கள் எல்லோரையும் ஒரு உலுக்கு உலுக்கியேவிட்டது! அந்த நிகழ்ச்சியை மாலையில் நடைபெற்ற கூட்டத்தில், இலட்சக்கணக்கானோர் முன்னிலையில், மாவட்டச் செயலாளர் முத்து விவரித்தபோது, அந்த மக்கட் கடலே ஒரு நிமிடம் அசைவற்றுப் போயிற்று!

எந்த நேரம்?

எப்படிப்பட்ட நிலை?

அசையவே உடல் மறுக்கிறது!

நாவோ பேச இயலாமல் தவிக்கிறது!

நோயோ அணுஅணுவாக...

அந்த நேரத்திலும் கழகத்திற்கு ஆற்றிட வேண்டிய கடமை உணர்வு, அந்தக் கண்மணியை விட்டு அகலவில்லை!

உடன்பிறப்பே, இப்படிப்பட்ட இலட்சிய ரோஜாக்கள் மலர்ந்துள்ள நந்தவனமே நமது கழகம்!

எங்கோ வேலியோரத்து மூலையில் விழுந்து கிடக்கும் எருக்கம்பூக்களை யாரோ ஒருவர் பொறுக்கிக் கொண்டு போவதைப் பார்த்து நான் ஏன் கவலைப்படப் போகிறேன்? நந்தவன ரோஜாக்கள் நம்மிடையே மணம் பரப்பிக் கொண்டிருக்கும்போது!

அன்புள்ள,

மு. க.

(30-12-1982)

1080. உதயசூரியன் வென்றிட உழைத்திடுக!

உடன்பிறப்பே,

பெங்களூர் பாரதி நகர் தொகுதியில், கழக வேட்பாளர் திராவிடமணி என்ற நமது பூசலிங்கம், கர்நாடகத்தில் உள்ள சிறுபான்மை மக்களுக்காகவும், கர்நாடக மாநில முன்னேற்றத்திற்காகவும் குரல் கொடுக்க சட்டப் பேரவைக்குச் செல்ல வேண்டாமா?

சிறுபான்மையோர் நலன் காக்கப்பட வேண்டு மென்பதற்காகவே நமது கழகச் செயற்குழு, பொதுக்குழு - பெங்களூர் நகரில் நடத்தப்பெற்று தீர்மானம் நிறைவேற்றிய நிகழ்ச்சியை மறக்க முடியுமா?

தம்பி சோழன் தலைமையில், தம்பி கோ.சி.மணி மேற்பார்வையில், பாரதி நகர் தொகுதியில் பெங்களூரைச் சேர்ந்த உடன்பிறப்புகள் உழைக்கிறார்கள்! அருகாமையில் உள்ள தர்மபுரி, வடஆற்காடு, சேலம், மற்றுமுள்ள மாவட்டத்துக் கழக முன்னணியினர் அவர்களாகவே முன்வந்து பாரதி நகர்த் தொகுதிக்கு முடிந்த அளவு முன்னேற்பாடுகளுடன் சென்றுள்ளனர் என்று செய்தி வருகிறது.

அந்தப் பட்டியலில் அன்பு உடன்பிறப்பே, உன் பெயரும் இருக்கிறதா? உன்னால் முடிந்த உதவிகளை உன் பொறுப்பிலேயே செய்திட உடனே கிளம்பிடுக!

உதயசூரியன் வென்றிட உழைத்திடுக!

அன்புள்ள,

மு. க.

(03-01-1983)

1081. நீலவான்போல்! நீலக்கடல் போல்!

உடன்பிறப்பே,

நீலத்திற்கு அகவை அறுபது நிறைவு பெறுகிறது! அதனால் சென்னை மாவட்டக் கழகம் மணிவிழா எடுக்கிறது! நீலநாராயணனை நீலம் என்றே அழைத்துப் பழக்கமாகி விட்டது! ஆம்! பரந்த வான் பரப்பும் நீலம் - அதனை பிரதிபலிக்கும் கடற்பரப்பும் நீலம்! அத்துணைப் பெரிய உள்ளம்! அத்துணை அளவு பொறுமை! ஆனால் அந்தக் கடலும் வானும் சில நேரங்களில் பொறுமையிழந்தால் என்ன நடக்குமோ, அப்படித்தான் நமது நீலமும்! கொந்தளித்துக் குமுறினால் குள்ளநரிச் செயல்புரிவோர் இருந்த இடம் தெரியாமல் போய் விடுவர்! கோலோச்சிகள் எத்துணைக் கொடிய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடினும், நிலைகுலையா நெஞ்சுறுதி கொண்டவர்! வாரக்கணக்கில் சிறை - மாதக்கணக்கில் சிறை - வருடக்கணக்கில் சிறை - அந்தச் சிறையில் சித்திரவதை! அவற்றை வாட்டம் சிறிதுமின்றி வரவேற்று மகிழ்ந்தவர்!

குமரி மாவட்டத்தில் பிறந்த கொள்கைத் தங்கம் - இன்னமும் ஒரு குமரன்போலவே கழகப் பணியாற்றுகிறார்! இருபத்திரெண்டு லட்சம் உறுப்பினர்களைப் பற்றிய விபரங்கள், கழகத் தலைமை நிலையமான அறிவகத்தில் பல பீரோக்களில் இருக்கின்றன! ஆனால் அந்த விபரமனைத்தும், நீலநாராயணன் மூளையின் ஒரு பகுதியில் எந்த நேரத்திலும் அடுக்கப்பட்டிருக்கும் - கேட்டால், கேட்டவுடன் விளக்கம் கிடைக்கும்!

உழைப்புஎன்பதற்கு உருவமிருந்து, வாய் பேசும் திறனிருந்தால் அது நம்மிடையே வந்து கெஞ்சும்! நீலநாராயணனிடம் சொல்லி எனக்குச் சற்று ஓய்வு தரச் சொல்லுங்கள்! என்று.

காலை முதல் நள்ளிரவு வரையில், கழகப் பணியாற்றும் அந்தக் கடமை வீரருக்கு எத்தனை எத்தனை பிரச்சினைகள்!

ஓய்வுக்கு விடை கொடுத்து விட்ட எனக்கே கூடத் தலை சுற்றும்! அவ்வளவு சிக்கல் நிறைந்த விஷயங்கள், அம்பாரம் அம்பாரமாக வந்திடும்போதுகூட, அமைதியாக அவற்றினை அணுகிடும் பாங்கினைப் பார்த்துப் பார்த்துப் பரவசமுற்றிருக்கிறேன்!

உழைப்பில் எறும்பு! உள்ளம் கரும்பு! உறுதியிலோ இரும்பு! அவர்தான் நீலம்!

ஆரவாரமில்லாத பணி! ஆடம்பரம் அணுகாத வாழ்வு! ஆசாபாசங்களை நெருங்க விடாத நெஞ்சம்!

கட்சிக்கு நான் என்ன செய்தேன் என்றுதான் சிந்திப்பேன்! கட்சி எனக்கு என்ன செய்தது என்று மறந்தும் நினைத்திட மாட்டேன்! எனக்கூறிப் பகலிரவு பாராது பம்பரம்போல் சுழலுகின்ற எனது இனிய உடன்பிறப்புக்கு மணிவிழா என்கிற போது மகிழ்ச்சி, வெள்ளமாகிறது!

குள்ளமான உருவம்! அதனால் என்ன? குறளே இரண்டு அடிதானே! உருள் பெருந்தேரோருக்கு அச்சாணி போன்ற அண்ணாவும் குள்ளம்தானே! அதனால் குள்ளமா, உயரமா என்பதல்ல - நல்ல உள்ளமா, அல்லவா என்பதே கேள்வி!

கேள்விக்குக் கிடைத்திடும் விடை, நீலத்தின் உள்ளம் நெடிது உயர்ந்து நிற்பது! பெரிதும் பரந்து விரிந்து கிடப்பது! அதனால் நீலவான் போல் - நீலக்கடல் போல் - எங்கள் நீலமும் நீண்டகாலம் வாழ்ந்திடுக!

அன்புள்ள,

மு. க.

(08-01-1983)

1082. நினைவு மலர் தூவுகின்றோம்!

அண்ணனே,

எங்கள் ஊனோடும் உயிரோடும்
கலந்த உணர்வே!
உண்மைத் தமிழ் நெஞ்சங்களின்
ஓய்வற்ற துடிப்பே,
உச்சிவரை ஏறி நின்று
கீழ்நோக்கி மேற்குத் திசை இறங்காத
புகழ்க் கதிரே!
நடைவண்டி பயின்ற தமிழ் – உன்னால்
நகர் வலம் வந்ததுண்டு
கடைநிலைத் தமிழர் இனம் – உன்னால்
படைகொண்டு ஆர்த்ததுண்டு.
பிறமொழித் திணிப்பு என்ற
பேய்க் குரலின் வாயடைக்க – நீ
பேராற்றல் விளைத்ததுண்டு.
தமிழர்க்குத் தமிழ் நாடே வேண்டுமென்று
முன்னையிருந்த சென்னை ராஜ்ஜியத்தை – நீ
முடிவுக்குக் கொண்டு வந்ததுண்டு.
மூட நம்பிக்கை சாத்திரங்கள்
மூகாம்பிகை சங்கரர் நமஸ்காரங்கள்
கேடுபயக்கும் கொள்கையென்று
ஏடு நடத்தி எழுதிக் குவித்ததுண்டு.
தமிழன் மொழியும் மரபும்
இலக்கியமும் இணையிலா வரலாறும்

தரணியெங்கும் கொடி நாட்ட - நீ
கழகக்கொடி ஏற்றியதுண்டு.
பிரிவினையை விட்டுவிட்டோம் - ஆனால்
அதற்கான காரணங்கள்
இன்றைக்கும் இருக்கின்றன என்று - நீ

பெருமுழக்கம் செய்ததுண்டு.
உன் முழக்கம் - உன் கொள்கை
ஊரெல்லாம் நாடெல்லாம் ஒலிப்பதற்கே
உனைத்தொழுது ஓய்வின்றிச் சுற்றுகின்றேன்.
உடல்நலிவும் அதனாலே வந்த தண்ணா.
அந்த நலிவையும் நையாண்டி புரிவதற்கு
அதிகாரக் கோல்கொண்டோர் அஞ்சவில்லை.
இரக்கமெனும் ஒரு பொருள் யாருக்கு இல்லையென்று
இலக்கிய நாடகமொன்று நீ தானே படைத்திட்டாய்!
வாழ்க வசவாளர்கள் - நீ
வடித்தெடுத்த புதுப்பாடம்!
எதையும் தாங்கும் இதயம் நீ
எமக்களித்த மனப்பாடம்!
நினைவுநாள் இன்றுதானா அண்ணா? உனை
நெஞ்சம் மறந்தால்தானே
நினைப்பதற்குப் பொருள் உண்டு!
அதனாலே அணுப்பொழுதும் அகலாத
நினைவு மலர் தூவுகின்றோம் - உன் காலடியில்!

அன்புள்ள,

மு. க.

(03-02-1983)

1083. எதிர்பார்த்திருக்கிறேன் உன்னை!

உடன்பிறப்பே,

கடந்த திங்கள் 20-ஆம் நாள் காஞ்சிபுரம் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு எனக்கு சிறிது உடல்நலக் குறைவு. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நல்ல ஓய்வுதான் மருந்து என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியபோதிலும், உடல் நலிவுக்கிடையே சென்னை நகரத்தில் சிற்சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத கடமை ஆயிற்று. அதன் விளைவு - மீண்டும் நலிவு! மருத்துவர்களின் கண்டிப்பான அறிவுரையை மீற முடியாமல் கட்டிப் போடப்பட்டுள்ள சூழ்நிலையில் கட்டாய ஓய்வில் இருக்கிறேன்.

என்னமோ, ஏதோவென்று நீ கவலைப்படுவாய் என்று எனக்குத் தெரியும். உள்ளம் வலுவுடையதாக இருக்கலாம். ஆனால், உடல் அவ்வாறில்லையே! என மருத்துவர்கள் கூறி மடக்கிப் போட்டுள்ளனர் என்னை!

இன்றுள்ள தமிழ்நாட்டு நிலையில், உன்னோடு இணைந்து நான் ஆற்றிட வேண்டிய பணி எவ்வளவு என்பதை நான் மறந்துவிடவில்லை. மேலும் கடினமாக உழைப்பதற்காகத்தான் இடையில் களைப்பாறுவதைப்போல, இந்த சிறு ஓய்வு என் மீது திணிக்கப்பட்டுள்ளது.

வறளுகிறது தஞ்சை! வாடுகிறார்கள் மக்கள்! தஞ்சைத் தரணியின் கழக உடன்பிறப்புகள், வரும் 25-ஆம் நாள் அரசின் அலட்சியப்போக்கைக் கண்டித்து அறப்போரில் ஈடுபடுகின்றனர்.

வடஆற்காடு மாவட்டத்தில் கிராமம் கிராமமாக மக்கள் வெளியேறி ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் பிழைப்பதற்கு ஓடுகிறார்கள் என்ற செய்தி இதயத்தைப் பிளக்கிறது.

நாடு முழுதுமே கேடு சூழ்ந்த ஒரு நிலை!

ஆளவந்தார்க்கோ ஆலோலங்கள் - ஆரவாரங்கள் - செயல்படாத அறிவிப்புகள் - சிந்தனை செய்யாத திட்டங்கள்

- நிர்வாகத்தில் பெரும் குளறுபடி - நீதியின் மீது பாய்ச்சல் - இவற்றை எடுத்துச் சொல்ல - தடுத்து நிறுத்த - கழகம்தான் தமிழகத்திற்கு காவல் அரண்.

இந்தப் பணிகளினூடே இடைத்தேர்தல் வேறு திருச்செந்தூரில். நான் இந்நேரம் தேர்தல் களத்தில் இருந்திருக்க வேண்டுமே என்று நீ எதிர்பார்ப்பாய். நானும்தான் துடித்துக் கொண்டிருக்கிறேன். எப்போது தேர்தல் பணியாற்ற வருவேன் என்று இப்போது கூற முடியாவிட்டாலும், நிச்சயம் வருவேன். உன்னைக் காண்பேன். உன் கண் ஒளி கண்டு நலிவு நீங்கும். வலிவு பெருகும்.

திருச்செந்தூர்! மறக்க முடியுமா உடன்பிறப்பே? மதுரையிலிருந்து இருநூறு கிலோ மீட்டர் - எட்டு நாட்கள் - இரண்டு இலட்சம் பேர்களாக கடும் வெயிலில் கால் கொப்பளிக்க நடந்தோமே! கழக வரலாற்றில் புரண்ட பொன்னேடு அல்லவா அந்த நிகழ்ச்சி! அந்தத் திருச்செந்தூரில்தான் தேர்தல்! அல்ல! அல்ல! நீதிக்கும், அநீதிக்கும் இடையே நடைபெறும் போராட்டம்!

கட்சிகளின் வேட்பாளர்கள் களத்தில் இறங்கி விட்டனர். பதவி பலம் உடையோர் - பண பலம் மிகக் கொண்டோர் - அதிகாரம் வைத்திருப்போர் - அடாவடிச் செயலில் ஈடுபடுவோர் - துணிவுடன் இறங்கியுள்ள அந்தக் களத்தில், நமக்கே உரிய பண்பாம் பணிவுடன் நீதி கேட்டு வாக்காள பெருமக்களிடம் செல்கிறோம்.

தேர்தல் பணிபுரிய வா என்று உன்னை அழைக்கும் போதே, தேர்தல் செலவுக்குப் பணமும் கொஞ்சம் தா என்று உன்னை நான் கேட்பதும் வாடிக்கைதானே! கழகத்திற்கென நான் கேட்டு அதைத் தருவதற்கு நீ தயங்கிய காலம் ஒன்று உண்டா?

நிலையைப் புரிந்து கொள்! நிதியை அனுப்பி வை!

இந்தக் கடிதம் உன் கரம் பட்ட அடுத்த கணமே, திருச்செந்தூர் தேர்தல் நிதியை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி உதவிட ஆயத்தமாகிடு! எதிர்பார்த்திருக்கிறேன் உன்னை! இயன்றதை அனுப்பு! பிற பின்னர்!

அன்புள்ள,

மு. க.

(14-02-1983)

1084. அமைச்சரின் ஆசை நிறைவேறாது!

உடன்பிறப்பே,

காலையில் ஒரு டாக்டர் - மாலையில் ஒரு டாக்டர் - மணிக்கு ஒரு டாக்டர் - இப்படி மண்டையைக் குழப்பிக் கொள்கிறார்கள். கருணாநிதியின் நோயைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்னும் நாலு நாளில், சட்டையைக் கிழித்துக் கொண்டு ஆள் வெளியே வீதிக்கு ஓடி வருவார். பிறகு ஆளே இருக்க மாட்டார்.

இப்படி ஒரு அமைச்சர், ஒரு கூட்டத்தில் பேசினாராம் இரண்டு நாட்களுக்கு முன்பு!

பகைமூண்டு விட்டால் பழகிய பாசமிகு நாட்கள் எல்லாம் கூட பனிமூட்டத்துக்குள் பதுங்கி விடுகின்றன அல்லவா?

வெறுப்பு வளர வளர மனிதன் விலங்காக மாறிவிடுகிறான்; இல்லையா?

நான் என்ற மமதையும், அதிகாரபோதையும் சில நேரங்களில் கடந்தகால நட்புறவுகளைக்கூட மறக்கச் செய்து, அரசியல் நாகரிகத்தைத் துறக்கச் செய்து, மனிதாபிமான உணர்ச்சியை விட்டுச் சில மனிதர்களை எவ்வளவு தொலைவுக்குத் துரத்திவிடுகிறது பார்த்தாயா?

பாவம்! நேற்று இருந்தவர் இன்றைக்கு இல்லை என்னும் பெருமையுடையது இந்த உலகம் என்ற திருக்குறளைக் கூடவா, பதவிச் சுகம் மறக்கச் செய்து விட்டது?

உடன்பிறப்பே, இன்றுள்ள சில அமைச்சர்கள் இப்படிப் பேசுவது குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. இதுபோல பேசாமல் மனிதாபிமான உணர்வுடன் பேசியிருந்தால்தான், நான், அடடா! இவர்களா? இப்படி? என்று ஆச்சரியப்பட்டிருப்பேன். வாழ்க அவர்கள்! என்றே இப்போதும் வாழ்த்துகிறேன்.

இப்படி எத்தனையோ நெருப்பு மொழிகள்! நெருங்கியிருந்தோரே பொழிந்திடக் கேட்டுப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டிருப்பவன்தான் நான்!

என் தோளில் ஏறிச் சவாரி செய்தவர்கள், சவாரி செய்யும் போதே என் தொண்டைக் குழியை நெரிக்கப் பார்த்தபோதும், அவர்கள் செயல் கண்டு சிரித்து மகிழ்ந்தவன்தான் நான்!

நல்லவேளை! தூங்கும்போது தலையில் கல்லைத் தூக்கிப் போடாமல் போய் விட்டார்களேயென்று சில நண்பர்களைப் பற்றி எண்ணி எண்ணி, அவர்களுக்கு நன்றி கூறிக் கொண்டிருப்பவன்தான் நான்!

இத்தனையும் - எப்படித் தாங்க முடிகிறது என்னால்?

அந்த அருமருந்து உன்னிடம்தானே இருக்கிறது என் கண்மணி!

அதனால்தான், தொடர்ந்து வந்த சோதனைகளை மட்டுமல்ல! இப்போது வந்த நோயின் வேதனையையும் தாங்கிக் கொண்டேன்!

நலமுற்று வருகிறேன். அமைச்சர் பேசியது போல் பல டாக்டர்கள் கவனிக்கிறார்கள். பதவி இல்லை என்பதற்காக என்பால் கொண்ட அன்பைத் திரும்பப் பெற்றுக்கொண்டவர்கள் அல்ல, அந்த டாக்டர்கள்! அவர்களின் சிறந்த சிகிச்சையால் முழுமையாகக் குணமடைந்து விட்டேன்.

நல்ல ஓய்வுதான் தேவை! அதனால் நீ கவலையை விடுத்துக் கழகக் கடமைகளை ஆற்றிடு! செந்தூர் நாம் சந்திக்கும் இடமாக இருக்கும்! நான் வருவதற்குள் உன் செயல்கள் அங்கே வெற்றிக்கம்பம் நாட்டிடப் பயன்படட்டும்!

அன்பு உடன்பிறப்பே! அருமருந்தாம் நீ இருக்கும்போது - அமைச்சரின் ஆசை இப்போது நிறைவேறாது!

அன்புள்ள,

மு. க.

(16-02-1983)

1085. பறித்து வராத பாரிஜாதம்!

உடன்பிறப்பே,

பாரிஜாத மலரைக் கொண்டு வந்தே தீருவேன் என்று சூளுரைத்துக் கிளம்பிய பரந்தாமன், வெறுங்கையோடு திரும்பியது கண்டுஅவனது தேவியர் திகைத்து நின்றனர். என்ன அவ்வளவு வீரம் பேசிச் சென்றீர்கள்! பாரிஜாத மலரில்லாமல் பாமா உன்னைப் பாரேன் என்று சபதமுரைத்தீர்கள்! இப்போது சப்தமில்லாமல் வந்திருக்கிறீர்களே! பகைமூண்டு விட்டால் பழகிய பாசமிகு நாட்கள் எல்லாம் கூட பனிமூட்டத்துக்குள் பதுங்கி விடுகின்றன அல்லவா?

வெறுப்பு வளர வளர மனிதன் விலங்காக மாறிவிடுகிறான்; இல்லையா?

நான் என்ற மமதையும், அதிகாரபோதையும் சில நேரங்களில் கடந்தகால நட்புறவுகளைக்கூட மறக்கச் செய்து, அரசியல் நாகரிகத்தைத் துறக்கச் செய்து, மனிதாபிமான உணர்ச்சியை விட்டுச் சில மனிதர்களை எவ்வளவு தொலைவுக்குத் துரத்திவிடுகிறது பார்த்தாயா?

பாவம்! நேற்று இருந்தவர் இன்றைக்கு இல்லை என்னும் பெருமையுடையது இந்த உலகம் என்ற திருக்குறளைக் கூடவா; பதவிச் சுகம் மறக்கச் செய்து விட்டது? என்று சற்றுத் துடுக்காகவே கேட்டாள் இளையவள்! பரந்தாமன் கனைத்துக் கொண்டான். என்ன செய்வது பாவம்! அங்குப் போய்ப் பார்த்தால்தான் தெரிகிறது, பாரிஜாத மரத்தில் ஒரு பூ கூட இல்லை! என்று பரந்தாமன் பதில் அளித்தது கேட்ட ருக்மணி, என்ன கண்ணா இப்படிச் சொல்கிறீர்கள்? பாரிஜாத மரத்தில் ஏராளமான பூக்கள் பூத்துக் கொத்துக் கொத்தாகத் தொங்குகின்றன! அவற்றில் தேவையான மலர்களைக் கொண்டு வருகிறேன் - என்றுதானே கூறிவிட்டுச் சென்றீர்கள்? திரிகாலமும் உணர்ந்த தங்களுக்கு, பாரிஜாத மரத்தில் பூப்பஞ்சம் உண்டா, இல்லையா என்பது கூடவா

முன்கூட்டித் தெரியாமல் போய்விட்டது? எனப் புன்னகை தவழக் கேலிக்கணை விடுத்தாள்.

உடன்பிறப்பே, என்ன? புராணக் கதையைத் தலைகீழாக மாற்றுகிறேனே என்று வியப்படைகிறாயா? பரந்தாமன் சென்றான்! பாரிஜாத மலர் கொணர்ந்தான் என்றுதானே கதை! ஆமாம்! அப்படித்தான் கதை! அதையேன் இப்படி மாற்றிச் சொல்ல வேண்டும்? இயல்பாகவே எழக்கூடிய சந்தேகம்தான்!

தமிழ்நாட்டு அரசியல் கூத்துகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டே படுத்திருந்தேன்! பாரிஜாத மலர்க் கதையில் இப்படியொரு மாற்றம் இருந்தால் எப்படியிருக்கும் என்ற ஒரு சிறு கற்பனை! அதைத்தான் புதிய புராணமாக்கினேன்!

பிப்ரவரி எட்டாம் நாள், தமிழக சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசுகிறார்!

மத்திய அரசிடம் அரிசி கேட்டால், அவர்கள், நமக்கு அறிவுரை தருகிறார்கள். மத்தியிலே அரிசியை வைத்துக்கொண்டு தமிழகத்திற்குத் தராமல் ஒருமைப்பாடு பற்றிப் பேசினால் மட்டும் போதாது. எனவே மத்திய அரசின் போக்கைக் கண்டித்து, தமிழ்நாட்டுக்கு உடனடியாக அரிசி அனுப்ப வற்புறுத்தும் வகையில் 9-ஆம் தேதி நாளை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை உண்ணாவிரதம் மேற்கொள்வதென முடிவு செய்துள்ளேன்.

பேசியது மட்டுமல்ல! மறுநாள் ஏழு மணிநேரம் - அதாவது காலை 10 முதல் மாலை 5 வரையில், மத்திய அரசைக் கண்டித்து உண்ணாவிரதமும் இருந்தார். உண்ணாவிரத மேடையிலேயே நிருபர்களுக்குப் பேட்டியும் அளித்தார். அந்தப் பேட்டியில் :-

இந்த உண்ணாவிரதம் தேர்தல் ஸ்டண்ட் என்று கூறுபவர்களுக்கு, இரண்டு நாளில் என்னுடைய முக்கியமான பதிலைத் தருகிறேன். சில வரலாற்று முடிவுகள் திட்டமிட்டு வருவதில்லை. வரலாறு எழுதுவதே நடந்து முடிந்த பிறகுதான்! இன்றைக்கு உண்ணாவிரதமிருக்கிறேன். நாளைக்கு என்ன நடக்குமென்பது எனக்கே தெரியாது.

என முதலமைச்சர் குறிப்பிட்டுப் போர்முரசு கொட்டினார்! வரலாற்றுச் சிறப்புமிக்க போர்முரசுமென வர்ணித்தன, வழக்கமான

பஜனைபாடி ஏடுகள்! சில கட்சித் தலைவர்களே கூட ஆகா! சிலிர்த்தெழுந்துவிட்டார் நமது சிங்க முதல்வர்! எனச் சிந்துகள் பாடினர்!

அடுத்த கட்டம், டெல்லிப் பயணம்! கவர்னர் குரானாவுடன் சென்றார்! கவர்னருடன் சென்றதற்கு எம்.ஜி.ஆர். கூறும் காரணம் அற்புதமானது! இந்தக் கவர்னரை மத்திய சர்க்காரில் எல்லோருக்கும் நன்கு தெரியுமாம் - அதனால் அவரைச் சிபாரிசுக்கு அழைத்துக் கொண்டு டெல்லிக்குச் சென்றாராம்! உஜ்ஜல்சிங், கே.கே.ஷா, பிரபுதாஸ் பட்வாரி, சாதிக்அலி - இப்படி எந்தக் கவர்னருக்கும் மத்திய அரசில் தொடர்பு இல்லை! குரானாவுக்கு மட்டும்தான் அங்கே தொடர்பு! அதனால் அவரைப் பரிந்துரையாளராகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் எம்.ஜி.ஆர்.! உடன்பிறப்பே, சிரிக்காதே! சிரிப்பை அடக்கிக் கொள்! கவர்னர் ஏன் போனார் என்ற கதையை இன்னொருநாள் விபரமாகச் சொல்கிறேன்! டெல்லியிலிருந்து பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பினார்கள்.

சென்னையில் நிருபர்கள் சூழ்ந்து கொண்டார்கள்! முதலில் நான் குறிப்பிட்ட புதிய புராணத்தில், பாமாவும், ருக்மணியும் கண்ணனைச் சூழ்ந்து கொண்டு பாரிஜாதப் பூ எங்கே? எங்கே? என்று கேட்டதுபோல்! அடலேறு முதலமைச்சரே! ஆர்த்தெழுந்து அரிசி கொண்டு வர டெல்லிக்கு படையெடுத்த அஞ்சாநெஞ்சனே! அரிசி எங்கே? அரிசி எங்கே? எனக் கேட்டனர்.

இதோ முதலமைச்சர் பதில் அளிக்கிறார் படித்துப் பார்!

நிருபர் கேள்வி :- குறிப்பிட்ட தேதிக்குள் குறிப்பிட்ட அளவாவது அரிசி வேண்டும் எனக் கேட்டீர்களா?

முதல்வர்பதில்:- நாங்கள் அப்படிக் கேட்கவும் இல்லை. அவர்கள் அப்படிப் பதில் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை.

நிருபர் கேள்வி :- 85 ஆயிரம்டன் அரிசியில் ஓரளவாவது ஈடு கட்ட வேண்டும் என்று கேட்டீர்களா?

முதல்வர்பதில்:- அதை இப்போது சொல்ல முடியாது. அவர்களுக்கும் நெருக்கடி இருக்கிறது. இந்தியா முழுவதற்கும் சென்ற ஆண்டில் மத்திய அரசு கையிருப்பில் இருந்த அரிசியைவிட இப்போது குறைவு.

நிருபர் கேள்வி :- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதி கேட்டீர்களா?

முதல்வர்பதில்:- அதுபற்றி பேசவில்லை.

உடன்பிறப்பே, அரிசியை ஏராளமாக வைத்துக் கொண்டு மத்திய அரசு நமக்குத் தர மறுக்கிறது எனப் போர்ப் பிரகடனம் செய்துவிட்டுப் போனவர், இப்போது திரும்பி வந்து, பாவம்! மத்திய சர்க்காருக்கே அரிசி நெருக்கடி! சென்ற ஆண்டு மத்திய அரசுக்கு இருந்த உணவு தானியக் கையிருப்பு இப்போது இல்லை! என்று மத்திய அரசுக்குப் பரிந்து பேசுகிறார். குறிப்பிட்டத் தேதியும் கோரவில்லை! குறிப்பிட்ட அளவு அரிசியும் கேட்கவில்லை என்கிறார்! அங்கேயே அரிசி பற்றாக்குறை என்கிறார்!

பரந்தாமன், பாரிஜாத மரத்தில் பூவே இல்லை என்று சொன்னதாக நான் புதுக்கதை எழுதியது, இப்போது இந்தக் கூத்துக்குப் பொருத்தமாகத் தெரிகிறதா?

அன்புள்ள,

மு. க.

(19-02-1983)

1086. உன்நெஞ்சில் நானிருப்பது உண்மையானால்!

உடன்பிறப்பே,

நான் உனக்கு இந்தக் கடிதம் எழுதும் நேரம் - சென்ற ஆண்டு இதே நாளில், இதே நேரத்தில் நீதிகேட்டு நெடிய பயணத்தில், கோயில்பட்டியிலிருந்து எப்போதும் வென்றான் என்ற ஊரை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம்! நினைவிருக்கிறதா? இந்த மடலை நீ படிக்கும் பொழுது - ஆம்! கடந்த ஆண்டு பிப்ரவரி 20-ஆம் நாள் எப்போதும் வென்றான் என்னுமிடத்திலிருந்து தூத்துக்குடி நோக்கி நடந்து கொண்டிருக்கிறோம்! பிப்ரவரி 15-ஆம் நாள் காலை, மதுரையில் அண்ணன் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு, பேராசிரியரும், பொருளாளரும், நாஞ்சிலாரும் வாழ்த்தி வழியனுப்பி வைத்திட, மதுரையிலிருந்து திருச்செந்தூர் வரையில் எட்டு நாட்கள் - இரண்டு லட்சம் பேர் - இருநூறு கிலோ மீட்டர் தொலைவு, கடும் வெயிலில் கால்கள் கொப்பளிக்கச் சோர்வின்றி நாம் நடத்திய அந்த நீதிப் பயணம், என்றென்றும் நம் நெஞ்சங்களில் நிலைத்து விட்டதன்றோ!

நீதிபதி வாயிலாகக் கிடைத்த நீதியைப் புறக்கணிக்காமல், கொலைகாரக் குற்றவாளிகளைக் கைது செய்து கூண்டிலேற்றுங்கள் என்று கோலோச்சுகிறவர்களைப் பார்த்துக் கொடுத்த குரல் அவமதிக்கப்பட்ட காரணத்தால் மட்டுமல்ல, முருகன் கோயில் கொலைகாரர்களுக்கு ஆட்சியாளரின் பாதுகாப்பு முக்காடும் போடப்பட்ட கொடுமையைச் சகிக்க முடியாமல் அந்த நெடிய பயணத்தை மேற்கொண்டோம்.

அன்று என் கால் கொப்புளங்களில் சீழ்கொட்டியது! உடன்பிறப்பே, உன் கண்களில் நீர்கொட்டியது! அதுகண்டு நான் உன்னைத் தேற்றுதற்குப் புன்னகை புரிந்தேன் எனினும், உனது பாச உணர்ச்சி கண்டு என் இதயம் ரகசியமாக ரத்தக்கண்ணீர்

வடித்தது! ஒருவரா, இருவரா - பத்துப் பேரா - நூறு பேரா - காலாற நடந்து கலந்துரையாடியவாறு வழிப்பயணம் போவதுபோலப் போக! லட்சக்கணக்கானோர் பட்டாளத்து அணிவகுப்பு போலப் புறப்பட்ட இடத்திலிருந்து புயல் வேகம் காட்டியன்றோ பயணம் செய்தோம்! எத்தனை எத்தனை உடன்பிறப்புகளின் தலையில் பெட்டி, சிறு படுக்கைகள், கையில் கழகக் கொடி! அத்தனையும் சுமந்து கொண்டு அவர்கள் விறுவிறுவென நடந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியன்றோ - நமது கழகக் குடும்பத்தின் மாட்சியன்றோ?

சென்ற ஆண்டு பிப்ரவரியில், திருச்செந்தூர் வருக எனைத் தொடர்ந்து என அழைத்தேன், வந்தாய்! என் பின்னே நடந்திடுக என்றேன், நடந்தாய்!

இந்த ஆண்டு திருச்செந்தூர் நோக்கிச் சென்றிடுக எனத்தான் உன்னை வேண்டிட முடிகிறது! காரணம், உனை வரவேற்றிட உனக்கு முன்பே நான் அங்கு இருந்திட முடியவில்லை! உடல்நிலை குறுக்கே நின்றுவிட்டது! அதனால்தான் திருச்செந்தூர் தொகுதியில் எந்தெந்தப் பகுதியில் நீ பொறுப்பேற்றுக் கொண்டு அயர்வின்றித் தொண்டாற்ற வேண்டுமென்று தனி அஞ்சல் ஒன்று தீட்டியிருந்தேன், தலைமைக் கழகம் சார்பாக!

ஏதோ - சொன்னதற்காக ஒருநாள் இருநாள் அடையாளமாகப் போனோம் என்றில்லாமல், உனக்கும் பொறுப்பு உண்டு என்ற உணர்வுடன், இந்நேரம் திருச்செந்தூரில் உன் கடமையினை மேற்கொண்டிருப்பாய் என நம்புகிறேன்.

பொதுச்செயலாளர் பேராசிரியர் அங்குதான் முகாமிட்டிருக் கிறார். துணைப் பொதுச்செயலாளரும் இரண்டொரு நாளில் அங்குச் சென்று தொடர்ந்து தங்கிப் பணியாற்றிட இருக்கிறார். பொருளாளருக்கும்தான் உடல்நலமில்லை. நான் எப்படியும் உன்னையும், உன் உழைப்பையும், உன் உழைப்பால் ஒளியுமிழும் கண்ணையும், நீ உருவாக்கிக் கொண்டுள்ள ஒழுங்குமுறைப் பணியையும், ஒற்றுமை குலையாத ஆற்றலையும் - கண்டுமகிழவும், அந்த மகிழ்ச்சியையே உடலுக்குத் தெம்பாகக் கொண்டிடவும் திருச்செந்தூர் வரத்தான் போகிறேன்.

சென்ற ஆண்டு சொன்னேனே? ஞாபகமிருக்கிறதா? காலில் ஏற்பட்டுள்ள ரணத்தால் நடக்க முடியாவிட்டாலும், உருண்டு

கொண்டாவது பயணத்தை நிறைவு செய்வேன் என்று கூட்டத்தில் அறிவித்தேனே? அதேபோலத்தான் இப்போதும் உறுதியோடு இருக்கிறேன் - உழைக்கின்ற உனது கரங்களுக்கு நேரில் வந்து முத்தமாரி பொழியத் துடிக்கிறேன்!

அருகில் நான் இல்லையே என்று அயர்ந்து விடாதே! அசட்டையாக இருந்து விடாதே! உன் நெஞ்சில் நான் இருப்பது உண்மையானால், தயவு செய்து இந்த ஒரு தடவை, ஆமாம் - ஒரே ஒரு தடவை என் உழைப்பையும் சேர்த்து நீ உழைத்திடு உடன்பிறப்பே!

உழைக்கவே பிறந்த கட்டை இது! என் செய்வது! ஓய்வு, கட்டாயமாகத் திணிக்கப் பட்டுவிட்டதே! கவலைப்படாதே! இதையும் சேர்த்து ஒன்றுக்குப் பத்து மடங்கு அதிகமாக உழைப்பதற்கு இப்போதே உனக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

நான் உன்னுடன் இருப்பதாகவே எண்ணிக்கொண்டு, இன்றே செய்க! அதுவும் நன்றே செய்க! எனும் ஆர்வத்துடன் ஆற்றிடுகத் தேர்தல் பணியினை!

அன்புள்ள,

மு. க.

(20-02-1983)

1087. விழிகள் வினாக்குறிகளாக மாறினால்!

உடன்பிறப்பே,

கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தமிழகத்தின் சில மாவட்டங்களில் சற்றுக் கடுமையாகவும், பல மாவட்டங்களில் தலைநீட்டுகிற அளவுக்கும் வறட்சி நுழைந்திட்டபோது, ஒவ்வொரு மாவட்டத்திலும் போர்க்கால நடவடிக்கையெனத் துயர் தணிப்புப் பணிகள் நடைபெற்றதை - நிழலின் அருமையை வெயிலில் உணர்வதுபோல - இன்றைய தினம் தமிழக மக்கள் மறக்காமல் இருப்பார்கள் என்றே நம்புகிறேன். என் செய்வது! தேர்தல் காலத்து வாக்குறுதிகளை அரிச்சந்திரன் அறிவிப்பு எனக் கருதித் தாங்களே தேடிக்கொண்ட தீங்கு, இன்றைக்குத் தமிழ் மக்களை எல்லா வகையிலும் நிலைகுலையச் செய்து விட்டது. வறட்சி நிவாரணப் பணிகளை விரைந்து செயல்படுத்தித் துயரத்தின் சாயலைக்கூட மக்களை அணுகவொட்டாவண்ணம் தடுத்து நிறுத்திடக் கழக அரசு தூய்மையான, தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டபோது அன்றைய எதிர்க்கட்சியாக இருந்த அ.இ.அ.தி.மு.க.வினர் என்ன செய்தார்கள் தெரியுமா? மக்களைத் திசைத் திருப்புவதற்காக மாநில அரசை எதிர்த்தும், கண்டித்தும் தமிழகத்தின் பல பகுதிகளில் கிளர்ச்சிகளை நடத்தினார்கள். ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். தங்களது தோழமைக் கட்சிகளான கம்யூனிஸ்டுக் கட்சிகளையும், மாநில அரசுக்கு எதிராக உண்ணாவிரதத்தில் இணைத்துக் கொண்டார்கள். நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், மதுரை நகரில் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தார். அந்தக் கட்சியின் முன்னோடிகள், ஒவ்வொரு ஊரிலும் அடையாள உண்ணாவிரதமிருந்தார்கள். அந்த நிகழ்ச்சிகள் எல்லாம்

எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், அவரது கட்சித் தலைவர்களுக்கும் ஒருவேளை மறந்து போயிருக்கக்கூடும்! அவர்கள் மறந்தாலும், அவர்களுக்கு நினைவூட்டுவதற்கு அப்போது கழக அரசில் அமைச்சர்களாக இருந்துவிட்டு, (ஆமாம் - கடைசி வரையில் அதாவது ஆட்சி கலைக்கப்படும் வரையில் அமைச்சர்களாக இருந்து விட்டு) இப்போது எம்.ஜி.ஆர். அவர்களின் கடைக்கண் பார்வைக்காகக் காத்து நிற்கிறார்களே! அந்த நண்பர்களாவது அந்த நிகழ்ச்சிகளை எம்.ஜி.ஆருக்கும், மற்றவர்களுக்கும் நினைவுபடுத்துவார்கள் என எண்ணுகிறேன்.

உடன்பிறப்பே, அமைச்சர்கள் இப்போது பேசுகிறார்கள், அரிசியை அரசியலாக்கலாமா? என்று! அடடா! இதனைக் கேட்கும் போது எத்தனை எத்தனை கடந்த காலச் சம்பவங்கள் திரைப்படத்து பிளாஷ்பேக் காட்சிகளைப்போல, மளமளவென மனவெளியில் தோன்றுகின்றன!

இன்றைய ஆளுங்கட்சியின் பொதுச்செயலாளர், அன்றைய கழக அரசின் அமைச்சர் நண்பர் ப.உ. சண்முகம் அவர்களை நோக்கிச் சட்டசபையில் எத்துணைச் சுடுகணைகளைப் பொழிந்தார்கள் எம்.ஜி.ஆர். கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் என்பது மறந்தா போய் விடுகிறது! மறந்தாலும் நினைவூட்ட சட்டசபை நடவடிக்கைக் குறிப்புகள் இல்லாமலா போய்விட்டன! அரிசியை அரசியலாக்கித்தானே அன்றைக்கு அ.தி.மு.க. கட்சி வரிசையிலேயிருந்து அண்டே, தாண்டிக் குதித்துத் தாக்குதல் சரங்களை விடுத்தார் அமைச்சராக இருந்த ப.உ.ச. மீது! அதை இப்போது நண்பர் அண்டே அவர்கள் மறந்தாலும், ப.உ.ச.வைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே அடிக்கடி இடித்துரைக்கிறார்களே அ.தி.மு.க. அமைச்சர்கள்! அதிலும் அரங்கநாயகம் எனும் அமைச்சர் திருச்செந்தூர் தொகுதி முழுதும் அந்த பழைய கதையை (அரிசி அரசியலை)த் தானே இப்போதும் பேசிக் கொண்டிருப்பதாக ஏடுகளில் செய்திகள் வருகின்றன!

இப்போதும் கேரளாவுக்கு ஏராளமான அரிசியை இங்கிருந்து அனுப்பிட எம்.ஜி.ஆர். அரசு அனுமதித்ததுதான் இந்த நெருக்கடிக்குக் காரணம் என எக்ஸ்பிரஸ் ஏடு திட்டவட்டமாக எழுதியிருக்கிறதே!

உடன்பிறப்பே, அரிசிப் பிரச்சினை மட்டுமா? குளிக்கத் தண்ணீர் இல்லை! குடிக்கவோ பாதுகாக்கப்பட்ட நீர் இல்லை! குக்கிராமங்கள், சிற்றூர்கள், பேருர்களில் வாழ வழியின்றி மக்கள் ஊர்விட்டு ஊர், ஏன்? மாநிலம் விட்டு மாநிலம் ஓடிப் பிழைத்திட, ஒருச்சாண் வயிற்றைக் கழுவிடத் துடியாய்த் துடிக்கிறார்கள்! நஞ்சை குலுங்கிய தஞ்சை, வறுமை வாட்டம் எனும் நஞ்சைக் கக்குகிறது! கையாலாகாத இந்த அரசை - தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கக் கையில் விளக்கெண்ணெய் தடவிக் கொண்டு கிளம்பும் இந்த அரசைக் கண்டித்துத் தஞ்சைத் தரணியில் கழகத்தின் முதற்களம் அமைகிறது!

மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடிக்கும் வளமிகு தமிழகத்தின் இன்றைய வாட்டத்திற்குக் காரணமான அரசைக் கண்டிக்க, பல்வேறு மாவட்டங்களில் அடுத்தடுத்துக் கழகத்தின் அறப்போர்க்களங்கள் அமைய இருக்கின்றன.

முதலில் தஞ்சை மாவட்டத்தின் கழகப் பாசறையிலிருந்து அறப்போர் வீரர்கள், வரும் 25-ஆம் நாள் அணிவகுக்கின்றனர்! தமிழகத்தின் பசிபோக்கும் தஞ்சை, இன்றைக்குப் பசியால், பட்டினியால், பஞ்சத்தால் பரிதவிக்கும் காட்சி!

இதனை அரசுக்கு உணர்த்திட அறப்போர்க்களம் புகுந்தால், அரிசியை அரசியலாக்குவதா? என ஆர்ப்பரிக்கின்றனர் ஆளுங்கட்சியினர்!

பட முடியாது இனித் துயரம்! பட்டதெல்லாம் போதும்! என்று பட்டினிப் பட்டாளம் அணிவகுத்துக் கிளம்பி விட்டால், அதன் பிறகும் ஆணவ முகட்டில் இருந்து கொக்கரிக்கும் கோலேந்திகள் தலைகுப்புற வீழ்ந்திடும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

அன்றைக்கு அரிசியை அரசியலாக்கியது யார்?

ஏன்? இன்றைக்கும் அண்ணா துயிலுமிடத்தில் அரிசியை அரசியலாக்கி உண்ணாவிரதம் இருந்தது யார்?

வருமுன் காக்கும் உணர்வும் இன்றி - வந்த பின் காக்கும் திறனும் இன்றி - மத்திய அரசின் மீது பழிபோட்டுத் தப்பித்துக் கொள்ள அரிசியை அரசியலாக்குவது யார்?

யார் என்பதை மக்கள் தெளிவாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள்!

தெளிவு பெற்றவர்களின் தீப்பொறி பறக்கும் விழிகள் வினாக்குறிகளாக மாறிடும் நேரம் வந்துவிட்டது!

அந்த அணிகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றிடவும், அந்த அணிகளில் இணைந்து அறப்போர்க்கொடி உயர்த்திடவும், அன்பு உடன்பிறப்பே! உன்னைத் தயார்படுத்திக் கொள்க! என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

(21-02-1983)

1088. நடப்பது கவர்னர் ஆட்சியாம் நம்புங்கள்!

உடன்பிறப்பே,

ஒரு மாநிலத்தில் எந்தவொரு காரணத்திற்காகவும், கவர்னர் ஆட்சி என்று அழைக்கப்படுகிற குடியரசுத் தலைவர் ஆட்சி நீடிப்பது கூடாது என்றும், கவர்னர், தனது பதவிப் பொறுப்புக்குரிய கடமைகளைச் செய்பவராக இன்றுள்ள அரசியல் சட்டப்படி ஒரு நிலைமையிருந்தாலும்கூட, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஆட்சி இருப்பதுதான் ஜனநாயகக் கோட்பாட்டிற்கு உகந்தது என்றும், மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உணர்ந்தவர்கள் வலியுறுத்திடத் தவறுவதில்லை. அசாம் மாநிலம், அமளிக்காடாகவும், கொலைவெறி வன்முறைக் களமாகவும் தோற்றமளித்திடும் நிலையிலேகூட, அங்கே கவர்னர் ஆட்சியைத் தொடர்ந்து நீடிக்காமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு ஆட்சி உருவாகிட முயற்சிகள் மேற்கொள்வதே மேல் என்று சில அனைத்திந்தியக் கட்சிகளின் முக்கியத் தலைவர்கள் நேற்றைய தினம்கூட கருத்தறிவித்திருக்கிறார்கள்.

கவர்னர் பதவிகளே தேவையில்லை என்கிற அளவுக்கு அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டுமென்ற கருத்தினை அண்ணா அவர்களும், மற்றவர்களும் பல நேரங்களில் எடுத்துரைத்திருக்கின்றனர். மாநிலங்களில் பிரச்சினைகள் எழும்போது, கவர்னர் ஆட்சியல்லாது குறுகிய இடைக்காலத்திற்கான மாற்று ஏற்பாடுகளையும் கழகத்தின் சார்பில் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆயினும் கவர்னர் பதவி ஒழிக்கப்படும் வரையில், இருக்கின்ற நிலைமைகளுக்கேற்ப நடைமுறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத நிலைமை இருப்பதை நாம் மறுத்திடவில்லை.

மாநில கவர்னர்களுக்கும், பாண்டிச்சேரி, கோவா போன்ற யூனியன் பிரதேசக் கவர்னர்களுக்கும் அந்தந்தப் பகுதி ஆட்சி நிர்வாகப் பொறுப்புகளில் பங்கேற்பதில் நிரம்ப வேறுபாடு உண்டு! யூனியன் பிரதேச லெஃப்டினென்ட் கவர்னர்கள், ஏறத்தாழ ஒரு முதலமைச்சரைப் போலத்தான்! மிகப்பெரும்பாலான கோப்புகள் அவர்களது இறுதி ஆணைக்காக அனுப்பப்பட வேண்டும்!

ஆனால் தமிழகம் போன்ற மாநிலங்களில், முதலமைச்சர்தான் முதலமைச்சர்! கவர்னர் அவர்கள், குடியரசு தலைவரின் பிரதிநிதியாக இருந்து இயன்ற வரையில், ஏன்? விதிகள் இடம் தரும் வரையில் மாநில முதலமைச்சருடன் ஒத்துப்போக வேண்டியவர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச்சரின் இறுதி ஆணைக்கு வருகிற கோப்புகளில் ஒரு சதவிகித எண்ணிக்கைக் கோப்புகள் கூட மாநில கவர்னர்களுக்கு வருவதில்லை.

(ஒரு சில விஷயங்களில்தான் கவர்னருக்குத் தம் உசிதம்போல் செயலாற்றும் அதிகாரங்கள் (DISCRETIONARY POWERS) உள்ளன.)

மைசூர் மகாராஜா, தமிழக கவர்னராக இருந்தபோதும் சரி! சர்தார் உஜ்ஜல்சிங், தமிழக கவர்னராக இருந்தபோதும் சரி! கே.கே.ஷா, போன்றவர்கள் கவர்னராக இருந்த போதும் சரி! அப்போதிருந்த மக்களாட்சிகளை அந்தக் கட்சியின் பேரால், காங்கிரஸ் ஆட்சியன்றோ - காமராஜர் அல்லது பக்தவத்சலம் ஆட்சியென்றோதான் சொன்னார்கள்! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக ஆட்சியையும் அப்படித்தான், கழக ஆட்சி அல்லது அண்ணா ஆட்சி, கருணாநிதி ஆட்சி என்று அழைத்தனர். இப்போதிருப்பதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அ.தி.மு.க. ஆட்சி! அல்லது முதல்வர் பெயரால் அழைப்பதென்றால் எம்.ஜி.ஆர். ஆட்சி!

கவர்னருக்கு எனச் சில பொறுப்புகள் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு மாநில ஆட்சியைக் கலைக்கச் சொல்லிப் பரிந்துரை செய்கிற அளவுக்குக் கவர்னரிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்தக் காரியத்தை அவர் செய்ய முடியும் என்பதாலேயே, ஒரு மாநிலத்தில் முதலமைச்சருக்கு மேலாக இருந்து அவரே ஆட்சி நடத்துகிறார் என்று கூறுவது அல்லது அப்படிக் கற்பனை செய்வது மாநிலத்திற்கென இருக்கின்ற கொஞ்சநஞ்சம் சுயாட்சித்

தன்மையையும், நாமே வலிந்து இழந்து விடுவதற்குத் தயாராகி விட்டது போன்ற தவறாகும்.

இப்படியொரு இமாலயத் தவறை, நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், நேற்று நடத்திய நிருபர்கள் பேட்டியில் செய்திருக்கிறார்.

இந்திரா காங்கிரஸ்காரர்கள், பேரணி நடத்தி கவர்னரைச் சந்தித்து மனுக் கொடுத்து, கவர்னர் ஆட்சி வேண்டுமென்று கோரியிருக்கிறார்களே! அதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?

- என்று முதலமைச்சரை நிருபர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு முதல்வர் அளித்துள்ள பதில் என்ன தெரியுமா? இதோ அவரது கட்சி ஏட்டிலும், மற்ற ஏடுகளிலும் அந்த பதில் வெளிவந்துள்ளது!

ஒரு மாநில அரசு, கவர்னரின் அரசுதானே! சட்டப்படி, தமிழகத்தைப் பொறுத்த மட்டில், கவர்னருக்குத்தான் அதிக அதிகாரம் உள்ளது! கவர்னர் ஆட்சி நடப்பதால்தான் அரிசிப் பிரச்சினைக்கு டெல்லிக்குக் கவர்னர் வந்தார்!

இதுதான் முதல்வர் எம்.ஜி.ஆரின் விளக்கமான பதில்!

சட்டப்படி, தமிழகத்தைப் பொறுத்த மட்டில், கவர்னருக்குத் தான் அதிக அதிகாரம் உள்ளது.

என்று எம்.ஜி.ஆர். கூறியிருப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது! இந்திய அரசியல் சட்டத்தைக் குழப்பமின்றிப் படித்திருப்பவர்களுக்குக் கூடப் பெருங்குழப்பத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது!

தமிழகத்தைப் பொறுத்த மட்டில்தான் கவர்னருக்கு அதிக அதிகாரம் என்றால் ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மராட்டியம், மத்தியப்பிரதேசம், அரியானா, குஜராத், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் உள்ள கவர்னர்களுக்கு தமிழகக் கவர்னரை விட எந்தெந்த அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன? என்கிற வினா எழுவது இயல்பே அல்லவா!

கவர்னர் ஆட்சி நடப்பதால்தான் அரிசிப் பிரச்சினைக்கு டெல்லிக்கு கவர்னர் வந்தார்.

என்று ஒரு முதலமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பது அவருடைய கட்சியிலேயுள்ள அரசியல்வாதிகள் பலரைத் திக்குமுக்காட வைக்கக்கூடிய ஒன்றல்லவா? அதனால் என்ன? அதையும் அட்ஜஸ்ட் செய்து கொண்டு ஆகா! அபாரம்! அற்புதம்! அருமையான பேட்டி! அழகான விளக்கம்! ஆணித்தரமான உண்மை! என்று தோத்திரம் செய்திடவுங் கற்றவர்கள் அந்த அரசியல்வாதிகள்! அதாவது காரிய வாதிகள்!

1980-இல் சட்டமன்றப் பொதுத் தேர்தலில் வாக்களித்த மக்களும், நீயும், நானும் இப்போது நடப்பது எம்.ஜி.ஆர். ஆட்சி என நினைத்துக் கொண்டிருக்கிறோம்!

ஆனால் அவரோ, நாள்தோறும் எழுகின்ற பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாத காரணத்தால்,

நடப்பது அ.தி.மு.க. ஆட்சி அல்ல!

ஆளுநர் ஆட்சி!

- என்று கவர்னரின் பக்கம் கை காட்டி விட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்! என் செய்வது! இப்படியொரு முதலமைச்சர் நமக்குக் கிடைத்திருக்கிறார்.

ஏ, தாழ்ந்த தமிழகமே! நீ தலை நிமிரப் போவது எப்போது?

உடன்பிறப்பே! பெருமூச்சுடன் கிளம்புகிறது இந்தக் கேள்வி!

அன்புள்ள,

மு. க.

(22-02-1983)

1089. விழித்துக் கொண்டிருக்கும் புலியும், வெங்கட்ராமனும்!

உடன்பிறப்பே,

பதினைந்து ஆண்டுக் காலமாக அதாவது, தி.மு.க. ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து அ.தி.மு.க. ஆட்சி நடைபெறுகிற இந்தக் காலம் வரையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியும், மற்ற வளர்ச்சியும் குன்றிவிட்டது என்று மத்தியில் நிதியமைச்சராக இருந்து பாதுகாப்பு அமைச்சராகக் குன்றிப் போய்விட்ட திருவாளர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள், திருச்செந்தூரில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவருக்கும் சரி! அவரது பிரதான சீடகோடிகள் எனப்படும் ஒரு சில தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கும் சரி; அ.தி.மு.க. ஆட்சியின் குறைபாடுகளைப் பற்றி மட்டும் பிரித்துப் பேசுவதென்றால் அது இயலாத காரியம்! போகிற போக்கில் நமது கழகத்தின் மீதும் புழுதியை வாரித் தூற்றினால்தான் எம்.ஜி.ஆர். அவர்களிடமிருந்து சபாஷ் வாங்கிக் கொள்ள முடியும்.

1977 முதல் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு தருவதற்கு முன் வந்த ரயில் பெட்டித் தொழிற்சாலையின் விரிவாக்கமாக கலர் பிலிம் தொழிற்சாலையையும், இராணிப்பேட்டையில் பெல் (BHEL) நிறுவன விரிவாக்கமாக அமைய இருந்த தொழிற்சாலையையும், ஓசூருக்கு வருவதாக இருந்த இந்துஸ்தான் இயந்திரக் கருவித் தொழிற்சாலையையும், கடற்படைக் கல்வி நிலையத் திட்டத்தையும், எம்.ஜி.ஆர். அரசு, அலட்சியம், தாமதம், அக்கறையின்மை ஆகிய காரணங்களால் கோட்டை விட்டு விட்டதைத் தமிழகத் தொழில் வளத்தில் ஆர்வமுள்ள அனைவரும் கண்டித்திருக்கிறார்கள். தமிழகத்தில் எம்.ஜி.ஆர். அரசு தூங்கியதின் காரணமாக, அந்தத் தொழிற்சாலைகளும், திட்டங்களும் ஆந்திரா, கேரளா, நைனிடால் போன்ற இடங்களுக்குப் போய் விட்டன! இதை

மட்டும் சுட்டிக்காட்டினால் நண்பர் வெங்கட்ராமன் அவர்களுக்கு மனநிறைவு ஏற்படுவதில்லை! எம்.ஜி.ஆர். என்ன நினைத்துக் கொள்வாரோ என்ற சங்கடத்தினால், பாருங்கள் எம்.ஜி.ஆர்.! உங்களை மட்டும் குறை கூறவில்லை! தி.மு.க.வையும் ஒரு பிடி பிடித்திருக்கிறேன் என்று கூறி, அவரது புன்னகையைப் பெற ஆர்.வி. அவர்கள் தவறுவதேயில்லை!

எம்.ஜி.ஆரின் ஏழு மணி நேர உண்ணாவிரத நாடகமே ஆர்.வி.யின் ஆலோசனையுடன் நடைபெற்றது என்றுதானே முக்கியமான ஆங்கில ஏடு ஒன்று சுட்டிக்காட்டியிருக்கிறது!

அதனால், ஒன்பதாண்டுக் கால கழக ஆட்சியில் தமிழகம் பெற்றுள்ள வளர்ச்சிகளை வெங்கட்ராமன் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதுதான்!

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் தங்கு தடையின்றி மத்திய அரசினால் நிறைவேற்றப்பட்டபோது, மாநிலங்கள் பலவற்றில் தொழில் வளங்கள் பெருகியதுண்டு! அந்த நேரத்தில் தமிழகத்தில் தொழில் அமைச்சராக இருந்த ஆர்.வி. அவர்கள், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் பலனாக இங்கே தொழில்கள் உருவாக முயற்சிகளை மேற்கொண்டார்! அப்போதும் கூட வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது! என்று முழக்கமிடுகிற அளவுக்கு, வடக்கத்தி மாநிலங்களோடு போட்டி போடுகிற நிலையில் தமிழ்நாடு (மன்னிக்கவும்! சென்னை ராஜ்யம்) வளர்ச்சி பெற்றதாக இல்லாமல் சவலைப் பிள்ளையாகத்தான் திகழ்ந்தது!

அதன்பிறகு நாலாவது ஐந்தாண்டுத்திட்டம் - இந்திய அளவில் சுருங்கி விட்டது! அதைத் தொடர்ந்து திட்டங்களுக்கு விடுமுறை என்று மத்திய திட்டக்கமிஷன் அறிவித்தது. ஐந்தாண்டுத் திட்டங்கள், தடியூன்றி நடக்கவும் முடியாமல் தள்ளாடின! அந்தச் சூழலில்தான் கழகம் 1967-இல் ஆட்சிக்கு வந்தது! ஆர்.வி. கூறுவது போல, கழக ஆட்சியில் தமிழகத்தின் வளர்ச்சியொன்றும் தரைமட்டமாகப் போய்விடவில்லை! வெங்கட்ராமன் காலத்தில் வெறும் பொட்டல்காடாக இருந்ததும் - எதற்கும் தகுதியற்றது எனப் போடப்பட்டதுமான இராணிப்பேட்டை பரந்த வெளி நிலத்தில் பிரமாண்டமான தொழிற்பேட்டையை உருவாக்கியிருப்பது தி.மு.க. ஆட்சிதான்! சேலம் உருக்காலைத் திட்டத்திற்காகப் போராடி, டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்

வாதாடி, அந்தத் திட்டம் சேர்க்கப்படாத நாலாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவினைத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது எனக் குரல் எழுப்பி, அந்தத் திட்டத்தைப் பெற்றதும் கழக அரசுதான்! ஆனால், அந்த சேலம் உருக்காலைத் திட்டம் இன்று உருட்டாலைத் திட்டமாக உருக்குலைந்து போய் விட்டது! தூத்துக்குடியில் ஸ்பிக் உரத் தொழிற்சாலை எழுந்து நிற்பது கழக ஆட்சியில்தான் என்பதை ஆர்.வி. அவர்கள் அறிய மாட்டாரா? தூத்துக்குடி துறைமுக விரிவாக்கம் கழக ஆட்சியில் நடைபெறவில்லையா? மொபெட் வாகனம் தயாரிக்கும் தொழிற்சாலை, அரக்கோணம் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் தொழிற்சாலை, தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிகல்ஸ் தொழிற்சாலை, பாண்டியக் கெமிகல்ஸ் தொழிற்சாலை, தமிழ்நாடு தாதா பார்மசுடிகல்ஸ் தொழிற்சாலை, சதர்ன் போரக்ஸ் தொழிற்சாலை, மாருதி கிரிஸ்டல் சால்ட் தொழிற்சாலை, கேஸ்டிங்ஸ் அண்ட் போர்ஜிங் தொழிற்சாலை, தமிழ்நாடு புளோரிங் அண்ட் அலைடு கெமிகல்ஸ் தொழிற்சாலை போன்ற எத்தனையோ தொழிற்சாலைகள் கழக ஆட்சியில்தான் உருவாயின!

அதுமட்டுமா? புதிய பாசன வசதிகள் பெருக்கத்திற்காக எத்தனை திட்டங்கள் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுள்ளன!

முசிறியையும், குளித்தலையையும் இணைப்பது போன்ற எத்தனை மாபெரும் பாலங்கள் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டன!

ரயில்வே கேட்டுகளைக் கடக்க, நெல்லையிலும், மதுரையிலும் கட்டப்பட்டது போன்ற அற்புதமான பாலங்கள் கழக ஆட்சியில் எண்ணிலடங்கா!

1967 வரையில் இரண்டாயிரம் அரிஜன காலனிகளுக்கு மட்டுமே இருந்த மின் விளக்குகள், கழக ஆட்சியில் இருபதாயிரம் அரிஜனக் காலனிகளுக்கு விரிவாக்கப்பட்டன!

மின்விளக்கு இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது எனச் சூளுரைத்து, தமிழக முழுதும் ஒரு சில நூறு கிராமங்களைத் தவிர, எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி வழங்கப்பட்டதும் கழக ஆட்சியில்தான்!

இரண்டு லட்சமாக இருந்த விவசாய பம்ப் செட் மின் இணைப்புகளை எட்டு லட்சம் பம்ப் செட்களாக உயர்த்தியதும் கழக ஆட்சியில்தான்!

நூற்றுக்கணக்கான புதிய கல்லூரிகள் கழக ஆட்சியில்!

கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் கழக ஆட்சியில்!

அரிசனங்களுக்கு, மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தந்தது கழக ஆட்சியில்!

குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம் - கழக ஆட்சியில்!

எழுதிக்கொண்டே போகலாம்! ஏடு கொள்ளாது! அதனால் இத்துடன் நிறுத்துகிறேன்!

தமிழக வளர்ச்சி குறித்து நீலிக்கண்ணீர் விடும் வெங்கட்ராமன் அவர்களின் பாதுகாப்பு அமைச்சகம், சென்னை ஆவடியில் உள்ள கனரக வாகனத் தொழிற்சாலை (Heavy Vehicles Factory) தயாரித்து வரும் விஜயாந்தா டாங்குகளின் உற்பத்தியை நிறுத்தி விடுவதென்று முடிவு செய்திருப்பதாக வந்துள்ள செய்தி இன்னும் மறுக்கப்படவில்லை! ஆவடித் தொழிலாளர்கள் இது குறித்துக் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்!

வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ! என்பது போல வெங்கட்ராமன்கள் பேசிவிட்டுப் போய் விடலாம்!

1967க்குப் பின் பதினைந்து ஆண்டுகள் மாநிலக் கட்சியின் ஆட்சியால் தமிழக வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் தேசியக் கட்சி ஆட்சி ஏற்பட வேண்டுமென்றும் வெங்கட்ராமன் பேசியுள்ளாரே!

என்று நிருபர்கள் முதல்வர் எம்.ஜி.ஆரைக் கேட்கிறார்கள். உடனே எம்.ஜி.ஆர். பதில் கூறிவிட்டார்.

வாஸ்தவம்தான்! மாநிலக் கட்சிகளை நீக்கிவிட்டு, அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம் போன்ற தேசியக் கட்சியின் ஆட்சியே இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

இதுதான் உடன்பிறப்பே, எம்.ஜி.ஆரின் பதில்! இனி மாநிலக் கட்சிகள்தான் அதிகாரத்திற்கு வர முடியுமென எம்.ஜி.ஆர். பேசி, அவரது அமைச்சர்கள் புயலென வீசி - சில நாட்கள் கூட ஆகவில்லை! அதற்குள் தனது கட்சியை அகில இந்திய தேசியக் கட்சி என்று எம்.ஜி.ஆர். இப்போது பிரகடனம் செய்து விட்டார்!

விளக்கமளிப்பதோ - விடையிறுப்பதோ வெங்கட்ராமன் அவர்களுக்குச் சிறிது மனவேதனையைக் கூட அளித்து விடக்கூடாதல்லவா? அதனால் எம்.ஜி.ஆர்., மிக எச்சரிக்கையாகத் தனது கட்சியைத் தேசியக் கட்சியென முரசு அறைந்துவிட்டார்!

அவர்களுக்குள் எப்படியோ போகட்டும்! நண்பர் வெங்கட்ராமன் போன்றவர்கள் நம்மைச் சீண்டுவது என ஆரம்பித்தால் - தூங்கும் புலியைக் கூட அல்ல! விழித்துக் கொண்டிருக்கும் புலியிடம் விஷமம் செய்பவனின் கதையாகத்தான் ஆகிவிடும் என்பதை மட்டும் இப்போதே சொல்லி வைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(23-02-1983)

1090. களைப்பும் சோர்வும் அகன்றிடக் காண்கிறேன் உன்னை!

உடன்பிறப்பே,

மணவிழா என்றால் அழைப்பு இதழ் அனுப்பப் படவில்லையே என்று குறைபட்டுக் கொள்ளலாம். மாலை நேரத்து தேநீர் விருந்து என்றால் வா என்று ஒரு வார்த்தை கூப்பிடாமல் எப்படிப் போய் கலந்து கொள்வது என்று வாதிடலாம். அதில் நியாயம்கூட உண்டு!

கழகம் களத்தில் நிற்கும்போது, அது எந்தக் களமாயினும் - அறப்போர்க் களமாயினும் அல்லது தேர்தல் களமாயினும் வலியச்சென்று நமக்குள்ள பணிகள் எவையெவையென வகுத்துக் கொண்டு பாடுபடுவதே வாடிக்கை!

ஏதோ ஒருநாள் சென்றோம், தலைவர்களிடம் முகத்தைக் காட்டினோம் - அத்துடன் முடிந்தது ஜோலி என்று மனநிறைவு கொள்பவர்கள் யாராயிருப்பினும், என் இதயத்தில் அவர்களையுமறியாமல் ஊசியால் குத்துகிறார்கள் என்பதுதான் உண்மை!

திருச்செந்தூர் தேர்தல், கழகம் ஆற்றிடவேண்டிய ஜனநாயகக் கடமை! அந்தக் கடமையை யாரோ ஒரு சிலர் மட்டுமே நிறைவேற்றிட வேண்டுமென்று நியதியில்லை! அவரவர்களும் தேர்தல் களங்களில் நின்றபோது, அல்லும் பகலும் அயராது பாடுபடவும், ஊண் உறக்கமின்றி ஓடியாடி உழைக்கவும் எத்தனை உடன்பிறப்புகள், எங்கெங்கிருந்தெல்லாம் வந்து குவிந்தனர் என்பதை மறந்துவிட முடியாது! மறந்து விடவும் கூடாது!

செந்தூர் தொகுதியில் தொடக்கம் முதல் தங்கி யார் யார் தொண்டாற்றி வருகிறார்கள் - யார் யார் எந்தத் தேதி முதல் தொண்டினை ஏற்றுள்ளார்கள் என்ற நீண்ட பட்டியல் ஒன்றை அனுப்பி வைக்குமாறு நண்பர் கே.பி.கே. அவர்களைக்

கேட்டிருந்தேன்.அவரும் நேற்று அனுப்பியுள்ளார். பட்டியலில் காணப்படும் உடன்பிறப்புகளின் பெயர்கள் பூரிப்பு நல்கிடும் வண்ணம் அமைந்துள்ளன. ஆனால், அந்தப் பட்டியலில் நான், துருவித்துருவி தேடிய சில பெயர்களைக் காணவில்லை. இந்தக் கடிதம் கைக்குக் கிடைக்கும்போது ஒருவேளை அவர்களும் திருச்செந்தூர் தொகுதியில் தேர்தல் பணியினைத் தொடங்கியிருக்கக்கூடும்.

அங்கே ஆளுங்கட்சியினரின் ஆரவாரம் - ஆர்ப்பாட்டம் - அதிகார ஜபர்தஸ்துகள் அதிகமாகத்தான் இருக்கும். லாரி லாரியாகக் கொடிகளையும், தோரணங்களையும், அவர்கள் கட்சிச் சின்னம் வரைந்த பதாகைகளையும் கொண்டு வந்து கொட்டுகிறார்களாம். எறும்பு வரிசையெனக் கார்கள் தொகுதியைச் சுற்றிக் கொண்டேயிருக்கின்றனவாம். ஆயிரம், பத்தாயிரம் கொடுத்து ஆள் பிடிக்கும் படலங்கள் வேறு! இலட்சம், கோடியென்று பல முனைகளிலும் லஞ்சமாகப் பொழிகின்ற பணம், விளையாடத்தான் செய்யும். அதுகண்டு உடன்பிறப்பே, உனக்கு ஒரு திகைப்பு ஏற்படக்கூடும். ஆனால், அந்தத் திகைப்புக்கு ஒருக்கணமும் நீ இடந்தருதல் ஆகாது.

பாரதப் போரில், பல்வகையான போர்க்கருவிகளுடன் பகைவர்கள் சூழ்ந்து நின்று போரிட்டபோது, கையிலே ஒரு ஒடிந்து போன வாள்கூட இல்லாமல், எதிரிகள் சுழற்றிய ஈட்டிகளுக்கும், வாட்களுக்கும், தொடுத்த கணைகளுக்கும், விடுத்த சரங்களுக்கும் நிராயுதபாணியாகவே நின்று, அபிமன்யு, இறுதிவரையில் ஈடு கொடுத்தான் என்ற வீர நிகழ்ச்சியைப் படித்திருக்கிறேன். புராணக் கதையே ஆயினும், அந்த வீர இளைஞனின் ஆற்றல் என்னைக் கவர்ந்த ஒன்று. அந்தத் திட மனமும், உறுதியும், திறனும், தியாக இயல்பும் கொண்டதாகக் கழகமும் - இந்தக் கழகத்தின் செயல்மாமணிகளும் என்றென்றும், எந்த நிலையிலும் திகழ வேண்டும் என்பதே எனது ஆசை!

இல்லாவிட்டால், நெருக்கடி காலத்து நெருப்பு வளையத்துக்குள்ளிருந்து கழகத்தைக் காப்பாற்றியிருக்க முடியுமா? நீயுமா புரூடஸ்? என்று நெடுமூச்சு பறக்கக் கேட்டானே ஜூலியஸ் சீசர் - அதுபோன்ற கட்டங்களையெல்லாம் கழகம் கடந்து வந்திருக்க முடியுமா?

தமிழ்ச் சமுதாயத்திற்கு அரணாக விளங்கிடும் கழகம், திருச்செந்தூர் மண்ணில் நீதிக்காக ஜனநாயகப் போர்க்களத்தில் குதித்திருக்கிறது! அதில் கழகக் கண்மணியான உன் பங்கு என்ன? களத்தில் நிற்கிறாயா? அல்லது தொலைவிலிருந்து களக் காட்சியை வேடிக்கை பார்க்கிறாயா? அல்லது செய்தி வரும்போது படித்துத் தெரிந்து கொள்ளலாம் என்று இருக்கிறாயா?

அங்கே மாநில மாநாடு அல்ல! அலை அலையாக லட்சக்கணக்கில் வந்து திரண்டிடுக - என்று நான் அழைப்பதற்கு! தேர்தல் பணியாற்றக்கூடிய கழக முன்னோடிகள் - வசதிவாய்ப்பு இருப்போர் - அருகாமையில் உள்ள மாவட்டங்களில் இருப்போர் - கழக முக்கிய பொறுப்புகளில் இருப்போர் - நம்மால் கழகத்திற்கு என்ன ஆதாயம் என்று கணக்கிடுவோர் - செந்தூருக்கு வந்தனர், செயல்புரிந்தனர் என்பது என் சிந்தைக்கினிய செய்தியாக இருக்கும் என்பதால்தான் மனம் விட்டு இதனை எழுதுகிறேன்.

எத்தனையோ பணிகள் இருக்கின்றன! அந்தத் தொகுதி வாக்காளர்கள் பலர், தொலைவிலுள்ள பல ஊர்களில் இருக்கின்றனர். அவர்களையெல்லாம் கண்டுபிடித்து தேர்தல் நாளன்று வாக்களிக்கச் செல்லுமாறு கேட்டுக்கொள்வதுகூட தேர்தல் பணிகளில் ஒன்றுதான்!

எம் பணி குறித்துத் தினம் எழுதுகிறாயே! உன் சேதி என்ன? டாக்டர்கள் தடுக்கிறார்களாமே! வீட்டிலே கூட போகக்கூடா தென்று எதிர்க்கிறார்களாமே! தொகுதிக்கு வருகிறாயா? இல்லையா?

இப்படி நீ கேட்காவிட்டாலும், நினைத்துக்கொள்வாய் என எனக்குத் தெரியும்!

இருப்பது ஒரு உயிர்! அது போகப் போவதும் ஒருமுறை! அது கடமையாற்றிடும் போது போவதுதானே சிறப்புடையது!

இப்படி நமது ஆருயிர் அண்ணன் அடிக்கடி கூறியிருக்கிறாரே! அதை மறந்து விட்டால் நான் அவருக்குத் தம்பியாவேனா? அல்லது உனக்குத்தான் சகோதரன் ஆவேனா?

தந்தை இறந்தபோதும், தாயார் சாவுடன் போராடிக் கொண்டிருந்தபோதும் பொதுக்கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தவன் நான்!

மனைவி பத்மா, மரணப் படுக்கையில் இறுதி மூச்சு விட்டுக் கொண்டிருந்தபோது, புதுக்கோட்டையில் ஒரு கூட்ட நிகழ்ச்சிக்குச் சென்று விட்டுத் திரும்பி திருவாரூர் வந்தபோது, உயிரனையாளின் உயிரற்ற உடலைக் கண்டவன் நான்!

எனவே, இப்போதும் கடமை அழைக்கிறது! நான் முன்பே எழுதியது போல, உழைக்கும் உடன்பிறப்பாம் உனைக் காணவும், திருச்செந்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களைக் கண்டு ஆதரவு கோரவும் இருபத்து ஆறாம் தேதி வந்து சேருகிறேன்.

இருபத்துஆறு - இருபத்துஏழு - இரண்டு நாள் மாலை நேரங்கள்! இரண்டொரு பொதுக்கூட்டங்கள் மட்டும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

களைப்பும், சோர்வும் அதிகம்தான்! உன்னைப் பார்த்தால் அவையும் நீங்கிவிடுமே என்ற சுயநலத்தால்தான் வருகிறேன் என்று வைத்துக்கொள்ளேன்!

அன்புள்ள,

மு. க.

(24-02-1983)

1091. பலகளம் அமைய முதற்களம் தஞ்சையில்!

உடன்பிறப்பே,

நாடு காடாகிறது, நலிவு மேலிடுகிறது, துன்பம் துளைத்திடுகிறது, துயரம் பெருகிய வண்ணம் இருக்கிறது, குளிப்பதற்கோ - குடிப்பதற்கோ தண்ணீரின்றி மக்கள் தவிக்கின்றனர். பச்சை பட்டாடை பூண்டு குலுக்கிமினுக்கிக் குதியாட்டம்போட்டுக் காண்போர் கண்களுக்குக் குளிர்ச்சியூட்டிடும் கழனிகள் அனைத்தும் காய்ந்து வறண்டு பாலையின் தோற்றத்தைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இப்படியோர் நிலைமை வருமென்று இங்குள்ள கட்சிகள் அனைத்தும் எடுத்துக் காட்டியும் இடித்துச் சொல்லியும் கூட, ஆணவத்தை அணியெனக் கொண்டு, அலட்சியத்தை மகுடமாய்ப் புனைந்து, அக்கறையற்ற தன்மையை ஆட்சிக்கோலாய்ப் பிடித்திருக்கும் மாநில அரசு, எந்தக்குரலையும் காதிலே போட்டுக் கொள்ளாமல் கூத்திலும், கும்மாளத்திலும் நேரத்தைச் செலவிட்டுவிட்டு இன்று இயற்கையின் மீதும், இந்திய அரசின் மீதும் பழியைப் போடுகிற காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

அரிசி இல்லை! மின்சாரம் இல்லை! அந்தோ! குடிக்கத் தண்ணீருமில்லை! அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பண்டங்களின் விலையோ, அம்மவோ - காது கொடுத்துக் கேட்கச் சகிக்கவில்லை! காசு கொடுத்து வாங்கத் திராணியில்லை! வேலைக்கு உணவு என்று ஒரு திட்டம்! மத்திய அரசின் சார்புடைய திட்டம்! அந்த உணவையெல்லாம் இங்குள்ள அரசு சத்துணவுத் திட்டம் என்ற பெயரால் வேறு தலைப்புக்கு மாற்றிக்கொண்டு - அதனால் இப்போது வேலையுமில்லை! உணவுமில்லை!

சாலையோரத்திலே வேலையற்றதுகள்! வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்! அரசே! அதுதான் காலக்குறி! என்றார், சொர்க்கவாசல் படத்தில் அறிஞர் அண்ணா!

இன்று நரகவாசலில் தள்ளப்பட்ட நிலையில் மக்கள் துடிக்கிறார்கள்!

மலையைத் தூக்கப் போகிறேன் என்று மார்தட்டிய மாநில அரசோ, தூக்கி என் தலையில் வையுங்கள், தூக்குகிறேன்! என்று தொடை தட்டுகிறது!

புதிய பாரதம் தோன்றும்! அது, பூலோகச்சொர்க்கமாக இருக்கும் என்ற மத்திய அரசோ; பழைய கள் - புதிய மொந்தை என்ற வித்தையைக் காட்டி வித்தகம் பேசிக் கொண்டிருக்கிறது!

எப்படியோ இன்பத் தமிழகத்து மக்கள், இன்று துன்பக் கேணியின் சகதியில் சிக்கித் துடித்துச் செத்துக் கொண்டிருக்கிறார்கள்! அந்தச் சாகும் ஜீவன்களுக்கு முன்னால் சரசவல்லிகளின் ஜொலிப்பு வெளிச்சம் போட்டுக்காட்டப்படுகிறது, ஜென்ம சாபல்யம் அடையட்டுமென்று! வேறு ஏதாவது வெந்து மடியும் மக்களைக் காத்திட உருப்படியான திட்டங்கள் உண்டா? உருட்டல் - மிரட்டல் - முன்னர் உரைத்ததைப் பின்னர் புரட்டல்!

இந்தப் பித்தலாட்டப் பரிபாலனத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டாமா?

தமிழகம் தழுவிய அளவில் அதற்கு மக்கள் அணி திரள வேண்டாமா?

இதோ! அதன் முதற்கட்டமாகத்தான் தஞ்சைத் தரணியில் இன்று கழகம், அறப்போர்க்களம் செல்கிறது!

கழக நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் தலைமையேற்றிடவும், கழக நிர்வாகிகள், முன்னோடிகள் முன்னிலை வகித்திடவும், ஏராளமான கழக உடன்பிறப்புகள் இன்று (25-2-83) திருவாரூர், நாகை, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, நீடாமங்கலம், குடவாசல், நன்னிலம், மயிலாடுதுறை, சீர்காழி, குடந்தை, திருவிடைமருதூர், பாபநாசம், தஞ்சை நகர், திருவையாறு, பேராவூரணி, வலங்கைமான், பொறையாறு முதலிய இடங்களில் மறியலில் ஈடுபடுகின்றனர். மறியல் என்பதால் கைது செய்யப்படக்கூடும். சிறைக்கோட்டம் செல்ல நேரிடும். ஓராண்டுக்கால மிசாச் சிறைவாசத்தையே மெல்லிய பூங்காற்றாகக் கருதி மகிழ்ந்த

உரமுடை நெஞ்சுறுதியாளர்கள் அவர்கள்! சிறையென்றதும் சிந்தை கலங்கிடார்!

எனினும், அந்தக் கண்ணின் கருமணிகளை வாழ்த்தி வழியனுப்புதல் என் கடமையன்றோ! அதனை எதிர்பார்ப்பதும் அவர்களின் உரிமையன்றோ! வாழ்த்துகிறேன்! தமிழகத்தை வாழ வைக்க முதற்களம் ஒன்றினை மாவட்ட அளவில் கண்டுள்ள அறப்போர் வீரர்களை இதயமார வாழ்த்துகிறேன்!

அடுத்தடுத்துப் பல களங்கள் அமைந்திட வழிகாட்டும் தஞ்சைப் பாசறையைப் போற்றுகிறேன்!

வேறு வழியில்லை! தமிழகம் வீழ்ச்சியுறுவதைத் தடுக்க, இதைத் தவிர வேறு வழியில்லை! அதனால் கச்சை கட்டிக் களம் புகு வீரரை உச்சிமுகர்ந்து வாழ்த்துகிறேன்!

மாயை விலகிட - இருள் அகன்றிட - மக்கள் நல்வாழ்வு பெற்றிட நம்மை நாமே அர்ப்பணிப்போம்!

அன்புள்ள,

மு. க.

(25-02-1983)

1092. காமராஜரின் தொண்டர்கள் எச்சரிக்கிறார்கள்!

உடன்பிறப்பே,

"சொந்த வீடு கூட வாங்காமல் வாடகை வீட்டில் இருந்தவரின் சிலையைத் திறக்கிறேன்."

திருச்செந்தூர் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், தியாகச் சுடர் காமராஜர் அவர்களின் சிலையைத் திறந்து வைத்தபோது, மேற்கண்டவாறு புகழாரம் சூட்டியுள்ளார்.

அத்துடன் நில்லாது, அண்ணா தலைமையில் கழகம் இயங்கிய போது, எம்.ஜி.ஆர்., எனது தலைவர் காமராஜர்! அண்ணா வழிகாட்டி என்று பேசிய நிகழ்ச்சியையும் நினைவுபடுத்தியதோடு, முடிக்கவில்லை! வாக்குகளைப் பெறுவதற்காகத் தனது வாக்குத் திறமையையும் காட்டிப் பொய் பேசியிருக்கிறார். அவர் காமராஜரைத் தனது தலைவர் என்று தி.மு.க.வில் இருந்து கொண்டு சொன்னபோது, அதை எதிர்த்து அறிக்கை விட்டவர்கள் மதுரை நண்பர் எஸ். முத்து அவர்களும், நண்பர் எஸ்.எஸ். ஆர். அவர்களும்தான்! அந்த அறிக்கையில் எம்.ஜி.ஆருக்கு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்கள். இப்போது அவர்கள் இருவரும் எம்.ஜி.ஆர். கட்சியில்தான் இருக்கிறார்கள். தேவையில்லாமல் எம்.ஜி.ஆர். அந்த விவகாரத்தில் என் பெயரை இழுத்துப் பித்தலாட்டமாகப் பேசியிருக்கிறார். மதுரை முத்து அவர்கள், காங்கிரஸ் கட்சியில் சேரப் போகிறார் என்றும், எங்கிருந்தாலும் அவருக்கு வியாபாரம் நடக்குமென்றும் 1972-ல் சென்னை லாயிட்ஸ் காலனி கூட்டத்தில் எம்.ஜி.ஆர். பேசியதையும் காரணமாகக் காட்டித்தான் அப்போது கழகப் பொதுச் செயலாளராக இருந்த நாவலர், செயற்குழு, பொதுக்குழுக்களின் முடிவுப்படி எம்.ஜி.ஆர். மீது கழகச் சட்டதிட்டப்படி, நடவடிக்கை எடுத்து அறிவித்தார்.

மக்கள் எல்லாவற்றையும் மறந்திருப்பார்கள் என்ற துணிவில் எதையும் பேசுவது எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

அதிலும் குறிப்பாக, மறைந்துவிட்டவர்களுக்கும் அவருக்கும் அபாரமான தொடர்புகள் இருந்ததாகக் கதைகளை அளப்பதில் எம்.ஜி.ஆருக்கு நிகர் எம்.ஜி.ஆரேதான்! எதை வேண்டுமானாலும் இறந்தவர்களோடு இணைத்துப் பேசலாம் அல்லவா? இறந்தோர், எழுந்து வந்து மறுக்கவா போகிறார்கள்?

ஒரு சினிமாப் பத்திரிகை நண்பரைப் பிடித்து, அவர் வாயிலாகக் காமராஜர் விழாவை ஏற்பாடு செய்து, அதில் காமராஜர் என் தலைவர் என்று எம்.ஜி.ஆர். பேசியதற்குக் காரணமே, அப்போது அவருக்கு இருந்த வருமான வரித் தொல்லையிலிருந்து விடுபடக் காமராஜர் ஏதாவது உதவி செய்யமாட்டாரா என்ற சுயநலம்தான் என்பதைக் காமராஜர் அவர்களே பல நண்பர்களிடம் சொல்லிச் சிரித்திருக்கிறார். காமராஜர் வெளியிட்ட அந்த ரகசியத்தைக் கேட்ட நண்பர்கள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்கள்.

அப்படி அன்றைக்கு அவரைத் தலைவர் என்று மனமாரச் சொல்லியிருப்பாரேயானால் மதிய உணவுத் திட்டத்தை மாநிலம் தழுவிய அளவில் கொண்டு வந்தது முதலமைச்சராக இருந்த காமராஜர்தான் என்பதைக் கடந்த இரண்டு மூன்று மாதங்களாகத் தொடர்ந்து பல மேடைகளில் அதே எம்.ஜி.ஆர். மறுத்தும் கேலி செய்தும் பேசி வருவது ஏன்?

இன்று ஏதோ திருச்செந்தூரில் வாக்காளர்களில் ஒரு பகுதியினரை ஏமாற்ற இந்தத் திடீர் நாடகம்!

சொந்த வீடு கூட வாங்காமல் வாடகை வீட்டில் இருந்தவரின் சிலையைத் திறப்பதாகக் கூறியுள்ளார்! யார்? எம்.ஜி.ஆர்! எந்த எம்.ஜி.ஆர்?

1977-இல் முதல்வராக எம்.ஜி.ஆர். பதவியேற்ற போது சென்னை ஆற்காடு முதலி தெருவில் உள்ள சொந்த வீட்டில் குடியிருக்கப் போவதாக அறிவித்தார். அமைச்சர்கள் சொந்த வீட்டிலேயே வசித்தால் அரசாங்க சார்பில் வீட்டு வாடகைப்படியாக ரூபாய் இருநூறு தரப்படும்! அண்ணாவும், நானும் அமைச்சர்களாக இருந்தபோது, அரசாங்க வீட்டுக்குக் குடிபோகாமல் சொந்த வீட்டில்

வசித்தோம். அதற்கு வீட்டு வாடகைப்படியாக மாதம் இருநூறு ரூபாய் பெற்றோம். எம்.ஜி.ஆரும் 1977-இல் முதலமைச்சரானதும் அப்படித்தான் சொல்லி இருநூறு ரூபாய் வீதம் இரண்டு வருடங்கள் வாடகைபெற்று வந்தார். திடீரென 1979-இல் அந்த வீட்டுக்கு மாதம் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் என வாடகையை உயர்த்தி, ரெட்ராஸ்பெக்ட் எபக்ட் அதாவது, முன்தேதியிட்டு பழைய பாக்கியும் சேர்த்து 1977 முதலே ஆயிரத்து எண்ணூறு ரூபாய் வீதம் வாடகையென ஆணை பிறப்பித்துக் கொண்டார். இது நியாயமா? எனக் கேட்டதற்கு, அது என் சொந்த வீடு இல்லை, எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் வீடு என்று பதில் கூறி மழுப்பினார். பிறகு அந்த வீட்டை அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மையார் அவர்களே சுமார் மூன்று லட்ச ரூபாய்க்கு வாங்கிக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது. இப்போதும் அந்த வீடு எம்.ஜி.ஆருக்கு சொந்த வீடு இல்லையாம். அதனால், அரசாங்க வாடகைப்படி இருநூறு ரூபாய்க்குப் பதிலாக மாதம் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் பெற்றுக் கொள்ளப்படுகிறது!

மூக்கை அறுத்துக் கொண்டவன், எல்லோருடைய மூக்கையும் அறுக்க முயன்ற கதைபோல - இனிமேல் சொந்த வீட்டில் இருக்கும் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோர் மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரையில் அரசாங்க வாடகை வாங்கிக் கொள்ளலாம் என சமீபத்தில் ஒரு ஆணை பிறப்பித்தார்!

உடன்பிறப்பே, நான், அவர் விரித்த வலையில் விழவில்லை! எப்போதுமே அவர் விரிக்கும் வலையில் விழமாட்டேன்! ஆயிரத்துஐநூறு ரூபாய் என் வீட்டுக்கு அரசாங்க வாடகைப்படி தேவையில்லை! எதிர்க்கட்சித் தலைவரின் சொந்த வீட்டுக்கு முன்பு இருந்தது போல நூறு ரூபாய் வாடகைப்படியே போதுமென வாங்கிக் கொண்டிருக்கிறேன்.

உண்மைகள் இப்படியிருக்க, இந்த வீட்டு வாடகை ஊழல் மன்னர், எந்தெந்த இல்லாத ஊர்களைப் பற்றியெல்லாமோ பேசுகிறார் திருச்செந்தூர் தொகுதியில்!

யார் யார் மீது பயங்கர ஊழல்கள் குறித்துக் குற்றம் சுமத்திப் புகார்களைக் கொடுத்தாரோ - அவர்கள் எல்லாம் இன்று அவரது கட்சியில் முக்கிய நிர்வாகிகள், அமைச்சர்கள்!

அதை மறந்து விடுகிறார்! முற்றும் துறந்த முனிவரைப் போல மக்களை ஏமாற்ற இன்னமும் முனைகிறார்!

பெரியார், அண்ணா, பெயர்களைச் சொல்லி ஏமாற்றியது போதும்! காமராஜர் பெயரையும் சொல்லி ஏமாற்ற வேண்டாம் என்று காமராஜரின் உண்மைத் தொண்டர்கள் எம்.ஜி.ஆரை எச்சரிக்கிறார்கள்!

அன்புள்ள,

மு. க.

(26-02-1983)

1093. திருச்செந்தூர் ஒரு திருப்புமுனைதான்!

உடன்பிறப்பே,

வெற்றிச் செய்தி கிடைத்திருந்தால் எத்துணை மகிழ்ச்சி அடைந்திருப்பாய் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்! வெண்ணெய் திரளும்போது தாழி உடைக்கப்பட்டு விட்டது கண்டு எப்படிக் குமுறிக் கொண்டிருப்பாய் என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்! வாக்குகள் எண்ணப்படுகிற மண்டபத்திற்குள் போலீசார் புகுந்து தடியடி நடத்திய நிகழ்ச்சி, தமிழ்நாட்டில் இதுவரையில் எந்தத் தேர்தலிலும் நடைபெற்ற தில்லை.

> "It was reported that there was some confusion inside the counting hall at the Tiruchendur Taluk Office. Police had to use mild force to restore order."

என்று "இந்து" ஏடு செய்தி வெளியிட்டிருக்கிறது.

> "There was also commotion inside the counting centre and Police had to use force to restore order"

என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்த இரண்டு செய்திகளுமே வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற இடத்திற்குள்ளேயே போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததை மெய்ப்பிக்கின்றன. போலீசாரைக் காவலுக்கு வைத்துக் கொண்டு தேர்தல் பிரச்சாரம் முடிந்த பிறகும் அமைச்சர்கள், பணமூட்டைகளுடன் பல இடங்களுக்குச் சென்று வாக்குகளை விலைக்கு வாங்கிய தேர்தல் விதிமுறைக்கான விரோதச் செயல்கள் போதாதென்று - வாக்குப் பெட்டிகளிலும், வாக்குச் சீட்டுக் கட்டுகளிலும் தங்கள் கைவரிசையைக் காட்டிய போது ஏற்பட்ட

எதிர்ப்பை அடக்கிடப் போலீஸ் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நடைபெற்ற பித்தலாட்டத்தை வெளிப்படுத்த முயன்ற திருமதி என்.எல். சக்தியும், கழகத்தினர் சிலரும் போலீசாரின் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

பட்டப்பகலில் திருச்செந்தூர் ஆலயத்தில் ஆளுங்கட்சி யினரால் நடத்தப்பட்ட கொலையை மறைத்திட முயற்சித்தது போலவே, பகிரங்கமாக வாக்குச் சீட்டுக்களில் கைவரிசை காட்டியும், வாக்குப் பெட்டிகளில் முறைகேடுகள் புரிந்தும் தேர்தலையே ஒரு மோசடியான நிலையில் நடத்தி, அப்பட்டமான ஜனநாயகப் படுகொலை செய்துள்ள அக்கிரமத்தையும் மறைத்திட எல்லாவித உபாயங்களையும் ஆளுங்கட்சியினர் கடைப்பிடிப்பார்கள். நடந்தது கொலைதான் என்று குறிப்பிட்டு, கொலைகாரர்கள் இன்னார்தான் என்று புரியும்படிச் சுட்டிக்காட்டியும், நீதிபதி பால் கமிஷன் அறிவித்த முடிவையே காலில் போட்டு மிதித்துவிட்டு நீதியைப் பற்றிப் பேசுகிற கண்ணியவான் நடத்துகிற ஆட்சியல்லவா இது!

தேர்தலிலும், தேர்தலையொட்டி வாக்குச் சாவடியிலும் நடைபெற்ற ஊழல்களையும் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் நாடாளுமன்ற உறுப்பினர்களான வை.கோபால்சாமியும், இரா.மோகனும் விளக்கிக் கூறி முறையீடு செய்து மனுவும் கொடுத்துள்ளனர். பாராளுமன்ற மக்களவை தி.மு.க. கட்சித் தலைவர் சி.டி. தண்டபாணியும் மற்றும் சில உறுப்பினர்களும் இன்று மீண்டும் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் மேலும் பல விபரங்களையும், திருச்செந்தூர் இடைத் தேர்தலில் ஆளுங்கட்சி, தனது வீழ்ச்சியைத் தவிர்த்துக் கொள்ள மேற்கொண்ட விபரீதச் செய்கைகளையும் எடுத்துரைக்கச் சென்றுள்ளனர்.

நியாயமான நமது முறையீடுகள் குறித்த தொடர் நடவடிக்கைகளைத் தலைமைத் தேர்தல் அலுவலகம், உடனடியாக எடுத்திடும் என்றே நம்புகிறேன்.

இதற்கிடையே ஆகா! ஆகா! நீதி வென்று விட்டது! அநீதிதான் தோற்று விட்டது என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிக்கை மூலம் கருத்தறிவித்துவிட்டார். 1965-ஆம் ஆண்டு தமிழகமெங்கும் மொழிப் புரட்சி கொழுந்துவிட்டெரிந்து நூற்றுக்கணக்கானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு, மாணவன் சிவகங்கை ராஜேந்திரன் துப்பாக்கிக்கு இரையாகி, எட்டு பேர் தீக்குளித்துச் செத்து, அதைத்

தொடர்ந்து சில நாட்களுக்குள் நடைபெற்ற தர்மபுரி இடைத் தேர்தலில் நமது கழகம் தோற்றது! காங்கிரஸ் கட்சிதான் வெற்றி பெற்றது! வாக்கு வித்தியாசம்கூட ஆயிரம் இரண்டாயிரம் அல்ல! பதினோராயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் காங்கிரஸ் வாகை சூடியது! ஆனால் உடன்பிறப்பே, அடுத்து இரண்டே ஆண்டுகளில் 1967-இல் காங்கிரஸ் கட்சியின் கோட்டை சரிந்து விழுந்தது! அண்ணா தலைமையில் கழக அரசு அமைந்தது! இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றுதான் தர்மபுரித் தேர்தல் முடிவு குறித்துக் காங்கிரஸ் தலைவர்கள் பேசினார்கள்! தர்மபுரியில் தர்மம் வென்றது என்றுகூட காங்கிரஸ் அமைச்சர்கள் முழங்கினார்கள். இப்போதும் நண்பர் எம்.ஜி.ஆர்., அதே பாணியில் தான் நீதி வென்றது என்று அறிக்கை விடுத்திருக்கிறார்!

இப்போது இங்குள்ள தேர்தல் அதிகாரிகளின் கூற்றுப்படி - அல்லது அவர்கள் அப்படி முடிவெடுக்கத் தள்ளப்பட்டபடி - அறுபது லட்ச ரூபாய்க்கு மேல் பணத்தை மழையெனப் பொழிந்தும், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்தும், சுமார் ஆயிரத்து எழுநூறு வாக்குகள் வித்தியாசத்தில் எம்.ஜி.ஆரின் கட்சி வெற்றி பெற்று விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையாளர்களாம் சில அ.தி.மு.க.வினரால் தாக்கப்பட்டுக் காவல் நிலையம் சென்று புகார் கூறுகிறவர்களையே கைது செய்து வழக்குப் போடும் அராஜக ஆட்சி நடந்து கொண்டிருப்பதை அறிவார்ந்த மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். அதே பாணியை, வாக்குகள் எண்ணப்படும் இடத்திலும் கடைப்பிடித்து ஆளுங்கட்சியினர், அதிகாரிகளின் துணையோடு போலீசாரைத் தூண்டிவிட்டு நடத்திய அமளிக்கும் - அந்த அமளியின் நடுவே வாக்குச்சீட்டுகளை மாற்றிய மோசடிக்கும் ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துப் பொய்க் குற்றம் சாட்டிடத் தாமதமான ஒரு சிந்தனையைச் செய்து, திருமதி என்.எல். சக்தி மீதும், கருப்பசாமி என்பவர் மீதும் வாக்குச் சீட்டுகளைக் கடத்த முயன்றதாகக் கூறி சில சட்டப் பிரிவுகளின்படி ஒரு வழக்கையும் ஜோடித்திருக்கிறார்கள். அந்த வழக்கு ஜோடிப்பதற்காக தேர்தல் அதிகாரியால் மிக காலந் தாழ்ந்து போலீசாருக்கு எழுதப்பட்டதாகக் கூறப்படும் புகாரில், இந்திரா காங்கிரஸ் கட்சியைத் சேர்ந்தவர்களும் இணைக்கப்பட்டிருந்தார்கள் என்றும் ஆதாரபூர்வமான தகவல்கள்

வந்துள்ளன. மறுபடியும், போலீசுக்குத் தரப்பட்ட புகார் மனுவைத் திருத்திக் கொண்டார்களோ என்னவோ! கழகத்தினர் மீது மட்டும் வழக்கு என்று ஆளுங்கட்சி ஆதரவு ஏடு ஒன்றின் சென்னைப் பதிப்பில் இன்று செய்தி வந்துள்ளது. இந்தக் கற்பனை வழக்கிற்கு துணை நின்று தொண்டாற்றிய போலீஸ் அதிகாரி யார் தெரியுமா? மதுரையில் ஊர்வலம் சென்ற பிரபல சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர் தார்குண்டே அவர்களைத் தாக்கிப் புகழ் பெற்ற போலீஸ் உதவி சூப்பரின்டெண்ட் முகமது அலி என்பவர்தான்! என்ன நடந்திருக்கும் என்பதை இனியும் யூகித்துக் கொள்ள நடுநிலையாளர்களுக்குச் சிரமம் இருக்க முடியுமா?

"Perhaps never before in the recent election memory, atleast in Tamil Nadu such a commotion prevailed in the counting centre. Though officially no word was available, reliable sources said there were exchanges of hot words, leading to fisticuffs for counting, all allegedly over certain "irregularities" brought to the notice"

வாக்கு எண்ணிக்கையின்போது சில முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து, வாக்கு வாதங்களும் - கைகலப்பும் ஏற்பட்டதாக தெரிகிறது

என்று இந்து ஏட்டின் செய்தியாளர் குறிப்பிடுகிறார். சமீபத்திய தேர்தல்களில் - குறிப்பாக, தமிழகத்தில் வாக்கு எண்ணுமிடத்தில் இப்படிப்பட்ட குழப்பம் இதற்கு முன்னால் எப்போதுமே ஏற்பட்டதில்லை என்றும் இந்துவின் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

"Right from the morning, Pressmen were allowed nowhere near the counting centre. When the counting took place around 10 P.M. all the people were chased away by the steel helmeted Police men. Pressmen who tried to gain entry to get full details of the results were told by police not to enter. However, after some time they sat on the ground in one corner, when suddenly there was an unusually loud noise from the centre. Pressmen fled as a Police Officer came weilding his lathi.

As the storm in the counting centre was at its peak, police patrolling vehicles were seen going round and round the narrow streets of the temple town asking people to get indoors"

காலை முதலே வாக்கு எண்ணுமிடத்தின் பக்கமே பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. வாக்கு எண்ணப்படும்போது 10 மணி அளவில் இரும்புத் தொப்பி போலீசார் மக்களை எல்லாம் விரட்டி அடித்தனர். தேர்தல் முடிவு குறித்து தகவல் சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களை போலீசார் செல்லக்கூடாது என்று தடுத்தனர். அதனைத் தொடர்ந்து ஒரு ஓரமாக பத்திரிகையாளர்கள் அமர்ந்திருந்தனர். அப்போது ஒரு போலீஸ் அதிகாரி உரத்த குரலில் கத்திக் கொண்டே லத்தியைச் சுழற்றியவாறு பத்திரிகையாளரை விரட்டியடித்தார்.

வாக்கு எண்ணுமிடத்தில் குழப்ப நிலை உச்ச கட்டத்தில் இருந்தபோது, திருச்செந்தூர் நகரெங்கும் போலீஸ் வேன்களில் சென்று மக்களை வீட்டுக்குள் செல்லுமாறு விரட்டினர்.

- இந்து ஏட்டின் செய்தியாளர் இப்படி போலீஸ் அராஜகத்தையும், வாக்குச் சாவடியில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக உருவான குழப்பநிலைகளையும் விவரிக்கிறார்.

வாக்கு எண்ணிக்கையின்போது ஏற்பட்ட இப்படிப்பட்ட குழப்பம், இதற்கு முன் தமிழக வரலாற்றிலேயே இல்லை என்று இந்து செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்!

இந்து செய்தியாளர் குறிப்பிடுவதிலிருந்து, வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது ஏற்பட்ட குழப்பத்திற்கான உண்மைத் தகவல்களைப் பத்திரிகையாளர்களும் - பொதுமக்களும் தெரிந்துகொள்ள முடியாத அளவு தமிழ்நாட்டு அரசின் போலீஸ் எந்த அளவு செயல்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரியவில்லையா?

இந்து மட்டுமல்ல, மற்ற ஏடுகள் என்ன கூறுகின்றன?

"After a tension - packed drama during counting, the results were officially declared only early this morning nearly Twenty Two hours after counting began at 7 a.m. yesterday"

என்று இன்றைய எக்ஸ்பிரஸ் ஏடு எழுதுகிறது. இது பி.டி.ஐ. செய்தி நிறுவனத்தின் தகவலாகத் தரப்படுகிறது. ஒரு சட்டமன்றத் தொகுதி வாக்குகளை எண்ணி அறிவிக்க இருபத்திரண்டு மணி நேரமாயிற்று என வியப்பு தெரிவிக்கும் பி.டி.ஐ. செய்தி நிறுவனம் ஆவலும், எதிர்பார்ப்பு உணர்ச்சியும் பொங்கிய நிலைமைக்குப்

பிறகு தேர்தல் முடிவு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறது.

"Soon there was an unusually loud noice from the centre. Pressmen took to their heels as a Police Officer came wielding his lathi"

எண்ணிக்கை நடைபெற்ற மையத்துக்குள் பெரும் சப்தம் கிளம்பியபோது, பத்திரிகை நிருபர்கள் அதைக் கவனிக்க முனைந்தபோது, ஒரு போலீஸ் அதிகாரி தடியைச் சுழற்றி விரட்டினார்.

என்றும் எக்ஸ்பிரஸ் ஆங்கில இதழ் குறிப்பிட்டுள்ளது.

பத்திரிகையாளர்களின் கண்ணையும், காதையும் கூட எப்படி அடைத்துப்போட்டு விட்டனர் என்பதை எக்ஸ்பிரஸ் மட்டுமல்ல, எல்லா ஏடுகளுமே சுட்டிக்காட்டியுள்ளன.

பெரியகுளத்தில் ஆளுங்கட்சிக்கு (லீடிங்) அதிக வாக்குகள் கிடைக்கின்றன என்றபோது அரைமணி நேரத்திற்கு ஒருமுறை செய்தி வெளியிட ஏற்பாடு செய்த அதிகாரிகள், திருச்செந்தூரில் தி.மு.க.வுக்கு மூவாயிரம் வாக்குகள் அதிகம் என்ற நிலை வந்த பிறகு உண்மைச் செய்திகளுக்கு உறை போட்ட மர்மம் என்ன? என்று மக்கள், திகைக்கத்தான் செய்கிறார்கள்!

என்ன செய்வது! இங்கேயுள்ள எதிர்க்கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லை! பாண்டிச்சேரியில் தி.மு.க. தலைமையில் உள்ள கூட்டணி அரசுக்குத் தொல்லை கொடுக்க, அ.தி.மு.க.வுடன் இரண்டு கம்யூனிஸ்டுகளும், ஜனதாவும், வேறு சில கட்சிகளும் அடிக்கடி ஓரணியில் திரளுகின்றன! இப்போதுகூட ஏழரைக் காசு என்ற பஸ் கட்டணத்தை ஏழு காசாக ஆக்கிட அந்தக் கட்சிகள் கிளர்ச்சி நடத்தி, வன்முறைகள் உருவாகி, பஸ்கள் எரிக்கப்பட்டு ஒருவாறு போராட்டம் முடிவுற்றுள்ளது! பஸ் கட்டணம் அரைக்காசு குறைக்க ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இங்கே பஸ் கட்டணத்தை குறைக்க அப்படியொரு கிளர்ச்சியை அறவழியில் நடத்திட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓரணியில் திரளுவார்களா? இங்குள்ள ஆளுங்கட்சியினரை உதட்டளவில் எதிர்த்துக் கொண்டு, உள்ளத்தால் அவர்களுக்குக் கடன்பட்டுக் கிடக்கும் சில கட்சிகளின் தலைவர்களை, அந்தக் கட்சிகளின் தொண்டர்கள் அடையாளம் கண்டு கொண்டுதான் வருகின்றனர்.

உடன்பிறப்பே, தப்பித்தவறி இந்திரா காங்கிரஸ் கட்சியோ, அல்லது இரு கம்யூனிஸ்டு கட்சிகளோ அ.தி.மு.க. அரசாங்கத்தையோ அல்லது, அந்தக் கட்சியையோ கண்டிக்க முற்பட்டால், அதற்குப் பிராயச்சித்தமாக உடனடியாக; ஏன் - அந்தக்கணமே தி.மு.கழகத்தையும் ஒரு பிடி பிடிக்காமல் விடுவதில்லை பார்த்தாயா?

திருச்செந்தூர் தொகுதியில் ஆளுங்கட்சி பணம் செலவிட்டதைக் குறிப்பிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் நாளேடு, அடுத்த நாள் நம்மீதும் பாய்ந்திருக்கிறது. இதோ அதைப் படித்துப் பார்!

தி.மு.க. தலைவர் கருணாநிதி, திருச்செந்தூர் தொகுதியில் இரண்டே நாட்கள் பிரச்சாரம் செய்யப் போவதாகத் தி.மு.க. அறிவித்தது. அறிவிப்பு வந்து ஆறு மணி நேரம் ஆகவில்லை. அதற்குள் வண்ணச் சுவரொட்டிகள் மின்னத் துவங்கின. தலைவர் கலைஞர் பேசுகிறார் என்ற வண்ணச் சுவரொட்டி ஊர் ஊராக ஒட்டப்பட்டது. எதிர்க்கட்சியாக இருக்கும் தி.மு.க.வுக்கு இவ்வளவு பணம் எங்கிருந்து வருகிறதோ என மக்கள் திகைக்கிறார்கள்!

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு பத்திரிகை எழுதியுள்ள இந்த ஏகடியத்தை அ.தி.மு.க. ஏடு, முதல் பக்கத்தில் பெட்டிச் செய்தியாக வெளியிட்டுப் பெருமை கொள்கிறது!

உடன்பிறப்பே, நான் திருச்செந்தூருக்குச் செல்வதே முதலில் சந்தேகமாக இருந்தது என்பது உனக்குத் தெரியும். எப்படியும் வந்துவிடுகிறேன்! விளம்பரம் செய்திடுக! எனத் தலைமைக் கழகச் செயலாளர் வீராசாமியிடம் கூறினேன். இருபத்து மூன்றாம் தேதி சென்னைக்கு வந்த அவர், சென்னை போட்டோ லித்தோ பிரசில் உடனடியாக, ஒவ்வொரு ஊர் கூட்டத்திற்கும் ஐநூறு சுவரொட்டி வீதம் நாலு ஊர் கூட்டங்களுக்கு இரண்டாயிரம் சுவரொட்டிகளை அச்சியற்றிக் கொண்டு தொகுதிக்குச் சென்றார். நான் செல்வது உறுதியாக்கப்பட்டவுடன் அந்தச் சுவரொட்டிகளை ஒட்டுவதாக ஏற்பாடு! எதுவும் வண்ண வண்ணமாய் மின்னும் சுவரொட்டியல்ல! ஒரே ஒரு வண்ணத்தில் அச்சிடப்பட்ட சுவரொட்டிதான்! அதற்கு மொத்தம் ஆன செலவே சுமார் இரண்டாயிரம் ரூபாய்தான். மார்க்சிஸ்டு கட்சியினரின் பார்வைக்காகவும், உனக்கும் தெரிந்திருக்கட்டும் என்பதற்காகவும்

சென்னை போட்டோ லித்தோ பிரஸ் தந்துள்ள பில்லின் பிளாக்கை எடுத்து இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளேன். இவ்வளவு விளக்கம் தேவையா? என நீ கேட்பாய்! இருந்தாலும் எவ்வளவு சிறிய விஷயத்தைக்கூட பெரிதுபடுத்தி ஒரு எதிர்க்கட்சியின் மீது இன்னொரு எதிர்க்கட்சி எரிச்சலைக் கக்குகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டாமா? இரண்டாயிர ரூபாய்க்கு நாலு ஊர் கூட்டங்களுக்கு அடித்த சுவரொட்டிகளை, என்னமோ இரண்டு லட்ச ரூபாய்க்கு அடித்ததுபோல் அல்லவா கம்யூனிஸ்டு கட்சி கணக்கிட்டுக் காட்டி, ஏது பணம்? என்று கேட்கிறது!

ஒரு வாரத்தில் ஆள் செத்தேவிடுவான் என்று முழங்கினார் ஒரு அமைச்சர்! திருச்செந்தூர் முருகன் தண்டித்து நோயைக் கொடுத்துவிட்டான் என்று திருவாய்மலர்ந்தார் ஒரு திருமதி, தேர்தல் பொதுக்கூட்டத்தில்! இத்தனை அநாகரிக அர்ச்சனைகளையும் கடந்து நான், இரண்டு நாள் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்குச் சென்றதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினாலும் பொறுத்துக்கொள்ள முடியாமற் போனதினால்தானே போஸ்டர் விமர்சனம் செய்து எழுதியுள்ளார்கள்!

உடன்பிறப்பே, நமக்கொன்று தெளிவாகத் தெரிகிறது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போன்ற ஒரு சில தோழமைக் கட்சிகளின் தேர்தல் உடன்பாட்டுடனேதான், தமிழகத்தின் ஆளுங்கட்சியை நாம் களத்தில் சந்திக்க வேண்டியிருக்கிறது! இனி எதிர் காலத்திலும் அப்படித்தான் நிலைமை உருவாகக் கூடும்! திருச்செந்தூர் இடைத் தேர்தலைப் போல சகல பலங்களையும் பயன்படுத்தி, எதிர் வரும் பொதுத் தேர்தலை ஆளுங்கட்சி சந்திக்க முடியாது! இவ்வளவு பணம், அதிகாரம், சூது, சூழ்ச்சி கையாளப்பட்டும் திருச்செந்தூர் முடிவு ஆளுங்கட்சிக்கு திருப்தியான முடிவாக அமையாத போது, பொதுத் தேர்தலில் நமது உழைப்புக்கு முன்னே ஆளுங்கட்சி என்ன ஆகும் என்பதை இப்போதே தெளிவாகக் கணிக்க முடிகிறது!

உடன்பிறப்பே, நீயும் கழகத்தின் முன்னோடி உடன்பிறப்புகளும், செயல் திறன்மிக்க உடன்பிறப்புகளும் குறிப்பாக, சகோதரர் கே.பி. கந்தசாமி அவர்களும் பட்டபாடு வீண் போகவில்லை! பொதுச் செயலாளர் பேராசிரியர், துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார், மற்றும் கழகத்தின் முன்னணி சொற்பொழிவாளர்கள், தலைமைக் கழக, மாவட்ட

கழகச் செயலாளர்கள், கலைநிகழ்ச்சி, இசை நிகழ்ச்சியாளர்கள், தோழமைக் கட்சியினர், வாக்காளப் பெருமக்கள், சிறப்பாக மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், தொழிலாளர் அணியினர் தொடர்ந்து ஆற்றிய தொண்டுக்கு உரிய பலன் கிடைத்தே இருக்கிறது!

ஒரு குறை மட்டும் உண்டு எனக்கு! இன்னும் சற்று முன்னரே சில உடன்பிறப்புகள் தேர்தல் பணியாற்றிடச் சென்றிருந்தால் - சென்றவர்களில் சிலர் வாக்குப்பதிவு நாள் வரையில் இருந்தும், வாக்கு எண்ணிக்கை முடியுமட்டும் இருந்து பணியாற்றிவிட்டு வந்திருந்தால் - அந்தப் பொறுப்புணர்வு கண்டு நான் பெரிதும் மகிழ்ந்திருப்பேன்.

இருப்பினும் பரவாயில்லை! திருச்செந்தூர் ஒரு திருப்புமுனைதான் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் என்ற திருப்தியுடன் இருக்கிறேன்!

இரண்டு மூன்று நாட்கள் உடல்நலிவோடு ஆயிரம் மைல்களுக்கு மேல் பயணம் செய்து, இரண்டு நாள் கூட்டங்களிலும் மொத்தம் மூன்று மணி நேரம் பேசினாலுங்கூட அதனால் ஒன்றும் உடல்நலம் குன்றி விடவில்லை! தேர்தல் முடிவும் என்னைக் கலக்கி விடவில்லை! களிப்புடனே இருக்கிறேன்! நீயும் கவலைப்படாமல் இரு! இன்னும் ஓரிரு வாரங்கள் ஓய்வு கட்டாயமாகத் தேவையென்கிறார்கள் டாக்டர்கள்! அதன்பிறகு சந்திப்போம்! சந்திக்க வேண்டியவர்களையும் சந்திப்போம்!

அன்புள்ள,

மு. க.

(05-03-1983)

1094. எங்கெங்கும் எழுக கண்டனக் குரல்!

உடன்பிறப்பே,

இந்திரா காந்தி அம்மையாரைக் கொலை செய்ய முயற்சி என்ற பெயரால், 302, 307 முதலிய பல்வேறு பயங்கர சட்டப் பிரிவுகளின்படி, 1978-ஆம் ஆண்டு எம்மீதும், பேராசிரியர், சாதிக், ஆசைத்தம்பி, ப.உ. சண்முகம், தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான கழகத்தினர் மீதும் தொடரப்பட்டுள்ள பொய் வழக்கை எம்.ஜி.ஆர். அரசு ஐந்தாண்டு காலமாகத் தீவிரமாக நடத்திக் கொண்டிருக்கிறது. ஒரு சிலர், அப்ரூவர்களாக விலை போய் ஆளுங்கட்சியின் ஜிலு ஜிலுப்பில் மெய் மறந்து உல்லாசம் அனுபவித்து உடல் வளர்த்து வருகின்றனர். கொலை முயற்சி அல்லது கொலைக்கான சதியெனக் குற்றம் சாட்டப்பட்டவர்களில் வேறு சிலர், இன்றைய தினம் ஆளுங்கட்சியின் மைய மண்டபத்து ராஜப் பிரதானியராக வீற்றிருக்கின்றனர். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது மட்டுமா? இன்னும் எத்தனையோ வழக்குகள்! இங்கே சென்னையில் மட்டுமா? தமிழகத்தின் பல பகுதிகளில் கழக உடன்பிறப்புகள் பலர் நீதி மன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டுதானிருக்கின்றனர். நெருக்கடி நிலைக் காலத்தில் வீரபாண்டி ஆறுமுகம் மீது தொடரப்பட்ட கொலை வழக்கை, எம்.ஜி.ஆர். ஆட்சி வந்த பிறகு மேலும் தீவிரப்படுத்தி - நீதி மன்றத்தைக் கூட கிருஷ்ணகிரிக்கு மாற்றி - அந்த வழக்கு விசாரணையில் வீரபாண்டி ஆறுமுகம் விடுதலையானாலுங்கூட, மேலும் விடாப்பிடியாக அப்பீல் செய்து அதற்கு அரசுத் தரப்புக்கு அனுசரணையாக வாதாட ஜத்மலானி என்ற பிரபல வழக்கறிஞரையும் ஏற்பாடு செய்து இப்போது அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புலவர் கோவிந்தன் அவர்கள் மீது வழக்கு தொடர்ந்ததையும், உடன்பிறப்பே! நீ

மறந்திருக்க மாட்டாய்! கழகத்தின் கொள்கை விளக்கச் செயலாளர் கந்தப்பன் மீது வழக்கு மட்டுமா? வழக்கு ஆரம்பமாவதற்கு முன்பே அவர் வீட்டையும், வீட்டில் உள்ள பண்ட பாத்திரங்களையும் ஜப்தி செய்திட முனைந்த அநாகரிகமான பழி வாங்கும் படலம்! தலைமைக் கழகச் செயலாளர் வீராசாமி மீது எண்ணற்ற வழக்குகள்! அ°தன்னியில் பத்திரிகை உரிமை முடக்கச் சட்டப்படி பலமுறை அவர் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சி! என்மீதும் சரமாரியான வழக்குகள்! இலங்கைத் தமிழர்களுக்காகச் சிறைப்பட்ட கழகத்தினரை விடுவிக்கக் கோரிக் குரல் கொடுத்தமைக்காக நான் கைது செய்யப்பட்டதும், அதனைத் தொடர்ந்து பதினாறு உடன்பிறப்புகள் தீக்குளித்து, அவர்களில் ஒரு பெண் உட்பட ஏழு பேர் கருகிச் செத்ததும் நாடறிந்த செய்தியாகும்.

அப்போது என் மீதும், கழக முன்னோடிகள் மீதும் தொடரப்பட்ட வழக்கு ஓராண்டுக்கு மேலாக இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கூட்டுறவு நிறுவனங்களில் பொறுப்பேற்றிருந்த கழகத்தினர் பலர் மீது, டெலிபோன் செய்ததில் ஐம்பது ரூபாய் அதிகச் செலவு, காருக்கு பெட்ரோல் போட்டதில் நூறு ரூபாய் அதிகச் செலவு என்பது போலப் பல பகுதிகளில் வழக்குகள்! கோவை மாவட்டச் செயலாளர் கண்ணப்பனைப் பழிவாங்க நீதிமன்றத்திற்கு இழுத்துள்ள நிகழ்ச்சி! கம்யூனிஸ்டு முதலிய கட்சிகளோடு இணைந்து கழகம் நடத்திய அனைத்துக் கட்சி சார்பான முழு அடைப்பின்போது, மன்னார்குடியில் மன்னை முதலியவர்கள் மீது பயங்கர சட்டப்பிரிவுகளில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு சுமார் நாலாண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் நூற்றுக்கணக்கில்! அனைத்தையும் தொகுத்தளிக்க ஏடும் இடந்தராது, அதனால் இந்த அரசின் பொய் வழக்குகளால் இடர்ப்படும் உடன்பிறப்புகள் - தங்கள் பெயரைக் குறிப்பிடவில்லையே எனக் கோபித்திட வேண்டாம் அருள்கூர்ந்து மன்னித்திடுக!

அண்ணா காலத்தில் அவர் ஆணைப்படியும் - தலைமைச் செயற்குழு, பொதுக்குழு முடிவுப்படியும் ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியின் மத்திய அமைச்சர்களுக்கு எத்தனையோ முறை கறுப்பு கொடி காட்டப்பட்டிருக்கிறது! கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜிக்குச் சென்னையில் கறுப்புக்

கொடி காட்டப்பட்டபோது, மாநகர வீதிகள் ரத்த வெள்ளமாகக் காட்சியளித்ததுண்டு! பிரதமர் பண்டித நேரு மீனம்பாக்கம் விமான நிலையம் வந்திறங்கியபோது, கருங் கொடிக் கடலிலேதான் நீந்த வேண்டியிருந்தது! விரும்பத்தகாத சில அசம்பாவித நிகழ்ச்சிகள் கூட நடைபெற்றுவிட்டன! கழகத் தலைவர்களும், செயல்வீரர்களும் கைது செய்யப்பட்டனரே தவிர, அன்றிருந்த காங்கிரஸ் ஆட்சி, தி.மு.கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தை சதியாலோசனைக் கூட்டமென்று வழக்கு தொடுக்கவுமில்லை - கழகத் தலைவர்கள் மீதோ, மற்றவர் மீதோ நேருவைக் கொலை செய்ய முயற்சி எனக்கூறிக் கூண்டிலேற்றவுமில்லை.

ஆனால், திருமதி இந்திரா காந்தி அவர்களைக் கொலை செய்ய நானும், பேராசிரியரும், சாதிக்கும், மற்றவர்களும் சதி செய்தோம் - தூண்டினோம் என்று எம்.ஜி.ஆர். ஆட்சி, வழக்கு நடத்தி வருகிறது - ஐந்தாண்டுகளாக!

இந்த ஐந்தாண்டுகளில் அரசியல் அரங்கில் எத்தனை எத்தனை மாற்றங்கள் என்பதை, உடன்பிறப்பே! நீயும் உணர்ந்திருக்கிறாய். இந்த நாடும் உணர்ந்திருக்கிறது.

எதற்கெடுத்தாலும் கொலை வழக்கு - கொலை முயற்சி வழக்கு என்று மிரட்டிக் கழகத்தைப் பணிய வைத்து விடலாமென நண்பர் எம்.ஜி.ஆர். கருதிக் கொண்டிருக்கிறார்! தத்தும் தவளைகள் தடாகத்தில் இருந்தாலும், தடாகத்துத் தண்ணீரோடு மிதந்து மலர்ந்து - அந்தத் தண்ணீர் உலர்ந்தால் தடாகத்துடன் ஒட்டிக் காய்ந்து உறவாடும் தாமரைகளும் ஏராளம் உண்டு என்பதை ஒருகாலத்தில் இந்தக் கழகத்தில் இருந்த எம்.ஜி.ஆர். ஏனோ மறந்து விட்டார்!

மறந்து விட்டதால்தான், கிரிமினல் சட்டப்பிரிவு 302-உம், 307-உம் அவரது பரிபாலனத்தில் மிகமிக மலிவாகப் போய்விட்டன!

கழகம் ஆக்கமும், ஊக்கமும் பெற்றிட யார் யார் முனைப்புடன் காரியமாற்றுகிறார்கள் என்பதை இந்த அரசின் கழுகுக் கண்கள் கவனித்துக் கொண்டேயிருக்கின்றன! குற்றவியல் வல்லூறு வேகமாகப் பாய்கிறது! கொள்கைத் தங்கங்களைக் கூண்டிலேற்றத் துடிக்கிறது! சிறையில் தள்ளக் குதிக்கிறது!

அந்த வஞ்சக வலை விரிப்பின் மற்றொரு கட்டம்தான், இதோ சகோதரர் தினகரன் கந்தசாமி மீதும், மாநிலங்களவை உறுப்பினர் தம்பி கோபால்சாமி மீதும் அமைச்சர்களைக் கொலை செய்ய முயன்றார்கள் என்ற பொய் வழக்கு ஜோடனை! திருச்செந்தூர் தொகுதியில், சில அமைச்சர்கள் நடத்திய அதிகார துஷ்பிரயோகம் - ஆயுதங்களேந்திய அடியாட்களுக்குப் போலீசார் தந்த பாதுகாப்பு - அராஜகம் - அமளி - அனைத்தையும் அங்குள்ள நடுநிலையாளர்கள் அறிந்தே இருக்கிறார்கள். ஆனால் அதற்கு நேர்மாறாக - அரசின் அடாவடித்தனங்களை மேடைகளில் கண்டித்துப் பேசியதற்காகவும் கழக வெற்றிக்கு அயராது பாடுபட்டதற்காகவும் கே.பி.கே. மீது கொலை முயற்சி வழக்கு! கோபால்சாமி மீதும் அதே வழக்கு! அமைச்சர்களைக் கொல்ல அரிவாளும், கட்டாரியும் ஓங்கினார்கள் என்று! வாக்கு எண்ணுமிடத்தில் ஆளுங்கட்சி எப்படியும் வென்றாக வேண்டுமென்ற திட்டத்தோடு செயல்பட்டதைக் கண்டித்துக் குரல் எழுப்பியதற்காக திருமதி சக்தி மீது திருட்டு வழக்கு!

வெற்றி பெற்றுவிட்டதாக அறிவித்துக் கொண்ட பிறகும், வெறியாட்டம் போடுகிறார்களே ஏன்? எதற்காக? எதனால்?

கழகத்திற்கு வாக்களித்தோர் அதிலும் குறிப்பாகக் காயல்பட்டினத்து இஸ்லாமியப் பெரியோர், தாய்மார்கள், சகோதரிகள், இளைஞர்கள் மீது தீப்பொறி கக்கும் கண்களுடன் ஆளுங் கணத்தினர் தாக்குதல் நடத்தவோ அல்லது காவல்துறையை ஏவி விடவோ மேலும் முயற்சி செய்வார்களேயானால், அதன் அடுத்த தொடர் விளைவுகளுக்கு முழுப் பொறுப்பை இந்த அரசுதான் ஏற்றிட வேண்டும்!

அராஜகத்தை நிறுத்திடுக! அடக்குமுறையை விலக்கிடுக! வழக்குகளைத் திரும்பப் பெற்றிடுக! இவற்றை எடுத்துரைத்துத் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பிட வேண்டுமென்றுதான் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். வரும் 13-ஆம் நாள் ஞாயிறு முதல் 20-ஆம் நாள் ஞாயிறு வரையில், எட்டு நாட்கள் கழகச் சார்பில் கண்டன நாள் கூட்டங்களை மாநில முழுதும் நடத்திட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

எல்லா ஒன்றியங்களிலும், நகரங்களிலும் - கிளை அமைப்புகளிலும், சார்பு மன்றங்களிலும் கண்டனப் பொதுக்கூட்டங்களுக்கான முயற்சி உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். முக்கியமான பேச்சாளர்கள்தான் வரவேண்டுமெனக் காத்திராமல், குறிப்பிட்ட நாட்களுக்குள் ஒவ்வொரு ஊரிலும் கூட்டம் நடத்திட வேண்டும். பேச்சாளர்கள் யாரும் வர வாய்ப்பு இல்லாவிடில், அந்தந்த ஊரில் அல்லது பகுதிகளில் உள்ளவர்கள் திருச்செந்தூர் தேர்தல் குறித்து முரசொலியில் நான் எழுதியுள்ள கடிதத்தையும், பத்திரிகைச் செய்திகளையும் தொகுத்துக் கூட்டங்களில் படித்தாலே கூட போதுமானது.

எந்தெந்த நகரில், ஒன்றியத்தில் கூட்டங்கள் நடைபெற்றன? பொறுப்புக்கு வரமட்டும்தான் துடித்தார்களா? அல்லது பொறுப்புடன் புதிய நிர்வாகிகள் செயல்பட்டுக் கூட்டங்களை நடத்தினார்களா என்ற விபரங்களை (கூட்டம் நடந்த துண்டு அறிக்கைகளுடன்) மாவட்டச் செயலாளர்கள், விருப்பு வெறுப்பின்றிச் சேகரித்துச் சென்னையில் 27-3-83 ஞாயிறன்று நடைபெறும் தலைமை நிர்வாகக் குழுக் கூட்டத்திற்கு வரும்போது கொண்டு வந்து, தலைமைக் கழகத்தில் ஒப்படைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கிடையே கூட்டம் நடத்திய விபரங்களை, ஆங்காங்கு கூட்டம் நடத்தியோரும் மாவட்டம் - ஒன்றியம் - நகரம் - ஊர் ஆகியவற்றைக் குறிப்பிட்டுத் தலைமை கழகத்திற்கு 23 அல்லது 25-லும் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் எத்தனை அமைப்புகள் எழுச்சியுடன் செயல்படுகின்றன என்ற உண்மையான கணக்கு, தலைமைக்குக் கிடைத்திட வழியேற்படும்.

உடன்பிறப்பே, கண்டனக் கூட்டங்களில் தோழமைக் கட்சிகளின் சார்பில் தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்கிற வாய்ப்பையும் ஆங்காங்குள்ள சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்திக் கொள்க! முஸ்லிம் லீகின் மாநிலத் தலைவர் அப்துல் சமத் எம்.பி. அவர்கள், இந்தக் கண்டனக் கூட்டங்களில் முஸ்லிம் லீகின் முன்னணித் தலைவர்களும், சொற்பொழிவாளர்களும் கலந்து கொள்வார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

எட்டு நாட்கள் தமிழகத்தில் பரவலாக நடைபெறும் இந்தக் கூட்டங்கள், அமைதியாகவும் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

குலையாமலும், ஒரு சிறிதும் தரம் தாழாமலும் நடைபெற வேண்டும். தமிழகம் வறுமைக் காடாகித் தவிப்பதைத் தடுக்க முடியாத அரசு, எதிர்க்கட்சியைப் பழிவாங்குவதில் காட்டுகிற ஆர்வத்தை இந்தக் கூட்டங்களில் சுட்டிக்காட்டுவதுடன், அரசின் கையாலாகாத்தனத்தால் மக்கள் இன்னலுக்கு ஆளாகிக் கிடப்பதையும்கூட இந்தக் கூட்டங்களில் விளக்கிட வேண்டும்.

உம்! உடனே தொடங்கிடுக பணியினை! அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் எழும்பட்டும், எழுச்சி மிகுந்த கண்டனக் குரல்!

அன்புள்ள,

மு. க.

(10-03-1983)

1095. இதோ சென்னையில்!
ஞாயிறு இருபதில்!

உடன்பிறப்பே,

தமிழகமே சீரழிந்து கிடக்கிறது என்பதை உணர்ந்திடத் தலைநகராம் சென்னையை ஒருமுறை சுற்றி வந்தாலே போதும்! ஓரிரு பெருஞ்சாலைகளைத் தவிர, சென்னையின் உட்புறச் சாலைகள் அனைத்துமே ஓராயிரம் நோய்களை உருவாக்கக்கூடிய சக்தி வாய்ந்த நச்சுப் பாம்புகளாக வளைந்து நெளிந்து கிடக்கின்றன! பாம்பின் தோலில் உள்ள பகட்டும், பளபளப்பும் அந்தத் தெருக்களுக்கு உண்டோ எனில், அதுவுமில்லை! அத்தனையும் குண்டுகுழிகள் நிறைந்த குடலைப் புரட்டும் கழிவறைத் தோற்றங்கள்! அவற்றின், இருமருங்கிலும்தான் நடுத்தர வர்க்கத்து மக்கள், பாட்டாளி வர்க்க மக்கள் வாழ்கிறார்கள் என்ற பெயரால் வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அன்றிருந்த ஆட்சியிலே, சாலைகளைச் சீர்செய்ய அக்கறை எடுத்ததுண்டு! இன்றுள்ள ஆட்சியிலோ, இந்தச் சாலைகளையே, பூஞ்சோலைகள் எனக் கூறிடும் வக்கணைகள் நிறைய உண்டு! கூவத்தின் நாற்றம் போக்கிட அன்றைக்கு எடுத்த முயற்சிகளைக் கூத்து மொழியிலே குறை கூறியவர்கள், இன்று அந்த நதியை நாற்றச் சகதியாக, நரகல் அருவியாக மாற்றிக் களிக்கின்றனர்.

குடிசைப் பகுதிகளை மேம்பாடு செய்திட அல்ல, அந்தப் பகுதிகளை அறவே மாற்றி அமைத்திட ஏறத்தாழ இருபது கோடி ரூபாய் செலவிட்டு, ஏழை எளியோர் வசித்திட குடிசை மாற்று வாரியம், கழக அரசில்! அதனைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்த வாரியத் தலைவர் அரங்கண்ணல் அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தனர் - அரசின் பணியினைப் போற்றி மகிழ்ந்தனர்! இன்றோ வாரியத்தின் அலுவலகம்தான் கடற்கரையில் கவர்ச்சி வனப்பு காட்டுகிறதே தவிர, குடிசைகளைக் கோபுரமாக உயர்த்தும் காரியத்தில் வேகமில்லை! வேதனைதான் புயலாய் வீசுகிறது!

கந்தப்பனைத் தலைவராகக் கொண்டு குடிநீர் வாரியம் கழக அரசில் சிற்றூர் முதல் சென்னை வரையில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுத்திட எடுத்த பணிகள் எண்ணிலடங்கா! இன்றோ அமைச்சர்கள், பழைய கணக்குகளைப் புரட்டிச் சொல்லி புதிய திட்டங்களுக்கு வழி காணத் தயங்கி விழிமூடி வியாக்கியானங்களை விளம்பிக் கொண்டு கிடக்கின்றனர்!

நீரில்லை குடிப்பதற்கு! நெருப்புமிழும் கண்களோடு தாய்மார்கள், சகோதரிகள் நீண்ட பெருங் கியூ வரிசைகளில் காலிப்பானை சுமந்து கால்கடுக்க நிற்கிறார்கள்! அங்கொன்றும் இங்கொன்றுமாக விளம்பரத்திற்குச் சில தண்ணீர்த் தொட்டிகள்! குழாய்கள்!

நீருக்கு மட்டுமா? நித்தம் வயிற்றுச் சோறுக்கும் அரிசி வாங்க - அதுவும் புழுநெளியும் அரிசி வாங்க - புழுவாகத் துடித்துக் கொளுத்தும் வெயிலில் புழுதி மண் சாலைகளில் அணிவகுத்து, அழாக் குறையாய் அல்லும்பகலும் காத்துக் கிடக்கிறார்கள் கண்ணெல்லாம் புண்ணாக!

ஏது இங்கே அரிசி? ஏராளமான அளவு கேரளத்துக்கு அனுப்பி விட்டு, இங்கே ஏங்கித் தவிக்கும் ஏழைபாழைகளை ஏமாற்றுவதற்கு மத்திய அரசின் மீது பழி போடும் மாய்மாலமல்லவா மந்திரிகள் செய்கின்றனர்! மத்திய அரசே! அரிசி கொடு! என இந்திரா காந்தியை இழிமொழிகளால் அர்ச்சித்து மாநகர வீதிகளில் ஆளுங்கட்சியினர் ஆர்ப்பாட்டப் பவனிகளை நடத்துகின்றார் - ஆனால் ஆளுங்கட்சியின் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களோ; மத்திய அரசுத் தொகுப்பிலும் அரிசி இல்லை - அங்கேயும் பற்றாக்குறை - பாவம் அவர்கள்தான் என்ன செய்வார்கள்! என்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுக்கின்றார்!

கேரளத்துக்கு அளக்க மட்டும் அரிசி இருந்தது இங்கே! கேவலம் தமிழ்நாட்டு மக்கள் மட்டும் கேட்பாரற்ற உயிரினங்கள்தானே! அரிசிக் கடையில் இன்டோர் படக் காட்சி! அவதிப்படும் பெண்கள் ஊர்வலம் வந்தால் அங்கே அவுட்டோர் படக் காட்சி! அதைக் கண்டு ஏமாந்து பல் இளிக்கும் பாமரத்தனம் இங்கு இருப்பதால்தான் ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் புலிவேஷம் போடுகின்றார்! நியாய விலைக்கடையில் திடீர் நுழைவு! நியாயம் கேட்க வந்த மாதர்கள் ஊர்வலத்தில் திடீர்

விஜயம்! புகைப்படக்காரர் சகிதம் புரிந்த இந்தப் புதுமைகளால் சென்னை நகர் மட்டுமல்ல, அன்னைத் தமிழகமே கவலை நீங்கிக் களிப்பிலாடும் கானமயிலாகப் போகிறதா? இல்லை! உடன்பிறப்பே இல்லை!

பேட்டைகள் என்றும், புரங்கள் என்றும், உட்பகுதியில் நகர்கள் இரவிலும் பகல் போல் ஒளிஉமிழ்ந்த நிலைமையிலிருந்தது அந்தக் காலம்! அது கழக ஆட்சிக்காலம்! இந்தக் காலமோ அங்கெல்லாம் இருட்காலம்! உதயக்கதிர் எழும்வரையில் இருண்டு போன காலம்தான்! அவதிமிகு அலங்கோலந்தான்!

நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை நடத்தப் போகிறார்களாம்! ஊராட்சிகள், ஒன்றியங்கள் தேர்தல்களை நடத்தி முடித்து விட்டார்கள்! ஒதிய மரம் பெருத்தால் உத்திரத்திற்கு ஆகுமா என்பது பழமொழி! எப்படி விதிமுறைகளை வகுத்தால் வழக்கு மன்றத்தில் அடிபடுமோ அப்படி விதிமுறைகளைத் திட்டமிட்டு வகுத்து - முதலில் ஒன்று, அதன் பிறகு ஒன்று எனத் தாக்கீதுகளையும் பிறப்பித்து - ஊராட்சிகள், ஒன்றியங்கள் தேர்தல்களைத் தட்டிக் கழித்து விட்டார்கள்! இப்போது அதே பாணியில் நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களையும், ஆகஸ்டு எனக் கூறிப் பின்னர், ஆகட்டும் காலம் என நாள் கடத்தப் போகிறார்கள்! சிற்றூர் முதல் சென்னை மாநகரம் வரையில் உள்ளாட்சி மன்றக் குறைகளைக் களைய மக்கள் பிரதிநிதிகள் இல்லை!

இருபது கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டு கிராமங்களில் கழிவறை கட்டப் போகிறார்களாம்! கால் கழுவுவதற்கே தண்ணீர் இல்லை - கழிவறையைத் தூய்மைப்படுத்த எந்தக் கங்கையைக் கொண்டு வருவார்களோ இந்தப் பகீரத புத்திரர்கள்! உலகத் தமிழ் மாநாட்டில் ஒய்யாரமாய்க் கட்டித் திறந்த மதுரை நகரக் கழிவறைகள் எல்லாம் தண்ணீரில்லாக் காரணத்தால் கதவடைப்பாம்! சென்னையிலும் தெருவெல்லாம் நரகலோகம்தான்!

சிங்காரச் சென்னையின் சீரழிவைச் சுட்டிக்காட்டி அரசினரைத் தட்டிக் கேட்க - குடிநீரின்றிக் குமுறுவோரின் சார்பில் குரல் கொடுக்க - அரிசிக்கும், மண்ணெண்ணெய்க்கும் ஆலாய்ப் பறப்போரின் அவதிக்குக் காரணம், ஆளுங்கட்சியின் ஆற்றலற்ற தன்மையே என்பதை எடுத்தியம்ப - சென்னை மாவட்ட திராவிட

முன்னேற்றக் கழகம் இதோ, இருபதாம் தேதி ஞாயிறன்று பகுதிதோறும் - வட்டந்தோறும் கண்டன ஊர்வலங்களை நடத்துகிறது! இளைஞரேறு தம்பி டி.ஆர். பாலுவை செயலாளராகக் கொண்டு - எஃகு உள்ளம் படைத்த முன்னணித் தளபதிகள், என்றும் நிலைகுலையாத பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், செயலாற்றும் உடன்பிறப்புச் செம்மல்கள், கிளம்பிற்றுக் காண் தமிழ் சிங்கக்கூட்டமென இளைஞர் அணித் தம்பிமார்கள், இருபதாம் தேதி நடத்தும் சைக்கிள் ஊர்வலங்கள், தேர்தல் வாக்குறுதிகளால் தமிழ்த் தேசத்தையே ஏமாற்றி தேயவிட்ட எத்தர்களுக்கு எச்சரிக்கையாக அமையட்டும்! அமையும் அந்த அணிவகுப்புகள் அமைதியை அணிகலனாகப் பூணட்டும்! அறவழியே படைக்கலனாக இருக்கட்டும்!

சென்னையின் எழுச்சி அன்னைத் தமிழகத்தின் பாராட்டைப் பெறட்டும் - ஆங்காங்குள்ள கழக அமைப்புகளும் நாட்கள் குறித்து, கண்டன சைக்கிள் ஊர்வலங்களை நடாத்திட வழிகாட்டுதலாய் விளங்கட்டும்!

ஆற்றலற்ற அரசால் ஏற்பட்டுள்ள அவலம், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும்! அதனை எடுத்துரைப்போம், தங்குதடையின்றிப் பொங்கும் கண்டனக்குரல் எழுப்பி!

அன்புள்ள,

மு. க.

(17-03-1983)

1096. உண்மை புரிகிறதா இப்போது?!

உடன்பிறப்பே,

நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை நடத்த தேதி குறிப்பிடப் போவதாகக் கூறி, அரசின் சார்பில் அனைத்துக் கட்சிக் கூட்டமொன்று கூட்டப் பெற்றது. அனைத்துக் கட்சிகளில் மக்களிடம் செல்வாக்குள்ள கட்சிகளும் உண்டு! சில கட்சிகளோ, அவற்றின் பெயர் அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் நடைபெறும் போது மட்டுமே பத்திரிகைகளில் வரக்கூடிய அளவுக்கு அவ்வளவு செல்வாக்குப் பெற்றவை! சொல்லப் போனால் அவற்றில் சில கட்சிகளின் பிரதிநிதிகள், இந்த அரசின் எண்ணத்திற்கும் திட்டத்திற்கும் ஏற்றவாறு முன்கூட்டித் தயாரிக்கப்பட்ட கருத்துகளை மனப்பாடமாக ஒப்புவிக்கக் கூடியவர்கள். நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களுக்கான தேதியை முடிவு செய்கிற கூட்டமென்கிறார்களே என்று தி.மு.க., இ.காங்கிரஸ், இரு கம்யூனிஸ்டு கட்சிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கா.கா. தே.கா., தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், ஜனதா, லோக்தளம் போன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குச் சென்றார்கள்.

அங்கே போனால் முக்கியமான முடிவை அந்த கூட்டத்திலேயே எடுத்து அறிவிப்பதற்கு ஏற்ற வகையில் வருகை தந்திருக்க வேண்டிய முதலமைச்சர் அங்கு வரவில்லை. உடனே கழகச் சார்பில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட திரு. சங்கரலிங்கம் எம்.எல்.சி. அவர்கள், இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படுமா? முதலமைச்சர் வருவாரா? என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு என்ன பதில் அரசின் தரப்பில் கிடைத்தது தெரியுமா?

முதலமைச்சர் வருவதாக இல்லை! நீங்கள் எல்லாம் சொல்லும் கருத்துகளைத் திரட்டி முதலமைச்சரிடம் தரப்படும். பிறகு அவர் தனது முடிவைக் கூறுவார்!

இப்படியொரு வாடிக்கையான பதில் வழங்கப்பட்டதும், சங்கரலிங்கம் அவர்கள், நீங்கள் வழக்கம்போல் தேர்தலைத் தள்ளிப் போடவே இந்தத் தந்திரம் செய்கிறீர்கள் எனக்கூறி விட்டு, அந்தக் கூட்டத்தைவிட்டு வெளிநடப்புச் செய்துவிட்டார்.

மற்ற கட்சித் தலைவர்கள் எல்லாம் அரசின் மாயா ஜாலத்தை உணர்ந்தோ, உணராமலோ, என்னதான் நடக்கிறது என்று அறிந்து கொள்வதற்காகவோ கூட்டத்தில் இருந்தனர். கருத்துகள் பரிமாறப்பட்டன. நகராட்சி, மாநகராட்சித் தேர்தல் நடைபெறும் நாட்களையோ அல்லது மாதங்களையோ சட்டமன்றத்தில் அரசின் சார்பில் அறிவிக்கப்படும் என்று முடிவாகக் கூறப்பட்டது.

இரண்டொரு நாட்களில் அப்படியொரு அறிவிப்பும் செய்யப்பட்டது! ஜூலை ஆகஸ்டு மாதங்களில் நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்கள் நடைபெறும் என அவையில் அறிவிக்கப்பட்டது! அதிலே ஒரு பொடியும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வியப்படைந்தார்கள்! என்ன பொடி அது?

ஊராட்சிகள், ஒன்றியங்களுக்குப் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட பெருமக்களுக்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது போல நகராட்சி, மாநகராட்சிகளுக்கும் செய்யப்படும் என்பதுதான் அந்தப் பொடி!

இடஒதுக்கீடுகளை வரவேற்றது - இப்போதும் வரவேற்பதுதான் நமது கழகம்! ஆனால், அந்த இடஒதுக்கீடுகளில் வேண்டுமென்றே விதிமுறைத் தவறுகளைச் செய்து பலரை நீதி மன்றத்துக்குச் செல்ல வைத்து பஞ்சாயத்துத் தேர்தல்களைத் தனது மனம் போலத் தள்ளிப் போட்டுக் கொண்டதல்லவா இந்த அரசு! அண்ணா கிராமம் என்ற ஒன்றியத்தில் ஒரு ஊரில் அரிஜனங்களே இல்லை! அந்த ஊர்ப்பஞ்சாயத்தை ஆதி திராவிடர்களுக்கு என இடஒதுக்கீடு செய்த அலங்கோலத்தை அவையிலேயே சுட்டிக்காட்டி, அந்தத் தவறினை அரசும் மறுக்க முடியாமல் திணறியதை யாரும் மறக்க முடியாது! இப்படி எத்தனையோ ஓட்டை உடைசல்கள்!

இடஒதுக்கீட்டையே மறுத்து சிலர் உச்ச நீதிமன்றம் சென்றுள்ளனர். அங்கு வழக்கு விசாரணையில் இருக்கிறது.

இடஒதுக்கீட்டுக்குத் தடையேதும் உச்சநீதி மன்றத்தால் வழங்கப்படவில்லை.

இருப்பினும், அந்த விசாரணை முடிவை அறிந்த பிறகே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் நடத்துவது உசிதமெனக் கூறுகிற அரசு - அந்த முடிவு தெரிவதற்கு முன்னர் அதே மாதிரி இடஒதுக்கீட்டுடன் நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை ஜூலை மாதம் நடத்த முடியும் என எப்படி அறிவிக்கிறது?

சர்வகட்சிக் கூட்டத்தில் கூறியது ஒன்று - இப்போது கூறுவது வேறொன்று! நகராட்சி, மாநகராட்சித் தேர்தலை நடத்தும் எண்ணமில்லையென்றால், எதற்காக சர்வகட்சிக் கூட்டத்தைக் கூட்டினீர்கள்?

என்று சங்கரய்யா அவர்களும், ஹாஜா ஷெரீப் அவர்களும் சட்டப் பேரவையில் கேள்விக் கணை தொடுத்திருக்கிறார்கள். அதற்குச் சரியான பதில் எப்படிக் கிடைக்கும்? வழக்கம்போல் மழுப்பல்!

இப்படியொரு சூழ்ச்சித் திட்டத்தின் மூலம் - தாய்மார்கள் பெயரையும், தாழ்த்தப்பட்டோர் பெயரையும் சொல்லி, ஊரை ஏமாற்றுவார்கள் இந்த அரசினர் என்பது தெரிந்துதான் அன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலிருந்து தி.மு.கழகம் வெளிநடப்புச் செய்தது என்ற உண்மை இப்போதாவது புரிகிறதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(19-03- 1983)

1097. மாமனிதன் மார்க்ஸ்!

உடன்பிறப்பே,

அவன் பிறந்த ஆண்டு,
ஆயிரத்து எண்ணூற்றுப் பதினெட்டு.
தனியுடைமை கொடிகட்டித்
தரணியை ஆண்டுகொண்டிருந்தது!

அவன் மறைந்த ஆண்டு,
ஆயிரத்து எண்ணூற்று
எண்பத்து மூன்று!
அவன் மறைந்தபோது,
பொதுவுடமைப் புயல் சூல் கொண்டிருந்தது!

அவன் வாழ்ந்த காலத்தில்
வாடிய தொழிலாளர் வர்க்கம்
அங்கொன்றும் இங்கொன்றுமாக
பாட்டாளித் தலைவர்களைப் பெற்று
கூட்டாகக் குரல் கொடுத்தது உண்டு!

எனினும் இரும்பை எடுத்து
எரியும் உலையில் காய்ச்சி
சமதர்மப் போர்வாள் சமைத்தவன் அவனே!

உலகை இயக்கும் சக்தியொன்றுண்டெனில்
உழைப்போர் சக்தியே அதுவென்றுரைத்தான்
மதங்களின் சண்டை மக்களுக்கு அபினி
மனிதனாய் வாழு! பிறரை மனிதராய் நடத்து!
அம்மதமே எனக்கு என்றும்

சம்மதம் என்று சங்கை ஊதினான்!
யூதனாய்ப் பிறந்தான் - இனி
உழைப்போர்க்கே உலகமெனும்
தூதனாய்த் திகழ்ந்தான்!

உதயம் ஜெர்மனியில் -
ஓடியதோ பல நாடுகள்; இல்லை
ஓட்டப்பட்டான் ஒதியமிலார் ஆட்சிகளால்!
இறுதி வாழ்வு இங்கிலாந்தில் - அந்த
இலட்சிய மனிதன் கல்லறை இலண்டன் நகரில்!

காலத்தைக் கணித்தவன் மாண்டு,
கடந்தது ஒரு நூறு ஆண்டு!
எத்தனையோ நண்பர் அவனுக்கிருந்தார்
இன்னல் வந்துற்றபோது எங்கோ ஒளிந்தார்!
ஏங்கல்ஸ் எனும் இனிய நண்பன்
இணைபிரியாதிருந்தான், இறுதிவரை இருந்தான்
அவனது அறிவின் ஒளியை, ஆற்றல் சுடரை
அகிலமுழுதும் பரப்பியோன் அவனே!

ஏடுகள் நடத்தினான்; அவை எழுச்சி முரசுகள்!
இழுத்துப் பூட்டினர் எதேச்சாதிகார அரசுகள்!
எதையும் தாங்கும் இதயம் கொண்டான் -
ஏழ்மையில் சுருண்டும் புழுவாகாமல்
எழுந்து நின்றான் புலிபோல் சினந்து!

வெளிச்சமில்லா வேதனை அகல
இருட்டைக் கிழித்தான் இலட்சிய வீரன்!
எல்லாம் எனக்கே என்ற
பொல்லாக் கொள்கைப் பொட்டில் அடித்து
எல்லார்க்கும் உடைமை பொதுவே என்ற
நல்லோன் - வல்லோன் - ஞாயிறும் அவனே!

உடன்பிறப்பே! உனக்குத்தான் சொல்லுகின்றேன்;
இந்த

நிலப்பரப்பில் விளைகின்ற சமதர்மப் பயிருக்கெல்லாம்
காரல்மார்க்சின் தத்துவமே கழனியாகும்.

கர்ச்சிக்கும் சிங்கத்தின் தோற்றம்
கண்களிலோ கனிவும், துணிவும்!
அர்ச்சித்து வாழ்வதுவோ முதலாளி வர்க்கத்தையென
ஆர்த்தெழுந்த எழுத்துக்கு வித்திட்ட மேதை!

மார்க்ஸ் ஒரு புத்தகம் –
ஏங்கல்ஸ் அதன் நூலகம் –
மாவீரன் லெனின்தான் செயலகம்!

செகத்தில் சில பகுதிகள் விழிப்புற்றிட
செங்கொடி தூக்கினர் செயக்கொடி என்றே!
இங்கோ இன்னும் இடையூறாக
இருட்டு இருப்பதால் – நாமோ
கறுப்பையும் இணைத்து
கழகச் செங்கொடி பறக்க விடுகிறோம்!

இதயச் செந்நிறம் எங்கும் பரவிட
உதயஞாயிறு எழுந்திடல் வேண்டும்.
உழைப்போர்க்கே இந்த நாடு என
உரக்கக் கூவிக் கிளம்பிடுக உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(20-03-1983)

1098. ஒரு பாட்டாளி - படுகொலை!

உடன்பிறப்பே,

வேலியே பயிரை மேயும் வேதனை
வேளைக்கொன்று நாளைக்கொன்றென
விளைந்திடும் கொடுமை! வெட்கம்! வெட்கம்!
தொலைந்திடுமோ இனியேனும்; துக்கம்! துக்கம்!

குற்றம் புரிந்தனையோ எனக் கேட்க
குமரிப் பெண்ணை அழைக்கின்றார் – காவல்
கூண்டுக்குள்ளே கற்பை அழிக்கின்றார்
கூசாமல் தற்கொலையெனக் கதை அளக்கின்றார்!

நமது நண்பன் என்றே படமெடுத்தார் முன்பு!
நாதர்முடி நாகமெனப் படமெடுப்பார் இன்று!
நல்ல மரத்துப் புல்லுருவி போலப்
பொல்லாக் கயவர் போலீசுத் துறையில்!

எங்கேணும் அந்தக் கொடியோர் சில பேர்
எருக்கஞ்செடியாய் – எட்டிக்காயாய்
காவல் கழனியில் களையாய் முளைத்து
கடமையின் நெஞ்சைக் கணையால் துளைப்பார்

இதோ இன்னொரு இழிமகன்
இந்தத் துறையில் ஏட்டாக உயர்ந்து
ஆந்திர நாட்டுக் காண்டாமிருகமாய்
அழித்துப்போட்டான் ஒரு தமிழக உயிரை!

பயணங்கள் என்பதே
பயங்கரமாக மாறிய நாளில்
உயிர்ப்பத்திரம் என்பது
ஒவ்வொரு முறையும் திரும்பிய பிறகே!

மாலிக்பாட்சா ஒரு கொள்கைக் கோட்டம்
அவன் இல்லம் கொடி மல்லிகைத் தோட்டம்
மானா உழைப்பை அள்ளித் தந்து
மனைவி மக்களைக் காத்த தோழன்!

போய் வருகிறேன் பூக்களேயென்று
வாய்நிறையச் சொல்லிச் சென்று
ஆவிபோன உடலாய் வந்து
அனலில் பூக்களைக் கருகிட விடுத்தான்!

கள்வர்களைக் கொலைஞர்களைப் பிடிக்கும்
கள்வனாகக் கொலைஞனாக மாறி நின்றான்!
எள்முனையும் எவருக்கும் இன்னல் நினையா
இனியவனாம் மாலிக்கைக் கொன்றான்.

தங்கச் சங்கிலி பறிக்கத் துடித்தான்
அங்கம் பதற ஓர் உயிரைக் குடித்தான்
தாயும் சேய்களும் கண்ணீர் வடித்தார்
தரமில்லா மனிதன் எதற்குப் படித்தான்?

ஆயிரம் உதவிகள் தொடர்ந்து செய்யினும்
ஓவியம் ஒன்று அழிந்த துயரம் – குடும்பக்
காவியம் ஒன்று மறைந்த கவலை
அகற்றிடல் என்பது யார்க்கும் எளிதோ?

சத்தார் போல சர்க்கார் ஊழியர்
சகல துறையிலும் சில பேர் உள்ளார்
சைத்தான் அதுகளை சாக்கிரதையாக
சல்லடை போட்டுச் சலித்தல் வேண்டும்.

மாலிக் மரணம் மட்டுமல்ல – இன்று
வாடிக்கையாகப் பல கொலை வீழ்ந்தும்
வேடிக்கை பார்க்கும் செயல்கள் தொடர்ந்தால்
கோடிக்கணக்கில் குற்றம் பெருகும்.

அன்புள்ள,

மு. க.

(22-03-1983)

1099. காடாகிறது நாடு; கவனம்! கவனம்!!

உடன்பிறப்பே,

தமிழகத்து மக்களை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளை, வரும்முன் தடுத்து நிறுத்தவோ - அல்லது வந்தபின் சந்தித்து மக்களின் துயர்துடைக்கவோ இம்மியளவு அக்கறையும் எடுத்துக் கொள்ளாத ஒரு ஆட்சி, இன்றைக்குத் தவறுகளைச் சுட்டிக் காட்டுவோர் மீது எரிந்து விழுந்து பிராண்டுகிறது!

கேரளத்துக்கு ஏராளமான அரிசியை அனுப்பி வைத்து விட்டு - இங்கும் அரிசியைச் சீராக விநியோகம் செய்யாமல் - விநியோகத்தில் கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் லஞ்சலாவண்யம் கொடி கட்டிப் பறக்கிற சூழ்நிலையை உருவாக்கி விட்டு - அரிசி கேட்டு ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டமும் நடத்திவிட்டு - டெல்லிக்குச் சென்று திரும்பியதும் மத்திய அரசுத் தொகுப்பிலும் அரிசி பற்றாக்குறைதான்! அவர்களுக்கே நெருக்கடி! என்று மத்திய அரசுக்காகப் பரிந்தும் பேசிவிட்டு, பிறகு தனது பரிவாராதிகளை விட்டு, மத்திய அரசே! அரிசி கொடு! என்று தமிழகத் தெருக்களில் முழங்கச் செய்கிறார்கள் என்றால், அதுதான் இந்த அரசின் திறமையான திசைதிருப்பும் முயற்சியாகும்!

வறட்சித் துயர் தணிக்க விரைந்து செயலாற்றுக! என எல்லாக் கட்சிகளும் குரல் கொடுத்தபோது - அவசரப்படாதீர்கள். மழை பொழியும்! அதுவரையில் பொறுமையாக இருங்கள் என்று அமைச்சர்கள் அருளுபதேசம் புரிந்தார்கள். மழை வருவதாகவே இருக்கட்டும்! அதற்கிடையில் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் மக்களையும் துயரத்திலிருந்து விடுபடச் செய்ய முன்வராமல் அப்படியென்ன ஆசிய விளையாட்டுக்கு அத்தனை நாள் சென்று ஆட்டம் போட வேண்டியிருக்கிறது?

மத்தியிலே உள்ள அமைச்சர்கள், தமிழகத்திலிருந்து வறட்சி பற்றிய அறிக்கை எதுவுமே வரவில்லை என்று நூறு தடவை

சொன்ன பிறகுதானே, கோட்டைக் கோமான்களின் கும்பகர்ணத் தூக்கம் சற்றுக் கலைந்து ஓராண்டுக்குப் பிறகு, கடந்த ஜனவரி 24-ஆம் நாள் அறிக்கையை அனுப்பியிருப்பதாகக் கவர்னர் உரையிலே தெரிவித்தார்கள்! அதுவும் அன்று காலையில் ஆள் மூலம் அறிக்கையை டெல்லிக்கு அனுப்பிவிட்டு, ஏற்கெனவே அச்சியற்றப்பட்ட ஆளுநர் உரையில் அறிக்கையை முன்பே அனுப்பிவிட்டது போன்ற ஒரு ஆகாயமளவிய பொய்யை நாட்டுக்கு அறிவித்தார்கள்!

என்ன நிலைமை இப்போது? எங்குப் பார்த்தாலும் குடிநீருக்காகக் காலிப் பானைகள் கியூ வரிசைகளில்! பல மாவட்டங்களில் ஊர்களையே காலி செய்து விட்டு அண்டை மாநிலங்களுக்குப் பிழைப்பு தேடி ஓடும் தமிழ்க் குடும்பங்களைப் படமெடுத்து, பத்திரிகைகள் பக்கம் பக்கமாக வெளியிடுகின்றன.

பத்தொன்பது பேர் பட்டினியால் செத்து விட்டார்கள் என்ற பரிதாபகரமான செய்தியைப் பட்டியல் போட்டு அறிவித்திருக்கிறார், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் மாணிக்கம் அவர்கள்!

பட்டினியால் ஒருவர் இறந்தாலும் பதவியில் இருக்கமாட்டேன் என்று பலமுறை சூளுரைத்தவர்கள், பதவியில் அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள், பசியால் மக்கள் மாண்டு கொண்டிருக்கிறார்கள்.

புனல் மின்சாரம் இல்லை மழையில்லாததால் என்கிறார்கள். சரி! ஏற்றுக் கொள்வோம். அனல் மின்சாரத்திற்குத் தேவையான நிலக்கரியைத் தேவையான அளவுக்குத் தருவிக்க முடியாமல் போனது ஏன்? ஒரு குறிப்பிட்ட கம்பெனிக்காரன் கொள்ளை லாபம் அடிப்பதற்கு வழிவகுத்துக் கொடுப்பதிலே எம்.ஜி.ஆர். அரசு மெத்தவும் கவலை கொண்டதே தவிர - அனல் மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியைப் போதுமான அளவுக்கு விரைவாகக் கொண்டு வர என்ன காரியங்களைச் செய்தது? மின்சாரத் தட்டுப்பாட்டால் எத்தனை ஆயிரம் தொழிலாளர்க்கு அவதி! எத்தனை எத்தனை விவசாயிகள் விழிநீர் பெருக்கித் துடிக்கின்றனர்! எத்தனை கோடி ரூபாய்க்கான உற்பத்திக்கு முடக்கம் ஏற்பட்டிருக்கிறது! இதனால் இந்த மாநிலத்தின் பொருளாதாரம் எவ்வளவு சீர்கேடாகப் போய்க் கொண்டிருக்கிறது!

இதைப்பற்றியெல்லாம் கவலைப்படுகிற அரசா இன்றைக்கு நடைபெறுகிறது?

கேரளத்து ஜோசும், கர்நாடகத்துக் கொடேசும், ஆந்திரத்து சுப்புராமும் அடிக்கின்ற தனியார் கொள்ளை முப்பது கோடி ரூபாயில், ஆண்டுக்கு பதினைந்து கோடி ரூபாயை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு - மேலும் எவ்வழியில் உருண்டோடி வரும் பணம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறவர்களின் கையில் அல்லவா இந்தத் தமிழ்நாடு, இன்றைக்கு சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது!

உணவு இல்லை! தண்ணீர் இல்லை! வாழ வழியில்லை! இன்னும் நிலைமைகள் மோசமாகலாம்! இத்தனை புண்களையும் பொன்னாடை போர்த்தி மூடிவிடலாமென்று கனவு காண்கிறவர்கள் - அவர்களுக்குக் கட்டியம் கூறுகிறவர்கள் - கையில் கிடைத்தது கொண்டு மகிழ்ந்து கண்மூடிக் கொண்டிருப்பவர்கள் - எதிர்காலத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படாமல் போய்விட மாட்டார்கள்!

தமிழ் மக்கள், தங்களின் தலையில் தாங்களே மண்ணை வாரிப்போட்டுக் கொண்ட கொடுமையை எடுத்து விளக்கி, பதுக்கல்காரர்களை - பகல் வேடக்காரர்கள் - பளபளப்புக்காரர்கள் - தமிழன் செத்தால் என்ன? வாழ்ந்தால் என்ன? என்று கருதும் தருக்கர்கள் இடுப்பொடியுமளவுக்கு எழுச்சி பொங்கிடப் பணியாற்றுவதே உனது செயல்முறைத் திட்டங்களாக இருக்க வேண்டும்!

இதற்கிடையே திசை திருப்ப ஏதேதோ செய்வர் ஆட்சியாளர்! ஆளும் கட்சியினர்! அவற்றை அலட்சியப்படுத்துக! அல்லது அசிங்கம் கண்டு ஒதுங்குவதுபோல் ஒதுங்கிடுக!

கருணாநிதியின் குடும்பத்தைப் பற்றிப் பிரேத பரிசோதனை எனத் தலைப்பிட்டுக் காவல்துறையினர் ஒப்புதலோடு சுவரொட்டிகளை ஒட்டிக் கூட்டம் நடத்துகிறார்கள் ஆளுங்கட்சியினர் என்று ஆத்திரப்பட்டுப் பயனில்லை! அதைச் சட்டமன்றத்தில் நமது கழக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டவும் தேவையில்லை! அன்று சட்டமன்றத்தில் நான் இருந்திருந்தால் தடுத்திருப்பேன்! நானுமில்லை, பேராசிரியருமில்லை அப்போது!

இவையெல்லாம் ஆளுங்கட்சியின் திசைதிருப்பும் முயற்சிகள்! அந்த வலையில் சிக்கிக் கொள்ளக்கூடாது! சட்டமன்றத்தில் நாவலர்கூடக் கூறியிருக்கிறார், இவற்றையெல்லாம் வெளியில் அரசியல் ரீதியாகச் சந்தியுங்கள்! என்று!

அவர் அறிவுரை கூற வல்லவர்! வயதும் உடையவர்! ஆனால் இத்தகைய இழிதகைச் செயல்களை, அரசியல் ரீதியாகக்கூடச் சந்திக்கத் தேவையில்லை! சுவரொட்டிக்குப் பதில் சுவரொட்டி என்று ஒட்டுவது சேற்றில் புரண்டு வரும் பன்றியுடன் மோதுவதற்கு ஒப்பாகும்! ஒதுங்கிப் போவதால் பன்றிக்குப் பயந்து விட்டோம் என்று ஆகிவிடாது!

பிரச்சினைகளைச் சமாளிக்க முடியவில்லை! சமாளிக்கும் எண்ணமே இல்லை! அதனால் இப்படியெல்லாம் திசை திருப்புகிறார்கள் - அதில் ஏமாந்து போய் அவர்கள் திருப்பிடும் திசையில் சென்றிடலாகாது!

யார் கையில் நாடு சிக்கியுள்ளது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த - இதற்கு விமோசனமென்ன என்பதை விரித்துரைக்க - அல்லலுறும் மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்ட - அன்பான என் உடன்பிறப்பே! உன் அணி திரள வேண்டுமே தவிர, வேறு திசையில் சென்று நேரத்தையும், நினைப்பையும் வீணடிக்கக்கூடாது! கவனம்! கவனம்!

அன்புள்ள,

மு. க.

(24-03-1983)

1100. சாராய சாம்ராஜ்யாதிபதிகள்!

உடன்பிறப்பே,

சாராயக் கலவைத் தொழிற்சாலைக்கான பெரும்பாலான உரிமங்கள் மார்ச் 31-ஆம் நாளுடன் முடிவடைகின்றன. ஏப்ரல் முதல் அந்த உரிமங்கள் தனியார் கும்பலுக்குப் புதுப்பித்துக் கொடுக்கப்படாமல் அரசாங்கம், நேரிடையாகவோ - அல்லது கூட்டுறவுத்துறை மூலமாகவோ அந்தத் தொழிற்சாலைகளை நடத்த முன்வருமேயானால், அந்தக் கொள்ளையில் அமைச்சர்கள் ஓரிருவருக்கும், முதலமைச்சருக்கும் இனிமேல் பங்கு இல்லை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளலாம்! இதுவரையில் பங்கு இருந்து வருகிறது என்பதைக் குன்றின் மீது ஏறி நின்று கூறவும் யாரும் தயங்கிட மாட்டார்கள்!

எழுநூற்று ஐம்பது எம்.எல். கொண்ட ஒரு பாட்டில் சாராயத்திற்கு, அரசு அனுமதித்துள்ள விலை ஏழு ரூபாய் நாற்பத்தொரு காசு!

இதில் எக்சைஸ் டூட்டி, விற்பனை வரி, சர்சார்ஜ், ஆகியவை மூன்று ரூபாய் நாற்பத்து ஆறு காசு!

இதுபோக மீதமுள்ள விலை எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதுதான் முக்கியம்!

எரிசாராயம் - எண்பத்து ஐந்து காசு!

ஒரு காலி பாட்டில் - இரண்டு ரூபாய்!

பாட்டிலுக்கான மூடி - இருபத்து ஐந்து பைசா!

லேபிள் - ஐந்து காசு!

பேக்கிங் - பதினேழு காசு!

போக்குவரத்து - முப்பது காசு!

சேதாரம் - நாலு காசு!

இலாபம் - இருபத்து ஒன்பது காசு!

ஆக மொத்தம், இந்த மூன்று ரூபாய் தொண்ணூற்று ஐந்து காசில் அரசு அனுமதித்துள்ள வெளிப்படையான லாபம் இருபத்து ஒன்பது காசு! மற்ற பிரிவுகள் அனைத்திலும் மறைமுகமான லாபம் கொள்ளையாகச் சுருட்டி, சாராய சாம்ராஜ்யாதிபதிகளும், மூலவரும் கோடி கோடீஸ்வரர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

சாராயத்தை அடைக்கின்ற பாட்டிலுக்கு விலையென்று அரசு இரண்டு ரூபாய் அனுமதித்திருக்கிறதே! அதில்தான் எவ்வளவு பித்தலாட்டம்! எந்தத் தொழிற்சாலையில் நாள்தோறும் அல்லது வாரந்தோறும் புதிய புதிய பாட்டில்கள் வாங்கி அவற்றில் சாராயத்தை அடைக்கிறார்கள்? எங்கேயும் இல்லை! குடித்துவிட்டுப் போட்ட பழைய பாட்டில்களை எண்பது பைசாவுக்கும் குறைவாகக் கூட வாங்கிக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், ஒரு காலி பாட்டில் - புதிய பாட்டிலின் விலையே மொத்தத்தில் வாங்கும்போது ஒரு ரூபாய்தான் அடக்கம்! அதற்கு மேலும் ஒரு ரூபாய் அதிகமாக விலை அனுமதித்து சாராய சாம்ராஜ்யாதிபதிக்கு அந்த ஒரு ரூபாயில் ஐம்பது காசும், மூலவருக்கு மீதி ஐம்பது காசும் பங்கு!

புட்டியின் மூடிக்கு இருபத்து ஐந்து பைசா அனுமதிப்பதில் குறைந்தது பத்து பைசாவாவது ஒரு மூடிக்கு லாபம்! அதில் ஆளுக்கு ஐந்து பைசா பங்கு!

பேக்கிங் செலவு பதினேழு காசு எனக் கூறுகிறார்கள்! அநியாயம்! நிரந்தரமான மரப்பெட்டிகளில் புட்டிகளை அடுக்கி அனுப்ப, என்ன பேக்கிங் வந்து வாழ்கிறது? இதில் பதினைந்து காசாவது மிச்சம்! அதிலும் முதலாளிக்கும், மூலவருக்கும் தலா ஏழரைக் காசு பங்கு!

அனுமதிக்கப்பட்ட வெளிப்படையான லாபம் இருபத்து ஒன்பது காசையும் கூட்டிப் பார்த்து இறுதியாகக் குறைத்துக் கணக்கிட்டாலும், ஒரு சாராயம் அடைத்த புட்டி (750 எம்.எல்) மூலம் கிடைக்கும் மொத்தக் கொள்ளை லாபம் ஒரு ரூபாய் ஐம்பது காசு!

இந்த உரிமங்களிலும், மாவட்ட மொத்த வியாபார உரிமங்களிலும் சாராய சாம்ராஜ்யாதிபதிகளுக்கு, இருபத்து ஆறு கோடி ரூபாய் லாபம் கிடைக்கிறது என்ற புள்ளி விபரத்தைச் சட்டசபையிலேயே சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

சாராயத் தொழிற்சாலையிலிருந்து மாவட்ட மொத்த வியாபாரிகளுக்கு எத்தனை பாட்டில்கள் போகின்றன? முதலமைச்சர், சபையில் கொடுத்துள்ள கணக்கின்படி எண்பத்து நான்கு லட்சம் லிட்டர் சாராயம் விற்பனையாகிறது! அதனை (750 எம்.எல்) புட்டிகளில் அடைத்தால், ஒரு கோடியே பனிரெண்டு லட்சம் பாட்டில்கள்!

ஒரு பாட்டிலுக்கு ஐம்பது காசு வீதம், ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே பனிரெண்டு லட்சம் பாட்டிலுக்கு மூலவர் காணிக்கை மட்டும் ஐம்பத்தாறு லட்ச ரூபாய்! ஒரு வருடத்துக்கு ஆறு கோடியே எழுபத்திரண்டு லட்சம்! இது பாட்டிலில் மட்டும் பங்கு!

மூடியில், பேக்கிங்கில் முதலியவற்றில் உள்ள பங்குகளையும் சேர்த்தால் மூன்று கோடியே சொச்சம் மூலவருக்கு!

ஆண்டுக்குப் பத்து கோடி, கைநோகாமல்!

அரிதாரம் பூசினால் பத்து லட்சம்தான் வரும்! இப்போது பத்து கோடி வருகிறது!

மிஞ்சுகிற பதினாறு கோடியைச் சாராயத் தொழிற் சாலைக்காரனும், மாவட்ட மொத்த வியாபாரியும் கூட்டுக் கொள்ளையடிக்கிறார்கள்!

யார் அவர்கள்? பார்த்தால் பெரும்பாலும் தமிழர்களின் பெயர்களாகத் தோன்றும்! சென்னைக்கு ஏ. பாலசுப்பிரமணியம் - கோவைக்கு உதயகுமார் - வடாற்காடு தர்மபுரிக்கு ஆல்பர்ட் (கேரளக்காரர்) - தஞ்சை புதுக்கோட்டைக்கு வி. ராமானுஜம் - தென்னாற்காட்டுக்கு ஆர். லட்சுமணதாஸ் - செங்கற்பட்டுக்கு ஒ.எச். குமார், குருவில்லா, சந்திரசேகர் (இந்த சந்திரசேகர் கேரளாவில் கள்ளச்சாராயம் அருந்தி ஆயிரம் பேர் இறந்தார்களே! அதில் குற்றம் சாட்டப்பட்டு சிறை புகுந்தவர்) - திருச்சிக்கு ஜோசப் லூயிஸ் (இருபது வயது ஆகவில்லையென்றாலும் உரிமம் பெறப்பட்டுள்ளது) - மதுரை முகவைக்கு ஆர். சீனிவாசன் - சேலம் பெரியார் மாவட்டத்திற்கு கே. பெருமாள் - நெல்லை குமரிக்கு எஸ். சேவக் (கேரளா).

உடன்பிறப்பே! இந்தச் சாராயக் கலவைத் தொழிற்சாலைகளில் மிகப் பெரும்பாலானவை வெறும் பினாமி பெயர்கள்தான்! மேலிருந்து ராஜ்ய பரிபாலனம் புரிபவர் கேரளாவைச் சேர்ந்த ஜோஸ் குழுவினர்! அவர்களுக்கு இங்குள்ள தமிழர்கள் பினாமிகள்!

சாராயத்தை மாவட்டத்தில் விற்றிட மொத்தக் குத்தகையெடுத்திருப்போர் பட்டியலிலும் பெரும்பாலோர், கர்நாடகத்தில் உள்ள கோடேஸ் கம்பெனியின் பினாமிகளே தான்! சென்னைக்கு நாராயணன் - செங்கற்பட்டுக்கு கே. துளசி உஷா - தென்னாற்காட்டுக்கு ஆர். ராஜாராம் - தர்மபுரிக்கு கே.வி. சண்முகம் - நீலகிரிக்கு வசந்த்குமார் - திருச்சிக்கு எட்வர்ட் ஜெகநாதன் - தஞ்சைக்கு ஆர். திருநாவுக்கரசு - புதுக்கோட்டைக்கு வி. முத்து ராமலிங்கம் - மதுரைக்கு பி. தியாகராஜன் - குமரிக்கு டாக்டர் எஸ். நடேசன் - கோவைக்கு முத்து மாணிக்கம் - பெரியாருக்கு சி. வாடியப்பன் - நெல்லைக்கு கே. இராமசாமி - முகவைக்கு அப்துல்கரீம் - வடாற்காட்டுக்கு கே. சுப்பிரமணியம்.

இவர்களில் சிலரைத் தவிர, மற்றவர் அனைவரும் கோடேஸ் கம்பெனியின் பினாமிதாரர்கள்தான்!

அன்னிய மதுபானம் விற்பதிலே கூட சில மாவட்டங்களில் ஆந்திராவைச் சேர்ந்த சுப்பராம ரெட்டியின் பினாமிகள்தான்!

இப்படியொரு தென் மாநிலங்களின் மாநாடு தமிழகத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது!

வருமான வரித்துறையினர் இந்தத் தொழிற்சாலைகள் பலவற்றில் திடீர்ச் சோதனையிட்டு அங்கே கிடைத்த ஆதாரங்களின் மூலம், பல பேர் பினாமி முதலாளிகளாகத் தான் இருக்கிறார்கள் என்று பதிவு செய்திருக்கிறார்கள்! அதன் விபரங்கள் சட்டப் பேரவையிலும் படித்துக் காட்டப்பட்டிருக்கிறது!

இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் விசாரணைக்கு வைப்பதாகச் சொல்லி, தன் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்குத் தனக்குச் சாதகமாக ஒரு சூழ்நிலையை உருவாக்கி மூடிமறைத்திட ராமமூர்த்தி கமிஷன் என்ற ஒரு கமிஷனை முதலமைச்சர் அமைத்துக் கொண்டிருக்கிறார்!

சட்டப்பேரவையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கமிஷன் விசாரிக்கும் என்று அறிவிப்பு! ஆனால் குற்றம் சாட்டியவர்களின் சார்பில், வழக்கறிஞர்கள் சாட்சிகளை விசாரிக்க தயக்கம்! மயக்கம்!

முதல்வர், தன் மீதே ஒரு விசாரணை நடத்தி உண்மையை எடுத்துக் காட்ட மனமார எண்ணியிருந்தால் - உச்ச நீதிமன்ற நீதிபதியிடமல்லவா விசாரணையை ஒப்படைத்திருக்க வேண்டும்?

இப்போது அவர் நடத்திக் காட்ட விரும்புவது வெறும் விளம்பர நாடகம்தானே!

உண்மையிலேயே ஊழல் நடக்கவில்லையென்றால், சுமார் முப்பது கோடி ரூபாய் கொள்ளையடிக்கும் தனியார் கும்பலிடமிருந்து சாராயக் கலவைத் தொழிற்சாலைகளையும், மாவட்ட மொத்த சாராய விற்பனை உரிமங்களையும், அன்னிய மது விற்பனைக்கூடங்களையும் - அரசோ அல்லது அரசின் சார்பில் கூட்டுறவுத்துறையோ ஏற்று நடத்திடத் தயாரா?

இப்படி, நாம் வலியுறுத்துவதை வைத்துக் கொண்டு அந்தத் தனியாரை மிரட்டி மேலும் ஆதாயம் தேடத்தான் இவர்கள் முனைவார்களே தவிர, இவர்களாவது அந்தக் கொள்ளையைத் தடுப்பதாவது!

அன்புள்ள,

மு. க.

(26-03-1983)

1101. நீதி படும்பாடு!

உடன்பிறப்பே,

நினைத்துப் பேசு! நினைத்ததை எல்லாம் பேசி விடாதே! இது பொறுப்புள்ளவர்கள் - பொறுப்பில் உள்ளவர்கள் மறந்துவிடக்கூடாத அறிவுரை!

நீதிமன்றங்களும், சட்டமன்றங்களுக்குமிடையே ஏற்படும் மோதுதல்களில் உருவாகும் சட்டச் சிக்கலைக்கு ஏடுகள் பல ஆராய்ந்து துணுக்குச் செய்திகளை அன்றாடம் வெளியிடுகின்றன. கருத்து விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன. ஒரிசா கோர்ட் அளித்த தீர்ப்பும், கல்கத்தா கோர்ட் அளித்த தீர்ப்பும் இப்போது கவனத்திற்குக் கொண்டு வரப்படும்போது, நேற்று மார்ச் 25-ஆம் நாள் கேரள மாநில ஹைகோர்ட் அளித்துள்ள தீர்ப்பும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டிய ஒன்றாகும்.

நீதிபதிகளைப் பற்றி சட்டமன்றத்தில் முதலமைச்சர் குறைகூறிப் பேசியது அரசியல் சட்டவிதிகளுக்குப் புறம்பானது எனச் சுட்டிக்காட்டி, நண்பர் ஆற்காடு வீராசாமி, வழக்கு தொடர - அதையொட்டி ஹைகோர்ட் நீதிபதி சத்யதேவ் ஐந்து வினாக்களை எழுப்பி அவற்றுக்குப் பதில் கூறுமாறு முதலமைச்சருக்குச் சம்மன் அனுப்பியுள்ளார். அந்த சம்மனை வாங்கத் தேவையில்லை என்ற அடிப்படையில் மார்க்சிஸ்ட் உறுப்பினர் நண்பர் உமாநாத் சட்டமன்றத்தில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். அந்த வாதத்தில் கலந்து கொண்ட கழக உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக நீதிபதிகளைக் குறித்து முதலமைச்சர் கருத்தறிவித்திருப்பதால், அதற்குரிய விளக்கத்தை அவர் கோர்ட்டுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார் என்ற கருத்தில் அரசியல் சட்டப் பிரிவுகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

கேரளத்தில் இப்போது எழுந்துள்ள பிரச்சினை எதையொட்டித் தெரியுமா?

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தினசரிப் பத்திரிகையான தேசாபிமானியின் நிருபருக்குக் கேரளச் சட்டசபையில் பிரஸ் பாஸ் மறுக்கப்பட்டது! அதனை ஆட்சேபித்து அந்த மார்க்சிஸ்ட் பத்திரிகையின் நிருபரும், கேரள உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளரும் கூட்டாகச் சேர்ந்து ஒரு ரிட் மனுவைக் கேரள ஹைகோர்ட்டில் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்கினையொட்டி கோர்ட்டில் ஆஜராகுமாறு கேரளச் சட்டமன்ற சபாநாயகருக்கும், சட்டமன்றத்துறை செயலாளருக்கும் நோட்டீஸ் அனுப்ப இம்மாதம் ஏழாம் தேதி ஆணை பிறப்பித்தது, அந்த ஆணையை ரத்து செய்யுமாறு அரசின் அட்வகேட் ஜெனரல் விடுத்த கோரிக்கையை, கேரள ஹைகோர்ட் நீதிபதி எம்.பி.மேனன் நிராகரித்து முதலில் பிறப்பித்த ஆணையை உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்துள்ளார்.

அந்தத் தீர்ப்பில்,

வழக்கில் மேலும் விசாரணை நடைபெற வேண்டியிருக்கிறது. ஒரு மனுவை விசாரிக்க கோர்ட் அனுமதித்த பிறகு, பிரதிவாதிகளுக்குக் கோர்ட் விதிகளின்படி, நோட்டீஸ்கள் அனுப்பப்பட வேண்டும். எனவே, அவ்விதிகளை கோர்ட் அமல்படுத்துவதற்கு அரசியல் சட்டமுறை எதுவும் தடையாக இல்லை. அரசியல் சட்டத்துக்கு விரோதமான முறையில் சட்டசபை உறுப்பினர்களும், அதிகாரிகளும் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினால் அவர்கள், வழக்குகளில் இருந்து விதிவிலக்குப்பெற உரிமை கொண்டாட முடியாது!

உடன்பிறப்பே, மார்க்சிஸ்ட் பத்திரிகையாளர் சட்டமன்றத்தில் புறக்கணிக்கப்பட்டதை எதிர்த்து தொடர்ந்த வழக்கு இது! இந்த வழக்கின் காரணமாக கோர்ட் விடுத்த நோட்டீசுக்கு, கேரள சபாநாயகரும், சட்டமன்றத்துறை செயலாளரும் இலக்காகியிருக்கிறார்கள். அப்படி நோட்டீஸ் பெறுவதிலேயிருந்து சபாநாயகருக்கும், செயலாளருக்கும் விலக்களிக்க வேண்டுமென்ற அரசு வழக்கறிஞர் வாதத்தை நீதிபதி மேனன் ஏற்றுக்கொள்ளாமல்தான், மேற்கண்டவாறு தீர்ப்பு வழங்கியுள்ளார்.

நீதித்துறைக்கும், சட்டமன்றத்துறைக்குமிடையே இங்கே உள்ள சட்டச் சிக்கல் ஒருபுறமிருக்கட்டும்!

இவர் ஏன் இதைப் போய்ப் பேசினார்? என்று இங்கே ஆளுங்கட்சியிலே உள்ள விஷயம் புரிந்தவர்கள், ஒருவருக்கொருவர் காதோடு பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

இது மட்டும்தானா? இந்த ஆட்சியில் கடந்த ஐந்தாண்டுக் காலமாக நீதி படும்பாடு கொஞ்சமா? அனைவருமே அனுமனுக்கு ஆசிவழங்கும் இராமமூர்த்திகளாக இருந்திட முன்வருவார்களா?

நீதி படும்பாடு - ஒன்று, இரண்டு, மூன்று என வகுத்துக் கொண்டு, திருச்செந்தூர் பொதுக்கூட்டத்திலே கூட நீண்ட உரையாற்றினேனே! அது உனக்கு நினைவிருக்கும்!

1979-இல் மருத்துவக் கல்லூரி தேர்வு சம்பந்தமாக ஒரு மாணவர் வழக்கு தொடர்ந்தார். அதில் நீதிமன்றத்திற்குத் தரப்பட்ட அரசின் ரிக்கார்டுகளில் தேதிகள் திருத்தப்பட்டிருந்த மோசடியை உயர்நீதிமன்ற நீதிபதிகள் இராமசாமி, இரத்தினம் ஆகியோர் சுட்டிக்காட்டிக் கண்டனம் தெரிவித்ததோடு, இந்தத் திருத்தம் இந்த நீதிமன்றத்தில் பொய்யான சாட்சியத்தைக் கொடுத்து, நீதிமன்றத்தைத் திசை திருப்புவதற்காகவே செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டார்கள்.

எம்.எஸ். தேர்வுக்குத் தேர்ந்தெடுப்பதில் தனக்கு அநீதி வழங்கப்பட்டதென்று 1981-இல் எம்.பார்த்தசாரதி என்பவர் நீதிமன்றம் சென்றார். வழக்கை விசாரித்த ஹைகோர்ட் நீதிபதி பத்மனாபன், பார்த்தசாரதிக்கு ஒரு இடம் ஒதுக்க வேண்டுமென்று அரசின் மருத்துவத் துறைக்கு உத்தரவு போடுகிறார். அதை எதிர்த்து அரசாங்கம் அப்பீல் செய்கிறது. அதை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் கோகுலகிருஷ்ணனும், ரத்தினமும் முதலில் அளிக்கப்பட்ட தீர்ப்பையே உறுதிப்படுத்துகிறார்கள். அப்போதும் அரசு, அந்த பார்த்தசாரதிக்கு இடம் தராமல் மூன்று நீதிபதிகளின் தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதி மன்றத்திற்குச் செல்கிறது. அங்கேயும் அரசின் வாதம் ஏற்கப்படவில்லை.

பெரியார் மாவட்டத்துக்கு மொத்த சாராய விற்பனை உரிமம் வழங்குவதில் வாடியப்பன் என்பவருக்கு தகுதிச்சான்றினை மதுவிலக்குக் கமிஷனர் வழங்கியிருந்தும், அரசு அவருக்கு (என்ன காரணத்தாலோ) உரிமம் தராததை எதிர்த்து அந்த வாடியப்பன் நீதிமன்றம் சென்றார். வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி

சத்யதேவ், அரசாணையைத் தள்ளுபடி செய்து வாடியப்பனுக்கு உரிமம் வழங்க வேண்டுமெனத் தீர்ப்பளித்ததோடு, அரசாங்கம் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அரசு ஆணையை(ஜி.ஓ.)க் காட்டி நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்குகிறது என்றும் குறிப்பிட்டார்.

சேலம் மாவட்டத்தில் முனுசாமி செட்டி என்பவர், சுரங்கக் குத்தகையை புதுப்பிக்க வேண்டிக் கொடுத்த மனுவை நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும், அரசு நிராகரித்ததின் பேரில் நீதிமன்றம் சென்றார் 1981-இல்! அந்த வழக்கில் நீதிபதி ராமானுஜம் தீர்ப்புக் கூறும்போது, மனுதாரர் மூலைக்கு மூலை இந்த அரசின் முரட்டுத்தனமான பிடிவாதம் காரணமாக அலைக்கழிக்கப்படுகிறார். இந்த அரசு, நீதிமன்றம் அளித்த முதல் ஆணையையும் புறக்கணித்திருக்கிறது. சட்டத்தின் ஆட்சி இந்த அரசால் காற்றிலே பறக்கவிடப்பட்டிருக்கிறது. அரசாங்கமே நீதிமன்ற உத்தரவைப் புறக்கணித்து அலட்சியமாக நடந்து கொள்ளுமேயானால், நாட்டின் குடிமகன் நீதிமன்றத்தைப் புனிதமாகக் கருதுவதிலேயிருந்து விலகிப் போய்விடுவான்! அரசின் போக்கு, நீதிமன்றத்தின் கண்ணியத்தையே குலைக்கிறது. மன்னிப்புக்கோரினால் கூட தண்டிக்கப்பட வேண்டியுள்ளது. இந்தக் காரணங்களால் இந்த அரசு, குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு - இந்த நீதிமன்றத்தின் 26-11-81-ஆம் தேதியிட்ட உத்தரவைப் புறக்கணித்து அவமதித்த குற்றத்திற்காக, இரண்டாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறது எனக் குறிப்பிட்டார். இதனை விபரமாக நான் சட்டசபையில் பேசினேன். உடனே முதலமைச்சர், அந்த அபராதம் அரசுக்குத்தான் என ஒப்புக்கொண்டு பேசியதோடு, அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வதாகவும் - அப்பீலில் வரும் தீர்ப்பையொட்டி, அரசு என்ன செய்ய வேண்டுமென்பதை முடிவு செய்யும் என்றும் கம்பீரமாகச் சொன்னார். ஆனால் நடந்தது என்ன? அதே கோர்ட்டில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அந்த முனுசாமி செட்டிக்கே குத்தகையைப் புதுப்பித்துத் தருவதாகவும் ஒப்புக் கொண்டது இந்த அரசு!

1982-இல் மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்தவரும், உடல் ஊனமுற்றவருமான விஜயலட்சுமி என்ற மாணவிக்கு, தேர்வில் அநீதி இழைக்கப்பட்டதையொட்டி, அவர் நீதிமன்றம்

சென்றார். அந்த மாணவிக்கு உடல் ஊனமில்லையென்று தேர்வுக்குழு வாதாடியது. நீதிபதி சத்யதேவ், அந்த மாணவியை புதுவையில் உள்ள ஜிப்மர் மருத்துவமனைக்கு அனுப்பியதில் அந்தப் பெண், உடல் ஊனமுற்றவர்தான் என்று அத்தாட்சிப் பத்திரம் அளித்துள்ளதைச் சுட்டிக்காட்டி, அந்த மாணவிக்கு இடம் தருவதோடு, வழக்குச் செலவு ஆயிரம் ரூபாயும் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்டதோடு, தேர்வுக்குழுவினர் யோக்கியமான முறையிலும், நியாயமாகவும், கடமை உணர்வோடும் நடந்திட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

உடன்பிறப்பே, இந்த ஆட்சியில் நீதி படும் பாடு குறித்து சிலவற்றையே சுட்டிக்காட்டியுள்ளேன்.

வீண் பிடிவாதம் - வெறுப்பு உணர்வு - பழிவாங்கும் வன்மம் - நீதியைப் புறக்கணிக்கும் நெறியற்ற செயல் - இவற்றின் உறைவிடமாகத் திகழும் இந்த அரசும், அரசின் தலைவராக விளங்கும் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களும், பணபலத்தால் - அதிகார பலத்தால் எதையும் செய்து விடலாம் என்று இறுமாந்திருப்பது மாத்திரமல்ல,

யாகவா ராயினும் நாகாக்க!

என்ற குறளையும் மறந்து செயல்படுவதன் விளைவுகளை அனுபவிக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

(27-03-1983)

1102. ஏப்ரல் இருபது!
எதிர்கால வெற்றித்திருநாள்!

உடன்பிறப்பே,

தி.மு.க. ஆட்சியில் ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டு, ஏ.எல்.முதலியார் அவர்களும், சந்திரா ரெட்டி அவர்களும் அந்தக் குழுவின் உறுப்பினர்களாக இருந்து மத்ய மாநில உறவுகள் குறித்து ஒரு விரிவான அறிக்கையை வழங்கியதையொட்டி, அவற்றில் ஒருசில மாற்றங்களைச் செய்து, 1974-ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அப்போது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாநில சுயாட்சி தேவையில்லை மக்கள் சுய ஆட்சிதான் வேண்டுமென்றார். அது யாருக்குமே புரியவில்லை. அவர் கூறிய அண்ணாயிச விளக்கம் போலவே இருந்தது! மாநில சுயாட்சி என்ற சொல்லை அண்ணாவே உச்சரிக்க வில்லையென்று கூட எம்.ஜி.ஆர். கட்சியினர் அப்போது சட்டமன்றத்தில் வாதிட்டனர். மாநில சுயாட்சி குறித்து அண்ணா அவர்கள் அளித்த பேட்டிகளையும், ஆற்றிய உரைகளையும் அன்று நாம் அவையில் ஆதாரமாகக் காட்டியும், எம்.ஜி.ஆர். கட்சியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. எதிர்த்து வெளிநடப்புச் செய்தார்கள். சமீப காலம் வரையில் மாநில சுயாட்சி (State Autonomy) அல்லது மாநிலங்களுக்கு தன்னாட்சி என்ற வார்த்தையை பயன்படுத்த மாட்டேன் என்றும் அது பிரிவினைக் கோரிக்கையாகக் கருதப்படுமென்றும் நண்பர் எம்.ஜி.ஆர். கூறி வந்தார். அண்மையில் சில வாரங்களுக்கு முன்பு கொச்சிக்குப் போயிருந்தபோதுகூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பேனே தவிர, மாநில சுயாட்சி (State Autonomy) என்று கேட்கமாட்டேன் என்று விளக்கமளித்தார்.

ஆனால் நிதியமைச்சர் நாவலர், இந்த ஆண்டு அவையில் படித்த நிதிநிலை அறிக்கையில், மாநில தன்னாட்சி State Autonomy வழங்கப்பட வேண்டுமென்று அழகாக அச்சியற்றிப் படித்துள்ளார்.

இது நமது கழகக் குரலுக்குக் கிடைத்துள்ள வெற்றியல்லவா?

1974-ஆம் ஆண்டு சட்டமன்றத்திலிருந்த எம்.ஜி.ஆர். கட்சியின் துணைத் தலைவர் எட்மண்ட் அவர்கள், ராஜமன்னார் கமிட்டி அறிக்கை எதற்கும் பயன்படாத ஒன்று! யாரும் படிக்கத் தகுதியற்றது. அந்த அறிக்கையினைக் குப்பைக் கூடையிலே போட வேண்டும். மாநில சுயாட்சியை எங்கள் கட்சி ஏற்றுக் கொள்ளாது என உரக்கப் பேசினார்.

இப்போது சட்டமன்றத்தில் தென் மாநில முதல்வர்கள் மாநாடு குறித்து நடைபெற்ற விவாதத்தின்போது, அந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பலவும் ராஜமன்னார் குழுவின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டுள்ளன என்பதை ஆதாரங்களுடன் எடுத்துச் சொன்னேன்.

விவாதத்திற்கு பதில் அளித்த நாவலர் அவர்கள், தொடக்கத்திலேயே என்ன குறிப்பிட்டார் என்பதை இதோ தினமணி சென்னை இதழ் வெளியிட்டிருக்கிறது பார்!

''பெங்களூரில் நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், நிதி அதிகாரம் பற்றிய வரைவுத் தீர்மானமே, மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை கொடுத்த முன்னாள் நீதிபதி ராஜமன்னார் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில்தான் என்று நிதியமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்''

உடன்பிறப்பே,

நமது முயற்சிகள், முனைப்பான செயல்கள், அண்ணா வழியில் எழுப்பிய முழக்கம், 1974-இல் எம்.ஜி.ஆர். அவர்களாலும், அவரது கட்சி முன்னோடிகளாலும் எள்ளி நகையாடப் பட்டாலும் அவை வெறும் கட்சிமாச்சரியத்தால் செய்யப்பட்ட ஏகடியங்கள் என்பதும் - உண்மைக்கு என்றைக்கும் வெற்றி உண்டு என்பதும் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகாவது தெளிவாக்கப்பட்டிருக்கிறது பார்த்தாயா?

1974 ஏப்ரல் இருபதாம் நாள், கழக வரலாற்றில் ஒரு பொன்னேடு! அன்றுதான் நமது கழக ஆட்சி, ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஆய்ந்து, அதில் சில மாற்றங்களுடன்

மாநிலத்தில் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் அமைய வேண்டுமென்ற தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய நாள்!

அந்த நாளைத்தான் ஏப்ரல் இருபது - மாநில சுயாட்சிக் கோரிக்கை நாள் என்று கழகச் சார்பில் கொண்டாட வேண்டுமென்று தலைமை நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது!

அதற்கான ஏற்பாடுகள் ஏற்றமுடன் தொடங்கப் பெறட்டும்!

ஏப்ரல் இருபது - இப்போது கோரிக்கை நாள்! எதிர்காலத்தில் - விரைவில் - நமது கொள்கையின் வெற்றித் திருநாளாக அமையும் என நம்பிச் செயலாற்றுவோமாக!

அன்புள்ள,

மு. க.

(01-04-1983)

1103. முதல்வரின் தங்கப்பதக்கப் பரிசுபெற!

உடன்பிறப்பே,

வறட்சிப் பகுதிகள் சிலவற்றைப் பார்வையிடுவதற்காக, இந்தியப் பிரதமர் அவர்கள், மார்ச் இருபத்தி எட்டாம் நாளன்று, சென்னை வந்தபோது விமான நிலையத்தில் ஒரு போலீஸ் அதிகாரி இரமணன் எனப் பெயர் பூண்டவர், என்னிடம் எவ்வளவு அநாகரிகமாகவும், இழிதகைப் போக்குடனும் நடந்து கொண்டார் என்பதை, நீ அறிந்து கொதித்துப் போயிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். பிரதமர் வந்து இறங்குகிற விமானத்தின் அருகே சென்று அவருக்கு மாலை அணிவித்து வரவேற்பது என்பதும், அவ்வாறு செல்வதற்கு முக்கியமானவர்கள் சிலர் அனுமதிக்கப்படுவதும் ஏற்கெனவே இருந்து வருகிற மரபேயாகும். ஆனால் முன்பொருமுறை, போலீஸ் அதிகாரிகள் என்னைத் தடுத்து நிறுத்திய சம்பவம் நிகழ்ந்தது. அப்போது நான் தடுக்கப்பட்டேனே தவிர, ஆளுங்கட்சியின் அமைப்பாளர்கள் பலரும் எந்தத் தடையுமின்றி விமானம் இறங்குமிடத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். அந்த நிகழ்ச்சி ஏடுகளில் செய்தியான பிறகு, அத்தகைய அசம்பாவிதங்கள் இடையில் ஏதும் நடைபெறவில்லை.

இப்போது விமான நிலையத்திற்கு இருபத்தி எட்டாம்நாள் பிற்பகல் இரண்டே முக்கால் மணிக்கு, நானும், நாடாளுமன்ற கழக உறுப்பினர்களும் சென்று அமர்ந்திருந்தோம். கவர்னர், சபாநாயகர் இருவரின் அருகில் அமர்ந்துதான் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். பிரதமர் வந்த விமானம் தளத்தில் வந்து இறங்கியதும், கவர்னருடனும், சபாநாயகருடனும், நானும் பிரதமரை வரவேற்க எழுந்து சென்றேன். மிகத் தாமதமாக முதலமைச்சர் வந்தார். கவர்னருடன் முதலமைச்சர் செல்ல

வழிவிடுத்து நான் சிறிது ஒதுங்கி நின்று, பிறகு தளத்திற்குச் செல்லும் வாயிலண்டை நெருங்கிய போதுதான் போலீஸ் அதிகாரி இரமணன் என்னைத் தடுத்து கையைப் பிடித்து வெளியே தள்ள முயன்றார். என் பின்னால் நின்ற நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி. கோசல்ராம் அவர்கள், ஏன் அவரைத் தடுக்கிறீர்? அவர் முன்னாள் முதல்வர்! எதிர்க்கட்சித் தலைவர்! விடுங்கள் அவரை! என்று உரத்த குரல் எழுப்பினார். போலீஸ் அதிகாரிக்கு என்னைத் தெரியாதா என்ன? அவர் உடனே சொன்னார் மேலிடத்து உத்தரவு என்று! அந்த அதிகாரி சொன்னதோடு நிற்கவில்லை. மீண்டும் நான் உள்ளே செய்ய முயன்றபோது எனது இடது கையைப் பிடித்து முறுக்கினார். நான் என் கையை உதறி விடுவித்துக் கொண்டு உள்ளே சென்றேன். முறுக்கப்பட்டிருந்ததால் கசங்கிப் போய் சுருண்டிருந்த என் சட்டையை முதலமைச்சரிடமும் அடுத்த கணமே காட்டினேன்.

இந்த நிகழ்ச்சியைக் கண்டித்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சிச் சார்பில் அறிக்கை வெளியிட்டுள்ள நண்பர் தா. பாண்டியன் அவர்களுக்கும், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் அறிக்கை வெளியிட்டுள்ள நண்பர் குமரி அனந்தன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

விமான நிலையத்தில் நடைபெற்றது ஜனநாயகத்தில் வெறுக்கத்தகுந்த ஒரு முறை என்பதைச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் நமது பேராசிரியர் அவர்கள் சுட்டிக்காட்டி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

உடன்பிறப்பே, இதுகுறித்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களை திருச்சியில் நிருபர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் சொன்ன விளக்கமான பதில் இன்று ஏப்ரல் முதல்நாள் சென்னை தினந்தந்தியில் வந்திருக்கிறது. அது வருமாறு :-

சட்டப்படி அந்த போலீஸ் அதிகாரி மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும். விசாரணை என்று ஒன்று இருக்கிறதல்லவா? அதன் பிறகுதான் நடவடிக்கை! பொது இடத்துக்குப் பிரதமர் வருகிறார் என்றால், யார் யார், எப்படி, எந்த வரிசையில் வர வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிய வரிசையில்

வந்திருந்தால் பிரச்சினையே இல்லை. போலீசார் அவர்கள் கடமையைச் செய்து இருக்கிறார்கள். அப்போது கருணாநிதி சற்று பின்தள்ளப்பட்டிருக்கலாம்.

முதலமைச்சரே திருச்சி நிருபர்களிடம் விமான நிலைய சம்பவத்திற்குத் தீர்ப்பு வழங்கிவிட்ட பிறகு, விசாரணையாமே விசாரணை! இனி எதற்காக ஒரு கண்துடைப்பு விசாரணை?

விசாரணையில்லாமல் யார் மீதும் நடவடிக்கையே எடுக்கமாட்டாராமே! இந்த முதலமைச்சர்? பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டது சம்பந்தமாக அதிகாரி சதாசிவத்தையும், எதிர்க்கட்சித் தலைவரின் தனிச் செயலாளர் (அரசு அலுவலர்) சண்முகநாதனையும் விசாரணை எதுவும் நடத்தாமலே இதுவரையில் அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமலே சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கிறாரே? ஏறத்தாழ ஓராண்டு காலமாக! இவரா விசாரணை - நீதி - நியாயம் - இவைகளைப் பற்றியெல்லாம் பேசுவது?

போலீசார் கடமையைச் செய்தார்களாம்! என்ன கடமையைச் செய்தார்கள்? முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு உரிய இடம், முன்னாள் முதல்வராகிய எனக்கும் உண்டு என்றுதானே அவரைப் பின்பற்றி நானும் விமான நிலையத்திற்குள் சென்றேன்! என்னிடம் போலீஸ் அதிகாரி கேவலமாக நடந்து கொண்டதைத்தான் கடமை என்று முதல்வர் எம்.ஜி.ஆர். விளக்கம் தருகிறாரா?

சட்டவிரோதமாக நூற்றுக்கணக்கான லாரிகளில் வந்த எம்.ஜி.ஆர். கட்சித் தொண்டர்கள் விமான நிலையத்தில் நுழைந்து விளையாடினார்களே! கடமை செய்யும் காவல்துறை, லாரிகளை மடக்கியதா? விமான தளத்தில் அவர்கள் கொடிகளுடன் எல்லா முக்கிய பகுதிகளிலும் வட்டமிட்டதைத் தடுத்ததா?

அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிய வரிசையில் வந்திருந்தால் பிரச்சினை இல்லை என்று எம்.ஜி.ஆர். கூறியிருக்கிறார்.

அதாவது நான், ஏதோ எனக்குரிய தகுதிக்கு மேலான வரிசையில் நுழைய முயன்றது போல எண்ணும்படி பதில் அளித்திருக்கிறார்.

ஆனால், சட்டமன்றத்தில் பேராசிரியர் அளித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது விளக்கமளித்த அவைமுன்னவர் நாவலர் அவர்கள், என்ன குறிப்பிட்டார் என்பதை எம்.ஜி.ஆர். படித்துப் பார்ப்பது நல்லது!

விமானத்தின் அருகில் யார் யார் போகலாம் என்பது பற்றி முடிவு செய்ய, முதலமைச்சர் வருவதற்குத் தாமதமானதால் தலைமைச் செயலாளர் என்னிடம் கேட்டார். அதற்கு கவர்னர், முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹாஜா ஷெரீப் ஆகிய நான்கு பேர் மட்டும் போகலாம் என்று தலைமைச் செயலாளரிடம் சொன்னேன். அந்த ஏற்பாடு எப்படி மாறியது என்று தெரியவில்லை. மாறியதற்காக வருந்துகிறேன்.

மேற்கண்டவாறு அவையில் நாவலர் அளித்துள்ள விளக்கத்திற்கும், அதற்கு முற்றிலும் முரணாக முதலமைச்சர் திருச்சியில் அளித்துள்ள பேட்டிக்கும் இருக்கின்ற தராதரம் எத்தகையது என்பதை எளிதாகவே அனைவரும் புரிந்து கொள்ள முடியும்.

போலீசார் கடமையைச் செய்திருக்கிறார்கள்.

இவ்வாறு முதலமைச்சர் கூறிவிட்டார்!

மேலிடத்து உத்திரவு என்று போலீஸ் அதிகாரி விமான நிலையத்தில் கூறி என் கையை முறுக்கிவிட்டார்!

இப்போது தெளிவாகவே புரிகிறது! மேலிடத்து உத்தரவு என்பது இராமாவரம் தோட்டத்திலிருந்து ஒயர்லஸ் மூலம் அவசரமாக வந்த உத்தரவு என்ற அந்த உண்மை!

இப்படி வெட்டவெளிச்சமாக விவகாரம் புரிகிறபோது, இனிமேல் நமது கழக முன்னணியினரோ, நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களோ இதுபோன்ற அவமானங்களுக்கு ஆளாகாமல் இருக்க இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்குச் செல்லாமல் தவிர்த்துக் கொள்வதே நல்லது!

சென்றால் முதலமைச்சர் வகுத்தளிக்கும் முறைப்படி, போலீசார், தங்கள் கடமையைச் செய்து முதலமைச்சரிடம் தங்கப் பதக்கம் பரிசு பெற்றுக் கொள்வார்கள்!

விமான நிலையத்தில் மட்டுமல்ல, ஆயிரம் விளக்கு பகுதிக்கு வந்த பிரதமரிடம் மனுக்கள் கொடுக்கச் சென்ற டாக்டர் கலாநிதி எம்.பி. அவர்களை போலீசார் கீழேயே தள்ளி உருட்டித் தடுத்திருக்கிறார்கள். மகளிர் அணியைச் சேர்ந்தவர்களை போலீசார் தாக்கிக் காயப்படுத்தியுமிருக்கிறார்கள்! இவையனைத்தும் திட்டமிட்ட செயல்கள் என்பதில் எள்முனை அளவும் சந்தேகமில்லை.

அன்புள்ள,

மு. க.

(02-04-1983)

1104. யார் கட்டுரை? என்ன உண்மை?

உடன்பிறப்பே,

டாக்டர் நாவலர் எழுதிய கட்டுரையென்ற பெயரால், ஆளுங்கட்சி ஏட்டில், ஏப்ரல் முதல்நாள் மாலை இதழில் ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது. அந்தக் கட்டுரையைப் படித்தால் அது நாவலர் அவர்கள் எழுதியது என்று யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏன்? நாவலரேகூட ஆமாம்! நான்தான் எழுதினேன் என்று ஒப்புக்கொள்ளமாட்டார்! நாவலர் தமிழகத்தின் நிதியமைச்சர்! அந்த நிதியமைச்சர் எழுதிய கட்டுரையென்றால், இதோ - இப்படியொரு வாசகத் தொகுப்பு இடம் பெற்றிருக்க முடியுமா? இதோ அந்தப் பகுதியைப் படித்துப்பார்!

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், 14-10-82-ல் டில்லிக்குச் சென்று வேளாண்மை அமைச்சர் மாண்புமிகு இராவ்பீரேந்திரசிங் அவர்களைக் கண்டு கோரிக்கையை வலியுறுத்தினார்கள்.

நிதியமைச்சர் நாவலர் எழுதிய கட்டுரையென்றால், இப்படியொரு வாசக அமைப்பு இருந்திருக்குமா? அவரே தன்னை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் என்று குறிப்பிட்டுக் கட்டுரை எழுதியிருப்பாரா?

அதனால் அரசு அதிகாரிகளில் ஒருவர், ஆளுங்கட்சியின் அதிகாரபூர்வமான ஏட்டுக்கு நாவலர் என்ற பெயரில் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. கட்டுரையின் தொடக்கத்தில், 3-4-83-இல் நடைபெறும் கூட்டங்களில் மைய அரசின் போக்கை விளக்கிக்காட்டவும் அதன் உணவுக் கொள்கையைக் கண்டிக்கவும் அ.தி.மு.க. சொற்பொழிவாளர்களுக்குப் பயன்படக் கீழ்க்கண்ட குறிப்புகளும், புள்ளி விபரங்களும் தரப்பட்டிருக்கிறது. அரசுத்துறை அதிகாரி ஒருவர், ஆளுங்கட்சியின் ஏட்டுக்கு, அவர்களது கட்சி

சொற்பொழிவாளர்கள் மத்திய அரசைக் கண்டிப்பதற்கான குறிப்புகளையும், புள்ளி விபரங்களையும் திரட்டித் தந்துள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவான உண்மையாகும். இதற்குரிய ஆதாரங்களும் இல்லாமற் போய்விடவில்லை. ஆளுங்கட்சிப் பத்திரிகையில், மத்திய அரசின் உணவு கொள்கையைக் கண்டித்து, மாநில அதிகாரி ஒருவர், தனது பெயரைப் போடாமல் நாவலர் என்ற புனைப் பெயரில் கட்டுரை எழுதலாமா? இந்தக் கேள்வி எழுவது இயற்கைதான்!

ஆனால் அதற்கு இந்த ஆட்சியாளர்கள் சொல்லக்கூடிய ஒரே பதில், மாமியார் உடைத்தால் மண் குடம்! மருமகள் உடைத்தால் பொன் குடம் என்பதாகத்தான் இருக்கும்.

நாவலர் எழுதியிருப்பாரேயானால், 14-10-82-இல் நிதி அமைச்சர் உணவு அமைச்சர் என்ற முறையில் நான் டெல்லிக்குச் சென்று டெல்லியில் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு இராவ்பீரேந்திரசிங் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன் என்றுதான் தன்னைப்பற்றி அடக்கமாகவும், நாகரிகமாகவும் குறிப்பிட்டிருப்பார்! இப்படி சூடாமணித்தனமாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் என்று தனக்குத்தானே மரியாதை கொடுத்துக் கொண்டு எழுதியிருக்கவே மாட்டார்! நிச்சயமாக உறுதியாக - ஒரு அரசு அதிகாரிதான், மத்திய அரசின் உணவுக் கொள்கையைக் கண்டிக்க, ஆளுங்கட்சி சொற்பொழிவாளர்களுக்கான குறிப்புகளை வழங்கும் கட்டுரையை அ.தி.மு.க.வின் ஏட்டில் வரைந்து தள்ளியிருக்கிறார்.

மத்திய அரசின் உணவுக் கொள்கையைக் கண்டிக்கக் கூடாதா? நிச்சயமாகக் கண்டிக்கலாம்! அமைச்சர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் கண்டிக்கலாம்! ஆனால் மாநில அரசின் அதிகாரியொருவர், மாநில நிதித்துறை உணவுத்துறை அமைச்சர் பெயரால் - திரை மறைவில் ஒரு கட்டுரையை ஒரு கட்சிப் பத்திரிகையில் எழுதலாமா?

எம்.ஜி.ஆரைக் கேட்டால், அவருக்குச் சாதகமான ஆமாம் சாமி அதிகாரியாக இருந்தால் எழுதலாம் என்பார்! நியாயத்தை அணு அணுவாகப் பிளப்பவர் அவர்! வேண்டாத அதிகாரியென்று அவரே கற்பனை செய்து கொண்டு யார் மீதாவது வீண்பழிகளை சுமத்துவார்! ஒரு தலைப்பட்ச நியாயத்தின் ஒப்பற்ற வழிகாட்டியாகத் திகழ்பவராயிற்றே நமது முதல்வர்!

அது போகட்டும்! அந்தக் கட்டுரையைச் சற்று ஆராயலாம்!

எடுத்த எடுப்பிலேயே இருட்டடிப்பு! 1967-68-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி சுமார் முப்பத்து எட்டு லட்சம் மெட்ரிக் டன்களாம்! 1977-78-ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி ஐம்பத்து ஏழு லட்சம் மெட்ரிக் டன்களாம்!

உடன்பிறப்பே! அறுபத்து எட்டில் முப்பத்து எட்டு லட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி, எழுபத்து எட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சியில் திடீர் எனவும், குபீர் எனவும், டுமீல் எனவும் சுமார் பத்தொன்பது லட்சம் டன் உயர்ந்து ஐம்பத்து ஏழு லட்சம் டன்னாக பெருகிவிட்டது என எல்லோரும் நினைத்துக்கொள்ள வேண்டுமாம்!

ஆனால் உண்மை என்ன தெரியுமா? தி.மு.கழக ஆட்சியில், 1972-72-ஆம் ஆண்டில் அரிசி உற்பத்தி ஐம்பத்து நான்கு லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது என்ற புள்ளிவிபரம் அப்போதே சட்டமன்றத்தில் எடுத்து கூறப்பட்டிருக்கிறது. அப்போது நாவலர் கல்வி அமைச்சர்! தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட பசுமைப் புரட்சியும், மிகு பயன் தரக்கூடிய உயர்ந்த ரக விதைகளும், வேளாண்மைத் துறையில் ஆற்றிய சாதனைகளும் இந்த உற்பத்தி உயர்வுக்குக் காரணம்!

இவ்வாறு தி.மு.க. ஆட்சியிலேயே அரிசி உற்பத்தி முப்பத்து எட்டு லட்சம் டன்னிலேயிருந்து ஐம்பத்து நாலு லட்சம் டன்னாக உயர்ந்து விட்டதையும், படிப்படியாக ஆண்டுதோறும் உயர்ந்து வந்ததையும் நாவலர் பெயரால் கட்டுரை தீட்டியுள்ள அதிகாரி, வேண்டுமென்றே திட்டமிட்டு நூறு சதவிகித மின்வெட்டு இருட்டடிப்பு செய்துள்ளது அவரது குறுகிய மனப்பான்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறது!

அதிகாரியின் கட்டுரையில் மற்றொரு புள்ளி விபரம் என்ன தெரியுமா?

மாநில அரசு, 1971-72-இல் மத்தியத் தொகுப்புக்கு ஐம்பதாயிரம் டன் அரிசி வழங்கியது எனக் கட்டுரை குறிப்பிடுகிறது! அப்போது மாநில அரசின் அரிசி உற்பத்தி ஐம்பத்திநாலு லட்சம் டன்!

அதே கட்டுரையில் 1981-82-இல் வறட்சி காரணமாக மத்தியத் தொகுப்புக்கு அரிசி அனுப்பவில்லையெனக்

குறிப்பிடப்படுகிறது! ஆனால் அந்தக் கட்டுரையின் முதற் பகுதியில் 1981-82-இல் மாநிலத்தில் அரிசி உற்பத்தி சுமார் ஐம்பத்து ஆறு லட்சம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது!

ஐம்பத்து நாலு லட்சம் டன்னாக அரிசி உற்பத்தி இருந்தபோது தி.மு.க. அரசு, மத்தியத் தொகுப்புக்கு அரிசி கொடுத்திருக்கும்போது, ஐம்பத்து ஆறு லட்சம் டன்னாக அரிசி உற்பத்தி இருந்தபோது அ.இ.அ.தி.மு.க. அரசு, ஏன், மத்தியத் தொகுப்புக்கு அரிசி அனுப்பி வைக்கவில்லை?

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1971-72-இல் ஐம்பதாயிரம் டன்னும், 1972-73-இல் ஒரு லட்சத்துப் பதினோராயிரம் டன்னும், 1975-76-இல் இரண்டு லட்சத்துத் தொண்ணூற்று மூவாயிரம் டன்னும் மத்தியத் தொகுப்புக்கு அரிசி தரப்பட்டுள்ளதைக் கட்டுரையாளர் மாநில அரசு, மத்தியத் தொகுப்புக்கு வழங்கிய விபரம் என்ற தலைப்பில் மொட்டையாகக் குறிப்பிட்டு இருக்கிறார். ஆனாலும், அவரால் உண்மைகளை மறைக்க முடியவில்லை! எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்து இந்த ஐந்தாறு ஆண்டுகளில் 1979-ஆம் ஆண்டு மாத்திரம்தான் இரண்டு லட்சம் டன் அரிசி மத்திய அரசுக்குத் தர முன்வந்தது! அதுவும் தரப்படவில்லை! காரணம், மத்தியில் இருந்த ஜனதா ஆட்சியினால் அது பெறப்படவில்லை! பயனற்ற மோசமான அரிசி என்று கூறி ஜனதா அரசு, அதில் பெரும் பகுதியை வேண்டாமென்று புறக்கணித்து விட்டது!

1977-78-ஆம் ஆண்டில் ஐம்பத்து ஏழு லட்சம் டன் அரிசி உற்பத்தியிருந்தபோதும் எம்.ஜி.ஆர். அரசு, மத்தியத் தொகுப்புக்கு அரிசி தரவில்லை.

இந்த உண்மைகளையெல்லாம் அரசின் புள்ளி விபர அதிகாரி நாவலர் பெயரால் எழுதியுள்ள கட்டுரையில் மறைத்து,

- மத்திய அரசின் ஆணவம்
- அதிகாரத் திமிர்
- அக்கறையின்மை
- அலட்சியப் போக்கு

என்ற வார்த்தைகளால் மத்திய அரசாங்கத்தை அர்ச்சித்திருக்கிறார்.

9-2-83 அன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், உண்மை நிலையை மத்திய அரசுக்கு உணர்த்த வேண்டி உண்ணாநோன்பு மேற்கொண்டார். 15-2-83 அன்று அவர் டெல்லிக்குச் சென்று பிரதமரையும், வேளாண்மைத் துறை அமைச்சரையும், உணவுப் பங்கீட்டுத் துறை அமைச்சரையும் கண்டு தெள்ளத் தெளிவாக நிலையை விளக்கிவிட்டு, திங்கள்தோறும் எண்பதாயிரம் டன் அரிசியும், நாற்பதாயிரம் டன் கோதுமையும் அனுப்பியருளுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

இப்படி விரிவடைகிறது அந்தக் கட்டுரை! உடன்பிறப்பே, 15-2-83-இல் டெல்லி சென்று திரும்பிய முதல்வர் எம்.ஜி.ஆர். சென்னையில் பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்கு என்ன விடையளித்தார் -

அந்த விடைகளையும், கட்டுரையாளரின் கதை அளப்பு வாசகங்களையும் சற்று ஒப்பிட்டுப் பார்!

செய்தியாளர் கேள்வி : குறிப்பிட்ட தேதிக்குள், குறிப்பிட்ட அளவாவது வேண்டும் என்று கேட்டீர்களா?

எம்.ஜி.ஆர். : நாங்கள் அப்படிக் கேட்கவும் இல்லை. அவர்கள் அப்படிப் பதில் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை.

செய்தியாளர் கேள்வி : 85 ஆயிரம் டன் அரிசியில் ஓரளவாவது ஈடு கட்ட வேண்டுமென்று என்று கேட்டீர்களா?

எம்.ஜி.ஆர். : அதை இப்போது சொல்ல முடியாது. அவர்களுக்கும் நெருக்கடி இருக்கிறது. இந்தியா முழுவதற்கும் சென்ற ஆண்டில் மத்திய அரசு கையிருப்பில் இருந்த அரிசியை விட இப்போது குறைவு.

செய்தியாளர் கேள்வி : வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதி கேட்டீர்களா?

எம்.ஜி.ஆர். : அது பற்றிப் பேசவில்லை.

மத்திய அரசுக்கே அரிசிப் பற்றாக்குறையென்று அவர்களுக்காகப் பரிந்து பேசிய எம்.ஜி.ஆர். அவர்கள், இப்போது யாரை ஏமாற்றிட மத்திய அரசின் மீது பழி போடுகிறார்.

நான் இவ்வாறு கேட்பதால், மாநில அரசு செய்து விட்ட தவறுக்காகத் தமிழ் மக்களை, மத்திய அரசு, தண்டிப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது! அதனால்தான், கழக நிர்வாகக் குழுவில் தமிழகத்திற்கு அரிசி கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். பாராளுமன்றத்தில் நமது கழக உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். பிரதமரைச் சந்தித்துக் கோரிக்கை மனுவும் கொடுத்திருக்கிறார்கள்!

பொழுது போக்கு - வீணான கேளிக்கை விரயம் - ஆரவார விழாக்கள் - ஆசிய விளையாட்டு ரசனை - அலட்சியம் - அக்கறையற்ற தன்மை இவற்றினால் அல்லவா இன்று தமிழ்நாடு நாதியற்று நலிந்து போய்க் கொண்டிருக்கிறது!

இந்த உண்மைகளை ஊருக்கும் உலகிற்கும் உணர்த்த வேண்டியது, உடன்பிறப்பே! உனது கடமை! கடமை!

அன்புள்ள,

மு. க.

(03-04-1983)

1105. மத்திய அரசும் - மண்டல் கமிஷனும்!

உடன்பிறப்பே,

சில கருத்துகள், தங்களுக்கு உடன்பாடு இல்லையென்றால் அவற்றைக் குழப்பி விடுகிற தந்திரத்தைச் சிலர் கையாளுகிறார்கள். அந்த முறையைக் கடைப்பிடிப்பதில் ஒருசில ஏடுகளும் விதிவிலக்கு இல்லை!

மண்டல் கமிஷன் அறிக்கையைப் பற்றி இன்று நாடு முழுதும் கருத்துகள் எடுத்து வைக்கப்படுகின்றன. அண்மையில், திராவிடர் கழகச் சார்பில் சென்னையில் நடைபெற்ற மாநாட்டில், வடமாநிலங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டோர் சமுதாயத் தலைவர்களும் கலந்து கொண்டு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறார்கள். நானும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டேன்.

கழகச் செயற்குழு, நிர்வாகக்குழு, பொதுக் குழுக்களிலும் அதனை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அனைத்தையும் கூர்ந்து கவனித்து தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தும்கூட, இன்று (3-4-83) தினமணி சென்னை இதழில், மண்டல் கமிஷன் குறித்து ஒரு செய்திக்கட்டுரை முதல் பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு :-

மண்டல் கமிஷனின் மூன்றாவது வகை சிபாரிசுதான் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தாழ்த்தப்பட்டோர், மலைஜாதியினர் ஆகியோருக்கு உள்ளது போல பிற்பட்ட வகுப்பினருக்கு அரசு வேலைகளிலும், பதவி உயர்வுகளிலும் இருபத்தி ஏழு சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென கமிஷன் சிபாரிசு செய்துள்ளது. தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பிற்பட்ட வகுப்பினருக்கு இவ்வித ஒதுக்கீடு ஏற்கெனவே உள்ளது.

இது தினமணி செய்தியில் ஒரு முக்கியமான பகுதி! மண்டல் கமிஷன் பரிந்துரை, மாநில அரசுகள் இடஒதுக்கீடு செய்து பிற்படுத்தப்பட்டோரையும், தாழ்த்தப்பட்டோரையும் கைதூக்கி விட வேண்டும் என்பதோடு நிற்கவில்லை! மத்திய அரசுத் துறையிலும், மத்திய அரசுச் சார்புடைய பொது நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் பெற்றுள்ள குறைவான இடங்களைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு உரிய இடங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் அந்தக் கமிஷன் விபரங்களைத் தந்துள்ளது.

மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அலுவலகங்களில், அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்களின் புள்ளி விபரத்தைப் பார்த்தால், கிரேடு ஒன் சர்வீஸ் என்ற முதல் நிலை அதிகாரிகள் பதவிகள் ஒரு லட்சத்து எழுபத்து நாலாயிரம் பதவிகளில் தாழ்த்தப்பட்டோர் ஒன்பதாயிரம் பேர்! பிற்படுத்தப்பட்டோர் எட்டாயிரம் பேர்! மீதமுள்ள ஒரு லட்சத்து ஐம்பத்து ஏழாயிரம் பதவிகளிலும் இருப்போர் ஆண்டாண்டு காலமாக முன்னேறியுள்ள சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்! இதே நிலைமைதான் மத்திய அரசு அலுவலகங்களில், பொதுத்துறை நிறுவனங்களில் பல லட்சம் பதவிகளிலும் நிலவுகிறது என்பதற்கான புள்ளி விபரங்கள் பலவற்றை இந்த ஆண்டு பட்ஜெட் விவாதத்தின்போது நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

தினமணியின் வாசகப்படி, ஏற்கெனவே இடஒதுக்கீடு செய்துள்ள கர்நாடக மாநிலம், இப்போது கவர்னர் உரையில் மத்திய அரசுப் பதவிகளில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மாநில அரசுகள், "இடஒதுக்கீடு" செய்திருப்பது வேறு! மத்திய அரசும் "இடஒதுக்கீடு" செய்ய வேண்டுமென்பது வேறு!

ஆரம்பத்தில் மண்டல் கமிஷன் அறிக்கையை வரவேற்று தமிழக அமைச்சர்களில் ஒருவரான எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள், பத்திரிகையாளர்களிடம் கூறினார்! அதற்குப் பிறகு தமிழக அரசு, மண்டல் கமிஷன் பரிந்துரை குறித்து வாய் திறக்கவேயில்லை! கவர்னர் உரையிலோ, பட்ஜெட்டிலோ,

அதுபற்றிக் குறிப்பிடவில்லை! நான் அதைப்பற்றி விபரமாகப் பேசிய பிறகு கூட அரசின் தரப்பில் பேரவையில் எந்தப் பதிலும் சொல்லப்படவில்லை!

இப்போது டெல்லியில் முதலமைச்சர்களைக் கூட்டி "மண்டல் கமிஷன்" பற்றிக் கருத்தறியப் போகிறார்களாம்!

முதல்வர்கள், அவரவர் மாநிலங்களில் இடஒதுக்கீட்டு முறையை அமல்படுத்துவதின் மூலம் சமூகக் கல்வித்துறையில் அழுத்தப்பட்டுக் கிடக்கும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் முன்னேற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்!

மத்திய அரசு, முதல்வர்களைக் காரணம் காட்டி, மத்திய அரசு அலுவல்களிலும் மத்திய பொதுத்துறை நிறுவனங்களிலும் மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்ற முன் வராமல் தட்டிக் கழித்தால் அது ஒரு மாபெரும் சமுதாயத்திற்கு இழைக்கப்படும் தீமை என்பதை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(04-04-1983)

1106. மருத்துவரை மாற்றுவதா? மருத்துவமனையை இடிப்பதா?!

உடன்பிறப்பே,

ஏப்ரல் இருபது - "மாநில சுயாட்சிக் கோரிக்கை நாள்" எங்கணும் எழுச்சி மலர்ந்திட, ஏற்றமிகு கருத்துகள் மக்களின் இதயநாடிகளைத் தொடுமளவுக்கு மேடை தோறும் ஒலித்திட, இன்று முதலே ஏற்பாடுகளைக் கவனித்திட வேண்டுகிறேன். மத்தியிலே எந்தக்கட்சியின் அரசு என்பதோ - மாநிலத்தில் எந்தக் கட்சியின் அரசு என்பதோ மாநில சுயாட்சிக் கோரிக்கையைப் பொறுத்தவரையிலே பிரச்சினை அல்ல! கட்சி அரசுகளைக் காட்டி மாநில சுயாட்சிப் பிரச்சினையை விளக்கும்போது, மாநில சுயாட்சி என்ற கொள்கை மறந்து போய் - கட்சி மாச்சரியங்கள்தான் முன் நிற்கும்.

1974 ஏப்ரல் இருபதாம் நாள் தி.மு.க. அரசு, சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றியபோது எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தத் தீர்மானத்தைத் தி.மு.க. கொண்டு வந்தது என்பதற்காகவே எதிர்த்தார்கள். ஆனால் இப்போது, எதிர்க்கட்சியில் உள்ள தி.மு.கழகம் தென்மாநில முதல்வர்கள் மாநாட்டுத் தீர்மானங்களை வரவேற்றுப் பாராட்டியிருக்கிறது!

ஒரு மாநிலத்தை ஆளுகின்ற கட்சியின் நடவடிக்கைகளையோ - ஆட்சியின் போக்கையோ விமர்சிப்பது, கண்டிப்பது என்பது வேறு! அந்த மாநில உரிமைகளுக்காக மத்திய அரசிடம் கோரிக்கை எழுப்பி, அதற்காக வாதாடுவது என்பது வேறு!

ஏனெனில், மாநில சுயாட்சி என்பது தமிழ்நாடு என்ற இந்த மாநிலத்திற்காக மட்டும் எழுப்பப்படுகிற முழக்கமல்ல! இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும் உண்மையான

முழு சுயாட்சித் தன்மை (Autonomy) பெற்று மத்திய அரசு ஒரு கூட்டாட்சியாக (Federal set-up) மிளிர்ந்தால் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள மாநில அரசுகள் திறமையுடன் செயல்பட முடியும்!

தமிழகத்திற்கு அரிசி தர வேண்டுமென்று பிரதமரைக் கோரும் ஒரு மனுவை டெல்லியில் உள்ள அ.தி.மு.க. எம்.பி.க்கள் கையெழுத்திட்டுத் தந்த போது அந்த மனுவில் தி.மு.க. எம்.பி.க்கள் கையெழுத்திடவில்லை. அதற்குக் காரணம் இருந்தது. அந்த மனுவே முறையாகத் தயாரிக்கப்படவில்லை. நாடாளுமன்றத் தி.மு.க. குழுவின் தலைவராக இருக்கிற முரசொலி மாறனிடமோ, நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. குழுவின் தலைவராக இருக்கிற நண்பர் தண்டபாணியிடமோ யாரும் அணுகியும் கேட்கவில்லை. அந்த மனுவில் நமது கழக எம்.பி.க்கள் கையொப்பமிடவில்லையே தவிர, அவர்கள் தமிழ்நாட்டு வறட்சி நிலையையும், அரிசிப் பற்றாக்குறையையும், குடிநீர்ப் பஞ்சத்தையும் விளக்கி எழுதிய மனு ஒன்றைத் தயாரித்து உடனடி உதவி புரியவேண்டுமெனக்கோரி அந்த மனுவில் தி.மு.க. எம்.பி.க்கள் கையெழுத்திட்டு, டெல்லியில் பிரதமரையும், மற்ற அமைச்சர்களையும் சந்தித்து அளித்து நேரடியாகவே வேண்டுகோள் விடுத்தது மட்டுமல்லாமல் - அதே போன்று ஒரு மனுவைப் பிரதமர் சென்னை வந்தபோதும் கொடுத்துத் தமிழ் நாட்டுக்கு உதவிடுமாறு கேட்டுள்ளனர். அண்மையில் கூடிய நமது கழக நிர்வாகக் குழுவிலும், தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு அரிசியும், வறட்சி நிவாரண நிதியும் வழங்க வேண்டுமென வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநிலத்தை ஆளுகிற கட்சியின் அக்கறையற்ற தன்மையையும் - அலட்சியப் போக்கையும் - வன்மையாகக் கண்டிக்கிறோம்! அதற்காக மக்களைத் தண்டிக்க முடியுமா?

இதோ காவேரிப் பிரச்சினை பற்றிப் பேசிட டெல்லியில் சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களின் மாநாடு நடைபெற்றிருக்கிறது. கர்நாடகம், கேரளம், புதுவை மாநில முதல்வர்கள் கலந்துகொண்ட அந்த மிக முக்கியமான மாநாட்டில், தமிழ்நாட்டு முதலமைச்சரும் கலந்து கொள்ளவில்லை - தமிழ்நாட்டுப் பாசனத்துறை அமைச்சரும் கலந்து கொள்ளவில்லை! கர்நாடக முதலமைச்சர்,

பாசனத்துறை அமைச்சர், பாசன ஆலோசனைக் குழுத் தலைவர் மூவருமே கலந்து கொண்டிருக்கும்போது, நமது மாநில முதல்வரோ, பாசன அமைச்சரோகூட கலந்து கொள்ளாதது பெரிய வேதனை! இந்த அரசின் அக்கறையற்றதும், பொறுப்பற்றதுமான இந்தப் போக்கை நாம் கண்டிக்கிறோம் என்பதற்காக மாநில சுயாட்சிக் கொள்கையையே தூக்கி வீசி விட முடியாது!

மருத்துவமனை ஒரு ஊருக்குத் தேவை! அந்த மருத்துவமனையில் டாக்டர் ஒழுங்கானவராகவோ - திறமையானவராகவோ இல்லையென்றால், அதற்காக டாக்டரை மாற்ற வேண்டுமே தவிர, மருத்துவமனையையே எப்படி இடித்து விட முடியாதோ, அதைப்போலத்தான் மாநிலத்திலும் சரி, மத்தியிலும் சரி ஆட்சியாளர்கள் சரியில்லையென்றால் அவர்களை மாற்றிடும் உரிமை மக்களுக்கு இருக்கிறது! அதற்காக மாநிலங்கள் முழுமையான சுயாட்சி பெற்று மத்தியில் உண்மையான கூட்டாட்சி அமைப்பு (Federal set-up) மலர வேண்டும் என்ற கொள்கையை யாரும் மறுத்துவிட முடியாது! மறுத்துவிடவும் கூடாது!

குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்தைக் கழக அரசு கொண்டு வந்தது! அந்தப் பந்தய சங்கத்தின் பிரபுக்கள், உச்ச நீதிமன்றம் சென்று இடைக் காலத் தடை பெற்று பந்தயங்களைத் தொடர்ந்து நடத்துகின்றனர்! ஏழெட்டு ஆண்டு காலமாக உச்ச நீதிமன்றத்தில் முடங்கிக் கிடக்கிற அந்த வழக்கைத் துரிதப்படுத்தி, அண்ணாவின் தேர்தல் கால அறிவிப்புகளில் ஒன்றாகிய அந்தக் குதிரைப் பந்தய ஒழிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்த இன்றுள்ள அரசு, முன்வரவில்லை! அது மட்டுமல்ல! குதிரைப் பந்தயத்தை ஒழிக்க முடியாது என்று அண்மையில் கூறியிருக்கின்றது சில நாட்களுக்கு முன்பு, அந்தப் பந்தயத்தில் நடைபெற்ற தில்லுமுல்லுகளைக் கண்டித்து பெருவாரியான மக்கள் எத்தகைய வன்முறையில் ஈடுபட நேர்ந்தது என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன!

பஸ்களை தேசிய உடைமையாக்கும் சட்டம் கழக அரசு கொண்டு வந்தது! பல பெரிய முதலாளித்துவ நிறுவனங்களைச் சட்டத்தின் மூலம் அரசே ஏற்று அவற்றைப் போக்குவரத்துக் கழகங்களாக ஆக்கியது! ஆனால், பஸ்களை முழுமையாகத்

தேசிய உடைமையாக்கும் சட்டத்தை எதிர்த்து முதலாளிகள் சிலர், உச்ச நீதிமன்றம் சென்று இடைக்காலத் தடை பெற்றனர்! ஆறாண்டு காலமாக அந்த வழக்கையும் விரைவுபடுத்த இந்த அரசு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை! அதற்கு மாறாக, ஆளும்கட்சியினர் இதுவரையில் இரண்டு கோடி ரூபாய்க்குமேல் பஸ் முதலாளிகளிடம் ஆதாயம் பெற்றுள்ளனர், அவர்களுக்குப் பல சலுகைகள் அளித்ததின் மூலம்!

கேரளத்து ஜோசும், கர்நாடகத்துக் கொடேசும், ஆந்திரத்து சுப்பராம ரெட்டியும் முறையே - சாராயக் கலவைத் தொழிற்சாலை - மாவட்ட சாராய மொத்த விற்பனை - ஐ.எம்.எப்.எஸ். உரிமம் - என்பவைகளுக்காகப் பினாமிகளை நியமித்துக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு அந்தத் தனியார் முப்பது கோடி ரூபாய் கொள்ளையடிக்கிறார்கள் - அதில் ஆளுங்கணத்தாருக்குப் பங்கு பத்து முதல் பதினைந்து கோடி - எனவே இந்தப் பெருங் கொள்ளையைத் தடுக்க, அந்தத் தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்தி அரசின் நிதியாதாரத்தைச் சுமார் இருபத்து ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் திரட்ட முடியும் என்று எத்தனையோ புள்ளி விபரங்களுடன் சட்டப் பேரவையில் எடுத்துக் சொன்னேன். இந்த அரசு, அதற்குச் செவி சாய்க்கவே இல்லை!

இப்படியொரு குற்றச்சாட்டைச் சுமத்துவதின் காரணமாக - மாநில சுயாட்சியே வேண்டாம் என்று தி.மு.க. கூறிவிடுமா என்றால், நிச்சயமாக அப்படிக் கூறாது!

மருத்துவரைத்தான் மாற்ற வேண்டுமே தவிர, மருத்துவமனையையே இடித்து விடக்கூடாது என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

மாநில சுயாட்சி என்பது, அதிகாரங்களைப் பரவலாக்கி - மத்தியில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைக் குறைத்து - இந்திய ஒருமைப்பாட்டுக்கும், வலிமைக்கும் மேலும் ஊக்கத்துடன் பாடுபடுவதற்கு ஏற்ற வகையில் கூட்டாட்சி அமைப்பு (Federal Set-up) உருவாக வேண்டும் என்ற நமது இலட்சிய நோக்கமாகும்!

மாநிலத்தை ஆளுகின்ற அரசின் மீது - அல்லது அந்த ஆளுங்கட்சியின் மீது குறைகளை எடுத்துச் சொல்வதையும் - மாநில சுயாட்சிக் கொள்கையையும் - ஒன்றாக இணைத்து குழப்பிக் கொள்ளக்கூடாது!

மாநிலத்திற்குரிய அதிகாரங்களையும் - பொறுப்புகளையும் செம்மையாகச் செயல்படுத்தவில்லையென்றால், அத்தகைய அரசின் போக்கினையும் மக்கள் மன்றத்தில் சுட்டிக் காட்டிடுவோம்!

அதே சமயத்தில், கட்சி மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மாநில சுயாட்சிக் கொள்கையையும் வலியுறுத்துவோம்!

உடன்பிறப்பே, ஏப்ரல் இருபதாம் நாள் மாநில சுயாட்சிக் கோரிக்கை நாளில் இந்த உணர்வுகளை எதிரொலிப்பாய் என்றும், எதிரொலிக்க வேண்டுமென்றும் - எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(07-04-1983)

1107. சாபமிடுவோர் கவனத்திற்கு!

உடன்பிறப்பே,

காந்தி திரைப்படம் வெளி வந்துள்ள நேரத்தில் இந்தக் கடிதம் மெத்தவும் பயன்படுமென்று எழுதுகிறேன். இதை என் கடிதம் என்று கூறுவதை விட அண்ணாவின் கடிதம் என்றே கூறலாம்!

அடடா! கருணாநிதிக்கு அவ்வளவு ஆணவமா? அண்ணாவுடன் தன்னைச் சரிநிகர் சமமாக ஒப்பிட்டுக்கொள்ள எவ்வளவு துணிவு?

என்று யாராவது அவசரக்காரர்கள் கேட்கக் கூடும்! உண்மை என்ன தெரியுமா?

1960-ஆம் ஆண்டு திராவிட நாடு இதழில் அண்ணா அவர்கள், காந்தி அடிகளார் காசிக்குச் சென்ற நிகழ்ச்சியொன்றைக் குறித்து எழுதிய கடிதம்தான் இன்றைக்கு நீ படிக்கப் போவது!

கருணாநிதியைத் தண்டிக்கச் சொல்லி பகவானிடம் முறையிட்டேன். அவர் அவனைப் படுக்க வச்சுட்டார் என்று முற்றும் துறந்த முனிவராம் (?) சின்ன சங்கராச்சாரியார் அவர்கள், பத்திரிகைப் பேட்டியொன்றில் கூறியிருப்பதைப் பார்த்தபோது, அண்ணாவின் அந்தக் கடிதம் என் நினைவுக்கு வந்தது!

சாபமிடுபவர்களின் கோபம் காந்தியாரிடமே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறபோது, இந்தச் சாதாரணக் கருணாநிதி எம்மாத்திரம்! என எண்ணிக் கொள்ள, அண்ணாவின் கடிதம் எனக்குப் பயன்பட்டது! உனக்கும் பயன்படட்டுமே என்பதற்காக அந்தக் கடிதத்தின் ஒரு சில பகுதிகளை உனக்கு நினைவூட்டுகிறேன்.

இதோ, அண்ணா அவர்களின் கடிதம்!

காசி! கர்மம் யாவும் தீருமாம், அந்தத் திருத்தலம் சென்றால், புனிதக் கங்கை, பாபம் போக்கும் - காசி விசுவநாதரின் தரிசனம், புண்யம் தரும். காசியைத் தரிசித்த பிறகுதான், ஒருவன், பூரண இந்து ஆகிறான் என்பர், வைதீகர்கள்.

அத்தகைய காசிக்கு காந்தியார், சென்றார் - பயபக்தியுடன் - தூய உள்ளத்துடன். என்ன கண்டார்? நான் கூறத் தேவையில்லை. அவரே, விளக்கமாக எழுதி விட்டிருக்கிறார். துவக்கத்திலேயே, தமது துக்கத்தைக் காட்டுகிறார்.

நான் சுவாமி தரிசனத்துக்காக, காசி விசுவநாதர் கோயிலுக்குப் போனேன்.

நான் கண்டவை எனக்கு மன வேதனையைத் தந்தன.

நான் அடைந்த ஏமாற்றம், நான் எதிர்பார்த்திருந்ததை விடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.

காந்தியார், ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இந்து. ஆனால் வேறு பலர், மதப் புரட்டுகளைக் கண்டறிந்தவர்கள், திருத்தலங்களிலேயே நடைபெறும் அக்ரம ஆபாசங்களை அம்பலப்படுத்தி இருந்தனர். எனவே, காந்தியார் காசி செல்லும் போதே, அவர் ஓரளவு, அக்ரமம் அங்கு இருக்கக்கூடும் என்று எதிர்பார்த்துத்தான் சென்றார்.

ஆனால், அவர் கூறுவதுபோல, அவர் அங்கு கண்டது, எதிர்பார்த்ததைவிடப் பன்மடங்கு அதிகமாக இருந்தது.

காந்தியார் அழைக்கிறார், காசியைக் காண!

குறுகலான வழுக்கும் ஒரு சந்தின் வழியாகவே கோயிலுக்குப் போக வேண்டியிருந்தது.

அங்கோ அமைதி என்பதே இல்லை.

ஈக்கள் ஏகமாக மொய்த்தன.

கடைக்காரர்களும், யாத்திரிகர்களும் போட்ட சப்தம் சகிக்க முடியாததாக இருந்தது!

நான் கோயிலுக்குள்ளே போனதும், வாசலில் அழுகி நாற்றமெடுத்த பூக்குவியலே எனக்கு வரவேற்பளித்து.

உயர்ந்த சலவைக் கற்களாலான தரை! ஆனால், அழகு உணர்ச்சியே இல்லாத ஒரு பக்தர், சலவைக் கற்களை ஆங்காங்கே உடைத்து அவற்றில் ரூபாய் நாணயங்களைப் பதித்து விட்டார். அந்த ரூபாய்கள் அழுக்குச் சேர்வதற்குச் சிறந்த இடங்கள் ஆகிவிட்டன.

ஞானவாவி (ஞானக் கிணறு) பக்கத்தில் போனேன். அங்கே கடவுளைக் காணலாம் என்று தேடினேன்.

ஆனால் நான் காணவில்லை!

ஆகையால், எனக்கு மனநிலை நன்றாக இல்லை. ஞானவாவியைச் சுற்றிலும் கூட ஆபாசமாகவே இருப்பதைக் கண்டேன். தட்சணை கொடுக்கவே எனக்கு விருப்பமில்லை. ஆகையால், ஒரு தம்படி கொடுத்தேன்.

அங்கே இருந்த பாண்டாவுக்குக் கோபம் வந்து, அந்தத் தம்படியை வீசி எறிந்து விட்டார்.

இந்த அவமரியாதை உன்னை நேரே நரகத்திற்குத்தான் கொண்டு போகும் என்று கூறி என்னைச் சபித்தார்.

கவனித்தனையா, தம்பி! நாம் பகுத்தறிவாளர் என்பதனால், பதறிப் பழைமையாளர் நம் மீது பாய்கின்றனர், தூற்றுகின்றனர் என்பதைப் பார்க்கும்பொழுது, நம்மிலே துடிப்புள்ளவர்கள் மெத்தக் கோபப் படுகிறார்களல்லவா!

பிரம்மத் துவேஷி!

வேத நிந்தகன்!

நாஸ்திகன்!

நாக்கு அழுகி விடும்!

ரௌரவாதி நரகம் போவாய்!

கசடன்!

அசடன்!

அற்பாயுசு!

தம்பி! இவை தமிழகத்திலே, இப்பொழுது, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுத் துணிவை வரவழைத்துக் கொண்டு,

பட்டி தொட்டிகளிலே, குளத்துப் படிக்கட்டுகளிலே, காது கேளாதவன், கண் அவிந்தவன், கதியற்றவன், கிலி கொண்டவன் ஆகியவர்களுக்கு மட்டும் கேட்கும்படி, சொல்லப்படும் வார்த்தைகளாகி விட்டன.

ஆனால், அப்படிச் சாபம் பெற்றவர்களில், மதத்திலே அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, இராம நாமத்தைப் பூஜித்துக் கொண்டிருந்த, காந்தியாரும் ஒருவர் என்பதை அறியும்போது, வேதனையினூடே சிரிப்பல்லவா வருகிறது.

தட்சணை கொடுத்தார், ஒரு தம்படி!

இது, ஆயிரத்தெட்டு இழிமொழி வீசுவதைக் காட்டிலும், கொடுமையானதாக, கேவலமானதாகத்தானே தோன்றும் - பண்டாவுக்கு - பூஜாரிக்கு!

இகபரசுகம் இரண்டுக்கும் வழி அருளும் விசுவநாதர் ஆலயம்! காசி க்ஷேத்திரம்! அங்கு, பக்தருக்கும் பரமனுக்கும் இடையிலே, வேதாகமம் தந்த உரிமையின்படி நிற்கிறார், பண்டா! இந்தப் பொல்லாத காந்தியார், ஒரு தம்படியா, கொடுப்பது தட்சணை!

சபித்தார், பண்டா! நேரே நரகம்தான் போவாய் - என்று, என்ன செய்தார், காந்தியார்?

இதைக் கேட்டு நான் பரபரப்பு அடைந்துவிடவில்லை. மகராஜ்! என் விதி எப்படியானாலும் சரி, ஆனால், இப்படியெல்லாம் பேசுவது உங்களைப் போன்றதோர் வகுப்பினருக்குத் தகாது. விருப்பமிருந்தால், அந்தத் தம்படியை எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால், அதையும் நீங்கள் இழந்துவிடுவீர்கள் என்றேன்.

எப்படி, காந்தியாருடைய நெஞ்சழுத்தம் என்று கூற அல்ல, இதை எடுத்து காட்டுவது, காந்தியாருடைய சொல்லிலே தொக்கி நிற்கும், நகைச்சுவை இருக்கிறதே, அதைக் காட்ட இதைக் கூறினேன்.

தம்பி! கவனித்தாயா? கொடுத்தது தம்படி! பண்டாவுக்கு! ஆனால், பண்டாவைக் கூப்பிடுவதோ, மகராஜ்! - கவனித்தாயா?

திகைத்துப் போயிருக்க வேண்டும், காசிவாசி.

போய்த் தொலை. உன் தம்படி எனக்கு வேண்டாம் என்றார், தொடர்ந்து வசைமாரி பொழிந்தார்!

சரி! பண்டா, வசைமாரி பொழியட்டும் என்று கவலையற்றுக் காந்தியார், தம்வழி நடந்தாரா? அல்லது நின்று பண்டாவைப் பார்த்து, அளவுக்கு மீறிப் பேசாதே! அவதியைக் கூவி அழைக்காதே! என்று எச்சரித்தாரா? என்ன செய்தார்? அவரே, கூறக்கேள், தம்பி! சுவை காண்பாய்.

தரையில் கிடந்த தம்படியை எடுத்துக் கொண்டு நான் நடக்க ஆரம்பித்தேன்.

பிராமணர் ஒரு தம்படியை இழந்தார்.

எனக்கு ஒரு தம்படி மிச்சம் என்று என்னைப் பாராட்டிக் கொண்டேன்.

ஆனால் மகராஜ், அந்தத் தம்படியையும் விட்டுவிடக் கூடியவர் அல்ல.

என்னைத் திரும்பக் கூப்பிட்டார்.

அது சரி, அந்தத் தம்படியை இங்கே கொடுத்து விட்டுப் போ!

உன் தம்படியை வாங்கிக் கொள்ள நான் மறுத்து விட்டால், அது உனக்குக் கெடுதல் ஆகிவிடும் என்றார்.

நான் ஒன்றும் சொல்லாமல், அந்த தம்படியை அவரிடம் கொடுத்தேன்.

அப்புறம் ஒருமுறை பெருமூச்சுவிட்டுக் கொண்டு அப்பால் போய்விட்டேன்.

தம்பி! இதைக் கருணாநிதி கதை வடிவாக்கினால், நமது வைதீக நண்பர்கள் சீறி விழுவார்கள். கதையாம் கதை! இப்படியா ஒரு சம்பவம் நடக்கும்! அற்பத்தனத்தை அச்சாணியாக வைத்து ஒரு அபத்தக் கதை எழுதி விடுவதா! இதுதான், தமிழ் வளர்க்கும் வழியா? இதுதான் கலையா? தூ! தூ! சே! சே! என்றெல்லாம் ஏசுவர்.

ஆனால், இது, காந்தியாரின் சுயசரிதையில் இருக்கிறது.

கொடுத்தது தம்படி! கிடைத்தது சாபம்! அந்தத் தம்படியும் இல்லை என்ற நிலை! உடனே, அதையாவது கொடு என்று பவதி பிக்ஷாந்தேஹி நிலை!!

ஒவ்வொரு மாலையும், காந்தியார் இராமநாமப் பஜனை மட்டும் செய்யாதிருப்பாரானால், இந்த ஒரு செயலுக்காக மட்டுமே, அவரை, ஈரோடு ஆக்கிவிட்டிருப்பார்கள் வைதிகர்கள்.

உடன்பிறப்பே, காந்தியடிகளின் வரலாற்று ஏட்டில் அண்ணா வடித்தெடுத்துத் தந்த பகுத்தறிவுக்கு வேலை தரும் பகுதிகளைப் படிக்கப் படிக்க என்ன தோன்றுகிறது!

இந்தக் கடிதத்தை நீயும், நானும் படிப்பது மட்டுமல்ல! இந்தா! பிடி சாபம்! என பயமுறுத்துகிறவர்கள் இன்னமும் சில பேர் இருக்கிறார்களே! அவர்களும் - அந்தச் சிலரைச் சிலாக்கியர்கள், சீலர்கள் என்று செப்பியவாறு நம்மீது சின மொழி கொட்டுகிறார்களே! அவர்களும் படித்துப் பார்ப்பது நல்லதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(10-04-1983)

1108. கழகச் சொற்பொழிவாளர்களுக்கு!

உடன்பிறப்பே,

அவதூறு! ஆபாசம்! நரகல் நடை!

இதுவே மேடை இலக்கணம் எனக் கருதிக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தையும் - கழகத் தலைவர்களையும் - கழக முன்னோடிகளையும் வசைபாடுவதைச் சில பேச்சாளர்கள், இன்று நேற்றல்ல - நீண்ட பல ஆண்டுக் காலமாகவே கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். அந்தக் கால கட்டத்தைப் புன்னகையோடு தாங்கிக் கொண்ட அண்ணா அவர்கள், வாழ்க வசவாளர்கள் என்று தான் சொன்னாரே தவிர, அத்தகையோரை எதிர்த்து அவர்தம் பாணியிலே லாவணி பாடுமாறு கழகத்தினர் யாரையும் தூண்டவுமில்லை! அவ்வாறு பேசிடும் கழகத்தினர் யாராவது ஓரிருவர் இருப்பின், அவர்களைக் கண்டிக்கத் தவறியதுமில்லை!

மாற்றுக் கட்சி மேடைகள் ஒன்றிரண்டில் - குறிப்பாக ஆளுங்கட்சியான அ.தி.மு.க. மேடைகளில் பெரும்பாலும் நாராச மொழிகள் பொழியப்படுகின்றன என்ற உண்மை நாடறிந்ததாகும். அதற்கு அரசுப் பொறுப்பிலே இருக்கிற ஓரிரு அமைச்சர்களும் விதிவிலக்கல்ல!

அது கண்டு கழகத்தினருக்கு உள்ளக் குமுறல் எழுவது இயற்கையே தான்! அதற்காக நாமும் போட்டிக் கூட்டம் அமைத்து அவர்களது பாணியிலேயே வெறுக்கத் தக்க சொற்களை மக்கள் மன்றத்தில் கொட்டுவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

நாட்டு நிலையை உணர்த்திட - கழகக் கொள்கைகளை விளக்கிட - அரசின் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை உடைசல்கள், ஊழல்கள் ஆகியவற்றை மறுக்கமுடியாத ஆதாரங்களுடன் விவரித்திட - அன்றாடப் பிரச்சினைகள் முதற்கொண்டு - மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய நமது

லட்சியங்கள் வரையிலே எடுத்துக் கூறிட - மேடைகளைக் கொள்கை விளக்கச் சாதனங்களாக நமது கழகச் சொற்பொழிவாளர்கள் பயன்படுத்திட வேண்டுமேயல்லாமல், ஆதாரமற்ற அவதூறுகளைக் கூறவோ - ஆபாச அர்ச்சனைகளைச் செய்யவோ - உகந்த இடம் அதுவென எண்ணி, கண்ணியம் காக்கும் பொறுப்பிலிருந்து கடுகளவும் விலகிவிடக் கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாக - திட்டவட்டமாக - கண்டிப்பாக - இன்னும் சொல்லப் போனால் எச்சரிக்கை செய்து கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

நீ இப்படிச் சொல்கிறாய்! ஆனால் ஆளும்கட்சியினர் அவிழ்த்துவிடும் பொய் மூட்டைகள் கொஞ்சமா? ஆபாசக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றனவே அவர்தம் மேடைகள்! அதனை நாங்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமா?

என்று என்னைப் பார்த்து கழகத்தின் சில சொற் பொழிவாளர்களும், செயல் வீரர்களும் கேட்டிடக் கூடும்!

ஆளும் கட்சி - எதிர்க்கட்சி இரண்டிலுமே இந்த முறை கூடாது என்பதே என் கருத்து! எங்களுக்கு நீ யார் அறிவுரை கூற? என்று ஆளுங்கட்சியினர் பாய்ந்திடலாம் - அல்லது அங்குள்ள சிலர், சிந்தித்தும் பார்த்திடலாம் - எதற்கும் முதலில் நாமே வழிகாட்டுபவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், நமது கழகத்தினர், மறந்துங்கூட நரகல் நடையினை அணுகிட வேண்டாமெனத் தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவித்துக் கொள்கிறேன்.

எனக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும் நடு நிலையில் உள்ளோர் மட்டுமல்ல, நமது கழக ஆதரவாளர்கள் மட்டுமல்ல, நமது கழக நிர்வாகப் பொறுப்பிலே இருப்போர் பலருங்கூட, நமது மேடைகளில் அத்தகைய பேச்சுக்களை உடனடியாகத் தடுத்த நிறுத்த வேண்டுமென எழுதியிருக்கிறார்கள்!

ஒரு சொற்பொழிவாளருடைய பேச்சில் கண்டனக் கணைகள் கிளம்பலாம்! காராசாரமாகக் கூட வீர உரை ஆற்றலாம்! கேலி, கிண்டல், நகைச்சுவை, இப்படிப் பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களின் திறமையினைக் காட்டலாம்! ஆனால், அத்தனையும் அரசியல் நாகரிகம் - பண்பாடு - கண்ணியம் - எனும் எல்லையைத் தாண்டாமலே பார்த்துக்கொள்ள வேண்டும்!

மக்களுக்கு விளக்கங்களை அளித்து - ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராகவும், பலவகையிலும் அடிமைப்படுத்தி மேலும் மேலும் அறியாமையில் அவர்களை அழுத்திட முனையும் தீய சக்திகளை அடையாளம் காட்டி, அவற்றுக்கு எதிராகவும் - ஒருமுனைப்படுத்த ஒரு கழகச் சொற்பொழிவாளர், மேடையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல் - ஒரு பெருங் கூட்டத்தில் யாரோ சிலருடைய கைதட்டலைப் பெறுவதற்காக நினைத்ததை யெல்லாம் பேசுவது என்பதும், துர்நாற்றச் சொற்களை இடையிடையே நாவினால் தீண்டுவதும் அந்த நேரத்துக்கு உற்சாகமாக இருக்கலாம்! ஆனால் அது நீண்ட காலத்துக்குத் தேவையான நிலையான பயனைத் தராது!

உடன்பிறப்பே, உனக்கு எழுதியுள்ள இந்த மடலை, நமது கழகச் சொற்பொழிவாளர்கள், தங்களுக்கு எழுதிய கடிதமாக எடுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வேண்டுகோளையும் மீறி எங்காவது யாரோ ஒரு கழகச் சொற்பொழிவாளர், நடந்து கொள்வாரேயானால் - அது குறித்து உடனடியாக, அந்தப் பகுதியின் கழக அமைப்பு நிர்வாகிகள் தலைமைக் கழகத்திற்குத் தெரிவித்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்!

வீர உரை, மறுக்கப்படவில்லை! விரச உரைகள்தான் மறுக்கப்படுகின்றன!

உருக்க உரை வேண்டாமென உரைத்திடவில்லை! உணர்ச்சி உரையைத் தடுத்திடும் நோக்கமில்லை!

அரசியல் விளக்க உரை - ஆணித்தரமான கண்டன உரை - அட்டியில்லை, ஏற்பதற்கு!

ஆபாச உரைதான் அணுவளவும் தேவையில்லை - கூடாது! கூடவே கூடாது என்கிறேன்!

இந்த வேண்டுகோள் இன்றே ஏற்றிட வேண்டுகிறேன்! இதனைத் தலைமைக் கழகத்தின் ஆணையெனக் கொண்டிடுக!

அன்புள்ள,

மு. க.

(13-04-1983)

1109. கிருஷ்ணா! கிருஷ்ணா!

உடன்பிறப்பே,

கிருஷ்ணா நதி ஒப்பந்தம் என்ற பெயரால் மிக நீண்டதோர் அரசியல் அறிக்கையை, முதலமைச்சர் படிப்பதற்குப் பதிலாக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள், சட்டமன்றத்திலே கடந்த 24-4-83 அன்று படித்தார். இது ஒரு ஒப்பந்தம் பற்றிய அறிக்கையாக இல்லாமல், அரசியல் அறிக்கையாக இருக்கிறதே என்றும், கிருஷ்ணா தண்ணீர் ஒப்பந்தம் பற்றிய விளக்க அறிக்கையாக இல்லாமல், வீராணம் திட்டம் பற்றிய விமர்சனமே மிகையாகக் காணப்படுகிறதே என்றும் குற்றச்சாட்டுகளைக் கூறி, விவாதத்தை எழுப்பக் கூடிய நிலையில் ஒரு அறிக்கை வைப்பது மரபுதானா என்றும் நான் சில கருத்துகளைக் குறுக்கிட்டுத் தெரிவித்தபோது, நாவலர் அவர்கள், முதலமைச்சர் எழுதிய அறிக்கையைத்தான் நான் படிக்கிறேன் என்று கூறி, அதற்கு மேலே படித்து முடித்து விட்டார்!

19-4-83-இல் ஒப்பந்தம் கையெழுத்தாகியது! அன்றைக்கே சென்னை திரும்பிய முதலமைச்சர், ஒப்பந்த விபரங்களை அன்றைக்கே அவையில் அறிவிக்க இயலாவிட்டாலும், மறுநாள் 20-4-83-இல் அறிவித்திருக்கலாம்! அல்லது நாவலரைப் போன்ற யாராவது ஒரு அமைச்சரை விட்டுப் படிக்கச் சொல்லியிருக்கலாம்! தவறினால் 21-4-83 அல்லது 22-4-83 அல்லது 23-4-83 தேதிகளில் அவையில் படித்திருக்கலாம்! இதை எதையும் செய்யாமல், ஏழு நாட்கள் கழித்து, 26-4-83 அன்று பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதையைப் போன்ற ஒரு அறிக்கையை நிதியமைச்சரிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லிவிட்டு, கூட்டத் தொடரின் இறுதி நாளான 27-4-83 அன்று அந்த அறிக்கையின் பிரதிகளைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகைகளுக்கும் வழங்கியிருக்கிறார்கள்!

இதற்கு என்ன காரணமாக இருக்க முடியும்? இறுதியாக் கப்பட்டு கையெழுத்திடப்பட்ட ஒரு ஒப்பந்த ஷரத்துக்களை வெளியிடுவதற்கு ஏழு நாட்கள் காலம் தாழ்த்துவானேன்? மூடி மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

அறிக்கை படிக்கப்பட்ட பிறகுதான் அதன் ரகசியமே புரிகிறது! முன்கூட்டியே அவையில் அறிக்கையை வைத்து விட்டால் எதிர்க்கட்சிகள், அறிக்கையின் மீது விவாதம் செய்வதற்கு ஒருநாள் ஒதுக்க வேண்டுமென்று கேட்பார்கள் - அப்படி ஒதுக்கினால் காமராசர் காலத்திலும், அண்ணா காலத்திலும், கருணாநிதி ஆட்சியிலும் கிருஷ்ணா நீர் குறித்து அக்கறை காட்டப்படவில்லையென்று அறிக்கையிலே மறைமுகமாக சுட்டிக் காட்டப் பட்டிருப்பதை எதிர்தரப்பிலே உள்ளவர்கள் ஆதாரங்களுடன் மறுப்பார்கள்! வீராணம் திட்டம் கவைக்குதவாத திட்டம் என்று அறிக்கையில் கூறியிருப்பதை எடுத்துக் காட்டி, அப்படியானால், அந்த வீராணம் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியவரே முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள்தானே என்று கழகத்தினர் கேள்விக்கணை தொடுப்பார்கள் என்றெல்லாம் பயந்துவிட்ட காரணத்தால், சட்டசபைக் கூட்டத் தொடரின் இறுதிக் கட்டத்தில் அவசர அவசரமாக அறிக்கையைப் படித்து விட்டு நழுவி விட்டார்கள் என்று மட்டுமே முதலில் நான் நினைத்தேன்.

கிருஷ்ணா நீரைச் சென்னைக்குக் கொண்டு வருவதிலே எல்லோரையும் போல, எனக்கும், உனக்கும் மகிழ்ச்சிதான்! அதனால்தான் 17-4-83 அன்று கூட கழகச் சார்பில் அவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து அந்த ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு அரசு முனைப்பாகச் செயல்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தித் தெரிவித்தேன். ஒப்பந்த ஷரத்துகள் எப்படியிருக்கும் அல்லது எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்துக் கூட முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., சட்டமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூடக் கலந்து பேசவில்லை. இருந்தபோதிலும், கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வரப்போகிறது என்ற மேலெழுந்த வாரியான ஒரு மகிழ்ச்சியில் அந்த ஒப்பந்தம் முடிவுற வேண்டும் என்ற எண்ணத்தை எல்லாக்கட்சித் தலைவர்களுமே வெளியிட்டார்கள்! ஏடுகள் கூட பாராட்டி எழுதின!

ஆனால், ஒப்பந்தம் குறித்து முதலமைச்சரின் பெயரால் படிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியை ஆழ்ந்து ஆராய்ந்த பிறகுதான், இந்த ஒப்பந்தத்தால் அதிகச் செலவு தமிழ் நாட்டுக்கு என்பதும், அதிக ஆதாயம் ஆந்திராவுக்கு என்பதும் தெளிவாகிறது! நம்மைத் திகைப்பிலே ஆழ்த்துகிறது!

ஸ்ரீசைலத்திலிருந்து சென்னை வரையிலே கால்வாய்! இதற்கு ஆகும் மொத்தச் செலவு இப்போது கணக்கிட்டிருப்பது 736 கோடி ரூபாய்! இதில் 436 கோடி ரூபாய் தமிழ் நாட்டின் பங்காகச் செலவழிக்கப்பட வேண்டும். 300 கோடி ரூபாய் ஆந்திரத்தின் பங்காகச் செலவழிக்கப்படும்!

436 கோடி ரூபாய் செலவில் சென்னைக்குத் தண்ணீர்!

300 கோடி ரூபாய் செலவில் ஆந்திராவில் ஆறு லட்சம் ஏக்கரா பயிருக்குப் பாசன வசதி!

436 கோடி ரூபாய் செலவு செய்யும் தமிழ் நாட்டுக்கு ஆண்டொன்றுக்கு 15 டி.எம்.சி. தண்ணீர்! (1500 கோடி கனஅடி தண்ணீர்)

300 கோடி ரூபாய் செலவில் ஆந்திராவுக்கு (ஆறு லட்சம் ஏக்கரா நிலம் சாகுபடிக்கு) 100 டி.எம்.சி. தண்ணீர்! (பத்தாயிரம் கோடி கனஅடி தண்ணீர்)

தமிழ்நாட்டுக்கு (சென்னை நகருக்கு) பதினைந்து டி.எம்.சி. தண்ணீர்!

ஆந்திராவுக்கு நூறு டி.எம்.சி. தண்ணீர்!

அதிலும் ஆந்திராவில் ஒரு போக சாகுபடியென்றால் 100 டி.எம்.சி. தண்ணீர்! இரு போக சாகுபடியென்றால் நூறு முதல் இருநூறு டி.எம்.சி. தண்ணீர் வரையில் தேவைப்படக் கூடும்! அந்தத் தேவையும் நிறைவு செய்யப்படக்கூடும்!

சென்னை நகருக்காகத் தண்ணீர் கொண்டு வரத் தனிக்கால்வாய் வெட்டப்படும் என்று திருப்பித் திருப்பிச் சொல்லப்பட்டாலும், அந்தக் கால்வாய்கள் ஆந்திர எல்லையைக் கடக்கும் வரையில், ஆந்திர மாநிலத்தில் ஆறு லட்சம் ஏக்கராவுக்கான பாசனத்திற்கு நூறு டி.எம்.சி. தண்ணீர் பயன்படுத்தப்படும் என்பதை மறந்து விடக்கூடாது.

சோமசீலா நீர்த்தேக்கத்திற்குக் கீழே கண்டலேரு நீர்த்தேக்கம் அமைக்கப்படுமாம்! அதன் கொள் அளவு 54 டி.எம்.சி. தண்ணீராம்! இந்த நீர்த்தேக்கம் ஆந்திர மாநிலப் பாசனத்திற்கு மட்டுமல்லாது, சென்னை நகரக் குடிநீர் திட்டத்திற்கும் நீரைச் சேமித்து வைக்கப் பயன்படுமாம்!

இப்படி நமது முதலமைச்சரின் அறிக்கை கூறுகிறது! கண்டலேரு நீர்த்தேக்கத்தின் கொள் அளவு 54 டி.எம்.சி.யில் சென்னைக் குடிநீருக்கு 15 டி.எம்.சி. போக, மீதம் 39 டி.எம்.சி. ஆந்திர மாநிலப் பாசனத்திற்கு என்பது திட்டவட்டமாகப் புரிகிறதல்லவா?

ஆகவே, கண்டலேரு நீர்த்தேக்கத்திற்குக் கீழேயுள்ள பகுதியின் பாசனத்திற்கு 39 டி.எம்.சி.யும், மேலேயுள்ள பகுதிகளின் பாசனத்திற்கு சுமார் 60 டி.எம்.சி.யும் தண்ணீரைப் பெற்று ஆந்திரம், ஆறு லட்சம் ஏக்கர் புதிய பாசனத்தை உருவாக்கிக் கொள்கிறது!

திறந்த வாய்க்கால் வழியாகத் தண்ணீர் வருவதால் இடையிலேயுள்ள விவசாயிகள் விட்டது போகத்தான் மிச்சம் மீதி சென்னை நகருக்கு வந்து சேரமுடியும்.

ஆந்திர மாநிலம், ஆறு லட்சம் ஏக்கரா பாசன வசதி பெறுவதிலோ, அதற்காக நூறு டி.எம்.சி தண்ணீரைப் பயன்படுத்து வதிலோ நமக்கு மறுப்பு இல்லை! வறண்ட பிரதேசங்கள் வளமாகட்டும் - வாழ்த்துகிறோம்!

ஆனால், நூறு டி.எம்.சி. எடுத்துக் கொள்கிற ஆந்திரா, முந்நூறு கோடி ரூபாயும், பதினைந்து டி.எம்.சி. தண்ணீர் பெறுகிற (அதிலும் ஆண்டில் எட்டு மாதங்கள் - முக்கியமான மாதங்களான நவம்பர், டிசம்பர், மே, ஜூன் நீங்கலாக) தமிழ்நாடு நானூற்று முப்பத்தாறு கோடி ரூபாயும் செலவழிப்பது என ஒத்துக்கொண்டு, அந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாட்டின் சார்பில் எம்.ஜி.ஆர். கையெழுத்திட்டிருப்பது வேதனையான ஒன்றாக இல்லையா?

ஆந்திர எல்லையிலிருந்து - அதாவது தமிழ்நாடு எல்லை தொடங்கும் இடத்திலிருந்து சென்னை வரையில் தண்ணீர் கொண்டு வந்திட எல்லா வகையான செலவுகளுக்கும் 236 கோடி ரூபாய் எனக் கணக்கிட்டு அதனைத் தமிழ்நாடு அரசு செலவழிப்பதாகக் கூறியிருக்கிறது! இது தமிழ்நாட்டு எல்லைக்குள் 50 கி.மீ. நீளமுள்ள கால்வாயை அமைத்திடவும், பூண்டி, புழலேரி,

செம்பரம்பாக்கம் ஆகியவற்றின் நீர் மட்டத்தை இரண்டு அடி உயர்த்தவும், சென்னை நகருக்குள் குழாய்கள் அமைக்கவும் என செலவிடப்பட இருக்கிறது என முதல்வரின் அறிக்கை கூறுகிறது!

அதே அறிக்கை ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலத்திலிருந்து தமிழக எல்லையை தொடும் வரையில் ஆந்திரப் பாசனத்திற்கும், சென்னை குடிநீருக்கும் தண்ணீர் கொண்டு வர 354 கி.மீ. நீளத்திற்கு வாய்க்கால் வெட்டப்படும் என்று குறிப்பிடுகிறது.

அந்த 354 கி.மீ. நீளமுள்ள வாய்க்காலுக்கும், சோமசீலா நீர்த் தேக்கத்தின் விரிவாக்கத்திற்கும், புதிதாகக் கட்டப்படும் கண்டலேரு நீர்த் தேக்கத்திற்கும் மொத்தச் செலவு எவ்வளவு எனக் குறிப்பிடப்படாவிட்டாலும், முன்னர் வந்துள்ள செய்திகளின்படி, இதற்கு மட்டும் ஐநூறு கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் இருநூறு கோடியைத் தமிழ்நாடு ஒப்புக்கொண்டாக வேண்டுமாம்.

மேலும் அதிகச் செலவானால், மொத்தச் செலவில் தமிழ்நாடு அதற்கேற்ப கூடுதல் பங்கையும் செலுத்த வேண்டுமாம்!

இன்று எழுநூறு அல்லது எண்ணூறு கோடி ரூபாயில் தொடங்கப்படும் திட்டம் - மறு மதிப்பீட்டில் இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்கும் செல்லக்கூடும்! எதிர்பாராத காலதாமதம் - சிமிண்ட், இரும்பு போன்ற பொருள்களின் விலை உயர்வு - இப்படிப் பல காரணங்கள் தவிர்க்க முடியாதவை!

மதிப்பீட்டுத் தொகை எந்த அளவுக்கு உயர்ந்தாலும், அதில் தமிழ்நாடு, அதற்கேற்ப தனது விகிதாச்சார நிதியை தந்தாக வேண்டும்!

நூறு டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்தி ஆந்திர மாநிலம் ஆறு லட்சம் ஏக்கரில் பாசன வசதி பெறுகிறது!

இப்போதைய ஒப்பந்தப்படி, அதற்கான செலவு ஆந்திராவுக்கு மட்டும் முந்நூறு கோடி ரூபாய்!

பதினைந்து டி.எம்.சி தண்ணீரை சென்னை நகரக் குடிநீருக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்!

இப்போதைய ஒப்பந்தப்படி, அதற்கான செலவு தமிழகத்திற்கு மட்டும் நானூற்று முப்பத்தாறு கோடி ரூபாய்!

இந்த விவரங்களையெல்லாம் விவாதம் என்று வந்தால் கேட்பார்கள் என்றுதான் முதலமைச்சரின் அறிக்கையை சட்டமன்றக் கூட்டத் தொடர் முடியும் நேரமாகப் பார்த்து வைத்து விட்டு எளிதாக நழுவிக் கொண்டார்கள் போலும்!

காமராசர், அண்ணா, கருணாநிதி இவர்களின் ஆட்சிக் காலத்தில், இந்தத் திட்டத்திற்கான அக்கறை வேகமாகக் காட்டப்படவில்லையென்பது போலவும், வீராணம் சாத்தியமில்லாத திட்டமென்றும் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் அறிக்கை அமைந்திருக்கிறதல்லவா! இதோ 31-10-67-இல் சென்னையில் நடைபெற்ற வீராணம் திட்டத்து அடிக்கல் நாட்டுவிழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், ஆற்றிய உரையின் சில பகுதிகள்:-

சென்னை நகரில் எட்டு லட்சம் மக்கள் வாழ்ந்த காலத்தில் அமைந்த குடிநீர் திட்டமே இப்போது உள்ளது! இப்பொழுது இருபத்திரண்டு லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். முன்பு போட்ட திட்டம் இப்போது போதுமானதாக இல்லை. ஆறுகள் பலவற்றிலிருந்து நீர் பெறுவதற்கு ஆய்வாளர்கள் ஆய்வு நடத்தினர். கிருஷ்ணா, பெண்ணாறு திட்டம் ஆராயப்பட்டது. அதிலிருந்த சிக்கல் காரணமாக அது இன்னும் நிறைவேற இயலவில்லை. காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வர ஜோடர்பாளையம் திட்டம் ஆராயப்பட்டது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதென்றால் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான நான்காயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களையும், மூவாயிரம் ஏக்கர் புஞ்சை நிலங்களையும் பெரும் செலவில் விலைக்கு வாங்க வேண்டியிருந்திருக்கும். அப்படியே வாங்குவதென்றாலும், பத்தாயிரம் கொடு, பதினைந்தாயிரம் கொடு என சிலர் கேட்கக் கூடும். சிலர் கோர்ட்டுக்குப் போய் தாமதத்தை உண்டாக்குவார்கள். வீராணத்திலிருந்து காவிரி நீரைக் கொண்டு வரும் திட்டத்தை என்னிடமும், அமைச்சர்களிடமும் நாங்கள் எல்லாம் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துக் கூறியவர் முன்னாள் மேயர் நண்பர் முனுசாமி ஆவார்கள். காமராசர் முதலமைச்சராக இருந்தபோது அவரிடமும் முனுசாமி இதை எடுத்துக்கூறி, காமராசரும் இந்தத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார். எல்லோராலும் ஒருமித்த கருத்தோடு ஆதரிக்கப்படும் திட்டமாக வீராணம் திட்டம் உள்ளது. வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு

தண்ணீர் கொண்டு வருவதால் விவசாயத்திற்கு பாதகம் ஏற்படுமோ என்று அப்பகுதியின் முக்கிய நிலச்சுவான்தார்களான வாகீசம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை போன்றவர்கள் என்னிடம் விவாதித்தபோது, பொதுப்பணித்துறை செயலாளர் திருமலை, அந்த விவசாயிகளுக்கு நல்ல விளக்கமளித்து ஐயப்பாடுகளைப் போக்கினார். மேட்டூரில் இருந்து வருகிற நீரைத் தாங்குகிற ஒரு பாத்திரமே வீராணம் ஏரி - எவ்வளவு தேவையோ அந்தப் பாத்திரத்திற்குள் விட்டு அதை எடுத்துக் கொள்வோம். அந்த ஏரியில் தண்ணீரின் அளவு குறையாமல் இருக்க, பொறியாளர்கள் தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்வார்கள். இந்தத் திட்டத்தின் சிறப்பு, இதன் சிக்கனமாகும். நில ஆர்ஜிதம் போன்ற சிக்கல்கள் எல்லாம் இந்த வீராணம் திட்டத்தில் இல்லை.

அந்த நிகழ்ச்சியில் தலைமை வகித்த நான் ஆற்றிய உரையையும் - உடன்பிறப்பே, படித்துப் பார்!

நம்முடைய நிதி நிலைக்கும், தற்போதைய கூடுதல் தேவைக்கும், உடனடியாகச் செயல்படக் கூடிய முறைக்கும் ஏற்றதொரு திட்டமே இந்த வீராணம் திட்டம். இப்போது வழங்கப்படும் 350 இலட்சம் காலன் தண்ணீர், இந்தத் திட்டத்தால் இரண்டு மடங்காகப் பெருகும். எதிர் நோக்கியுள்ள ஒரு சில ஆண்டுகளுக்கு இத்திட்டத்தால் பயன் அளிக்க முடியும். அதற்கும் மேற்பட்ட தேவைகளை ஈடுசெய்ய கிருஷ்ணா, கோதாவரி முதலிய ஆறுகளை நோக்கித்தான் நாம் சென்றிட வேண்டும்.

உடன்பிறப்பே, இந்த வீராணம் திட்டத்தைக் குறை கூறிடும் எம்.ஜி.ஆரின் அறிக்கையை இப்போது அவையில் படித்த நிதியமைச்சர் நாவலர் அவர்கள், 1967-இல் அண்ணாவும், நாங்களும் வீற்றிருந்த அதே மேடையில் - வீராணம் அடிக்கல்நாட்டு விழாவில் என்ன பேசியிருக்கிறார் தெரியுமா?

மக்கள் நலம் பெறவும், வாழ்வு பெறவும், வசதி பெறவும், இந்த வீராணம் திட்டம் துணை செய்வதாக இருக்கும் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பொசியுமாம் என்பதைப் போல, சென்னை மாநகர மக்களின் தாகம் தீர்க்க வரும் வீராணம் தண்ணீர், இங்குள்ள தொழில்களுக்கும் கிடைக்கும். தொழிலுக்கும் அமைச்சர் என்ற முறையில் நன்றி தெரிவிக்கிறேன்.

அந்த வீராணம் திட்டத்தினால் எந்தப் பயனுமில்லை, அது சாத்தியமுமில்லையென்று குறிப்பிடும் இன்றைய முதலமைச்சரின் அறிக்கையைப் படித்து விட்டு, அண்ணா நாமம் வாழ்க! என்று கூறிவிட்டு நாவலர் அமர்ந்தபோது, எனக்கு, 1967-ஆம் ஆண்டு வீராணம் திட்டத்தை அண்ணா துவக்கி வைத்த நிகழ்ச்சிதான் நினைவுக்கு வந்தது!

கிருஷ்ணா நீரைச் சென்னைக்குப் பெறுவதில், நமக்கு மகிழ்ச்சி! மகிழ்ச்சி! மகிழ்ச்சி!

அதற்காக அப்பாவித்தனமாக நடந்து கொண்டு ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டு - அரிசி கொண்டு வா! நான் உமி கொண்டு வருகிறேன்! இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து ஊதி ஊதித் தின்போம் என்று அழைத்த ஆந்திர முதல்வரிடம், ஏமாந்துவிட்ட எம்.ஜி.ஆரின் நடவடிக்கையை எவ்வாறு ஏற்றுக் கொள்ள இயலும்?

தி.மு.கழக ஆட்சிக் காலத்திலிருந்தே சென்னைக்குக் குடிநீர் வழங்க அக்கறையோடு முயற்சிகள் எடுக்கப்பட்டு, வீராணம்-கிருஷ்ணா நீர் ஆகியவற்றைச் சென்னைக்குக் கொண்டு வர செயல்பட்ட நிகழ்ச்சிகளை முதலமைச்சர், தனது அறிக்கையில் எள்ளி நகையாடியிருப்பதற்கும், தேவையற்ற வீண் பழிகளைச் சுமத்தியிருப்பதற்கும் விளக்கமான பதிலைப் பிறகு எழுதுகிறேன்!

அன்புள்ள,

மு. க.

(30-04-1983)

1110. வேண்டாம் வீண் மிரட்டல்!

உடன்பிறப்பே,

சத்துணவு போடுகிறோம் - சமூகநலத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம் - தன்னிறைவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறோம் - இப்படியெல்லாம் நல்வாழ்வுத் திட்டங்களை வழங்குவதற்கு நிதி வேண்டாமா? வருவாய் தேடிட வழிவகுக்க வேண்டாமா? அதற்காகத்தான் நுழைவு வரியை விதிக்கிறோம் என்று எம்.ஜி.ஆர். அரசின் அமைச்சர்கள், மே தினவிழாக் கூட்டங்களில் விளக்க மழையைக் கொட்டோகொட்டென்று கொட்டியிருக்கிறார்கள்.

சத்துணவு போட்டால் வரவேற்க வேண்டியதுதான்! அந்தத் திட்டத்தின் தொடக்க விழாவன்று சிறார்களுக்குக் காட்டப்பட்ட காய்கறியும், பழ வகைகளும், கீரைகளும், பாயசத் தொன்னைகளும் இப்போது எங்கே போய் ஒளிந்து கொண்டன என்றே தெரியவில்லை! சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிகிற வரையில், 134 கோடி ரூபாய் என்று கூறியவர்கள் இப்போது 154 கோடி ரூபாய் சத்துணவுக்குச் செலவாகும் என்கிறார்கள்! இஃதன்னியில், நுகர்பொருள் விநியோகக் கழகத்துக்குச் (சிவில் சப்ளை கார்ப்பரேஷன்) சத்துணவு என்பதை முன்னிட்டு இழப்பீட்டுத் தொகை ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஐம்பது கோடி ஆகிறது! ஆக மொத்தம் இருநூறு கோடி ரூபாய்க்கு மேல் சத்தற்ற மதிய உணவுக்காக செலவழிப்பதாகக் கூறி - பாதி கொள்ளை!

தன்னிறைவுத் திட்டமோ, ஆளும்கட்சியின் அமைப்பாளர்கள் முதல் அமைச்சர்கள் வரையில், கணிசமாகப் பங்கு போட்டுக் கொள்ளப் பயன்படுகிறது!

கரடிப்புத்தூர் தோட்டம் துரவு தோப்புகள் என்கிறார்கள்! பினாமி தியேட்டர்கள் என்கிறார்கள்! மந்திரிகள் பணத்தில் மாதம் ஒரு திரைப்படத்திற்குத் தொடக்க விழாப் பூஜை

நடத்துகிறார்கள்! அரண்மனைப் போல வீடுகள் கட்டுகிறார்கள்! அண்டை மாநிலங்களில் தொழில் முதலீடு செய்கிறார்கள்! சம்பல் பள்ளத்தாக்கில் ஆயுதங்களைக் காட்டிக் கொள்ளை! இங்கோ அதிகாரத்தை வைத்துக்கொண்டு கொள்ளையோ கொள்ளை!

அரசுக்கு வருமானமில்லையாம்! அதனால் நுழைவு வரி போடுகிறார்களாம்! ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாய் வருவாய் என்று வரவு செலவுத் திட்டம் அறிவிக்கிறது! 1975-இல் ஐநூறு கோடி ரூபாயாக இருந்த மாநில அரசின் வருவாய், மூன்று நான்கு மடங்கு இப்போது பெருகியிருக்கிறது! விற்பனை வரியிலேயே ஐநூறு அல்லது அறுநூறு கோடி ரூபாய் அளவுக்கு வருகிறது! மதுவிலக்கை அறவே ரத்து செய்து விட்ட காரணத்தால், ஆண்டுக்கு 150 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் கிட்டுகிறது! தாயின் மேல் ஆணையாக மதுக் கடைகளைத் திறக்க மாட்டேன் எனச் சத்தியம் செய்தவர் பதினைந்தாயிரம் மதுக் கடைகளைத் திறந்துவிட்டு, அவற்றுக்குக் கிளைக் கடைகளையும் விருப்பம் போல் திறந்து கொள்ள உரிமை கொடுத்து அந்த வருமானம் வேறு வந்து கொண்டிருக்கிறது!

இந்த நிலையில், நல்ல திட்டங்களை நிறைவேற்றப் பணம் வேண்டுமாம்! அதற்காகத்தான் நுழைவு வரித் திட்டம் இவர்களின் மூளையில் நுழைந்ததாம்!

பேரம் பேசப்படுகிறது நுழைவு வரியை நீக்க என்று ஒரு பத்திரிகை எழுதி விட்டதாம்! அதனால்தான் நுழைவு வரியை நீக்கவில்லையாம்! இப்படியொரு விளக்கம்! வெட்கங்கெட்ட விளக்கம்!

ஆண்டு ஒன்றுக்கு மூன்று கோடி ரூபாய் வீதம் பனிரெண்டு ஆண்டுகளுக்கு முப்பத்தி ஆறு கோடி ரூபாய் வரியை அறவே வஜா, செய்து ஸ்டீல் ரீ ரோலிங் மில் அதிபர்களுக்குச் சலுகை செய்து, அதற்குக் கைமாறாக, இரண்டு கோடி ரூபாய் லஞ்சம் வாங்கிக் கொண்டார்களே; அதை ஊர் பேசவில்லையா? உலகம் பேசவில்லையா? ஏடுகள் எழுதவில்லையா? அதற்காகக் கூச்சப்பட்டு, தலைகுனிந்து உடனே அந்த மில்களுக்கான வரியை வசூலித்தே தீர வேண்டுமென ஆணையிட்டு விட்டார்களா? அந்த வரியை எதிர்த்துக் கோர்ட்டுக்குச் சென்றனர் ரீ ரோலிங் மில் அதிபர்கள்! தி.மு.கழக ஆட்சியில் சுப்ரீம் கோர்ட் வரை

சென்று அந்த வரியை வசூலிக்க அரசுக்கு உரிமையுண்டு என்று அரசுக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றோம்! அதற்குள் ஆட்சி கலைக்கப்பட்டு இவர்கள் ஆளவந்தனர்! ஆட்சிக்குச் சாதகமாக சுப்ரீம் தீர்ப்பு இருந்தபோதிலும் கூட, அதிபர்களுக்குச் சாதகமாக வரி விலக்கு செய்து பெரும் தொகையை லஞ்சமாக வாங்கிப் பூட்டிக் கொண்டனர்! அரசின் வருவாயிலே இழப்பு முப்பத்தி ஆறு கோடி ரூபாய்!

மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு, மாவட்டம் தோறும் (பிளண்டிங் பாட்லிங்) சாராயக் கலவைத் தொழிற்சாலைகள் பினாமிகள் பெயரால் கேரளத்து முதலாளிகளுக்கு வழங்கப்பட்டதிலும், மாவட்ட சாராய மொத்த விற்பனை, பினாமிகள் பெயரால் கர்நாடக முதலாளிகளுக்கு வழங்கப்பட்டதிலும், ஆரம்பக் கட்டத்துக் கறுப்பு பணம் மட்டுமல்ல, அனுதினமும் லட்சக்கணக்கில் அவர்கள் கப்பம் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அந்தத் தனியார் கொள்ளையை ஒழித்துவிட்டு அரசாங்கமே ஏற்று நடத்துங்கள் என்றால் தயங்குகிறார்கள்! தனியார் ஆண்டுதோறும் பெறும் ஆதாயம் ஐம்பது கோடியில் இருபது கோடி இவர்களுக்குப் பங்காகக் கிடைக்கும்போது, அரசுடைமை ஆலோசனையை ஏற்பார்களா?

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏன் அரசு ஏற்று நடத்தவில்லை என்று கேள்வி போடுகிறார்கள்! தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சாராயக் கலவைத் தொழிற்சாலைகளுக்கு மாவட்டம்தோறும் உரிமம் தரப்படவில்லை! மாவட்ட மொத்த விற்பனையோ, ஐ.எம்.எப்.எஸ். உரிமங்களோ இன்று தரப்படுவதுபோல் தரப்படவில்லை! பல ஆண்டுகளாக இருந்து வந்த டிஸ்டிலரி தொழிற்சாலைகளில் இருந்து சாராயம் பெறுவதற்கு வகை செய்யப்பட்டது! அதுமட்டுமல்ல, தி.மு.க. ஆட்சியில் மதுவிலக்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் ஒத்திவைக்கப்படுமென்றுதான் முதலிலேயே அறிவிக்கப்பட்டது! அதனால் டிஸ்டிலரிகளை அரசு நடத்த முன்வரவில்லை! இன்று மதுவிலக்கு அறவே ரத்து செய்யப்பட்டுள்ளது! சாராயம் அடைக்கும் பாட்டில்களுக்கு ஐம்பது காசு கூட விலை அடங்குவதில்லையென்கிற போது - இரண்டு ரூபாய் வரையில் அனுமதிக்கப்பட்டு அதிலேயே ஒரு பாட்டிலுக்கு ஒன்றரை ரூபாய் தனி முதலாளி கொள்ளையடிக்கிறான்! அதிலே பாதிப் பங்கு பரிபாலனத்தில் இருப்பவருக்கு! மாதம் 84 லட்சம்

லிட்டர் சாராயம்! அதனை 750 எம்.எல். என்ற விகிதத்தில் அடைத்திட ஒரு கோடியே பனிரெண்டு லட்சம் பாட்டில்கள்! பாட்டில்களில் மட்டும் மொத்த லாபம் மாதம் ஒன்றரைக்கோடி ரூபாய்! வருடத்துக்கு பதினெட்டு கோடி ரூபாய்! இதில் பாதி கறை படியாத (?) கரங்களுக்கு அன்றாடம் காணிக்கை!

இப்படியெல்லாம் அரசுக்கு வர வேண்டிய வருவாய் இனங்கள் - எங்கேயோ உடைப்புகள் ஏற்பட்டு, எந்த வயல்களிலோ பாய்ந்து - அரசின் சொந்த வயல்கள் காய்ந்து கிடக்கிற நிலைமையில் அரசின் வருமானத்தைப் பெருக்க நுழைவு வரி போடுகிறார்களாம்!

அனைத்துக் கட்சித் தலைவர்கள், நடுநிலையாளர்கள், கட்சி சார்பற்ற ஏடுகள், வணிகர் சங்கங்கள், பொதுமக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த மன்றங்கள் எதிர்ப்பு தெரிவித்தும்கூட - விளக்கங்கள் அளித்தும்கூட, அரசின் சார்பில் ஆணவமான பதிலே கிடைத்துள்ளது!

வணிகர்கள், கடையடைப்பு செய்தால் மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.

இந்த அச்சுறுத்தல் - குண்டர்களைத் தூண்டி விடுதல் - அரசின் சார்பில் வெளிப்படுகிறது என்றால், சட்டம், ஒழுங்கு, அமைதியைக் குலைத்திட அரசாங்கமே முன்வருகிறது என்றுதானே பொருள்!

எவ்வளவோ எடுத்துக்கூறியும் காதில் வாங்காமல் - அதிகார மமதையில் வணிகப் பெருமக்களின் குரலை அலட்சியப்படுத்திவிட்ட அரசின்பால் தங்களுக்குள்ள அதிருப்தியைக் காட்டவும் - அரசின் பிடிவாதம் தளரவும் - வேறு வழியின்றி அவர்கள் வரும் 6, 7, 8 ஆகிய நாட்களில் கடையடைப்பு வேலைநிறுத்தம் செய்கிறார்கள்!

இதில் கௌரவப் பிரச்சினை பார்க்காமல் அரசு, சிந்தித்துச் செயல்பட வேண்டுமேயல்லாமல் - வீண் மிரட்டல்கள் காட்டி வணிகர்களின் உணர்வினை விரட்டியடித்துவிட முடியாது!

அன்புள்ள,

மு. க.

(05-05-1983)

1111. கழகம், களத்தில் இறங்கும்!

உடன்பிறப்பே,

பெரும்பாலான கடைகள் திறந்து இருந்தன! கடை அடைப்பினால் பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லை.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் பொறுப்பில் உள்ள திரு. சொக்கலிங்கம் அவர்களின் அறிக்கை, கொட்டை எழுத்துகளில் சில ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அவரது அறிக்கையை வெளியிட்டுள்ள தினமணி, இந்து ஏடுகளில் மட்டுமல்ல, அந்த அறிக்கையை முதல் பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்ட தினத்தந்தி ஏட்டிலேகூட, பெரும்பாலான கடைகள் திறந்து இருந்தன என்ற சொக்கலிங்கம் அவர்களின் கூற்றை மறுப்பதுபோலத்தான் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. தலைமைச் செயலரையும் மிஞ்சுகிற பாணியில் சென்னை நகரக் காவல்துறை ஆணையர் திரு. ஸ்ரீபால் அவர்கள், தொண்ணூற்றி ஐந்து சதவீதம் கடைகள் திறக்கப்பட்டிருந்ததாக அறிவித்துள்ளார். நேரடியாக உண்மையை அறிந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றுள்ள பொதுமக்களிடம் இப்படித் துணிந்து பொய்யான அறிக்கையைத் தருகிறோமே என்ற மனச்சாட்சி அவர்களை உறுத்துவதில்லைபோலும்! காரணம் அவர்கள் அதிகாரிகள்!

கடை அடைப்பினால் பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லை என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். கடை அடைப்புக்கு ஏற்பாடு செய்த வணிகர் சங்க அமைப்புகளின் வேண்டுகோளே ஆரம்ப முதல் அப்படித்தானே இருந்து வந்திருக்கிறது. பொதுமக்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாத வண்ணம் உணவு விடுதிகள், மருத்து கடைகள், தண்ணீர், பால் முதலிய அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்லும் லாரிகள் போன்றவைகளுக்கு விதிவிலக்கு அளிப்பதாக முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டிருக்கிறதே! வணிகர் சங்கங்களுக்கு

இந்தக் கடையடைப்பு மூலம் பொதுமக்களைப் பாதிப்புக்கு ஆளாக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லையென்பதையும், பொதுமக்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய நுழைவு வரியைக் கண்டிப்பதை அரசுக்கு அறிவிக்க வேண்டியதே முக்கிய நோக்கம் என்பதையும், தெரிந்தோ, தெரியாமலோ அதிகாரிகள் தங்களது அறிக்கைகளின் மூலம் தெளிவுபடுத்தியிருப்பதற்கு வணிகர்கள், அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

திருச்சி பெரிய கடைவீதியில் - சிறிய கடை வீதியில் - எல்லா ஜவுளிக் கடைகளும் மூடப்பட்டு இருந்தன! காந்தி மார்க்கெட்டில் பெரும்பாலான காய்கறிக் கடைகள் திறக்கப்படவில்லை. வெல்ல மண்டிகளில் வேலை நடக்கவில்லை. சென்னை நகரில் ஜவுளிக் கடைகள், நகைக் கடைகள், பாத்திரக் கடைகள் பெரும்பாலானவை மூடப்பட்டிருந்தன. கோவை நகரில் முக்கிய வீதிகளில் உள்ள பெரிய கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. ஜவுளிக் கடைகள், இரும்புக் கடைகள், மளிகைக் கடைகள் போன்றவை மூடிக் கிடந்தன. மதுரையில் ஜவுளிக் கடைகள், மளிகைக் கடைகள், பாத்திரக் கடைகள், மின்சாரக் கருவிக் கடைகள் ஆகியவை மூடப்பட்டிருந்தன. ஆள் நடமாட்டம் அதிகமாக இருக்கக்கூடிய கீழமாசி வீதி, கீழஆவணிமூல வீதி, தெற்கு மாசி வீதி, தெற்கு சித்திரை வீதி, மேலக்கோபுரத் தெரு, விளக்குத் தூண் ஆகிய பகுதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. நெல்லையில் த.மு.பஜார், எட்டயபுரம் ராஜா பஜார், நான்கு ரத வீதிகள் அனைத்திலுமுள்ள கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. தூத்துக்குடியில் பெரிய காய்கறி மார்க்கெட்டும், மட்டக்கடை பஜாரும், மற்றும் பெரும்பாலான இடங்களில் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. தஞ்சையில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டு இருந்தன!

இந்தச் செய்தித் தொகுப்பைத் தந்துள்ளது முரசொலியோ, தினகரனோ, எதிரொலியோ அல்ல! பெரும்பாலான கடைகள் திறந்து இருந்தன என்ற அதிகாரிகளின் அறிவிப்பைப் பெரிய செய்தியாக வெளியிட்ட தினத்தந்தி இதழில்தான், மேற்கண்ட தகவல்களும் இடம் பெற்றுள்ளன.

எல்லா ஊர்களிலும் சாராயக் கடைகள் திறந்து இருந்தன என்பதை வேண்டுமானால், அதிகாரிகளும், அரசும் - அர்த்தால் பிசுபிசுத்தது என்பதற்கான வெற்றி முழக்கமாகக் கொண்டிடலாம்!

சென்னை நகரில் மொத்த விற்பனைக் கடைகள் நிறைந்த ஜார்ஜ்டவுன் பகுதி வெறிச்சோடிக் கிடந்தது. மதுரையில் அர்த்தால் முழு அளவில் நடந்தது. புதுக்கோட்டையில் கடைகள் முழு அளவில் அடைக்கப்பட்டிருந்தன. திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டிருந்தன. திண்டுக்கல்லில் ஓட்டல்களும் மூடப்பட்டிருந்தன. கும்பகோணத்தில் பூக்கடைகள் நீங்கலாக எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. முக்கிய வர்த்தக கேந்திரமான விருதுநகரில் எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன!

இது தினமணி முதல் பக்கத்தில் வந்துள்ள செய்தி!

Hartal is Partial என்று இந்து ஒரு தலைப்பு கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தாலும்,

"The bandh was almost total in Madurai City, with most shops including drug stores remaining closed. Lorries were conspicuous by their absence. Most industries were also closed. In Ramnad District the number of shops closed varied from 50 to 70 percent. All important trading centres in Salem including the Leigh Bazar was closed today. All the 250 Lorry transport offices in Erode suspended their operations today. The bandh was peaceful in Coimbatore, Big Commercial establishments and Textile shops were closed. Most shops were closed in Thanjavur district and the bandh was total in Kumbakonam and Pattukottai Towns. In Madras mostly the whole sale traders, responded to the strike call. In George Town, the bub of the city's business activity, foodgrains, Iron and Steel, Paper, Piecegoods and hardware remained closed."

- என்ற இந்தத் தகவல்களையும் தொகுத்துத் தந்திருக்கிறது.

இந்து, தினமணி, தினகரன், தினத்தந்தி, ஆகிய ஏடுகளில் வந்துள்ள விரிவான செய்திகளைப் படித்துவிட்டு - ஆங்காங்குள்ள நிலைமைகளை நேரிலும் கண்டறிந்திருக்கிற மக்கள், அரசு அதிகாரியின் கூற்றை நம்புவார்கள் என்று எதிர்பார்ப்பார்களேயானால், அதிகாரிகளும், அவர்களை ஆட்டிப்படைக்கும் அரசினரும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்றுதான் பொருள்!

ஆளுங்கட்சிக்குச் சட்டமன்றத்தில் உள்ளபெரும்பான்மையின் காரணமாக - அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரே குரலில் எதிர்த்த நுழைவு வரிச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது!

சட்டமன்றத்தில் நுழைவு வரியை எதிர்த்து எதிர்க்கட்சிகள் அனைத்தும் வெளிநடப்பு செய்திருக்கின்றன!

கட்சிச் சார்பற்ற பொதுமக்களின் பல்வேறு அமைப்புகள், வணிகர் மன்றங்கள் கூட்டுக் குரல் கொடுத்து நுழைவு வரியைக் கைவிடுமாறு கோரியுள்ளன!

நுழைவு வரியினால் எண்ணிலடங்காத் தீமை விளையும் என்பதை ஏடுகள் எழுதிக் காட்டியுள்ளன!

அதற்கும் மேலாக வணிகர்கள், கடையடைப்பு அறப்போரை வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடத்தியுள்ளனர்.

இவ்வளவுக்குப் பிறகும் எம்.ஜி.ஆர். அரசு, பணியவில்லை யென்றால் - நுழைவு வரியை நுழைத்தே தீருவோமென்றால் - அந்த வரியினால் பாதிக்கப்படும் பொதுமக்களின் சார்பாகவும், வணிகர்களின் சார்பாகவும் - களத்திலே இறங்க வேண்டிய கடமை, கழகத்திற்கு உண்டு! விரைவில் நடைபெற இருக்கும் கழகப் பொதுக்குழு அதுபற்றிக் கலந்துரையாடி உரிய முடிவினை எடுக்கும்.

உடன்பிறப்பே, அதற்கு உன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய வேளை நெருங்கிவிட்டது!

அன்புள்ள,

மு. க.

(08-05-1983)

1112. விளக்கம் தருவாரா?

உடன்பிறப்பே,

கிருஷ்ணா நீர் இன்னும் ஆறு வருடங்களில் சென்னைக்கு வரப்போகிறது என்பது செய்தி! அந்தச் செய்தி கேட்டு எல்லோருக்கும் மகிழ்ச்சிதான்! 1976-ஆம் ஆண்டிலேயே கர்நாடகம், ஆந்திரம், மராட்டியம் ஆகிய மாநிலங்கள், சென்னைக் குடிநீருக்காக ஒவ்வொரு மாநிலமும் ஐந்து டி.எம்.சி. வீதம் மொத்தம் பதினைந்து டி.எம்.சி. தண்ணீர் தருவதற்கு சம்மதம் தெரிவித்து விட்டன. பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் அதற்கான உறுதிமொழியை அப்போதே அளித்தார். 1977-இல் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். அவர்கள், ஆறு வருடம் கழித்தாவது அதற்கான முயற்சி எடுத்து இன்னும் ஆறு வருடங்களுக்குப் பிறகு, அந்தப் பதினைந்து டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது!

இந்த ஒப்பந்தம் குறித்த அறிக்கையொன்று, தமிழகச் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது. அதன் மீது விவாதம் கேட்டதற்கு அதைக் கண்டுகொள்ளாமலே இந்த அரசு, நழுவி விட்டது!

முதல்வர் எம்.ஜி.ஆர். பெயரால் நிதியமைச்சர் படித்த அந்த அறிக்கை, முரண்பாடு கொண்டதாகவும், சில விஷயங்களை மூடி மறைப்பதாகவும், கிருஷ்ணா நீர் திட்டத்திற்குப் பதில் வீராணம் திட்டத்தை விமர்சிப்பதாகவுமே அமைந்திருந்தது!

அவையில் அவற்றைக் குறித்து கருத்துகள் கூற நேரம் ஒதுக்கப்படாமையால், கழகத்தின் கருத்துக்களை ஏடுகளின் மூலமாக வெளியிட வேண்டியதாயிற்று!

அவையில் அறிக்கையின் மீது ஒரு விவாதத்தை நேருக்கு நேர் சந்திக்க இயலாத முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., ஒரு திருமண வீட்டில் என் மீது சீறிப் பாய்ந்தார்! கிருஷ்ணா நீர் வருவதையே

நான் தடுப்பதாகக் கூறினார்! துரோகம் என்றார்! அநியாயம் என்றார்! இனிமேல் கருணாநிதி எழுதுவதற்கும், பேசுவதற்கும் உடனுக்குடன் பதில் சொல்லப் போவதாக அறைகூவல் விடுத்தார்!

கிருஷ்ணா நீரும் சென்னைக்கு வேண்டும்! அதே நேரம் தமிழக அரசு, ஆந்திராவிடம் ஏமாந்துவிடக் கூடாது என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக் கடமை எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு! எம்.ஜி.ஆர். திருமண வீட்டில் மிகவும் ஆத்திரப்பட்டு பேசிய பிறகு, நான் சில விளக்கங்கள் கேட்டு ஒரு நீண்ட அறிக்கையை எல்லா ஏடுகளுக்கும் கொடுத்தேன்.

சுடச்சுட பதில்!

உடனுக்குடன் பதில்!!

என்றெல்லாம் முழக்கமிட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், அந்த நீண்ட அறிக்கைக்கு இதுவரையில் பதிலே கூறவில்லை!

10-5-83 தினத்தந்தியில், திட்டச் செலவையே திரித்துக்கூறி ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

அதாவது 720 கோடி ரூபாய் மொத்தச் செலவு என்றும், அதில் ஐநூறு கோடி ஆந்திராவும், இருநூற்றி இருபது கோடி தமிழ்நாடும் ஏற்கும் என்றும் தினத்தந்தி முதல் பக்கத்தில் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

இந்தச் செய்தி தவறானது! இந்தக் கணக்கு இதுவரையில் யாரும் சொல்லாதது!

ஆந்திர தமிழக எல்லையில் இருந்து, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் வரையில் தமிழக அரசுக்குச் செலவு இருநூற்றி முப்பத்தாறு கோடி ரூபாய்!

ஆந்திராவில் வெட்டப்படும் கால்வாய், கட்டப்படும் அணைகளுக்கு மொத்தச் செலவு ஐநூறு கோடி ரூபாய்! அதில் தமிழகம் ஏற்க வேண்டிய செலவு இருநூறு கோடி! ஆந்திரம் ஏற்க வேண்டிய செலவு முன்னூறு கோடி ரூபாய்! எனவே தினத்தந்தியில் வந்துள்ள கணக்கு திசை திருப்புவதற்காக இருக்கும்! அல்லது தெரியாமல் பிழையாக அச்சியற்றப்பட்டு இருக்கும்! ஆனாலும்,

மக்களைக் குழப்புவதாக அந்தக் கணக்கு வெளியிடப்பட்டு இருப்பது சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்றாகும்.

மே முதல்நாள் எல்லா ஏடுகளிலும் எனது அறிக்கை வெளியாகியுள்ளது. அந்த நீண்ட அறிக்கையில் பல விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டு, முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் சில முக்கியமான விளக்கங்களும் கேட்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கை முழுவதையும் மீண்டும் நினைவுபடுத்த நான் விரும்பவில்லை என்றாலும் - அந்த அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள பின்வரும் சில கேள்விகளுக்காவது - முதல்வர் விளக்கம் அளித்திட வேண்டாமா?

உடனுக்குடன், சுடச்சுட பதில் கூறுவதாக திருமண வீட்டில் சங்கநாதம் செய்தவர் வாய்மூடியிருப்பதேன்? இதோ அந்த முக்கியமான சில கேள்விகள் :-

1. ஆந்திராவில் ஸ்ரீசைலத்திலிருந்து தமிழ்நாடு, ஆந்திரா எல்லை வரையில் வெட்டப்படும் கால்வாயில் சென்னைக்கான தண்ணீர் 15 டி.எம்.சி. மட்டும்தான் வரப்போகிறதா? ஆந்திரா பகுதியில் ஆறு இலட்சம் ஏக்கரா பாசனத்திற்கான நூறு டி.எம்.சி. தண்ணீரும் அந்தக் கால்வாயில்தானே வரப்போகிறது?

2. அப்படி இருக்கும்போது, நூறு டி.எம்.சி. தண்ணீரைப் பாசனத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆந்திர மாநிலம், முன்னூறு கோடி ரூபாயும், பதினைந்து டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளும் தமிழ்நாடு, இருநூறு கோடி ரூபாயும் என்று பங்கிட்டுப் பணம் செலவழிப்பது எப்படி நியாயமானதாகும்?

பணத்திற்கான செலவு இரு மாநிலங்கள் அடையும் பயன்களின் விகிதாசாரப்படி பகிர்ந்து கொள்ளப்படும் என்று முதலமைச்சரின் அறிக்கை தெரிவிக்கிறது. அப்படியானால், ஆந்திரப் பிரதேசத்திற்குள் கால்வாய்கள் வெட்ட நூறு டி.எம்.சி. பயன் பெறுகிறவர்களுக்கு 300 கோடியும், பதினைந்து டி.எம்.சி. மாத்திரம் பயன் பெறுகிறவர்களுக்கு 200 கோடி ரூபாயும் என்பது எந்த விகிதாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டது? முதலமைச்சர், ஆந்திரா இரண்டு பங்கும், தமிழகம் ஒரு பங்கும் என்று

கூறியிருக்கிறார். இந்த விவரத்தைப் பார்க்கும்போது அவருடைய கூற்று சரியாகுமா?

3. தமிழ்நாடு எல்லையிலிருந்து சென்னைக்குக் குடிநீரைக் கொண்டு வர 236 கோடி ரூபாய் தமிழ்நாடு செலவழிக்கும் என்பதை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டு அதனை விட்டு விடுவோம். ஆனால் ஆந்திர மாநிலத்தில் வெட்டப்படும் கால்வாயில், சென்னைக் குடிநீருக்காகவும், ஆந்திரா பாசனத்திற்காகவும் தேவைப்படும் மொத்தம் 115 டி.எம்.சி. தண்ணீர் வர 500 கோடி ரூபாய் செலவிடப்படும் என்ற அடிப்படையில், 1 டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் சுமார் 4 கோடி ரூபாய் செலவினை ஒத்துக்கொள்ள வேண்டும். அந்தக் கணக்கில் நூறு டி.எம்.சி. பயன்படுத்திக் கொள்ளும் ஆந்திரா சுமார் 425 கோடி ரூபாயும், பதினைந்து டி.எம்.சி. நீரைப் பயன்படுத்திக் கொள்ளப்போகும் தமிழகம், அதிக பட்சம் என்றால் கூட 75 கோடி ரூபாயும் செலவழிப்பதுதானே முறையாகும்? 75 கோடிக்குப் பதிலாக தமிழகம் 200 கோடி ரூபாய் தருவதாக ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டது எப்படிச் சரியாகும்?

உடன்பிறப்பே, எனது மே முதல்நாள் அறிக்கை முழுமைக்கும் பதில் அளிக்க எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வசதியும், நேரமும் இல்லாவிட்டாலும் - அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இந்த மூன்று ஐயப்பாடுகளுக்காவது அவர் விளக்கம் தர முன் வருவாரா என எதிர்பார்ப்போமாக!

அன்புள்ள,

மு. க.

(11-05-1983)

1113. அனைத்துக் கட்சியினர் அணி!

உடன்பிறப்பே,

இது தனிப்பட்ட அரசியல் கட்சி நடத்தும் விழா அல்ல! அரசு விழா!

என்று அறிவித்து விட்டு, அதே விழாவில் கம்பம் நகரில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்,

கருணாநிதி நடத்த இருக்கும் போராட்டத்தை மக்கள் ஆதரவுடன் சந்திப்பேன்.

என்று முரசு கொட்டியிருக்கிறார்! முதலில் அவர் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் - அவரது ஆட்சியின் அலங்கோலங்களையும், ஆளுங்கட்சியினர் நடத்தும் அராஜகங்களையும் - காவல்துறையின் கண்மூடித்தனமான காட்டு தர்பாரையும் எதிர்த்துக் கருணாநிதி மட்டுமல்ல, கழகம் மட்டுமல்ல, பல்வேறு கட்சிகள் ஓரணியில் திரண்டு போர்க் கொடி உயர்த்தியிருக்கின்றன!

ஆட்சியாளர்களின் சட்டங்கள், திட்டங்கள், நிர்வாகச் சீர்கேடுகள், அதிகாரிகளின் ஆணவச் சேட்டைகள் இவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கிற எந்த ஒரு அமைப்பாக இருந்தாலும், கட்சியாக இருந்தாலும், அவைகள் நடத்தும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை ஆளுங்கட்சிக் குண்டர்களை ஏவி விட்டு, அராஜகங்களின் வாயிலாக அடக்கி விட முனையும் இந்த அரசின் அநாகரிகப் போக்கைக் கடந்த நாலைந்து ஆண்டுக் காலமாகப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, இறுதியாகப் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்ற நிலையில்தான் அனைத்துக் கட்சிகளின் அணி திரளுகிறது!

வணிகர்கள், தமது கோரிக்கைக்காகக் கடையடைப்புச் செய்கிறார்கள் என்றால், அவர்தம் அமைதியான

அறப்போராட்டத்தை ஒரு அரசு நிதானமாகச் சகித்துக் கொள்ளக் கூடாதா?

எத்தனையோ பொதுப் பிரச்சினைகளுக்காக அரசியல் கட்சிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அந்த வணிகர்கள் கடையடைப்புச் செய்திருக்கிறார்கள்!

ஏன்? ஆட்சியாளர்களே கூட எத்தனையோ பொதுப் பிரச்சினைகளை முன்னிட்டு, கடையடைப்புச் செய்யுமாறு வணிகர்களுக்குக் கூறி, அவர்களும் அதற்கு முழுமையாக ஒத்துழைப்பு நல்கியிருக்கிறார்கள்.

இப்போது அந்த வணிகர்கள், தங்களின் சங்கடங்களைச் சுட்டிக் காட்டியும் - பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதை விளக்கியும், நுழைவு வரியைக் கைவிட வேண்டுமெனக் கேட்டு கடையடைப்புச் செய்ய உரிமை கிடையாதா?

அதற்கு எத்தனை அச்சுறுத்தல்! எத்தனை கடைகளில் சோதனை! எத்தனை கடைகளில் அதிகாரிகள் ஆர்ப்பாட்டம்!

கடைகளை மூடாதே என்று கையில் ஆயுதமேந்தி ஆளுங்கட்சியினர் ஊர்வலம்! மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று எம்.ஜி.ஆர். அடிக்கடி கூறும் அந்த மக்களில் ஒரு பிரிவினர்தான் மதுரையில் ஊர்வலம் நடத்தினர்! தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நண்பர் நெடுமாறன் அவர்களின் அலுவலகத்தில் நுழைந்தனர்! அடிதடியில் இறங்கினர்! கார்களை நொறுக்கினர்! ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்ட குற்றத்திற்காக அவரையும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் நண்பர் நல்லசிவம் அவர்களையும் போலீசாரை விட்டுக் கைது செய்யும் ஆணையையும் அவர்களே பிறப்பித்தனர்! பொய் வழக்கும் ஜோடித்தனர்! இரண்டு கட்சிகளின் தலைவர்களையும் இரவு முழுதும் போலீஸ் லாக்அப்பிலேயே அடைத்து இந்த அரசின் காட்டுமிராண்டித் தன்மையை நாட்டுக்குக் காட்டிக் கொண்டனர்!

இன்றைய எக்ஸ்பிரஸ் ஏட்டில் வந்துள்ள செய்திப்படி முன்எச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டவர்களில் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். திருச்சியில் நடைபெற்ற கூட்டு நடவடிக்கைக் குழு அதுபற்றி கவலை தெரிவித்திருக்கிறது. கைது

செய்யப்பட்டவர்களை போலீசார் நடத்திய விதம் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது.

சிறிய அறைகளில் ஏராளமான வியாபாரிகளை ஆயுட் கைதிகளுடனும், குற்றவாளிகளுடனும் சேர்த்தே அடைத்து வைத்தனர். அந்த குற்றவாளிகளால் சில வியாபாரிகள் பயமுறுத்தப்பட்டுத் தங்கள் சொந்த பொருள்களையும் இழந்திருக்கின்றனர்.

போலீசாரால் சில வியாபாரிகள் கொடுமைப்படுத்தப்பட்ட தோடு, அவர்கள் லாக்கப் அறையில் போடப்படுவதற்கு முன் ஜட்டியைத் தவிர, மற்ற ஆடைகளை அவிழ்க்குமாறு பணிக்கப்பட்டனர்.

மதுரையிலிருந்து வந்த செய்திப்படி - பல வியாபாரிகள் வேகமாக போலீஸ் வேனில் ஏற்றப்பட்டு, தெருக் குற்றவாளிகளோடு சேர்த்து ஒன்றாகவே காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வியாபாரிகள் மீது கொள்ளை, தீ வைப்பு, பஸ்களை எரித்தது, பொது சொத்துகளை அழித்தது போன்ற பிரிவுகளில் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

இவை மட்டுமல்ல, இப்படிப் பல நிகழ்ச்சிகள்! தொடர்கதைகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன! இந்தப் பாசிச வெறியாட்டத்திற்குப் பாடம் கற்பிக்க அனைத்துக் கட்சிகளின் பாசறை அமைவதைத் தவிர, வேறு வழியில்லை என்ற நிலை உருவாகியுள்ளது!

நுழைவு வரியென்றால் கணக்கு வைக்கவேண்டு மென்பதற்காக வியாபாரிகள் பயப்படுகிறார்கள்.

- என்று கம்பத்தில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழா - அதாவது அரசு விழாவில் கூறிய எம்.ஜி.ஆர். அவர்கள்,

கட்சியில் கணக்கு கேட்டாலும் வம்பு வருகிறது! ஆட்சியில் இருந்து கணக்கு கேட்டாலும் வம்பு வருகிறது!

என்று ஏனோதானோவென அரசியல் பேசியிருக்கிறார்!

கட்சியில் கணக்கு கேட்க வேண்டிய இடமும் - கணக்கு காட்ட வேண்டிய இடமும் பொதுக்குழு, செயற்குழு என்பதை,

அன்றையப் பொருளாளர் எம்.ஜி.ஆர்., மறந்து விட்டுப் பொது மேடையில் நின்று கணக்கு கேட்டது கட்சிக் கட்டுப்பாட்டை மீறும் செயல் என்று கழகச் செயற்குழுவும், பொதுக்குழுவும் அவர்மீது நடவடிக்கை எடுத்தது! அந்த நடவடிக்கையெடுத்து அவரை விளக்கம் கேட்டு தற்காலிகமாக அவரைத் தள்ளி வைத்துக் கடிதம் எழுதி, அறிக்கை விட்டவரே அன்றையப் பொதுச் செயலாளர் நாவலர்தான்!

தி.மு.கழகத்தில் பொதுக்குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தணிக்கைக்குழு இருக்கிறது! பொருளாளர் தரும் கணக்குகளைத் தணிக்கை செய்யவும், குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டவும், செயற்குழு, பொதுக்குழுக்களில் அறிக்கை வைக்கவும் உரிமை பெற்ற குழு அந்தத் தணிக்கைக் குழு! எம்.ஜி.ஆர். பொருளாளராக இருந்த போதும் இந்த முறைகள் உண்டு! ஆனால் எம்.ஜி.ஆர். வேண்டுமென்றே திட்டமிட்டு கட்சிக்குள் கலகம் விளைத்திடப் பொதுக்கூட்டத்தில் சென்று கணக்கு கேட்டார்! உடன்பிறப்பே, இப்போது அவரது கட்சியில் கணக்குமில்லை மண்ணுமில்லை - ஆனால் யாராவது அவரது கட்சிக் கணக்கைப் பொதுக்கூட்டத்தில் கேட்பார்களேயானால், அவர்களை எம்.ஜி.ஆர்., தனது கட்சி உறுப்பினர்களாக வைத்திருப்பாரா? மறுநாளே பெட்டிச் செய்தி போட்டு விலக்கிவிட மாட்டாரா?

கட்சிப் பணத்தைக் கடன் வாங்கி பதின்மூன்று லட்சம் ரூபாய் வருமான வரியைக் கட்டியதாக முதல்வர் எம்.ஜி.ஆர். வெளிப்படையாகவே அறிவித்தார்! கட்சியில் கடனாக வாங்கியது மூன்று லட்சம்தான் என்று பொருளாளராக இருந்த சௌந்தரபாண்டியன் தெரிவித்தார்! மூன்றோ அல்லது பதின்மூன்றோ - இப்படிக் கட்சிப் பணத்தைக் கடன் வாங்கிடும் உரிமையை அந்தக் கட்சியில் எம்.ஜி.ஆரைப்போல மற்ற தலைவர்களும், தொண்டர்களும் பெற்றிருக்கிறார்களா? அப்படியானால், அந்தக் கட்சியில் யார் யாருக்கு, எத்தனை லட்ச ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது?

வியாபாரிகள் கணக்கு வைப்பதற்காகப் பயப்படுகிறார்களாம்! எம்.ஜி.ஆர். கூறுகிறார்! இப்போது விற்பனை வரிக்காக அவர்கள் கணக்கு வைக்கவில்லையா?

நுழைவு வரியால் ஏற்படும் பாதிப்பு வேறுவிதமானது என்பதைப் பலரும் விளக்கியும் கூட, எம்.ஜி.ஆர்., அதை மறந்துவிட்டு கேலி, கிண்டல், அவதூறு செய்வதன் மூலம் தன்னைக் கெட்டிக்காரராகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்!

நுழைவு வரி மற்ற மாநிலங்களில் இல்லையா? எனக் கேட்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒரே பதில் - அந்த மாநிலங்களில் கூட அந்த வரி இருப்பது சரியல்ல! அதை ரத்து செய்து மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற மறுசிந்தனை ஏற்பட்டுள்ள காலத்தில் - புதிதாக இங்கே அந்த வரியை நுழைக்க வேண்டாம் என்பதுதான் எதிர்ப்பவர்களின் கருத்து!

அதைப் புரிந்து கொண்டும்கூட, பிடிவாதம் காட்டுவதும் - எதிர்க்கருத்துகளை எடுத்தெறிந்து பேசுவதும் - உன்னால் ஆனதைப் பார்! என்று உறுமிடுவதும் - இந்த ஆட்சியாளர்களின் மாற்ற முடியாத போக்கு என்று ஆணி அடிக்கப்பட்டுவிடுமேயானால் - அந்த ஆணியைப் பெயர்த்தெறிந்திட அனைத்துக் கட்சிகளின் அணி, அறப்போர்க்களம் அமைத்திடுவதைத் தவிர, மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினைக் காத்திட வேறு மார்க்கமில்லை!

அன்புள்ள,

மு. க.

(14-05-1983)

1114. என் அழைப்பு - ஏற்றிடுக!

உடன்பிறப்பே,

கிளைக் கழகங்களில் இருந்து மாவட்டக் கழகங்கள் வரையில் நிர்வாகப் பொறுப்புக்கான தேர்தலும், தலைமைக் கழகச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலும் முடிவுற்று புதிய செயற்குழுவும், பொதுக்குழுவும் வருகிற 26-5-83, 27-5-83 ஆகிய நாட்களில் கோவை நகரில் கூடி தலைமைக் கழகத்திற்கானத் தேர்தலை நடத்த இருக்கின்றன. கழகத்தின் ஆக்கப் பணிகள் குறித்தும், நாட்டு நிலை குறித்தும் விவாதித்து முக்கியமான தீர்மானங்களையும் இந்தப் பொதுக்குழு வடித்தெடுக்கும்.

அடித்தள அமைப்புகளின் தேர்தல்களில் இருந்து தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் தேர்தல் வரையில், கழகத்தின் உடன்பிறப்புகள் காட்டியுள்ள ஆர்வம் அளவிடற்கரியது! பொறுப்புகளையேற்றுப் பணியாற்றிட வேண்டுமென்ற துடிப்போடு போட்டியிட்டவர்கள் ஒருவருக்கொருவர் சிற்சில இடங்களில் கசப்புகளை வளர்த்துக் கொண்டனர் என்றாலுங்கூட அவர்களில் ஓரிருவர் தவிர, மிகப் பெரும்பாலோர் - ஆம் - மிகமிகப் பெரும்பாலோர், கழகத்தைக் கட்டிக்காக்கும் கடமை உணர்வை அறிந்தே செயல்பட்டு வருவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நீர் இடித்து நீர் விலகாது என்ற பழமொழியை இதயத்தில் ஏந்திக் குடும்ப பாச உணர்வோடு, கழகத்தின் இலட்சிய வெற்றிகளுக்கு இடையறாது பாடுபட வேண்டுமென்று சூளுரைத்துச் சுடர் முகம் தூக்கிக் கழகக் கொடியைப் பற்றி நிற்கும் உடன்பிறப்புகள் அனைவரையும் நெஞ்சாரத் தழுவி வரவேற்கிறேன்!

போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், அரிய பணிகளும் காத்திருக்கின்றன! அதே போன்று தேர்ந்தெடுக்கப்படாதவர்களுக்கும் அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும், பணிகளை முடிப்பதிலும்

பெரும் பங்கு இருக்கின்றது! இதனை இரு சாராரும் உணர்ந்து செயல்பட்டால்தான் நமது கழகத்தின் வலிவும், பொலிவும் முழுமை பெற முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது!

ஒரு கட்சிக்குள் தேர்தல் என்றாலும், சில நேரங்களில் அணிகள் பிரிந்து போட்டியிடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது! அறிவேன் நான்!

அணிகள் பிரிந்து கட்சித் தேர்தலுக்கான காரியங்களை ஆற்றினாலும் - தேர்தல் முடிவுற்ற பிறகு, அந்த அணிகள் மறைந்திட வேண்டும்! கழகப்பணிகளே மலர்ந்திட வேண்டும்.

இந்த நற்காரியத்தைச் செய்திட, தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கே அதிகப் பொறுப்பு உண்டு! அவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படாதவர்களை அரவணைத்து, மதித்து, அவர்களையும் இணைத்துக் கொண்டு கழகத்தை மேலும் வளர்த்திட முனைதல் வேண்டும்.

பொறுப்புக்கு வரும் வாய்ப்பை இழந்தவர்களும், ஓட்டப் பந்தயத்தில் சற்று பின்தங்கிவிட்டோம் என்ற எண்ணத்துடன், வாய்ப்புப் பெற்றவர்களிடம் தோழமை பாராட்டிக் கழகத் தொண்டினைத் தொடர வேண்டுமேயல்லாமல், பகையுணர்வுக்கு அணுவளவும் இடம் தரலாகாது.

தலைமைக் கழகம், தலைமை நிர்வாகக் குழு, தலைமைச் செயற்குழு, தலைமைப் பொதுக்குழு - இவை நமது கழக அமைப்பில் மிக முக்கியமான அங்கங்கள்! கழகத்தைப் பொறுத்தவரையில், இவற்றுக்கு மேலாக - அல்லது இவற்றை மீறி - வேறொரு அமைப்பு இருப்பதாக நினைப்பது கூட பெருந்தவறாகும். அப்படி நினைத்திருந்தாலோ, அல்லது நினைத்துச் செயல்பட்டிருந்தாலோ அந்த நிலையில் இருந்து அப்படிப்பட்டவர்கள் தங்களைப் பின்வாங்கிக் கொள்ள வேண்டும். இது நமது கழகம்! நமக்குள்ளே எழும் கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளும் ஜனநாயக அமைப்பாக இந்தக் கழகத்தை நாமேதான் உருவாக்கி, அதற்கான சட்டதிட்டங்களையும் நாமேதான் அங்கீகரித்திருக்கிறோம்! இதில் பிறர் தலையிட இடம் தருதல் தீது! கேடானது!

நம்மிடையே நாம் வளர்த்துக் கொள்ளும் ஒற்றுமைதான் - பாச உணர்வுதான் - நமது இயக்கத்தின் வலிவு, வனப்பு, வெற்றி எல்லாமே!

சமுதாயத்தை மூடநம்பிக்கைச் செயல்கள் சல்லடைக் கண்களாகத் துளைத்திடும் கொடுமை, மீண்டும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது சர்க்காரின் ஆதரவோடு!

ஆதிக்கபுரியினரின் வேட்டைக் காடாகத் தமிழகம் நலிவதையே வரவேற்று அதற்கேற்ப ஆலவட்டம் சுழற்றுவோர் கையில் ஆட்சி சிக்கிக் கொண்டிருக்கிறது!

வளம் அழிகிறது! வறுமை கொஞ்சுகிறது!

எந்தப் பிரிவு மக்களையும் விட்டு வைக்கவில்லை; இன்றுள்ள ஆட்சி! அனைத்துப் பிரிவினர் மீதும் அடக்குமுறை, அராஜகம்!

புரையோடிவிட்ட புண்ணுக்குப் புணுகுபூசி - ஆகா! நறுமணம் நுகர்வீர்! என அழைப்பு விடுப்போர் - ஆளும் பொறுப்பேற்று உள்ளனர்!

இந்த இழிநிலை அகற்றிட - இன்பத் தமிழகம் கண்டிட - நாம் நடத்தும் இயக்கம் நாளும் பலம் பெற்றிட வேண்டாமோ?

அதனால்தான் அன்புடன் வேண்டுகிறேன்! கட்சித் தேர்தலில் மனக்காயங்கள் ஏற்பட்டிருக்குமானால், அவற்றைக் கழகப் பற்று எனும் மருந்திட்டு ஆற்றிக்கொண்டு - அந்த வடுக் கூடத் தெரியாத அளவுக்கு உளம் ஒன்றுகலந்த உடன்பிறப்புகளாகத் துணைபுரிய வாரீர்! கழகத்தின் பயணம் தொடர ஒத்துழைப்பு தாரீர்! என்ற என் அழைப்பை ஏற்றிடுக! கோபதாபங்களை மறந்திடுக!

அன்புள்ள,

மு. க.

(19-05-1983)

1115. நாளை - நமது பேரணி!

உடன்பிறப்பே,

நாளை ஜூன் 26 ஞாயிறன்று அனைத்துக் கட்சிகள் நடத்தும் கண்டனப் பேரணி! மாநில அரசின் அராஜக, அடக்குமுறை, அலங்கோல, ஊழல் நிர்வாகத்தையும் - தமிழகத்திற்குத் தேவையான அரிசியையும், வறட்சி நிவாரணத்திற்கான நிதியையும் தர முன் வராத மத்திய அரசின் அலட்சியப் போக்கையும் சுட்டிக்காட்டி மக்கள் சக்தியைத் திரட்டத் தக்க வகையில் நடைபெற வேண்டுமென்று எடுத்த முடிவினை ஆங்காங்கு அனைத்துக் கட்சி நிர்வாகிகளுடன் கலந்துபேசி எழுச்சியுற நிறைவேற்றுவாய் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு.

ஜூன் 20 முதல் நடைபெற்று வரும் அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் அலைகடலென மக்கள் குழுமினார்கள் என்பதையும், ஆளவந்தாரின் விபரீதப் போக்கிற்கு எதிராக உரத்த குரல் எழுப்பினார்கள் என்பதையும் உணர்ச்சிகரமானக் கடிதங்களின் வாயிலாக நீ எனக்குத் தெரிவித்து வருவதைப் படித்துப் படித்து மகிழ்கிறேன்.

எழுச்சியும், உணர்ச்சியும் நிரம்ப வேண்டும் - எங்கணும் பரவிட வேண்டும் - என்ற போதிலும், அவை காட்டாற்று வெள்ளமாக ஆகிவிடாமல் பார்த்துக் கொள்வதில் அதிக கவனம் வேண்டும் என்பதை மட்டும் மறந்துவிடக் கூடாது.

பேரணிகளில் நாம் இப்போது எடுத்துக் கொண்டுள்ள பிரச்சினைகளையொட்டிய முழக்கங்கள் மாத்திரமே இடம் பெற வேண்டும். கடுகளவுகூட கண்ணியமற்ற சொற்கள் பேரணி முழக்கங்களில் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அனைத்துக் கட்சிச் செயல்வீரர்களின் பொறுப்பும், கடமையுமாகும்.

அதற்கு நீயும் நமது உடன்பிறப்புகளும் முழு ஒத்துழைப்பை வழங்கிடத் தவறிவிடக் கூடாது.

வறட்சி நிவாரணப் பணியில் மந்த நிலை ஊழல், வாடிடும் விவசாயிகளிடம் ஜப்தி - மின்துண்டிப்பு, குடிநீரும் இல்லாமல் மக்களை அலைய விடும் பரிதாபம், குடும்ப கார்டுகளுக்கு முறையாக அரிசி வழங்காத கொடுமை, பொது மக்களையும், வணிகர்களையும் பாதிக்கும் நுழைவு வரித் திணிப்பு, பொறுத்திட இயலா மின் கட்டண உயர்வு, பாட்டாளி வர்க்க உரிமை பறித்துப் பழிவாங்கும் படலம், பத்திரிகைகளை மிரட்டிடும் கறுப்புச் சட்டம், ஆளுங்கட்சியினர் அராஜகம், காவல்துறையினர் அடக்குமுறை ஆகிய மாநில அரசின் அலங்கோலங்களையும், போதிய நிதியும், அரிசியும் வழங்கிடாத மத்திய அரசின் அலட்சியப் போக்கையும் கண்டித்துத்தான் மாநில முழுதும் கூட்டங்களும், பேரணியும்!

இந்தக் கண்டன முழக்கங்களைப் பேரணியில் ஒலிப்பதற்கேற்ப வகைப்படுத்திக் கொள்ளும் அறிவும், ஆற்றலும் உனக்கும் உண்டு - அனைத்துக் கட்சி செயல்வீரர்களுக்கும் உண்டு! பொருள் குலையாமல் வார்த்தைகளுக்குப் பொலிவுசேர்ப்பதும் - பேரணியில் முழங்குவதற்கேற்பச் சொற்களை அமைத்துக் கொள்வதும் உன் பொறுப்பு. இழிமொழிகள் எள்முனையளவும் இணைந்து விடலாகாது என்பதே என் வேண்டுகோள்!

கண்டனக் கூட்டங்கள், பேரணிகள் என்ற செய்தி கேட்டவுடனேயே செந்தீயை மிதித்தவர்களாகி ஆளவந்தார் குதிக்கின்றார்! அடக்குவோம் என ஆர்ப்பரிக்கின்றார்! முடக்குவோம் என முண்டா தட்டுகின்றார்! உருப்படியான முறையில் செயலாற்றுக என்றாலோ மாநில அரசு உறுமிப் பாய்கிறது! நிதியும், அரிசியும் வழங்குக என உரிமைக் குரல் கொடுத்தாலோ, மத்திய அரசு பாண்டிச்சேரி நடத்திக் காட்டுகிறது!

பரவாயில்லை! பல களங்களில் விழுப்புண் பெற்றவர்கள்தான், இன்று அனைத்துக் கட்சி அணியில் நிற்கிறோம்!

1976-இல் ஜனநாயகத்தைக் காத்திட ஆட்சியை இழந்தோம்! மீண்டும், ஜனநாயகத்தைக் காத்திட ஒரு களம் அமையுமேயானால், உயிரையே இழக்கத் தயார்!

- என்று எனது அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் சென்னைச் சைதாப்பேட்டைக் கூட்டத்தில் சூளுரைத்ததை நிறைவேற்றிக் காட்டக் கூடிய நெஞ்சுரம் நமக்கு உண்டு!

வேதனை வெள்ளம் பாய்ச்சியோர் சாதனைக் கூட்டங்களை நடத்தி - மக்களைத் தேடிப் பார்த்தனர்! அவர்களோ ஓடி ஒளிந்தனர்! பிரம்மாண்ட செலவில் திரட்டப்பட்ட ஓரிரு கூட்டங்களைத் தவிர்த்து, மற்ற கூட்டங்களில் மைதானங்கள் காலியாக இருந்தனவாம்!

மாற்றம் ஏற்பட்டிருக்கிறது! மாயை அகலத் தொடங்கியிருக்கிறது! மக்கள் தெளிவு பெற்றுக் கொண்டு வருகிறார்கள்!

அன்றாடம் ஒவ்வொரு பிரச்சினையிலும் அவர்கள் படும் அவதிகள் அவர்தம் கண்களைத் திறக்கச் செய்து வருகின்றன.

விழி திறந்தோர் - வழிகண்டு நடை போட நமது பேரணிகள் நற்பாதை அமைத்துத் தரட்டும்!

மாவட்டத் தலைநகரங்களில் ஜூன் 26 ஞாயிறன்று, அனைத்துக் கட்சிக் கொடிகளோ - அல்லது அலைகளின் அடுக்கடுக்கான தோற்றமோ எனத் தகும் வகையில், பறக்கட்டும் கொடிகள்! பிறக்கட்டும் புத்துணர்ச்சி!

எறும்புகளெனச் சுறுசுறுப்புக் காட்டுக! ஏறுநடைச் சிங்கங்களெனப் பேரணியை நடாத்துக! எதேச்சாதிகாரம் வீழ்ந்திட எழுந்திடுக மக்கள் சக்தி!

அன்புள்ள,

மு. க.

(25-06-1983)

1116. புதுவை மக்கள் சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

புதுவை மாநிலத்தில் ஐந்தாண்டுக்காலம் ஒரு ஆட்சி நீடித்து நிலைபெற்று நடந்ததில்லை. தி.மு.க. தலைமையில் இந்தியக் கம்யூனிஸ்டு இணைந்து நடத்திய ஆட்சி, ஐந்து ஆண்டுகளுக்கு ஓரிரு மாதங்கள் மிச்சமிருக்கும் போது கவிழ்ந்தது! இப்போது தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி ஆட்சி மூன்றரை ஆண்டுகள் நடைபெற்று முடிவுற்றுள்ளது! காங்கிரஸ் தலைமையிலும், அ.தி.மு.க. தலைமையிலும் அமைந்த ஆட்சிகளோ மாதக் கணக்கு, நாள் கணக்கு என்ற அளவிலேதான் நடைபெற்றுக் கவிழ்ந்து போயும், கவிழ்க்கப்பட்டுமிருக்கின்றன.

1980-ஆம் ஆண்டு அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, இந்தியாவில் ஒரு நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதற்காக, எத்தனையோ கடந்த கால வேதனைகளையும், கொடுமைகளையும் கெட்ட கனவுகள் போல மறந்து விடுகிறோம் எனக் கூறி இந்திரா காங்கிரசுடன் கழகம் உடன்பாடு கொண்டதன் விளைவாக, இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் இந்திரா காங்கிரஸ் வெற்றிக்கு ஒரு அடித்தளம் அமைந்ததாக இந்திரா காங்கிரஸ் தலைவர்களே கூறிப் பாராட்டிப் புகழ்ந்தது மறந்து விடக் கூடியது அல்ல!

புதுவை மாநிலத்திலும் ஒரு நிலையான ஆட்சியைத் தருவோம் என வாக்களித்து, மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெற்றோம். கூட்டணி அமைச்சரவை அமைக்கப்பட்டது. அமைச்சரவை இலாக்காக்கள் கூட இருகூறுகளாகத் தொகுக்கப்பெற்று நானும், திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்களும் இருந்து விருப்பப்பட்ட தொகுப்புகளைக் கூட்டணி அமைச்சரவையின் இரு சாராரும் எடுத்துக் கொள்வது என்றே முடிவு செய்து அந்த முறையே பின்பற்றப்பட்டது.

இடையில் எழும் சிக்கல் எதுவாயினும் நானும், புதுவை நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் அவர்களும் கலந்துரையாடி, கூட்டணி அரசு சுமூகமாகச் செயல்பட வழிகளும் வகுக்கப் பெற்றன.

அதற்கேற்ப, கடந்த மாதம் கூட திரு. சண்முகம் எம்.பி. அவர்கள், என்னைச் சந்தித்து இருவரும், புதுவை அரசுப் பிரச்சினைகள் குறித்து மனம்விட்டு பேசினோம். இருவரும் கலந்து எடுத்த முடிவுகளைக் கழகத்தில் உள்ளவர்களும், காங்கிரஸ் கட்சியினரும் புதுவையில் ஏற்றுச் செயல்படவும் தயங்கவில்லை.

ஆனால் திடீரென்று காங்கிரஸ் கட்சி, தனது ஆதரவை திரும்பப் பெற்றுக் கொண்டதன் மூலம், தென்னாட்டில் ஏதோ ஒரு புதிய உறவுக்குக் கை நீட்டி விட்டது என்பது தெளிவாகப் புரிகிறது.

உறவை முறித்துக் கொள்ள அவர்களுக்குள்ள உரிமையில் யாரும் தலையிட முடியாது! ஆனால், புதுவையில் ஒரு நிலையான ஆட்சி நீடிப்பதை எதற்காகத் தடுத்திட வேண்டும்?

காங்கிரசின் பலம், சபாநாயகர் நீங்கலாக ஒன்பது பேர்! கழகத்தின் பலம் பதின்மூன்று! ஜனதா, முஸ்லிம் லீக், மார்க்சிஸ்டு ஆதரவுடன் கழகத்தின் பக்கம் பதினெட்டு பேர்! அந்தப் பதினெட்டும் உறுதி என்பதற்குக் கவர்னரிடம் தி.மு.க. சார்பிலும், ஜனதா சார்பிலும், முஸ்லிம் லீக் சார்பிலும், மார்க்சிஸ்டு கட்சி சார்பிலும் கடிதங்கள் தரப்பட்டன! அந்தக் கட்சிகளின் தலைமைகள் ஆதரவளித்து அறிக்கைகளும் வெளியிட்டிருக்கின்றன!

எனினும் முப்பது பேர் கொண்ட சட்டசபையில், பதினெட்டு என்பது மெஜாரிட்டி ஆகாது என்று, ஒரு புது அரசியல் ஜனநாயக இலக்கணத்தைக் கவர்னர் சண்டி அவர்கள் கண்டுபிடித்து, சட்டசபையையே கலைக்குமாறு பரிந்துரை செய்து விட்டார்.

காங்கிரசுக்கு அஸ்ஸாம் ஜனநாயகம், இமாசல பிரதேச ஜனநாயகம், அரியானா ஜனநாயகம், மேகாலயா ஜனநாயகம், கேரள ஜனநாயகம், இவைகள்தான் ஒத்துவரக்கூடிய ஜனநாயகங்கள் போலும்!

பதினெட்டு பேர் கொண்ட கூட்டணிப் பெரும்பான்மையைக் காங்கிரஸ் கட்சி, ஜனநாயகம் என்று ஏற்றுக் கொள்ளாதது விந்தையிலும் விந்தையே!

திருப்பத்தூர் இடைத் தேர்தலில் தி.மு.கழகம், காங்கிரசை ஆதரித்த போதிலும் தேர்தல் பிரச்சாரத்திற்குப் போகவில்லையாம் - அதை இப்போது சில பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன! தினமணி கூட தலையங்கம் தீட்டிச் சுட்டிக் காட்டுகிறது!

ஆம்! திருப்பத்தூர் காங்கிரஸ் வென்ற இடம்! எனவே இடைத்தேர்தலில் காங்கிரசுக்கு ஆதரவு என அறிவித்தோம்!

''எங்களை ஆதரிப்போரை எங்கள் மேடையில் அனுமதிக்க மாட்டோம்''.

இப்படிக் காங்கிரஸ் அறிவித்த பிறகு - திருப்பத்தூர் தொகுதியில் தனி மேடை போட்டுக் கொண்டு தேர்தல் பிரச்சாரம் செய்ய, தி.மு.க.வுக்கு என்ன அவ்வளவு மான உணர்ச்சி இல்லாமலா போய்விட்டது!

திருப்பத்தூர் விவகாரம், மூன்றாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சி! அதற்கும் இப்போது புதுவையில் காட்டிய அவசரத்திற்கும், ஆத்திரத்துக்கும் என்ன ஒற்றுமை?

பெரியகுளத்திற்குப் பிறகும் - திருச்செந்தூருக்குப் பிறகும் கூட - அண்மையில் பிரதமர் அவர்கள், புதுவை கூட்டணி நீடிக்கிறது என்று தானே செய்தியாளர்கள் பேட்டியில் குறிப்பிட்டார்கள்!

பிறகேன் இந்தத் திடீர் முடிவு? எதற்காக இந்த ஜனநாயகப் படுகொலை?

புதிய அரசியல் உறவுக்காகப் பழைய உறவை உதறி விடுவதைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம்! அதற்காக ஜனநாயகத்தின் கழுத்தை இப்படி அழுத்திக் கொல்ல முனையலாமா?

புதுவை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

அவர்களைச் சிந்திக்கச் செய்யுமளவுக்கு, உடன்பிறப்பே! நீ செயலாற்ற வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(26-06-1983)

1117. கிரீடமும், போர் வாளும்!

உடன்பிறப்பே,

கிரீடத்தைப் பறித்துக் கொள்ளலாம்! ஆனால், என் கையில் உள்ள போர்வாளை எவரும் பறித்துக் கொள்ள முடியாது!

என நான் கூறியபோது கேலி பேசிய நாவலர் அவர்கள், கிரீடத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தானே போர்வாள் தேவை! கிரீடம் போன பிறகு போர்வாள் எதற்காக? என்று கேட்டார்! மறந்திருக்க மாட்டாய்!

கிரீடத்தை மட்டும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென எண்ணிவிட்டவர்கள், எதைச் செய்தாகிலும் அதனைத் தக்க வைத்துக் கொள்வர் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் ஆயிரம் ஆயிரமாக உண்டு!

மண்டியிட்டு வணங்கி, மாற்றான் பாதங்களில் மலர் தூவி மகுடங்களைப் பாதுகாத்துக் கொண்ட மனிதர்களும் உண்டு! அவர்களை மனித குலம் அலட்சியமாகப் பார்த்துப் புன்னகையைக் கேலியாக நெளிய விட்டவாறு சென்றாலும், அதுகுறித்துக் கவலைப்படாது, தலையில் உள்ள மகுடத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பார்கள்! அந்தப் பதவிப்பிரியர்களுக்குச் சுகம், சோபிதம், அதிகாரம், ஆள் அம்பு, பல்லக்கு, பவிஷு இவைகள் இல்லாவிட்டால் உறக்கமே வராது! உழன்று கொண்டேயிருப்பர் படுக்கையில் புரண்டவாறு!

ஆனால், அந்தக் கிரீட சுகத்தைத் தூசுக்குச் சமமாக மதித்துக் கையில் வாளேந்தி, கொண்ட கொள்கைகளுக்காகக் களம் பல கண்டு, விழுப்புண் முத்திரைகளை உடலெங்கும் ஏற்றுக் களிக்கின்ற வீரர்களையும், வரலாறு முத்தமிட்டு வாழ்த்திக் கொண்டிருப்பதை நாம் படித்துக் கொண்டுதானிருக்கிறோம்.

நெருக்கடி நிலை காலத்தின்போது சில மாதங்கள் தமிழகத்தில் நமது ஆட்சி இருந்தபோது, இந்தியாவில் ஒரு தீவு என்ற தமிழ்நாட்டைத் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டபோது - நான் சட்டப்பேரவையில் ஆற்றிய உரையொன்று,'' வாளும் கேடயமும்'' என்ற தலைப்பில் வெளி வந்ததை நினைவில் வைத்திருப்பாய்!

அப்போதே கழக ஆட்சியெனும் கிரீடம் பறிக்கப்பட்டு விடும் என்று தெரிந்துதான் - அதற்கான நாளை எதிர்பார்த்துக் கொண்டுதான் - ஜனநாயகத்தைக் காத்திடும் பணியில் அறப்போர் வாள் ஏந்தி நின்றோம்! இதனை அகிலம் அறியும்!

ஜனநாயகம் பாதுகாக்கப்படக் கழகத்தின் செயற்குழுவைக் கூட்டி, நெருக்கடிப் பிரகடனத்தை எதிர்த்து முதல் குரல் கொடுத்தமைக்காக ஆட்சியை இழந்தோம்! ஆம்! கிரீடம் பறிக்கப்பட்டது! கொடுமைகள் அள்ளித் தெளிக்கப்பட்டன! அப்போதும் பொன் முடிதான் போயிற்றே தவிர, நம் கரத்தில் மின்னிய போர்வாளை எவராலும் அபகரித்துக் கொள்ள இயலவில்லை!

கழகப் பாசறையில் தனிப்பட்டோர் சிலர் - ஆட்சிச் சுகத்தில் ஆனந்த பைரவி கேட்டுக் கொண்டிருந்தவர்கள் வேண்டுமானால், போர்வாளைத் தூக்கி எறிந்துவிட்டு - ஏதாவது ஒரு தலைப்பாகை கிடைத்தால் போதுமெனத் தாவியிருக்கக் கூடும்! உடன்பிறப்பே! நீ அறியாத உண்மையா என்ன?

அந்த வேதனை மிகுந்த வேளையில் - சோதனை சூழ்ந்த நேரத்தில் - சிறையில் நூனூறுக்கு மேற்பட்டோர் மிசாக் கைதிகளாக!

வெளியிலோ பல்வேறு சித்ரவதைகளைச் சிரித்த முகத்துடன் ஏற்றுக்கொண்ட சிங்க ஏறுகள்!

அவர்களில் ஒருவராகத்தான் அன்று என்னுடனிருந்து நெருக்கடி நெருப்பாற்றில் நீந்திடத் துணை வந்தார் நண்பர் ஜி. லட்சுமணன்! அப்போது அவர் மாநிலங்களவை உறுப்பினர்! அங்கும் அச்சமின்றி முழங்கினார்! சலனம், சபலத்திற்கு இடமின்றி அவர் அந்தச் சபையில் எழுப்பிய சங்கநாதம், எப்போதும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது! சிலரைப் போல் அவர் நெஞ்சில், நடுக்கத்தேள் கொட்டியிருந்தாலோ

- பதவித் தேனின் சுவையை மறந்திட மனமற்றிருந்தாலோ - சாதாரண மனிதனுக்கும் கீழான இடம் கூட கிடைத்திருக்காது! ஆனால் கிரீடம் கிடைத்திருக்கும்! அதைப் பொருட்படுத்தாத காரணத்தினால்தான், போர்வாள் ஏந்திய மாவீரராகப் பாராட்டப் பெற்றார்!

இதோ - நமது கழகத்தின் மறக்குல மாண்பினை எடுத்துக்காட்ட, மற்றொரு சாதனையை எனது உடன்பிறப்பு லட்சுமணன் செய்து காட்டியுள்ளார்.

முற்றிலும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு முரணான வகைகளில் - புதுவையில் தி.மு.க. தலைமையிலான ஆட்சியைத் தொடர விடாமல் செய்யும் மரபு மீறிய காரியம் நடைபெற்று முடிந்துவிட்டது! முப்பது பேர் கொண்ட சட்டசபையில் பதினெட்டு பேரை மெஜாரிட்டி என ஏற்றுக்கொள்ள மறுத்து - அதை நிரூபித்துக் காட்டவும் வாய்ப்பளிக்க மறுத்து - நிகழ்த்தப்பட்ட ஜனநாயகப் படுகொலைக்குப் பிறகும், டெல்லி நாடாளுமன்றத்துத் துணைத் தலைவர் பதவியில் நீடிப்பது என்பது, நடைபெற்ற அநீதிக்கு ஒப்புதல் அளித்தது ஆகாதா? என எண்ணினார்! அவ்வாறே தலைமைக் கழகமும் எண்ணியது! உடனே அந்தப் பதவியைத் துறந்து கிரீடம் போகட்டும்! வாள் இருக்கிறது இதோ! என கர்ச்சனை செய்கிறார்! கட்டித்தழுவி வாழ்த்துகிறேன் அவரை!

பதவிப்பசை சாதாரணமானதல்ல! ஒட்டிக் கொண்டால் பிய்த்துக் கொண்டு வர பலருக்கு மனம் வராது!

மானமுள்ள மரபு தான்! குற்றச்சாட்டை நிரூபிக்காவிட்டால் பதவியைத் தூக்கி எறிவேன்! என்று குதித்தவர்கள் எல்லாம் கூட, குழிக்குள் பதுங்கிக் கொண்டு பதவியுடன் குலவி மகிழும் காலம் இது! மானமாவது - மண்ணாங்கட்டியாவது! பதவியே அவர்கட்குப் பரலோக சௌபாக்கியம்!

ஆனால் நமது லட்சுமணன் - டெல்லியிலே அமைச்சர்களுக்குரியது போன்ற பெரிய பங்களா - மாநில முதல்வர்களுக்குரியது போன்ற அலுவலக அறை - பதவிக்கேற்ற பல்வேறு வசதிகள் - இந்தியாவில் எந்த மாநிலத்திற்குச் சென்றாலும், அந்த அரசுகளின் சார்பில் விருந்தினர் மாளிகை, வாகன வசதிகள், போலீஸ் பாதுகாப்பு - இன்னபிறவும் உண்டு

எனினும், அனைத்தையும் சற்றும் யோசிக்காமல் உதறிவிட்டு, இன்று எனக்கு மகிழ்ச்சியான நாள் என அறிவித்தாரே! அந்த வாசகத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு கோடி பெறும்!

அவருக்கு மட்டுமல்ல உடன்பிறப்பே! எனக்கும், உனக்கும் கூட மகிழ்ச்சியான நாள்தானே அந்த நாள்!

கிரீடத்தைப் பறித்துக் கொள்ளலாம்! ஆனால், நம் கையில் உள்ள போர்வாளை யாரும் பறித்துக் கொள்ள முடியாது!

அன்புள்ள,

மு. க.

(27-06-1983)

1118. நாடறிந்தது - நடக்கப் போவது!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் ஆளுங்கட்சியினர் நடத்தும் அராஜகம் தொடர்கதையாகி வருகிறது.

திருவள்ளூர் தண்டபாணி முதல் திருச்செந்தூர் ஆலயத்தில் அதிகாரி சுப்பிரமணியபிள்ளை வரையில், படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட பயங்கரச் செய்திகளின் பட்டியல் மிக நீளம்! அந்தக் கொலைகள் மட்டுமன்றி, அண்மையில் புரசை ராஜேந்திரன் என்ற கழகக் காளை, கட்சிப் பணியாற்றிக் கொண்டிருக்கும்பொழுது துடிக்கத் துடிக்கத் துண்டாடப்பட்டுக் கொல்லப்பட்டான். இதோ, திண்டிவனத்தில் ஜெயகோபால் என்ற இந்திரா காங்கிரஸ் தொழிற்சங்கத் தோழர், படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இவைகளேயன்னியில், இந்த அரசுக்கு எதிரான கருத்துகளைச் சொல்லுகிற எவராயினும் அவர்கள், ஆளுங்கட்சியினரின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு ஆளாகிறார்கள்.

மிக அண்மைக் காலத்தில் நடைபெற்றுள்ள அராஜக நிகழ்ச்சிகளை மட்டுமே கணக்கில் எடுத்தால் கூட, ஏதோ ஒரு காட்டுமிராண்டி பூமியில் வாழ்வது போன்ற எண்ணமே ஏற்படுகிறது!

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி அவர்களை, திட்டமிட்டு - வரவேற்பு நடத்துவது போல தி.மு.கழகக் கொடிகளைக் காட்டி அவரது காரை நிறுத்தி, காரிலிருந்து இறங்கியவரைக் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தினர்! அந்தச் சம்பவத்தையொட்டி, இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

வணிகர்கள் கடையடைப்பு நடத்தியபோது, மதுரையில் அலுவலகத்திற்குள்ளே அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த மார்க்சிஸ்டு கட்சிச் செயலாளர் நல்லசிவன் எம்.எல்.சி., தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் எம்.எல்.ஏ., இருவரையும்

தாக்கியதோடு, அவர்களது கார்களையும் சேதப்படுத்திவிட்டு ஓடினர்!

இப்போது மதுரையில், அனைத்துக் கட்சிப் பேரணியினர் மீது சோடா புட்டி வீச்சு! கலவரம்!

அதற்கு அடுத்த நாள் நண்பர் நெடுமாறன் அவர்கள் வீட்டில் இல்லாத சமயம் ஆளுங்கட்சியினர் கும்பலாகக் கூடி வந்து வீட்டுக்குள் சோடா புட்டிகளையும், கற்களையும் வீசிக் கலகம் விளைத்துள்ளனர்.

திருச்செந்தூரில் நடைபெற்ற ஒரு விழாவில் அறநிலையத்துறை அமைச்சர், ஆதீனகர்த்தர்களை அவதூறாகப் பேசினாராம்! அதற்கு அங்கிருந்த மதுரை ஆதீனகர்த்தர் கடுமையாகப் பதில் அளித்தாராம்! மறுநாள் அதன் விளைவு என்ன தெரியுமா? மதுரை மடாலயத்திற்குள் ஆளுங்கட்சியின் படை புகுந்தது! சோடா புட்டிகள், கற்கள் சரமாரியாக வீசப்பட்டன!

ஆதீன கர்த்தர், தனக்குப் பாதுகாப்புத் தேவையென்று அறிக்கை விடவேண்டிய அவசியத்துக்கு ஆளாகியிருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்பு, கோவையில் ஒரு கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிய ஜனா. கிருஷ்ணமூர்த்தி, திருக்கோயிலூர் சுந்தரம் ஆகியவர்களின் கார் மறிக்கப்பட்டு அவர்களும் பயங்கரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

யாரோ சிலர் உணர்ச்சிவயப்பட்டு இந்தக் காரியங்கள் நடைபெறுவதாக நினைப்பதற்கு இடமே இல்லை.

அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்துவோர் - கருத்துக் கூறுவோர் - எந்தக் கட்சியினராக இருந்தாலும், எந்தத் தரப்பினராக இருந்தாலும் அவர்களை, மக்கள் பார்த்துக் கொள்வார்கள்! மக்களை விட்டுச் சந்திப்பேன்! சமாளிப்பேன்!

என்று அடிக்கடி முதலமைச்சர் அவர்களே முண்டா தட்டும் பேச்சில் ஈடுபடுவதுதான், இத்தகைய வன்முறைகளுக்குக் காரணம் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது!

தனக்குப் பயன்படாதவர்கள் இருக்கக்கூடாது - பயப்படாதவர்கள் வாழவே கூடாது - பழிவாங்கியே தீரவேண்டும் என்ற பாசிச அரசியலுக்குப் போடப்படும் பாதை, இறுதியில் ஒரு முட்டுச் சந்தில் போய்த்தான் முடியும்! இதுதானே வரலாறு!

ஜனநாயகத்தில் ஆளுங்கட்சிகள் - எதிர்க்கட்சிகள் - ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்! இந்தச் சர்வ சாதாரண இலக்கணத்தைக் கூட ஏற்றுக் கொள்ளாமல், எதிர்தரப்புக் கருத்துகளை வன்முறைகளைத் தூண்டுவதன் மூலம் அழித்து விடலாம் எனக் கருதுவது, இடைக்காலத்திற்கு வேண்டுமானால் மன எரிச்சலை அடக்கிட உதவும்! சிரங்கைச் சொறியும் போது சிறிது இதமாகத்தான் இருக்கும்! சொறிந்து முடிந்த பிறகு எரிச்சல் மிகும்! புண் பரவும்! அய்யோ - அம்மா என்ற கூச்சல் எழுப்ப வேண்டியிருக்கும்.

இதை உணர்ந்து இந்த அரசு செயல்பட்டால் நல்லது.

அல்லது, கிளர்ந்தெழும் மக்களின் அறப்போர் அணியின் முன்னே மண்டியிடும் காலம் விரைவில் வந்தே தீரும்!

அந்த மக்கள், எம்.ஜி.ஆர். கட்சியின் மக்களைப் போல கத்தியைத் தீட்டிக் கொண்டு பாய்பவர்கள் அல்ல! புத்தியைத் தீட்டிக் கொண்டு பொல்லாங்கை ஒரு கை பார்ப்பவர்கள்!

இது நாடறிந்த உண்மை!

நடக்கப்போகும் உண்மையுங்கூட!

அன்புள்ள,

மு. க.

(03-07-1983)

1119. சிவதாணுவும் - சிந்தனையும்!

உடன்பிறப்பே,

ஓய்! என்னங்காணும்! நம்ப ஆச்சார அனுஷ்டானமெல்லாம் என்ன ஆச்சு? வாய் நிறைய வெத்திலை பாக்கைக் கொழையக் கொழைய மென்னுண்டு கோயில் பூஜைக்கு வர்ரீரே நியாயமாங்காணும்?

அட, சத்தம் போடாதீர் ஓய்! ஆச்சாரம் ஒண்ணும் கெட்டுப் போகலே! நான் தாம்பூலத்தை ஒண்ணும் சும்மா போடலே! லேசா கொஞ்சம் மது அருந்திட்டேன். அந்த வாசனை தெரியக்கூடாதேங்கிறத்துக்காக வெற்றிலை பாக்கைக் குதப்பிண்டிருக்கேன்!

அடப்பாவி மனுஷா! மது வேற குடிச்சீரா? கர்மம்! கர்மம்! போச்சு! போச்சு! நம்ப ஆச்சாரமே ஆகாசத்திலே பறந்து போச்சு!

ஏன் காணும் துடிக்கிறீர்? மாமிசம் சாப்பிட்டா அது ஜீரணிக்கிறதுக்குக் கொஞ்சம் குடிச்சா தேவலை! அதனால் என்னங்காணும் ஆச்சாரம் குறைஞ்சு போச்சு? சும்மா உளராம போங்காணும்!

இப்படியொரு உரையாடல் கோயில் வாசலில் இரண்டு அர்ச்சகர்களுக்கிடையே நடைபெற்றது! எந்த ஊர்? எந்தக் கோயில்? யார் அந்த அர்ச்சகர் என்றெல்லாம் கேட்பாய்!

பல வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற மயில் ராவணன் என்ற நாடகத்தில், இப்படியொரு காட்சியைப் புகுத்தியிருந்தோம் என்று, அந்த நாடகத்தில் அர்ச்சகர் வேடம் தாங்கிய நடிகர் டி.என். சிவதாணு அவர்கள், கடந்த பத்தாம் தேதி சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற தமிழர் கலைவிழா நிகழ்ச்சியில் குறிப்பிட்டார். சிவதாணு அவர்கள் திராவிடர் கழகமோ, தி.மு.கழகமோ அல்ல! அழுத்தமான கதர் சட்டை அணிந்த பழுத்த தேசியவாதி! அதே சமயத்தில் பகுத்தறிவுவாதி! அவர் சொன்ன அந்தக் காட்சியில்

ஆச்சாரங்களை மதிக்கும் அர்ச்சகர் ஒருவர்! மதிக்காத அர்ச்சகர் ஒருவர்! மாமிச உணவை சுவைத்து விழுங்குகிறார்! அது செரித்திட மதுவும் தேவைப்படுகிறது! அந்த வாசனை வெளியே தெரியாமலிருக்கத் தாம்பூலமும் தேவைப்படுகிறது! இத்தனை அலங்கோலமாக அர்ச்சகர் ஆண்டவனின் சந்நிதானத்துக்கு எழுந்தருளி, மந்திரம் ஜெபித்து, தூப தீபம் காட்டி, மக்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கிட வருகிறார்!

கலைவிழா என்பதால், அந்தக் காலத்திலேயே நாடகங்களில் அறிவியக்கக் கருத்துகள் எப்படி இடம் பெற்றன என்பதற்காக திரு. சிவதாணு அவர்கள், அந்தக் காட்சியை விளக்கி உரையாற்றினார்! மேடையிலிருந்த நகைச்சுவை நடிகர் பெரியவர் சாரங்கபாணி உட்படக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கானோர் வயிறு வலிக்கச் சிரித்தோம்!

உடன்பிறப்பே, நான் சிரித்ததோடு நிற்கவில்லை! தொடர்ந்து சிந்தித்தேன்! வீட்டுக்கு வந்த பிறகும் சிந்தித்தேன்! நீயும் சிந்திக்க வேண்டும், நாடும் சிந்திக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்! சிவதாணு அவர்கள் சொன்ன அந்தக் காட்சி சிரித்து மகிழ மட்டுமல்ல!

மது, மாமிசம் இரண்டின் வாசனையும் தெரியாமல் இருக்க, வாய் சிவக்கத் தாம்பூலத்தை மென்று கொண்டு வரும் அர்ச்சகரை எண்ணும் போது இன்று, நமக்கு யார் நினைவு வருகிறது?

அண்ணாவின் கொள்கை - அண்ணாவின் குறிக்கோள் - அண்ணா காட்டிய பகுத்தறிவு நெறி - இவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களை ஏமாற்ற இன்றைக்குச் சிலர் அண்ணா நாமம் வாழ்க! என்று கூறி அண்ணாவைக் கொடியிலே பொறித்துக் கொண்டு உலவுகிறார்களே! ஏன் தெரியுமா? ஆச்சாரமிழந்த அர்ச்சகருக்குத் தாம்பூலம் தேவைப்பட்டது போல இவர்களுக்கு அண்ணா நாமம் தேவைப்படுகிறது! அவ்வளவுதான்!

மது, மாமிச வாடையை மறைத்திட வாயில் தாம்பூலம்! அந்த அர்ச்சகருக்கு!

சங்கரர் வழிபாடு, மூகாம்பிகை தரிசனம், மாநில சுயாட்சி எதிர்ப்பு - இந்தக் கொள்கை முரண்பாடுகளின் முடை நாற்றத்தை மறைத்திட அண்ணாவின் நாமம்! இந்த எத்தர்களுக்கு!

ஆச்சாரத்தில் நம்பிக்கையுள்ள அர்ச்சகர் அலறித் துடிக்கிறார்! நம்மைப் போல!

அதில் நம்பிக்கையற்ற அர்ச்சகரோ, தாம்பூலத்தைக் கொண்டு தன் தவறுகளை மறைத்திட முனைகிறார்!

அன்று நடந்த நாடகத்தில் அந்த இரு அர்ச்சகர்கள்!

இன்று நாட்டு நடப்பில் அண்ணாவின் பெயர், தாம்பூலமாகச் சிலருக்குப் பயன்படுகிறது!

நமக்கோ அண்ணாவின் கொள்கை, நம் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் சிலிர்த்து நிற்கிறது!

சிவதாணு கூறியது, சிரிப்புக் காட்சிதான்! ஆனால் எத்தனையோ சிந்தனைகளைக் கிளறுவது!

அன்புள்ள,

மு. க.

(13-07-1983)

1120. முறைதானா? எண்ணிப்பார்!

உடன்பிறப்பே,

யாதும் ஊரே யாவரும் கேளீர்! இந்த வாசகம், வையத்துள் வாழும் மக்கள் எல்லாம் உறவினரே - ஒரு குலத்தினரே என்ற கருத்தைப் பெருமிதமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது!

எல்லா நாடுகளையும் ஒரே நாடாக ஆக்கி - நாட்டுக்கு நாடு உள்ள எல்லைக் கோடுகளை அழித்துவிட்டு - ஒரே மனித நாடு என ஆக்கிட வேண்டுமென்ற கருத்தை உள்ளடக்கிப் பண்டைத் தமிழ்ப்புலவன், அந்தப் பாடல் வரியை உருவாக்கிடவில்லை!

பல மொழி பேசும் மக்கள் - பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடுகள் - ஒன்றோடொன்று மோதிப் போரிட்டுக் கொள்ளாமல் அமைதி காத்திட வேண்டுமென்ற குறிக்கோள் கொண்டே, உலக அமைதிக்காக, அந்தப் பாடல் முழங்கப்பட்டது!

வலிவான படைகளையும், படைக்கலன்களையும் கொண்டுள்ள துணிவில், பிற நாடுகளை வளைத்துப்போட்டு அடிமைகளாக்கிட எந்தவொரு வல்லரசும் முனைந்திடக்கூடாது! உலக அமைதியை நாடும் எவரும், அந்தமுறையை ஏற்றிடார்! எதிர்த்திடுவார்!

அரசின் செல்வாக்கு, அதிகார பலம் என்ற ஆலவட்டங்கள் சூழ்ந்திருப்பதாலேயே ஒரு மொழி ஆதிக்கம் பெற்று, பிற மொழிகளையும், அந்த மொழி பேசும் மக்களையும் இரண்டாந்தரக் குடிமக்களாக்குவதை எவரும் சகித்துக் கொள்ளமாட்டார்!

உலக அமைதியை வேண்டுகிற அதே நேரத்தில், இந்திய நாட்டின் சுதந்திரத்தைப் பறிக்க எவர் வரினும் அனுமதிக்கமாட்டோம்!

இந்திய நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் அதே சமயத்தில், திராவிட இனத்தின் தொன்மை வாய்ந்த கலாச்சார

உணர்வை எள்முனையளவு விட்டுக் கொடுக்கவும் இடம் தரமாட்டோம்!

திராவிடக் கலாச்சாரத்தை மதித்துப் போற்றும்பொழுது, தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படாமல் - அதன் உரிமைகள் குலைக்கப்படும் முயற்சிகள், மறைமுகமாக நடைபெற்றாலுங்கூட, அதனை எதிர்த்துப் போர்முரசம் ஆர்த்திடத் தயங்க மாட்டோம்!

அதனால்தான்,

மொழியால் நான் தமிழன்!
இனத்தால் - திராவிடன்!
நாட்டால் இந்தியன்!
உலகத்தால் மனிதன்!

என்று நான் அடிக்கடி எடுத்துக் கூறிடுகிறேன்! இதனைக் கேலி செய்து பேசுவோரை நானறிவேன் - அவர்கள் தாய்மொழியை மறந்துவிட்டுத் தேசியத்தை மட்டும் போற்றுபவர்களாக இருக்கக்கூடும்! இன உணர்வுகள், மோதுதலை உருவாக்கக் கூடாது! ஏற்றுக் கொள்கிறேன்! அதற்காக இன உணர்வே கூடாது என மறுப்போரின் கூற்றை எங்ஙனம் ஏற்பது?

பெற்றெடுத்த மொழிக்கும், பெற்றெடுத்த மண்ணுக்கும் ஒரு தனிப் பெருமை உண்டு என்பதை உணர்ச்சிபூர்வமாக ஏற்றுக் கொள்கிற காரணத்தால் - குறுகிய நோக்கு வந்து குதித்து விடுவதாகக் கூறுவோர், நமது எண்ணத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளாத குறையுடையோர்!

பிறந்த மண் தமிழ் மண்!
பிறந்த குடி தமிழ்க்குடி!
பெற்றெடுத்த தாய்மொழி தமிழ்மொழி!

இந்த உணர்வினைக் கொள்வதே தீதென்போர், இதோ ஒரு செய்தியைப் படித்திடுதல் நலம்!

இந்தியாவின் குடியரசுத் தலைவராக வீற்றிருந்தவர்! இந்தியச் சுதந்திரத்திற்காக அரும் பாடுபட்ட தளகர்த்தர்களில் ஒருவர்! இந்தியாவின் ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கை உடையவர்! அவர்தான் அன்புக்குரிய சஞ்சீவ ரெட்டியார்!

அவர் உடல் நலிவுற்றார்! சென்னைக்கு அழைத்து வந்து சிகிச்சை அளித்தார்கள்! உடல்நலம் பெற்று ஆந்திரத்திற்குத் திரும்பினார்!

திரும்பியவுடன் அனந்தப்பூரில் நிருபர்கள் அவரைச் சந்தித்தனர்! அப்போது என்ன சொன்னார் தெரியுமா?

இனி நான் உடல் நலிவுற்றால் என்னை இங்கிருந்து எங்கும் கொண்டு செல்லக் கூடாது! என் உயிர் இங்கேயே பிரிந்து இந்த மண்ணுடனேயே கலக்க வேண்டும். இதுதான் என் ஆசை!

அவருக்குத் தெரியாமலே சென்னைக்குக் கொண்டு வந்து விட்டார்கள் என்பதற்காகவும், அவர் குறைபட்டுக் கொண்டிருக்கிறார் நிருபர்களிடம்!

உடன்பிறப்பே, இந்தியா முழுதும் ஒரே நாடுதான் என்றாலும் - இந்த இந்தியா முழுமைக்கும் ஜனாதிபதியாக இருந்த ஒருவர், தன்னைப் பெற்றெடுத்த மண், ஆந்திரத்து மண் என்பதையும், அந்த மண்ணோடுதான் தனது உடல் கலந்திட வேண்டுமென்பதையும் எவ்வளவு உணர்வுபூர்வமாக வெளியிட்டிருக்கிறார் பார்த்தாயா?

அந்த உணர்வு இங்குள்ள தமிழனுக்கும் ஏற்பட வேண்டுமென்றால், அது குறுகிய நோக்கம் எனக் கூறிடுதல் முறைதானா? எண்ணிப்பார்!

அன்புள்ள,

மு. க.

(14-07-1983)

1121. இன்னுமா கொடுமை? இனியுமா சகிப்பது?

உடன்பிறப்பே,

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே, இலண்டன் மாநகரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசிய செய்தி நம் நாட்டு ஏடுகளில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் ஈழ விடுதலைக்குப் போராடும் தீவிரவாதிகள் மீது அரசின் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும். விடுதலை விரும்புவோரின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கவோ, அக்கறை காட்டவோ இலங்கை அரசு தயாராக இல்லை. இராணுவ சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தும் சாத்தியக்கூறுகளைத் தள்ளிவிட முடியாது. தமிழ் மக்களின் கருத்துகளைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. பயங்கரவாதிகளை ஒழித்துக்கட்டும் வரை நிம்மதி இல்லை. காவலில் உள்ள கைதிகள் முறைகேடாக நடத்தப்பட்டுள்ளார்கள் என்பது எனக்கும் தெரியும்.

இப்படி வீராவேசமான ஒரு பேட்டியை ஜெயவர்த்தனே அளித்துள்ளது, அவரது ஆட்சி மேலும், மிருகத்தனமாக இலங்கையில் உள்ள தமிழர்களைக் கொடுமைப் படுகுழியில் தள்ளி கோர நர்த்தனம் ஆடப்போகிறது என்பதற்கு முன்னறிவிப்பாக அமைந்துள்ளது.

இலங்கையில் இராணுவமும், போலீசும் சந்தேகத்திற்கிடமான தமிழர்களைச் சித்ரவதை செய்து கொன்று குவிப்பதாக ஆம்னஸ்டி இன்டர் நேஷனல் எனப்படும் சர்வதேச மனித உரிமை அமைப்பு, குற்றம் சாட்டியுள்ளதைக் கூட ஜெயவர்த்தனே மறுக்காமல், அப்படித்தான் நடைபெறும் என்பதைப் போல இலண்டனில் பேட்டியளித்திருப்பது இந்த நூற்றாண்டின் மாபெரும் காட்டுமிராண்டித்தனமானதாகும்!

இன்னும் தீவிரமாக ஈழத்தமிழ் விடுதலை வீரர்களை அடக்கப் போகிறாராம்! நடுத்தெருவில் பிணமாக்கப்படுகிறார்கள் தமிழர்கள்! நாகரிகமற்ற முறையில் கேவலப்படுத்தப்படுகிறார்கள் தமிழச்சிகள்! சிறைப்பட்ட விடுதலை வேங்கைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளோ, அம்மவோ! நினைக்கவே நெஞ்சு பிளக்கிறது!

சுடு தணலில் தலைகீழாகத் தொங்க விடுதல்! மர்மஸ்தானத்தில் மிளகாய்ப் பொடி தூவுதல்! சிறிய கம்பிகளை நுழைத்து அலற விடுதல்! மலத் துவாரத்தில் குச்சியைப் புகுத்தல்! பின்னர் அந்தக் குச்சியை இன்னொரு விடுதலை வீரனின் வாயில் திணித்தல்! இவை, சிறைக் கொடுமையில் ஒரு பகுதி!

இராணுவமும், போலீசும் மட்டுமின்றிச் சிங்கள வெறியர்களும் தங்கள் இஷ்டத்துக்கு வெறியாட்டம் நடத்துகிறார்கள்! இந்த முக்கூட்டு வெறித்தனத்தின் காரணமாக, இலங்கைத் தெருக்களில் தமிழனின் ரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறது!

சுமார் இருபத்தைந்து ஆண்டுக்காலமாக புழுப்போல மிதிபட்ட தமிழ் இனம், இன்று புலி போலச் சிலிர்த்தெழுந்து போராட வேண்டிய தவிர்க்க முடியாத சூழல் உருவாகிவிட்டது!

உரிமை கேட்கும் தமிழன், உயிரைக் கொடுக்கிறான் விலையாக! எனினும், உரிமை கிடைத்தபாடில்லை! எத்தனை நாள்தான் எதிர்க்கும் சக்திக்கு, வேலி போட்டுத் தடுக்க முடியும்? அதன் விளைவு பயங்கர சட்டங்கள்! இராணுவ நடவடிக்கைகள்! சிங்கள இனவெறி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சம்பவங்கள்!

இலங்கையில் தமிழினம் படும் துயர் கண்டு, தாய்த் தமிழகம் கண்ணீர் வடிக்கிறது! கைபிசைந்து நிற்கிறது! என்னுயிரே! உயிரின் மூச்சே! இதயத் துடிப்பே! இனமானத் தமிழ் மகனே! நீ எந்த மண்ணைத் திருத்தி வளமிகு சோலையாக்கினாயோ, அந்த மண்ணிலே உன் தலை பந்தாடப்படுகிற செய்தி கேட்டு, ஆயிரம் செந்தேள் செவியிலே கொட்டியது போல் துள்ளுகிறோம் - துவண்டு போகிறோம்.

இன்னும் தீவிர நடவடிக்கைகளாம்! எடுக்கப் போகிறாராம்! எச்சரிக்கிறார் இலங்கை அதிபர்!

இனியும் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா, இங்குள்ள இந்திய அரசு?

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரிடம் காட்டும் பரிவு - ஆப்பிரிக்க விடுதலை வீரர்களுக்கு காட்டும் ஆதரவு - அவற்றில் ஒரு துளி! இந்திய நாட்டு அரசு, இலங்கையில் விடுதலைக் கொடி ஏந்தியுள்ள தமிழர்கள் மீது காட்டிடக் கூடாதா?

இந்தக் கேள்வியில் நியாயம் இல்லையா? இந்திய அரசு, சிந்திக்க வேண்டாமா?

மனிதாபிமான அடிப்படை என்பது தமிழர் பிரச்சினையில் மட்டும் தலைநீட்டிப் பார்க்காதா?

இலங்கைக் கொடுமைக்கு ஒரு முடிவு காண இந்தியப் பேரரசு, ஒருக்கணமும் தயங்காமல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

ஐந்து கோடி தமிழர்கள் மட்டுமல்ல! அயல்நாடுகளில் பரவியுள்ள தமிழ் இனம் முழுவதும்! இதற்கோர் முடிவே கிடையாதா? எனக் கொதித்துக் கேட்கிற நிலையை இந்திய அரசினர் உணர்ந்திட வேண்டும்! அதுவும் உடனடியாக!

அனபுள்ள,

மு. க.

(15-07-1983)

1122. வாலா? குதிரையா?

உடன்பிறப்பே,

தேர்தல் நேரத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள், அறிவித்த பளபளப்பான ஜிகினா அறிவிப்புகளில், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டமும் ஒன்று! அதை நடைமுறைக்குக் கொண்டு வரப்போவதாக அடிக்கடி கூறிக் கொண்டும் இருந்தார். கடைசியாக நான்கைந்து மாதங்களுக்கு முன்பு, சட்டப் பேரவையில் படிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில், வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்திற்காகப் பதினைந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு மாதக்கணக்கில் வாயை மூடிக் கொண்டிருந்த அந்தத் திட்டம், இப்போது வாயைத் திறந்திருக்கிறது.

முதல் கட்டமாக அதற்காக அரசாங்கம், தலைமைச் செயலகத்தில் வேலை வாய்ப்புப் பணித் துறை என்ற ஒரு புதிய இலாக்கா உருவாக்கப்பட்டுள்ளது. நல்லவேளை! வேலை வாய்ப்பு வாரியம் என்று ஒரு புதிய வாரியம் உருவாக்காத வரையில் மகிழ்ச்சிதான்! கோழி வாரியத்திற்கு அடுத்தபடியாக முட்டை வாரியம் அமைக்கலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிற அரசாயிற்றே இது!

இப்போதே பஞ்சாயத்து யூனியன் என்.எம்.ஆர். வேலைக்கே, அ.தி.மு.க. அச்சக நிதி என்ற நூறு ரூபாய் நன்கொடைச் சீட்டை ஆயிர ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியுள்ளது என்ற ஆதாரபூர்வமான தகவல்கள் வந்த வண்ணமுள்ளன! ஆதாரமும் கைவசமுள்ளது.

கிராம அதிகாரிகள் வேலைக்கு, ஐயாயிரம் முதல் பத்தாயிர ரூபாய் வரையில், அ.தி.மு.க. அமைப்பாளர்களிடம் கொட்டி அழுதவர்கள் பலர் உண்டு!

சத்து (அற்ற) உணவுத் திட்டப் பணியாளர் வேலைக்கு, ஐநூறு முதல் ஆயிரம் ரூபாய் வரையில், அ.தி.மு.க.வினருக்கு லஞ்சப் பணம் கொடுத்த கதை, ஊர் ஊராகச் சிரிக்கிறது!

இந்தப் பதினைந்து கோடி ரூபாய் வேலை வாய்ப்புத் திட்டத்தில், இன்னும் யார் யார், எப்படிக் கொள்ளையடிக்கத் திட்டம் தீட்டப்படுகிறதோ?

படித்த இளைஞர்களில் வேலையற்றிருப்போர் தொகை, பதின்மூன்று லட்சத்தை எட்டும் நிலை!

அம்தன்னியில், பல லட்சம் பேர் வேலையற்றவர்களாய் வாடிக் கொண்டிருக்கிறார்கள்!

இந்தக் கணக்கைப் பார்க்கும்போது, பதினைந்து கோடி ரூபாயில் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும்?

வேலை வாய்ப்புத் துறை அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட அளவில் அந்தத் துறைக்கு ஆகும் செலவு!

வேலை வாய்ப்பு அளிப்பதற்காகத் தீட்டப்படும் திட்டங்களுக்கு ஆகும் செலவு!

எல்லாம் இந்தப் பதினைந்து கோடி ரூபாய்க்குள்தானா என்பதற்கு விளக்கம் தேவை!

இந்தச் செலவினங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், பதினைந்து கோடி ரூபாயைச் சம்பளமாகக் கொடுப்பது என்றால்கூட, மாதம் முந்நூறு ரூபாயாவது குறைந்தபட்ச ஊதியம் என்று வைத்துக் கொண்டால், ஒருவருக்கு ஆண்டுக்கு மூவாயிரத்து அறுநூறு ரூபாய் ஆகிறது!

ஒருவருக்கு ஆண்டுக்குச் சம்பளம் மூவாயிரத்து அறுநூறு என்றால், பதினைந்து கோடி ரூபாயை சுமார் நாற்பதாயிரம் பேருக்குத்தான் தர முடியும்!

பல லட்சம் பேர் வேலையற்றுத் திண்டாடும் இந்த மாநிலத்தில், நாற்பதாயிரம் பேருக்கு வேலை கொடுக்க பதினைந்து கோடி ரூபாய் ஒதுக்குவதும், அதற்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலைத் திட்டம் என்று விளம்பரம் செய்வதும் மக்களை ஏமாற்றும் மோசடி என்று கூறினால், ஆட்சியாளருக்குக் கோபம் வரும்! கொதித்துக் கிளம்புவர்! கொக்கரிப்பர்!

வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களை ஒரு அரசு நிறைவேற்றுவதில், இரண்டுவிதக் கருத்துக்கு இடமே இல்லை!

ஆனால் அதற்கு அந்த அளவு விளம்பரமே தர வேண்டு மேயல்லாது, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று எதற்காகக் கவர்ச்சிகரமான பொய்யைச் சொல்ல வேண்டும்?

வேலை வாய்ப்பு என்ற பெயரால் வெறும் ஊதியம் மட்டும் தர இயலாது! அந்த ஊதியத்துக்கேற்ற உழைப்பைப் பெற திட்டங்களை உருவாக்க வேண்டும்! அந்தத் திட்டங்களுக்கான செலவும் இந்தப் பதினைந்து கோடி ரூபாய்க்குள் அடங்குமேயானால், நாற்பதாயிரம் பேர் கூட அல்ல! இருபதாயிரம் பேருக்கே வேலை கிடைப்பது கஷ்டம்!

திட்டம், தெனாலிராமன் சித்திரம் வரைந்த கதையாக ஆகிவிடக் கூடாது!

பெரும் பொருளை அரசனிடம் பெற்று, ஓவியக் கூடத்தில் அருமையானச் சித்திரங்களை ஆறு மாதத்திற்குள் எழுதி முடிப்பதாகச் சொல்லிச் சென்றான்.

ஆறு மாதம் முடிந்தது! ஓவியங்களைப் பார்வையிட அரசன் மறுநாள் வரப்போகிறான் எனத் தெரிந்ததும் - முதல் நாள் தெனாலிராமன், துடைப்பத்தைச் சாணத் தண்ணீரில் தோய்த்துச் சுவர்களில் அடித்து வைத்தான்!

வந்த அரசன் ஓவியங்களைக் காணாமல் திடுக்கிட்டான்! என்ன இது? என்று எரிச்சலோடு கேட்டான்!

இவைகள் எல்லாம் குதிரைகளின் வால்கள் அரசே! என்றான் தெனாலிராமன்.

குதிரைகள் எங்கே? எனக் கேட்டான் மன்னன்!

குதிரைகள் சுவருக்கு அந்தப் பக்கத்தில் இருப்பதாகக் கற்பனை! என்றான் தெனாலி ராமன்!

அந்த வேடிக்கைக் கதைபோல, பதினைந்து கோடி ரூபாயில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற எம்.ஜி.ஆர். அவர்களின் தேர்தல் உறுதி மொழியும் ஆகிவிடக்கூடாது!

வாலைக் காட்டப் போகிறாரா? குதிரையைக் காட்டப் போகிறாரா? பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு. க.

(16-07-1983)

1123. இதோ நமது இளைய தலைமுறை!

உடன்பிறப்பே,

மாவட்டந்தோறும் மாநில தி.மு.க. இளைஞர் அணியின் அமைப்புக் குழு உறுப்பினர்கள், அமைப்பாளருடன் தீவிர சுற்றுப் பயணத்திட்டத்தை வகுத்து விறுவிறுப்புடன் பணியாற்றப் புறப்பட்டிருக்கின்றனர். அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களும், மாவட்டத்தில் கழகத்தைக் கட்டிக் காக்கும் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகளும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு நல்கி, கருத்துரை வழங்கும் கூட்டங்கள் ஏற்பாடாகியுள்ளன.

இதுவரையில் மாவட்ட அளவில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் கூட்டங்கள், எழுச்சி மிக்கதாய் அமைந்திருந்தன என்பதை அறிந்திட மகிழ்கிறேன்.

இந்த இயக்கத்தை எதிர்நீச்சல் போட்டு வளர்த்தவர்கள் பலர், இன்று அணையாத நினைவுத் தீபங்களாய் நம் நெஞ்சில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தொடர்ந்து தொண்டாற்றியவாறு!

நமது மொழி, நாகரிகம், இன உணர்வு, உரிமை, இவற்றை அழித்திட வீசிய பெரும்புயலை, இதயத்தில் ஏந்திய உறுதியின் வலிமையால், கரங்களைக் கொண்டே தடுத்து நிறுத்திய பெருமை நமது இயக்கத்திற்கு உண்டு!

இந்த இயக்கத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் குறுக்கிட்ட நெருப்பாறுகள் எத்தனை! எத்தனை! குமுறிப் பொங்கிய எரிமலைகள் எத்தனை! எத்தனை! விழுங்கி விடுவேன் என முழங்கி வெடித்த பூகம்பங்கள் எத்தனை! எத்தனை! அனைத்துக்கும் ஈடுகொடுத்து, அசையாத குன்றமெனக் கொள்கை முரசம் கொட்டிக் கொண்டிருக்கும் இந்த இயக்கத்தின் இளைய

தலைமுறையொன்று இதோ உருவாகி விட்டது என்பதைக் காணும்போது, கண்களில் புத்தொளி தோன்றுகிறது! களிப்பால் இதயம் மலர்கிறது!

அண்ணாவின் தலைமையில், பதினெட்டு ஆண்டுக் காலம் எதிர்க்கட்சியாகத் திகழ்ந்து இனமானக் குரல் எழுப்பிய கழகம், ஆட்சிக்கு வந்தபோது, எரிச்சல் கொண்டனர் என்றாலும் - இனி இந்தக் கழகம் பதவி தேடிகளின் சுகவாசஸ்தலம் ஆகிவிடும்! கொள்கைத் தீவிரம் குழிதோண்டிப் புதைக்கப்படுமெனக் கணக்கிட்டு மகிழ்ந்தனர்! ஏன்? அண்ணா அவர்களே கூட இனிக் கட்சியில் மிதவாதம் தலைநீட்டுமோ என அஞ்சியதும் உண்டு!

ஆட்சியில் அமர்ந்த பிறகு - அந்தச் சுவையில் திளைத்திடுபவர்களுக்கு, அப்படியொரு ஆசாபாசம் அகற்ற முடியாத அளவுக்கு ஏற்பட்டு விடுவதுண்டு!

ஆனால் அந்தச் சபலம், இந்தக் கழகத்தில் இருந்த மெழுகுப் பொம்மைகளை உருகிடச் செய்ததே தவிர, இரும்புத் தூண்களை எதுவும் செய்திட முடியவில்லை! மாறாக அந்தத் தூண்கள், எதிர்ப்புத் தீயினால் கொதிப்பேறி நின்றன! தொட்டவன் சுருண்டான்!

ஆட்சியை இழப்போம்! ஆனது ஆகட்டும்! ஜனநாயகத்தை இழக்க மாட்டோம் என்று நெருக்கடி காலத்தை எல்லா வகையிலும் எதிர்த்து நின்ற தீரர் கோட்டம் தி.மு.க.

கழகத்தால் பயன்பெற்றோர் - பதவி பெற்றோர் - தங்களையே எதிர்முகாமில் விற்றுக் கொண்டபோதும் கலங்கிடாமல் வீரர் பாசறையாக விளங்கியது - விளங்குவது இந்த இயக்கம்!

எந்தவொரு அரசியல் நிலையையும் கொள்கை ரீதியாக மேற்கொண்ட வரலாறுதான் கழக வரலாறு!

இந்தக் கழகத்தை இரண்டாகப் பிளந்து, சலனமுடையோர் - சபலப் பிறவிகள் - சந்தர்ப்பவாதிகள் என்போரை ஒரு பகுதியாகவும், கொள்கை குறிக்கோளுக்காக உயிர் தரவும் தயாராயிருக்கும் இலட்சிய வீரர்களை ஒரு பகுதியாகவும் ஆக்கி, முதலில் அடக்குமுறை, அச்சுறுத்தல் போன்ற செயல்களால் இலட்சிய வீரர்களை அடக்கி ஒடுக்கிவிட்டு - அதன் பிறகு, இன்னொரு பகுதியில் இடம் பெற்றுள்ள சந்தர்ப்பவாதிகளையும் சாய்த்துவிட்டு -

மொத்தத்தில் இயக்கத்தையே அழித்து விடலாம் என்று திட்டம் தீட்டியவர்களை, ஏமாற்றத்திற்கு ஆளாக்கி ஏறுநடை போட்டுக் கொண்டிருக்கிற கொள்கைப் பட்டாளத்தினர் இதோ நமது கழகத்தில், இலட்சோப இலட்சமெனக் காட்சியளிக்கிறார்கள்.

அவர்களில் ஒரு அணியினர், அனுபவமுடைய மூத்தோர்!

மற்றோர் அணியினர், அனுபவம் பெறாத, ஆர்வம் காட்டும் ஆற்றல் மிக்க இளையோர்!

முதல் அணியினர் பயிற்றுவிப்போர் நிலையிலும், இரண்டாவது அணியினர் பயில்வோர் நிலையிலும் இருந்திடல் வேண்டும்! பணி ஏற்றிடல் வேண்டும்! நாட்டின் பிணி அகற்றிட வேண்டும்!

எழுச்சி யுகம் காண்பதற்கு எழுந்து வரும் காளைகளாம் இளைஞர்க்கு எத்தனையோ கடமைகள் காத்திருக்கின்றன!

திட்டமிட்டு நமது தாய்மொழியை அழித்திடவும், அதன் பெருமை குலைத்திடவும், இந்தி ஆதிக்கம் மறைமுகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது, கொடிய தொத்து நோய் போல!

அந்த நோயின் அடிவேரறுக்க அணிவகுப்பு பெருமளவில் தயாராக வேண்டும்!

தமிழகத்தில் மட்டுமே, படித்து விட்டு வேலை தேடி விண்ணப்பித்துள்ள இளைஞர்களின் எண்ணிக்கை பதின்மூன்று லட்சம்!

அவர்களின் எதிர்காலம் பாழ்மண்டபம்தானா? பயங்கர இருட்டறைதானா? இதற்கு உரியவர்களிடமிருந்து பதில் பெற வேண்டும்!

எங்கணும் வறுமை - வாட்டம் - ஏழைகள் எத்தனை நாட்கள்தான் கோழைகளாய், எதிர்க்கத் தெரியாத மோழைகளாய் இருப்பது? இந்தக் கேள்விக் கணையைப் பாயவிடும் வில்லாக இளைஞர் பட்டாளம் மாறிட வேண்டும்!

மாநிலங்கள் கொத்தடிமைகளாகவும், மத்திய அரசு அதிகாரக் குவியலின் ஆர்ப்பாட்டக் கூடமாகவும் இருந்தே தீரும் என்ற வாதத்தின் இருப்பினை ஒடித்து, மாநில சுயாட்சியின் வெற்றிக் கொடியை வான்நோக்கி ஏற்ற வேண்டும்!

ஆட்சிகள் வரும்! போகும்! பதவிப் பசையில் ஒட்டிக் கொண்டிருப்போர் எந்த ஆட்சியிலும் சுகவாசிகளாக இருப்பர்! ஆனால் அவர்களை, அவர்தம் மனைவி மக்கள் கூட மதித்திடார்! நிலையான நெஞ்சம்! குலையாத உறுதி! இவற்றுக்கு வரலாற்றில் ஒரு புகழ்மிக்க ஏடு நிச்சயமாக உண்டு!

எனவே அண்ணா தந்த கொள்கை - அவர் போதித்த பகுத்தறிவு நெறி - அவர் காத்து நின்ற தமிழ்மொழி - போற்றிய திராவிடக் கலாச்சாரம் - இவற்றின் வெற்றிக்குப் பாடுபட இளைய தம்பிகள், எறும்புகளெனச் சுறுசுறுப்புக் காட்டித் தேனீக்கள் எனப் பறந்து வருகிறார்கள்!

அவர்கள் ஊக்கமுடன் தொண்டாற்ற - ஓய்வின்றி உற்சாகமாக உழைத்திட - இன்னல்களை ஏற்று கன்னல் நிகர் கழக இலட்சியங்கள் காத்திட - வாழ்த்துகிறேன்! உடன்பிறப்பே! ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வட்டத்திலும் நீயும், அவர்களை வாழ்த்தி வரவேற்று, அவர்தம் உழைப்பினையும் பெற்று இயக்க வெற்றிக்கு இடையறாது தொண்டாற்றிட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(17-07-1983)

1124. பரதேசியும், பழனியும்!

உடன்பிறப்பே,

ஏற்கெனவே எழுதியிருக்கிறேன்; பேசியிருக்கிறேன் - இருந்தாலும், ஒரு காட்சியை இப்போது நினைவூட்டுகிறேன்!

கன்னையா கம்பெனியென்று ஒரு நாடகக் கம்பெனியிருந்தது.

எனக்குச் சுமார் பத்து வயது இருக்கும்போது, அந்த நாடகக் கம்பெனி, திருவாரூரில் முகாமிட்டு நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தது.

கன்னையா, பகவத் கீதை என்று ஒரு பிரமாண்டமான நாடகம் நடத்துகிறாராம்! அந்த நாடகத்தில் மேடைக்குள்ளேயே கார் வருகிறதாம்! அதிலிருந்து ராஜா, ராணி இறங்கி, மாளிகையின் முகப்பில் உள்ள மண்டபத்திற்குப் படிக்கட்டுகளில் ஏறிச் சென்று அமருகிறார்களாம்! கண்கொள்ளாக் காட்சியென்று ஒரே விளம்பரம்!

திருக்குவளையில் இருந்து அப்பா, அம்மா, சகோதரிகள், நான் எல்லோரும் அந்த நாடகம் பார்க்கத் திருவாரூருக்குப் புறப்பட்டோம்!

விளம்பரப்படுத்தப்பட்டது போல நாடகம், நாடகமாக இல்லாமல், எல்லாம் நேரிலே நடப்பது போல இருந்தது. பாரத யுத்தம் நடைபெற்றதாகக் கூறப்படும் குருக்ஷேத்திரம் என்னும் இடத்தில் இருப்பதாகவே தோன்றியது என என் தந்தை, எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருப்பார்!

விளம்பரத்தில் குறிப்பிட்டதுபோல, நாடக மேடையில் மோட்டார் கார் ஒன்றும் வெகு தொலைவில் இருந்து வருவதுபோல் வந்து நின்றது! பகவத் கீதையில் கார் ஏது என்று கேட்காதே! ஏதோ ஒரு அறிவுரையை நவீன காலத்திற்குச் சொல்வது போல இடையிலே ஒரு காட்சியை அப்படி அமைத்திருந்தார்கள்.

காரில் இருந்து ஒரு அரசனும், அரசியும் இறங்கி, மாளிகையின் மாடிப் படிகளில் ஏறிச் சென்று முன்முகப்பு மண்டபத்தில் நெருக்கமாக உட்கார்ந்தார்கள். அரசியின் கையில் ஒரு ஆரஞ்சுப்

பழம் இருந்தது. அதை அவள், மெல்ல உரித்துச் சுளைகளை அரசனின் வாயில் ஊட்டினாள்! அரசனும், இரண்டொரு சுளைகளை அரசியின் வாயில் தந்தான்! உரிக்கப்பட்ட பழத்தின் தோல்களை அரசி, தெருவில் எறிந்தாள்.

அப்போது அந்த வழியாக வந்த ஒரு ஏழைப் பரதேசி, அந்தத் தோள்களைப் பொறுக்கித் தின்ன ஆரம்பித்தான்! அவ்வளவு பசி அவனுக்கு!

அதைப் பார்த்த மகாராணிக்கு கடுங்கோபம் ஏற்பட்டது! மகாராஜா! நாம் வீசியெறிந்த பழத்தின் தோலை ஒரு பரதேசித் தொட்டுத் தின்பதா? இது ராஜகுலத்திற்கே அவமானம்! என்று கூச்சலிட்டாள்!

உடனே அரசன், சேவகனை அழைத்து, அடே! சேவகா! நீ, இக்கணமே சென்று அந்தப் பரதேசிக்குச் சவுக்கடி நூறு கொடு! என்று கட்டளையிட்டான்.

சேவகன் இறங்கி வந்து பரதேசியைப் பிடித்து உலுக்கி, அடே பரமபாதகா! எங்கள் மகாராஜாவும், மகாராணியும் சாப்பிட்ட பழத்தின் தோலை நீ எப்படிச் சாப்பிடலாம்? இது பெரிய ராஜதுரோகம்! என்று கூறிக்கொண்டே சவுக்கால் அடிக்க ஆரம்பித்தான்.

பரதேசி, அலறித் துடிப்பதற்குப் பதிலாக கலகலவெனச் சிரித்துக் கொண்டேயிருந்தான்! அதைக் கண்ட அரசன் வியப்புடன் கீழே இறங்கி வந்து, சேவகன் கையிலிருந்த சவுக்கைத் தானே வாங்கிக் கொண்டு அவன் வலிக்காமல் அடிக்கிறானோ? இதோ நான் தருகிறேன் செம்மை அடி! என சவுக்கைச் சுழற்றி அடித்தான். அப்போதும் பரதேசி சப்தம் போட்டுச் சிரித்தானே தவிர, துடிக்கவில்லை!

ஓய்! சாமியாரே! என்ன இது? இவ்வளவு அடி வாங்கிக் கொண்டு சிரிக்கிறீர்? நீர் என்ன மாயாவியா? என்று அரசன் ஆச்சரியத்துடன் கேட்டான்!

இல்லை மகாராஜா! நான் மாயாவி அல்ல! சாதாரண மனிதன்தான்!

பிறகு சிரிப்பதற்குக் காரணம்?

ஒன்றுமில்லை அரசே! பழத்தின் தோலைத் தின்ற எனக்கே இத்தனை பெரிய தண்டனையானால் - பழத்தின் சுளைகளைத்

தின்ற உங்களுக்கு எவ்வளவு பெரிய தண்டனை கிடைக்க வேண்டுமென்று நினைத்து சிரித்தேன்!

பரதேசியின் அந்தப் பதிலைக் கேட்டு அரசன் தலைகுனிந்து கொண்டான்.

இந்தக் காட்சியைக் கண்ட நாடக ரசிகர்கள் அனைவரும், ஆகா! ஊஹூ! என்று சபாஷ் போட்டுக் கரகோஷம் செய்தனர்!

பழத்தின் தோலைத் தின்றவனுக்கே இந்தத் தண்டனையென்றால் - பழத்தின் சுளையைத் தின்றவனுக்கு என்ன தண்டனையோ?

மறக்க முடியாத வசனம்! பரதேசி பேசியது என்றாலும், அதிலே ஒரு பாடம் அடங்கிக் கிடக்கிறது!

இது கன்னையா கம்பெனி நாடகத்தில் அன்று கண்ட காட்சி!

இதோ ஒரு செய்தி! தினமணி ஜூலை 17-ஆம் நாள் இதழில் மூன்றாம் பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. காஞ்சிபுரம் தாலுக்கா அலுவலகத்தில் உள்ள கலால் இலாக்காவில் குமாஸ்தாவாக உள்ள பழனி என்பவர், காஞ்சிபுரத்தைச் சார்ந்த சின்னசாமி என்பவரிடம் சாராயம் குடிக்க லைசென்சு தருவதற்கு முப்பது ரூபாய் லஞ்சம் கேட்டார் என்பதற்காகப் போலீசாரால் கைது செய்யப்பட்டார் என்பதுதான் அந்தச் செய்தி!

முப்பது ரூபாய் சமாச்சாரத்திற்காக எவ்வளவு கடுமையான துரிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது!

பினாமிகள் பெயரால் கேரள முதலாளிகளுக்கும், வேறு சில தமிழ்நாட்டுத் தொழில் அதிபர்களுக்கும், கர்நாடக, ஆந்திர மாநிலக் குபேரர்களுக்கும் சாராயக் கலவைத் தொழிற்சாலை, மொத்த வியாபார உரிமங்கள், இன்னோரன்ன காரியங்களுக்காகக் கோடி கோடியாக லஞ்சம் பெற்றவர்கள் கோட்டையிலே கோலேந்திகளாக!

பாவம்! பழனி என்ற ஒரு குமாஸ்தா லஞ்சம் பெறக்கூட இல்லை - கேட்டார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்!

பழத்தின் தோலைத் தின்றதற்கே இந்தத் தண்டனை யென்றால், சுளைகளைத் தின்பவர்களுக்கு?...

அன்புள்ள,

மு. க.

(18-07-1983)

1125. அவரால், அது முடியாத காரியம்!

உடன்பிறப்பே,

தியாகச் சுடர் காமராஜர் அவர்களைப் பெருந்தலைவர் எனப் போற்றுகிறோம் - புகழுகிறோம்! அவரது பிறந்த நாள் விழாவில் அவரது விடுதலைப் போராட்ட வரலாற்றை - அவரது ஆட்சித் திறனை - அவரது எளிமையை - அவரது நிர்வாக மேன்மையை வியந்து பாராட்டுகிறோம்! அவர் எதிர்க்கட்சிகளைக் குறிப்பாகத் தி.மு.கழகத்தைத் தாக்கிப் பேசியதும் உண்டு! எமர்ஜன்சியைத் தி.மு.கழகம் எதிர்த்து நின்றபோது, அவர் கழகத்தின் நிலையை ஆதரித்ததும் உண்டு! நானும், நாவலரும்தான் காமராஜர் இல்லத்திற்குச் சென்று நெருக்கடி நிலையை எதிர்த்து கழக அமைச்சரவை ராஜினாமா செய்யத் தயார் என்று கூறினோம்! திரு. சஞ்சீவி ரெட்டியார் அவர்களிடமும் அந்தச் செய்தியைச் சொல்லி, காமராஜர் அவர்களிடம் தெரிவிக்கச் சொன்னேன்! அதற்குக் காமராஜர் கூறிய பதில், கொஞ்சம் பொறுமையாக இருங்கள்! நெருக்கடி நிலையை எதிர்க்க இந்தியாவிலேயே இரண்டு மாநிலங்களில்தான் ஆட்சிகள் இருக்கின்றன! ஒன்று குஜராத் - மற்றொன்று தமிழ்நாடு! இவைகளையும் நாமாக ராஜினாமா செய்து நெருக்கடி நிலைமைக்கு, வழி திறந்து தாராளமாக விட்டு விடக் கூடாது என்பதாகும். அந்த நேரத்தில்தான் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இந்தியாவில் இரண்டு தீவுகள் இருக்கின்றன! ஒன்று குஜராத்! மற்றொன்று தமிழ்நாடு! என்று கோபவேசமாகப் பல கூட்டங்களில் பேசிக் கொண்டிருந்தார்! அப்போதுதான் காமராஜர் அவர்கள், கழக ஆட்சி இப்போது பதவி விலகுவது கூடாது என்று கருத்து கூறினார்!

எந்தக் காமராஜர்? கழக ஆட்சியைப் பதவியிலிருந்து இறக்கிட, 1971-இல் மூதறிஞர் இராஜாஜியுடன் அணி சேர்ந்து எதிர்த்த காமராஜர்! அவர்தான் இந்திய ஜனநாயகத்திற்கே

ஆபத்து வந்த நேரத்தில், 1975-இல் கழக ஆட்சி பதவி விலகிடக் கூடாது என்று எங்களுக்கு அறிவுரை கூறினார்! இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள், ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டதுபோல, காமராஜர் அவர்கள் உயிரோடிருக்கும் வரையில், கழக ஆட்சியைக் கலைத்திட டெல்லித் துரைத்தனம் முன் வரவில்லை! அவர் மறைந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு, கழக ஆட்சி கலைக்கப்பட்டது! எத்தனை அபிப்பிராய பேதங்கள் - கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் இந்திய நாட்டின் ஜனநாயக வடிவம் மூளியாகிவிடக்கூடாது என்பதிலே அவர் கொண்டிருந்த ஆர்வத்தைக் கண்டு - தி.மு.கழகம் அவருக்கு புகழ்மாலை சூட்டியது! கழகம் அவரைக் கண்டித்துப் பேசியதும் உண்டு! எழுதியது உண்டு! ஆனால் அவரது ஜனநாயக உள்ளத்திற்கும், அடக்குமுறைகளை ஏற்ற தியாக வரலாற்றுக்கும் - என்றைக்குமே மரியாதை காட்டியதும் உண்டு!

உடல் நலம் மிகவும் குன்றிய நிலையில் படுக்கையில் இருந்தார்! எமர்ஜன்சி பிரகடனப்படுத்தப்பட்டு இரண்டு மாதம் கழிந்த அளவில், 20-8-75 அன்று சென்னையில் என் மகன் ஸ்டாலினுக்கு, நாவலர் தலைமையில் நடைபெற்ற மணவிழாவுக்கு வரவேண்டுமென்று நேரிலே போய் அழைத்தேன்! வர இயலாத நிலைதான் அவருக்கு! அவர் திருமண மேடை வரையில் காரிலே வந்து இறங்குகிற வசதியும் செய்யப்பட்டது. வந்திருந்து மேடையில் அமர்ந்து மணமக்களை வாழ்த்தினார். அதன் பிறகு சுமார் நாற்பது நாட்கள்தான் உயிரோடு இருந்தார். பிறகு நம்மை விட்டுப் பிரிந்தார், காந்தியடிகள் பிறந்த அக்டோபர் இரண்டாம் நாள்!

ஜனவரியில் கழக ஆட்சி கலைக்கப்பட்டு, மறுநாளே ஸ்டாலினும் ஓராண்டுக் கால மிசா கைதியாக நூற்றுக்கணக்கான கழக உடன்பிறப்புகளுடன் சிறையில் அடைக்கப்பட்டான்!

எத்தகைய உடல்நிலையிலும் என் அழைப்பை ஏற்றுக்கொண்டு அன்பு காட்டினார் என்பதற்காக இச்செய்தியைக் குறிப்பிட வேண்டியதாயிற்று! அது மட்டுமல்ல! நெருக்கடி காலத்தில் (எமர்ஜன்சி) கழகமும், அவரும் நெருக்கமாகவே இருந்த நிலைமைக்கும் இஃதோர் எடுத்துக்காட்டு!

அந்தப் பெருமகனாரின் 81-வது பிறந்தநாள் நாடு முழுதும் கொண்டாடப்பட்டது! தமிழக அரசும் விழா எடுத்தது! அந்த

விழாவில் வழக்கம்போல் முதல்வர் எம்.ஜி.ஆரின் பேச்சு, தடம் புரண்டே ஓடியிருக்கிறது!

சினிமா படம் ஏ சர்டிபிகேட், புதிய மந்திரிகள் நியமனம், முதல்வர் பதவியிலிருந்து விலகுதல் - இத்யாதி இத்யாதி தொடர்பற்ற விவகாரங்களைப் பேசிவிட்டு, இவர் முன்னொரு காலத்தில் காமராஜர் என் தலைவர் என்று பேசியதையும் குறிப்பிட்டு, அதை அப்போது எதிர்த்தவர்கள் என்னைக் கட்சியை விட்டு வெளியேற்றினார்கள்! என்றும் கூறியிருக்கிறார். அப்படி அந்தச் சமயத்தில் அவர் கட்சியை விட்டு வெளியேற்றப்படவில்லை என்பதை நாடே அறியும்! ஒருவேளை முதல்வர் எம்.ஜி.ஆரின் பேச்சை சில் ஏடுகள் தவறாக வெளியிட்டிருக்குமோ என்னவோ!

காமராஜர் என் தலைவர் என்று எம்.ஜி.ஆர். பேசியதற்கு அன்றைக்குக் கழகத்திலே எதிர்ப்பு ஏற்பட்டது உண்மை! எதிர்த்தவர்கள் இப்போது, என்னைப் புரட்சித் தலைவர் என்று அழைக்கிறார்கள் என்று எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருப்பதும் உண்மை! தலைவர் என்று கூறியதையே எதிர்த்தவர்கள் இன்று, காமராஜரைப் பெருந்தலைவர் என்று கூறுகிறார்களேயென்றும் எம்.ஜி.ஆர். காமராஜர் விழாவில் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்!

எம்.ஜி.ஆர். இன்னமும் ஒன்றைப் புரிந்து கொள்ள மறுக்கிறார்! அல்லது புரிந்து கொண்டு மழுப்புகிறார்! ஒரு இயக்கத்தில் உறுப்பினராகவோ, பொறுப்பிலே உள்ளவராகவோ இருக்கிற ஒருவருக்கு, அவரது கட்சியைத் தலைமையேற்று நடத்திச் செல்பவரே தலைவராக இருக்க முடியும்! காமராஜர் அவர்களைத் தலைவராக ஏற்றுக்கொண்டு காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் அண்ணாவின் ஆற்றலைப் புகழலாம்! போற்றலாம்! அதற்காக ஒரு காங்கிரஸ் தொண்டர், அண்ணா என் தலைவர் என்று கூறுவாரா? கூறமாட்டார்! அதேபோலத்தான் தி.மு.க. தொண்டருக்கும், முன்னணியினருக்கும் காமராஜர் மீது மதிப்பும், மரியாதையும் பற்றும் இருந்தாலும்கூட, அவர்களுக்குத் தலைவராக அண்ணாவைத்தானே ஏற்றுக்கொள்ள முடியும்!

காமராஜர் அவர்கள், நேருவைப் போல - வல்லபாய் பட்டேலைப் போல, ராஜாஜியைப் போல இந்திய நாட்டில் புகழ்பெற்ற பெருந்தலைவர்! அதில் யாருக்கும் கருத்து மாறுபாடில்லை! அதற்காக அவரைப் பெருந்தலைவர் என்று

அழைக்கிற கழகத்தினரோ - அல்லது வேறு கட்சிகளில் உள்ளவர்களோ, அவர்தான் என் தலைவர் என்று தனது கட்சித் தலைவரை மறந்துவிட்டு ஏற்றுக் கொள்வார்களா? ஏன்? அண்மையில் இவர்தான் தமிழினத் தலைவர் என்று எம்.ஜி.ஆர். அவர்களால் போற்றப்பட்ட சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களை அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர், அவர்தான் என் தலைவர் என்று கூறினால், அ.தி.மு.க.வின் எந்த அமைப்பாவது ஏற்றுக் கொள்ளுமா?

ம.பொ.சி. சிலம்புச் செல்வராக இருக்கலாம்! தமிழ் இனத் தலைவராக இருக்கலாம்! இலக்கியச் செம்மலாக இருக்கலாம்! எல்லைப் போராட்ட வீரராக இருக்கலாம்! அதற்காக அ.தி.மு.க.வில் உள்ள ஒருவர், ம.பொ.சி. விழாவில் கலந்து கொண்டு, ம.பொ.சி.தான் என் தலைவர்! எம்.ஜி.ஆர். வழிகாட்டிதான்! என்று கூறினால், எம்.ஜி.ஆரைத் தலைவராகக் கொண்ட கட்சி அதை ஏற்றுக்கொள்ளுமா? ஏற்றுக்கொள்ளாதல்லவா?

அதைப் போலத்தான் காமராஜர் அவர்களை அண்ணாவே, குணாளா! குலக்கொழுந்தே! என்று பாராட்டியிருக்கிறார்! குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துக் காமராஜர் குரல் கொடுத்தபோது கழகம், அவரது கரத்தை வலுப்படுத்த ஒத்துழைப்பு கொடுத்தது!

இந்தியத் திருநாட்டின் பெருந்தலைவர்கள் வரிசையில் இடம் பெற்ற கர்மவீரர் காமராஜர்!

ஆனால் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கட்சிக்கும் - அந்தக் கட்சியிலே உள்ளவர்களில் ஒருவர்தான் தலைவர்! அவர்களுக்கு வேறு கட்சியிலுள்ளவர்கள் தலைவராக இருக்க முடியாது! இந்த உண்மையை பெருந்தலைவர் காமராஜர்பால் அன்பு கொண்ட காங்கிரஸ் நண்பர்கள்கூட மறுத்திடமாட்டார்கள்!

எம்.ஜி.ஆர்., அப்போது தன் சுயநலத்திற்காக வேண்டுமென்றே தனது முயற்சியில் ஒரு விழாவை ஏற்பாடு செய்து, அந்த விழாவில் என் தலைவர் காமராஜர் என்று பேசியது விஷமத்தனமான ஒரு காரியம் என்பதை அனைவரும் உணர்ந்தே இருந்தனர். என்ன காரணம் என்பதை அண்ணாவும் அறிவார்! அப்போது சென்னைக் கடற்கரையில் நடந்த ஒரு கூட்டத்தில், நண்பர்கள் மதுரை முத்து, எஸ்.எஸ்.ஆர். போன்றவர்கள், எம்.ஜி.ஆர். போக்கை

எதிர்த்துப் பேசியபோது, அண்ணா சொன்ன அர்ச்சுனன் கதையே எம்.ஜி.ஆரைப் பற்றிய உண்மையை உலகுக்குப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது!

காமராஜர் அவர்களை உண்மையிலேயே தலைவராக ஏற்றுக்கொண்டு எம்.ஜி.ஆர்., அந்த வார்த்தையைக் கூறி இருப்பாரேயானால் - அவர் அ.தி.மு.க. கட்சியை ஆரம்பித்த பிறகு, காமராஜர் மீது ஊழல் குற்றச்சாட்டுகளைக் கூறிப் பேசியிருப்பாரா?

வாய் புளித்ததோ! மாங்காய் புளித்ததோ! என்பதைப் போல முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், அரசு நடத்தும் விழாக்களில் பேசித்தீர்ப்பதை இனியாவது நிறுத்திக் கொள்வாரா?

பாவம்! அவரால் அது முடியாத காரியம்!

அன்புள்ள,

மு. க.

(19-07-1983)

1126. ஆகஸ்டு அறப்போர், விளக்கம் பெற!

உடன்பிறப்பே,

கிழக்கு முகவை மாவட்ட மாநாட்டுப் பணிகள் விறுவிறுப்போடு நடைபெறுகின்றன! சென்னையிலிருந்து தொலைபேசி வாயிலாக மட்டும் செய்தி அறிந்து சொல்லவில்லை. நண்பர்கள் தென்னரசு, சத்தியேந்திரன், பரமக்குடி தங்கவேலன், தங்கபாண்டியன் ஆகியோர் நேற்று சென்னைக்கே வந்து என்னையும், பொதுச்செயலாளரையும், பொருளாளரையும், துணைப் பொதுச் செயலாளரையும் சந்தித்து, இதுவரை ஆற்றியுள்ள பணிகளையும், இனியும் ஆற்ற இருக்கிற பணிகளையும் விவரித்தனர்.

கழகத்தின் பொதுத் தேர்தல் எல்லா மட்டத்திலும் முற்றுப் பெற்ற பிறகு, நடைபெறுகிற முதல் மாநாடு இது என்பதால் ஒரு தனிச்சிறப்பு தானாகவே ஏற்பட்டு விட்டது!

அதனால்தான், குடந்தை மாநாட்டுப் பந்தலை விடச் சற்றுப் பெரிதாகவே பந்தலை அமைக்கிறோம் என்றனர் மாநாட்டுப் பொறுப்பாளர்கள்! அந்தப் பந்தலுக்கு யார் பெயர் இடப்பட்டுள்ளது? ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டியவன் கோழையென்று புலிப்பார்வை காட்டி - புறநானூற்றுப் போர் மறவன் என உலவிய மானவீரன், மாங்குடி மதியழகனின் பெயர் தாங்கியன்றோ பந்தல் உயருகிறது!

சிவகங்கைச் சீமையின் கொள்கை வைரம், சேதுராமனின் பெயரால் திடல்!

இன வேங்கை - இளம் வேங்கை, எம்.எஸ்.கே. மகேந்திரனின் பெயரால் மாநாட்டு அரங்கம்!

அள்ளிக் கொடுத்த வள்ளல், சீதக்காதியின் பெயரால் நுழைவு வாயில்! இலட்சோப லட்சமெனக் குழுமிடுவோர், பந்தலில், ஆங்காங்கு இருந்தவாறு மேடையில் உரை நிகழ்த்துவோரையும், தலைவர்களையும், கலைநிகழ்ச்சி நடத்துவோரையும், நாடகக் காட்சிகளையும் காண்பதற்கு வசதியாக, தொலைகாட்சிப் பெட்டிகள் அமைக்கப்படுகின்றன!

ஊரெல்லாம், தெருவெல்லாம் - இருவண்ணக் கொடிகள்! அண்ணா தந்த கொள்கை முழக்கம் ஏந்திய பதாகைகள்! தோரணங்கள்!

மாநாட்டு அலங்காரங்கள் - ஊர்வல மாட்சி - இவை மட்டுமல்லவே மாநாட்டுக்குச் சிறப்பு தருவது!

கழகத்தின் கொள்கை விளக்கமும் - எதிர்காலத் திட்டங்களும் - தமிழ்ச் சமுதாயத்தின் புதிய விழிப்புக்கு ஏற்றவாறு நமது ஆக்கப்பணிகளின் அமைப்பும் - இந்த மாநாட்டின் விளைவுகளாக இருக்க வேண்டுமன்றோ?

இம்மாத இறுதியில் (ஜூலை 30, 31-இல்) மாநாடு நடைபெற்று முடிந்ததும், ஆகஸ்டு முதல் தேதியே நமது உடன்பிறப்புகள், அனைத்துக்கட்சி அணியினருடன் ஒன்றியங்கள் தோறும் உலா வர இருக்கிறார்கள்! ஆகஸ்டு 20-ஆம் நாள் வட்ட அளவில் மத்திய, மாநில அரசு அலுவலகங்களின் முன்பு அறவழியில் ஆர்ப்பாட்டங்கள்!

மாநில அரசின் அலட்சியப் போக்கினால் அவதியுறும் மக்களின் துயர் துடைக்க, அனைத்துக் கட்சியினர், கிராமங்கள் தோறும் நடத்தும் அணிவகுப்புகள் மாநில அரசின் தூக்கத்தைக் கலைக்க உதவட்டும்!

அரிசியின்றி அல்லற்பட்டு கியூவில் காத்துக் கிடக்கும் நிலை மாற்ற மத்திய அரசு, போதுமான அரிசி வழங்கிட ஆகஸ்டு மாத அறப்போர் ஒரு தூண்டு கோலாகட்டும்!

ஏழை எளிய விவசாயிகள், பயிரிட முடியாமலும், இட்ட பயிரும் பாழ்பட்டு சீரழிந்தும், நிலை குலைந்து நிற்கும் போது, கடன் வசூல், ஜப்தி என மிரட்டும் அரசின் போக்கு நமது அறப்போரால் நிறுத்தப்படட்டும்!

இந்த ஆகஸ்டு அறப்போர் குறித்தும் - அனைத்துக் கட்சியுடன் அணி திரண்டு ஆங்காங்கு நமது உடன்பிறப்புகள் ஆற்றிட வேண்டிய அயராத தொண்டு குறித்தும் விளக்கம் பெற்றிட. கிழக்கு முகவை மாநாடு அழைக்கிறது! பயணம் தயார்தானா? இடையே நாட்கள் அதிகமில்லை! அதனால் நினைவுபடுத்தினேன்!

அன்புள்ள,

மு. க.

(20-07-1983)

1127. அடுத்த - தென்மாநிலமுதல்வர்கள் மாநாடு எப்போது?

உடன்பிறப்பே,

29-3-83 அன்று, சட்டப் பேரவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் துணைத் தலைவர் நண்பர் உமாநாத் அவர்கள், ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

1983 மார்ச் 3-வது வாரத்தில் பெங்களூரில் நடைபெற்ற தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை வரவேற்று ஆதரிப்பதோடு, அந்த முடிவுகளை விடாமுயற்சியுடன் அமல்படுத்த வேண்டும்

என்று கோரும் கருத்தமைந்த அந்தத் தீர்மானத்தை அரசுத் தரப்பிலும் ஆதரித்துப் பேசி, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது!

கழகத்தின் சார்பில், தென் மாநில முதல்வர்கள் மாநாட்டையும், அதில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் வரவேற்றுப் பேசிய நான், பின்வரும் கருத்தினையும் எடுத்துக் கூறினேன்.

தென் மாநில முதல்வர்களுடைய மாநாட்டைக் கூட்டுவதற்கான முயற்சியை எடுத்துக் கொண்ட கர்நாடக முதல்வர் ஹெக்டே அவர்களை நான் பாராட்டுகிறேன். அந்த மாநாட்டிலே கலந்து கொண்ட தமிழக முதல்வர் அவர்களையும், ஆந்திர முதல்வர் அவர்களையும், புதுவை முதல்வர் அவர்களையும் நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். இப்பொழுது நம்முடைய முதலமைச்சருக்குக் கிடைத்தது போன்ற ஒரு நல்ல சூழ்நிலை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இல்லை. அப்போது பக்கத்திலே ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் வேறு கட்சியினுடைய ஆட்சிகள்! இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ள விரும்பாத கட்சிகளின் ஆட்சிகள் இருந்தன! எங்கேயோ தொலை தூரத்து மாநிலமான பஞ்சாப்பின் முதல்வர் குர்னாம்சிங் அவர்களுடன் மாத்திரம் நாம் தொடர்பு கொண்டு, மாநில சுயாட்சிக் கொள்கையை - மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

வழங்கக்கூடிய அளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தை எடுத்துரைக்க முடிந்தது. ஆனால் இன்றைக்குச் சூழ்நிலை, மிகவும் பக்குவப்பட்டிருக்கிறது. நான் முதலில் எடுத்துச் சொன்ன மாநில உரிமை பற்றிய அந்தக் கருத்துகள், பல ஆண்டுக் காலமாக தமிழகத்திலே தழைத்துக் குலுங்கியிருக்கிற கருத்துகள் - கர்நாடகத்திலே காயாக இருந்து இன்று கனிந்து கொண்டிருக்கிற கருத்துகள் - ஆந்திரத்திலே அரும்பு விடுகிற கருத்துகள் - என்கின்ற ஒரு அற்புதமான சூழ்நிலை; இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு, வாய்த்திருக்கிறது! வரவேற்கும் தீர்மானம் என்று நண்பர் உமாநாத் முன்மொழிந்திருந்தாலும் கூட, இதை முற்றிலும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றுதான் அவரோடு சேர்ந்து கழகத்தின் சார்பில், நானும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு நான் சட்டப் பேரவையில் பேசினேன்! அன்று நான் ஆற்றிய உரை, தொடங்கினோம்! தொடர்வோம்! என்ற தலைப்பில் சிறிய நூல் வடிவில் வெளிவந்துள்ளதையும் நீ படித்திருப்பாய்!

கழக ஆட்சியில் ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டு மாநில சுயாட்சித் தீர்மானத்தை, 1974-ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் நிறைவேற்றிய நிகழ்ச்சியையும் - அப்போது ராஜமன்னார் குழு அறிக்கையைக் குப்பைக் கூடையிலே தூக்கி எறியுங்கள் என்று அ.தி.மு.க. சார்பில் காரசாரமாகப் பேசப்பட்டதையும், இப்போது அவர்களே பெங்களூர் மாநாட்டில் ராஜமன்னார் குழு அறிக்கையின் அடிப்படையில் பல முடிவுகளை மேற்கொண்டிருப்பதையும் நான் ஆற்றிய உரையில் விரிவாகக் குறிப்பிட்டேன். இந்த நல்ல மாற்றத்தை வரவேற்று மகிழ்வதாகவும் சொன்னேன்.

பெங்களூரில் நடைபெற்ற தென் மாநில முதல்வர்களின் மாநாடு, அடுத்தபடியாகச் சென்னையில், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் கூட்டப்படும் என்றும், அதற்கான நாள் விரைவில் அறிவிக்கப்படுமென்றும் அடுக்கடுக்காகப் பரபரப்புடன் செய்திகள் வெளி வந்தன! விரைவில் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், அந்த மாநாட்டைச் சென்னையில் கூட்டி, பெங்களூரில் எடுத்த முடிவுகளை விடா முயற்சியுடன் தொடர்ந்து அமல்படுத்த முன் வருவார் என்று எதிர்பார்க்கிறேன்!

மேலும் நல்ல சூழ்நிலை கனிந்து வருகிறது என்பதற்கு அறிகுறியாக, அண்மையில் திரு. சர்க்காரியா அவர்கள் பம்பாயிலிருந்து வெளிவரும் **"Mid-day"** (மிட்டே) என்ற ஆங்கில வார இதழுக்கு ஒரு பேட்டியளித்துள்ளார். சர்க்காரியா அவர்கள், மத்திய மாநில உறவுகளை ஆராய்ந்திட, மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள கமிஷனின் தலைவர் என்பதை அறிவாய்! அந்த வார இதழின் நிருபர், ராஜமன்னார் குழு பற்றி கேட்ட கேள்வியொன்றுக்குச் சர்க்காரியா அளித்துள்ள பதில் வருமாறு:-

"These are suggestions of very eminent people and we have to consider them - Rajamannar was a very famous jurist and his panel consisted of famous men. The suggestions carry their own weight. These are very technical questions that need intensive study. The grievances of the states might be legitimate - you know their complaint about the "Tentacles of the Centre"

இதன் தமிழாக்கமாவது :- மிகப் புகழ் வாய்ந்த மனிதர்களால் சொல்லப்பட்ட கருத்துகளாகும் அவை! அவற்றை நாம் பரிசீலனை செய்ய வேண்டும்! ராஜமன்னார் அவர்கள், புகழ் வாய்ந்த நீதிபதியாக விளங்கியவர். அவருடைய குழுவில் இருந்தவர்கள் (ஏ.எல்.முதலியார், சந்திரா ரெட்டி) கீர்த்தி மிக்கவர்கள்! அவர்களுடைய கருத்துகள் மதிப்பு வாய்ந்தவை! நீங்கள் (நிருபர்) கேட்ட கேள்விகள் ஆழ்ந்த பரிசீலனைக்குரியவை! மாநிலங்களின் குறைபாடுகள் நியாயமானவைகளாக இருக்கக்கூடும்! மத்திய அரசு என்பது பிடித்தால் விடாத கரங்களைக் கொண்ட பிராணியைப் போல் இருக்கிறது என்று மாநில அரசுகள், புகார் கூறுவதை நீங்கள் அறிவீர்கள்!

உடன்பிறப்பே, முன்னாள் நீதிபதி சர்க்காரியா அவர்கள், இன்னமும் மத்திய மாநில உறவுகள் குறித்த விசாரணைக் கமிஷன் நடவடிக்கைகளை முழுமையாகத் தொடங்கவில்லை.

ஆனால், தொடக்க நிலையிலேயே தி.மு.க. அரசு அமைத்த ராஜமன்னார் குழு அறிக்கையை ஆழ்ந்து படித்திருக்கிறார்! அதன் மதிப்பை உணருகிறார்! அதுமட்டுமல்ல, மத்திய அரசின் அதிகாரப் பிடிப்பு, மாநிலங்களை எப்படி ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது என்ற நிலையை, மாநிலங்கள் உணர்த்துவதையும் தெரிந்து கொண்டு பேசியிருக்கிறார்.

எனவேதான் மேலும் நல்ல சூழ்நிலை உருவாகிறது என்று குறிப்பிட்டேன்!

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது பழமொழி!

அதற்கேற்ப அடுத்தடுத்து முயற்சிகளை மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும்!

மாநில உரிமைகள் கோரும் அரசியல் கட்சிகளும் அணி திரள வேண்டும்!

ஆகவே தமிழக முதல்வர், ஏற்கெனவே அறிவித்தவாறு, தென் மாநில முதல்வர்கள் மாநாட்டையோ அல்லது மாநிலங்களுக்கு சுயாட்சித் தன்மை கோரும் மாநில முதல்வர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டையோ விரைவில் சென்னையில் கூட்டுவார் என எதிர் பார்ப்போமாக!

அன்புள்ள,

மு. க.

(21-07-1983)

1128. உணவுப் பஞ்சம் உறுமுகிறது!

உடன்பிறப்பே,

மாநில அரசின் முன் எச்சரிக்கையற்ற தன்மையாலும், மத்திய அரசின் அலட்சிய மனப்பான்மையினாலும் கடும் உணவுப் பஞ்சத்தை நோக்கித் தமிழகம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது!

காவிரியில் தண்ணீர் விடப்படாதது குறித்தும், கடுகளவு கவலையும் முதலமைச்சர் கொள்ளாத காரணத்தால், தஞ்சைப் பகுதியில் இந்த ஆண்டு குறுவைச் சாகுபடியும் இல்லை என்று ஆகிவிட்டது!

அரிசி கேட்டு மத்திய அரசை வலியுறுத்தி ஒருநாள் உண்ணாவிரதம் (காலை 10 முதல் மாலை 5 வரை) இருந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், டெல்லி சென்று மத்திய அமைச்சர்களைச் சந்தித்துத் திரும்பியதும், பாவம்! மத்திய தொகுப்பிலும் அரிசி போதுமான அளவு இல்லை! அவர்களுக்கும் கஷ்டம் என்று தனது ஆழ்ந்த அனுதாபத்தை நிருபர்கள் மத்தியிலே வெளியிட்டார். இப்போது உணவு அமைச்சர் சென்று திரும்பியிருக்கிறார். தமிழகத்தின் நியாயமான தேவைக்கு டெல்லி உதவுமா என்பது தெரியவில்லை! நிச்சயம் உதவிட வேண்டும்! தமிழ்நாட்டு மக்களின் பசியோடு விளையாடக் கூடாது என்று மத்திய, மாநில அரசுகளை இங்குள்ள அனைத்துக் கட்சிகளும் கேட்டுக் கொள்கின்றன!

உணவுத் தட்டுப்பாடுக் குறித்துச் செய்திகள் நாள்தோறும் நெஞ்சைக் கலக்கிடும் வண்ணம் வந்து கொண்டிருக்கின்றன!

குடும்பக் கார்டுக்கு மாதம் ஒன்றுக்கு இருபது கிலோ அரிசி தரப்படும் என்பது அரசின் அறிவிப்பாகவே நின்றுவிட்டது! ஆறு கிலோ - நாலு கிலோ - பல பகுதிகளில் இரண்டு கிலோ அரிசி வழங்கும் பரிதாபகரமான நிலைமை! வானவில் வண்ணத்தில் தரப்படும் அந்த மட்ட ரக அரிசியும் போதுமான அளவுக்கு இல்லை! இரண்டு கிலோ அரிசி ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குப் போதுமா? மத்திய, மாநில அரசுகள் கவலையுடன் அணுக வேண்டிய பிரச்சினை இது!

கோதுமை ஓரளவு தரப்படுகிறது எனினும், அதனைப் பதார்த்தமாக்கிச் சாப்பிடத் தேவையான துணைப் பொருட்களின் விலையோ, ஏழைகளால் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் இருக்கிறது!

அன்றாடம் உணவுக்குத் தேவையான எல்லாப் பொருள்களுமே, மக்களின் வாங்கும் சக்திக்கு மீறிய அளவிலே விலையேறிக் கொண்டே இருக்கிறது!

ஏழைகளின் ஆப்பிள் என்று தக்காளியைக் கூறுவார்கள்! அதன் விலையோ, கிலோ பதின்மூன்று ரூபாயைப் பல இடங்களில் தாண்டிக் கொண்டிருக்கிறது.

சாதாரண சாமானிய மக்கள், காய்கறிக் கடைகளின் பக்கம் திரும்ப முடியாத நிலை!

உணவுக்கு மூலப்பொருளான அரிசியின் விலை ஏறத் தொடங்கியிருப்பது மட்டுமல்ல, மாதமொன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு இரண்டு கிலோதான் என்ற நிலையும் தொடருமானால், பட்டினிச் சாவுகளைச் சந்திக்க வேண்டிய கொடுமையும் தமிழகத்தில் ஏற்படுமோ என அஞ்சிட வேண்டியுள்ளது!

இந்த வேதனையிலும் இங்குள்ள அரசாங்கம், மக்களின் பல்வேறு கஷ்டங்களைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாமல், குறைகளை எடுத்துக் காட்டுகிற எதிர்க்கட்சிகளின் மீது சீறி விழுந்தவாறே பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறது!

உணவுப் பஞ்சத்திலேயிருந்து தமிழகத்தைக் காப்பாற்றத்தான் - மத்திய மாநில அரசுகளின் உறக்கத்தைக் கலைக்கத்தான் எதிர்க்கட்சியினர், அணி திரண்டு குரல் கொடுக்கின்றனர்!

எங்களை நிந்தனை செய்வது பிறகு இருக்கட்டும் - நிலைமையை உணர்ந்து மக்களைக் காப்பாற்ற முன்வருக!

என்பதே அரசுக்கு விடுக்கும் கோரிக்கை!

இந்தக் கோரிக்கை, யார் காதிலோ ஊதிய சங்காக ஆகிவிடக் கூடாது!

இரு அரசுகளும் கவனிக்குமா?

அன்புள்ள,

மு. க.

(22-07-1983)

1129. நடந்து முடிந்த தேர்தல் - ஒரு விளக்கம்!

உடன்பிறப்பே,

மாநிலங்களவைத் தேர்தலுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் வாக்களித்து மாநிலங்களவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்தும், இப்போது இங்கு நடைபெற்று முடிந்துள்ள தேர்தலைக் குறித்தும் சில விபரங்கள்!

எத்தனை இடங்கள், தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களால் நிறைவு செய்யப்பட வேண்டுமோ, அத்தனை இடங்களுடன் ஒரு இடத்தைக் கூட்டிக்கொண்டு அந்த எண்ணால், மொத்தம் பதிவான செல்லக்கூடிய வாக்குகளை வகுக்க வேண்டும். இப்படித்தான் வாக்கு எண்ணிக்கை கணக்கு ஆரம்பமாகிறது.

தமிழகச் சட்டப் பேரவையில் மொத்தம் 235 உறுப்பினர்கள். ஒருவர் நியமன உறுப்பினர். அவருக்கு மாநிலங்களவைத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை கிடையாது. எஞ்சியுள்ள 234 வாக்காளர்களில், காங்கிரஸ் தலைவர் நண்பர் ஹாஜா செரீப் அவர்களுக்குச் சட்டப் பிரச்சினை காரணமாக, வாக்களிக்கும் உரிமை தடுக்கப்பட்டிருக்கிறது! பார்வார்டு பிளாக் கட்சி உறுப்பினர் ஒருவர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். ஜனதா கட்சி உறுப்பினர் இருவரும் கடைசி நேரத்தில் வாக்களிக்கப் போவதில்லையென அறிவிக்கப்பட்டு விட்டது. அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 230 ஆகும். அதில் செல்லாத வாக்கு ஒன்று போக, எண்ணுவதற்குத் தகுதி பெற்ற வாக்குகள் 229 மட்டுமே!

ஆறு இடங்களுக்குத் தேர்தல் அல்லவா? அதனால், நான் முதலில் குறிப்பிட்டபடி, 229 வாக்குகளை ஏழு என்ற எண்ணால் வகுக்க வேண்டும். அப்படி வகுத்தால் சுமார் 32.7 வாக்குகள் என்ற கணக்கு வரும். இதனை ஒரு நபர் 32 வாக்கு வாங்க வேண்டும்

என்றும் கூறலாம். எனவே 33 வாக்குகள் அல்லது அதற்கு மேலே வாக்குகளைப் பெறுகிற வேட்பாளர்கள் முதல் சுற்று எண்ணிக்கையிலேயே வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டு விடுவார்கள்!

33க்கும் குறைவாக வாக்குகளைப் பெற்றிருப்பவர்கள் விஷயத்தில் இரண்டாவது சுற்று எண்ணிக்கை ஆரம்பமாகும். இதில், முதல் சுற்றில் 33-க்கும் அதிகமாக எந்தவொரு வேட்பாளராவது வாக்குகளைப் பெற்றிருந்தால், அந்த வேட்பாளருக்கு முதல் வாக்கை அளித்தவர்கள், அவர்களின் இரண்டாவது வாக்கினை யாருக்கு அளித்திருக்கிறார்கள் என்று பார்க்கப்படும். உதாரணமாக, வெற்றிபெற்ற ஒருவர், 34 வாக்குகள் பெற்று, அவருக்கு வாக்களித்தவர் இரண்டாவது சுற்றில் நிற்கிற ஒருவருக்கு இரண்டாவது வாக்கினை அளித்திருந்தால், வெற்றி பெற்றவரின் அதிகப்படியான ஒரு வாக்கு அவருக்குப் போய்ச் சேரும். இரண்டாவது வாக்குகள் எத்தனை அளித்திருந்தாலும், அதிகப்படியான நிலையில் உள்ள அந்த ஒரு வாக்குத்தான் இரண்டாவது சுற்றில் இருப்பவர்க்குக் கிடைக்கும்.

இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு நடந்து முடிந்த தேர்தலைக் கவனிப்போம்.

அ.தி.மு.க.வுக்கு, சபாநாயகர் உள்ளிட்ட மொத்த வாக்குகள் 134 ஆகும். பார்வார்டு பிளாக் கட்சி வாக்குகள் 2-உம், குடியரசுக் கட்சி வாக்கு ஒன்றும், கரையாளர் (லோக்தள கட்சி) வாக்கு ஒன்றும், அ.தி.மு.க.வுக்கு ஆதரவு என்ற அளவில் 138 வாக்குகளுடன் தேர்தல் களத்தில் இறங்கி, முறையே 35, 34, 34, 34 என்ற வாக்குகளைப் பெற்று மொத்தமாக 137 வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் யாரும் தங்கள் இரண்டாவது வாக்குகளை மூப்பனார் அவர்களுக்கோ அல்லது மார்க்சிஸ்ட் வேட்பாளர் ராமமூர்த்தி அவர்களுக்கோ குறிப்பிடவில்லை! எனவே இந்த 137 வாக்குகளில் இரண்டாவது பிரச்சினை எழவே இல்லை!

இந்திரா காங்கிரஸ் (ஹாஜா ஷெரீப் நீங்கலாக - புதிய வரவு சௌரிராசன் உட்பட) 31 வாக்குகளும், உச்ச கட்டத்தில் தமிழ்நாடு காமராஜ் காங்கிரசிலிருந்து விலகி இந்திரா காங்கிரஸ் வாக்காளராக மாறிய பாரமலை என்ற நண்பரின் வாக்குடன் 32 வாக்குகளை

உடையதாக இருந்தது! ஆனால், ஒரு வாக்கு செல்லாததாகி விடவே திரு. மூப்பனார் அவர்கள், 31 வாக்குகளே பெற முடிந்தது!

திரு. பி. ராமமூர்த்தி அவர்களுக்கு, மார்க்சிஸ்ட் கட்சி வாக்குகள் 11-உம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி வாக்குகள் 10-உம், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் வாக்குகள் 3-உம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் வாக்குகள் 2-உம் சேர்ந்து 26 வாக்குகள் கிடைத்தன!

இந்த இருவரும், முதல் சுற்றில் போதுமான வாக்கு பெறாத காரணத்தால், இரண்டாவது சுற்றில் நின்றனர்!

இப்போதுதான் வெற்றி பெற்றவர்களின் இரண்டாவது வாக்குகள் கணக்கிடப்பட்டன.

தி.மு.க.வும், மார்க்சிஸ்ட் கட்சியும் கலந்து எடுத்த முடிவின்படி, ஒருவருக்கொருவர் இரண்டாவது வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தன என்றாலும், இந்தச் சூழ்நிலையில் முதல் சுற்றில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர் பெற்ற இரண்டாவது வாக்குகளையே கணக்கிட முடியும்.

32 வாக்குகளுக்குப் பதிலாக முரசொலி மாறன் (தி.மு.க. 33, முஸ்லிம் லீக் 1, உபரி 1) ஆக 35 வாக்குகளைப் பெற்று இரண்டே கால் வாக்கு அதிகமான அளவில் இருந்ததால், அவருக்கு முதல் வாக்களித்தவர்கள் இரண்டாவது வாக்குகள் திரு. ராமமூர்த்திக்கு அளித்திருந்ததையொட்டி, அந்த இரண்டே கால் வாக்குகளும் இராமமூர்த்தி அவர்களின் கணக்கில் சேர்க்கப்பட்டன.

அப்படி எண்ணியபோது மூப்பனார் அவர்கள் 31 வாக்குகள்!

ராமமூர்த்தி அவர்கள் 28¼ வாக்குகள்!

மூப்பனார் வெற்றி என்றும், ராமமூர்த்தி தோல்வி என்றும் அறிவிக்கப்பட்டு விட்டது.

இதுதான் வெற்றி வாய்ப்பின் நிலைமை!

வெற்றி பெற்றவர்கள் அனைவரும் வாழ்த்துக்குரியவர்கள் என்றாலும் திரு.ராமமூர்த்தி அவர்கள், எப்படி வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது என்பதைக் கவனிக்கத் தவறக்கூடாது!

திரு.ராமமூர்த்தி பெற்றது 26 வாக்குகள். கழகத்தினர் அளித்த இரண்டாவது வாக்குகளின் மூலம் அவருக்குக் கிடைத்தது 2¼ வாக்கு - ஆக மொத்தம் 28¼ வாக்கு!

இந்த நிலையில் பாரமலை அவர்கள், திடீரென கட்சி மாறி திரு. மூப்பனார் அவர்களுக்கு வாக்கு அளிக்காமல் இருந்திருந்தால், மூப்பனார் அவர்களுக்கு 31 வாக்குக்குப் பதிலாக 30 வாக்குகளே கிடைத்திருக்கும்.

முதலில் எதிர்பார்த்தபடி, பாரமலையின் வாக்கு ராமமூர்த்திக்குக் கிட்டியிருந்தால் 29¼ வாக்குகள் ஆகும்!

ஜனதாவில் திரு. இஸ்மாயில் வாக்களிக்காவிட்டாலும் திரு. விஜயராகவன் வாக்களிப்பார் என்று நண்பர் இரா. செழியன் விடுத்த அறிக்கையின்படி விஜயராகவன், ராமமூர்த்திக்கு வாக்களித்திருந்தால் மொத்த வாக்குகள் 30¼ என ஆகும்!

இந்தப் பின்னக் கணக்கில் 30 ஓட்டுகளைவிட 30¼ ஓட்டுகளே அதிகம்! ஆக ¼ ஓட்டு வித்தியாசத்தில் மார்க்சிஸ்டு தலைவர் வெற்றி பெற்றிருப்பார்!

எனவே, ஜனதாவின் மேலிடத்து முடிவுக்கும், மாநிலத்து முடிவுக்கும் உள்ள முரண்பாடும் - கடைசி நேரத்தில் தமிழ்நாடு காமராஜ் காங்கிரசிலிருந்து நண்பர் பாரமலை விலகியதும் - மார்க்சிஸ்ட் தலைவர் நண்பர் ராமமூர்த்தி அவர்களின் வெற்றியைப் பாதித்து விட்டது என்பதே உண்மை நிலவரமாகும்!

இதனை விளக்கவும், மாநிலங்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை முறையை எடுத்துக் காட்டவுமே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

(24-07-1983)

1130. அவர்களுக்கும் தாய்கள் உண்டு!

உடன்பிறப்பே,

உட்கட்சிப் பூசல்களையும் - உணவுப் பஞ்சம் தலைவிரி கோலமாக ஆவேச உருவெடுத்து வருவதையும் - ஊழல் பொத்தல்களால் ஊரும், நாடும் சிரிக்கும் நிலை உருவாகி விட்டதையும் - நிர்வாகக் கோளாறு - நீதி நெறி முறைகளில் ஓட்டை உடைசல் - நெருப்புமிழும் கண்களுடன் மக்கள் அணி வகுப்பு - இவற்றால் ஆட்சி நிலைதடுமாறிக் கொண்டிருப்பதையும் மறைத்து, மக்களிடையே திசை திருப்பும் நாடகமொன்றை நடத்த, நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அப்பாவிப்பிள்ளைகளான ஆலந்தூர் இளைஞர் அணித் தம்பிகள்தான் சமயத்தில் உதவினார்கள் போலும்! அவர்கள் உடலைத் தனது போலீசாரைக் கொண்டும், தோட்டத்துக் காவலர்களைக் கொண்டும் நையப்புடைத்து, ரத்தம் சொட்டச் சொட்ட விரட்டியடித்ததுமல்லாமல், அவர்கள் மீது வீண் பழியும் சுமத்தியிருக்கிறார்.

ஆவடியில் நடைபெற்ற இளைஞர் அணியினர் மாவட்ட உறுப்பினர் கூட்டத்திற்கு, ஆலந்தூரில் இருந்து செல்வதற்கு; வழியில் ராமாவரம் தோட்டத்தைக் கடந்துதான் ஆக வேண்டும்.

ஆலந்தூரில் இருந்து புறப்பட்ட இளைஞர் அணியினர் அவ்வழியே செல்லும்போது, ராமாவரம் தோட்டத்திலிருந்து முதலமைச்சர், வெளியே காரில் வரப்போவதாகக் கூறி - இளைஞர் அணியினர் சென்ற லாரியைப் போலீசார் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

போலீசாரின் ஆணையை மீறாமல் அந்த லாரியும் நிறுத்தப்பட்டது. பிறகு தோட்டத்திலிருந்து முதலமைச்சர், வழக்கம் போல் போலீசாரைச் சுமக்கும் வண்டிகள் முன்னும் பின்னும் செல்ல, லாரியைக் கடந்து சென்றிருக்கிறார்.

அப்போது லாரியில் இருந்த இளைஞர் அணியினர் என்னை வாழ்த்தியும், எம்.ஜி.ஆர். ஒழிக! எனக் கூறியும் முழக்கமிட்டிருக்கிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள், அப்படி முழக்கமிட்டிருக்கத் தேவையில்லை என்றே கூறுவேன்! இருந்தாலும் இளைஞர்கள், முதலமைச்சர் போகும் வழி என்பதற்காகச் சாலையில் தங்களின் லாரியை நிறுத்தி விட்டார்களே என்பதில் உணர்ச்சி வயப்பட்டு அவ்வாறு கோஷமிட்டு விட்டார்கள்!

எத்தனையோ தடவை அ.தி.மு.க. தோழர்கள் ஏறிச்சென்ற லாரிகள் என் காரைக் கடந்து போயிருக்கின்றன! லாரிகளில் உள்ளோர் என்னைக் கண்டதும், ஒழிக கோஷம் எழுப்பியதும் உண்டு! ஆபாசமான சேட்டைகளில் ஈடுபட்டதும் உண்டு! ஏதோ, உணர்ச்சி வேகத்தில் கோஷமிடுகிறார்கள் என்று - நானும் சிரித்துக்கொண்டே கையசைத்து விட்டுப் போயிருக்கிறேன்.

ஆனால் எம்.ஜி.ஆர்., என்ன செய்திருக்கிறார்! லாரியைக் கடந்து வந்த தனது காரையும், காவல்துறைக் கார்களையும் திரும்பச் செய்து லாரியை மடக்கி, அந்த இளைஞர்களிடத்திலே அவரே கோபமாகப் பேசியிருக்கிறார். அந்த இளைஞர்களில் சிலர் எம்.ஜி.ஆரைப் பார்த்து, மன்னித்து விடுங்கள்! ஏதோ எங்களுடன் வந்த சிலர் அப்படிக் கோஷமிட்டு விட்டார்கள் என்று வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள்.

அதற்குப் பிறகும் ஆத்திரமடங்காத முதலமைச்சர், தனது போலீசாருக்கு ஜாடை காட்டி விடவே - அவர்களும், அவர்களுக்குத் துணையாகத் தோட்டத்துக் காவலர்களும் இளைஞர் அணியினர் மீது பாய்ந்து - தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். அடி தாங்க முடியாமல் இளைஞர்கள் சிதறியோடியிருக்கிறார்கள். அவர்களில் சிலரைத் தோட்டத்துக்குள்ளேயே இழுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

இத்தனை நிகழ்ச்சிகளும் காலை 11 மணி அளவில் நடைபெற்றிருக்கின்றன. இந்த நிகழ்ச்சியைக் கண்டித்து, ஆவடியில் நடைபெற்ற இளைஞர் அணிக் கூட்டத்தில் தீர்மானம் உடனடியாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

நானும், ஆற்காடு வீராசாமி, துரைமுருகன் ஆகியோரும் வேலூர் முஸ்லிம் லீக் மாநாட்டுக்குச் செல்வதற்காக, மாலை 4 மணி

அளவில் புறப்பட்டுப் பூவிருந்தவல்லி வழியாகச் செல்லும்போது, பூவிருந்தவல்லியில் இளைஞர் அணியினர் எங்களை வரவேற்றனர்!

எப்படி வரவேற்றனர்? காயம்பட்ட கரங்களைக் கூப்பி வரவேற்றனர்! தலையில் அடி! காலில் அடி! நெற்றியில் அடி! மேனியெங்கும் ரத்தம் கசியும் நிலை!

மாவட்டச் செயலாளர் மதுராந்தகம் ஆறுமுகம், ராஜரத்தினம் எம்.எல்.ஏ., நல்லதம்பி எம்.எல்.ஏ. மற்றும் கழக முன்னணியினர், இளைஞர் அணி அமைப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் எங்களிடம் நடந்த விபரங்களைக் கூறினார்கள்!

ஆனால் மாலைப் பத்திரிகையில் பார்த்தால், எம்.ஜி.ஆரின் அறிக்கை, உண்மைக்கு ஒரு துளியும் தொடர்பில்லாத வெறும் அரசியல் ஸ்டண்டாக வெளியிடப் பட்டிருந்தது!

என்னதான் நடந்தது என்று விபரங்களை உடனடியாக கழகப் பொருளாளர் சாதிக் அவர்களும், மாநில இளைஞர் அணி அமைப்பாளரும் அன்று மாலையே (24-7-83) பத்திரிகை நிருபர்களை அழைத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த மறுப்பும், விளக்கமும், 25-7-83 காலை சென்னையில் எல்லா ஏடுகளிலும் (தினத்தந்தி தவிர) வெளி வந்திருக்கின்றன!

மூடி மறைக்க முடியாமல் முடைநாற்றமெடுத்துக் கொண்டிருக்கிற மோசடிச் செயல்களை, இப்படியொரு திடீர்த் திரை மூலம் கொஞ்ச காலத்திற்கு மறைத்துக் கொள்ளலாம் என்று எம்.ஜி.ஆருக்கு ஒரு எண்ணமிருக்கலாம்! அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள இளைஞர் அணியினர் மீது ஒரு புதுப்பழி! பொல்லாப்பழி!

அந்தப் பழிச் செயலுக்குப் போலீசும் உடந்தை!

அய்யோ! கொடுமை! தமிழ் நாட்டுப் போலீசின் மானம், மரியாதையெல்லாம் வெகு வேகமாகக் குறைந்து கொண்டிருப்பது மட்டுமல்ல! அந்த இலாகாவின் நேர்மை, நாணயம், கடமையுணர்வு அத்தனையும் மூட்டை கட்டிப் போட்டாகிவிட்டது!

அதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு! இதோ ஒரு புதிய எடுத்துக்காட்டுத்தான், இப்போது ஜோடிக்கப்பட்டுள்ள கற்பனைக் கதையில் போலீசார், துணை நடிகர் வேடம் தாங்கி நிற்கிற காட்சியாகும்!

உடன்பிறப்பே, ஆளுங் கட்சிக் குண்டர்களும், அவர்களுக்கு அடிமைகளாகப் போலீசாரும் எதிர்க்கட்சிகளின் மீதும், அவற்றின் தலைவர்கள் மீதும் நடத்துகிற தாக்குதல்களைக் கண்டிப்பதும் - நாம் நடத்தும் ஆகஸ்டு அறப்போரில் ஒரு அம்சம்!

அந்தப் பட்டியலில் இப்போது ராமாவரம் அரசியல் நாடகமும், புண்பட்டு நிற்கும் இளைஞர் அணியினர்க்கு இழைக்கப்பட்ட கொடுமையும் சேருகின்றன!

இளைஞனே! வா! என அழைத்தேன்! அவனைக் கொலைஞனே! என்று குற்றம்சாட்டி அழித்துவிடக் கோலேந்திகள் முயலுகிறார்கள், கோட்டை வாசம் நிரந்தரம் என நம்பிக்கொண்டு!

அந்தக் கோணல் மதியினர்க்குக் குற்றேவல் புரிந்து, நியாயத் தராசை நொறுக்கிப் போடுகிறது காவல்துறை!

கட்சிகள் ஆட்சி - ஜனநாயகத்தில் மாறும்! மாறி மாறி வரும்!

இந்தச் சாதாரண உண்மையைக் கூடத் தெரிந்து கொள்ள முடியாமல் - இளங்கொழுந்துகளின் மீது தடியடி நடத்தியதோடு, பொய்க் குற்றமும் சாட்டுகிற போலீசாருக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன் - உங்களுக்கு மட்டும்தான் தாயார்கள் இருக்கிறார்களா? அடிபட்டு அலறித் துடித்த அந்த இளஞ்சீயங்களுக்கும் தாயார்கள் உண்டு!

அந்தத் தாய்களின் வயிற்றெரிச்சல், பொய்யர்களே! புளுகர்களே! உங்களைச் சும்மா விட்டு விடுமா? யோசித்துப் பாருங்கள்! அந்த மாதாக்கள் மண்ணை வாரி இறைப்பார்கள்! அது உங்கள் மனச்சாட்சியை சுட்டே தீரும்!

உங்கள் வெறியாட்டத்திற்கான விளையாட்டுக் கருவிகளாக இளைஞர்களா? அட! அக்கிரமக்காரர்களே! இதன் விளைவை, விரைவில் அனுபவிப்பீர்கள்!

உடன்பிறப்பே, என்னுள்ளத்தில் இருந்து மட்டுமல்ல - உன்னைப்போன்ற உடன்பிறப்புகள் அத்தனைபேர் உள்ளத்திலும் இருந்தும், இந்தச் சாபம் வெளிப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

(26-07-1983)

1131. தென்திசையைப் பார்க்கிறேன்!

உடன்பிறப்பே,

தென் திசையைப் பார்க்கின்றேன்;
என் சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்கள் எல்லாம்
பூரிக்குதடடா!

எனத் தொடங்கி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன் இராவணனின் புகழ்பாடும் கவிதையினைப் படிக்கும் போதெல்லாம் சிந்தையும், தோள்களும் பூரிக்கும்! உண்மை! உண்மை!

ஆனால் இன்று? சிந்தையெல்லாம், தோள்கள் எல்லாம் துடிக்குதடடா! என்ன சொல்வது? என்ன எழுதுவது? தவிக்கிறேன்! தடுமாறுகிறேன்! தத்தளிக்கிறேன்!

இருபத்தைந்து ஆண்டுக் காலமாக இலங்கைத் தீவில், செத்துச் செத்துப் பிழைத்துக் கொண்டு இருக்கிற தமிழ் இனத்தை, இப்போது ஒரேயடியாகப் பூண்டற்றுப் போகுமாறு செய்திட, இரத்தக் காட்டேரி வேடம் புனைந்து கொண்டு இலங்கை அரசும், சிங்கள வெறியர்களும் வீதிக்கு வீதி, தெருவுக்குத் தெரு அலைந்து கொண்டிருக்கிற செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

இலங்கையிலிருந்து சென்னைக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள இயலாத காரணத்தால், தந்தை செல்வநாயகத்தின் மகன் சந்திரகாசன் அவர்களும், திரு. அமிர்தலிங்கம் அவர்களும் முறையே இலண்டன், நியூயார்க் ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களிடம் தொடர்பு கொண்டு, அங்கிருந்து, இலங்கையில் நடைபெறும் கொடுமைகளை எனக்குத் தெரிவிக்குமாறு செய்திருக்கிறார்கள்.

கொழும்பு நகரில் தமிழர் குடியிருப்புப் பகுதிகள் பற்றி எரிகின்றனவாம்! பேருந்துகளில் செல்வோரைக் கீழே இறக்கி வரிசையாக நிறுத்தி, அவர்களில், தமிழர்களைச் சுட்டுத்தள்ளிவிட்டு வெறிக்கூச்சல் போடுகிறதாம் இலங்கை ராணுவம்!

தமிழர் தம் கடைகள் நொறுக்கப்படுகின்றன! தமிழர் உடைமைகள் சாம்பலாக்கப் படுகின்றன! கொள்ளையும், கொலையும் மலிந்து விட்டன! எங்கு நோக்கினும் கண்ணீர்! கதறல்!

தமிழர்களின் உயிரும், தமிழச்சிகளின் கற்பும் சிங்கள வெறியர்களுக்குச் சர்வ சாதாரணம் என்று கருதப்பட்ட காலத்தில் - இனித் தமிழ் இனம் மானத்தோடு வாழ்வதெனில், ஆயுதம் ஏந்தித்தான் தீர வேண்டுமென்று எழுந்தனர் தமிழ் விடுதலைப் புலிகள்!

வேறென்ன செய்வர் அவர்கள்? தங்களைப் பெற்ற தாய்களும், உற்ற சகோதரிகளும், கட்டிய மனைவிகளும் தங்கள் கண் எதிரிலேயே கற்பிழந்து கதறித் துடிக்கும் காட்சியைக் கண்டு மௌனமாயிருக்க, அவர்கள் என்ன மானமற்ற வம்சத்தவரா?

சிங்களவன் உயிர் மட்டும் விலை மதிப்பற்றது - தமிழனின் உயிர் மட்டும் பூச்சி புழுக்களின் உயிர்களைவிடக் கேவலமானதா? இந்தக் கேள்வி குடையாத உள்ளம், உண்மைத் தமிழனின் உள்ளமாக இருக்க முடியாதே!

எனவே அவனால் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல இருக்க முடியவில்லை!

வெடித்து விட்டான் பூகம்பமாக! கொழித்து விட்ட உமிகள்தான் இனி, கொலை வெறியர் கொடுங்கோலர் கூட்டமெனக் கூறி எழுந்து விட்டான்!

அராஜகம் - அடக்குமுறை அளவுக்கு மீறினால், அதன் விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்பதற்கு இலங்கையொரு எடுத்துக்காட்டு!

அடங்கிக் கிடந்தோர் ஆர்ப்பரிப்பதா? அடிமைகள் விடுதலை முரசு கொட்டுவதா? ஆள்வதற்குச் சிங்களவரும், மாள்வதற்குத் தமிழர்களும் என்றிருந்த நிலையில், மாற்றம்

ஏற்படுவதா? எதேச்சாதிகார ஜெயவர்த்தனே அரசு, இந்த ஆணவக் கேள்விகளுக்கு விடையளித்துக் கொள்ள ராணுவத்தை ஏவி விட்டிருக்கிறது!

தீயிட்டுப் பொசுக்குகிறார்கள் தமிழர்களின் வீடுகளை, தீயினும் கொடியோர்! இராணுவ வண்டிகள் இலங்கை முழுதும் திரிகின்றன! பாதுகாப்புக்கு அல்ல! பழி வாங்க! பட்டப்பகலில் தமிழின மக்களைச் சுட்டுத்தள்ள!

பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு, பாரதப் பிரதமர் பரிவு காட்டுகிறார்.

ஆப்பிரிக்க நாட்டு விடுதலை வீரர்களுக்கு, இந்தியாவின் ஆதரவு உண்டு என இயம்புகிறார், இந்திரா அம்மையார்.

பங்களா தேஷ் பிரச்சினையில், மனிதாபிமான அடிப்படையில் இந்திய அரசு, இரக்கம் காட்டி களத்தில் இறங்கியது.

இலங்கையில் கொல்லப்படுவது தமிழ் இனம்! கொள்ளையிடப்படுவது தமிழனின் உடைமைகள்! அவனுக்கு இரக்கம் காட்ட, இன்னும் ஏன் தயக்கம்? அவனைக் காப்பாற்ற யாருமே கிடையாதா?

கண்களில் அருவி பெருகிட நிற்கிறேன்! கை பிசைந்தவாறு செய்வதறியாது விரிக்கிறேன்! இது என் நிலை மட்டுமல்ல! இங்கு தமிழ்த் தாயகத்தில் உள்ள ஒவ்வொரு தமிழனின் நிலையும் இதுதான்!

நமது குலத்திற்கெதிராக இலங்கையில் நடக்கும் கொடுமைகளைக் கண்டித்துக் குரல் கொடுப்போம்!

மனிதாபிமானமற்ற ஜெயவர்த்தனே ஆட்சியின், அடக்குமுறை அராஜகங்களை அவனி அறியச் செய்திடுவோம்!

வாழ்க மனிதாபிமானம்!
வீழ்க மிருகவெறி ஆட்சி!
வாழ்க தமிழ் இனம்!
வீழ்க, வீழ்க, வீணர் துரைத்தனம்!

கட்சிகளையெல்லாம் கடந்த தமிழ் இன மக்களின் ஒருமித்த குரல், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற ஓங்கி ஒலித்திடுமாக!

உடன்பிறப்பே!

இன்று தமிழகத் தலைநகராம் சென்னையில் நடைபெறும் இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரணிக்கு, பிற்பகல் மூன்று மணிக்கே கடற்கரை காமராஜர் சாலை - அண்ணா சதுக்கத்திற்கு வந்துவிடு!

இந்திய அரசே! இலங்கைத் தமிழரைக் காப்பாற்று என்பது, நமது பேரணியின் முழக்கமாக இருக்கட்டும்! வா! வா! தவறாது வா!

அன்புள்ள,

மு. க.

(27-07-1983)

1132. உதவாதினி ஒரு தாமதம்! உடனே எழுக தமிழா!

உடன்பிறப்பே,

உலகில் புரட்சி நடந்த நாடுகளில் சிறைச்சாலைகள் உடைக்கப்பட்டன, சிறையில் அடைபட்டிருந்த கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள் என்றுதான் வரலாற்று ஏடுகள் கூறுகின்றன!

ஆனால், இதோ ஒரு கொடுமை நடைபெற்றிருக்கிறது - இலங்கையில் கொழும்பு சிறைச்சாலைக்குள்ளே சிங்கள வெறியர்கள் பயங்கர ஆயுதங்களுடன் நுழைந்து, பக்கத் துணையாக இராணுவத்தினரையும் வைத்துக் கொண்டு தமிழீழ விடுதலை வீரர்கள், முப்பத்தேழு பேரைக் கொன்று குவித்திருக்கின்றனர்.

கொல்லப்பட்டோர் பலர் மீது நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது!

தமிழ்ஈழ விடுதலை வீரர்களின் தானைத் தளபதி தங்கதுரையும், தளகர்த்தர்களாம் குட்டிமணி என்ற யோகசந்திரனும், ஜெகனும் மற்றும் முப்பத்து நான்கு தமிழ்ஈழ விடுதலைக் காளைகளும் சிங்களத்து சிறுநரிகளின் திடீர் தாக்குதலால், சிறைச்சாலைக்குள்ளே கொலையுண்டிருக்கிறார்கள்.

சிறைக்குள்ளிருந்த சிங்களக் கைதிகள், தமிழ் வீரர்களை வெட்டிக் கொன்றார்கள் என்பதெல்லாம் இலங்கை அரசு, திரிக்கின்ற போலிக் கதையாகும்! இட்டுக் கட்டிப் பொய்களை ஜோடிப்பதில் இணையற்றவராக விளங்குகிற நவீன கோயபல்ஸ் ஜெயவர்த்தனேயின் அரசு, தருகிற செய்திகள் நம்பக் கூடியதாக இல்லை! முப்பத்தேழு தமிழ் விடுதலை வீரர்களைச் சிறையில் உள்ள சிங்களக் கைதிகள் கொன்று விடுவது என்பது சாதாரணமா? அதற்கேற்ற ஆயுதங்கள் வேண்டாமா? அப்படியே ஆயுதங்களுடன் தங்கள் காரியத்தை முடிக்க எண்ணினாலும், சிறை அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

இந்தக் கொடுமை, வேண்டுமென்றே திட்டமிட்டு வெளியில் இருந்த சிங்கள வெறியர்கள் சிறைக்குள் நுழைந்து, சிறை அதிகாரிகள் துணையுடன், இராணுவப் பாதுகாப்புடன் நடத்தப்பட்டிருக்கிறது என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை!

ஏன்? என்று கேட்க ஆள் இல்லாத நாட்டில், அதிகாரிகளின் பேச்சுத்தானே அரிச்சந்திர வாக்கு!

சிறைக்கு வெளியே சித்ரவதைக்கு ஆளாகி துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கும் தமிழின மக்களை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டு இருந்திருப்பர், தங்கதுரையும் - குட்டிமணியும் - ஜெகனும்! அவர்கள் ஒருவரையொருவர், சந்திக்க முடியாதபடித் தனித்தனித் கொட்டடிகளில் அந்த முப்பத்துஏழு பேரும் அடைக்கப் பட்டிருந்தனர்! அந்த நிலையில் - அம்மவோ! நினைக்கவே முடியவில்லை! இதயம் தூள் தூளாக வெடித்துவிடும் போலிருக்கிறது! சண்டாளச் சிங்களக் கொடிய ஓநாய்கள் - கழுகுகள் கூண்டுகளை உடைத்து, நமது தமிழ் வீரர்களின் உயிர்களை அவர்தம் உடற்கூண்டுகளிலேயிருந்து போக்கிவிட்ட பொல்லாச் செய்தியை, எப்படித்தான் தாங்கிக் கொள்வது? இரத்தம் கொதிக்கிறதே! அய்யோ, என் இதயத் துடிப்புகள் நின்று விடக்கூடாதா? இந்த வேதனையை எப்படித்தான் - யாரால்தான் தாங்கிக் கொள்ள முடியும்?

1976-77-ஆம் ஆண்டுகளில் - சென்னைக் கடற்கரை - இலங்கையின் எழுச்சிக் கவிஞர் காசிஆனந்தனுடனும், தங்கதுரையுடனும், குட்டிமணியுடனும், மற்றும் பல விடுதலை வீரர்களுடனும் - நானும், என்னுடன் சில நண்பர்களும் உரையாடிக் கொண்டிருக்கிறோம். அவர்களின் பாதங்களை டார்ச் விளக்கின் வெளிச்சத்தில் காட்டுகிறார்கள்! பாத முழுவதும் கொப்புளங்கள்! ஏன் இப்படி? என்று வியப்புடனும், வேதனையுடனும் கேட்கிறோம்! தலைமறைவாக ஓடி வந்து தமிழகத்தைச் சேர்வதற்காகப் பதுங்கிப் பதுங்கி வரும்போது செருப்பு சப்தம், தங்களை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்து விடும் என்பதால் வெறுங்காலுடன் வந்ததாகக் கூறுகிறார்கள். தங்களின் தமிழீழ விடுதலைப் போராட்டம், வெற்றி பெறும் வரையில் நிற்காது! நிற்பது போலத் தோன்றினாலும் மீண்டும் வெடிக்கும்! என்று உறுதியுடன் உரைத்திடுகிறார்கள்!

நெஞ்சு நிமிர்த்திக் கொண்டு - நிலவின் வெளிச்சத்தில் ஒளியுமிழ் முகம் காட்டி, கடற்கரை வெண்மணற்பரப்பில் ஆறு

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு எக்காளமிட்ட அந்த வேங்கைகளின் உடல்கள், சிறைக்கோட்டத்திலே வெட்டுண்டு வீழ்ந்தன என்பதைக் கேட்கும்போது, அவர்களுடன் பழகியவன் என்ற முறையில் என் மனம் என்ன பாடுபடும்!

தமிழ் உள்ளங்கள் அத்தனையிலும் இன்று, தணல் அன்றோ அள்ளிக் கொட்டப் பட்டிருக்கிறது!

உடன்பிறப்பே,

வெளிநாடுகளில் வாழுகிற தமிழர்கள், தொலைபேசி வாயிலாக என்னிடம் தொடர்பு கொண்டு தேம்பித் தேம்பி அழுகிறார்கள்! அந்தக் கண்ணீருடன் இணைந்து அவர்தம் கண்களிலே கனல் பறக்கிறது, என்பதையும் அவர்களுடைய பேச்சிலேயிருந்து புரிந்து கொள்ள முடிகிறது!

இலங்கைக் கொடுமைக்கு முடிவு காண இந்திய அரசு, என்ன செய்கிறது என்று பார்ப்போம்!

நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதை, கிழக்கு முகவை மாநாட்டிலே தீரமிகு தீர்மானமாக நிறைவேற்றுவோம்!

இன்று 28-7-83 வியாழக்கிழமை - சிங்கள வெறியர்களின் தாக்குதலுக்கும், இராணுவத்தின் பாய்ச்சலுக்கும் ஆளாகி உயிர் துறக்கும் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற, தமிழக முழுதும் சிற்றூர், பேரூர், நகரங்களில் நமது கழக அமைப்புகள் இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரணிகளை நடத்திட வேண்டுகிறேன்!

போதுமான நேரமில்லையே! முன்அறிவிப்பு இல்லையே - இதையெல்லாம் கவனித்துச் செயல்படக்கூடிய சமயமல்ல இது!

தமிழன் கொல்லப்படுகிறான்! அது கேட்டுத் தமிழன் கொதிக்கிறான்!

இந்தச் செய்தி உலகிற்கு எட்ட வேண்டுமானால், உதவாதினி ஒரு தாமதம்! உடனே எழுக தமிழா! என்றுதான் என்னால் கூற முடியும்.

அன்புள்ள,

மு. க.

(28-07-1983)

1133. முகவையில் முடிவெடுப்போம்!

உடன்பிறப்பே,

இலங்கை எரிகிறது! எரிகிறது! இராமாயணக் காதையிலே அந்த நாடு, நகரம், கூட கோபுரம் எரிந்தது என்று படித்திருக்கிறோம்! இப்போது எரியும் தீயிலே இலங்கை வாழ் தமிழர்கள், தூக்கி எறியப்படுகிறார்கள்! சிறைச்சாலைகள் நொறுக்கப்படுகின்றன! அங்குள்ள தமிழர் விடுதலைத் தலைவர்கள் கொல்லப்படுகிறார்கள்! பல்கலைக் கழக மாணவர்களை வளாகத்திற்குள்ளேயே புகுந்து சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள்! கொலை! கொள்ளை! நெருப்பு! அய்யோ! அய்யோ! தமிழன் சாகிறான் – சாகிறான்!

உடன்பிறப்பே, 27-7-83 இரவிலும், மறுநாள் காலை ஒன்பது மணி வரையிலும், அமெரிக்காவின் பல பகுதிகளிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும், பாரிசில் இருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் எத்தனை எத்தனை தொலைபேசிகள்! அந்தத் தொலைபேசிகளின் வாயிலாக என்னுடன் தொடர்பு கொள்கிற தமிழ்ப் பெரியவர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், சகோதரிகள் துடி துடித்து அழுகிறார்கள்!

இந்தியாவில் உள்ள தமிழர்களே! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்வது?

நமது கழகம் எடுத்துள்ள முயற்சிகளை அவர்களுக்குச் சொன்னேன். அதனை முன் கூட்டியே கேள்விப்பட்டோம் என்று கூறி நன்றி தெரிவித்தார்கள். இங்குள்ள மற்ற கட்சிகள் எடுத்துள்ள நடவடிக்கைகளையும், மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் விளக்கிக் கூறினேன். அனைவரும் கட்சிமாறுபாடுகளை மறந்து ஒரே குரலில், இலங்கைத் தமிழருக்காக ஒலித்திடுவோமென உறுதிபூண்டிருப்பதைக் கூறினேன்.

ஆனால்! ஆனால்! அவர்களால் அமைதி அடைய முடியவில்லை!

இலங்கைத் தமிழரைக் காப்பாற்றுங்கள் என்று கதறுகிறார்கள்.

என்ன செய்வது?

புரியவில்லை!

கொல்லப்பட்ட தமிழர் தலைவர்கள் போக, மிச்சமிருக்கும் தலைவர்களையும் படுகொலை செய்திட சிங்களச் சண்டாளர்கள் கொடுவாள் தூக்கி அலைகிறார்களாம்!

பல ஆயிரம் தமிழ் மக்கள் அகதிகளாக ஆக்கப்பட்டு, உண்ண ஒரு வாய்ச் சோறுமின்றி அணு அணுவாகச் சாகிறார்களாம்!

கேட்கவே முடியவில்லை காது கொடுத்து அந்தச் செய்திகளை!

என்ன முடிவு எடுக்கலாம் - உடன்பிறப்பே! என்ன முடிவு எடுக்கலாம்?

இந்திய ராணுவம், இலங்கைக்குச் சென்றாலன்றி இலங்கைத் தமிழனுக்கு வேறு கதியே இல்லை! வேறு விதியே இல்லை!

இதை நான் எழுதும் நேரம் 28-7-83 காலை ஒன்பது மணி - இதோ! இன்னொரு செய்தி வருகிறது நியூயார்க்கிலிருந்து! இலங்கைத் தமிழர் தலைவர் சிவ சிதம்பரம், வேதனை தாங்காமல் இருதய நோயால் தாக்குண்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளாராம்! அவர் வீடு நொறுக்கப்பட்டு விட்டதாம்!

சற்றுத் தொலைவில் இருக்கும் நமக்கே இதயம் வெடிக்கிறதே! அருகாமையில் இருந்து தமிழன் அழிவதைக் காணும் அவருக்கு இதய நோய் வராதா?

அழுகிறேன்!

அழுகிறேன்!

அழுது கொண்டே இருக்கிறேன்! இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வழி முளைக்கும் வரையில், அழுது கொண்டேதான் இருப்பேன்!

இராமநாதபுரத்தில் நீயும், நானும், நமது கழகத் தலைவர்களும், முன்னணியினரும் சேர்ந்து ஒரு முடிவு எடுப்போம்! அந்த முடிவு அனைத்துக் கட்சியும் இணைந்து நிறைவேற்றுகிற முடிவாகவும் இருக்கும்! அல்லது அனைத்துக் கட்சிகளின் முடிவை நாம் நிறைவேற்றுகிற வழி வகை என்ன என்பதாகவும் இருக்கும் - அல்லது வேறு வழியின்றி நாம் தனித்து நின்று எடுக்கிற முடிவாகவும் இருக்கும்!

எழுத முடியவில்லை என்னால்!

இத்துடன் முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(29-07-1983)

1134. அறப்போர் தொடங்கட்டும்!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழனைக் காப்பாற்று என்று இந்திய அரசின் காலைப் பிடித்து அழுகிறோம்! அதுவும் நம்மைக் கட்டிப் பிடித்து அழுகிறேன் என்கிறது! அதுவே போதுமானது என்று ஆறுதல் கொள்ளுகிறது இங்குள்ள மாநில அரசு! ஆனால், ஆளும் கட்சியில் உள்ள உணர்ச்சியுள்ள பல தமிழ் இளைஞர்கள், பெரியோர்கள் நம்மைப் போலவே துடித்திடுகிறார்கள்! செய்வதறியாது விழித்திடுகிறார்கள்!

ஆகஸ்டு 5-இல் ரயில் நிறுத்தப் போராட்டம் என்று ஜூலை 31 காலையில், ராமனாதபுரம் செயற்குழுக் கூட்டத்தில் நாம் முடிவெடுத்து அறிவித்த பிறகு, அன்றிரவு டெல்லி அறிவிக்கிறது தமிழ்நாட்டில் ஆகஸ்டு 2-இல் நடக்கும் முழு அடைப்பில் ரயில்களும் ஓடாது என்று! நாம் என்ன செய்கிறோம் என்பதற்கு மாற்று என்ன செய்யலாம் என்பதிலே அக்கறை எடுத்துக் கொள்கிறார்களே தவிர, இலங்கையில் ஜெயவர்த்தனேயும், சிங்கள வெறியர்களும் நடத்துகிற அட்டூழியத்தை, இனப் படுகொலையை எப்படிச் சந்திக்கலாம் என்பதிலே எள்ளளவு அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை.

எந்தக் கட்சி, என்ன செய்கிறது என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்காமல், உயிரிலும், மூச்சிலும், உடலில் ஓடும் ரத்த அருவியின் அலைகளிலும் தமிழ் உணர்வை நீந்தவிட்டுக் கொண்டிருக்கிற தமிழகத்து இளைஞர்கள், இனமானமிக்க மாணவர்கள், தொழிலாளர்கள், அனைவருமே அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஆர்த்தெழுந்து போர்க்குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அளவிலாவது தமிழனின் வீரம், ஆசாபாசங்கள் என்ற ஈரத்தில் நனைந்து சோரம் போகாமல்

இருக்கிறதே என எண்ணி, வேதனைக்கிடையிலேயும் ஒரு துளி இன்பப் பெருமூச்சு விட்டுக் கொள்கிறேன்.

தமிழ் இனமே இலங்கையில் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது என்பது வெளிப்படையான உண்மையாகி விட்ட பிறகும், ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையை அணுகி அமைதிப் படையை அனுப்புவதற்கான முயற்சியில் ஈடுபடவோ அல்லது இந்திய இராணுவத்தை இலங்கையை நோக்கி அனுப்பிடவோ கிஞ்சிற்றும் எண்ணமின்றி விளக்கவுரைகள், விரிவுரைகள் ஆற்றிக் கொண்டிருக்கும் இந்திய அரசுக்கு, எந்த வழியில்தான் நமது உணர்வுகளை எடுத்துக்காட்டுவது?

ஜூலை 26-ஆம் தேதியன்று இலங்கையில் நிலைமை மோசம் என்று ஏடுகளில் செய்தி வந்ததும், மறுநாளே 27-ஆம் தேதி சென்னையில் ஏழு லட்சம் தமிழர்கள் கொண்ட பேரணியை நடத்திக் காட்டினோம். நமது குமுறலை வெளிப்படுத்தினோம். அடுத்த நாள் 28-ஆம் தேதி தமிழக முழுதும் பேரணிகளை நடத்தினோம். அந்த இரண்டு நாட்களும் சென்னையிலும், மற்ற ஊர்களிலும் கடைகளை அடைத்துத் தமிழர்கள் தமது கண்ணீரை இலங்கைத் தமிழர்க்குக் காணிக்கையாக்கினர்!

நியாயமான காரணங்களுக்காக வணிகர்கள் கடையடைப்பு செய்தபோது அவர்களில் சிலரை, நிர்வாணமாக்கிச் சிறையில் அடைத்துச் சித்ரவதை செய்த தமிழக அரசு, இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்காகவும், படுகொலைகளைக் கண்டிப்பதற்காகவும் அதே வணிகர்களை வேண்டி முழு அடைப்பில் பங்கு கொள்ளச் செய்திருக்கிறது! பாராட்டப்பட வேண்டிய மாற்றம்! இது தேசியப் பிரச்சினை ஆகிவிட்டது என்று கூறுகிற மத்திய அரசு, இரண்டாம் தேதியன்று இந்தியா முழுதும் முழு அடைப்பு என்று அறிவிப்பதற்குப் பதிலாக - தேசியத்தைத் தமிழ்நாடு அளவோடு சுருக்கிக் கொண்டு, பந்த்தில் நாங்களும் கலந்து கொள்கிறோம் என்று பம்மாத்து செய்கிறது!

மாநில அரசின் அமைச்சர் ஒருவரே, இந்தியா, ராணுவத்தை அனுப்பாவிட்டால் நாமே தோணிப் படையை இலங்கைக்கு அனுப்புவோம் - நாமே படையெடுப்போம் என்கிற அளவுக்குத் தனது தமிழ் ரத்தத் துடிதுடிப்பைக் கடுமையான வார்த்தைகளாக

வடித்தெடுத்திருக்கிறார். உடனடியாக முடியக்கூடியதா என்பது வேறு விஷயம்! உணர்ச்சி, வரவேற்கத்தக்கது!

உடன்பிறப்பே, மத்திய அரசின் மெத்தனத்தைச் சுட்டிக்காட்டி, சிறிதும் தயக்கமின்றி சிங்கள வெறியர்களின் கொடுங்கரங்களில் இருந்து தமிழ் இனத்தை மீட்டு, அதற்கோர் நிரந்தரமான நிம்மதி குலுங்கும் இடத்தை ஏற்படுத்தித் தர, இந்திய அரசு, முன்வரவேண்டுமென வலியுறுத்தத்தான் ஆகஸ்டு 4-ஆம் நாள் தமிழகத்தில் உள்ள மத்திய அரசின் அலுவலகங்களின் முன்னால் கறுப்புச் சின்னமணிந்து, அறவழியில் ஆர்ப்பாட்டங்களை நடத்த திட்டமிட்டிருக்கிறோம்! முதல் கட்டம் ஆர்ப்பாட்டமே தவிர, மறியல் அல்ல! வன்முறைக்குச் சிறிதும் இடமின்றி அந்த அறப்போர் நடக்க வேண்டும்!

ஆகஸ்டு 4-இல் இலங்கைப் பாராளுமன்றத்தில் - தமிழ் இனத்தோரின் குடியுரிமை பறிக்கவும், தூக்கில் போடவும், மிகக் கொடுமையான காட்டுமிராண்டிக் கறுப்புச் சட்டம் ஒன்று வருகிறது! அதைக் கண்டித்து இங்குள்ள தமிழர் வீடுகள், கடைகள், அலுவலகங்கள், தொழிலகங்கள், வாகனங்கள் அனைத்திலும் கறுப்புக்கொடிகளைப் பறக்க விட வேண்டும்!

மத்திய அரசின் அலட்சியத்தைக் கண்டித்தும், பொறுப்பற்ற தன்மையைக் கண்டித்தும், ஆகஸ்டு 5-ஆம் நாள் தமிழக முழுதும் ரயில் நிறுத்த அறப் போராட்டம்! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு 1953-இல் அண்ணா அவர்கள் வெளியிட்ட அறப் போர்ப் பிரகடனம்! அன்றிருந்த காரணத்தை விட ஆயிரம் மடங்கு பெரிய காரணத்திற்காக இப்போது அந்த அறப்போர், ஆகஸ்டு 5-ஆம் நாள் நடைபெற இருக்கிறது!

அமைதி வழி! அறவழி! இதில் அணுவும் பிசகாமல், யாருக்கும், எந்த உடைமைக்கும் கடுகளவு சேதமும் விளைக்காமல், நம்மை நாமே அர்ப்பணித்துக்கொள்ளும் அறப்போராட்டம் இது என்பதை ஒருமுறைக்கு இருமுறை, ஏன் ஈராயிரம் முறை சொல்லிக் கொள்கிறேன்!

மத்திய அரசு நம்மோடு சேர்ந்து அழுவதை நிறுத்திவிட்டு, ஆக்கபூர்வமான செயலில் இறங்க வேண்டும்!

செத்துக் கொண்டிருக்கிற இலங்கைத் தமிழனைக் காப்பாற்ற ஒருக்கணமும் தாமதிக்காமல் உடனே எழ வேண்டும்!

அறிக்கைகள்
அறிவிப்புகள்
மனுக்கள்
மகஜர்கள்
பேரணிகள்
முழு அடைப்புகள்

எல்லாமே முடிந்து விட்டன! இனி, இலங்கைத் தமிழனுக்காக நமது உயிரைத் துச்சமாகக் கருதி, நம்மையே தியாகம் செய்து – நாம் அறப்போரில் ஈடுபடுவதே நமக்கிருக்கும் ஒரே வழி!

அந்த வழி அறவழி!
அண்ணா தந்த அமைதி வழி!

அழியப்போகும் இனத்தை அழிவிலிருந்து மீட்க, நம்மையே அர்ப்பணித்துக் கொள்ளவும் தயங்காத தியாக வழி! அதுவே அறப்போர் வழி!

அன்புள்ள,

மு. க.

(03-08-1983)

1135. ஒருமித்த குரலில் முழங்குவோம்!

உடன்பிறப்பே,

இலங்கைப் பிரச்சினையைத் திசை திருப்பித் தி.மு.கழகத்தின் மீது என்ன பழி போடலாம் என்பதிலேயே முழு நேரத்தையும் செலவிட்டுக் கொண்டிருக்கிறார் நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.!

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண, இன்றைக்கல்ல - நமது கழகம் ஆட்சியில் இருந்த காலந் தொட்டு மத்திய அரசால்தான் முடியும் என்பதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறோம். இப்போதும் மத்திய அரசைத்தான் வலியுறுத்துகிறோம். இதில் மாநில அரசு, தனது அதிகாரத்தைப் பயன்படுத்த எதுவுமில்லை என்பதை ராமநாதபுரம் மாநாட்டில் எனது பேச்சிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். மாநில அரசு, இங்குள்ள தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டி வலியுறுத்த வேண்டும். அதேபோல இலங்கைத் தமிழர்களுக்காக, இங்குள்ள ஒவ்வொரு கட்சிகளும் அவரவர்களுக்குரிய வழிமுறைகளில் அறப்போராட்டங்களில் ஈடுபடுவதும் இயல்பேயாகும்! மத்திய அரசின் மெத்தனப் போக்கைச் சுட்டிக்காட்டுவதும், அதற்காகப் போராடுவதும் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்! அதில் ஏன் நமது மாநில அரசின் முதலமைச்சருக்குக் கோபம் வருகிறதோ தெரியவில்லை!

உடன்பிறப்பே, அவரது ஆத்திரத்தைக் கொட்டி ஒரு அறிக்கை கொடுத்து விட்டார். அதற்கு நானும், பதில் அளிக்க வேண்டிய கடமையின் காரணமாக விளக்கம் தந்து விட்டேன். இலங்கைப் பிரச்சினையை விட்டு விட்டு முதல்வருடன் லாவணி பாட நான் விரும்பவில்லை என்றும் முடிவாகத் தெரிவித்து விட்டேன். எனவே, நீயும், நமது உடன்பிறப்புகளும் முதல்வருக்குப் பதில் கூறுவதையே வேலையாகக் கொள்ளாமல், இலங்கையில் அழிந்து கொண்டிருக்கிற தமிழ் இனத்தைக் காத்திட, நமது நாட்டு மக்களின்

ஆதரவை மட்டுமல்ல, உலக நாடுகளின் கவனத்தை எப்படித் திருப்பி ஆதரவு கோரலாம் என்பதற்கான அரும்பணிகளிலே ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இருபத்து ஐந்து ஆண்டுக்காலமாக புகைந்து புகைந்து, இப்போது குமுறவே தொடங்கிவிட்ட எரிமலையை இலங்கையில் காணுகிறோம்! என்றும் நடைபெறாத அளவுக்கு இனப்படுகொலை! எத்தனை கோடிக்கு உடமைகள் இழப்பு எனக் கணக்கிட முடியாத அளவுக்கு பயங்கரக் கொள்ளைகள்! ஐம்பது பேர் மட்டுமல்ல, சிறையில் கொல்லப்பட்ட வீரர்களின் தொகை நூறு என்று ஒரு செய்தி இப்போது வந்திருக்கிறது! கிறித்துவப் பாதிரியார்கள் ஜீப்புகளில் கட்டி இழுக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்களாம்!

ஆப்பிரிக்காவில் மூன்று நீக்ரோ இன விடுதலை வீரர்கள், தூக்கிலிடப்பட்ட போது சிலிர்த்து எழுந்து கண்டனம் தெரிவித்த இந்திய அரசு, இலங்கைச் சிறையில் நம் தமிழ் இன விடுதலை வீரர்கள், சித்ரவதைக்கு ஆளாகிச் செத்து மடிந்தமைக்கு கடுகின் அளவு கண்டனம் கூட இதுவரையில் தெரிவிக்கவில்லை. மொழியால் தமிழன், நாட்டால் இந்தியன் என்று முழங்கிக் கொண்டிருக்கிறோம்! என்ன காரணத்தாலோ, நாம் வடிக்கும் கண்ணீரும், செந்நீரும் இந்திய நாட்டுக் குடிமக்களின் வேதனையின் வெளிப்பாடு என்று டெல்லிக்குத் தோன்றவில்லை! மொழியால் தமிழனாக இருக்கிறோமே! அதுதான் குற்றமோ?

உடன்பிறப்பே, இலங்கையில் இனித் தமிழனை வாழ விடாமலே விரட்டவும், கொல்லவும், காட்டுமிராண்டிச் சட்டம் ஒன்றும் இயற்றப்பட்டு விட்டது.

இந்த நிலையிலே கூட, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட இந்தியா விரும்பவில்லை என்றும், இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றை இந்தியா ஒப்புக் கொண்டுள்ளதென்றும், ஜெயவர்த்தனேக்கு நான் மீண்டும் கூறியிருக்கிறேன் என்று நமது பிரதமர் அவர்கள், நேற்று நாடாளுமன்றத்திலே அறிவித்திருக்கிறார்.

தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம் என்ற சொற்களை வைத்துத்தான் இலங்கையில், தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்கிற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதுகண்டு தி.மு.கழகம் கொதிப்படைந்தால் - அந்த உணர்வை மதிக்க,

தமிழகத்தை ஆளுகிற முதல்வர் மறுத்தாலும் - அவரது கட்சியிலே உள்ள தமிழ் உணர்வு படைத்தவர்கள் தங்களின் உளக்குமுறலை பகிரங்கமாக வெளிப்படுத்திக்கொண்டுதான் வருகிறார்கள்! இதோ உணர்ச்சிப் பிழம்பாக வெளிப்படும் வார்த்தைகள்!

தூர நாடுகளில் விடுதலை இயக்கங்களின் துயர் துடைக்கிற மத்திய அரசு, தனது காலடியில் சிங்கள வேர்ப்புழு சீறுகிறபோது வேடிக்கை பார்க்கலாமா? இந்திய ராணுவத்தை அனுப்பத் தவறுகிற ஒவ்வொரு நிமிடமும், இந்திய ஒற்றுமைக்கு மத்திய அரசு, உலை வைக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இறுதியாக எரியப் போவது அசோக வனமில்லை! அசோக சக்கரம்!

இப்படிப் பேசியவர், ஆளும் கட்சியிலே மேலவை உறுப்பினராக இருக்கிற ஒரு உணர்ச்சியுள்ள தம்பி!

இந்திய ராணுவத்தை அனுப்பி இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற வேண்டும் என்பது தானே தவிர, அதை விட்டுவிட்டு நரசிம்மராவின் மூலம் உப்பில்லாத வெண்டைக்காய் சமாதானமல்ல தமிழர்கள் எதிர்பார்ப்பது! உணவும், உடையும் தருவதன் மூலம் போய்விட்ட உயிர்களும், மானமும் திரும்பி வராது! இலங்கைத் தமிழருடைய போராட்டத்தில் ஈடுபடும் தனி நபராக இருந்தாலும், கூட்டு அமைப்பாக இருந்தாலும் அவர்களுக்கு என் முழு ஆதரவு உண்டு.

இவ்வாறு அறிக்கை விடுத்திருப்பவர் ஆளுங்கட்சியிலே உள்ள ஒரு மூத்த தலைவர்! திராவிடர் இயக்கத்தில் பல விழுப்புண்களை ஏற்றவர்!

வட நாட்டுக்காரனுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் நாடு, இந்நேரம் பற்றி எரிந்து கொண்டிருக்கும். ஆனால், தமிழன் சாவதை இன்று வேடிக்கையாக்கி விட்டனர். இந்த நிலை நீடித்து, மத்திய அரசு, செயல்படாமல் பாவலா காட்டினால் அண்ணா கேட்ட திராவிட நாட்டை நாங்கள், மீண்டும் கேட்கும் நிலை ஏற்படும். மேலும் வேடிக்கை பார்த்தால், ஓ! மத்திய அரசே! இன்று ஒருநாள் மட்டுமல்ல - உன்னுடைய ரயில் பிறகு தமிழ்நாட்டில் ஓடாது!

இது ஆளுங் கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் சங்கநாதம்!

வங்காளதேசத்தை வாங்கித் தந்த இந்தியாவின் மனிதாபிமானம், தனிப்படையை அனுப்பி வைத்து இலங்கையில் உள்ள தமிழர்க்கும் நிரந்தரமான தீர்வை ஏற்படுத்த வேண்டும். இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையென்று இந்தியப் பேரரசு, இலக்கணம் பார்க்கும் நேரம் இதுவல்ல!

இப்படிப் பேசியிருப்பவர், ஆளுங்கட்சியின் சார்பில் அவையில் ஒரு பொறுப்பு வகிக்கும் புரட்சி எண்ணம் பூத்திடும் ஒரு புலவர்!

மத்திய அரசு இராணுவத்தை அனுப்பித் தமிழர்களைக் காத்திடா விட்டால், தேசிய ஒருமைப்பாடு பற்றித் தமிழர்கள் சிந்திக்கத் தொடங்கி விடுவார்கள். தற்போதுள்ள நிலையில் இனிமேல் இலங்கையில் தமிழர்களும், சிங்களவர்களும் ஒன்று சேர்ந்து வாழ முடியாது.

என்று பேசியது மட்டுமல்ல;
இடையே கிடப்பது இருபதுமைல் கடல்தான்
வீட்டுக்கொரு தமிழ் இளைஞன் ஆயுதப் பயிற்சி
பெறட்டும்
இந்திய ராணுவம் இலங்கைக்குச் செல்லத் தயங்கினால்
நாங்கள் போகிறோம்!

இப்படியொரு உணர்ச்சிக் கவிதையும் எழுதியிருப்பவர் தமிழக அமைச்சரவையிலே உள்ள ஒரு அன்புத் தம்பி!

எனவேதான் உடன்பிறப்பே, சொல்லுகிறேன் எம்.ஜி.ஆர். அவர்கள், நம்மீது காழ்ப்பு கொண்டு கடுமையாகப் பேசுகிறார், பழிதூற்றுகிறார் என்பதற்காக - நீயோ, மற்ற உடன்பிறப்புகளோ சீற்றங் கொண்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினையை விட்டுத் திசை திரும்பி அவருக்குப் பதில் கூறிக் கொண்டிருக்க வேண்டாம்!

அவரது முகாமிலே உள்ள பலரும், எந்த உணர்வோடு இருக்கிறார்கள் என்பது புரியும்போது - இலங்கைத் தமிழர்களின் எதிர்கால நல்வாழ்வுக்காக - இந்த ஒரு பிரச்சினையிலாவது - நம்மிடையே உள்ள கசப்புகளை மறந்து விட்டு ஒருமித்த குரலில் முழங்குவோம்! தமிழ் இனம் வென்றிட அணி வகுப்போம்!

அன்புள்ள,

மு. க.

(07-08-1983)

1136. மூன்றாவது கட்டம், என்ன? எப்போது?

உடன்பிறப்பே,

இலங்கையில் புகைந்து கொண்டிருந்த எரிமலை ஜூலை 26-ஆம் நாள் வெடித்து விட்டது என்று செய்திகள் வந்தன! நம் இதயத்தில் செந் தீ பரவிற்று! மறுநாளே சென்னையில் ஏழு லட்சம் பேர் அணி வகுத்தோம்! வங்கக் கடலே வந்து புகுந்ததோ அண்ணா சாலையில் என வியப்புறும் வண்ணம் கழகப் பேரணி கண்டோம்! அதற்கு மறுநாள் தமிழக முழுதும் நமது பேரணிகள்! ஆங்காங்கு கடையடைப்புகள்! ஜூலை 30, 31 கிழக்கு முகவை மாநாடு, இலங்கைத் தமிழர்களைக் காத்திடும் போர் முரசம் ஒலிக்கும் புறநானூற்றுக் களமாகவே அமைந்தது! அந்த மாநாட்டில் வடித்தெடுத்த முடிவுகளின்படி, ஆகஸ்டு 4-ஆம் நாள் இலங்கைப் பாராளுமன்றம் கொண்டு வந்த காட்டுமிராண்டிச் சட்டத்தை எதிர்த்து இல்லங்களில் கருங்கொடி ஏற்றினோம்! இந்திய அரசின் கவனத்தை இலங்கைத் தமிழர்கள் மீது திருப்ப, மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் ஆயிரம் இடங்களில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டோர் அறவழி ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

ஆகஸ்டு 5-ஆம் நாள் - இன்னமும் இலங்கையில் நடந்த இனப்படுகொலையைக் கண்டனம் செய்யாத மத்திய அரசை வலியுறுத்தி, இலங்கைத் தமிழர்களை உடனடியாகப் பாதுகாக்க ரயில் நிறுத்தப் போராட்டத்திற்குத் தயாரானோம்! இங்குள்ள அரசு மிரட்டல்களை விடுத்தது! முன்கூட்டி இரண்டாயிரம் கழகத்தினரைக் கைது செய்தது! இறுதியாகத் தமிழினத்தின் எழுச்சியைச் சந்திக்க இயலாதென உணர்ந்து, ரயில்கள் ஓடாதென மத்திய அரசே நிறுத்திக் கொண்டது!

இன்னமும் இலங்கைத் தமிழரின் இன்னல் தீர்ந்தபாடில்லை!

அங்கு நடக்கும் கொடுமைகள் திட்டமிட்டு மறைக்கப் படுகின்றன! இந்தியாவில் உள்ள செய்தி நிறுவனங்கள்கூட

இலங்கையில் தொடர்ந்து தமிழன் படுகிற அவதிகளை இருட்டடிப்புச் செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றன!

முதல் நாள் வந்து தமிழன் வீடு எது என்று அடையாளக்கோடு போட்டுவிட்டுப் போகும் ஒரு கூட்டம்! மறுநாள் சிங்களக் கொலை வெறியர்களின் மற்றொரு பகுதியினர், இராணுவத்துடன் வந்து கோடிட்ட வீடுகளைக் கொளுத்தி மகிழ்ந்து கொலை வெறித் தாண்டவம் ஆடிவிட்டுச் செல்வர்!

எஞ்சியுள்ள தமிழர் தலைவர்களுக்கு, எந்த நேரத்தில், என்ன ஆபத்து வருமோ?

இப்போது இலங்கையில் இயற்றப்பட்டுள்ள சட்டமோ, அங்குள்ள தமிழனின் குடியுரிமையை இலங்கைத் தீவிலிருந்து மட்டுமல்ல, இந்த உலகத்திலிருந்தே அகற்றிவிடக்கூடிய அநாகரிக - அக்கிரம கொலைகாரச் சட்டம்!

எனவே நமது அறப்போர் தொடர வேண்டியுள்ளது! தொய்வின்றித் தொடர வேண்டியுள்ளது!

ஆப்பிரிக்காவின் நீக்ரோ வீரர்களின் தூக்குத் தண்டனையைக் கண்டிக்கச் சிவந்தன இந்தியப் பேரரசின் கண்கள்!

அராபத் நடத்துகிற பாலஸ்தீன விடுதலைப் புரட்சிக்கு, எல்லாவித உதவியும் வழங்க அக்கறையுண்டு இந்திய அரசுக்கு!

வடக்கே ஒரு பங்களா தேஷ் நாட்டை உருவாக்கிடும் வாஞ்சை வடிந்தது இந்திய அரசின் நெஞ்சத்தில்!

ஆனால் இங்கே தமிழன்!
பாவப்பட்ட ஜென்மம்!
பரிதாபத்திற்குரிய பிறவி!
பொட்டுப்பூச்சி!
புன்மைத் தேரை!
புழுவிலும் கேவலம்!
புழுதி மண்ணைவிட அற்பம்!

அதனால்தான் இலங்கையில், கொண்டவனுக்கெதிரே மனைவியின் கொங்கைகள் அறுக்கப்படுகின்றன! கட்டுண்ட கணவனுக்கு முன்னால் கற்பரசிகள், நிர்வாணமாக்கப்

படுகின்றனர்! அவர்களின் கற்பு நிர்மூலமாக்கப்படுகிறது! கனியிதழ்ப் பனிமலர்களாம் தமிழ் மழலைகள், தணலில் துடிக்கத் துடிக்க வேக வைக்கப்படுகின்றன!

தமிழன் அங்கு ஆடு மாடு போல் ஆகிவிட்டான்! அதனால்தான் அங்கே தமிழனின் மாமிசம் விற்கப்படுகிறது; இங்குள்ள தமிழன் மாமிசப் பிண்டமாக வாழ்கிறான்! வெட்கம்! வெட்கம்! அய்யோ! வேதனை! வேதனை!

வேதனையைத் தீர்க்கத்தான் முடியவில்லை நம்மால்! அதனை வெளியிடவும் இயலாமல் அடக்குமுறையென்றால் - அம்மவோ! யாரிடம் சொல்லி அழுவது?

சிங்கள வெறியரால் சீரழியும் தமிழ் இனத்தின், துன்பத்தைப் படம் போட்டு ஒட்டினால் கூட சீறுகின்றார் இங்குள்ள ஆட்சியாளர்! எங்குற்று எம் துயரைச் சொல்வதென்று புரியாமற் ஏங்குகின்றோம்!

இங்குற்ற தமிழர் துயர் துடைப்பதற்கு இனியும்தான் தாமதம் இந்திய அரசு காட்டுதல் கூடாதென்று,

அடுத்த கட்ட அறப்போரைத் தொடங்கி விட்டோம்!

புதுடெல்லிப் பாராளுமன்றத்துக்கருகில் தம்பி எல். கணேசன், தம்பி வை.கோபால்சாமி உண்ணாநோன்பு தொடங்கி விட்டனர்!

மதுரை நெடுமாறன் பயணம் புறப்பட்டு விட்டார், கதியற்ற தமிழர்க்குக் கரம் கொடுப்போம் என்று! வாழ்க நன்று!

இத்திங்கள் 11, 12, 13, 14 நாட்களில், மத்திய அரசின் மெத்தனம் கண்டித்து நாடெங்கும் கூட்டங்கள்! அந்தக் கூட்டங்களில் இலங்கை அரசு நிறைவேற்றியுள்ள தமிழர் விரோதச் சட்டத்திற்குத் தீ மூட்டப்படும்!

ஆகஸ்டு 15 முதல் 20 முடிய கையெழுத்து இயக்கம்!

சிற்றூர், பேரூர், பட்டிதொட்டி, நகரங்கள் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் கழக உடன்பிறப்பே! நீக்கமற நீ நிறைந்திருக்க வேண்டும்!

இலங்கையில் தமிழர்க்கு நடைபெறும் கொடுமைகளை இளைஞர் முதல் முதியோர் வரை இருபாலார்க்கும் விளக்க வேண்டும் - உலக நாடுகள் மன்றமாம் ஐக்கிய நாடுகள் சபைக்கு, இங்குள்ள தமிழர்களின் உள்ளக் கொதிப்பைக்

கையொப்பங்களாக்கி, அந்த இலட்சக்கணக்கான படிவங்களை கோடிக்கணக்கானவர்களின் பெயர்களுடன், இம்மாத இறுதியில் அனுப்பி வைக்க வேண்டும்.

ஆகஸ்டு 15 - சுதந்திர நாள்! நமது தமிழோடு பிறந்த தமிழன், இலங்கையிலே சுதந்திரமின்றி நாதியற்ற நாய்போல அடிபடுகிறான். தமிழ் இனம் தரைமட்டமாகாமல் தடுக்க - இன உணர்வு கொண்ட உடன்பிறப்பே! விறுவிறுப்புடன் நடத்து கையெழுத்து இயக்கத்தை!

இன்று முதல் ஒரு மாதம் - மரமண்டைகள், சோற்றுத்துருத்திகள், எதிர்க்கத் தெரியாததுகள், இளிச்சவாயர்கள் - இப்படித் தமிழர்களைக் கருதிக் கொண்டு, நமது கோரிக்கைகளைக் குப்பையிலே போட்டு விட்டு தமிழகத்தில் நகர் வலம் வருகிற மாண்புமிகு மத்திய அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி! வரும் விபரம் - நாள் - இடம் - இவற்றைத் தலைமைக் கழகத்துக்கு அறிவித்து, கழக அனுமதி பெற்று ஜனநாயக அடிப்படையில் அமைதி வழியில் நடத்தப்பட வேண்டிய கண்டன நிகழ்ச்சி அது!

ஆருயிர் உடன்பிறப்பே, அடுத்த கட்ட அறப் போராட்டங்கள் அறிவிக்கப்பட்டு விட்டன!

விழாத செவிகளில் நம் வேதனைக் குரல் விழுந்திட - காண மறுத்திடும் கண்களை, நம் இனம் படும் பாட்டைக் காணுமாறு செய்திட - அயராது பணிகளில் இறங்குவோம்!

முதற் கட்டம் முடிந்தது -
இரண்டாவது கட்டம் இப்போது -
மூன்றாவது கட்டம் என்ன?
எப்போது?

இலங்கைத் தமிழினம் நிம்மதி பெறும் வரையில் நமக்கு நிம்மதி ஏது?

அன்புள்ள,

மு. க.

(09-08-1983)

1137. இனம் காக்க எழுந்திடுவோம்!

உடன்பிறப்பே,

இலங்கையின் அரசியல் சட்டத்தின் ஆறாவது திருத்தம் என்ன என்பதைக் கிடைத்தவரையில் உனக்கு விளக்குகிறேன். (முரசொலியில் வேறு பக்கத்தில் அந்தத் திருத்தச் சட்டம் சுருக்கம் வெளியிடப்பட்டுள்ளது.)

நேரடியாகவோ மறைமுகமாகவோ இலங்கைக்கு உள்ளேயிருந்தோ வெளியே இருந்தோ எந்த நபரும் இலங்கை அரசின் எல்லைக்குட்பட்டு தனிநாடு வேண்டுமென்று கேட்பதோ, அதற்கு ஆதரவு தருவதோ, நிதி உதவி அளிப்பதோ, ஊக்கப்படுத்துவதோ கூடாது.

இலங்கை அரசின் எல்லைக்குள் தனி நாடு தனியாக வேண்டுமென்ற கோரிக்கையை எந்த அரசியல் கட்சியும், அமைப்புத் தங்கள் கோரிக்கைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கக்கூடாது.

இதற்கு மாறாக நடப்பவர்கள் இலங்கையின் பிரஜா உரிமையை இழப்பார்கள். அவர்களுக்குச் சொந்தமான அசையும் சொத்துக்களையும், அசையாச் சொத்துக்களையும் இழப்பார்கள். நீதி மன்றத்தால் தீர்மானிக்கக் கூடிய வகையில் ஏழு ஆண்டுகளுக்கு அதிகமின்றி குடிஉரிமைகளை இழப்பார்கள். தனி நாடு கேட்கிற அந்த நபர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவோ அல்லது ஏதாவது ஒரு பதவியில் இருப்பவராகவோ இருந்தால், அவர்கள் அந்தப் பதவியை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள். பாஸ்போர்ட் பெறுகின்ற உரிமை, பொதுத் தேர்வுகள் எழுதுகின்ற உரிமை, சொத்துரிமை, வியாபாரமோ தொழிலோ செய்கின்ற உரிமை இவையனைத்தும் பறிக்கப்பட்டு விடும்.

ஆறாவது திருத்தத்தில் காணப்படும் இந்த உரிமை பறிப்புகள் மட்டுமின்றி மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கூட உண்டு எனச் செய்திகள் வந்துள்ளன.

மேற்கூறிய இத்தனை உரிமைகளையும்பறித்து விட்டால், இலங்கைக்குள்ளேயே தமிழன் கூண்டுக்குள் கிடக்கும் அடிமைப் பிணமாகத்தான் ஆகி விடுவான்!

இப்போது விசாரணையின்றி நிறைவேற்றப்படுகிற மரண தண்டனையில் எத்தனை ஆயிரம் தமிழின மக்கள் செத்துச் சாம்பலாகியிருக்கின்றனர்!

இலங்கைத் தமிழினம், எப்போது தனி நாடு கேட்கத் தொடங்கியது?

இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்க பிரிவினைக் கொள்கையை விட்டு விட்ட நாம்; இலங்கைப் பிரச்சினையில் வேறுவிதமான சிந்தனைக்குத் தள்ளப்பட்ட காரணம் என்ன?

நாம் இங்கே தனித் தமிழ்நாடோ, திராவிட நாடோ கேட்கவில்லை! ஆனால் இலங்கைத் தமிழன்; இனி ஒரு தனிநாடு இன்றி இலங்கையில் சிங்களவர்களோடு ஒட்டி வாழ்வது என்பது முடியாத காரியம் என்று நிலைமை ஏற்பட்டுவிட்ட பிறகல்லவா விடுதலை கேட்கிறான்!

இதைப்பற்றி உலக நாடுகளின் ஏடுகளும் இந்திய ஏடுகளும் எழுதியிருக்கும் ஆழத்தைக் கவனித்தால்; ஈழத் தமிழனின் கோரிக்கை, தவிர்க்க முடியாதது என்று உணர்ந்து கொள்ள முடியும்.

சுதந்திரம் அடைந்ததில் இருந்து இலங்கையில் தமிழர் பிரச்சினை இருந்து வருகிறது. அடுத்தடுத்து அங்கு பதவிக்கு வந்த எந்த அரசும் அதைத் தீர்க்கும் ஆற்றல் படைத்ததாக இல்லை. செய்வதைத் தாமதமாகச் செய்த காரணத்தால் அந்த இடைக்காலத்தில் தமிழர்களின் கோரிக்கைகள் தீவிரமடைந்துவிட்டன.

இது பிரான்ஸ் நாட்டு தினசரி ஏடான லிமாண்ட்டில் வெளிவந்த தலையங்கப் பகுதி!

இந்த வாரம் இலங்கையிலிருந்து வந்த செய்திகள், முப்பத்து ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் (பாகிஸ்தான்) பிரிவினைக்குத் தூண்டிய கோரமான நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தக்கூடியவைகளாய் இருக்கின்றன. படுகொலைகள், தீமூட்டல், கலவரம் ஆகியவை காரணமாக ஒரு குற்றமும் செய்யாத ஆயிரமாயிரம் தமிழர்கள் பாதுகாப்பைத் தேடி ஓடுகிறார்கள்.

இலண்டனில் இருந்து வெளிவரும் டைம்ஸ் ஏடு, மேற்கண்டவாறு தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

ஜெயவர்த்தனே, இலங்கை மக்களின் அதிபர் என்பதற்கு மாறாக சிங்கள மக்களுக்கு மட்டும் அதிபர் என்பதாக நடந்து கொள்ளக்கூடாது. கடந்த வாரத்தில் அவர் ஆற்றிய வானொலி உரையில், பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இரக்கம் காட்டி ஒரு வார்த்தையோ - கொடுமை செய்த ராணுவத்தினரைக் கண்டித்து ஒரு சொல்லோ - சிறையிலிருந்தவர்களைக் கொலை செய்யுமளவுக்கு அனுமதித்த சிறை அதிகாரிகளுக்கு ஒரு கண்டனமோ - கூடக் கூறவில்லை.

இவ்வாறு டைம்ஸ் ஆப் இந்தியா தனது தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் மீது நடைபெறும் கொடுமையான தாக்குதல் பொறுமையின் எல்லைக் கோட்டையே கடப்பதாகும். நம்முடைய அளவுக்கு சக்தியும் அளவும் உள்ள வேறு எந்த நாடாக இருந்தாலும் - உதாரணமாக ரீகனுடைய அமெரிக்காவோ - தாட்சரின் இங்கிலாந்தோ - இதைவிடக் குறைவான ஒரு எதிர்ப்பு நடந்திருந்தால்கூட இப்படிப்பட்ட கொடுமைகளை நிறுத்துகிறாயா; இல்லையா? என்று கேட்டுக் கப்பற்படையை அனுப்பியிருக்கும். இலங்கையில் ஜெயவர்த்தனேயின் அரசு, தமிழர்களின் ரத்தத்தில் நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

பிளிட்ஸ் இதழில் இவ்வாறு தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது.

பிரிவினை இயக்கத்தை ஆதரிக்க முடியாது என்பது இந்திய அரசின் கொள்கையாக இருக்கலாம். ஆனால் இலங்கையில், தமிழ்இன ஒழிப்புப் படுகொலைகள்; பிரிவினைக் கொள்கையை ஒழிப்பது என்ற பெயரால் நடப்பதைக் கண்டு டெல்லி அமைதியாக இருக்க வேண்டும் என்று அதற்குப் பொருள் அல்ல!

பிளிட்ஸ் ஏட்டில் வெளி வந்துள்ள ராகவன் அவர்களின் கட்டுரையில் கோடிட்டுக் காட்டப்படக்கூடிய வாசகம் இது!

இலங்கையில் இருக்கும் சிறுபான்மை தமிழர்கள் நியாயமான முறையில் நடத்தப்படாவிட்டால் இலங்கையில் தனித் தமிழ் மாநிலம் என்பதே மாற்று ஏற்பாடாக இருக்கும்.

இவ்வாறு அமெரிக்க ஏடு வாஷிங்டன் போஸ்ட் கருத்து அறிவித்திருக்கிறது!

இரு இனங்களுக்கு இடையே இறுதி யுத்தம் நடைபெறும் ஆபத்தான நிலைமைக்கு அருகே இலங்கையிருக்கிறது. தனித் தமிழ்நாடு கேட்பவர்கள் அனைவரும் குடியுரிமையுட்பட அனைத்து உரிமைகளையும் இழப்பார்கள் என்று ஜெயவர்த்தனே அறிவித்திருக்கிறார். தனது சிறுபான்மை சமுதாயத்தினரைக் காந்தீயக் கரம்கொண்டு அணைத்துப் பாதுகாப்புத் தராமல் இலங்கை அதிபர் இப்படி ஒரே அறிவிப்பில் எண்ணற்ற மக்களின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நிரந்தரமான இரண்டாம் தரப் பிரஜைகளாக்கியிருக்கிறார்.

கார்டியன் என்ற இலண்டன் பத்திரிகையின் தலையங்கம் இது!

இன்னும் பல ஏடுகள் இலங்கையின் நிலவரத்தைச் சித்தரித்துள்ளன! இலங்கையில் தமிழர் பகுதிகளை மயான பூமியாக்கி விட்டு; இப்போது ஜெயவர்த்தனே இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா? என்பதைப்போல - தனக்குத் தெரியாமலே தனது ராணுவம், தமிழர்களைக் கொன்று குவித்து விட்டது என்கிறார்! கொடுங்கோலன் மட்டுமல்ல; சரியான குள்ளநரி!

இலங்கையில் தமிழர்கள் மீது நடைபெற்ற கொடுமைகளுக்கு ஒரு கண்டன வார்த்தை கூட ஜெயவர்த்தனே கூறவில்லையென்று டைம்ஸ் ஆப் இந்தியா ஏடு! வேதனைப்படுகிறது!

அவர்தான் கண்டனம் தெரிவிக்கவில்லை - காரணம்; படையை ஏவியவர்!

அதனால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் சார்பாக இந்திய அரசு இதுவரையில் கண்டனம் என்ற சொல்லைக்கூட உச்சரிக்கவில்லையே! ஏன்? உதடு வலிக்கும் என்றா? அல்ல! அல்ல! உதாசீனப்படுத்தப்படக்கூடிய இனம், தமிழ் இனம் ஒன்றுதான் என்பதால்!

உடன்பிறப்பே, இப்போது புரிகிறதா; ஆகஸ்ட் 11, 12, 13, 14 - நான்கு நாள் கூட்டங்களின் தனிச் சிறப்பு?

இந்த நாலு நாட்களிலும் தமிழக முழுதும் பட்டிதொட்டி முதல் பட்டினக்கரைகள் வரையில் கூட்டங்கள் நடைபெற வேண்டும்!

பெரிய தலைவர்கள் - புகழ்பெற்ற சொற்பொழிவாளர்கள்தான் வர வேண்டுமென்று காத்திருக்கத் தேவையில்லை!

கிராமங்களில் பத்து பேரை அழைத்து வைத்துக் கொண்டு விளக்கம் சொல்! அதுபோதும்! மேடைகூடத் தேவையில்லை; ஒரு மேட்டின் மீது நின்று கொண்டு பேசு!

இலங்கைத் தமிழனைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்காத இந்திய அரசின் மெத்தனத்தை விளக்கிடு!

இலங்கை அரசின் காட்டுமிராண்டிச் சட்டத்தின் நகலை அச்சடித்தோ, டைப் செய்தோ, அல்லது கையால் எழுதியோ ஒரு பரந்தவெளிப் பொது இடத்தில் தாழ்வாகப் பிடித்துத் தீயிட்டுப் பொசுக்கித் தண்ணீரில் கரைத்து காலில் மிதிபடத் தெருவில் ஊற்றிவிடு!

கழக அமைப்பு, சார்பு, துணைமன்றங்கள், அமைப்புகள் உள்ள எல்லா இடங்களிலும் - சிறிய கூட்டமாயினும் நடத்திட வேண்டும்!

செய்தியினைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிட வேண்டும்!

இதனைச் செய்யத் தவறுவோர் யாராயினும் அவர்கள் ஏற்றிருக்கும் பொறுப்புக்குத் தகுதி உடையவர் ஆகமாட்டார்!

ஒவ்வொரு மாவட்டத்திலும் நாலு நாட்களில் எத்தனை கூட்டங்கள் நடந்தன? மாவட்டச் செயலாளர்கள் கவனிக்க வேண்டும்!

அதேபோல் ஒன்றியச் செயலாளர்களும் உழைத்திடல் வேண்டும்!

எல்லா அமைப்புக்களின் நிர்வாகிகளும் பணியாற்றிட வேண்டும்!

பொறுப்புக்கு மட்டும் ஆசைப்பட்டு விட்டு - அது கிடைத்த பின்னர் உழைக்கத் தயங்குவோர், இயலாதோர் எவரேனும் இருப்பின் அவர்கள் ஒதுங்கிக்கொண்டு, உழைப்போர்க்கு வழிவிடல் வேண்டும்!

இத்துணைக் கண்டிப்பாகக் கூறுவதற்குக் காரணம் புரிகிறதா?

நமது இனத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்டிருக்கிறது!

எண்ணி எண்ணி ஏங்குகிறேன்! பெருமூச்சு விடுகிறேன்!

மனம் ஒரு நிலையில் இல்லை! உறங்க முடியாமல் தவிக்கிறேன்!

உடன்பிறப்பே, எனக்கு ஊக்கம் வழங்கிட 11, 12, 13, 14 கூட்டங்களையும், இலங்கை சட்ட எரிப்பு நிகழ்ச்சிகளையும் வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டு ஆகஸ்ட் 15 முதல் 20 முடிய கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கிடுக!

இனம் காப்போம்!
இனமானம் காப்போம்!
இனப்படுகொலையை என்ன விலை
கொடுத்தேனும் தடுப்போம்!

அன்புள்ள,

மு. க.

(10-08-1983)

1138. ஐ.நா. சபைக்கு முறையீடு!

உடன்பிறப்பே,

உலக நாடுகளின் ஐக்கியநாட்டு அமைப்பு எனப்படும் ஐ.நா. சபை, இலங்கைப் படுகொலையைக் கண்டித்து நடவடிக்கை மேற்கொள்வதோடு, படுகொலை நடத்தியவர்களை விசாரணை செய்து தண்டித்திட வேண்டுமென்று, இரண்டு கோடிக் கையொப்பங்களைத் தமிழர்களிடம் பெற்று ஐ.நா. சபைக்கு அனுப்பி வைப்பதென்று, தி.மு.கழகம் எடுத்துள்ள முடிவைச் செயல்படுத்த வேண்டிய காலம் ஆகஸ்டு 15 முதல் 20 முடிய என்பதை மறந்து விடாதே!

மாவட்டச் செயலாளர்களிடம் கையொப்பங்களுக்கான அச்சிட்ட படிவங்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல்லாயிரக்கணக்கில் தலைமைக் கழகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழினத்தைப் படுகொலைக்கு ஆளாக்கிய மிருகத்தனத்தையும் மீறிய வெறிச்செயலை, இங்குள்ள ஏடுகள் மட்டுமல்ல, உலக நாடுகளில் செல்வாக்குப் பெற்ற பல ஏடுகள் விவரித்துக் கண்டனம் செய்துள்ளன.

இதோ சவூதி அரேபியாவிலிருந்து வெளிவரும் அராப் நியூஸ் என்ற பத்திரிகையில், 30-7-83 அன்று வந்த செய்தி வருமாறு :-

நார்வே நாட்டுச் சுற்றுலாப் பயணி திருமதி எளிகார்ஸ்டன் என்பவர், இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அராப் நியூஸ் நிருபரிடம் விவரித்தார். எங்குப் பார்த்தாலும் தமிழர்களின் வீடுகள் எரிந்து கொண்டிருக்கின்றன. நார்வே நாட்டுப் பிரஜை என்பதால் தன்னை யாரும் தாக்கவில்லைபென்றும், தமிழர்களாகப் பார்த்துத்தான் தாக்குகிறார்கள் என்றும் அவர் கூறினார். பெண்கள், குழந்தைகள் என்று யாரையும் விட்டு வைக்கவில்லை. செய்திகளைப் பத்திரிகைகளும், வானொலியும் இருட்டடிப்பு,

செய்கின்றன. ஒரு பேருந்து வண்டி தமிழர்களை ஏற்றிக் கொண்டு சென்றது. அதனைச் சிங்களவர் தடுத்து நிறுத்தினார்கள். பேருந்தின் அனைத்துக் கதவுகளையும் சிங்களவர் அடைத்தார்கள். பிறகு பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தி விட்டார்கள். அதிலிருந்த இருபது தமிழர்கள் உயிரோடு கருகிச் செத்தார்கள். இந்தக் காட்சியை நான் நேரிலேயே கண்டேன் என்று திருமதி எளிகார்ஸ்டன் கூறினார்.

சவூதி அரேபியாவின் பத்திரிகையில், நார்வே நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி அளித்துள்ள பேட்டியிது!

29-7-83 இங்கிலாந்தில் வெளிவந்த டைம்ஸ் என்ற பிரபல ஏட்டின் தலையங்கத்தில், பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

திரிகோணமலைப் பகுதியில் கப்பல் படையினரின் செயல்களும், அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளும் தமிழர்களைத் தாக்குவதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. ஜெயவர்த்தனேயின் கட்சி, எப்போதுமே தமிழர்களுக்கு எதிரான உணர்ச்சிகளின் இருப்பிடமாகவே இருந்து வந்திருக்கிறது.

8-8-83 வெளி வந்துள்ள டைம் எனப்படும் அமெரிக்க ஏட்டில்,

வன்முறையின் மூலம் பிரிவினைவாதிகளை அழித்து ஒழிக்கும்படி, ஜெயவர்த்தனே தனது ராணுவத்திற்கு மேலும் ஆணையிட்டார்.

- என்ற உண்மை உணர்த்தப்பட்டிருக்கிறது உலகிற்கு!

கொழும்புவின் தமிழ் அகதிகளின் முகாம்கள், லெபனான் தலைநகரான பெய்ரூட்டில், பாலஸ்தீன அகதிகள் இருந்த சாப்ரா, சாடிலா முகாம்களை பிரிட்டிஷ் சமூக சேவையினருக்கு நினைவுபடுத்தின.

- என்று 3-8-83 வெளிவந்த டைம்ஸ் ஏடு, சுட்டிக்காட்டுகிறது. இந்த நிலையை அந்த இதழுக்கு விவரித்தவர், இலங்கையில் தமிழ் அகதி முகாம்களைச் சுற்றிப் பார்த்த மைகேல் ஹாம்லின் என்பவர்!

இலங்கையில் நடைபெறும் ரத்தக்களறிகளுக்கு, ஜனாதிபதி ஜெயவர்த்தனே, தனது அங்கீகாரத்தை வழங்கிவிட்ட அபாயகரமான நிலைமை தோன்றிவிட்டது.

- என்று இங்கிலாந்து ஏடு கார்டியன், கோடிட்டுக் காட்டியிருக்கிறது 1-8-83-இல்!

7-8-83-இல் லிங்க் என்ற ஏடு, என்ன எழுதியிருக்கிறது?

இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதானது, 1970, 1971-ஆம் ஆண்டுகளில் கிழக்கு வங்காளத்தில் நடந்த இனப் படுகொலை என்ன பாதிப்பை உண்டாக்கியதோ, அதே நிலையைத்தான் இந்தியாவில் உருவாக்கியுள்ளது.

இது லிங்க் ஏட்டின் எண்ண ஓட்டம்!

படுகொலைக்குத் தப்பி மிஞ்சியவர்கள் அகதிகள் முகாம்களில் பட்டினி கிடக்கிறார்கள். அந்தப் பரிதாபத்திற்குரிய தமிழர்களின் குரல் எப்படியிருக்கிறது என்பதை, வாஷிங்டன் போஸ்ட் என்ற அமெரிக்க ஏடு, இதோ படம் பிடித்துக் காட்டுகிறது.

நாங்கள் பட்டியில் அடைக்கப்பட்ட வாத்துகள் போல இங்கே இருக்கிறோம். லெபனானில் செய்ததுபோல அவர்கள், எந்த நேரமும் இங்கு வந்து எங்கள் மீது வெடிகுண்டுகளை வீசி எங்களையும் படுகொலை செய்யலாம்.

உடன்பிறப்பே, பல்லாயிரக்கணக்கான மக்கள், காயும் கனியுமாக - பூவும் பிஞ்சுமாக - படுகொலை செய்யப்பட்டு, அவர்களில் தப்பிப் பிழைத்தோரும் அணுஅணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள் அகதி முகாம்களில்! அவர்களின் குரலையே, வாஷிங்டன் போஸ்ட் ஏடு, எதிரொலிக்கிறது!

ரம்பத்தால் பெண்களை அறுத்து - வாளால் வெட்டி - கத்தியால் குத்தி - துப்பாக்கியால் சுட்டு - ஆண்கள், பெண்களின் மர்ம உறுப்புகளைத் தோண்டித் துளைத்து - மாணவர்களை - குழந்தைகளை - வரிசையாக நிறுத்தி வைத்துக் கொன்று - இனப் படுகொலை நடத்தியவர்கள் விசாரிக்கப்பட வேண்டாமா? கூண்டில் ஏற்றப்பட வேண்டாமா? தண்டிக்கப்பட வேண்டாமா? அந்த முயற்சியை மேற்கொண்டு பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்ல இந்திய அரசு, தயக்கம் காட்டி கை விரித்துவிட்ட பிறகு, நாமாவது நமது குரலை ஐ.நா. மன்றத்திற்கு எட்டும்படி செய்ய வேண்டாமா?

இதுபோன்ற நிலவரங்களில் ஐ.நா. சபையின் தலையீடு ஒன்றும் புதிய விஷயமல்ல! பல முன்மாதிரிகள் இருக்கின்றன!

பாலஸ்தீனப் பிரச்சினையில் ஐ.நா.வின் அமைதிப்படை, 1949-ஆம் ஆண்டிலிருந்து 1956-ஆம் ஆண்டு வரையில் - அதாவது இஸ்ரேல் லெபனான் பிரச்சினையிலும், இஸ்ரேல் சிரியா மோதலின் போதும் - இஸ்ரேல் எகிப்துப் போரின் போது 1958-ஆம் ஆண்டிலும் அனுப்பப்பட்டுள்ளது.

1947 ஜூலை முதல் 1951 ஏப்ரல் வரையில், இந்தோனேஷியாவில் உள்நாட்டுப் பெரும் கலவரங்கள் தோன்றியபோது அங்கு அமைதிப் பணியைக் கவனிக்க ஐ.நா. சபை, அமைதிப் படையொன்றை அனுப்பியது.

1953-ஆம் ஆண்டு ஐ.நா. சபை, தனது அமைதிப் படையை கொரியாவுக்கு அனுப்பியிருந்தது.

1960-இல் காங்கோவில் கலவரங்கள் மூண்டபோது ஐ.நா.வின் அமைதிப் படை, இருபதாயிரம் பேர் கொண்டதாக அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த முன்மாதிரிகளை மட்டுமல்ல, ஐ.நா. சபையின் பாதுகாப்புக் குழுவுக்குள்ள (செக்யூரிட்டி கௌன்சில்) பொறுப்புகளையும் சுட்டிக் காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

சர்வதேச உறவைப் பாதிக்கக்கூடிய அல்லது அதற்கான தகராறைத் தோற்றுவிக்கக் கூடிய எந்தவொரு சச்சரவையும், சூழ்நிலையையும் பாதுகாப்புச் சபை (செக்யூரிட்டி கௌன்சில்) விசாரிக்கலாம் என்று ஐ.நா. சபை சாசனத்தின் அத்தியாயம் 6 - பிரிவு 34 கூறுகிறது. அத்தியாயம் 7 - பிரிவுகள் 39, 51-இன்படி செக்யூரிட்டி கௌன்சில், (ஐ.நா. சபை) அமைதிக்குப் பாதகமான தகராறு, சூழ்நிலை எதைப் பற்றியும் நடவடிக்கை எடுக்கலாம்!

இதனையொட்டித்தான் 1961-இல் இலங்கையில் தமிழர்களுக்குச் சிங்களவர்களால் கேடுகள் விளைவிக்கப்பட்ட போது ஐ.நா. சபை தலையிட வேண்டுமென்று அண்ணா அவர்கள், ஐ.நா. சபைக்குத் (கேபிள் மூலம்) தந்தி கொடுத்தார்கள்!

முன்பும் - பிறகும் நடைபெற்றவை சில கொடிய நிகழ்ச்சிகள்! சில கொலைகள்! சில கொள்ளைகள்! ஆனால் இப்போது நடைபெறுவது இனப் படுகொலை! தமிழினத்தையே பூண்டோடு அழித்திடும் திட்டம்!

இந்திய அரசு வாய்மூடிக் கிடக்கிறது! இங்குள்ள தமிழர்களின் எண்ணத்தை ஐக்கியநாடுகள் சபைக்கு முறையீடாக அனுப்புவோம்!

நினைவிருக்கட்டும்! ஆகஸ்டு 15 முதல் 20 முடிய மாபெரும் கையெழுத்து இயக்கம்!

உடன்பிறப்பே!

பட்டிதொட்டிகள்

குக்கிராமங்கள்

சிற்றூர்

பேரூர்

நகரங்கள்

மாநகரங்கள்

எங்கணும் சென்றிடுக! கையெழுத்து இயக்கம் நடத்திடுக! விரைவாக! விறுவிறுப்பாக! உம்! உடனே! உடனே!

அன்புள்ள,

மு. க.

(11-08-1983)

1139. கண்ணீரால் ஒரு அறிக்கை!

உடன்பிறப்பே,

இருதயத்தை அழுத்திக் கொண்டிருந்த ஒரு பெரிய பளு இறக்கப்பட்டது போன்ற உணர்வுடன் இந்தக் கடிதம் எழுதுகிறேன். தாங்க முடியாத துன்பதுயரங்களைக் கண்ணீரால் தான் கரைக்க முடிகிறது. அழுது ஓய்ந்த பிறகுதான் புயலாக இருந்த நெஞ்சுக்குச் சற்று நிம்மதி கிடைக்கிறது.

இந்தி எதிர்ப்புப் போராட்ட உணர்வு, எப்படி நாற்பத்து ஐந்து ஆண்டுக் காலமாக என் ஊனோடும், உயிரோடும் கலந்து விட்டிருக்கிறதோ, அதைப்போலத்தான் இருபத்தைந்து ஆண்டுக் காலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினையும் என் நாடித் துடிப்பாக இருந்து வருகிறது.

இலங்கை மண்ணுக்குள் நான் நுழைவதற்கு முடியாமல் அனுமதி மறுப்புகளும், தடைகளும் குறுக்கிட்டாலும்கூட, அந்த மண்ணில் வாழும் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் தலைவர்களையும், கவிஞர்களையும், விடுதலை வீரர்களையும் தனிப்பட்ட முறையில் பழகி அறிவேன். ஆம்! அவர்களுடன் நெருக்கமாகவே பழகியிருக்கிறேன். தூக்குத் தண்டனை பெற்ற நிலையிலும், கொழும்புச் சிறையிலிருந்து எனக்கு உருக்கமிகு கடிதமொன்றைத் தனது வழக்கறிஞர் மூலமாகக் கொடுத்தனுப்பிய யோகசந்திரன் என்னும் குட்டிமணியை, 1980-ஆம் ஆண்டில் சென்னையில் சந்தித்து அளவளாவியிருக்கிறேன். கடற்கரை வெண்மணற்பரப்பில், தங்கதுரை, சேனாதிராஜா மற்றும் விடுதலை வீரர்களுடன் 1976-ஆம் ஆண்டு நீண்ட நேரம் விவாதித்திருக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்புகூடக் குட்டிமணியின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்னை வந்து பார்த்தபோது - 1980-இல் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், தேவன் ஆகியோர், சென்னை மாநகரில் அண்ணா நகர் தொகுதியில் என் தேர்தல் வெற்றிக்காகப் பணியாற்றியதை நினைவுபடுத்திக்

கண்ணீர் உகுத்து, என்னையும் நெஞ்சடைத்துப் போகும்படி செய்தார்கள்.

தந்தை செல்வா, அவரது மைந்தர் சந்திரகாசன், திரு. அமிர்தலிங்கம், நவரத்தினம், சிவசிதம்பரம், காசிஆனந்தன் இவர்களுக்கும் எனக்குமுள்ள தொடர்பும் உறவும் ஏதோ, சம்பிரதாயபூர்வமானதல்ல! உணர்ச்சிமயமானது!

பிரபாகரனாகட்டும், முகுந்தனாகட்டும், பிரபாவாகட்டும், கோவை மகேசனாகட்டும், ஈழவேந்தனாகட்டும், அங்காவாகட்டும், ஸ்ரீஆகட்டும் இலங்கைச் சிறையில் சிங்கள வெறியர்களாலும், இராணுவத்தாலும் வெட்டிக் கொல்லப்பட்ட வீரர்களாகட்டும் அவர்கள், அனைவருமே என் உடன்பிறப்புகளேயாவர்!

எங்கேயோ - யாருக்கோ நடைபெற்ற கொடுமைகள் என்று செய்தி கேட்டாலே உள்ளம் உருகுகிறதே! இது மிக அருகாமையில் நம் இனத்தவர்க்கு - அதுவும் நம்மோடு நெருங்கிப் பழகிய உறவினர்களுக்கு ஏற்பட்ட கொடுமை என்கிறபோது எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

நெருக்கடிகாலச் சட்டத்தை எதிர்த்த ஒரே காரணத்திற்காக நமது கழக அரசைக் கலைத்துவிட்டு, சில நாட்களுக்குப் பிறகு சென்னைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே உள்ள நல்லுறவுக்குக் கருணாநிதி, முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்பதும் ஆட்சி கலைப்புக்குரிய காரணங்களில் ஒன்று என்பது போன்ற கருத்தை வெளியிட்டார் என்பதிலிருந்து, நானும், நமது கழகமும் இலங்கைத் தமிழர்களிடம் கொண்டிருந்த - கொண்டிருக்கிற அன்பையும், பாசத்தையும் அனைவரும் புரிந்து கொள்ள முடியும்.

அந்த அன்புக்குரிய தமிழர்கள் - என் ஆருயிர் சகோதரிகள் - வாழ்வதற்கு உத்தரவாதமின்றி - மானங்காக்கும் வழிவகையோ, பாதுகாப்போ இன்றி பதைக்கப் பதைக்கக் கொல்லப்படுகிறார்கள், விரட்டப்படுகிறார்கள், அனாதைகளாக்கப்படுகிறார்கள் என்றால், அதைக் கேட்கும் என்னுயிர் இன்னும் போகவில்லையே எனக் குமுறினேனே தவிர, அரசியல் ரீதியாகவோ, ராஜதந்திர வகையாகவோ - அதுகுறித்துச் சிந்திக்கத் தோன்றவுமில்லை! அப்படிச் சிந்திக்கும் சக்தியுமில்லை!

என் நிலையேதான் நமது பொதுச் செயலாளர் பேராசிரியருக்கும்!

தமிழ் உணர்விலேயே ஊறித் திளைத்து, தமிழ்ச் சமுதாயத் திற்காகவே எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் போது - நாங்கள் இருவரும், இலங்கையிலிருந்து வரும் செய்திகளைக் கேட்டு மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்! எங்களில் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை! காரணம் இருவர் விழிகளிலுமே நீர்த்திரை!

எங்கள் கண்ணீரால் எழுதப்பட்டதே நேற்று விடுத்த அறிக்கை!

எங்கள் உணர்வுகளின் முடிந்த முடிவே சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகல்!

மொத்தக் கழகத்திற்கும் சேர்த்து நாங்கள், இந்த முடிவை அடையாளபூர்வமாக எடுத்திருக்கிறோம்.

எங்களைப்போலவே கொந்தளிக்கும் நிலையில் உள்ள உடன்பிறப்புகளை நாங்கள் அறிவோம்.

எனவே பாராளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலே இருக்கும் கழக உடன்பிறப்புகள் எவரும், எங்களைக் கலந்து கொள்ளாமல், எந்த முடிவும் எடுத்திடல் வேண்டாம்!

அப்படி எந்த முடிவும் எடுக்கத் தேவையுமில்லை!

ஏதோ, எங்கள் முடிவால், தற்காலிகமாக ஒரு மன ஆறுதல்! அமைதி!

ஆனால் இந்த இனத்திற்கு, நிலையான உரிமையும், வாழ்வும் கிடைக்கும் வரையில், மனப்பளு முற்றிலும் அகன்று விட்டது என எப்படி எண்ணிட முடியும்!

அன்புள்ள,

மு. க.

(12-08-1983)

1140. ஆகாயத்தை நோக்கி ஒரு வேட்டு!

உடன்பிறப்பே,

ஓநாய்கள் கூட்டம் கூட்டமாக வந்தன! மந்தையில் மண்டிக் கிடந்த வெள்ளாடுகளின் மீது பாய்ந்தன! குரல்வளையைப் பிடித்தன! குடல்களை உருவின!... ம்மே! ம்மே! என்று ஒரே கதறல்!

காவல்காரன் தூங்கிக் கொண்டிருந்தான்! குளிர் தெரியாமல் இருக்கக் கனமான கம்பளியைப் போர்த்திக்கொண்டு குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்! அவன் கையில் துப்பாக்கியிருந்தது! பாவம்! அதுவும் அவனோடு சேர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது! அவன் உறங்கிக் கொண்டிருந்த கொட்டகைக்குள்ளே இளைஞர்கள் சிலர் ஓடிவந்தனர்!

அய்யா! அய்யா! ஓ, காவல்கார அய்யா! வெள்ளாடுகள் ஓநாய்களுக்கு விருந்தாகின்றன! துப்பாக்கியைத் தூக்குவீர்! துஷ்ட ஓநாய்களை விரட்டுவீர்!

இப்படி இளைஞர்கள் கத்தினர்! காவல்காரனோ, துப்பாக்கியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு - புரண்டு படுத்தவாறு - போர்வையையும் நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு மழை காலத்து இடிக் குமுறலைப்போல் மீண்டும் குறட்டை விடத் தொடங்கினான்.

இளைஞர்கள், வெளியே ஓடி வந்து ஓநாய்கள் மீது கல் வீசினர்! கம்புகளை எறிந்தனர்! சில ஓடின! மீண்டும் திரும்பின! வெள்ளாடுகள் வீழ்ந்து கொண்டேயிருந்தன!

இளைஞர்கள், மறுபடியும் காவல்காரனை எழுப்பினர்! அவன் தூக்கம் கலையவில்லை! வேறு வழியின்றி அவன் மீதே கற்களை வீசினர்! ஊஹூம்! அப்போதும் அவன் விழித்துக்கொண்டபாடில்லை!

ஆத்திரம் கொண்ட இளைஞர்கள், காவல்காரன் கண்ணுறக்கம் கொண்டிருந்த அந்தக் கொட்டகையைப் புரட்டிக் கீழே தள்ள முனைந்தனர்!

காவல்காரன் முணுமுணுத்துக் கொண்டு எழுந்தான்!

அதோ பாரும்! பாதி மந்தையைப் பாழும் ஓநாய்கள் தின்று பசியாறி விட்டுப் போய்விட்டன! நீரோ, தவளைகளை விழுங்கிய பாம்புபோல, நெளிந்து வளைந்து தூங்குகிறீர்!

இவ்வாறு கடிந்து கொண்டனர் இளைஞர்கள்!

கண்களைத் துடைத்துக் கொண்டு காவல்காரன் பார்த்தான்! பாதி ஆடுகளைக் காணோம்! மீதி ஆடுகள் மிரண்டு போய் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தன! வெகுதொலைவில் ஓநாய்கள் விருந்துண்ட களிப்பில் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தன!

இதோ! சுட்டுத் தள்ளுகிறேன் என்று காவல்காரன், ஆகாயத்தை நோக்கிச் சுட்டான்!

இனிமேல் ஓநாய்கள் வராது! என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு கொட்டகைக்குத் திரும்பினான். இன்னும் ஒரு தூக்கம் போட!

காவல்காரரே! நீர் முன்பே எழுந்து நாலு ஓநாய்களைச் சுட்டிருந்தால் எல்லா ஆடுகளையும் காப்பாற்றியிருக்கலாம்!

என்றனர் இளைஞர்கள் கோபத்துடன்!

நான் முன்பே எழுந்துவிட்டேனே! அல்லது இப்போது எழுந்து விட்டேனே!

என்றான் காவல்காரன்!

உடன்பிறப்பே,

இப்படியும் நடக்குமா? என எண்ணிடத் தோன்றுகிறதல்லவா? ஆனால் நடந்திருக்கிறதே என்ன செய்ய?

ஜூலை 25 - இலங்கையில் தமிழினப் பெரும் படுகொலை திட்டமிட்டுத் தொடங்கியது!

ஜூலை 26 - செய்திகள் வந்தன!

ஜூலை 27 - சென்னையில் கழகம் நடத்திய பேரணி!
ஜூலை 28 - தமிழக முழுதும் கழகம் நடத்திய பேரணி!

ஜூலை 31 - முகவை மாநாட்டில் கழகம் நிறைவேற்றிய அறப்போர்த் தீர்மானங்கள்!

ஆகஸ்டு 2 - அனைத்துக் கட்சிகள் நடத்திய முழு அடைப்பு!

மாணவர், மகளிர், தொழிலாளர், அலுவலர், ஆசிரியர், வணிகர்கள், அனைவரும் நடத்திய கண்டன ஊர்வலங்கள்! உண்ணாநோன்புகள்!

ஆகஸ்டு 4 - மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு கழகம் நடத்திய ஆர்ப்பாட்டம்! வீடுகளில் கருங்கொடி! உடைகளில் கறுப்புச் சின்னம்!

ஆகஸ்டு 5 - ரயில் நிறுத்தப் போராட்டம் எனக் கழகத்தின் அறிவிப்பு!

ஆகஸ்டு 8 முதல் 11 வரை - டெல்லியில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்பி எல். கணேசன், தம்பி வை. கோபால்சாமி ஆகியோர் இருந்த உண்ணாவிரதம்!

ஆகஸ்டு 8 முதல் 15 வரையில் திரு. நெடுமாறன் அவர்கள் நடத்திய தியாகப் பயணம்!

ஆகஸ்டு 10 - நானும், பேராசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகல்!

ஆகஸ்டு 15 - துக்கநாள் எனத் திராவிடர் கழகம் அறிவிப்பு!

ஆகஸ்டு 14 - இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அறிவித்தவாறு பிரதமர் பட எரிப்புப் போர்!

ஆகஸ்டு 15 முதல் 20 வரை கழகம் நடத்தும் கையெழுத்து இயக்கம்!

மத்திய அரசு அமைச்சர் வந்தால் கறுப்புக்கொடி என கழகம் அறிவிப்பு!

ஆகஸ்டு 11, 12, 13, 14 நாடெங்கும் கழகச் சார்பில் மத்திய அரசைக் கண்டித்துக் கூட்டங்கள்! இலங்கைக் காட்டுமிராண்டிச் சட்டம் எரிப்பு!

இவ்வளவுக்குப் பிறகு இப்போதுதான் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இலங்கைப் படுகொலை மற்றும் வன்முறைச் செயல்களுக்குக் கண்டனம் என்று ஒரு வார்த்தை கூறியிருக்கிறார்!

மந்தையில் பாதி ஆடுகள் மடிந்துவிட்டன! மீதி ஆடுகள் பரிதவிக்கின்றன! இரத்தம் குடித்த ஓநாய்கள் இளைப்பாறச் சென்றுள்ளன! மறுபடியும் மந்தையில் நுழைய நேரம் பார்த்திருக்கின்றன! காவல்காரன் ஆகாயத்தை நோக்கிச் சுட்டிருக்கிறான். அரைத் தூக்கத்தில் இருந்து கொண்டு!

அந்த நிகழ்ச்சிக்கும் - இத்தனை நாளைக்குப் பிறகு, இவ்வளவு கொந்தளிப்புக்குப் பிறகு - தமிழினத்தின் தாங்கொணாத கோபத்திற்குப் பிறகு இந்தியப் பிரதமர் அவர்கள், கண்டனம் என்ற சொல்லை உதிர்த்திருப்பதற்கும் அதிக வேறுபாடு இல்லையல்லவா?

அன்புள்ள,

மு. க.

(18-08-1983)

1141. தமிழ் ஈழம்! தவிர்க்க முடியாதது!

உடன்பிறப்பே,

இப்போது இலங்கைக்கு இந்திய இராணுவம் வர அவசியமில்லை. இப்போது அப்படிப்பட்ட சூழ்நிலை எதுவும் இலங்கையில் இல்லை. எனவே, இராணுவம் அனுப்புவதற்கான அவசியமும் எழவில்லை. பிரதமர் இந்திரா காந்தி தலையிட்டதன் மூலம்தான் இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளிலும், இலங்கையின் கடுமையான நிலைகளிலும் முக்கிய மாறுதல் ஏற்பட்டுள்ளது.

இப்படி, திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கூறியுள்ளதாகப் பெரிய சுவரொட்டிகளை அச்சிட்டு, அ.இ.அ.தி.மு.க. சார்பில் சென்னை முழுவதும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளது.

அதாவது; இராணுவம் அனுப்பத் தேவையில்லை என்ற எம்.ஜி.ஆர். அவர்களின் கருத்தையும், அவரது அமைச்சரவை சகாக்கள் சிலர் வெளிப்படையாகவே பேசி வருவதையும் அமிர்தலிங்கம் அவர்களும் எதிரொலிக்கிறார் என்று இங்குள்ள ஆளும்கட்சியினர் வெற்றி விழா (?) கொண்டாடுகிறார்கள். இந்திரா காந்தி அவர்கள், இப்போது எடுத்துள்ள கடுகளவு முயற்சிகளுக்குக் கூடத் தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவுக்குக் கிளர்ந்தெழ வேண்டியிருந்தது என்பதை அமிர்தலிங்கனார் அவர்கள், அறியாதவரல்ல! இந்த முயற்சியாவது இந்திய அரசு எடுத்ததே என்பதற்காக அவர் நன்றி கூறிவிட்டாராம்!

அதையும் அ.தி.மு.க., தனக்குக் கிடைத்த வாகை மாலையென்று கருதிக்கொண்டு வண்ண வண்ணச் சுவரொட்டிகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது!

திரு. அமிர்தலிங்கம் அவர்கள், எந்தச் சூழ்நிலையில், என்ன சொன்னார் என்பதைப் பற்றியெல்லாம் கவலை கொள்ளாமல், இந்திராவுக்கு நன்றி கூறி விட்டார்!, இராணுவம் அனுப்புவதற்கான அவசியமில்லை எனச் சொல்லி விட்டார்! என்று அ.தி.மு.க. குதியாட்டம் போடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்றே தெரியவில்லை!

ஜூலைக் கடைசி வாரத்தில் இலங்கையில் தமிழினம் படுகொலைக்கு ஆளாகிச் செத்துக் கொண்டிருந்தபோது, இந்தியா, உடனடியாக ராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று அமிர்தலிங்கம் அவர்கள், செய்தி விடுத்ததாக எல்லா ஏடுகளும் தகவல் வெளியிட்டன.

அ.தி.மு.க. எண்ணுவதுபோல இப்போது ஒன்றும் முழுமையாக இலங்கைத் தீவில் அமைதி ஏற்பட்டுவிடவில்லை! நிலைமை, நீறுபூத்த நெருப்பாகத்தான் இருக்கிறது!

இலங்கையில் தமிழர்களுக்குத் தனிநாடு தேவையில்லை என்பது எம்.ஜி.ஆர். அவர்களின் வாதம்! அந்த அடிப்படையில்தான் இரண்டு நாட்களுக்கு முன்பு ராஜ்யசபையில் பேசிய அ.தி.மு.க. உறுப்பினர்கள் கருத்தறிவித்திருக்கிறார்கள்.

எனவே, இவர்களது எண்ணத்திற்குத் தோதாக, நண்பர் திரு. அமிர்தலிங்கம் அவர்களையும் இழுத்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். அந்த முயற்சி, இலங்கைத் தமிழர்களுக்கு இவர்களையறியாமல் செய்கிற துரோகமாக ஆகி விடும் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது!

ஃ வட்டமேசை மாநாடு!

ஃ சமரசப் பேச்சு!

ஃ இந்தியாவின் சிறப்புத் தூதர்!

எல்லாம் சரிதான்! ஆனால் இன்றைக்கு ஜெயவர்த்தனே, திட்டவட்டமாக அறிவித்திருப்பது என்ன?

"He said the first pre-condition for the reconciliation process to take off the ground was for the "TULF" to give up its call for Eelam or a separate State"

பேச்சு வார்த்தைகளை அடிப்படையிலிருந்து தொடங்குவதற்கு முதல் நிபந்தனையாக, தமிழ் ஈழம் அல்லது தனி நாடு என்ற கோரிக்கை கைவிடப்பட்டாக வேண்டும்.

இப்படி இலங்கை அதிபர் திட்டவட்டமாக அறிவித்துவிட்ட பிறகு, பேச்சு வார்த்தைக்கான கதவுகளை எப்படித் திறக்க முடியும்?

தமிழ்ஈழ தனிநாடு, தவிர்க்க முடியாததாகி விட்டது! கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கூட, மாற்று யோசனைகளைப் பற்றிச் சிந்திக்க ஓரளவு இடமிருந்தது! ஆனால் இப்போது, இலங்கையில் தமிழர்களுக்காக ஒரு நாடு தேவையென்பது மறு சிந்தனைக்கே இடமில்லாத கட்டாயமாகிவிட்டது!

உலகப் புகழ்பெற்ற ஏடுகளில் ஒன்றாக அமெரிக்காவிலிருந்து வெளிவரும் (TIME) டைம் வார இதழ், 15-8-83-இல் எழுதியுள்ள உண்மையை யாரும் புறக்கணித்துவிட முடியாது!

இலங்கையின் வடக்குமுனையில், பெரும்பாலும் தமிழர்கள் வாழ்கின்ற யாழ்ப்பாண நகரை நோக்கி, பல்லாயிரக்கணக்கில் விரட்டப்பட்ட தமிழர்கள் - பயமுறுத்தப்பட்ட தமிழர்கள் வந்து கொண்டிருப்பதால் நடைமுறையில் பிரிவினை என்பது உண்மையாகிவிட்டது. இலங்கையில் உள்ள அரசாங்க அதிகாரி ஒருவர், பிரிவினை இப்போது முற்றிலும் முழுமையானதாகிவிட்டது. தமிழர்கள், தங்களுக்கு நடந்ததை மறந்து விடவில்லை. தாக்கப்பட்ட அவர்கள், திருப்பித் தாக்க விரும்புகிறார்கள். இலங்கையில் இரத்த மழை பொழிவதற்கான மேகங்கள் சூழ்கின்ற அடையாளங்களை நான் பார்க்கிறேன், என்று கூறுகிறார்!

இது டைம் ஏடு, மூன்று நான்கு நாட்களுக்கு முன்பு தீட்டியுள்ள கருத்து!

மற்றொரு அமெரிக்கப் பிரபல இதழான (NEWS WEEK) நியூஸ் வீக் - 15-8-83, கட்டுரையில்,

"But Jayawardene's moves may only increase the tensions. By pushing Tamils to move to the North, He may be creating a de facto Tamil State"

அதாவது, ஜெயவர்த்தனேயின் நடவடிக்கைகள், மேலும் பதட்ட நிலையையே அதிகரிக்கச் செய்யும். தமிழர்களை வடக்கு நோக்கித் தள்ளுவதன் மூலம், அவரே தனியாக ஒரு தமிழ்நாட்டை, நிலைமைகளின் மூலம் உருவாக்குகிறார் என்று எழுதியிருக்கிறது.

அஜீஸ்ராய் எனும் கட்டுரையாளர் (SUNDAY) சண்டே (15-8-83) இதழில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :-

இனிமேல் சிங்களவர்களும், தமிழர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒற்றுமையுடன் வாழ முடியாது. தமிழர்களைப் பற்றித் தனக்கு அக்கறையில்லையென்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களிடம் கூறக் கூடிய ஒரு ஜனாதிபதியின்கீழ், தமிழர்கள் எப்படிப் பாதுகாப்பாக வாழ முடியும்?

இதோ இன்னொரு ஏடு, பம்பாயிலிருந்து வெளி வரும் சண்டே அப்சர்வரில் 14-8-83-இல் கொழும்புத் தகவல்கள் என்ற தொகுப்பில் எம். ரகுமான் என்பவர் எழுதுகிறார். அது-இது!

இப்போதே மீண்டும் மாற்ற இயலாத வகையில், மக்கள் மனதில் இலங்கை, இரண்டாகப் பிரிக்கப்பட்டு விட்டது. எதிர்காலம் என்பது கடந்த காலத்தை விட மோசமானதாக இருக்கும்.

உடன்பிறப்பே,

இலங்கையின் நிலவரங்களைத் தங்கள் நிருபர்கள் வாயிலாகவும், நேரிலும் அறிந்து உணர்ந்து கருத்துகள் வெளியிட்டுள்ள சில முக்கியமான ஏடுகளை மட்டும் குறிப்பிட்டிருக்கிறேன். இனிச் சிங்களவர் தமிழர் இணைந்து வாழ முடியாது என்பதுதான் அந்தக் கட்டுரைகளின் பொழிப்புரை!

தமிழ்ஈழத்தின் எல்லைகள் யாவை - என்பன போன்ற பிரச்சினைகள் மட்டுமே பேச்சுவார்த்தையில் இடம் பெற வேண்டும்! அதற்கு மாறாகத் தனிநாடு கொள்கையைக் கைகழுவி விட்டுப் பேச்சுவார்த்தைக்கு வருக எனக் கூறுவது, வேதாளம் மீண்டும் முருக்கை மரம் ஏறுகிறது என்ற பழமொழியைத்தான் நினைவூட்டுகிறது!

பேச்சுவார்த்தை எப்போது - எப்படி - என்பதிலேயே சிக்கலை எழுப்பி, அதற்கேயொரு பேச்சு வார்த்தை நடத்திக்

கொண்டிருப்பது - மீண்டும் தமிழினத்தின் மீது கொடிய தாக்குதல் நடத்தத் தயாரிப்பு வேலைகளைச் செய்வதற்காக இலங்கை அரசு கடைப்பிடிக்கும் சூழ்ச்சியோ என எண்ணிடத் தோன்றுகிறது!

என் செய்வது! இந்திய அரசு மௌனம் சாதிக்கிறது!

அந்த மௌனமும் ஒரு கீதமேயென்று வர்ணனை புரிகிறது மாநில அரசு!

அன்புள்ள,

மு. க.

(20-08-1983)

1142. மூலவருக்கே வெளிச்சம்!

உடன்பிறப்பே,

நாடகம் என்றால் மேடை இருக்க வேண்டும்; திரை இருக்க வேண்டும்; ஒளி விளக்கு வேண்டும்; நடிகர்கள் வேண்டும்; கதை வேண்டும்; வசனம் வேண்டும்... இத்யாதி... இத்யாதி...

- இவையனைத்தும் இல்லாமலே One Man Show நடத்தப்படுகிறது!

கதை வசனம் அமைத்து மூலவரே இயக்குகிறார்!

ஆகா! நீதிதேவதை எப்படி நடிக்கிறாள் தெரியுமா? இல்லை - ஆட்டி வைக்கப்படுகிறாள் தெரியுமா?

அப்படிப் பார்த்தால் இது நாடகமல்ல, பொம்மலாட்டம்!

திரைக்குப் பின்னாலிருந்து நீதிதேவதையை ஆட்டுகிறார்கள்!

நீதி வழங்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல! வழங்குகிற தோற்றமும் வேண்டும் - என்பது உலகெங்கும் கடைப்பிடிக்கப்படுகிற ஒரு நியதி!

ஆனால் இந்த பொம்மலாட்டத்தில் அந்தத் தோற்றம்கூட இல்லை!

அந்த பொம்மலாட்டத்தின் சில காட்சிகளைக் காண்போமா?

தீர்ப்பை விசாரணைக்கு முன்பே எழுதி வைத்து விட்ட ஒருவரிடம் பிரமாண, வாக்குமூலம் தாக்கல் செய்தால் என்ன? செய்யாவிட்டால்தான் என்ன? (இது ஒரு பொன்மொழி)

முதலில் ஒரு மாஜி! அவர் மாறிப் போவார் என்று தெரிந்ததும் - அவர் கேட்டுக் கொள்ளாமலே அவருக்கு உடல்நலமில்லையென்று அனுதாபப்பட்டு அவரை வீட்டுக்கு அனுப்பி விட்டு, அதன் பிறகு இன்னொரு மாஜி! ஊழல் புரிந்தவர்களையும், உடந்தையாக

இருந்த அதிகாரிகளையும் கூண்டில் ஏற்றி விசாரிக்கவே தயக்கம்! அடடா! உண்மையை அறியும் அழகே அழகு!

மூலவர் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு! ஆயிரமல்ல, இலட்சமல்ல, கோடிக்கணக்கில்!

புட்டி (காலி பாட்டில்) ஒன்றுக்கு அரசாங்கம் விலை நிர்ணயிப்பதிலே கூட மூலவருக்கு ஐம்பது சதவிகிதம் பங்கு! அதாவது லஞ்சம்!

ஒவ்வொரு மாவட்டத்திலும் கலவைத் தொழிற்சாலைகள்! எல்லாமே பினாமிகள்! உண்மையான முதலாளிகள் கேரளத்தில்! அதற்கு வாங்க வேண்டிய லஞ்சப் பணத்தை மூலவர் வாங்கிக் கொண்டு, அதைக் கறுப்பாகவே பல இடங்களில் பதுக்கி வைத்திருக்கிறார்.

பிரதிநிதிகள் மன்றத்தில் மட்டுமல்ல, மக்கள் மன்றத்திலும் ஆதாரங்களுடன் இந்த உண்மைகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டன!

நடந்த ஊழலைத்தான் வரிசைப்படுத்திக் காட்டுகிறோம் - அதற்குள் ஒரு பிரமுகர், இல்லாததைச் சொன்னால் ஏழு ஆண்டு சிறைவாசம் என்று மிரட்டுகிறார்!

அவருக்கும், அவரையொத்த ஐந்தாறு பிரபலங்களுக்கும் நாள்தோறும் லட்சக்கணக்கில் கொட்டிக் கொடுக்கிற பீஸ், அந்த மூலவர் வாங்கிய லஞ்சப் பணத்தில் கிடைக்கிறது என்பது அந்த பிரமுகரின் மனச்சாட்சிக்குத் தெரியாதா?

பொம்மலாட்டத்திலே கூட இன்னும் சில திடீர் திருப்பக் காட்சிகள்!

கலவையில் மட்டுமா? சமீபத்தில் பஸ் முதலாளிகள் கூட கோரஸ் பாடியவாறு, ஒரு கோடி ரூபாயைக் கொட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

பினாமிகள் பெயரால் கொழுத்த முதலாளிகள், கொள்ளையடிப்பதற்கும், அந்தக் கொள்ளையில் மூலவர் பங்கு பெறுவதற்கும் உள்ள சான்றுகள் அனைத்தையும் வருமான வரி அதிகாரிகள், சோதனையிட்டு வெளிப்படுத்தி விட்டனர்.

அந்தச் செய்தி ரிக்கார்டுகளுடன் சபையிலும், மக்கள் மத்தியிலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன!

என்ன செய்வது? இலங்கைப் பிரச்சினையில் எல்லாவற்றையும் திரை போட்டு மறைத்திடலாம் என்று மூலவர் நம்புகிறார்!

கப்பல் பேர ஊழல் - ஸ்டீல் ரீ ரோலிங் மில்களுக்கு வரி வஜா செய்ததில் சுமார் ஒரு கோடி லஞ்சம் - அமைச்சர்கள், அமைப்பாளர்கள் பினாமி தியேட்டர்கள் - அறுபது லட்சம் எழுபது லட்சத்தில் மாளிகைகள் - ஒரே நொடியில் விமான நிலையத்தில் ஆறு லட்ச ரூபாய் டூட்டி கட்டிய எம்.எல்.ஏ.க்கள் - எல்லாவற்றையும் இலங்கைப் பிரச்சினையில் மக்கள் மறந்து விட்டனர் என்ற நினைப்பில் -

எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை லாபம் என்பதுபோல் - என்ஜினியரிங் அட்மிஷன், மெடிகல் காலேஜ் அட்மிஷன் - ஐம்பதாயிரம் முதல் லட்ச ரூபாய் வரையில் நல்ல பேரம் போய் இருக்கிறது!

இலங்கைத் திரையைக் கிழித்துக்கொண்டு இவைகள் எல்லாம் வெளிவராமலே போய் விடுமா என்ன?

பத்து லட்சத்துக்கு மேல் பணத்தை வாங்கி மோசடி செய்ததாக மூலவர் குடும்பத்தின் மீது, ஆதாரங்களுடன் குற்றச்சாட்டு! அதை மூலவரும் கண்டிக்கவில்லை - ஜாடையாக இருந்துவிட்டார்! பணத்தைப் பறி கொடுத்தோர் முறையிட்டபொழுதும், பாராமுகமாக இருந்துவிட்டார்! என்ன பேரமோ, யார் கண்டது? அவர்களுக்கும், தனக்கும் ஒட்டுமில்லை உறவுமில்லையென்பது உண்மையானால், லஞ்சக் குற்றம் சாட்டிக் கைது செய்து வழக்குப் போட மூலவர் ஏன் முனையவில்லை?

அப்பாவிப் பிள்ளைகள் மீதெல்லாம் கொலை வழக்குப் பொய்யாக ஜோடித்து, அந்தப் பிள்ளைகளைப் பெற்ற தாய்மார்கள் வயிறெரிந்து சாபங்கொடுத்து கொண்டிருக்கிறார்களே! அப்படிப் பொய் வழக்குப் போடுகிற புண்ணியவான் - உண்மை வழக்குகளைத் தொடராமல் ஓடி ஒளிவது ஏன்?

நாங்கள் லஞ்சம் வாங்கவில்லை என்று மூலவர் குடும்பத்தார், வாக்குமூலமாவது அளித்தார்களா?

இல்லை! இல்லைவே இல்லை! ஏன்? என்ன காரணம்?

தம்பியுடையான் ஊழலுக்கு அஞ்சான் என்று புதுப்பாட்டுப் பாடுகிறார்கள்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரணைக்குக் கூடத் தயார் என்று மார்தட்டினார் முதல்வர்!

ஆதாரங்கள் அடுக்கடுக்காக வந்தவுடன், சுப்ரீம் கோர்ட் நீதிபதியை விடுத்துத் தனது விருப்பப்படி ஒரு மாஜியை நியமித்துக் கொண்டார்.

தன்னை விசாரிக்கத் தானே ஒருவரை அமர்த்தியது மட்டுமல்ல! அவருக்கு மற்றொரு பதவியும் பரிசாகத் தரப்பட்டுள்ளது.

எனினும் நீதியை எதிர்பார்க்கிறது நாடு!

ஃ லஞ்சம் கொடுத்ததற்குச் சாட்சிகள்

ஃ காரியம் ஆகவில்லையென்றதும் திரும்பக் கொடுத்த செல்லாத செக்

ஃ பிராமிசரி நோட்டு

ஃ பினாமிகள் பெயரில் தொழிற்சாலை உரிமங்கள்

ஃ அதை நிரூபிக்க வருமான வரி இலாக்கா ரிக்கார்டுகள்

ஃ உரிமங்கள் வழங்கியதில் எல்லாமே முறைகேடுகள்

இத்தனை சான்றுகளும் பேசுகின்றன! அவற்றின் வாய்களைக் கட்டி விட்டு ஒரு ஊமைத் தீர்ப்பு வழங்கப்படுமேயானால் – அதனை ஊரறிய, உலகறியச் செய்ய வேண்டியது உன் கடமையன்றோ!

– இவையனைத்தும் மூலவர் நடத்தும் பொம்மலாட்டம் பற்றியவை!

இந்தக் கதை தனக்குத்தான் பொருந்தும் என்று யாராவது சொல்வார்களேயானால், அதற்கு நான் பொறுப்பல்ல! அது மூலவருக்கே வெளிச்சம்!

அன்புள்ள,

மு. க.

(27-08-1983)

1143. ஏன் இந்த வேறுபாடு?!

உடன்பிறப்பே,

ஜூலை 27-ஆம் நாள் சென்னையில் கழகப் பேரணி! ஜூலை 28 தமிழக முழுவதும் கழகப் பேரணிகள்! ஜூலை 31 காலையில் இராமநாதபுரத்தில் கூடிய அவசர செயற்குழுவில், மத்திய அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்து தீர்மானங்கள்! ஆகஸ்டு 2 - அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைத்து நடத்திய முழு அடைப்பு! ஆகஸ்டு 4 - கறுப்புச் சின்னங்கள் அணிதல்! வீடுகளில், கடைகளில் கறுப்புக் கொடிகள்! மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டம்! ஆகஸ்டு 5 - ரயில் நிறுத்தப் போராட்ட அறிவிப்பு - ரயில்கள் ஓடாத நிலைமை! ஆகஸ்டு 7 - திரு. நெடுமாறன் அவர்கள் மேற்கொண்ட தியாகப் பயணம்! ஆகஸ்டு 8 முதல் ஐந்து நாட்கள் மாநிலங்களவை உறுப்பினர்களான எல். கணேசன், வை. கோபால்சாமி இருவரும் டெல்லியில் மேற்கொண்ட உண்ணாநோன்பு! ஆகஸ்டு 10 - நானும், பொதுச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளில் இருந்து விலகல் - கழகப் பாராளுமன்ற உறுப்பினர்கள், எதிர்ப்பையும், கண்டனத்தையும் உணர்த்த தொடர்ந்தாற்போல ஆறு ஏழு நாட்கள் பாராளுமன்றத்தில் வெளிநடப்பு! ஆகஸ்டு 14 - திரு. குமரி அனந்தன் அவர்கள் அறிவித்தவாறு பிரதமர் பட எரிப்புக் கிளர்ச்சி! ஆகஸ்டு 11, 12, 13, 14 தமிழக முழுதும் கழகச் சார்பில் மத்திய அரசுப் போக்கு குறித்துக் கண்டனக் கூட்டங்கள், இலங்கைக் கறுப்புச் சட்டம் எரிப்புப் போராட்டம்! ஆகஸ்டு 15 முதல் 20 வரையில் கழகம் நடத்திய கையெழுத்து இயக்கம் - மத்திய அமைச்சர்கள் வந்தால் கறுப்புக் கொடி என அறிவிப்பு!

இலங்கையில் தமிழ் இனப் படுகொலை குறித்து தமிழகமே கொந்தளித்தது! குமுறியது! இத்தனைக்கும் பிறகு ஆகஸ்டு 15-ஆம் நாள், பிரதமர் இந்திரா காந்தி, பொத்தாம் பொதுவில் ஒரு கண்டன வார்த்தையை உதிர்த்தார்கள் வன்முறைகளுக்கு எதிராக! (இலங்கை அரசுக்கு எதிராக அல்ல)

அதற்குள்ளாக - கவலை என்றாலே கண்டனம் என்றுதான் பொருள் என்று இங்குள்ள காங்கிரசாரும் புதிய அகராதி வெளியிட்டனர்!

இலங்கையில் படுகொலை! குடல் கிழிப்பு! நாக்கு அறுப்பு! கர்ப்பிணிகளின் வயிறு கிழித்தல்! கருவில் உள்ள குழந்தையை எடுத்து தரையில் மோதிக் கொல்லுதல்! கணவனைக் கட்டி வைத்து மனைவியை கற்பழித்தல்! சிறைச்சாலையில் விடுதலை வீரர்களை வெட்டியும், சுட்டும் கொல்லுதல்! கொலை செய்யப்பட்ட சடலங்களுக்குப் பிரேத விசாரணையும் கிடையாது; உற்றார் உறவினரிடம் ஒப்படைப்பதும் கிடையாது - மூவாயிரம் தமிழர்கள், தமிழச்சிகள், குழந்தைகள் கொலை! கொலை! ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் தமிழர் சொத்துகள் சூறை! தமிழர் தொழிற்சாலைகள் நூற்றுக்கணக்கில் தீக்கிரை!

இந்திய அரசு, இலங்கை அரசோடு சமாதான வீணை மீட்டுகிறது! சமரச சங்கீதம் பாடுகிறது!

"இலங்கையில் தமிழர்கள் வன்முறைக்கு இலக்கானதை நான், கண்டனம் செய்யவில்லையென்று தமிழ்நாட்டு எம்.பி.க்கள், புகார் கூறுகின்றனர். நாம் மற்றவர்களுக்கு ஆத்திரமூட்ட முயற்சிக்கக் கூடாது! ஏனெனில், அது நிலைமையை மேலும் கடுமையாக்கி விடும்."

இவ்வாறு பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், நேற்றுக்கூட உரையாற்றியிருக்கிறார்.

ஆனால் அதே உரையில், பாகிஸ்தான் ஆட்சிக்கு எதிராக நடைபெறும் ஜனநாயக இயக்கத்தையும், கிளர்ச்சிகளையும் இந்திரா காந்தி ஆதரித்துப் பேசியிருப்பதை, எல்லா ஏடுகளும் வெளியிட்டுள்ளன.

"நாம் ஜனநாயகத்தை ஆதரிக்கிறோம். எப்போதுமே அப்படித்தான் இருப்போம். அநீதி எங்கு நடந்தாலும் அதை எதிர்க்க வேண்டும். பாகிஸ்தான் மக்கள், ஜனநாயகத்துக்காகப் போராடுகிறார்கள். ஜனநாயகத்தை விரும்புவது முறை தவறானது என நாம் கருதவில்லை. எந்த நாட்டிலாவது மக்கள் மனிதாபிமானமின்றி நடத்தப்பட்டால் அதை எப்போதும் இந்தியா கண்டித்து வந்துள்ளது. நம் உணர்வுகளை பாதிக்கும்

சம்பவங்களைப் பார்த்து நாம் கண்களை மூடிக் கொண்டிருக்க முடியாது.''

உடன்பிறப்பே, பாகிஸ்தானில் ஜியாவின் எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராக நடைபெறும் போராட்டத்திற்கு இந்தியப் பிரதமர் எவ்வளவு வேகமாக ஆதரவு அளிக்கிறார் பார்த்தாயா?

இலங்கையில் ஜெயவர்த்தனே நடத்துவது மட்டும் ஜனநாயக ஆட்சியா?

இலங்கைத் தமிழன் படுகொலைக்கு கண்டனம் தெரிவித்தால் கடுமையான விளைவுகள் ஏற்படுமாம்!

இதோ பாகிஸ்தான் ஆட்சிக்கு எதிராகக் கண்டனம்! பாராளுமன்றத்தில் நரசிம்மராவ் அறிக்கை! இப்போது பிரதமரின் வீராவேசமான பேச்சு! உருக்கமான பேச்சு! உணர்ச்சியான பேச்சு!

இது என்ன முரண்பாடு?

ஏனிந்த வேறுபாடு?

இந்த உலகில் இருக்கும் மாந்தரில்

எழிலுடையோன் தமிழன்!

கோவை அய்யாமுத்து எழுதிய இந்தப் பாடலை திருச்சி மாரியப்பா பாட - இசைத் தட்டாக வெளிவந்து அதனைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்!

இப்போது பாட்டு, மாற்றி எழுதப்படுகிறது, இந்திய அரசின் ஆஸ்தானப் புலவர்களால்!

இந்த உலகில் இருக்கும் மாந்தரில்

இழிவுடையோன் தமிழன்!

தமிழனே! என் தங்கமே! தரணியாண்ட சிங்கமே! அப்படித்தானா? அதுதான் உண்மையா?

அன்புள்ள,

மு. க.

(28-08-1983)

1144. அமைப்புகளுக்கு ஓர் அறிவிப்பு!

உடன்பிறப்பே,

இது ஒரு அவசர மடல்! இலங்கைத் தமிழர் படுகொலைக்கு நீதி கோரி ஐக்கிய நாடுகள் சபைக்கு தமிழ்நாட்டு மக்களின் கையெழுத்துகளை அனுப்பி வைக்க - அல்லது நேரிலே கொண்டு போய்ச் சேர்ப்பித்து ஐ.நா. சபை செகரட்டரி ஜெனரல் அவர்களிடம் முறையீடு வழங்க இன்னும் சில நாட்களே உள்ளன!

இதுவரையில் ஒரு கோடி எண்ணிக்கையை எட்டிப் பிடிக்கிற அளவுக்கு கையொப்பங்களைப் பெற்று கழக அமைப்புகள், தலைமைக் கழகத்திடம் சேர்ப்பித்துள்ளன! பட்டிதொட்டிகள் முதல் பட்டினக்கரைகள் வரையில், கழக உடன்பிறப்புகள் பம்பரமெனச் சுழன்று கட்சிச் சார்பற்ற முறையில் தமிழ் மக்களின் கையெழுத்துகளைத் திரட்டியுள்ளனர். அவற்றில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வீர இளைஞர்கள், தங்களின் ரத்தத்தால் கையெழுத்திட்டிருப்பதைக் கண்டு மெய்சிலிர்க்கிறது.

நமது இனம், இலங்கையில் திட்டமிட்டு அழிக்கப்படுவது கண்டு ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் தாய்த் தமிழகத்து மக்கள், இனம் காக்க - இனமானம் காக்க - இந்தக் கையெழுத்துகளைத்தான் தற்போதைக்குப் படைக்கலன்களாகக் கருதுகின்றனர்.

தாய்த் தமிழகத்து மக்களின் இதயத் துடிப்புகள்தான் இந்தக் கையெழுத்துகள்! இதோ! தலைமைக் கழகத்தில் ஒவ்வொரு கையெழுத்துப் படிவத்திலும் பக்க எண்களைக் குறிப்பதற்காகவே கடந்த ஐந்து நாட்களாகப் பத்து பேர் இடைவிடாது பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அதைப் பார்ப்பதற்கே ஒரு உற்சாகமாக இருக்கிறது! அதே நேரத்தில் லட்சோபலட்சம் தமிழர்களின் கண்ணீர்த் துளிகள் அன்றோ இவை! என்ற உருக்கமும், உணர்வும் நெஞ்சத்தை உலுக்குகின்றன!

ஒரு கோடிக்கு மேற்பட்ட கையெழுத்துகளை - அவை தமிழின மக்களின் பாதுகாப்புக்காக இடப்பட்ட கையெழுத்துகள் என்பதால் கண்களில் ஒற்றிக் கொண்டு, அவற்றை நியூயார்க் நகருக்கு நானே எடுத்துச் செல்ல வேண்டுமென்று கழகப் பொதுக்குழுவும் - தலைமைக் கழகமும் - கழகப் பற்றுக் கொண்டிருப்போரும் - கட்சி சார்பற்ற முறையில் தமிழினப் பற்றுக் கொண்டுள்ளோரும் - குறிப்பாக நமது கழகப் பொதுச் செயலாளரும் கூறுகின்றனர். அதற்கான வழிமுறைகள் விசாரிக்கப்படுகின்றன.

இலங்கையில் நடந்த இனப் படுகொலைக்கு நீதி கோரியும் - இனியும் நடக்காமல் தடுத்திடும் முயற்சியினை மேற்கொள்ளவும்தான் ஐ.நா. மன்றத்திற்கு முறையீடு! ஒரு கோடிக்கு மேற்பட்ட கையொப்பங்கள்!

ஆகஸ்டு 15 முதல் 26 முடிய; உடன்பிறப்பே! நீயும் நீ சார்ந்துள்ள கழக அமைப்புகளும் நடத்தியுள்ள கையெழுத்து இயக்கம்; வரலாற்றுச் சிறப்புக்குரியது!

மகிழ்ந்து பாராட்டும் நேரத்திலே மனம் வருந்தி ஒரு செய்தியையும் கூறத்தான் வேண்டியிருக்கிறது!

சில மாவட்டங்கள் - ஒன்றியங்கள் - அல்லது கிளை அமைப்புகள் - அல்லது படிவங்கள் பெற்றுச் சென்றோர் இன்னமும்கூட அவற்றைத் திருப்பித் தரவுமில்லை! அனுப்பவுமில்லை!

அதிகமான கையெழுத்துக்களை வாங்கி அனுப்பிய மாவட்டங்கள், ஒன்றியங்கள், எவை என்ற பட்டியல் விரைவில் உரிய நேரத்தில், உரிய இடத்தில் வெளியிடப்படும்.

இதுவரை அந்தப் பணியைச் சரிவர செய்து முடிக்காத அமைப்புகள் எதுவாயினும் அவற்றையும் அறிவித்து அவற்றின்மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

அதில் தலைமைக் கழகம், கண்டிப்பாகவே இருக்க வேண்டியிருக்கும்.

பொறுப்புக்குப் போட்டியிட்டு வந்தவர்களின் கடமை யுணர்வை அறிந்துகொள்ள இது ஒரு பொன்னான வாய்ப்பு என்றே நானும் பொதுச்செயலாளரும் கருதுகிறோம்.

இனியும் அனுப்பி வைக்கப்பட வேண்டிய படிவங்களின் விவரம் மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள், தயக்கம் சிறிதுமின்றி அந்தப் படிவங்களைச் சேகரித்து, இரண்டொரு நாட்களில் தலைமைக் கழகத்தில் நேரடியாகவே கொண்டு வந்து தரவேண்டும்.

படிவங்களை வாங்கிக் கொண்டு, திருப்பித் தராதவர்களின் பட்டியலையும் தலைமைக்கு அளிக்க வேண்டும்.

உண்மையில் கடமையாற்றுவோர் யார் என்பது குறித்து, தலைமைக் கழகம் உணர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள இதுவே தக்க தருணம்! அஃதறிந்து ஒத்துழைப்பு நல்குமாறு, உடன்பிறப்பே, உன்னையும், மாவட்டக் கழகம் முதற்கொண்டு மற்ற அமைப்புகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(01-09-1983)

1145. பட்ஜெட் விவகாரம்! பதில் தேவை!

உடன்பிறப்பே,

உச்சியில் உட்கார்ந்திருப்போர், உளறுவதெல்லாம் வேத வாக்கு!

சிம்மாசனத்தில் அமர்ந்திருப்போர், உய்! உய்! என்று விசில் அடித்தாலே அது புல்லாங்குழல் இசை!

அதிகாரத்தில் வீற்றிருப்போர் ஆவ்! என்று கொட்டாவி விட்டாலே அது அறிவு முழக்கம்!

இப்படி எண்ணிக் கொண்டிருக்கிற பாமரமக்களும் - பத்திராதிபர்களும் நிறைந்துள்ளது நமது பாரத தேசம் - (!)

அந்தப் பாரததேசத்தில் உள்ள நமது பைந்தமிழ்நாடு இருக்கிறதே! இதைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை! ஒன்று, இங்குள்ளோருக்கு அறிவுத் திறன் அழிந்து கொண்டேயிருக்க வேண்டும் - அல்லது இவர்களனைவரையும் அறிவிலிகள் எனக் கருதிக் கொண்டு ஆளவந்திருப்போர் ஆட்டம் போட வேண்டும்!

பீடிகை வலுவாக இருக்கிறதேயென்று திகைக்கத் தேவையில்லை!

இதோ சில பட்ஜெட் விபரங்களைப் படித்துப் பார்!

ஃ 1966-67-ஆம் ஆண்டில் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள், முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்தில் இந்த மாநிலத்தினுடைய வருவாய்க் கணக்கு 188 கோடி ரூபாய். (நூற்று எண்பத்து எட்டு கோடி ரூபாய்)

ஃ 1967-68-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள், முதலமைச்சராக இருந்த கால கட்டத்தில் தமிழகத்தின் வருவாய் 248 கோடி ரூபாய். (இருநூற்று நாற்பத்தெட்டு கோடி ரூபாய்)

ஃ 1975-76-ஆம் ஆண்டு கழக ஆட்சி, கலைக்கப் படுவதற்கு முன்பு சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின்படி, மாநிலத்தின் வருவாய் 501 கோடி ரூபாய். (ஐநூற்றொரு கோடி ரூபாய்)

ஃ கடந்த ஆண்டு 1983-84க்கான பட்ஜெட் அ.தி.மு.க. ஆட்சியால் சட்டப் பேரவையில் வைக்கப்பட்டபடி, மாநில வருவாய் 1774 கோடி ரூபாயாகும். (ஆயிரத்து எழுநூற்று எழுபத்து நான்கு கோடி ரூபாய்)

அதாவது நிதியமைச்சர் நாவலர் படித்த நிதி நிலை அறிக்கை 1983-84 - பக்கம் 55-இல் வருவாய்க் கணக்கில் வரவுகள் 1774 கோடி ரூபாயாகவும், செலவுகள் 1653 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநில அரசு வரிகள் மூலம் :- 1074.54 **கோடி**

வரியல்லாத வருவாய் மூலம் :- 163.86 **கோடி**

பிரித்துக் கொடுக்கப்படுவதின் மூலம் இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் வருவாய் :- 403.53 கோடி

இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி மான்யம் :- 132.95 கோடி

ஆக மொத்தம் வருவாய் :- 1774.88 கோடி

இவைகள் அனைத்தும், குறிப்பிட்ட ஆண்டுகளில் சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட பட்ஜெட் உரைகளில் இருந்து எடுக்கப்பட்ட விபரங்கள்!

ஆனால் இந்த மாநிலத்தின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், திருச்சியில் பேட்டி கொடுத்த போதும், ஒரு திருமண விழாவில் பேசியபோதும் மாநில அரசின் வருவாய் குறித்துக் குறிப்பிட்ட புள்ளிவிபரங்கள், தினமணி (31-8-83) சென்னைப் பதிப்பிலும் வெளியாகியிருக்கின்றன. அவைகள் இதோ:-

வரிகள், பஸ் கட்டணங்களை உயர்த்தாமல் அரசு வருவாய் 1500 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்றும், அண்ணாதுரை காலத்தில் அரசு வருவாய் 1000 கோடி (ஆயிரம் கோடி) ரூபாயாக

இருந்தது என்றும் முதல்வர் எம்.ஜி.ஆர். திருச்சியில் நிருபர்களிடம் கூறியதாக தினமணி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பாவம்! தினமணியில் உள்ள கணக்கருக்குக் கூடத் தெரியாத கணக்கா இது? அண்ணா காலத்தில் மாநில வருவாய் சுமார் முந்நூறு கோடி ரூபாய் அளவில்தானே இருந்திருக்கிறது; அப்படியிருக்க ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது என்று இன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். சொல்லலாமா? எம்.ஜி.ஆர். சொல்லலாம்! முதல்வர் எம்.ஜி.ஆர். சொல்லலாமா?

''நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது அரசின் வருமானம் ஆண்டுக்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாய்! தற்போது (3500 கோடி) மூவாயிரத்து ஐநூறு கோடி ரூபாய் வருமானம் வருகிறது.''

இப்படி முதல்வர் எம்.ஜி.ஆர். திருச்சி மாவட்டத்திலே ஒரு திருமணத்தில் பேசியதாகத் தினத்தந்தி செய்தி வெளியிட்டிருக்கிறது.

நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் ஆயிரத்து எழுநூற்று எழுபத்துநாலு கோடி ரூபாய்தான் வருவாய் எனக் குறிப்பிட்டு, அச்சியற்றி, சட்டமன்றத்தில் கொடுத்துள்ள விபரத்திற்கு மாறாக - முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், (3500 கோடி) மூவாயிரத்து ஐநூறு கோடி ரூபாய் வருமானம் என்று குறிப்பிட்டிருப்பது அரசு வருமானத்தை மட்டுமா? அல்லது அமைச்சர்களின் வருமானத்தையும் சேர்த்தா என்பது புரியாத புதிராக இருக்கிறது!

முதலமைச்சரின் இந்தப் புள்ளி விபரத்தை நிதியமைச்சர் நாவலர் ஏற்றுக் கொள்கிறாரா?

அண்ணா ஆட்சியின்போது அரசுக்கு ஆயிரம் கோடி வருவாய் வந்ததா?

இந்த ஆண்டு அரசுக்கு மூவாயிரத்து ஐநூறு கோடி வருவாய் என்பது உண்மைதானா?

முதலமைச்சரிடம் பதிலை எதிர்பார்க்க முடியாது!

அவர் எல்லாவற்றுக்கும் தன்னிடம் டேப் இருக்கிறது என்பார்!

அன்பரசு எம்.பி. பேசிய டேப் முதற்கொண்டு அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்ட டேப் வரையில் இருப்பதாகக் கூறினார்! எங்கே போட்டுக் காட்டுங்கள்! என்றதும் மௌனமாகிவிட்டார்! அது அவரது இயல்பு! அந்த இயல்புக்கு வீரம் என வியாக்கியானம் செய்பவர்கள் சிலர் அங்கே இருக்கிறார்கள்!


எனவே நிதி அமைச்சர் நாவலர், முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் புள்ளிவிபரத்தை ஏற்கிறாரா - அல்லது மறுக்கிறாரா?

பதில் தேவை! இது சாதாரண விவகாரமல்ல! பட்ஜெட் விவகாரம்!

அன்புள்ள,

மு. க.

(02-09-1983)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022